# SCRIPTURE CHARACTERS.

## (MEN OF THE BIBLE.)

BY

THE REV. S. PAUL, C. M. S.

## VOLUME I.

FIRST EDITION—1,000 COPIES.

# வேத புருஷர்.

## முதலாம் பங்கு.

இதில்

வேதாகமத்திலுள்ள

இருபதுபேருடைய சரித்திர வரலாறுகள்

ஞானபோதனைகளுடன்

அடங்கியிருக்கின்றன.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.

S. P. C. K. PRESS, VEPERY.

1887.

Q6w× M87

Printed at the S. P. C. K. Press. 1887.

# PREFACE.

Six years ago a small volume, entitled "The Women of the Bible," was prepared by me for the Christian Vernacular Education Society, at the request of Dr. Murdoch. The present work, on the "Men of the Bible," is framed, on the same lines, for the Madras Religious Tract Society. The chief English works that were consulted are Robinson's Scripture Characters, Bishop Hall's Contemplations, Kitto's Biblical Encyclopædia, Smith's Bible Dictionary, Scott's Commentary, &c.

The Tamil name, *Mahatmya Purana*, was suggested to me by the late Rev. Dr. Bower, to whose valuable advice and suggestions, freely given, I was much indebted up to the time of his lamented death. It has, however, been recommended that the simpler title, *Men of the Bible*, should be adopted.

The volume contains the history of the leading SCRIPTURE CHARACTERS, exclusive of women, from Adam till David, following the order of the books of the Bible. The second volume will, it is hoped, be ready in another year. The work is intended for all Tamil readers, both Christian and non-Christian.

May He who condescended to enlighten the mind of the Ethiopian eunuch, by His grace enable the readers to see the wisdom of God in His dealings with the sons of men, and in the redemption of the human race through Jesus Christ, shadowed in the Old Testament and brought into clearer light in the New.

S. P.

MADRAS, *December*, 1886.

97117

# முகவுரை.

சில வருஷங்களுக்குமுன்னே வேதத்திலுள்ள பல ஸ்திரீகளின் வரலாறுகளைச் சரித்திரப்போங்காய் எழுதி அதற்கு "வேதஸ்திரீகள்" என்ற பேரிட்டு அனுப்பினோமே; இப்போது தேவனுடைய கிருபையையும் அவருடைய ஆவியின் அருளையும் முன்னிட்டு, வேதத்திலுள்ள பல புருஷரின் வரலாறுகளை எழுதி அதற்கு "மகாத்மிய புராணம்" என்று நாமதேயம் சூட்டி இரண்டு பாகமாக அனுப்புகிறோம். இதில் அடங்கிய ஒவ்வொரு சரித்திரமும் பக்தாட்களுடையதென்று சொல்லக்கூடாதே போனாலும், மிச்சமானவர்கள் உத்தமரும் சத்தியத்தை இவ்வுலகத்தில் நிலைநிறுத்த முயன்ற முனிமாரும், அவரவர் தலைமுறையில் தேவதா பக்தி ஜுவாலையை வளர்க்க முயன்ற தீபஸ்தம்பமாயிருக்கிறபடியால் பொதுவில் இந்தப் புஸ்தகத்திற்கு "மகாத்மிய புராணம்" என்னும் பேரை இடலாயிற்று. என்றாலும் ஒரு இலேசான பேர் நலமென்று பலரும் அபிப்பிராயப்பட்டதால் வேதபுருஷர் என்ற தெளிவான பேரை தலையலங்காரமாக வைத்திருக்கிறோம்.

மனுமக்கள் சிலகாலமாத்திரம் இப்பூலோகத்தில் இருக்கவேண்டியவர்களாயும், அவரவர் இருக்கும் காலத்தில் பின்வரும் காரியங்களை அல்ல, முன்நடந்த வரலாறுகளைமாத்திரம் ஆராய்ச்சிமூலமாய் அல்லது பாரம்பரைமூலமாய் அறியக்கூடியவர்களாயுமிருக்கிறார்கள் என்பது நிசம். முன்நடந்த வரலாறுகளைப்பற்றிய அறிவானது, தனக்குள்ளிருக்கும் பாவச்சுபாவங்களின் பூர்வோத்திரத்தைக் காட்டி பழைய பக்தரைப்போல் தேவபக்தி என்னும் மலைமேல் ஜாக்கிரதையோடு பிடித்தேறும்படி உணர்த்துகிறதாயிருக்கிறது. மேலும் வேதாகம சரித்திரங்களானது முற்காலங்களில் நடந்திருக்கிற தேவநடத்துதல்களின் தன்மையையும், இரட்சண்ய மார்க்கத்தின் போங்கையும் நமக்குக் காட்டுகிறதென்பதையும் மறந்துபோகலாகாது. ஆதலால் இந்நூலை வாசிக்கும்போது அந்தந்த ஆட்களைப்பற்றிய சரித்திரசாரங்களை நாம் தியானிக்கிறதைவிட அக்காலத்தில் விளங்கிய தேவநடத்துதலின் தன்மையையும் இரட்சண்ய ஓடையின் போக்கையும் தியானித்து காலம் பின்னிடுவது நலமாயிருக்கிறது.

இந்த முதலாம் பிரபந்தத்தில் சிருஷ்டிப்புமுதல் தாவீதரசன் காலம் வரையுமுள்ள சுமார் மூவாயிரம் வருஷசரித்திரம் அடங்கியிருக்கிறது. இந்தப் புருஷாள் தங்கள் மதாசாரத்திலும், வருணாசாரத்திலும், தேசாசாரத்திலும், குடும்பாசாரத்திலும், நடையுடைபாவனையிலும், போசனபானங்களிலும், பாஷைதொழில்களிலும் வேறுபட்டிருந்தபோதிலும் ஆத்துமாவுக்கும் ஆவிக்குமுரிய அந்தரங்க குணாகுணங்களிலும், வெளியரங்க கிருத்தியங்களிலும் நமது சாயலும் நமது ரூபுமாகவே

இருக்கிறார்களென்றும் தெளிவாய்த் தெரியவருகிறது. ஆகாயத்தன்மையும், ஆகாரப்பிணைக்கும், பாஷைவித்தியாசங்களும் ஆத்துமஸ்திதியை வித்தியாசப்படுத்தமாட்டாதென்பது மெய். தற்காலத்தில் ஆத்தும சம்பந்தமாய் நாம் படும் சங்கடங்களனைத்தும் அவர்களுக்கும் இருந்தது; அவர்களும் நம்மைப்போலவே தீமையை வெல்லவும் நன்மையில் செல்லவும் முயற்சித்திருந்தார்கள். அந்த விஷயத்தில் நாமும் அவர்களோடு ஏககாலத்தில் வசிக்கிறவர்களைப்போலவே சொல்லி சகோதராக்கிக்கொள்ளவேண்டும்.

இந்த நூல் மகா கவலையோடும் மிகுந்த ஆராய்ச்சியோடும் எழுதப்பட்டு உங்களுக்கு முன் அனுப்பப்பட்டிருக்கிறதென்று நாம் சொல்லக்கூடும். இது எவராலும் லேசாயும் பிரியமாயும் வாசிக்கப்படுகிற ஒரு நூலாயிருக்கவேண்டுமென்பது நமது உள்ளத்தின் ஆசையாயிருந்தது. "கிறிஸ்தவர்கள் வேதம்" என்ற வாசகம் காதில் விழுந்தவுடனே வேண்டாம், வேண்டாமென்று தள்ளிவிடுகிற இந்துக்களும், நமது வேதம் தானே, சாவகாசத்தில் வாசிக்கலாமென்று மேலெழுச்சியாகக் கடத்திவிடுகிற கிறிஸ்தவர்களும் ஒன்றுபோல வேதாகம சரித்திரங்கள் மூலமாய் பக்திவிஷயத்துக்கு இழுக்கப்பட்டு, அவபக்திக்கு விலகியோட நம்மாலானமட்டும் இதின் வாசகநடையிலும் பொருள்போக்கிலும் பிரயாசப்பட்டோம். வேதமகாத்துமாக்களைப்பற்றி இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டிருக்கும் பல விசேஷித்த நூல்கள் இதற்கு அநுசரணையாய் இருக்கிறதென்பதை நாம் அறிக்கையிடவேண்டியது.

இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் சத்தியத்தின் பூர்வோத்திரத்தைக் கண்டறிந்து இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கும் வேத எழுத்துகளின் ஆழங்களையும், பூர்வகாலமுதலுள்ள தேவநடத்துதல்களின் போக்கையும், இரட்சண்ய கால்வாயின் ஓட்டத்தையும் கிரகித்துக்கொள்ளவேண்டுமென்பதே நமது ஆத்துமாவின் ஆவலாயிருக்கிறது. இந்தப் பிரபந்தத்தின் இரண்டாம் பாகம் கர்த்தருக்குச் சித்தமானால் இன்னும் ஒரு வருஷத்திற்குள் வெளியாகும். தன்னுடைய பயணத்தில் வாசித்துக்கொண்டேபோன கந்தாகே மந்திரியுடைய மனக்கண்ணைத் தமது அருளின் கனிக்கத்தால் ஆரோக்கியமாக்கின கருணைக்கடவுள் இந்நூலை நீ வாசிக்கும் பயணத்திலும் கிருபைகூர்ந்து இவைகளினூடே மெல்லிய நூல்போல் ஓடும் தேவச்செயல்களையும், பொற்கம்பிபோன்ற இரட்சண்ய பாதையையும் நீ அறிந்துணர்ந்துகொள்ளும்படி அருள் புரிவாராக.

பிளாக்டௌன்,
சர்ச்சுமிஷன் ஆலயம்.
1866-ளு டிசம்பர்மீ.

கிறிஸ்துவுக்குள்ளான
உங்கள் உத்தம சிநேகிதன்
S. பால்.

# பொருள் அட்டவணை.


| நெம்பர். | | பக்கம். |
|---|---|---|
| 1. | பூலோக சிருஷ்டிப்பு. ஆதிபருவம்—சிருஷ்டிபருவம் | 1 |
| 2. | ஆதாம் முனிவர். மனுஷ உற்பத்திபருவம்—பாவ உற்பத்திபருவம்—வனசஞ்சாரபருவம் | 8 |
| 3. | காயீன் ஆபேல் | 31 |
| 4. | பரமேறி முனிவர் | 46 |
| 5. | பிரளய முனிவர். ஜநகபருவம்—கப்பல்பருவம்—பிரளயபருவம்—வானவில்பருவம் | 53 |
| 6. | விசுவாச முனிவர். நாடுவிடுபருவம் — பஞ்சகாலபருவம்—புத்திர சந்தானபருவம்—நரபலிப் பருவம் | 79 |
| 7. | லோத்து | 119 |
| 8. | ஈசாக்கு முனிவர் | 133 |
| 9. | யாக்கோபு முனிவர். ஜநகபருவம் — முனிவர் கூழ்விற்ற பருவம்—முனிவர் ஏணிகண்ட பருவம்—முனிவர் மந்தைமேய்க்கும் பருவம்—தேவபோராட்ட பருவம் | 155 |
| 10. | சொப்பன முனிவர். சொப்பனப் பருவம்—சிறைச்சாலைப் பருவம்—மந்திரி பருவம்—பஞ்சகாலப்பருவம்—முனிவர் மன்னித்த பருவம் | 190 |
| 11. | மோசே முனிவர். சங்கடப்பருவம்—முனிவர் ஜநகபருவம்—தேவகாட்சிப் பருவம் — யாத்திரைப்பருவம்—முனிவரின் அந்திய காலப்பருவம். | 227 |

12. முதல் ஆசாரியன் ........................ 263
13. ஜோஷிய முனி ........................ 279
14. தளகர்த்த முனிவர் ........................ 296
15. ஆகான் ........................ 317
16. கிதேயோன் ........................ 324
17. சடாமுனி ........................ 337
18. ஏலி ........................ 348
19. சாமுவேல் தீர்க்கதரிசி ........................ 358
20. சவுல் அரசன் ........................ 377
21. இராஜ புலவர்.
பாலியபருவம்—வாலிபபருவம்—கலியாணபருவம்—இராஜபுலவரின் சங்கடபருவம்—மகுடாபிஷேகபருவம்—செங்கோல்பருவம் ........................ 403

# மகாத்மிய புராணம்.

## THE CREATION.

## பூலோக சிருஷ்டிப்பு.

### ஆதிபருவம்.

இப்பொழுது நாம் ஒரு நகரத்துக்குச் சென்றால், வலபக்கமும் இடபக்கமும் மச்சுமாளிகைகளாலும், கூடகோபுரங்களாலும், கடைவீதி நடைவீதிகளாலும் நிறைந்திருக்கும் பல தெருக்களைக் காண்கிறோம். மாடுகளும் ஆடுகளும் மந்தை மந்தையாய்த் திரிந்தலைகின்றன. மனுமக்கள் பீதாம்பரம் கட்டி, பிரபல கோலமாய்ப் பல்லக்கு ரதமேறி பவனிவருகிறார்கள்; பொன் வெள்ளி ரத்தினாதிகளின் பளபளப்பும், சிறப்பும் நமது கண்களைப் பகட்டி, மனதை இழுக்கிறதாயிருக்கிறது. பாலகரின் கூக்குரலும், பாடகரின் பாங்குரலும், மேளதாளங்களின் முழக்கமும் நமது காதில் தொனிக்கிறதுண்டு.

நகரத்தைவிட்டு நாட்டுப்புறங்களில் சென்றாலும், அவ்விடத்திலும் நாம் கண்குளிர காணத்தக்க கனகாட்சியுண்டு.

நாடு நகர்விட்டு காடு போனபோதிலும், அங்கும் அநேக மகத்துவமானவைகளைக் காணலாம். மலைவனங்களில் விலையுயர்ந்த தந்தங்களோடு வெளிப்படும் யானையையும், கருவப்பார்வையோடும், காம்பீரமுழக்கத்தோடும் வெளிப்படும் மிருகேந்திரனையும், அழகிய மயிலையும், பஞ்சவர்ணக் கிளியையும், இன்னும் அநேக பட்சிஜாதிகளையும், வெயில் ஒழுகாத் தோப்புகளையும், ஆகாயத்தை அளாவிய அழகிய விருட்சங்களையும் காண்கிறோம்.

நாம் கீழ் நோக்கிப்பார்த்தால் நகர்ந்து திரியும் பல ஜீவப்பிராணிகளையல்லாமல் பச்சென்று விளங்கும் புல்லையும், கமகமவென கந்தம் வீசும் மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் முதலிய புஷ்பஜாதிகளின் அழகையும் காணலாம். ஆனால் இவை ஒன்றும் ஆதியிலே இருந்ததில்லை.

இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு மேல்நோக்கினால் இப்பொழுது நாம் காண்கிற அழகுள்ள வானஜோதிகளும் அப்போது இருந்ததில்லை. அப்போது சூரியனுமில்லை, சந்திரனுமில்லை, நட்சத்திரமுமில்லை. சமுத்திரம் இன்னது, தேசம் இன்னது, மலை இன்னது, மைதானம் இன்னது, வீடு இன்னது, காடு இன்னது, சூரியன் இன்னது, சந்திரன் இன்னது என்று சொல்லக்கூடாதவண்ணம் அண்டசராசரமெல்லாம் யாதொரு ரூபமில்லாமல், ஏகலோகமாக திரண்டுருண்டிருந்தது. அதிலே யாதொரு ரூபமும் அழகும் காணப்படவே இல்லை. சகல வஸ்துக்களும் ஒழுங்கற்று வெறுமையாயிருந்தது. அந்தகாரமும் அலங்கோலமும் அதின் அழகென்று சொல்லவேண்டுமேயன்றி, வேறு சிறப்பு அதற்கு இருக்கவில்லை.

காரியம் இப்படியிருக்கையில் திரியேக தேவன் தமது கிருபையுள்ள சித்தத்தின்படியே அலங்கோல அண்டத்தை அலங்கார மண்டலமாக சமர்ப்பிக்கச் சித்தங்கொண்டார்.

தேவன் இந்தப் பூலோகத்தைச் சிருஷ்டிக்க சித்தங்கொண்டதே, அவரை நாம் ஸ்துதிக்கவேண்டிய கடமைக்கு நம்மை ஏவுகிறதாயிருக்கிறது. இவ்வண்ணம் அவரது திருவுள்ளம் திரும்பாதிருக்குமேயானால் நாமேது, நமது பிதாக்களேது, நமது குடியிருப்பேது? ஆதலால் இந்த அனாதி திருவுளத்தை மதிப்போடு தியானித்து, "கர்த்தாவே, தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்கு பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாய் இருக்கின்றன"[1] என்று சொல்லி தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்துக்கு முன்பாக கழற்றிவைத்து, வணக்கமாய் விழுந்து வாழ்த்தும் வார்த்தைகளோடு நமது வாழ்த்தலையும் சேர்த்து அனுப்புவோமாக.

## சிருஷ்டி பருவம்.

கிருபைநிறைந்த கடவுள் இவ்வகண்டலோகத்தை சிருஷ்டிக்க ஆரம்பித்தபோது, முதலாவது வெளிச்சத்தை உண்டாக்கினார். அந்த வெளிச்சம் உண்டானவுடனே ஆதியில் அண்டமெங்கும் ரேகித்திருந்த அந்தகாரமானது அகன்று ஒளியிலிருந்து பிரிந்துவிட்டது. ஆகவே முன்னிருந்து பிரிந்த

[1] வெளி. 4. 11.



இருள் இரவென்றும், பின்னுண்டாகி ஜொலித்த வெளிச்சம் ஒளி என்றும் பேர் விளங்கப்பட்டது. இது சிருஷ்டிப்பின் முதலாங்கால வரிசையாயிருக்கிறது.[1]

குணப்படாத ஒரு பாவியின் நிலைமையானது ஆதியில் பூமியிருந்த அலங்கோல ஸ்திதிபோலவே இருக்கிறது. அதிலே யாதொரு ரூபமும் சாயலுமில்லை. கிறிஸ்துவின் சாயலாவது, தேவாவியின் ரூபமாவது காணப்படமாட்டாது. அது பாவ அந்தகாரத்தினாலும், சேற்றினாலும் நிறைந்து சீர்கெட்ட ஸ்திதியிலிருக்கிறது. அது தேவனுடைய தோட்டமாகவும், அவர் நல்லதென்று காணும் காட்சியாகவும் மாறவேண்டுமானால், பாக்கியமுள்ள பராபரனுடைய மகிமையான சுவிசேஷத்தின் ஒளி முதலாவது வீசவேண்டியது.

அப்புறம் தேவன் ஜலத்திரளின் மத்தியில் ஆகாயத்தைப் பரப்பி, அதை மேல்ஜலம் கீழ்ஜலமாக வகுத்து ஆகாயவிரிவுக்கு வானமென்று பேரிட்டார். இது இரண்டாங்கால வரிசையாயிருக்கிறது.[2]

திரண்டஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவை உண்டாக்கி, அதை மேல்ஜலம், கீழ்ஜலமாகப் பிரித்தது பாவ கார்மேகத்தால் அலசடிப்படுகிற இருதயத்தில் தேவாவியானவர் ஊடறுத்துச்சென்று தமது கிரியையை நடப்பித்து, நம்மை ஆவிக்குரிய புத்திரராக்கும்படி உருவேற்படுத்தும்படி முயற்சிப்பதைக் குறிக்கிறது.

அதன்பின்பு ஆகாயவிரிவின்கீழ் ஏகமாய்த் திரண்டிருந்த ஜலத்தை ஓரிடத்தில் சேர்த்து, வெட்டாந்தரை காணப்படச் செய்தார். ஜலத்திரள் சமுத்திரமென்றும், வெட்டாந்தரை பூமி என்றும் அழைக்கப்பட்டது. வெட்டாந்தரை என்றழைக்கப்பட்ட பூமியில் உடனே புல்லும், பூண்டும், கனிவிருட்சங்களும் உண்டாயின. இது மூன்றாங்கால வரிசையாயிருக்கிறது.[3]

பூமியானது வெட்டாந்தரையாக மாத்திரம் விடப்பட்டிருக்குமானால் எவ்வளவு கேவலமாகக் காணப்படும். புல்பூண்டு விருட்சங்கள்தான் பூமிக்கு அழகு, பொன்னிடப் பொன்னிடப் பொன்னுக்கு அழகு. பூவிடப் பூவிடப் பெண்ணுக்கு அழகு என்ற பழமொழியைப்போலப் புல்லிடப் பூண்டிடப் பூமிக்கு அழகு என்று சொல்லலாம். மனுஷனுடைய நல்ல குணங்களும் பேச்சுகளும் செய்கைகளும்

[1] ஆதி. 1. 3–5. [2] ஆதி. 1. 6–8. [3] ஆதி. 1. 11–13.

அவனுக்கு அழகைக் கொடுக்கும் புல்பூண்டுகளைப்போலிருக்கிறது. நற்குணம் நற்செய்கையில்லாதவன் நற்கந்தம் வீசாத பாலைவனத்துக்குச் சமம். பூமியானது புஷ்பஜாதிகளாலும், கனிவிருட்சங்களாலும் நிறைந்திருக்கிறதெப்படியோ, அப்படியே ஒவ்வொரு உள்ளமும் நற்குணங்களாலும் நற்செய்கைகளாலும் நிறைந்திருக்கவேண்டியது.

அப்பால் ஒளி இருள் என்ற வித்தியாசம் மாத்திரமல்ல, பகல் இரவு என்ற வித்தியாசம் விளங்கும்படி விசேஷ சுடர்களைத் தேவன் ஸ்தாபிக்கச் சித்தங்கொண்டு பகலை ஆளும்படி சூரியனையும், இரவை ஆளும்படி சந்திரனையும் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். இவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும், நாட்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் தேவனால் ஸ்தாபிக்கப்பட்டன.[1]

சகல சூரியனிலும் மேலான ஒரு சூரியனுண்டு. அதற்கு நீதியின் சூரியன் என்று பேர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நீதியின் சூரியன். தேவனுடைய நாமத்துக்குப் பயந்திருக்கிறவர்கள்மேல் அந்த நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியமிருக்கும்.[2] அவரே உலகத்தின் ஒளியாயும் விடிவெள்ளி நட்சத்திரமாயும் இருக்கிறார். எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி அவரே.[3]

ஆ! சிநேகிதனே, இந்த ஜோதிராசிகள் இல்லாவிட்டால் வானந்தான் என்னமாயிருக்கும்? இந்தச் சூரியனும், இந்த சந்திரனும், இந்த நட்சத்திரங்களும் இல்லாவிட்டால் உலகத்தார் எல்லாரும் ஒரு மாசம் பின்னிடக்கூடுமோ? இருக்கிறதின் அருமை அது இல்லாதிருக்கும்போதுதான் நன்றாய்த் தெரியும் என்று சொல்லவேண்டியது. எல்லாம் அந்தகாரமும், எங்கும் இருட்டுமாகவே இருக்கும். இவை இல்லாமல் நமக்குக் கண்ணிருந்தென்ன, காலிருந்தென்ன? அழகும், அலங்காரமும் உள்ள ஒரு மனுஷதேகிக்கு ஆத்துமாவில்லாமல் உடலிருந்தென்ன பிரயோசனம், அல்லது நீதியின் சூரியனாகிய இயேசுகிறிஸ்து இல்லாமல் ஒரு பகுத்தறிவுள்ள ஆத்துமா இருந்தென்ன? இந்த சூரியனைக் காட்டுஜெந்துக்களும், வீட்டுப்பட்சிகளும் கண்ணோக்கலாம்; ஆனால் அந்த ஞானசூரியனுடைய மகத்துவங்களை தேவதூதர் முதலாய் கண்ணோக்க இயலாமல், தங்கள் செட்டை தங்கள் முகத்தைமூட சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று ஓயாமல் பாடிக்கொண்டேயிருக்கிறார்கள்.

[1] ஆதி. 1. 14–19. [2] மல். 4. 2. [3] யோவா. 1. 7. வெளி. 22. 16.



சூரியன் நாலாம்நாளில் உண்டாக்கப்பட்டதேயானால் முதலாம் நாளிலிருந்த வெளிச்சம் எங்கேயிருந்து வந்ததென்று நம்மில் சிலர் கேட்போம். தேவன் லோகத்தைச் சிருஷ்டித்து, உருவேற்படுத்தின காலத்தில் மனுஷனும்கூட இருந்திருப்பானானால், இப்பொழுது மயக்கமாய்க் காணப்படுகிறதெல்லாம் அதிக லேசாய் விளங்கிப்போம். என்றாலும் அந்த ஒளி எங்கிருந்துதான் வந்ததென்பதை அவன் கண்டுபிடித்துக்கொள்ள மாட்டான். கரையோரம் கசிய பெருகியிருக்கும் ஒரு சுனையை அல்லது குளத்தை நாம் பார்த்து, அது சுரந்துவரும் ஆழத்து ஊற்றுத்துவாரங்களை நாம் கண்டுபிடித்துக்கொள்ளக் கூடாதவர்களாய் இருக்கிறோம். ஆண்டவரே! நீர் சூரியனைப் படைத்தீர்; ஒளியானது சூரியனையல்ல உம்மைச் சார்ந்திருக்கும்படியாக சூரியனுக்கு முன்னும், சூரியனையல்லாமலும் ஒளியை உருவாக்கினீர்; இன்னும் ஒருகாலத்தில் நாங்கள் சூரிய சந்திர நட்சத்திரங்களின் ஒளியை முற்றிலும் இழந்து, உம்முடைய ஒளியே எங்களுக்கு வெளிச்சமாயிருக்கும் பாக்கியத்தைப் பெற்று அநுபவிப்போம். உமது சமூகமே எங்கள் பிரகாசமாயிருக்கும்.

இனி நாம் உலக சிருஷ்டிப்பைப்பற்றி மறுபடியும் பேசுவோம்: வானமென்ற ஆகாயவிரிவிலே பார்க்கும் சுடர்கள் ஏற்படுத்தப்பட்டவுடனே, பூமியானது முன்காணப்படாத காட்சியாயும், அழகாயும் காணப்பட்டது. அப்புறம் ஆகாயத்தில் வாழும் பட்சிகளும், சமுத்திரத்தில் வாழும் மச்சஜாதிகளும் உண்டாக்கப்பட்டன. தேவன் ஆகாயத்துக்கேற்ற ஜீவன்களால் ஆகாயத்தை நிரப்பி, ஜலத்துக்கேற்ற ஜீவன்களால் சமுத்திரங்களை நிரப்பினார். அந்த ஜீவன்கள் எல்லாம் தங்கள் அழகிய சிறகுகளை விரித்துபறந்து, இன்ப குரலால் தங்கள் சிருஷ்டிகர்த்தாவை ஸ்தோத்திரித்தன. சமுத்திரஜீவன்களாகிய மகா மச்சங்களும், மற்றும் சிறிதும் பெரிதுமான எண்ணிறந்த ஜீவன்களும் தங்கள் தாபரங்களிலிருந்து மகிழ்ச்சிகொண்டாடின. இது சிருஷ்டிப்பின் ஐந்தாங்கால வரிசையாயிருக்கிறது.

இம்மட்டும் பூமியில் நடமாடவும் அதின் புல்பூண்டுகளால் மகிழ்ச்சிகொள்ளவும், யாதொரு ஜீவன்களும் இருந்ததில்லை. ஆதலால் தேவன் பூமியை மிருகஜீவன்களாலும் ஊரும்பிராணிகளாலும் நிரப்பச் சித்தங்கொண்டு, “பூமியானது ஜாதிஜாதியான ஜீவஜெந்துக்களாகிய நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும் ஜாதிஜாதியாக பிறப்

பிக்கக்கடவது என்றார்." அது அப்படியே ஆயிற்று. அது முதல் பூமியெங்கும் சகல விதமான ஜந்துக்கள் உலாவித்திரிந்து, உல்லாசமாய் வாழ்ந்துகொண்டுவந்தன. இது சிருஷ்டிப்பின் ஆறுங்காலப் பிரிவாயிருந்தது.*

இவ்வண்ணமாக ஆகாயம் பட்சிகளால் குடியேற்றி பசட்டாய் விளங்கின. ஜலம் நீர்வாழும் ஜெந்துக்களால் குடியேற்றப்பட்டு சளுக்காய்த் தோன்றுகின்றன. பூமி புல்பூண்டுகளாலும் விருட்சங்களாலும் குடியேற்றப்பட்டு அலங்காரமாய் விளங்கின. காடுகளும் வனங்களும் சகலவிதமான பிராணிகளால் நிறைந்தன. தேவனாகிய கர்த்தர் தாம் உண்டாக்கினவைகளைக் கண்ணோக்கினார். ஆ! மிகவும் நன்றாயிருந்தது. ஆண்டவருடைய கிரியைகளில் அலங்கோலம் உண்

* கவனிப்பு. சிருஷ்டிப்பின் கிரியைகள் ஆறுநாட்களாய் நிறைவேற்றப்பட்டு முடிந்ததாக வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஒவ்வொரு நாள் சிருஷ்டிப்பின் வரலாறு முடியும்போது சாயங்காலமும் விடியுங்காலமுமாகி, முதலாம் நாள் அல்லது இரண்டாம் நாள் உண்டாயிற்று என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆறுநாள் என்பதும், சாயங்காலம் விடியுங்காலமென்பதும் சிருஷ்டிகர்த்தாவின் கிரியைகளின் படிப்படியான வளர்ச்சியைக் குறிக்கும்படியான முறையாயும் அல்லது பூமண்டலமானது பூரணஸ்திதியைப்பெற்ற யுகங்களை உணர்த்தும் முறையாயும், அந்தக் கிரியையின் சம்பந்தமாயுள்ள தொடர்ந்தேற்றியான ஆறு காலவகுப்புகளைக் காட்டுகிறதாயும், அல்லது அப்பதங்கள் கடவுளின் கிரியைகளைமாத்திரம் சம்பந்தப்பட்டதாயிராமல் அக்கிரியைகளை அவர் நமக்கு உணர்த்துவித்த பல வெளிப்படுத்தலைத் தழுவினதாயும் இருக்கிறதென்று நாம் எண்ணவேண்டியது. மேலே காட்டிய மூன்று கருத்துகளில் கடைசியான தாற்பரியமே சொற்ப ஆட்சேபனைக்கு இடமானது. நம்முடைய பலவீன மனோதத்துவங்களின் கிரகிப்புக்கு இசைவாயும், கடவுளின் மகிமைபொருந்திய கிரியைகளை நாம் தியானிப்பதற்கு அநுகூலமாகவுமே சிருஷ்டிப்பின் தொழில் இப்படி ஆறு பிரிவாக அமைத்து எழுதப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. மேலும் மோசே என்பவர் ஆறு நாட்களையும் வரிசையாய்ச் சொன்னபின்பு அவை அனைத்தையும் ஒரே நாளாகப் பேசியுமிருக்கிறார் (ஆதி. 2. 4. பார்.). ஆதலால் "நாட்கள்" என்பது தேவனுடைய கிரியை நிறைவேறுதலின் காலப்பகுதிகளாயிராமல், மனுஷன் அவருடைய கிரியைகளை அறிந்துகொள்வதின் பொருள்பகுதிகளாய் மாத்திரமிருக்கின்றன. இது நமது மனோதத்துவத்துக்கும் கிரகிப்புக்கும் தெளிவாக விளங்கும்படியாக அவருடைய கிரியைகளின் தொகையைக்காட்டும் முறையாயிருக்கிறது.



டோ? கர்த்தருடைய கிரியைகள் கண்ணை மகிழச்செய்யாதோ? எல்லாம் நன்றாயிருந்தது. அவர் தமது கிரியைகளில் மகிழ்ந்து எல்லாம் நன்றாயிருக்கிறது என்று சொன்னார்.

இவ்வளவு சிருஷ்டிப்பும் வானமென்ற ஆகாயவிரிவுக்குக் கீழேயுள்ளவைகளாய் மாத்திரமிருந்தன. ஆகாயவிரிவுக்கு மேலே இருந்த பாகத்தைப்பற்றி நமக்கு ஒன்றுந்தெரியாது. அதை தேவன் தமது வாசஸ்தலமாகவோ வேறே சிருஷ்டிகளின் வாசஸ்தலமாகவோ உருவேற்படுத்தியிருக்கலாம். அதின் விபரம் இன்னது என்று நாம் ஆராயும்படி கவலைப்படவேண்டாம். மறைவானவைகள் எல்லாம் நமது தேவனாகிய கர்த்தருக்கே அடுத்தவைகள் என்று விட்டுவிட்டு, வெளிப்படுத்தப்பட்டவைகளைமாத்திரம் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகளென்று அடக்கிக்கொள்வோமாக.

எப்படியும் இந்தச் சிருஷ்டிகளெல்லாம் உருவேற்படுமுன்னே சிருஷ்டிக்கப்பட்டிருந்த ஒரு ஜீவஜாதிகள் இருந்தன. அந்த ஜீவன்கள் பொதுவாக சம்மனசுக்கள் அல்லது தேவதூதர் என்று அழைக்கப்படுகிறார்கள். தேவனை ஸ்துதிப்பதும், அவருடைய கட்டளைகளை நிறைவேற்றி அவரைச் சேவிப்பதுமே அவர்களுடைய தொழில். அவர்கள் வாயுவேகமாய்ச் சென்று தங்கள் ஆண்டவரின் ஊழியங்களை நிறைவேற்றிவருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவ்வாறு சிறகுகள் உண்டு. இவர்கள் பற்பல பிரிவாக வகுக்கப்பட்டு, தம் தமக்குரிய கடமைகளை முறுமுறுப்பின்றி நடப்பித்துக்கொண்டு வருகிறார்கள். அவ்வகுப்பின் சில தலைவருடைய பேர்மாத்திரம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் முறையே கேருபீன், சேராபீன், காபிரியேல், மிகாயேல் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தப் பூலோகம் சிருஷ்டிக்கப்பட்ட சமயத்தில் இந்த விநோத சிருஷ்டிகள் ஒவ்வொரு சிருஷ்டியையும் கண்டு ஆநந்தம்கொண்டு தங்கள் சிருஷ்டிகர்த்தாவைப் புகழ்ந்தார்கள். தேவதூதருடைய குரலோசையின் இன்பம் சிருஷ்டிகளின் காட்சியின் இன்பத்தோடுகூடி பரம பிதாவை மனமகிழ்ச்சிசெய்தது. மேலோகத்திலிருந்து தூதர் மூலமாய் உண்டாகும் துதிக்கு எதிரொலியாக பூலோகத்திலிருந்து ஒரு ஜீவனிலிருந்து துதியும், தோத்திரமும் எழும்ப வேண்டுமென்று தேவன்சித்தங்கொண்டார். உன்னத பிதாவே! உமது மகிமைபிரஸ்தாபத்துக்கென்று மனுமக்களைச் சிருஷ்டிக்க ஆரம்பித்த உன்னத ஞானத்தைத் துதிக்கிறோம்.

# ADAM. (THE FIRST MAN.)

## ஆதாம் முனிவர்.

(முதல் மனுஷன்.)

### மனுஷ உற்பத்தி பருவம்.

மனுஷனைச் சிருஷ்டிப்பதற்கு தேவன் திருவுளம்கொண்டபோது தமது துதியைமாத்திரமல்ல, பூலோகத்துக்கு அவனால் அவசியமிருக்கிறதென்றும் கண்டு "நமது சாயலாக நமது ரூபத்தின்படியே மனுஷனை உண்டாக்குவோமாக" என்று திருவுளம்பற்றினார். இந்தத் திருவுளக்குரலைக் கேட்ட தேவதூதர் அப்போது என்ன நினைத்திருக்கமாட்டார்கள்? அவர்கள் தங்கள் கண்களால் தாழ்ந்த புல்முதல் உயர்ந்த கேதுருமட்டும் உள்ள தாபரங்களையும், எறும்புமுதல் யானைவரையும் உள்ள ஜீவஜெந்துக்களையும், ஈசல்முதல் கழுகுமட்டும் உள்ள பறக்கும் பிராணிகளையும் கண்டு களிகூர்ந்து, தங்களைச் சிருஷ்டித்த கர்த்தாவின் வல்லமையையும், ஞானத்தையும் முன்னிலும் அதிக கனிவோடு ஆராதித்துவந்தார்கள்; இப்போது இவைகளோடு தங்கள் ஆண்டவரின் கிரியைகள் முடிந்துபோகவில்லை என்றும், அவருடைய கிரியைகளை ஆராய்ந்து முடியாதென்றும் காண்கிறார்கள். தாங்கள் பார்க்கும் பூலோக சிருஷ்டிகளுக்கெல்லாம் மேலான ஒரு சிரேஷ்ட சிருஷ்டியை மாத்திரமல்ல, தங்களுக்கும் மேலான ஒரு விசேஷ சிருஷ்டியை ஆண்டவர் உண்டுபண்ணப்போகிறாரென்று ஆச்சரியத்தோடு எதிர்பார்த்தார்கள். இனி உண்டாக்கப்படப்போகிற மேலான சிருஷ்டி தேவனுடைய சாயலின்படி அமைக்கப்படுமென்ற தேவதிருவுளம் அவர்களுக்கு அச்சத்தையும், ஆச்சரியத்தையும் கொடுத்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

மேலும் அவர்களுக்கு அருளப்போகிற அதிகாரமும், சொற்சத்தியும், மேன்மையும் தேவதூதருக்கு அதிக விசாரணையையும், சம்பாஷணையையும் எழுப்பிவிட்டிருக்கலாம். "தமது சாயலின்படி உண்டாக்கப்படப்போகிற சிருஷ்டியானது சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும்,



மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணியையும் ஆளக்கடவர்கள்" என்றும் திருவுளம்பற்றினார். இவ்வித அதிகாரத்தையும், ஆளுகையையும் தேவதூதர் அறியாதிருந்தார்கள். இது மனுமக்கள் அனைவரையும் சிருஷ்டிகளுக்கு மேலாக உயர்த்தும் பூர்வ செப்புப்பட்டையம்போல் இருக்கிறது.

தேவன் தமது தீர்மானத்தை நிறைவேற்றும்படி ஆரம்பித்து முதலாவது, பூமியின் மண்ணினாலே ஆதி மனுஷனை உருவாக்கி தமது ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அந்நிமிஷமே அவன் ஜீவாத்துமாவானான். உன்னத பிதாவே! உமது அடியாராகிய மனுமக்களை சர்வ சிருஷ்டிக்கும் மேலாக உருவாக்கினதற்காக உமக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. மனுஷனுக்குத் தேவன் ஆதாம் என்று பேரிட்டார்.*

கடவுள் தமது ஜீவசுவாசத்தை ஊதினதினாலேதான் மனுஷன் உயர்ந்த சிருஷ்டியானான். அவர் தமது சுவாசத்தை ஊதினதோடு தமது சாயலையும் சேர்த்து ஊதி அமைத்தார்.

அந்தச் சாயலென்ன? என்பது எவரும் ஆசையோடு கேட்கவேண்டிய ஒரு கேள்விதான்; அதைப்பற்றி ஆராய்ந்தறிவதும் தகுதிதான். அந்தச் சாயல் எதில் அமைக்கப்பட்டிருந்தது? மனுஷனுடைய சதையிலா, இரத்தத்திலா, எலும்பிலா, மூளையிலா, நரம்பிலா என்று கேட்பது விபரீதமான கேள்வி என்று பழிப்போடு தள்ளிவிடலாகாது. இப்படிக் கேட்பதெல்லாம் அதின் இரகசியத்தைக் கண்டுபிடிக்கும்படி கேட்கிற ஆசையின் ஆவலென்று எண்ணிக்கொள்ளவேண்டியது.

சிலர் மற்ற சிருஷ்டிகளிலிருந்து மனுஷனை வித்தியாசப்படுத்தும்படி ஒருவித ஒளி அவனைச் சுற்றிலும் மூடியிருந்து மகிமைப்படுத்தினது என்று நினைக்கிறார்கள். இந்த அபிப்பிராயத்தை நாம் தள்ளிவிடக்கூடாது. ஒருவேளை இப்படிப்பட்ட ஒளிமயதேகியாய் ஆதிமனுஷன் இருந்தாலும் இருந்திருக்கலாம். இவ்வித பிரகாசம் மோசே என்பவர் முகத்தில் ஒருதரம் காணப்பட்டது.[1] அல்லது உயிர்த்தெழுதலின் காலத்தில் நீதிமான்களின் சரீரம் விளங்கும் சாயலாக இருந்தாலும் இருந்திருக்கலாம்.[2] இந்த அபிப்பிராயத்தை ஒப்புக்

* ஆதாம் என்பதற்கு மண் அல்லது செம்மண் என்று அருத்தம். இந்தப் பேர் மண்ணால் உண்டாக்கப்பட்ட முதல் ஆணின் சடலத்துக்குமாத்திரமல்ல, மனுஷசுபாவத்துக்குப் பொதுப்பேராகவும் இருந்தது. (ஆதி. 5. 2. பார்.)

[1] யாத். 35. 14. [2] 1 கொரி. 15. 4.

கொண்டால் மேலே சொல்லிய ஒளிமயச்சாயல் மனுஷனுடைய விழுதலினால் சேதப்பட்டுப்போயிருக்கவேண்டியது. என்றாலும் தேவனைச் சுற்றிலுமுள்ள பிரகாசத்தை தேவசாயலென்று சொல்வது சரியல்ல. ஆதலால் தேவசாயலென்பது வெறும் ஒளிமயரூபத்துக்கு மிஞ்சினதாய் இருக்கவேண்டியது என்று தோன்றுகிறது.

வேறு சிலர் ஆதிமனுஷனுக்கு மற்றெல்லாச் சிருஷ்டிகளின் மேலும் கொடுக்கப்பட்ட அதிகாரமும், ஆளும் திறமையுமே தேவசாயலாக இருந்தது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இதை நாம் முந்தினதற்கும் தாழ்வான அபிப்பிராயமாக எடுத்துக்கொள்ளவேண்டியது. தேவனுடைய ஆதிக்கத்தின் பாகம் தேவசாயலென்று சொல்லுவது சரியாகத் தோன்றுகிறதில்லை.

ஆதலால் ஆதிமனுஷனுக்கு அருளப்பட்ட தேவசாயலானது இவை இரண்டுக்கும் மிஞ்சினதும், அவனுடைய சரீர உறுப்புகளுக்கு மேலான பாகத்தை அடுத்ததாயுமிருந்தது என்றும் நாம் எண்ணவேண்டியதிருக்கிறது. அந்தச் சாயல் ஆத்துமதத்துவங்களை அடுத்ததாயிருந்ததென்பது வேதவசனத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பரி. பவுல் "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக உண்டாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்"[1] என்றும், "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி, புதிதாக்கப்பட்ட புதியமனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே"[2] என்றும் சொல்லியிருக்கிறார். ஆதலால் ஆதிமனுஷனுக்கு அருளப்பட்ட தேவசாயலில் மூன்று லட்சணங்கள் இருந்ததாக வெளியாகிறது. அவன் பூரண அறிவும், பரிசுத்தமும், பாக்கியமும் உடையவனாயிருந்தான்.

அவன் தீர்க்கஅறிவுடையவனாய்ச் சிருஷ்டிக்கப்பட்டான். அவன் பாஷைகளின் அட்சரங்களைப் படித்து, எழுத்துக்கூட்டி வாசித்து, ஒவ்வொரு கல்வியிலும் படிப்படியாகத் தேறுகிறவனாயிராமல் சகல கலை வல்லோனாகவே இருந்தான். அவன் அறியாத சூஸ்திரமும், அவனுக்கு எட்டாத சாஸ்திரமும் இருந்ததில்லை. நமக்கு ஞானம் அவனுக்குச் சாதாரணமாயும், நமக்கு அந்தரங்கம் அவனுக்குப் பகிரங்கமாயும் இருந்தன. ஆராய்ச்சி, ஆலோசனை, ஞாபகம் என்னப்பட்டவைகள் அவனுக்கு அவசியமில்லாதிருந்தது.

---

[1] பிலி. 2. 21. [2] எபே. 4. 20. கொலோ. 3. 10.



சன்மார்க்க விஷயத்திலும் அவன் அறிவு அப்படியே பூரணப்பட்டிருந்தது. தேவதன்மை இன்னது, இலட்சணம் இன்னது, சித்தம் இன்னது என்பதையும்; தேவன் விஷயமாய்த் தன் கடமை இன்னது, கீழ்ப்படிதல் இன்னது, கிரமம் இன்னது என்பதையும் அவன் பூரணமாய் அறிந்திருந்தான்; அவன் பரிசுத்தமுடையவனாயுமிருந்தான். பாவசாஸ்திரத்தின் அட்சரமுதலாய் அவனுக்குத் தெரியாதிருந்தது. சம்மனசுகள் நிமிஷந்தோறும் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று பாடுங்கீதத்தோடு இவனும் தன் கீதத்தைச் சேர்த்து தேவனை ஸ்துதித்துவந்தான். அவனுடைய சித்தமும் விருப்பமும் பரிசுத்தமாயிருந்தது; அவன் சித்தம் தேவசித்தத்தோடு இசைந்திருந்தது. தேவனுக்குக் கீழ்ப்படிவதே தன் இன்பமும் சுயாதீனமுமாயிருந்தது.

ஆ! நாம் இச்சமயத்தில் நமது சித்தத்தையும் விருப்பத்தையும் இதோடு ஒத்துப்பார்க்கிறதுண்டானால், எவ்வளவு வித்தியாசப்பட்டிருக்கிறதென்று காணலாம். நாம் வெட்கத்தாலும் நிந்தையாலும் நிறைந்து, இருகைகளாலும் கண்களைக் கெட்டியாய் மூடிக்கொண்டு,

ஐயோ இக்கெதியானேனே
ஐயோ விழுந்துபோனேனே
எப்போகாண்பேன் இந்தவாழ்வை
இப்போகண்டால் அந்தவாழ்வை

என்று ஏங்குவோம் என்பதற்குச் சந்தேகமில்லை.

அவன் அநுபவித்த பாக்கியத்துக்கு ஒரு கணக்கில்லை. பரிசுத்தம் இருக்கும் இடத்தில் பாக்கியத்துக்குக் குறைவுண்டா? பாவஞ்செய்யாத தூதர் இன்னும் பாக்கியராயிருக்கிறார்கள். அவன் உள்ளம் சமாதானமாயிருந்தது. சஞ்சலம், துக்கம், கோபம், பொறாமை, தாபம், ஏக்கம் என்னப்பட்டதை அவன் கனவிலும் அறியான்.

எங்கள் ஆதி பிதாவே! நீரே பாக்கியவான். உன் மக்களாகிய நாங்கள் அறிவிலும், பாக்கியத்திலும், பரிசுத்தத்திலும் பங்குபெறும்படி படும் அவஸ்தைகள் உமக்கிருந்ததில்லை. உன்னதமானவர் மனுஷனைத் தமது சாயலுக்கு உயர்த்திவிட்டது அவருக்கு அதிகப் புகழ்ச்சியாகவே இருக்கிறது. அதிலும் அதிகமாய் பழைய பாக்கியத்தை இழந்த நம்மை அவர் மறுபடியும் கைவிடாது தூக்கினாரே, அல்லேலூயா.

தேவன் ஆதிமனுஷனை உண்டாக்கினபின்பு தமது சிருஷ்டிகள் அனைத்தையும் கண்ணோக்கி மனமகிழ்ந்தார். எல்லாம் தமது மகிமைபிரதாபத்துக்கேற்ற ஒழுங்கும் கிரமமுமாய்

அமைக்கப்பட்டிருந்தன; ஆதலால். அது மிகவும் நன்றாயிருந்தது.

முதல்மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டவுடனே அவனுக்கு ஆசீர்வாதமும், ஆதிக்கமும் அளிக்கப்பட்டது. நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்களென்று ஆசீர்வதித்தார். பூமியைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜெந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்ற ஆதிக்கத்தையும் கொடுத்தார்.

ஆண்டவரே! மனுஷனை நீர் இவ்வண்ணம் உயர்த்துகிறதற்கும், மனுப்புத்திரனை நீர் இவ்வண்ணம் மேன்மைப்படுத்துவதற்கும் அவன் எம்மாத்திரம்? மனுஷன் யானையிலும் உயர்ந்தவனோ? சிங்கத்திலும் பலவானோ? உம்முடைய சாயல் எங்களை மேன்மையாக்கிவிட்டது; உம்மால் உயர்ந்தோம்; உம்மை அல்லாமல் தாழ்வோம். நீர் எங்களுக்குத் தந்திருக்கிற ஆசீர்வாதத்தையும், ஆதிக்கத்தையும் கண்டு கேட்கும்தேவதூதரும், பரமண்டல அதிகாரங்களும் மண்ணுக்குக் கிடைத்த மகத்துவத்தைக் கண்டீர்களோ என்று சொன்னாலும் குற்றமுண்டோ? உமது சாயலால் உயர்ந்தோம், உமக்கே ஸ்தோத்திரம்.

நமது ஆதித்தகப்பன் இந்த பாக்கியமான ஸ்திதியில் தனிமையாக சில காலமிருந்தான் என்று தோன்றுகிறது. அது இவ்வளவு காலமென்று சொல்ல ஏதுவில்லை. தேவன் அவனைக் குடியேற்றும்படி ஒரு தோட்டத்தை உண்டாக்கினார். அதற்கு ஏதேன் என்று பேர் வழங்கப்பட்டது. அது விஸ்தாரமான ஒரு தோட்டமாயும் "பார்வைக்கு அழகும் நலமுமான சகலவித விருட்சங்கள் அடங்கினதாயும் இருந்தது. நாலு பெரிய ஆறுகளாய் ஓடும்படியான திரண்டஜலத்தைக் கொடுக்கும் சுனையும் அத்தோட்டத்தினுள்ளே இருந்தது. அங்குள்ளபுல் வாடாமலும், பூ வதங்காமலும், இலைகள் உதிராமலும் பூரண செழிப்பாயிருந்தது. அங்கிருந்து வீசினகாற்று ஆரோக்கியத்தைக் கொடுத்தது. கோடை, வாடை, பனி, மழை இவைகளால் சுகமாறும் தன்மை அத்தோட்டத்துக்குள் இருந்ததில்லை. ஆயாசம், நோய், சாவு என்னப்பட்டதும் அவ்விடத்தில் இருந்ததில்லை. அத்தோட்டத்தினுள்ளே ஆடுமாடு, மான்முதலிய ஜந்துக்கள் சந்தோஷமாய் வாழ்ந்துகொண்டிருந்தன. அத்தோட்டத்தின் புல்லின் புஷ்டியாலும், ஜலத்தின் பலத்தாலும் மிருகங்களின் மடிகளிலிருந்து பால் ஒழுகுமென்று சொல்லலாம். அதின் மத்தியில் இரண்டு விருட்சங்கள் தழைத்து



ஓங்கிவளர்ந்து வானத்தை அளாவினின்றன. அவைகளில் ஒன்றுக்கு நன்மை தீமை அறியத்தக்க விருட்சமென்றும், மற்றதற்கு ஜீவவிருட்சமென்றும் பேர் வழங்கப்பட்டது. இவை இரண்டும் உடன்படிக்கையின் மரங்களாயிருந்தன.

நமது ஆதித்தகப்பன் ஏதேனில் குடியேற்றப்பட்ட முதலாம் நாளில் மேலே சொல்லிய உடன்படிக்கையின் விருட்சங்களண்டை தேவன் அவனைக் கூட்டிப்போய் அவனுக்கு மூன்று காரியங்களைக் கட்டளையிட்டார். அதில் ஒன்று வேலைக்கடுத்தது, ஒன்று சுகத்துக்கடுத்தது, இன்னொன்று சுகவீனத்துக்கடுத்தது என்று சொல்லலாம்.

வேலைக்கடுத்ததாக ஆதாம் சமுசாரியாயிருந்து அந்தத் தோட்டத்தைப் பண்படுத்தவேண்டியதாயிருந்தது. சமுசாரித் தொழில் எவ்வளவு மேலானது என்று இதினால் விளங்குகிறது. நமது தேசத்தார் கல்விகற்று சர்க்கார் உத்தியோகம் வேண்டுமென்கிறார்கள்; ஆண்டவரோ, பாவமில்லாத ஆதாமுக்கு சர்க்கார் அலுவல் அல்ல, சமுசாரி வேலையை முதலாவது கொடுத்தார். அந்தத் தோட்டத்தைப் பந்தோபஸ்துசெய்வதும் அவன் கடமையாயிருந்தது. ஆத்துமசம்பந்தமாய் ஒவ்வொருவனும் தன் தன் இருதயத்தைப் பண்படுத்தி, அது பொல்லாப்புக்குச் சாயாதபடிக்கு அதைக் காவல்பண்ணவேண்டியதும் இதினால் உணர்த்தப்படுகிறதென்று சொல்லலாம்.

சுகத்துக்கும் க்ஷேமத்துக்கும் தக்கதாக பச்சைப்பூண்டுப் பயிர்களையும், விதைகளையும், கனிவர்க்கங்களையும் ஆகாரமாகக் கொடுத்தார்.

ஆதிமனுஷன் சுகவீனத்துக்குட்படாதபடி அத்தோட்டத்துக்குள்ளிருந்த நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாமென்றும் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார். இக்காலத்து மனுஷர் அநேகர் கட்டுப்பாட்டுக்கும் கட்டளைக்கும் அமைந்து நடக்காமல், சுயாதீனம், சுயாதீனமென்று சத்தமிடுகிறதை நாம் பார்க்கிறோம். ஆதிமனுஷன் பாவஞ்செய்யாதிருந்த காலத்திலும் அவன் அடங்கி நடக்கும் ஸ்திதியில் வைக்கப்பட்டான். தேவனுக்கு அடங்கி நடப்பதுதான் நமது சுயாதீனமாக வைத்துக்கொள்ளவேண்டியது.

ஆதாம் ஏதேனுக்குள் வந்தவுடனே ஏதேனில் முன்னிராத சந்தோஷமும், மகிழ்ச்சியும் அதின் சோலைக்குள் காணப்பட்டது. ஆண்டவர் தமது ஜீவஜந்துக்கள் அனைத்தையும் அவனண்டை கூட்டிவந்து அவைகளை அவன் பாதங்களுக்குக்

கீழாக்கி, ஒவ்வொரு ஜந்துவுக்கும் பேரிடச்சொன்னார். ஆதாம் குணமறிந்து அந்தந்தச் சிருஷ்டிக்கும் பேரிடும்போது, ஆண்டவர் ஆனந்தங்கொண்டாரென்று சொல்லக்கூடாதோ? இப்போதுதான் ஆதாமின் ஞானமும், பேச்சுத்திறமையும் முதலாந்தரமாக வெளிப்படுத்தப்படுகிறது. மிருகங்கள் எல்லாம் ஆதாமைத் தலைவனாக அங்கிகரித்துக்கொண்டன. அவனைப் பற்றிய அச்சமும், மதிப்பும் சகல ஜந்துக்களுக்கும் உண்டாயிற்று. யானை தன் தும்பிக்கையை அவனுக்கு விரோதமாக உயர்த்தவுமில்லை, சிங்கம் தன் முக்காரத்தை அவனுக்குமுன் காட்டவுமில்லை, புலி தன் பாய்ச்சலை அவனுக்குமுன் பாராட்டினதுமில்லை. அவைகள் அனைத்தையும் அவன் ஒரே மந்தையாக வைத்து ஆண்டுவந்தான். அக்காலத்தில் சிங்கமும் ஆடும், புலியும் புல்வாயும், எலியும் பூனையும், கீரியும் பாம்பும், பருந்தும் கோழிக்குஞ்சும் யாதொரு பிணக்கின்றி இணக்கமாய் வாழ்ந்துகொண்டிருந்தன. சாயங்காலத்திலும் விடியுங்காலத்திலும் பட்சிஜாதிகள் ஏகமாய்க் கூடி, கிளைகளிலிருந்து தம் தம் விநோதகுரலால் பாடிக் கெக்கரிக்கும். கிளைகளுக்கும் இலைகளுக்கும் ஊடேயிருந்து வரும் தொனி பத்துநரம்புவீணையிலிருந்து வரும் தொனியிலும் இன்பமும் ஏற்றதுமாயிருந்தது.

அதுவன்றி தேவபிரசங்கம் அத்தோட்டத்தில் அடிக்கடி வெளிப்பட்டு ஆதிமனுஷனை சந்தோஷப்படுத்திற்று. எந்த இன்பமானாலும் இந்த இன்பத்துக்கு இணையாகுமா? தேவபிரசங்கத்தை ஆத்துமா கண்டு களிகூரும் மகிழ்ச்சி அனுபவித்தவனுக்குத் தெரியுமேயன்றி, அநுபவியாதவனுக்குச் சொன்னாலும் தெரியாது.

தேவன் இப்படியே ஏதேனுக்குள் வந்துபோய் இருக்கையில் ஒருநாள் அவருடைய செயலை இதிலும் அதிசயமாக காட்டச் சித்தங்கொண்டார். ஒவ்வொரு ஜந்துவும் ஜோடுஜோடாக வாழ்ந்து பூரண ஆனந்தங்கொண்டாடிக்கொண்டிருந்தது; ஆனால் ஆதிமனுஷனுக்கோ இன்னும் துணை காணப்படவில்லை. ஏதேனின் மிருகங்கள் எல்லாம் தம் தம் இனமிருகங்களோடு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஏதுவிருந்தது; ஆதாமுக்கோ அப்படிப்பட்ட வழி இருந்ததில்லை. அவன் பேசவேண்டுமானால், ஒன்று தேவனோடு அல்லது தேவதூதரோடுதான் பேசிக்கொள்ளவேண்டியது. அவர்களோ பரமண்டல வாசிகளானதால் ஒரு வேளாவேளைமாத்திரம் ஏதேனுக்கு வந்து போகிறவர்களாயிருந்தார்கள். மற்ற நேரங்களில்



ஆதாம் தனிமையாகவே இருக்கவேண்டியதாயிருந்தது. அவன் மகிழ்ச்சியும் புகழ்ச்சியும், அவன் பாட்டும் ஆட்டும், அவன் பேச்சும் தியானமும், அவன் ஆலோசனையும் தீர்மானமும் அவனுக்குள் மாத்திரம் அடங்கியிருக்கவேண்டியதாயிருந்தது. இவ்விதஸ்திதியிலிருந்து அவனை உயர்த்தும்படி தேவன் திருவுளம்கொண்டு அவனுக்கு ஏற்ற ஒரு துணையை உண்டுபண்ணவேற்பட்டார். ஆண்டவருடைய தயவுக்கு அளவுண்டா? நமக்கு வேண்டியவைகளை அவரே அறிந்து, அவைகளை நமக்குக் கட்டளையிடுகிறார். நம்மட்டில் அவருடைய கிரியை பூரணமானவைகளாகவே இருக்கின்றன.

அத்தீர்மானத்தை நிறைவேற்றும்படி ஆதிமனுஷனுக்கு அயர்ந்த நித்திரையைக் கட்டளையிட்டார். அவன் சுகமாய் நித்திரைபோனான். இதுதான் அவனுடைய முதலாம்நித்திரை. இவனுடைய நித்திரையின் மகிழ்ச்சி விழிப்பின் மகிழ்ச்சியிலும் ஆனந்தமென்பதை அவன் அப்போது கண்டிருப்பான். அவன் தூங்கிக்கொண்டிருக்கும்போதே, கடவுள் அவனுடைய விலாவெலும்பில் ஒன்றை எடுத்து அந்த எலும்பிலிருந்து ஒரு ஸ்திரீயை உருவாக்கி, தூங்கினவனுக்குமுன்பாக நிறுத்திவிட்டு அவன் நித்திரையை மாற்றினார். ஆதாம் திடுக்கென்று விழித்து இம்மட்டும் காணாத ஒரு புது சிருஷ்டியைக்கண்டு பிரமித்து, சற்றுநேரம் உற்று ஆராய்ந்து நிதானித்து, அந்தச் சிருஷ்டியின் உறுப்புகளை நுட்பமாய்க் கவனித்து, "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள்" என்று சொல்லி, அவளுக்கு மனுஷி என்று பேரிட்டான்.

ஆதித்தாய் தந்தைகள் சிருஷ்டிக்கப்பட்ட பூர்வோத்தரம் இவைகளே. இவ்விருவரும் சாங்கோபாங்கமாய் ஏதேனில் உலாவி, அதின் பழவர்க்கங்களைப் புசித்து, அதின் மலர்ந்த புஷ்பங்களை மோந்து மனமகிழ்ச்சியாகி மகிமையிலும், கனத்திலும் முடிசூட்டப்பட்டு மங்களமாய்க் காலம்கழித்துவந்தார்கள். சகல மிருகங்களும் அவர்களுக்குக் கீழ்க்குடிகள்போல் அடங்கிநடந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக தேவசமுகத்தை அவர்கள் அநுதினமும் தரிசித்து, தேவனை ஸ்துதித்துக்கொண்டு வந்தார்கள். தேவதூதரே அவர்களுடைய கூட்டுத்தோழராய் இருந்தார்கள். இவர்கள் துதிதோத்திரங்கள் தேவதூதருடைய கீதங்களோடு கலந்து, பரமபிதாவை மனமகிழ்ச்சிசெய்தது.

ஆதித்தாய் முதலாம்தரமாக இப்பூலோகத்தைக் கண்டபோது எவ்வளவாய் மனமகிழ்ந்திருப்பாள் என்று எண்ணவேண்டி

யது. மயிலின் அழகுள்ள ஆட்டமும், பஞ்சவர்ணக்கிளிகளின் பசட்டும், குயிலின் குரலும், புறாக்களின் கூவுதலும், மற்றக் குருவிகளின் கெக்கரிப்பும் ஆதித்தாயின் மனமகிழ்ச்சி என்னும் கின்னரத்துக்கு சுருதிகூட்டும் கருவிகள்போலிருந்தன. என்று சொல்லவேண்டியது. அங்கே காணப்பட்ட சிங்கங்களின் வீரியமும், புலியின் பாய்ச்சலும், மான்களின் வேகமும் கடவுளின் பராக்கிரமத்தை அவளுக்கு உணர்த்தி, சர்வ வல்லமையுள்ள தேவரீர் கனத்தையும், மேன்மையையும் அடையப் பாத்திரராயிருக்கிறீர் என்று சொல்லும்படி எவியிருக்கும்; அங்கே காணப்பட்ட நீர்வளமும், நிலவளமும் கடவுளின் தயாளத்தை அவளுக்கு நினைப்பூட்டியிருக்கும்; அங்குள்ள புஷ்ப அழகும், பழ இன்பமும் அவருடைய ஞான ஐசுவரியமென்னும் பொக்கிஷங்களை அவளுக்குமுன் திறந்துகாட்டினாற்போல் இருந்திருக்கலாம். ஒரு விஷக்காற்றாவது, விஷப்பனியாவது, நோயாவது, சாவாவது, இளைப்பாவது, ஆயாசமாவது, அந்த மங்களதோட்டத்தின் எல்லைக்குள் காணப்படவில்லை. ஆ, அவர்கள் அநுபவித்த இன்பத்தைப் பூரணமாய் எழுதத் தமிழில் எழுத்துகளும் வார்த்தைகளுமில்லையே, நான் என்னசெய்வேன்.

## பாவ உற்பத்தி பருவம்.

ஆதித்தாய்தந்தை பவுசுகளையும், பாக்கியங்களையும் இன்னும் சொல்லவேண்டும், அதைக் கடைசிமட்டும் நான் கேட்டுக் களிகூறவேண்டுமென்று எவர்களும் ஆசைப்படலாம். ஆ சிநேகிதனே, இதற்கு மிஞ்சிசொல்ல என்ன இருக்கிறது! அவர்கள் செல்வம் தரித்திரமாயும், மகிழ்ச்சி மனநோவாயும், புகழ்ச்சி இகழ்ச்சியாயும், சந்தோஷம் சஞ்சலமாயும், இன்பம் துன்பமாயும் மாறிவிட்டதே! அவர்கள் பாக்கியம் கெட்டு, அறிவு கெட்டு, பரிசுத்தம் கெட்டு நிர்ப்பாக்கியரும், அறிவீனரும், அசுத்தருமாகிவிட்டார்களே! அவர்கள் வாழ்வுபோய், தங்க இடமற்று, தாபரிக்க ஸ்தலமற்றுப்போனார்களே! அவர்கள் தேவதூதரின் கூட்டுறவையும், தேவசந்நதத்தையும், மற்ற சிருஷ்டிகளின் மதிப்பையும் இழந்துவிட்டார்களே! அவர்கள் சமாதானத்தின் பாதையைவிட்டு, தேவகட்டளையைமீறி, பாவத்துக்கு விரைந்தோடி பரிசுத்தனை விரோதப்படுத்திக்கொண்டார்களே!

அப்படியா?—ஐயோ!
அதெப்படி?—சொல்லும்!



சொல்ல என் வாய் எழும்புதா? எழுத என் கை ஓடுதா? அவை ஒன்றையும் அறியாமலும், உணராமலும் இருக்கிறவர்களுக்கு இவை அனைத்தும் கதை கேட்டதுபோலிருக்கும்; எனக்கோ அப்படியல்ல. என் உள்ளம் துக்கத்தாலும், என் நெஞ்சு சஞ்சலத்தாலும் நிறைந்திருக்கிறது. என் விசனம் அதின் வரலாறுகளைச் சொல்லவிடாதபடி என் தொண்டையை அடைக்கிறது; என் சஞ்சலம் அதைப் பேசவிடாதபடி என் நாவைக் கட்டுகிறது. இப்படிப்பட்ட தாயையும், தகப்பனையும் ஒரேநாளில் சாகக்கொடுத்த அன்புள்ள மகன் பேசவும் வாய் எழும்புமா? இவ்வளவு பாக்கியங்களையும் ஒரேநிமிஷத்தில் பறிகொடுத்தவனுக்கு எழுதவும் கை ஓடுமா? ஆனாலும் என் திக்குவாயோடும், திகைப்போடும் சொல்லி ஆறும் வழியே இன்றி வேறு வழியுமில்லை.

நமது ஆதித்தாய் தந்தைகள் ஒருக்காலும் காணாததும், கேளாததுமான ஒரு சத்துரு பாதாளலோகத்தில் வசித்துவந்தான். அவனுக்குப் பிசாசு என்றும், சாத்தான் என்றும் பேர்வழங்கப்பட்டது. அவன் ஜாதியில் சம்மனசாயிருந்தான். ஒருகாலத்தில் இவனும் மற்றத் தூதரோடேகூட பரமண்டலத்தில் வசித்து, பரமபிதாவாகிய தேவனைத் துதித்தவன்தான். இவர்கள் தங்களுடைய ஆதிநிலைமையைக் காத்துக்கொள்ளாமல் மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் தள்ளப்பட்டதுமுதல் குணப்படாமலும் மனந்திரும்பாமலுமிருந்து தங்கள் இருதயத்தை உன்னதமானவருக்கு விரோதமாகக் கடினப்படுத்திக்கொண்டிருந்தார்கள். தேவன் நன்மையாக உண்டுபண்ணுகிறதில் எல்லாம் தீமை கலந்துவிடவேண்டுமென்பதே இவர்கள் தாற்பரியம்.

தாங்கள் கடவுளை எதிர்த்துத் தள்ளுண்டதுபோல இன்னும் மீதியான சம்மனசுக்களும் அவரை எதிர்த்துத் தங்களைப்போல் பாதாளலோகத்தின் குடிகளாகவேண்டுமென்று அவர்கள் வெகுவாய் முயற்சிப்பட்டிருக்கலாம். அவைகள் ஒன்றும் பலிக்கவில்லை. இப்படியிருக்கும்காலத்தில் இவர்களில் ஒருவன் ஆகாயத்தில் உலாவி பூமியைப் பரிசோதிக்கையில் நீரோடி, நிலம்பூத்து வளம்பொருந்தியதாயிருக்கிற ஒரு தோட்டத்தையும், அதினுள் தேவர்களின் சாயலுக்கொப்பான ஒரு ஆணும், ஒரு பெண்ணும் சர்வபாக்கியத்தோடு வாழுகிறதையும், அவர்கள் பூலோகத்தில் அரசாளவும், பரலோகத்தைச் சுதந்தரிக்கவும் தேவன் சித்தங்கொண்டிருக்கிறார் என்றும்; அவர்கள் துதியைத்

தற்பரனானவர் பழைய தூதருடைய துதியைவிட அதிக இன்பமாகக் கேட்கிறாரென்றும்; அவர்களோடு சகஜமாய் கூடிக்குலாவி, காலம்கழிக்கிறாரென்றும்; சம்மனசுக்களை முதலாய் அவர்களுக்குப் பணிவிடைசெய்ய அனுப்புகிறாரென்றும் கண்டறிந்து, பொறாமையால் மூண்டு, தன் கூட்டாளிகளிடம் போய் நமது ஆதித்தாய் தந்தையின் வாழ்வில் மண்ணைப்போடத்தலைப்பட்டான். ஐயோ! சாத்தானே இந்தக் கெடுபுத்தி உனக்கேன்? இந்தப் புத்தியை நீ இன்னம் விடக்காணோமே; இதை நீ உன் பிள்ளைகள் எல்லாருக்கும் இந்த ஆறாயிரம் வருஷமாய்ப் படித்துக்கொடுத்து என்ன லாபத்தைக் கண்டாய்? உன் ஆகாமியத்திலிருந்து ஓயமாட்டாயோ? இப்படி உன்னதமானவரை விரோதிக்கிறதைவிட்டு, அவருடைய பாதம்பணிந்து மன்னிப்புக் கேட்கலாகாதா? நீ இப்படிச் செய்யச்செய்ய உன் பாதாளம் ஆழமாய்த் தோண்டப்பட்டு, உன் அக்கினி அதிகரிக்கப்பட்டு, உன் தண்டனையைப் பதின் மடங்காகப் பெருக்கிவிடுகிறாயே.

இந்தப் பசாசுக்கள் தங்களைச் சபித்துத் தள்ளினவருக்கு தங்களாலான இடையூறுகளைச் செய்வதே தங்களுக்கு மேன்மை என்று ஒருவேளை அவர்கள் எண்ணியிருக்கலாம்; அல்லது வம்பும், இடும்பும், கலாபனையும் பண்ணிக்கொண்டேயிருப்போமானால், கடவுள் தாமே நம்மை வலியகூப்பிட்டு, உங்களுக்கும் நமக்கும் பிரிவினைவேண்டாம், பழையபடி உங்கள் வேலையைக் கிரமமாய் நடப்பித்துவாருங்கள் என்று தாமே சொல்லுவாரென்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம்; அல்லவென்று அரூபிகளாகிய நம்மை முற்றிலும் மறந்து, ரூபிகளை உயர்த்தப்போகிறாரென்று வன்கண்பட்டிருக்கலாம். எப்படியோ அந்தப் பரமசண்டாளர் நமது குடியையும், நமது பிதாக்களின் குடியையும் கெடுத்துப்போட்டார்கள். கெடுத்தது கெடுத்தாயிற்று, இனி காரணத்தை அறிந்தென்ன, அறியாதிருந்தென்ன? எப்படியும் பசாசுக்கள் தாங்கள் நினைத்தகாரியத்தை நிறைவேற்ற அநேக ஆலோசனையும், பலவழியும் கையாடி இருக்கலாம்.

அவனுடைய பலநாள் கவலை ஒருநாள் நிறைவேறிற்று. அதெப்படி என்றால், ஒருநாள் ஆதித்தாயும் தந்தையும் அவரவர் மட்டில் பிரிந்து அத்தோட்டத்தில் உலாவும்போது, காலத்துக்கேற்ற கோலம்பூண்டு காரியத்தை ஆகப்பண்ணுகிற சாத்தான் அத்தோட்டத்திலிருந்த எல்லா ஜந்துக்களிலும் கபடமுள்ளதாயிருந்த சர்ப்பத்துக்குள் புகுந்து அதின் ரூபம் பூண்டு,



தேவன் விலக்கின நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைக்குறித்து ஸ்திரீயோடே சம்பாஷித்தான். அடிக்கடி பிசாசு நாம் தனித்திருக்குமட்டும் நம்மண்டை வரவேமாட்டான்.

நாகரூபம் பூண்டிருந்த அந்த நரகலோகப்பேய் ஆதித்தாயினிடமட்டும் வந்து மாதே, மன்னர்தேவியே, "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாமென்று தேவன் சொன்னதுண்டோ" என்று கேட்டது. அதற்கு அவள் சொல்வாள்: இல்லை, நாங்கள் தோட்டத்தின் கனிகளை எங்கள் மனங்கொண்டமட்டும் புசிக்கலாம்; ஆனால் தோட்டத்தின் நடுவிலிருக்கிற விருட்சத்தின் கனியைமாத்திரம் புசிக்கக்கூடாது, புசித்தால் எங்களுக்குச் சாவு சம்பவிக்கும் என்று பகவான் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொன்னாள். உடனே நாகவேடம்பூண்ட பசாசு, நீங்கள் சாகவே சாவதில்லை, நீங்கள் அதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும்; நீங்கள் நன்மை இன்னது, தீமை இன்னது என்று அறிந்து தேவனைப்போல் இருப்பீர்கள் என்று சொன்னான். இந்த வாசகத்தினால் சாத்தான் தேவனைப் பொய்யனென்றும், வஸ்துக்களின் குணங்களைக் கண்டுபிடிக்கும் அறிவு இல்லை என்றும், அவர் மாறுபாடாய்ப் பேசியிருக்கிறாரென்றும் அவளுடைய மனதில் படும்படிப் பேசினான். மேலும் இவ்வளவு வாழ்வும், பெரியதனமும், அவர்களுக்கு இந்தப் பழத்தினால் உண்டாகும் என்பதை தேவன் அறிவார் என்றும் சொன்னான். இவன் தன் பொய்யை எவ்வளவு இசைவாய் உறுதிப்படுத்தும்படி பார்க்கிறான் என்பதை நன்றாய் அறிகிறோம். பசாசு பாவத்துக்குப் போடுகிற அஸ்திபாரத்தையும், அதைப் படிப்பிக்க முதலாவது போதிக்கும் அட்சரத்தையும் இங்கே பார்க்கிறோம். தேவனைப் பொய்யராக்கி, அவருடைய வார்த்தையைப்பற்றிச் சந்தேகிப்பதே பாவத்தின் முதலாம்படி. இந்தப் படியில் கால்வைத்தது மெய்யானால், பாவபாதாளத்தில் ஒருவன் இறங்கிவிடுவது வருத்தமில்லை. இவ்வண்ணம் சாத்தான் பேசும்போது ஆதித்தாயின் காது நாகரூபியின் சத்தத்தை நோக்கினாலும், அவளுடைய கண் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனிமேலும், அவளுடைய கைகள் அந்தக் கனிகள் தொங்கின கிளைமேலும் இருந்தது என்று சொல்லவேண்டியது. திருட்டுத்தண்ணீர் தித்திக்கும் என்ற நீதிவாசகப்படி, வேண்டாம் என்று தேவனால் விலக்கப்பட்ட கனி நமது ஆதித்தாயினால் வேண்டுமென்று விரும்பப்பட்

டது. அதைத் தின்னாமல் தீராது என்று மனதில் தீர்மானம் பண்ணிக்கொண்டாள். இவ்வளவு நேரத்துக்குள்ளாக தேவனுடைய கட்டளை அவளுடைய மனதை விட்டுப்போய்விட்டது. அந்தக் கனியின் அழகும், அதின்மேலிருந்த இச்சையும் தேவனுடைய கட்டளையை அச்சமயத்தில் மறைத்துப்போட்டது. கடைசியாக ஆதித்தாய் பழ ஆசையால் மதிமயங்கி, ஐயோ, கனியைப் பிடுங்கித்தின்றாள்.

ஐயோ ஆதித்தாயே! நீ ஏன்தான் அன்று தனியே போனாய்? நீ ஆண்டவரைக் கேட்டிருந்தால், அவர் உனக்குத் துணையாக அரைலட்சம் தூதரை அனுப்பியிருப்பாரே; தன் பலத்தில் சார்ந்ததின் லாபம் விழுதல்தான். ஆ, கபடமில்லா அன்னமே! உன் சத்துருவின் கண்ணியை நீ கண்டுபிடியாதபடிக்கு ஆசை என்னும் பாசியும், சந்தேகம் என்னும் சகதியும் மறைத்துக்கொண்டிருந்தது. ஏதேனின் மானே, உன்னை வேட்டையாடித் துரத்திக்கொண்டுவந்த வல்ல சர்ப்பத்தை நல்ல சர்ப்பம் என்று எண்ணிவிட்டாயாக்கும். பரதீசின் பஞ்சவர்ணக்கிளியே, இம்மட்டும் நீ தின்றுகழித்த பழத்திலும் அதிக இன்பம் இதற்குள் புகுந்திருந்ததோ? இல்லையே; நீ ஆசைவார்த்தையால் மோசம்போனாய். இனி உனக்கு நகைப்பேது, சந்தோஷமேது?

ஆதித்தாயானவள் விலக்கப்பட்ட கனியைப் புசித்துக்கொண்டிருக்கும்போதே ஆதாமும் வந்துசேர்ந்திருக்கலாம். சர்ப்பரூபம் பூண்டசாத்தான் ஆதாமிடத்தில் யாதொரு வார்த்தையும் பேசவில்லை. அந்த வஞ்சகன் நேராக அல்ல, ஸ்திரீயின் மூலமாய் ஆதி மனுஷனுடைய கழுத்தில் பெரிய எந்திரக் கல்லை கட்டி இருவரையும் ஏகமாய்ப் பாவசாகரத்தில் ஆழ்த்திவிட இருந்தான். சாத்தான்மாத்திரம் விலக்கப்பட்ட கனியைப்பற்றி ஸ்திரீயினிடத்தில் பேசினதுபோல, ஆதாமிடத்தில் பேசுகிறதுண்டானால் அவன் விழித்துக்கொண்டு அபயம், அபயமென்றலறி, ஆண்டவரை நோக்கிக் கெஞ்சியிருப்பான். ஆதாம் வருகிற நேரத்தில் ஸ்திரீ பழத்தைத் தின்றதால் பாராட்டின ஆனந்தமும், மகிழ்ச்சியும், அவள் முகத்தில் விளங்கிய மலர்ச்சியும் ஆதாமை மயக்கிவிட்டது என்று சொல்லலாம். அவள் தான் தின்ற மதுரக்கனியை ஐயோ! நஞ்சுக்கனியைத் தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். ஆதாமும் தான் பழத்தைத் தின்றகாலத்தில் யாதொரு மாறுதலையும் திடீரென்று கண்டுபிடியாமலிருக்கலாம். இதற்கு இரண்டொரு முகாந்தரங்களிருந்தன. அவர்களை வஞ்சித்த சாத்தான் இன்னும் அவர்களோடிருந்தான். மேலும் அவர்



கள் இன்னும் தங்கள் பாவச்செய்கையாகிய பழந்தின்கிற வேலையிலே இருந்தார்கள். அதுவின்றி அவர்கள் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் நிழலின்கீழேதான் இருந்தார்கள்.

நாம் பாவம்செய்கையிலும், பாவநிழலுக்குள்ளும் அதின் அதிகாரியின் பக்கத்திலுமிருக்கையிலும், பெரும்பாலும் பாவ உணர்ச்சி இருக்கவேமாட்டாது. பாவஅதிகாரியின் சமுகம் விட்டு, பாவச்செய்கையை நிறைவேற்றி ஓய்ந்தபின்புதான் பாவஉணர்ச்சி உண்டாகலாம். அதுமட்டும் பாவத்துக்கு மிஞ்சின இன்பம் உலகத்தில் இல்லை என்றும், அதின் அதிகாரிக்கு மிஞ்சின உத்தமநேசர் பூமியில் இல்லை என்றும் மனதில் படலாம்.

அவர்கள் இருவரும் தங்கள் மனம்கொண்டமட்டும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைத் தின்றுவிட்டு, அதின் ஓரத்திலிருந்த ஜீவவிருட்சத்தண்டை வந்திருக்கலாம். ஜீவவிருட்சத்தின் இலைகளை அசைக்கும் குளிர்ந்தகாற்றும், அந்தப் புஷ்பங்களை அசையச்செய்யும் இனியவாடையும் அவர்கள்மேல் வீசியிருக்கலாம்; மேலும் தங்கள் வஞ்சகனுடைய சமுகமும் விலகியிருக்கலாம்; உடனே அவர்கள் காரியங்களில் சருவமாறுதலைக் கண்டார்கள். நாம் ஜீவவிருட்சமாகிய இயேசுவண்டைசேர்ந்து, அவருடைய இரட்சண்யத்தின் காற்றுவது படுமட்டும் நமது நிலைமையை அறிய ஏது இருக்கமாட்டாது.

அவர்கள் பாவஞ்செய்து கொஞ்சநேரத்துக்குள்ளாகத் தங்களை நிர்வாணிகளென்று அறிந்தார்கள். ஐயோ! இவர்கள் பரிசுத்தம் எவ்வளவு க்ஷணப்பொழுதுக்குள் மாறிவிட்டது. பாவத்தைப்போல லேசானதுமில்லை, பாவியாகிறதைப்போல லேசானகால அளவுமில்லை. தங்களை நிர்வாணிகளென்று அறிந்ததோடு அதைமாற்றும் புதுவழியை அறிந்தார்கள். அவர்கள் அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். ஆகவே இலைதைத்து அதை வஸ்திரமாகக்கட்டும் புத்திதான் அவர்களிடத்தில் முதலாவது வெளிப்படுகிறது. இந்த இலைஉடுப்பு உட்காரத் தாங்குமா? ஓடப்பொறுக்குமா? இது வெயிலுக்கு நிற்குமா? பகலுக்கு ஆகுமா? என்கிற அம்மாத்திரயோசனை அவர்களுக்கு இல்லாமல்போயிற்று. இதுதானா தேவனைப்போலாகும் மேலான அறிவு? தேவனுடைய அறிவீனம் பசாசின் ஞானம் என்று சொல்லவேண்டியது.

அவ்விருவரும் தங்கள் நீசநிலைமையைக் கவனித்து ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கலாம்: இதென்ன மாறுதல்; ஐயோ! இதென்ன வித்தியாசம். இவ்வளவு நேரத்துக்குள்ளாக நமது சரீரத்துக்குள் இன்னின்ன விபரீதங்கள் காணப்படுகின்றனவே என்று ஆதித்தாய் ஆதாமையும், ஆதாம் ஆதித்தாயையும்பார்த்து மாற்றிமாற்றிப் பேசியிருக்கலாம். ஆதி முதல் நடந்த வரலாறுகளை அவள் ஆதாமுக்கு விபரமாய்த் தெரியப்படுத்தாமல் இருக்கலாம். அத்தோடே அவர்கள் அந்தகரணத்தில் நிலையான மாறுதல்கள் உண்டாகியிருக்கிறதென்று கண்டுகொண்டார்கள். அவர்கள் புத்தி, சித்தம், அகங்காரம் எல்லாம் சேதப்பட்டு விரோதமும், பகையும், துணிவும், கீழ்ப்படியாமையும், விவேகத்தாழ்ச்சியும், மறதியும் தங்களை ஆட்கொண்டிருக்கிறதென்றும், நீதியும், மெய்யறிவும், பரிசுத்தமும் அற்று அதற்குப்பதிலாக ஆகாமியம் தலைப்பட்டிருக்கிறதென்றும் ஒருவருக்கொருவர் சொல்லி பிரமித்திருக்கலாம்.

இப்படியிருக்கும்காலம் பகலின் குளிர்ச்சியானவேளையாய் இருந்தது. அவ்வேளையிலே தேவனும் தமது வழக்கப்படி ஏதேனில் எழுந்தருளியானார். அவருடைய வருகையின் பிரசங்கத்தையும், அவருடைய நடையின் சாயலையும் அவர்கள் கவனித்து ஓடிப்போய் ஏதேனின் சோலைக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்.

ஆ, என் ஆதித்தாய் தந்தைகளே, இப்படி ஒளிக்கவும் காலம் வந்ததா! ஏதேனிலுள்ள மிருகங்கள் ஒன்றும் ஒளிக்கக்காணோம்; அவை அனைத்தும் தங்கள் சிருஷ்டிகர்த்தாவின் சமுகத்தைக் கண்டு பரிபூரண ஆனந்தங்கொண்டாடுகின்றனவே; பட்சிஜாதிகள் இப்போது தங்கள் சிறகுகளை அடித்து தம் தம் இன்பகீதத்தைக் கொண்டாடுகின்றனவே; நீங்கள் இருவரும் ஒளிக்கிறீர்களே. ஒருவரும் சொல்லாமல் நீங்களே ஒளிக்கிறீர்கள். உங்கள் வெட்கமே உங்களை ஒளித்துக்கொள்ளச் சொல்லுகிறது. ஐயோ! கானலில் துரத்துண்ட மான் அல்லது முயல் வேட்டைக்காரர் நெருங்குகையில் புகலற்றுப்போய்ப் புதருக்குள் ஒளிக்கிறுப்போல நீங்கள் ஒளிக்கிறீர்களே, உங்கள் பாவமே உங்களைத் துரத்தும் வேட்டைநாய்போல் இருக்கிறது. ஒருநாளும் ஒளிக்காத நீங்கள் இன்று ஒளிப்பானேன்! நீங்கள் தேவகட்டளையை மீறினீர்கள். அவருடைய தண்டனையின் மிலாறு உங்கள் மனச்சாட்சியில் விழுகிறதல்லவா? பாவிகளுக்கும் பரிசுத்தருக்கும் உறவேது, கூட்டேது? பாவியண்டை



தெய்வீக இரட்சகன் வலியவந்தாலும், அவன் ஓடி ஒளிக்கிறவனாகவே இருக்கிறான். பாவி ஒளிப்பது பாவிக்கே கேடு.

அவர்கள் ஆண்டவர் தோட்டத்தில் உலாவும் சத்தத்தை மாத்திரமல்ல, தங்களைக் கூப்பிடும் சத்தத்தையும் கேட்டார்கள். பாவி ஒளித்தாலும் பராபரன் சும்மாயிரார். தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கேயிருக்கிறாய் என்று கேட்டார். அவர் ஒளிக்கிறவனை அவனுடைய ஒளிப்பிடத்திலே வைத்துக் கொல்லுகிறவரல்ல; அவர் இரக்கமும், மனவுருக்கமும், நீடியசாந்தமும், மகா கிருபையுமுள்ளவர். அவர் தண்டனைக்குப் பாத்திரராகிய நம்மேல் கிருபையாயிருக்கிறார், கோபம்கொள்ளுகிற காலத்திலேயும் இரக்கத்தை நினைவுகூருகிறார்.

நீ எங்கேயிருக்கிறாய் என்று கேட்டவுடனே ஆதாம் மறுமொழியாக, "நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிருவாணியாயிருப்பதினாலே பயந்து ஒளித்துக் கொண்டேன்" என்றான். நமது ஆதித்தகப்பன் இந்தவிஷயத்தில் உள்ளதைச் சொன்னான்; அவன் கூப்பிட்ட சத்தத்துக்கு உடனே மறுமொழிகொடுத்தான். இதுதான் நல்ல பிள்ளைகளுக்கு அடையாளம். தேவனுடைய சில பிள்ளைகள் அவருடைய சத்தத்துக்கு செவிகொடுக்கிறதேயில்லை. அவர்கள் தங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, தங்கள் காதுகளை மந்தமாக்குகிறார்கள்.

இதனோடு ஆதிமனுஷனுக்கும் தேவனுக்கும் ஒரு சம்பாஷணை நேரிட்டது. "நீ நிருவாணி என்று உனக்கு அறிவித்தது யார்? புசிக்கவேண்டாமென்று நான் உனக்கு விலக்கின கனியைப் புசித்தாயோ? என்று கேட்டார். அதற்கு ஆதாம்: "என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின்கனியை எனக்குக்கொடுத்தாள், நான்புசித்தேன்" என்று சொன்னான். இந்த உத்தரவினாலே தன் விழுதலுக்கு தேவனை ஆதிகாரணரும், ஸ்திரீயை கருவிகாரணமுமாக பேசுகிறதுபோல் இருக்கிறது. "தேவரீர் தந்த" என்ற வார்த்தையினாலே தன் கேட்டுக்கெல்லாம் தேவனே காரணர் என்று சொல்லாமல் சொல்லுகிறதுபோல் இருக்கிறது. இந்தப் பாடத்தை ஆதாமின் மக்களாகிய நாம் இன்னும் மறக்கவில்லை. நாம் அடிக்கடி தேவனுக்கு விரோதமாக பொல்லாப்பைச் செய்துவிட்டு நீர் தந்த புத்தியால், நீர் தந்த பலத்தால், நீர் தந்த உத்தியோகத்தால், நீர் தந்த சுகத்தால் இப்படியாயிற்று என்று சொல்லுகிறதுண்டு. இது ஆதித்தந்தையின் பழைய பாடமாயிருக்-

கிறது. இதை மறந்துவிடவேண்டியது. பாவத்தைச் செய்கிறது நாம், அதின் பழியை ஏற்கிறது தேவனா? அவர் பாவத்தை அறியாத பரிசுத்தராயிருக்கிறார். "அவனவன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சோதிக்கப்படுகிறான்" என்று சத்தியவேதம் அறிவிக்கிறது. தன் மனைவியை "ஸ்திரீயானவள்" என்று கழித்துப்பேசினான். சில காலத்துக்குமுன் என் எலும்பில் எலும்பு, என் மாம்சத்தில் மாம்சமென்று சொன்னவளை இப்போது எங்கேயோ உள்ள ஒரு அந்நிய மனுஷியைக்குறித்துப் பேசுகிறதுபோல பேசுகிறான். பாவம் துவக்கத்திலே உறவைப்பெருக்கி, கடைசியில் உறவை அழிக்கும். இந்த வார்த்தைகளைப் பேசும்போது அதிக எரிச்சல் உண்டாகியிருந்ததுபோல் தோன்றுகிறது. தேவனைச் சற்று உடாசித்துப் பேசுகிறான். ஆதாம் முதலாம்தரம் பேசினதுபோல மாத்திரம் சற்று உணர்வோடும், தாழ்ச்சியுள்ள இருதயத்தோடும் மறுமொழிகொடுத்திருந்தால் தேவனுடைய சம்பாஷணையும் நீடித்திருக்கலாம். அவன் இப்படிப் பேசவே அவனோடுபேசின அவருடைய பேச்சுக்கும் முடிவுவந்தது.

தேவன் அவனோடு பேசுவதைவிட்டு ஸ்திரீயைநோக்கி: நீ இப்படி செய்ததென்ன? என்று கேட்டார். இவளாவது தாழ்ச்சியுள்ள மனதோடு தன் மூடத்தனத்தை அறிக்கையிட்டு நடந்த வரலாறுகளை விப்ரமாய்ச் சொல்லலாகாதா?

சர்ப்பம் என்னை வஞ்சித்தது,
நான் புசித்தேன்

என்று தன்மேல் படாமலும், சாத்தான்மேல் படாமலும் சட்டென்று சொல்லிவிட்டாள். ஒருவேளை இப்பொழுதுதான் ஆதாமுக்கு தன் மனைவி சர்ப்பத்தால் மோசம்போனாள் என்று தெரிந்திருக்கலாம்.

தேவன் இம்மட்டில் விட்டாரா? இல்லை. அவர் பாவத்தை லேசாய் விட்டுவிடுகிறவரல்ல. முந்தின இரண்டு பாவிகளும் பண்ணின பாவ அறிக்கை சரியான அறிக்கையாயிருக்கவில்லை. ஆதலால் அவர் தமது நீதியின்படி பாவத்வதத் தண்டிக்கச் சித்தங்கொண்டார்.

ஆதாமிடத்திலும், ஸ்திரீயினிடத்திலும் கேட்ட தேவன் சர்ப்பத்தினிடத்தில் யாதொன்றும் கேட்கவில்லை. சர்ப்பத்துக்குள் புகுந்திருந்த பிசாசே இவ்வளவுக்கும் காரணன் என்று அவர் நன்றாய் அறிந்திருந்தார். மேலும் நமது ஆதித்தாய் தந்தைகள் மேல் அன்புகூர்ந்ததால் அவர்களை விரும்பினார் என்றும், சாத்தான் பகைத்ததால் வினவவில்லை என்றும் நினைக்கலாம்.



இதுதான் இந்தப் பூலோகத்தில் நடந்த முதலாம் கச்சேரி விசாரணையாயிருக்கிறது. இந்த மாதிரியே பின்காலத்தில் பின் தொடரப்பட்டது என்று சொல்லலாம். இதற்குமுன் இப்படிப் பட்ட விசாரணை ஒன்று பரமண்டலத்தின் ஒருபாகத்தில் நடந்தது. அவ்விசாரணையில் தேவதூதரில் ஒரு பட்சத்தார் கைதிகளாய்நின்று நித்திய சங்கிலிகளால் கட்டப்பட்டு, பாதாளம் என்னும் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

இந்த நியாயவிசாரணையில் சர்வவல்லமையுள்ள தேவன் நியாயாதிபதியாக வீற்றிருந்தார். ஆதாமும், அவன் மனைவியும், சர்ப்பமும் அவர் சமுகத்துக்குமுன்பாக வணக்கமாக தலைகவிழ்ந்து நின்றார்கள். குற்றவாளிகளின் வாக்குமூலமே அவர்களுக்கு விரோதமான சாட்சிகளாயிருந்தது. அந்தக் கச்சேரி ஏதேனில் நடந்தது. இச்சமயத்தில் தேவதூதர்கள் தங்கள் துதிகளை விட்டோய்ந்திருக்கலாம்; மிருகங்கள் எல்லாம் மகா கனபக்தியோடும், அமைதலோடும் தங்கள் ஆண்டவனைப் பணிந்து நிற்கலாம்; பட்சிஜாதிகள் எல்லாம் தங்கள் கூடுகளிலிருந்து கலங்கி யாதொரு சப்தமுங்காட்டாமல் நடக்கும் காரியத்தைக் கண்ணோக்கிக்கொண்டிருக்கலாம். சர்வவல்லவர் நியாயந்தீர்க்க உட்கார்ந்திருக்கையில் சிருஷ்டிகளுக்கு ஆரவாரமேது, ஆர்ப்பரிப்பேது?

வாக்குமூலங்கள் முடிந்தவுடனே குற்றவாளிகளுக்குத் தீர்ப்புப்பிறந்தது. அந்தத் தீர்ப்பு முதலாவது குற்றத்துக்குத் தன்னை ஏதுவாக்கிக்கொண்ட சர்ப்பத்துக்கும், அதினுள்ளிருந்த பிசாசுக்கும் சொல்லப்பட்டது. அப்புறம் முதலாவது பாவத்தில் விழுந்த ஏவாளுக்கும், கடைசியாக பின்பு பாவஞ்செய்த ஆதாமுக்கும் முறையே கூறப்பட்டது. அத்தீர்ப்புகளைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இருதயமும் கலங்கும். அத்தீர்ப்புகளாவன:—

**சர்ப்பத்தின் தீர்ப்பு.** 1. சகல காட்டு மிருகங்களிலும் சகல நாட்டு மிருங்களிலும் நீ சபிக்கப்பட்டிருப்பாய். 2. உன் வயிற்றினால் நகருவாய். 3. உன் போஜனம்மண்ணே. இதுவே சர்ப்பத்துக்குச் சொன்ன தேவதீர்ப்பு.

**சாத்தானின் தீர்ப்பு.** 1. உனக்கும், ஸ்திரீக்கும் இது முதல் பகை உண்டாவதாக. 2. அந்தப்பகை உன்னோடும், அவளோடும் ஓய்ந்துபோகாமல் உன் வித்தோடும், அவள் வித்தோடும் என்றென்றைக்கும் நீடித்திருப்பதாக. 3. நீ ஸ்திரீயின் வித்தான ஒருவருடைய காலை நசுக்குவாய், அவரோ உன்

தலையை நசுக்கிப்போடுவார். இதுவே சாத்தானுக்குச் சொன்ன தீர்ப்பு.

**ஏவாளின் தீர்ப்பு.** 1. வேதனையோடு பிள்ளை பெறுவாய். 2. உன் இச்சை உன் புருஷனுக்குக் கீழாயிருக்கும், அவன் உன்னை ஆளுவான் என்பதே ஏவாளுக்குக் கொடுக்கப்பட்ட தேவதீர்ப்பு.

**ஆதாமின் தீர்ப்பு.** 1. பூமி அனைத்தையும் உன்னிமித்தம் சபித்தோம். 2. நீ மகா வருத்தத்தோடு அதின் பலன்களைப் புசிக்கவேண்டியது. 3. வெளியின் பயிர்வகைகளே உன் போசனம். 4. நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்பதே ஆதாமுக்குச் சொன்னதீர்ப்பு.

இத்தீர்ப்புகள் கூறப்பட்டவுடனே ஏதேன் முழுவதும் இழவுகொண்டாடினதுபோல் இருந்தது. மன்னர் வாக்குக்கு மறுவாக்குண்டோ? சகல மிருகங்களும் தங்கள் ஆனந்தக் குரலை மாற்றி அழுகுரலைக் காட்டிற்று. கர்த்தருடைய நியாயத் தீர்ப்பின் சத்தம் பெருவெள்ள இரைச்சலைப்போல் ஏதேனின் மரச்சோலைகளைக் கடந்து பரலோகமட்டும் தொனித்தது.

இச்சத்தத்தைப் பாதாளலோகப் பூதகணங்கள் கேட்டுப் பாதி சந்தோஷமும், பாதி சஞ்சலமுமாயிருந்தது. தேவன் நல்லதென்று கண்டதை இப்போது அவரே தீயதென்று தீர்த்தார் என்ற சந்தோஷம் பாதாளத்தின் வடமுனையிலிருந்து தென்முனை மட்டும் பிரஸ்தாபிக்கப்பட்டாலும், ஸ்திரீயின் வித்தான ஒருவர் சாத்தான்களுடைய சிரசை நசுக்கும்படி வருகிறாராம் என்றசெய்தி கீழ்த்திசையிலிருந்து மேல்திசைமட்டும் பிரஸ்தாபிக்கப்பட்டன. அதுகண்ட பூதகணங்கள் எல்லாம் ஆகா, நமது தந்திரங்கள் பலித்தாலும் தேவதயாளம் அதை மட்டுப் படுத்திவிட்டதே என்று கவலைப்பட்டார்கள். ஸ்திரீயின் வித்தைப்பற்றிய வாக்குத்தத்தம்மாத்திரம் அன்று ஏதேனுக்குள் கூறப்படவில்லையானால், பாதாள பூதங்களின் ஏராளபூரிப்பை எவராலும் சொல்லிமுடியாது.

ஆதாமே, ஏவையே! இவ்வளவு காரியங்களும் நடக்கும்போது நான் உங்கள் கிட்டநின்று பார்த்திருந்தால் எனக்கு என்னமாயிருக்கும்? உங்கள் நிருவாணத்தை நீங்கள் முன்னிலும் அதிகமாய்க் கண்டு குனிகிறீர்கள்; உங்கள் வெட்கத்தினால் இருகரங்களையுங்கொண்டு முகத்தை மூடிக்கொள்ளுகிறீர்கள்; உங்கள் கால் தள்ளாடி, நடக்க சக்தியற்று நடைபிணம் போலிருக்கிறீர்கள். ஒரே ஒரு ஆறுதலை உங்கள் அலறுதலுக்கு மருந்தாக வைத்துக்கொள்ளுங்கள்.



ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும். இந்த வாசகமே உங்களுக்கு ஆறுதலையும், ஆனந்தத்தையும் தரும் ஒளஷதமாக ஆண்டவர் கட்டளையிட்டிருக்கிறார். இந்த வாசகத்தினால் தேவன் தங்கள்மேல் இரக்கத்தையும் தயவையும் வைத்திருக்கிறாரென்றும், தங்கள் பகைஞன்மேல் கோபத்தை வைத்திருக்கிறாரென்றும் ஆதித்தாய் தந்தைகள் இருவரும் நன்றாய் அறிந்தார்கள். ஆதித்தாய் பாவத்தில் விழுந்தபின்பு ஆதாம் அவளுக்கு முதலாவது இட்டபேரை மாற்றி, ஏவாள் என்ற புதுப்பேரால் அழைத்தான். ஏவாள் என்பதற்கு "ஜீவநி" அல்லது ஜீவதாய் என்று அருத்தம். உள்ளபடி பாவத்தில் விழுந்தபின்பு அவளை சாவுக்குத் தாய் என்பதை உணர்த்தும் பேரைக் கொடுத்திருந்தால் அது நியாயமாயிருக்கும். ஆனால் ஸ்திரீயிலிருந்து தோன்றும் ஒருவித்து தான் இழந்துவிட்ட ஜீவனையும், அழியாமையையும் திரும்பவும் கிடைக்கும்படி செய்வார் என்ற ஆதிவாக்கின் பலத்தையும் முன்னிட்டு, அவளை இந்தப் பேரால் அழைத்திருக்கலாம். ஆதிவார்த்தையின்படி தோன்றின அந்த வித்திலே "ஜீவனிருந்தது" என்று பரி. யோவான் சொல்லுகிறார். (பரி. யோவா. 1. 4.)

பாவஞ்செய்த ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் தோல் அங்கிகளைக் கொடுத்தார். ஏதேனுக்குள் உடைவேண்டியதில்லை; ஏதேனுக்கு வெளியே உடை இல்லாமல் ஆகாது. ஆ, இதென்ன அதிசயம்! பாவம்பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகுகிறது. கர்த்தர் நம்மைத் தண்டிக்கவே தண்டித்தாலும் நம்மைச் சாவுக்கு ஒப்புக்கொண்டார்.

## வனசஞ்சார பருவம்.

இவ்வளவு தயவு பாராட்டினவுடனே ஆதாமும் ஏவையும் தேவன் நம்மை ஏதேனைவிட்டுத் துரத்தமாட்டார் என்று எண்ணியிருக்கலாம். இல்லை, அவ்விருவரையும் ஏதேனைவிட்டுத் துரத்தவேண்டுமென்பதே தேவதீர்மானமாயிருந்தது. அவர் துரத்தின நோக்கமும் தயைகலந்த நோக்கமாகவே இருந்தது. அவர்கள் மறுபடியும் ஏதேனில் வசித்து ஜீவவிருட்சத்தின் கனியைத் தின்றிருந்தால் என்றைக்கும் உயிரோடிருப்பார்கள்; இக்காலத்திலும் நாம் அவர்களைக்காணலாம். அப்படியானால் அவர்களைத் திட்டுவாரும், தூஷிப்பாரும் எத்தனையோகோடி இருக்கும். இவ்வளவுகால நிந்தையை மனுஷன் தாங்கக் கூடுமா? ஆதலால் அவர்களுடைய நன்மைக்கென்றே தோட்டத்திலிருந்து துரத்திவிட்டார். தேவன் அவர்கள் கழுத்தைப்

பிடித்து தள்ளுகிறப்போலே தள்ளி அனுப்பிவிட்டார். ஆ, பிதாவே! உமது தண்டனை எவ்வளவு பயங்கரமானவிதமாய் இருக்கிறது.

ஆதாமே, ஏவையே! இந்த வரலாறைக் கேட்டும் உன் பிள்ளைகள் அநேகர் உங்களை நிந்தித்துத் தூஷிக்கலாம், பழித்து இகழலாம். நான் அப்படிப்பட்ட ஒரு பிள்ளையல்ல. உங்களை அல்ல, என்னை ஆண்டவர் அப்படிப்பட்ட ஸ்திதியில் வைத்திருப்பாரானால், இரட்சண்ய வாக்குத்தத்தமுதலாய் கிடைக்கக்கூடாத அவ்வளவு பெரும் பாவத்தைச் செய்து உலகமுழுவதையும் மீட்பற்ற அழிவின் நிலைமையில் ஆழ்த்தியிருப்பேன்.

இனி ஏதேனின் எல்லையைவிட்டு வெளியேவந்து, கடவுளுடைய நியாயத்தீர்ப்பைச் சுமப்போமாக. நாம் மூவரும் சற்று நேரம் உட்கார்ந்து ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு நாம் இழந்த வாழ்வை நினைத்துப் புலம்புவோமாக.

## புலம்பல்.

ஆதமே ஏவையே ஆதித்தாய் தந்தையே
ஆறாத்துயரம் வந்து ஆழ்த்துதே
ஆர் வந்து ஆற்றுவார் நம்மை!

அழுதாலும் மாறாது தொழுதாலும் மாறாது
பழுதற்றோம் பழுதற்றோம் ஐயோ!
கழுவினால் அப்பழுது போமோ?

கூடுவோம் வாருங்கள் தாய்தந்தை மகனுமாய்
காடுபோய் அலறுவோம் வாருங்கள்,
நாடுபோய் வீடுபோய் கெட்டோம்.

## ஒப்பாரி.

தூயர் உறவு விட்டோம் தூயன் சமுகம் விட்டோம்
மாயவலையில் பட்டோம் மன்னவருந் தள்ளிவிட்டார்.

இன்ப சுகங்கள் விட்டோம், ஏதேனின் வாழ்வை விட்டோம்
துன்பபயங்கள் கண்டோம் துய்யன் எம்மைத் தள்ளிவிட்டார்.

பீசோனின் பொற்சலமும், கீகோனின் நற்சலமும்
பீசோன் கீகோன் கரையில் பேசி யுலாவினதும்.

தேக்கேலின் தெள்ளூற்றும், ஐப்பிராத்தின் அருஞ்சலமும்
தேக்கே லைப்பிராத்தின்கரை தேவனோ டுலாவினதும்.



எல்லாம் முடிந்துபோச்சே எங்கள் மனமேட்டிமையால்
நல்லா இரக்குமையா நாதனே கிர்பைசெய்யும்.

வெட்கம் அவமானம், வேதனைகள் நிந்தை எல்லாம்
பக்கம்பாய் பட்டையம்போல் பாயுதே உள்ளமதில்.

மனசாட்சி குத்துதையா மனக்காய்ச்சல் மெத்த ஐயா
மருந்தருந்தப் போக மனுமக்கள் யாருமில்லை.

சாக்காற் றடிக்குதையோ, சாக்குரல்கள் கேட்குதையோ
சாக்காடில்லாத லோகம் சாவுலோக மான தெம்மால்.

இஸ்திரீயின் வித்து எனும் ஏகன் வரும் வரையும்
உத்தரித்து உம்மை ஓலமிட்டுக்கொண்டிருப்போம்.

மண்ணைச் சபித்தீர் நீர் விண்ணைச் சபிக்கவில்லை
மண்ணில் திருத்தி எம்மை விண்ணி லெடுத்துக்கொள்ளும்.

இந்த நாளை நமது ஆதித்தாய் தந்தைகளின் மரணநாளாக சொல்லத் தடையுண்டோ! இதைப்போல துயரநாளை அவர்கள் அநுபவித்திருக்கவேமாட்டார்கள். தேவன் அவர்களை ஏதேனைவிட்டுத் துரத்தினபின்பு ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காபந்துசெய்யும்படி, கேருபீன்களையும் சுடரொளியுள்ள பட்டயத்தையும் வைத்தார். இனி அந்த ஆறுகளில் அவர்கள் ஸ்நானம்பண்ணவும், அந்த நந்தவனத்தின் புட்பங்களைக் கிள்ளி மோந்துகொள்ளவும், அங்குள்ள பழங்களைத் தின்னவும் கூடாது; ஏதேனின் வாழ்வை அவர்கள் கனவிலும் நினைக்கலாகாது; தேவ சமுகமாவது, தூதர் ஊழியமாவது இனி அவர்களுக்குக் கிடைக்கமாட்டாது. பரிசுத்தமில்லாதவன் தேவனைத் தரிசிக்கக்கூடாது.*

ஏதேனின் வாழ்வை இழந்த ஆதமும், ஏவையும் தங்கள் தீர்ப்பினால் குறிக்கப்பட்ட தண்டனைகளை அநுபவித்துவந்தார்கள்; அவர்கள் கஷ்ட ஜீவனஞ்செய்துவந்தார்கள்; தங்கள் முகத்தின் வேர்வையால் அப்பம் புசித்தார்கள். பூமியானது தன்

---

* தேவனுடைய மகிமையானது பிற்காலங்களில் கூடாரத்திலும், ஆலயத்திலுமிருந்த கேருபீன்களின் மத்தியில் விளங்கினதுபோல ஆதிகாலத்தில் ஏதேனுக்குக் காவலாக வைக்கப்பட்ட கேருபீன்களுக்கும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்துக்கும் மத்தியில் விளங்கினது என்றும், அதின்முன் போய் ஆதிமனிதர் பலிகளைச் செலுத்தி தேவனை ஆராதித்துவந்தார்கள் என்றும் பலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

பலனை மகா வருத்தத்தோடு கொடுத்தது; பலனுக்கு விரோதமான முள்ளையும், குருக்கையுமோ தாராளமாய்க் கொடுத்தது. வேலையின் கஷ்டத்தோடும் வேர்வையோடும், ஏதேனின் பழைய வாழ்வைப்பற்றிய நினைவுகள் அவர்கள் இருதயத்தை அறுக்கும் கத்திகள்போல் இருந்தன. ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குமென்று கூறப்பட்ட வாக்குத்தத்தமே அவர்களுடைய கஷ்டகாலங்களுக்கு எல்லாம் ஆறுதலை அருளும் தடிபோலும், தேறுதலைக் கொடுக்கும் சமாச்சாரம்போலும் இருந்தது. அந்த இரட்சகர் இன்று வரமாட்டாரா, நாளை வரக்காணேனோ? என்பதே அவர்கள் ஏக்கமாயிருந்தது.

ஆதாம் ஏதேனைவிட்டதோடு அங்கிருந்த மிருகங்கள், பட்சிகள் முதலிய சகல ஜெந்துக்களும் தம்தம் பாட்டிலே கண்டவிடங்களுக்கும் போய்விட்டன. ஆதிமனுஷனுடைய ஆளுகை அப்புறம் அவர்கள்மேல் செல்லவில்லை. எல்லாம் விரோதமாயின. வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்ந்தன; சேவித்த சிங்கம் பட்சிக்க எழும்பினது; பாடின பட்சிகள் பறந்தோடிப் போயின. இப்படி எல்லாம் அவர்களுக்கு விரோதமாகவே மாறிப்போயின.

ஏவை எவ்வளவுகாலம் இருந்தாளோ தெரியாது. ஆனால் ஆதாம் தொளாயிரத்து முப்பது வருஷம் உயிரோடிருந்து, அநேக குமாரரையும் குமாரத்திகளையும் பெற்று, தன் நாட்களைப் புலம்பலோடும் கண்ணீரோடும் பின்னிட்டு மரணமடைந்தான். அவன் சாகுமுன் பூலோகத்திலெங்கும் அகாமியமும் அநியாயமும், போதுமானமட்டும் பெருகியிருக்கிறதென்றும், இவ்வளவுக்கும் காரணன் தானும் தன் மனைவியுந் தான் என்றும் நன்றாய் அறிந்திருந்தான்.

இஸ்திரீயின் வித்தவரை
இன்னும் வரக்காணேனே

என்பதே அவனுடைய அன்றாடக ஓலமாயிருந்தது.

ஆதாம் என்ற பேரால் அழைக்கப்படுகிற இன்னொருவர் உண்டு. அவர் இந்த ஆதாமிருந்தகாலத்துக்கு அநேக ஆண்டுகளுக்குப் பின்பு உலகத்தில் தோன்றினார். அவருக்குப் பெரும்பாலும் இரண்டாம் ஆதாமென்று பெயர்வழங்கப்பட்டிருக்கிறது. அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே. ஆதி ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவனாயிருந்தான்.[1] அவனுக்குள் எல்லாரும் மரித்தோம்; இவருக்குள் எல்லாரும்

[1] ரோம. 5. 14.



பிழைக்கிறோம்.[1] முந்தின ஆதாம் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் பழத்தினால் சாவையும், அழிவையும் உலகத்துக்கு வரச்செய்தான்; பிந்தின ஆதாம் சுவிசேஷத்தினாலே ஜீவனையும், அழியாமையையும் உலகத்தில் ஸ்தாபித்தார். அவரே நமது இரட்சிப்பின் ஆதி ஆதாமாயிருக்கிறார். ஆதாம் பாவஞ்செய்தபின்பு சர்ப்பத்தின் தலையை நசுக்குவதாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஸ்திரீயின் வித்து அவரே. அவர் பாவத்துக்கு அதிகாரியான பிசாசைத் தமது மரணத்தினாலே அழித்து, சிலுவையிலே வெற்றிசிறந்தார்.

பிசாசு பாவம் உலகம்
இச்சத்துருக்களே
அழிந்துபோக மிதியும்
நீர் வாழ்க இயேசுவே.

ஆதிமனுஷரின் வரலாறைக் கேட்கிற ஒவ்வொருவனும் தன் மனதைத் தாழ்த்திக்கொண்டு, தங்கள் பிதாவினால் இழந்துவிட்ட பரிசுத்தத்தை மறுபடியும் கண்டடையும்படி முயற்சி செய்யவேண்டியவனாயிருக்கிறான்.

## CAIN AND ABEL.

## காயீன் ஆபேல்.

ஏதேனிலிருந்து துரத்தப்பட்ட ஆதமும் ஏவையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த ஸ்திரீயின் வித்தை தினந்தோறும் எதிர்பார்த்திருந்தார்கள். அக்காலத்தில் தன்னையல்லாமல் இவ்வகண்டலோகத்தில் வேறொரு ஸ்திரீயும் இல்லாததால் "வித்து" என்றழைக்கப்படும் பாலன் தன்னிடத்திலிருந்து எழும்புமென்று அவள் எண்ணுவது ஆச்சரியமில்லையே. ஏதேனைவிட்ட கஷ்டமும், ஜீவவிருட்சத்தை இழந்த துக்கமும் அந்த "வித்து" என்னும் பாலனை அதிக ஆத்திரத்தோடு எதிர்நோக்கப்பண்ணிற்று.

அவர்கள் இருவரும் தேவதீர்ப்பின்படி தங்கள் முகத்தின் வேர்வையால் அப்பம் புசித்தார்கள். அவர்கள் ஆயாசம், பல

[1] 1 கொரி. 15. 22, 45.

வீனம் இன்னது என்பதை சீக்கிரம் அறிந்து அழுதுகொண்டார்கள். முள்ளும், குருக்கும் அவர்கள் இட்ட பயிரை நஷ்டப்படுத்திற்று. அவர்கள் பெலனும் அழகும் குன்றி, பலவீனமும் மனச்சஞ்சலமும் மேலிட்டது. "மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்" என்ற வாசகமும், "வேதனையோடு பிள்ளை பெறுவாய்" என்ற வாசகமும், அவ்விருவருக்கும் போதுமான முள்ளாயிருந்தது. இந்த முள்ளுகள் அவர்கள் உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும், வேலைசெய்யக் குனியும்போதும், வேலைவிட்டுப் படுக்கும்போதும், விதைக்கும்போதும், அறுக்கும்போதும் அவர்களை நருக்கென்று குத்திற்று. இந்த ஓயாத்துக்கமும், ஒழியாத ஏக்கமும் ஸ்திரீயின் வித்தைக்குறித்த வாக்குத்தத்தத்தினாலே வேளாவேளை கலந்துபோகிறதுண்டு. அந்த வித்து சீக்கிரம் எழும்பாதா? அது எழும்பி சர்ப்பத்தின் தலையை நசுக்காதா? ஏதேனில் குடியிருக்கும் காலம் மறுபடியும் வாராதா? கேருபீன் காவல் ஓயாதா? சுடரொளி பட்டயம் வீசாமல் நிற்காதா? தேவசமூக சம்பாஷணை கிடையாதா? தேவதூதரின் கூட்டுறவு கிட்டாதா? பூமியின் சாபம் மாறாதா? மரணம் ஜீவனாய்த் திரும்பாதா? என்பதே அவர்களுடைய பிரலாபமாய் இருந்தது.

இப்படி ஏங்கிக்கொண்டிருந்த காலத்தில் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அப்போது ஆதாமின் சந்தோஷத்தை என்னவென்று சொல்ல! ஏவாளின் மகிழ்ச்சியை என்னவென்று சொல்ல! கர்த்தரால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தாகிய புத்திரன் வந்துவிட்டான் என்று அவர்கள் அகமகிழ்ந்து, அப்பால் அவனுக்குக் காயீன் என்று பேரிட்டார்கள்.

உலகத்திலுண்டான முதலாம் பேறுகாலம் இதுவே. ஆதிமனுஷர் இந்தப் பாலனைத் தங்கள் மடியிலே கிடத்திக்கொண்டு, இல்லாத வாழ்வெல்லாம் இந்தப் பிள்ளையால் வருகிறதுபோல் பேசிக்கொண்டிருக்கலாம். அவர்கள் அப்பாலனை நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக வளர்த்து, அவனைத் தங்கள் கவலையை நீக்கவந்த வித்து என்று நினைத்து, சர்ப்பத்தின் தலையை நீதானா நசுக்குவாய், ஜீவகனியை உன் கையால் பிடுங்கித் தருவாயா, தேவனோடு நீதானா எங்களை சமாதானப்படுத்திவைப்பாய்? என்று இப்படிப் பலவாறாகச் சொல்லிக்கொண்டிருக்கலாம். அவர்கள் இவனைப்பற்றி நினைத்ததெல்லாம் விபரீதமாய்ப் போயிற்று. அந்த வாக்குத்தத்தத்தின் வித்து இவனல்ல, அந்த வித்து கிறிஸ்துவே. காயீன்



வளரவளர அவன் குணங்களும் வெளிப்பட்டன. விளையும் பயிர் முளையிலே தெரியும்.

அவனுக்குப் பின்பு வேறொரு ஆண்குழந்தை பிறந்தது.* முதல் பிள்ளையைப்பற்றி எண்ணின எண்ணமெல்லாம் விபரீதமாய் முடிந்ததென்று அவர்கள் அறிந்து, இந்த இரண்டாம் பிள்ளைக்கு வீண் என்று அருத்தங்கொள்ளும் ஆபேல் என்று பேரிட்டார்கள். காயீனை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்து என்று நினைத்ததும், அவனால் ஜீவவிருட்சத்தின் குளிர்ந்த நிழலில் உட்காரலாம் என்று நினைத்ததும், ஜீவகனியைத் தின்னலாம் என்று ஆசைப்பட்டதும், ஏதேனுக்குள் மறுபடியும் நுழையலாமென்று எண்ணினதும், தேவசமூகம் காணலாம் என்று வாஞ்சித்ததும், சத்துரு தொலைந்துபோவான் என்று சந்தோஷப்பட்டதும் எல்லாம் வீண் என்று கண்டுகொண்டதால், இவனை இந்தப் பேரால் அழைத்தார்கள். உள்ளபடி அவன் வீணன் அல்ல, காயீனே வீணனாயிருந்தானென்று சொல்லவேண்டியது.

இவ்விருவரும் சிறுவராயிருக்கையில் ஆதாமும் ஏவாளும் தாங்கள் அநுபவித்த முந்தின சுகபாக்கியங்களையும், அதை இழந்த முகாந்தரத்தையும் சொல்லிவந்திருக்கலாம். இவர்கள் இருவரும் தேவனுக்குப் பிரியமான வழிகளில் நடக்கவேண்டுமென்று ஆதாம் அநேக பிரயத்தனங்கள் செய்திருக்கலாம். ஆனால் அவன் எண்ணினபடியும், நினைத்தபடியும் காரியங்கள் வாய்க்கவில்லை. அவர்கள் இருவரும் ஒரே கர்ப்பத்தில் பிறந்தபோதிலும் அவர்கள் குணங்கள் வெகு வித்தியாசமாயிருந்தது. காயீன் பொல்லாங்கனால் உண்டானவனாயும், ஆபேல் நீதிமானாயும் இருந்தார்கள். ஒரே பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளைகள் ஒன்றுபோல குணமுடையவர்களாயிருக்கமாட்டார்கள் என்பது இவர்கள் இருவருடைய வரலாறுகளால் நமக்கு ஆதிமுதல் உணர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

இவ்விருவரும் பெரியவர்களான காலத்தில் ஆதாம் அவரவரை ஓரோர் தொழிலில் பழக்குவித்தான். காயீன் குணத்துக்கு ஏற்றாப்போலே அவனை விவசாயத்தொழிலிலும், ஆபேல் குணத்துக்கு ஏற்றாப்போலே அவனை ஆடுமேய்க்கிற தொழிலிலும் பழக்குவித்தான். பாவஞ்செய்யுமுன் தானாய்த் தன் பலனைச் சம்பூரணமாய் அருளின பூமியும், தானாய் வந்து தங்கள்

---

*சிலர் காயீனும் ஆபேலும் ஒரே கர்ப்பத்தில் பிறந்த இரட்டைப் பிள்ளைகளாயிருந்தார்கள் என்று அநுமானித்திருக்கிறார்கள்.

சகாயங்களைச் செய்த ஆடுமாடுகளும், பின்பு கஷ்டத்தோடு ஆதிமனுஷருக்கு உதவவேண்டியதாயிருந்தது. பூமியை உழுது வெட்டிப் பண்படுத்தினால் அது ஏதாவது பலனைக் கொடுக்கும்; ஆடுமாடுகளைக் கட்டி அடைத்துக் காத்து மேய்த்தால் அதில் ஏதாவது பலனைக் கண்டடையலாம். மற்றப்படி எல்லாரும் பட்டினியாய் இருக்கவேண்டியதுவரும்.

இதினால் ஒவ்வொரு பெற்றாரும் தங்கள் பிள்ளைகளை அவரவருடைய ஜீவனத்துக்குரிய தொழில்களில் பழக்குவிக்க கடமைப்பட்டவர்கள் என்பது வெளியாகிறது. இக்காலத்தில் சகல தொழில்களிலும் சர்க்கார் தொழில்தான் மேலானதென்று நமது தேசத்தார் தப்பாய் எண்ணுகிறார்கள். சகலரும் சர்க்கார் தொழிலைப் பார்த்தால் சமுசாரிகள் யார்? அவர்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்?

காயீன் அதிகாலையில் எழுந்து கலப்பையைத் தோளிலே வைத்துச் சுமந்து ஏர் உழுது, நிலத்தை வெட்டித் திருத்தி பயிரிட்டு அதின் பலனைக் கண்டு, தன் காலத்தைக் கழித்துவந்தான். இந்த வேலையில் ஆதாம் அவனுக்கு அதிக உதவிசெய்திருக்கலாம். தகப்பனும் மகனுமாய்க் கஷ்டத்தோடு வேலைசெய்து தங்கள் முகத்தின் வேர்வை நிலத்தில் விழச் சொட்டு சொட்டாய்க் காணும்போது, உன் முகத்தின்வேர்வையால் ஆகாரம் புசிப்பாய் என்று ஏதேனின் சோலைக்குள் கூறப்பட்ட சாபத்தை நினைவுகூர்ந்து, தன் புத்திரனுக்கும் அதைப்பற்றிப் போதித்திருக்கலாம்.

ஆபேல் அவனிலும் நல்லவனாக நடந்து, அதிகாலையில் எழுந்து கன்றுகளையும், மறிகளையும் பாலுக்குவிட்டு, அன்றாடகம் தங்கள் வீட்டுக்கு வேண்டிய பாலைக் கறந்துகொடுத்து, மந்தையை மலையோரங்களுக்கு ஓட்டிமேய்த்து, நல்ல தண்ணீருள்ள நீரூற்றண்டை தண்ணீர்காட்டி தன் காலத்தைக் கழித்திருக்கலாம். ஒருவேளை ஏவாள் இந்த வேலையில் ஆபேலுக்கு அநேக உதவிகளைச் செய்திருக்கலாம்.

காயீனுடைய பிரயாசத்தால் விளைந்து கொண்டுவரப்பட்ட நவதானியமூட்டைகளும், ஆபேலின் முயற்சியால் அன்றாடகம் அநுபவித்த பால் தயிர் வெண்ணெய் முதலியவைகளும், ஆதித்தாய் தந்தைகளை ஆனந்தப்படுத்திவிட்டது என்று சொல்லக்கூடாது.

இவ்விருவருக்கும் சரீர ஜீவனத்துக்குரிய ஒவ்வொரு தொழிலைக் கற்றுக்கொடுத்ததோடு, ஆத்துமவாழ்வுக்கும் தேவதயவைப் பெறுவதற்கும் ஏதுவான தேவாராதனைக்குரிய கடமை



களையும் உணர்த்திவந்தார்கள். ஆதாமும் ஏவாளும் தங்கள் பிள்ளைகளோடு தேவனை ஆராதித்து பலிசெலுத்திவந்தார்கள். அந்தப் பலியானது பாவநிவாரணத்துக்கென்று, மனுஷ அவதாரமெடுத்து தம்மைத்தாமே பலியாகச் செலுத்தும் இயேசுகிறிஸ்துவின் பிராயச்சித்தப்பலிக்கு முன்குறியாக இருக்கும்படி தேவனால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்தப் பலியைச் செலுத்துகிறவன், நானும் இந்தப் பலியிடப்படுகிற மிருகத்தைப்போல என் பாவத்தின் நிமித்தியம் கொலைசெய்யப்படவேண்டியவனாயிருக்கிறேன்; ஆனால் இதைப்போல பலியிடப்படப்போகிற மீட்பரால் என் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்று உணர்ந்து விசுவாசிக்கவேணடியவனாயிருந்தான்.

ஒருநாள் ஏதோ முகாந்தரத்தால் அண்ணன் தம்பிமார் இருவரும் தேவனுக்குப் பலிசெலுத்தும்படி போனார்கள். இது வழக்கமான குடும்பப்பலியாயிராமல் தனிப்பலியாய் இருக்க வேண்டியது. குடும்பப்பலியாய் இருக்கவேண்டுமானால் தகப்பன் பலிசெலுத்தப் போகவேண்டியது. ஒருவேளை அவரவர் தம்தம் தொழிலையிட்டுச் செலுத்தும்படி தீர்மானித்துக்கொண்ட தனது பலியாயிருக்கலாம். அல்லது இவ்விருவருக்கும் அதிக நேசமும், பாசமும் உண்டாகும்படி இந்த ஒழுங்கை ஆதாம் திட்டஞ்செய்திருக்கலாம்.

“காயீன் நிலத்தின் கனிகளை கர்த்தருக்குக் காணிக்கையாக கொண்டுவந்தான்” என்றும், “ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளின் கொழுப்பானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான்” என்றும் வாசிக்கிறோம். இவ்விருவருடைய பலிகளிலும் தேவன் ஆபேலுடையதை அங்கிகரித்து, காயீனுடையதை அங்கிகரிக்கவில்லை. தேவன் இப்படி ஒருவனுடையதை ஏற்றுக்கொண்டு, ஒருவனுடையதை அங்கிகரியாமல் இருக்கலாமா? இது அநியாயமல்லவா? என்று சிலர் சொல்லத் துணிகிறார்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் தங்கள் மன நியாயங்களுக்கு தேவனுடைய கிரியைகள் ஒத்திருக்கவேண்டுமென்று சொல்லுகிறவர்களைப்போல் இருக்கிறார்கள். இதின் முகாந்தரங்களைப்பற்றி நாம் ஆராய்ந்து கண்டுபிடிக்கும்படி முயற்சிப்படுகிறதைவிட, “அவர் கர்த்தர், அவர் தமக்குச் சித்தமானபடி செய்வாராக” என்று தலைகுனிந்து மௌனமாய் நிற்பது நலமல்லவா?

இச்சமயத்தில் பலிசெலுத்தப்போன இருவரும் ஒரே கர்ப்பத்திலிருந்து தோன்றினவர்களாயிருந்தாலும், அவர்களிலும், அவர்கள் செய்கையின் நோக்கத்திலும், அவர்களுடைய பலி

பதார்த்தங்களிலும் அதிக வித்தியாசம் இருந்ததென்று சொல்லவேண்டியது.

இவ்விருவரும் ஆதி மனுஷனுடைய அன்பும் உண்மையுமான உபதேசத்தால் பாலூட்டப்பட்டிருந்தாலும், தங்கள் குணங்களில் வித்தியாசப்பட்டவர்களாகவே வளர்ந்துவந்ததாகத் தோன்றுகிறது. இது சாபசந்ததியின் இயல்பாக இருக்கிறது. முதல்தரமான மணியிலிருந்து உண்டாகிற நெற்பயிரிலிருந்துவருகிற தானியமெல்லாம் ஒன்றுபோலவே முதல்தரமாயிராமல் பதர் கலந்ததாகவே இருக்கக்காண்கிறோம். பக்தியும், விசுவாசமுமுள்ள பெற்றோருக்கும் பக்தியற்ற பிள்ளைகள் பிறக்கலாம்.

அவ்விருவருடைய பலியின் நோக்கமும் பலியின் பதார்த்தங்களும் வித்தியாசப்பட்டிருந்தன. காயீனுடைய பலியின் நோக்கமானது ஸ்தோத்திரத்தை மாத்திரம் நோக்கியிருந்தது என்று தோன்றுகிறது. ஏனெனில் அவன் நிலத்தின் கனிகளை மாத்திரம் கொண்டுபோனான். ஆபேலுடைய பலியில் இரட்டித்த நோக்கமிருந்தது என்று சொல்லலாம். அதில் ஒன்று ஸ்தோத்திரக்கருத்தும், மற்றொன்று பாவநிவாரணக்கருத்துமாய் இருந்தது. அவன் தன் மந்தையின் தலையீற்றை ஸ்தோத்திரப்பலியாகவும், தன் மந்தையின் கொழுமையான சிலவற்றைப் பாவநிவாரணபலியாகவும் கொண்டுபோய் இருக்கிறானென்று தோன்றுகிறது. இன்னும் அதைச் சற்று விளக்கிச்சொன்னால் காயீன் சரீரத்துக்கடுத்த பலியையும், ஆபேல் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் அடுத்த பலியையும் செலுத்தினான் என்று சொல்லவேண்டியது.

ஆபேலின் இரட்டித்தபலியே காயீனுடைய பலியைத் தேவனுடைய பார்வையில் அற்பமாய் எண்ணப்பண்ணிற்று. இவ்வித இரட்டித்த பலி செலுத்தப்படவேண்டுமானால், அதைச் செலுத்துகிறவனிடத்தில் இரட்சண்ய விசுவாசம் இருக்கவேண்டியது. இந்த இரட்சண்ய விசுவாசம் காயீனிடத்தில் இருக்கவேயில்லை. இதினாலேதான் எபிரேய நிருபத்தை எழுதின பக்தன் "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைத் தேவனுக்குச் செலுத்தினான்" "அதினாலே அவன் நீதிமான் என்று சாட்சிபெற்றான்" என்றும் அறிவித்திருக்கிறார். ஆபேலிடத்திலிருந்த விசுவாசத்துக்குப் பதிலாக காயீனிடத்தில் பெருமை இருந்தது.

காயீன் தான் கொண்டுபோன நிலத்தின் கனிகளோடு ஆபேலின் மந்தையிலிருந்து ஆட்டுக்குட்டியையும் கூடக் கொண்டு



போயிருந்தால், காரியம் முற்றிலும் வேறேவிதமாய் முடிந்திருக்குமென்று சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்ட எண்ணம் இருதயத்தில் விசுவாசமும், நெஞ்சில் ஆதிவாக்குத்தத்தத்தைப்பற்றிய ஞாபகமுமிருந்தால்மாத்திரம் நடக்கக்கூடியது. பொறாமையால் நிறைந்திருக்கும் இருதயத்தில் இரட்சண்ய விசுவாசமும், இரட்சண்ய அன்பும் நிலைத்திருப்பதேது?

இதினாலே காயீனுடைய காணிக்கையை நாம் முற்றிலும் அசட்டைசெய்யக்கூடாது; அவன் தேவனைப்பற்றிய மதிப்பும், அவருடைய இரக்கங்களை உணர்ந்த உணர்ச்சியும் நன்றாய் வெளிப்படுகிறது. ஆனால் வாக்குத்தத்தம்செய்யப்பட்ட மீட்பின் சம்பந்தமாய் யாதொரு குறிப்பும் காயீனுடைய பலியில் இருந்ததில்லை. ஸ்தோத்திரப்பலியானது காயீனால்மாத்திரமல்ல, தேவதூதராலும் தினந்தோறும் செலுத்தப்பட்டுவருகிறது. ஆபேல் செலுத்தின மேன்மையான பலியாகிய பாவநிவாரண வாக்குத்தத்தத்தின் பலியோ தேவதூதரால் முதலாய் செலுத்தப்படுகிறதில்லை என்று சொல்லவேண்டியது.

காயீனுடைய பலி தள்ளப்பட்டதால் அவனுக்கு எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. இவன் இப்படி எரிச்சல்படுவானேன்? இவ்வித எரிச்சல் தன் சகோதரனுக்கு விரோதமாய் உண்டாவானேன்? தேவன் நடப்பித்த காரியத்துக்கு ஆபேல் என்னசெய்வான்?

அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: "உனக்கு என் எரிச்சல் உண்டாயிற்று, உன் முகநாடி என் வேறுபட்டது" என்று கேட்டார். தேவன் பாவியை விசாரியாமல் விடார். அவர் பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்தில் மூன்று நான்கு தலைமுறைமட்டும் விசாரிக்கிற நீதியுள்ள தேவனாயிருக்கிறார்.

அரசன் அன்று கேட்பான்
தெய்வம் நின்று கேட்பார்

என்று உலகத்தார் ஒரு பழமொழி சொல்லுகிறது உண்டு. அது யதார்த்தமான பழமொழியல்ல.

அரசன் அன்று கேட்பார்
தேவன் என்றும் கேட்பார்

என்பது அதைவிட நல்ல வாசகம் என்று சொல்லவேண்டியது. மேலும் கடவுள் காயீனைப் பார்த்து: "நீ நன்மைசெய்தால்

மேன்மை இல்லையோ" என்று கேட்டார். அதாவது நீயும் உன் தம்பியைப்போல என் சித்தத்துக்கு நலமானதைச் செய்தது மெய்யானால் உன் பலியையும் நான் ஆபேலுடைய பலியைப் போல அங்கிகரியாமலிருப்பேனா என்று கேட்கிறதுபோல் இருக்கிறது. தேவன் முகதாட்சண்யமில்லாமல் மனுஷருக்கு நன்மைசெய்கிறவராய் இருக்கிறார். நமக்குத் தேவனால் வர வேண்டிய கிருபைகளில் ஏதாவது குறையுண்டாகுமானால் அதற்கு நாமே காரணமாயிருக்கவேண்டியது. இவ்வண்ணமாக தேவன் காயீனுடைய மனதில் கனிவோடு நியாயமுரைத்தது மாத்திரமல்ல, கண்டிப்போடும் தண்டிப்போடும் அவனை உணர்த்தினார். "நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும்; நீ அவனை ஆண்டுகொள்வாய்" என்றும் சொன்னார். எவன் தீமையைச் செய்வானோ அத்தீமையை அநுபவிக்கிறவனுடைய பழி உன்மேல் என்றென்றைக்கும் தங்கி, உன் மனதின் வாசற்படியில் படுத்திருக்கிறாப்போல அதுவே இரவும் பகலும் உன் முதலாம் சிந்தையாயிருந்து, உன்னை வதைத்து தேவனுக்கு நீ செய்யும் துரோகமே உன்னை அக்கம் பக்கம் விலகவிடாமலும், ஆவிக்குச் சமாதானத்தைக் கொடாமலும், உன் சிந்தையைச் சுற்றி ஆண்டுகொள்ளும் படர்கொடி போலிருக்கும் என்பதே இதின் கருத்து.

இவ்வண்ணமாக தேவன் காயீனும் ஆபேலும் பலிசெலுத்தின நேரத்தில் காயீனிடத்தில் பொறுமையினாலே வளர்ந்த பகையை வேரோடு பிடுங்கிப்போடும்படி பிரயாசப்பட்டார்.

"உனக்கு ஏன் எரிச்சலுண்டாயிற்று"
"உன் முகநாடி ஏன் வேறுபட்டது"
"நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ"
நீ பாவம் செய்தால் பழிசுமராதோ
அவனைக் கொன்றநினைவு உன்னை ஆளும்

என்ற வாசகங்களின் கருத்துகளையும், எச்சரிப்புகளையும் அவன் மதிக்கவில்லை. கொழுத்த இருதயமுள்ளவர்கள் தேவனுடைய எச்சரிப்புகளை சட்டைபண்ணுகிறதில்லை; அவருடைய உணர்த்துதலின் அம்புகள் அவர்கள் உள்ளத்தில் தைக்கவுமாட்டாது.

தேவனுடைய நயமும், பயமுமான எச்சரிப்புகள் எல்லாவற்றையும் காயீன் சட்டைபண்ணாமல்,



தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசி, அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக எழும்பி அவனைக் கொலைசெய்தான்.

இதினாலே காயீன் பலிசெலுத்தின நாள்முதல் வளர்ந்த பகையை ஏற்ற சமயம்பார்த்து நிறைவேற்றும்படித் தாமதித்து, சமயம் வாய்த்தபோது வலியப்போய் வாய்கொடுத்து, பேச்சை வளர்த்திக் கொலைசெய்தான் என்று தோன்றுகிறது.

இதுதான் பூலோகத்தில் உண்டான முதலாம் சாவு. இந்தச் சாவு நடக்கும்போது தேவன் ஒருவர்மாத்திரம் கூட இருந்தார். காயீன் தன் சகோதரனுடைய இரத்தத்தைக் கண்டவுடனே ஓட்டம்பிடித்திருக்கலாம். அவனைப் பிடித்துத் தண்டிக்கும்படி தேவன் புறப்பட்டார்.

கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே? என்று கேட்டார். ஆபேலுடைய முடிவை அறியாததினாலே அப்படிக் கேளாமல், காயீன் தன் அக்கிரமச்செய்கையைத் தமக்குமுன் அறிக்கையிடும்படி ஏவவும், அவன் குற்றத்தை உணர்த்தவும் இப்படிக் கேட்டார். அதற்கு அவன்:

அவனை நான் அறியேன்,
அவனுக்கு நான் காவலாளியோ?

என்று சொன்னான். இந்த உத்தரவினால் பாவ உணர்ச்சி எவ்வளவேனும் காயீனுடைய நெஞ்சில் இருக்கவில்லை என்றும், பொய்யும் வஞ்சனையும் துணிகரமும் அவனை மேற்கொண்டிருந்தது என்றும் விளங்குகிறது.

அதற்குக் கர்த்தர்: உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது:—அவனை நீ என்னசெய்தாய்? என்று கேட்டார். இந்த வார்த்தைகள் காயீனைக் குலுக்கிவிட்டது. அந்த இரத்தம் எவ்வளவு வல்லமையுள்ளதாயிருந்தது என்பதை காயீன் அறியவில்லை. ஆடுமேய்க்கப்போன இடத்தில் சிங்கமோ புலியோ தின்றுவிட்டதென்று எவர்களும் நினைத்துக்கொள்வார்களென்று மாத்திரம் காயீன் எண்ணியிருக்கலாம். இவ்வண்ணம் அது பரலோகத்துக்கு தன் குரலை எறெடுக்குமென்று அவன் நினைக்கவேயில்லை. ஆபே

லின் பலியின் அபயம் தேவனை அங்கிகரிக்கப்பண்ணியிருக்க, அவன் இரத்தத்தின் அபயம் அதிலும் அதிகமான சத்தத்தைக் கேட்கப்பண்ணாதிருக்குமோ?

பூமியிலிருந்து கூப்பிட்ட ஆபேலின் இரத்தம் நலமானவைகளையே பேசியிருக்கும்; அது காயீன்மேல் ஆக்கினையைச் செலுத்தும்படி பேசியிருக்கமாட்டாது. அது ஸ்தேவானுடைய இரத்தத்தைப்போல "ஆண்டவரே, என் சகோதரன்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று கூப்பிட்டிருக்கும். நமது இரட்சகர் ஆபேலை நீதிமான் என்று அழைத்திருக்கிறார். நீதிமான்களின் இரத்தம் நலமானவைகளையே பேசும்.

ஆபேலின் இரத்தத்திலும் மேன்மையானவைகளைப் பேசி தேவனை நோக்கிக் கூப்பிடுகிற ஒரு இரத்தமும் உண்டு. அது இயேசுகிறிஸ்துவின் இரத்தமே. அவர் உலகத்தோற்றத்துக்கு முன் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராய் இருக்கிறார். ஏவாளுக்குக் கூறப்பட்ட முதலாம் வாக்குத்தத்தமே அந்த ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தின் முதலாம் சத்தமாயிருந்தது; அதுமுதல் இதுவரையும், இனி என்றைக்கும் அவருடைய இரத்தம் நமக்காக பிதாவினிடத்தில் அதிக நலமானவைகளையே பேசிக்கொண்டிருக்கிறது. அந்த இரத்தத்தின் பேச்சே பிதாவானவர் நமதுமேல் இடும் சாபங்களையும், கூறும் ஆக்கினைகளையும் மாற்றிக்கொண்டுவருகிறது. எனக்காக எக்காலமும் நலமானவைகளைப் பேசிக்கொண்டுவருகிற மாசற்ற இரத்தமே என்னை மீட்டது. அல்லேலூயா! அந்த இரத்தமே நம்மைச் சம்பாதித்தது;[1] அதினாலேயே பாவமன்னிப்பாகிய மீட்பும் நமக்குண்டாகிறது;[2] அதினாலேயே நாம் நீதிமான்கள் ஆக்கப்படுகிறோம்;[3] அதினாலேயே தேவனுக்குச் சமீபமாகிறோம்;[4] அவரோடு சமாதானமுமாகிறோம்;[5] அந்த இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாகிறது;[6] நமது பாவங்கள் கழுவப்படுகிறது;[7] அந்த இரத்தத்திலே நமது அங்கிகளைத் தோய்த்து வெளுத்துக்கொள்ளுகிறோம்.

இவ்வளவு மேலான நன்மைகளைப் பேசுகிறதும் செய்கிறதுமான துதிக்கப்படத்தக்க கிறிஸ்துவின் இரத்தமாகிய "உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று எண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கி

[1] அப். 20. 28. [2] எபே. 1. 7. [3] ரோம. 5. 9. [4] எபே. 2. 13.
[5] கொலோ. 1. 20. [6] எபி. 10. 20. [7] எபி. 10. 29.
1 யோவா. 1. 7, 8.



னைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்."[1]

ஏதேனின் பக்கத்திலிருந்து எழுந்தருளியான ஆபேலின் சத்தமானது ஆக்கினையைச் செலுத்தும்படி அபயமிடாவிட்டாலும், நீதியுள்ள தேவன் பாவத்தையும் பாவிகளையும் தண்டிக்கிறார் என்பதை சகலரும் உணர்ந்து, அவரவர் ஆகாமியத்தை விட்டோயும்படி எச்சரிப்பு உண்டாகும்படியாக தமது நீதியுள்ள தீர்ப்புகளை காயீன்மேல் சுமத்தச் சித்தங்கொண்டார். இம்மட்டும் காயீனின் மீறுதலை அவனுக்கு உணர்த்தும்படி பல பிரயத்தனங்களைச் செய்தாலும், அவை ஒன்றுக்கும் அவன் செவிகொடாமல் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, ஆபேலைக் கொன்றுபோட்டபடியால் இனி தேவன் அவன் விஷயத்தில் தமது கிருபையின் குரலையும், கரத்தையும் மாற்றித் தண்டனையின் பிலாறைக் கையில் எடுக்கவேண்டியதாயிருந்தது. "கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள்; வானத்திலிருந்து அவர்கள்மேல் குமுறுவார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது நிச்சயந்தான். தேவன் பூமியையும் காயீனையும் சபித்தார்; இதோடு பூமி இரண்டாந்தரம் சபிக்கப்பட்டது. துன்மார்க்கர் பூமிக்குச் சாபத்தை வருவித்து, அதின் சமாதானத்தை வாங்கிப்போடுகிறவர்களாயிருக்கிறார்கள்.

பூமி தன் பலனை உனக்குக் கொடாது,
பூமியில் நிலையற்று நீ அலைவாய்

என்று அவனைச் சபித்தார். கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் மகா பெரியவைகள்; அவைகளைச் சகிப்பவன் யார்!

சாபம் கூறப்பட்டவுடனே காயீன் தன் ஸ்திதியை முன்னிலும் அதிக திட்டமாய் உணர்ந்தான். ஐயோ, இனி இவன் என்னசெய்வான்? அவன் கஷ்டப்பட்டு, கண்விழித்து, பூமியை வெட்டித் திருத்தி ஒரு மரக்கால் தானியம் விதைத்து, ஒரு கோட்டை அரைக்கோட்டை தானியமாவது விளையுமென்று எதிர்பார்த்துக் காலங்கழிக்க ஏதுவில்லை. எவ்வளவு விதைகளைக் காட்டில் தூவினாலும், ஒரு பலனும் கிடையாது. இந்தப் பூமி கெட்டது என்று அவன் வேறே இடத்தில் போய் விதைப்பான்; அங்கும் அதே முடிவு. அவன் மலையோரம் விதைத்தாலும், ஆற்றுப்போக்கில் விதைத்தாலும் இதுவே

[1] எபி. 10. 29.

அவன் லாபம். ஆழாக்குத் தானியமுதலாய் அவன் காணமாட்டான் என்ற சாபம் தேவனால் கூறப்பட்டிருக்கிறது. அப்படியானால் அவன் காலட்சேபம்பண்ணுகிறது எப்படி? மற்றவர்களுக்கு விளைவிக்கிற பூமி காயீனுக்கு விளைவிக்கிறதில்லை. ஒரே நிலத்தில் பங்குபோட்டு விதைத்தாலும் இவன் பங்கில் பாழ்தான் லாபம். ஆகவே இவன் இனி இருந்தென்ன! செத்தென்ன?

அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: “எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது. இன்று என்னை இத்தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே; நான் என்ன செய்வேன்” என்று அழுதான்.

காயீனே, இனி அழமாட்டாயா? இனி உன் புலம்பலைக் கேட்க உலகமெல்லாம் கூடாதா? இந்த அழுகையில் லாபம் என்ன? இந்தப் புலம்பலில் புண்ணியமென்ன? இது கள்ள அழுகை; இது உலகமுறை. இப்படி நீமாத்திரந்தானா அழுவாய்? உன்னை ஏவிவிட்ட பசாசும் இதைவிட அதிக உருக்கமாய்ப்பேசி அழவேண்டுமானாலும் அழும் என்று சொல்லலாம். இந்த அழுகையோடு அழுகையாய் கர்த்தாவே! நான் என் சகோதரனை அநியாயமாய்க் கொன்றுபோட்டேன்; அதினிமித்தம் நீர் என்னைத் தண்டிக்கவே தண்டித்தாலும், என்னை சாவுக்கு ஒப்புக்கொடீர் என்பதையும் சேர்த்துச்சொல்லி அழுதிருந்தால் உன்னை நான் அதிகமாய் புகழ்ந்து, பாவ உணர்ச்சியடைந்து, பாவ அறிக்கை செய்தவர்களில் உன்னை முதலாவது ஆள் என்று சொல்லக்கூடும். இப்பொழுது அதற்கு நீ தூரமாயிருக்கிறாய்.

காயீனுடைய புலம்பலைக் கவனித்தால் அவனைத் தன் காரியக்காரர்களில் முதல் மனுஷன் என்று சொல்லவேண்டியது.

எனக்கு இட்ட தண்டனை
என்னால் சகிக்கமுடியாது
என்னைத் துரத்திவிடுகிறீர்
நான் நிலையற்று அலைவேன்
என்னைக் கண்டுபிடிக்கிறவன்
என்னைக் கொன்றுபோடுவானே

என்ற குறிப்புவாசகங்களின் முதல்வார்த்தை அதைத் திட்டமாக விளங்கப்பண்ணுகிறது. என்னைக் கண்டுபிடிக்கிறவன்



எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்கிறான். தன்னை ஒருவரும் கொல்லக்கூடாது, ஆனால் தான்மாத்திரம் தம்பியைக் கொன்றுவிடலாமாம். இதென்ன நியாயமென்று சொல்லுகிறது?

காயீனுடைய பாவஅறிக்கை சரியான பாவஅறிக்கையாய் இராவிட்டாலும், கொஞ்சம் புத்தியிருந்து அவனைத் தற்காத்தது என்று சொல்லவேண்டியது. ஆதித்தாய் தந்தைகளிடத்தில் இந்தப் புத்திமுதலாய் இருக்கவில்லை. அவனுடைய பாவஉணர்வில் வெகு குறைவிருந்தபோதிலும், கிருபையுள்ள தேவன் தமது கோபத்தை நெகிழ்ந்து, தமது உக்கிரத்தை மாற்றிவிட்டு, எவனும் அவனைக் கொல்லாதபடிக்கு அவன்மேல் ஒரு அடையாளத்தைப்போட்டு, “காயீனைக் கொல்லுகிற எவர்கள்மேலும் ஏழுபழி சுமரும்” என்று தீர்ப்பிட்டார். ஆ! பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று என்று பார்க்கிறோம்.

காயீனுக்குக் கூறப்பட்ட நல்வாக்கானது அவன் விண்ணப்பத்தின் ஒரு பாகத்தைமாத்திரம் திர்ப்திசெய்தது. அவன்மேல் கூறப்பட்ட மற்ற சாபவார்த்தைகளை அது மாற்றவில்லை. வெளியிலுள்ளவர்களைப்பற்றிய சாபம் அந்தத் திருவாக்கால் நீங்கினாலும் உள் பயம் நீங்கவில்லை. உடனே காயீன் கர்த்தருடைய சமுகத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனான். இதோடு தேவனுக்கும் அவனுக்கும் இருந்த சம்பந்தமும், உறவும் வெட்டப்பட்டது. அதுமுதல் அவன் தேவனைத் தொழுதுகொள்ளவுமில்லை, தன் தாய்தந்தையோடுகூடி பலிசெலுத்தவுமில்லை. அதைப்போல பரிதாபமான ஆத்துமஸ்திதி வேறு இல்லை. தேவசமுகத்தின் பரிபூரண ஆனந்தங்களும், அவரது வலதுபாரிசத்து செல்வபாக்கியங்களும் என்றென்றும் அவனுக்குத் தூரமாக்கப்பட்டது. தேவசமுகத்தின் இன்பம் அதை அநுபவித்து இழந்தவனுக்கு நன்றாய்த்தெரியும்.

சாயந்தரநேரத்தில் வழக்கம்போல ஆதாமும், ஏவாளும் தங்கள் மக்கள் இருவரையும் அவரவர் தொழிலிலிருந்துவர எதிர்பார்த்திருக்கலாம்; ஆனால் ஐயோ, வெகுநேரமாகியும் ஒருவரும் வரவில்லை. இதினால் அவர்கள் தங்கள் மக்களை ஆளுக்கொரு திசையாகத் தேடிப்போயிருக்கலாம். இனித் தேடி லாபமென்ன? இதோ ஆபேல் பிணமாய்க் கிடக்கிறான். நீண்டுபடுத்திருக்கும் அவன் உடலைத் தூரத்தில்கண்ட ஏவாள் தன் மகன் மந்தைகளைக் கருத்தோடு மேய்த்து, காவல்காத்த அலுப்பால் களைத்துப்போய்த் தூங்கினான் என்று எண்ணியிருக்கலாம்.

கிட்டவரவே தன் மகன் இரத்தப்பிரளயத்திலே நிறமாறி ஜீவனற்றுக்கிடக்கிறதைக் கண்டாள். ஆ, இந்தக் காட்சியைவிட ஏவாளை விழத்தள்ள வேறு காட்சி வேண்டுமோ! சுகத்தோடும், பலத்தோடும் காலையில் வீடுவிட்டமகன் இப்போது காட்டுக்குள் அநாத பிணமாய்க்கிடக்கிற காட்சியிலும் அழுகாட்சி உண்டா! அவள் உருண்டாள், புரண்டாள், அலறினாள், புலம்பினாள். தன் அருமைமகனின் மரணகாரணத்தை அவள் பலவாறாக உத்தேசித்திருக்கலாம். இதுதான் ஆதாமும் ஏவாளும் கண்ட முதலாம் மரணகாட்சியாயிருந்தது. "மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்" என்ற தேவசாபவாக்கு நிறைவேறிற்று. இதை அகாலமரணமென்றாவது, அநியாயமரணமென்றாவது அவர்கள் முதலில் நினைத்திருக்கமாட்டார்கள். இம்மட்டும் பருவகாலங்களில் மரங்களின் இலைகளும், கனிகளும், பட்சியின் இறகுகளும் விழுந்துகிடக்கிறதைமாத்திரம் ஒருவேளை கண்டிருக்கலாம். மைந்தர் மாய்வதைக்கண்ட முதலாம் காட்சி இதுதான்.

கடைசியாக இம்மட்டும் காயீனைக் காணக்கூடாத முகாந்தரமும், அவனுக்குள் தன் தம்பிமேல் இடைக்கிடையே காணப்பட்ட வெறுப்பும் இதற்குக் காரணமென்று பல குறிப்புகளால் அறிந்து, முன்னிலும் அதிகமாய்த் துயரப்பட்டு ஆபேல்மேலுள்ள தங்கள் கனிவை காட்டக்கூடியமட்டும் காட்டினார்கள். அருமைமகன் என்று இனி எத்தனைநாள் கட்டி அழக்கூடும்! பிணம் நாறுமே. அவர்கள் உமது சித்தமே எங்கள் பாக்கியமென்றாற்போல் தங்கள் துக்கத்தை தேவசித்தத்துக்குள் அடக்கிவிட்டு,

பொன்னே எம்தேகம் புழுதியல்லவென்றிருந்தோம்
மண்ணே எம்தேகம் மண்ணறைக்குள் போ மகனே

என்று சொல்லி மகனை அடக்கம்பண்ணினார்கள்.

நாம் மரித்தோம் என்று சொல்லும் ஆபேலை பரிசுத்த ஆவியானவர் "அவன் இன்னும் பேசுகிறான்" என்று அறிவித்திருக்கிறார். ஆதலால் ஆபேலால் மரணவாசலின் கதவுகள் முதலாவது மனுமக்களுக்குத் திறக்கப்பட்டாலும், மோட்சவாசலின் கதவுகளும் இவன் மரணத்தால் முதலாவது திறக்கப்பட்டது என்று சொல்லவேண்டியது. "ஆ மரணமே! உன் கூர் எங்கே." ஆபேலின் கால்களே ஆண்டவருடைய இராச்சியத்தின் படிகளில் முதலாவது கால்வைத்தது; அவன் மோட்ச மனுமக்களுக்கு ஆதித்தகப்பனானான்.



தேவசமுகத்தையும், குடும்ப உறவையும்விட்டு ஓடிப்போன காயீன் நோத் என்ற தேசத்தில் குடியிருந்தான். நோத் என்ற பதத்துக்கு "நிலையற்ற" அல்லது "அலைந்த" என்று அருத்தம். காயீனும் அலைந்தவன், அவன் தேசமும் அப்பேர்ப்பட்ட தேசந்தான். இது அரபிதேசத்தின் மணல்வனங்களாயிருக்குமென்று பலர் எண்ணுகிறார்கள். அவன் தன் காலமெல்லாம் அலைந்துதிரிந்து, தன் நாட்களைக் கழித்தான். தேவன் அவன்மேல் கூறின சாபங்கள் அவன் தலைமேலிருந்தன.

அவன் எந்தக்காலத்தில் மரணமடைந்தான் என்றாவது, எந்த இடத்தில் மரணமடைந்தான் என்றாவது வேதத்தில் சொல்லப்படவில்லை. எப்படியும் அவன் தன் சகோதரனைக் கொன்றபிற்பாடும் நெடுங்காலம் உயிரோடிருந்தான். அவன் அநேக குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். அவனுடைய மக்களும், பேரப்பிள்ளைகளும் உலகப்பிரகாரமாய் பேர்பிரஸ்தாபம் பெற்றிருந்தார்கள். அவன் இவ்வுலகத்தில் முதலாம் பட்டணத்தைக் கட்டி, அதற்குத் தன் சிரேஷ்டபுத்திரனின் பேரால் ஏனோக் என்ற நாமத்தைக் கொடுத்தான். மேலும் அவன் சந்ததியார் கைத்தொழிலிலும், கவித்திறமையிலும் கீதவாத்தியத்திலும் பேர் பெற்றவர்களானார்கள். நாகரீகமும், அறிவும் விர்த்தியாகிறதோடு மெய்யறிவும், தெய்வீகபக்தியும் அவன் குடும்பத்தில் குறைந்துவந்தது. அவனுடைய வம்சத்தைச்சேர்ந்த லாமேக் என்ற ஒருவன் பல மனைவிகளை முதலாவது படைத்து, அந்தத் துன்மார்க்கத்தின் கதவைத் திறந்தான். இந்தக் கேடுபாடுகளை எல்லாம் ஆதாமும் ஏவாளும் தங்கள் ஜீவகாலத்திலே கண்ணாரக் கண்டார்கள். துன்மார்க்கர் எக்காலத்திலும் வாழ்வுடையவர்களாகவே இருக்கிறார்கள். இதின் ரகசியம் ஆண்டவருக்கே தெரியும். காயீனுடைய சரித்திரத்தில் நாம் இடைக்கிடையே காட்டியிருக்கிற போதனைகளையல்லாமல் விசேஷித்த போதனைகள் அநேகம் இருக்கின்றன.

நமது தேசத்தில் சொக்காரப்பகை அல்லது பங்காளிப்பகை என்று ஒன்றுண்டு. அவர்கள் அந்நியர் வாழச் சகிப்பார்கள், அதற்கு உதவியும் செய்வார்கள்; ஆனால் சொந்தத்தார் வாழச் சகியார்கள். இவர்கள் காயீன் குட்டிகளேயன்றி வேறு யார்? பெரும்பாலும் நெருங்கிய பந்துக்களால் உண்டாகும் மோசங்களைப்போல அதிக கெடுதலையுண்டாக்குகிற விஷயங்கள் வேறொன்றில்லை.

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டாம்
உடன்பிறந்தே கொல்லும் வியாதி.

நமக்கு நன்மையும் சகாயமும் உயரத்திலிருந்துதான் வரவேண்டியது.

நாம் செலுத்தும் பலிகள் எல்லாவற்றையும் தேவன் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவராய் இராமல், தமது சித்தத்துக்கேற்ற பலிகளைமாத்திரம் அங்கிகரிக்கிறவராய் இருக்கிறார். கடமைக்காகமாத்திரம் பலிகளைச்செலுத்தி ஆராதனைசெய்கிறவர்களைப் பார்த்து "வீண்காணிக்கைகளைக் கொண்டுவரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது...... நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது" என்கிறார் (எசா. 1. 13, 15.); ஆதலால் கர்த்தருக்குப் பிரியமானவைகள் இன்னதென்று அறிந்து, அதின்படி நடந்துவரப் பிரயாசப்படுவோமாக.

---

# ENOCH.

## பரமேறி முனிவர்.

(ஏனோக்கு.)

---

இவ்வுலகத்தில் முதலாவது பிறந்தபிள்ளையின் காரியம் இன்னதென்பதை முந்தின சரித்திரபாகத்தில் வாசித்தறிந்தவர்களுக்கு, அதன் பின்னடியாருடைய காரியங்கள் இப்படியென்று சொல்லவும் அவசியமா? தம்பியைக் கொன்ற காயீனுடைய கொர்ப்பத்தின் கனிகள் அதற்கு மிஞ்சின அக்கிரமக்காரராகவே இருப்பார்கள் என்பதை யார்தான் நிதானித்துக்கொள்ளமாட்டார்கள்?

காயீன் கர்த்தருடைய சமுகம் விட்டுப்போன நிமிஷமுதல் தேவனை வணங்குவதைப்பற்றியாவது, அவருக்குப் பிரியமாய் நடப்பதைப்பற்றியாவது எவ்வளவேனும் சிந்தியாமல் இவ்வுலக வாழ்வையும் பேர் பிரஸ்தாபத்தையும் விருத்திபண்ணிக்கொள்ளும் சிந்தையிலும் நினைவிலும் தன் நேரத்தைக் கழித்தான். அவனுடைய சந்ததியாரும் அதே தங்கள் வேலைபோல் எண்ணி கைத்தொழிலிலும், கீதவாத்தியங்களிலும் வல்லவர்களானார்கள்.



காயீனுடைய சந்ததியார் இவ்வண்ணமாய் விருத்தியாகிவரும் காலத்தில் கடவுள் ஆதித்தாய் தந்தைகளுக்கு வேறொரு புத்திரனைக் கடாட்சம்பண்ணினார். அன்பும் சாந்தமும் விசுவாசமும் உள்ள மகனாகிய ஆபேலைச் சாகக்கொடுத்த ஏவாள் தன் மடியில் வேறொரு பாலனைக் கண்டு முந்தின மகனுடைய துக்கத்திலிருந்து மனம் ஆறியிருப்பாள் என்று சொல்லலாம். இந்தப் பாலனை ஆதித்தாய் பெற்றவுடனே மனங்களித்து காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தாரென்று சொல்லி, அவனுக்கு சேத்து என்று பேரிட்டாள். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற பழமொழிபோல இவன் குணம் சிறுவயதிலேயே விளங்கிற்று. இவன் தன் தாய்தந்தையோடு அநுதினமும் போய் தேவனை ஆராதித்து வணங்கிவந்தான். மெய்த்தேவபக்தியை விருத்திசெய்வதே அவனுடைய விசேஷித்த கவனமாயிருந்தது; அதினாலே அவனிலிருந்து தோன்றின சந்ததியாரெல்லாரும் திருத்தொண்டரானார்கள்.

சேத்து என்னும் திருத்தொண்டனுக்கு ஏனோஸ் என்றொரு புத்திரன் பிறந்தான். அவன் தன் தகப்பனோடுகூட தேவபக்தியை மற்றவர்களுக்கு விருத்திபண்ணுகிறவேலையில் அதிக முயற்சிபண்ணுகிறவனாய் இருந்தான். இந்த ஏனோஸின் காலத்தில் தேவனை ஆராதிப்பதும், சேவிப்பதும் அதிக விருத்தி பெற்றது. இதற்குமுன் அவரவர் தம்தம் குடும்பசகிதமாய் மாத்திரம் அல்லது தனிமையாய்மாத்திரம் போய்க் குறிக்கப்பட்ட பலிகளையும், ஆராதனைகளையும் நிறைவேற்றிவந்தார்கள். ஏனோஸ் என்பவர் அதை மாற்றி தேவதாபக்தரெல்லாரும் அநுதினமும் குறிக்கப்பட்ட காலத்தில் குறிக்கப்பட்ட ஒரு இடத்தில் ஏகமாய்க் கூடி தேவாராதனைசெய்துவரும்படி திட்டஞ்செய்தார். இந்த முறை அதிக எழுப்புதலாயும், அநேகருடைய குளிர்ந்த பக்தியை அனலாக்குகிறதாயுமிருந்தது. அது முதல் பரலோகத்திலிருக்கும் தேவதூதருடைய ஸ்துதியையும், ஆராதனையின் ஓசையையும் திருவுளத்தில்கொள்ளும் தேவாதி தேவன் பூலோகத்திலிருந்து முழக்கமாய் எழும்பிவரும் ஆதாமின் மக்களுடைய வேண்டுதலையும், ஸ்துதியையும் கேட்கத் திருவுளமானார்.

சேத்தின் சந்ததியார் தேவதாபக்திவிஷயமாய்ச் செய்யும் காரியங்கள் எல்லாம் காயீனின் பிள்ளைகளுக்கு அற்பமாய்க் காணப்பட்டிருக்கலாம். அவர்கள் அந்த பக்தரைப் பரியாசம் பண்ணியுமிருப்பார்கள்.

இப்படியிருக்குங்காலத்தில் அவர்கள் சந்ததியில் அஷ்டலக்ஷணம் பொருந்திய ஒரு புத்திரன் தோன்றினார். அவருக்கு ஏனோக்கு என்று பேர். அவர் சாகாமல் பரலோகம் போனதால் இனி அவரைப் பரமேறிமுனிவர் என்னும் பேரால் அழைப்போமாக. இவர் ஆதிமனுஷனாகிய ஆதாம் முனிவரின் ஏழாந்தலைமுறையில் தோன்றினார். இவரைப்பற்றி வேதாகமத்தில் கொஞ்சம்மாத்திரம் சொல்லப்பட்டிருந்தாலும் அந்தக் கொஞ்சமும் அதிக விசேஷமுள்ளதாகவே இருக்கிறது. இவர் தமது ஜீவகாலத்தில் தேவனோடு சஞ்சரித்துவந்தார் என்று பார்க்கிறோம்; அதாவது, தேவனோடு அந்நியோந்நியமாய்க் காலட்சேபம் செய்துவந்தார்.

இந்த அந்நியோந்நியத்தையும், தேவனோடு சஞ்சரிப்பதையும் அவர் எப்படிச் சம்பாதித்துக்கொண்டார் என்பதைக் காட்டும் யாதொரு குறிப்பும் நமக்குத் தெரியாது. இதினாலே ஒன்றுமாத்திரம் நமக்கு விளங்குகிறது. அதாவது, இவர் காலத்தில் உயிரோடிருந்த ஆதித்தகப்பனும் இவரைப் பெற்ற தகப்பனாகிய யாரேத்தும் பக்திசுவாலையைத் தங்களுக்குள்ளும், குடும்பத்திலும் வழக்கப்படுத்திவந்தார்கள் என்று தோன்றுகிறது.

இவருக்கு தேவனோடிருந்த அந்நியோந்நியமானது மனுஷரோடிருந்த அந்நியோந்நியத்தைப் பிரித்துப்போடவில்லை. இத்தேசத்தார் கடவுளோடு அந்நியோந்நியமுண்டாகும்படி இல்லறம்விட்டு துறவறம் பூண்டு, கந்தமூலிகைகளைத் தின்று, காடுகளில் வசித்து காலங்கழிக்கிறார்கள். இவரோ இல்லறத்திலே வாழ்ந்து தமது காலட்சேபத்தை தேவனோடு சஞ்சரிக்கிற விஷயமாய்ச் செலவிட்டார் என்பது புகழப்படத்தக்க விஷயமாய் இருக்கிறது.

இவர் தேவனோடு சஞ்சரித்ததின் மாட்சிமை எல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுவந்ததோடு, இக்காளில் இருக்கிறவர்களும் அதை ஆச்சரியத்தோடு கவனிக்கிற விஷயமாயுமிருக்கிறது.

தேவனோடு சஞ்சரிப்பதைப்போல ஆத்துமாவுக்கு இன்பமும் ஏற்றதுமான விஷயம் ஒன்றுமில்லையென்று சொல்லவேண்டியது. இவ்வித முறையால் ஆத்துமா ஆனந்தத்தையும் இளைப்பாறுதலையும்கொள்ளுகிறது. இவ்வுலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும், இவ்வுலகத்துக்குரிய எல்லா மேன்மைகளும், பேர்பிரஸ்தாபங்களும் நமது மனதிற்கு இன்பம்போலக் காணப்பட்டாலும் வரவர வேண்டாமென்று வெறுப்பாகிப்போம்.



ஆனால் தேவனோடு சஞ்சரிக்கும் பாக்கியம் ஒருநாளும் வெறுக்கிறதில்லை. தாழ்வும் கோவும் சஞ்சலமுமுள்ள காலத்தில் அதுதான் மனுஷனைத் திருப்திசெய்து, ஆறுதல்படுத்தும் அவிழ்தமாயிருக்கிறது என்று சொல்லலாம்.

பரமேறிமுனிவர் தேவனோடு என்னவிதமாய் சஞ்சரித்து வந்தார் என்று வெளிப்படையாய்ச் சொல்லாவிட்டாலும், ஜெபகுணத்தினாலும், தியானமுயற்சியினாலும் இதை நடத்திவந்தாரென்று சொல்லவேண்டியது. ஆதலால் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஜெபகுணமும் தியானசிந்தையும் இருக்கவேண்டியது. ஜெபகுணமும் தியானசிந்தையும் இருதயத்திற்குள் உத்தமவிசுவாசம் இருக்கிறதென்பதை வெளிப்படுத்தும் அடையாளங்களாயிருக்கிறது.

தேவனோடு சஞ்சரித்தானென்பது தேவபிரசந்நத்தை நிமிஷந்தோறும் தன் சிந்தையில் உணர்ந்து, அவரைத் தனக்கு முன்பாக நிறுத்தி நோக்கிவந்தான் என்பதை விளக்குகிறது. பக்தி வளர்ச்சிக்கும், உத்தம அந்நியோந்நியத்திற்கும் இந்த உணர்ச்சி மிகவும் அவசியமாயிருக்கிறது. இதை வெறும் உணர்ச்சியென்று சொல்லாமல் நிச்சயமான சத்தியம் என்று ஒத்துக்கொள்ளவேண்டியது.

பரமேறிமுனிவர் தம்மில் பக்தியை வளர்த்து தேவனோடு சஞ்சரித்துவந்தது மாத்திரமல்ல, பிறருக்கும் அதிகப் பிரயோசனமுடையவராய் தமது காலத்தைக் கழித்தார். அவரே இவ்வுலகத்தில் எழும்பிய முதலாம் பிரசங்கியும் முதலாம் தீர்க்கதரிசியுமாயிருந்தார். அவருடைய காலத்தில் அக்கிரமக்காரருடைய தொகையும், இவ்வுலகவாழ்வை விருத்திபண்ணுகிறவர்களுடைய கூட்டமும் அதிகரித்தது; பித்தளை, இரும்பு, வெண்கலம் முதலிய லோகங்களால் உண்டுபண்ணப்பட்ட விநோத சாமான்களின் வியாபாரம் பிரபல்லியமாய் நடந்தது. அக்காலத்து செல்வவான்கள் கின்னரக்கீதத்தாலும், கீதவாத்திய தொனியாலும் தங்கள் காலத்தைக் கழித்தார்கள். பராக்கிரமசாலிகள் வேட்டையாடுவதிலும் ஒருவரோடொருவர் மல்லுக்கட்டி வஸ்தாதுகளாய் எழும்புகிறதிலும் தலைப்பட்டார்கள். தாங்கள் நடப்பித்த பொல்லாப்புகளையே தங்களுக்கு மேன்மையாகப் பாராட்டி கவிகட்டிப் பாடி தங்களைத் தேற்றிக்கொள்ளுகிறவர்களும் அக்காலத்திலிருந்தார்கள். ஒருவனைக் கொலை செய்வது அல்லது காயப்படுத்துவது அவர்களுக்கு எவ்வளவேனும் ஒருபொருட்டாக எண்ணப்படவில்லை.

இவை அனைத்தும் தேவனோடு சஞ்சரித்த பரமேறிமுனிவருக்கு ஒத்துவருமா? இப்படிப்பட்ட பொல்லாப்புகளைப் பார்க்க அவர் கண் சம்மதிக்குமா? அவைகளைக் கேட்க அவருடைய காது கூசாதா? அவர் அவைகளில் ஒன்றையும் சகிக்கவொண்ணாமல் தமது சத்தத்தை எக்காளத்தைப்போல உயர்த்தி "இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச்செய்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும் தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடினவார்த்தைகள் எல்லாவற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்" என்று முன்னறிவித்தார். இந்த பயங்கரமான வாசகமானது அக்காலத்துப் பாவிகளுக்குச் செய்த பிரசங்கத்தின் சுருக்கமாயும், பிற்காலத்திலுள்ளவர்களுக்கு கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றி உணர்த்தும் தீர்க்கதரிசனமாயும் இருக்கிறது.*

இவ்வளவு கடினமான வார்த்தைகளைக்கொண்டு பரமேறிமுனிவர் பிரசங்கித்தாலும் அக்காலத்தில் குணப்பட்டவர்கள் கொஞ்சம்பேராய்மாத்திரம் இருந்தார்கள்.

பரமேறிமுனிவர் தமது பக்திமுறை தவறாமல் முந்நூறு வருஷம் தேவனோடு சஞ்சரித்தார் என்று பார்க்கிறோம். கடைசியாய் இப்படிப்பட்ட தாசனை பூலோகத்தார் எல்லாரிலும் மேலான கனத்துக்குப் பாத்திரவானாக்கும்படி தேவன் சித்தங்கொண்டு, அவனை மரிக்குமுன்னே பரலோகம் சேர்த்தார். அவர் பரலோகம்போன பயணத்தின் விபரம் ஒன்றும் சொல்லப்படக் காணோம். "ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் காணப்படாமல் போனான்" என்றும், "விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடி எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படாமல் போனான்" என்றும் சத்திய

* யூதா அப்போஸ்தலன் இந்த தீர்க்கதரிசன வாசகத்தை எதிலிருந்து எடுத்துச் சொல்லுகிறார் என்பதைக்குறித்து வேதவியாக்கியானிகள் பலவித அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்கள். சிலர் இதை தேவனே அப்போஸ்தலனுக்கு விசேஷ வெளிப்படுத்தலினால் அறிவித்தார் என்கிறார்கள். வேறுசிலர் ஏனோக் என்பவர் சுமார் 3000-வருஷங்களுக்கு முன்னே சொன்ன இந்தத் தீர்க்கதரிசனமானது தேவசித்தத்தினாலே தலைமுறைதத்துவமாய் இறங்கிவந்தது, அந்த பாரம்பரையே யூதா எடுத்துச்சொல்லுகிறார் என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.



வேதாகமத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அவர் தரிசித்து அல்ல, விசுவாசித்து நடக்கிறவராயிருந்தார். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் நடப்பது கூடாதகாரியம்" என்று வேதாகமம் சொல்லுவது யதார்த்தந்தான். ஒருவேளை எலியாவைப்போல் அக்கினிமேகத்தால் சூழப்பட்டு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கலாம்; அல்லது கிறிஸ்துஇயேசு வருங்காலத்தில் விசுவாசிகள் மறுரூபமாகி ஆகாயத்தில் ஏறிப்போவதுபோல போயிருக்கலாம். எப்படியிருந்தபோதிலும் அந்தக் காட்சி அக்காலத்தில் இருந்த எல்லாருக்கும் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்திருக்கவேண்டியது.

பரமேறிமுனிவர் மரணத்தைக் காணாமல் எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயமானது எக்காலத்திலும் மேன்மையாகப் பேசிக்கொள்ளப்பட்டுவருகிறது. ஏசு சீராக் என்னும் ஆகமக்காரன் அவனைக்குறித்து எழுதும்போது "அவன் தேவனைப் பிரியப்படுத்தி அவரால் நேசிக்கப்பட்டான்; ஆதலால் பாவிகள் நடுவில் குடியிருந்தாலும் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; ஆகாமியமானது அவனுடைய அறிவை மாற்றிப்போடாதபடிக்கும், பொல்லாப்பானது அவனுடைய ஆவியை மோசம்போக்காதபடிக்கும் அவன் அசுப்பிலே எடுத்துக்கொள்ளப்பட்டான்" என்று சொல்லுகிறான். (ஏசு—சீரா—ஞானம் 4. 9, 10.)

அக்காலத்தில் இருந்தவர்களில் பரமேறிமுனிவரே குறைந்த வயதிலே தன் ஜீவகால ஓட்டத்தை முடித்து பரலோகம் சென்றிருக்கிறார். இவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயமானது மரணத்தை ஜீவனாக மாற்றிவிடுகிறது போல் இருக்கிறது. மரணத்தினால் நாம் உருவழிந்து நமது சதை சிதைந்து எலும்புகள் எல்லாம் மக்கி மண்ணாய்ப்போனபோதிலும், உயிர்த்தெழுதலினால் அவை அனைத்தும் அழிவில்லாத உறுப்புகளாய் மாற்றப்பட்டு, திரும்பவும் நமக்கு உடலாகி அந்த வச்சிரகாயத்தோடு நீடூழிகாலம் வாழ்ந்துகொண்டிருப்போம் என்பதை நமக்கு நிச்சயப்படுத்துகிறதாயிருக்கிறது.

பரமேறிமுனிவர் பேரால் ஒரு ஆகமமும் வழங்கப்படுகிறது. அவ்வாகமத்தை அவரே எழுதினது என்பது மெய்யானால் இவரே முதலாம் ஆகமக்காரரானதால், ஆகமக்காரரின் பிதா என்று அழைக்கவேண்டியது நியாயம்.*

* ஏனோக்கின் ஆகமம் என்ற பேரால் வழங்கப்படுகிற ஒரு அப்போகிரிப்பா ஆகமம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஆகமம்

ஏனோக்கின் சரித்திரத்தை வாசிக்கிற ஒவ்வொருவரும் கேட்கவேண்டிய கேள்வி ஒன்றுண்டு. அதாவது, நான் தேவனோடு சஞ்சரிக்கிறேனா? என்பதுதான். தேவனோடு சஞ்சரிப்பதின் இன்பம் சஞ்சரிக்குமட்டும் மனுஷனுக்கு விளங்காது. நாம் தியானத்தினாலும் ஜெபத்தினாலும் தேவபிரசங்கத்தைப்பற்றிய நிச்சயத்தினாலும் அவரை நெருங்கி அவரோடு வாசம்பண்ணுவோமாக.

இப்படி வாசம்பண்ணும்போது ஏனோக்கைப்போல நாமும் சாகாமல் பரலோகம் போகவேண்டும் என்கிற எண்ணமானது நமது மனதை உயர்த்தாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது. ஏனோக்கை உயிரோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொண்ட தேவன், நாம் உயிரோடிருக்கும்போதே நமது மனதையும் சிந்தையையும் நாடோறும் பரவசப்படுத்தி, நமது நம்பிக்கையை அவரில் நிலைப்படுத்தி நம்மைத் தமது நாமத்தின் மகிமைக்கென்று ஆதரிப்பாராக.

பரமேறி முனிவருக்குக் குமாரரும் குமாரத்திகளும் பிறந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு மெத்துசலா என்று பேர்.

இருக்கலாம் என்ற அபிப்பிராயத்துக்கு யூதா. 14, 15-ம் வசனங்
கனே ஆதாரமாய் இருக்கின்றன. ஆனால் யூதா அப்போஸ்தலன்
சொல்லிய வாசகத்தைக்கொண்டு அது பாரம்பரையாய் இறங்கி
வந்ததோ அல்லது எழுத்துமூலமாய் இறங்கிவந்ததோ என்று
தீர்மானஞ்சொல்ல இடமில்லாதிருக்கிறது. எப்படியும் இப்பே
ரால் வழங்கப்பட்ட ஆகமம் ஒன்று இரண்டாம் நூற்றாண்டில்
சாதாரணமாய் வழங்கப்பட்டது என்பது தெளிவாய் இருக்கி
றது. யூஸ்தீன், ஐரேனியுஸ், அனத்தோலியு என்பவர்கள் அவ்வாக
மத்தை அறிந்திருந்ததுபோல சாடையாய்க் காட்டுகிறார்கள்.
அலெக்சாந்திரியா கிளெமெந்தும், ஓரிஜன் என்பவரும் அவ்வாக
மத்தை வழங்கிவந்திருக்கிறார்கள். தெர்த்துல்லியான் என்பவர்
அப்புஸ்தகம் யூதருடைய கனோன் அட்டவணையில் சேர்க்கப்பட்டி
ருக்கவில்லை என்று சொன்னாலும், அது உண்டென்பதை ஒத்துக்
கொண்டிருக்கிறார். இவ்வாகமத்தைச் சேர்ந்த சில பாகம் கி. பி.
792ல் கண்டுபிடிக்கப்பட்டு வித்வான்களால் பாதுகாக்கப்பட்டி
ருக்கின்றன. கி. பி. 1773ல் புரூஸ் என்பவர் எத்தியோப்பிய
பாஷையில் திருப்பப்பட்டிருந்த ஏனோக்கின் ஆகமம் ஒன்றை
எகிப்தில் கண்டுபிடித்துக் கொண்டுவந்தார். இதுவன்றி இந்த
பேரால் வழங்கப்பட்ட எபிரெயு ஆகமம் ஒன்று பதின்மூன்றாம்
நூற்றாண்டுமட்டும் யூதருக்குள் பிரயோகிக்கப்பட்டுவந்திருக்கி
றது. இப்பொழுது அகப்பட்டிருக்கிற பிரதியின்படி அது ஐந்து
பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.



பிதாவைக் குறைந்த வயதிலே பரலோகத்திற்கு எழுந்தருளப்பண்ணின தேவன் மகனை இவ்வுலகத்தில் இருந்த எல்லாரைப் பார்க்கிலும் அதிக வயதுக்கு உயிரோடிருக்க சித்தங்கொண்டார். அவர் தமது தகப்பனுடைய பக்திவழியிலே நடந்து பரமபிதாவை நேசித்து, அவருக்குப் பிரியமானதைச் செய்து தொளாயிரத்து அறுபத்தொன்பதாம் வயதிலே பிராண வியோகமானார். எத்தனை வருஷம் இப்பூமியில் இருந்தாலும் என்ன? கடைசியாக மரித்தான் அல்லது செத்தான் என்ற சொல்தான் உண்டாகும். அதற்குமுன்னே அவரவர் தங்கள் ஆத்தும இரட்சிப்பைப்பற்றிக் கவலையுள்ளவர்களாய் இருக்கவேண்டியது.

பரமேறிமுனிவர் நல்லவராய்க் காலங்கழித்து சாகாமல் பரலோகம் சேர்ந்தார்; அவர் குமாரன் அவரைப்போலவே நல்லவராய் நடந்து மரித்து மறுலோகம் சேர்ந்தார். எப்படியானாலும் மறுலோகமே நமது முடிவான இடம். அதற்குப் போகும்படி ஆயத்தப்படுவதே இக்காலத்தில் நமது கவனமாய் இருக்கவேண்டியது. பரமேறிமுனிவரைப்போல ஆண்டவர் என்னையும் மரணத்தைக் காணாதபடி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று விரும்பினால் அது சரியல்ல. அதை வீண்பெருமையென்று சொல்லவேண்டும். மெத்துசலாவைப்போல நெடுங்காலமிருந்து சாகவேண்டுமென்று ஆசைப்படுவது பேராசை. இவை இரண்டையும் நாம் மறந்து கர்த்தர் எப்போது என்னவழியாக நம்மைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ளுகிறாரோ அதற்கு நாம் பொறுமையோடு சம்மதித்து, அதற்கு ஆயத்தமாய் இருக்கும்படியாக அநுதினமும் ஆண்டவரோடு சஞ்சரிக்கிறவர்களைப்போல் நமது காலத்தைக் கழிக்கவேண்டியது.

# NOAH.

## பிரளய முனிவர்.

(நோவா.)

### ஜநந பருவம்.

பரமேறிமுனிவருக்கு மூன்று தலைமுறைக்குப் பின்பு, ஆதிமனுஷன் உருவாக்கப்பட்ட பத்தாந்தலைமுறையில் ஒரு அதிசயபக்தன் உலகில் வசித்தார். அவர் காலத்தில் பூலோ

கம் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டு மறுபடியும் குடியேற்றப்பட்டது. அவர் அந்தப் பிரளயகாலத்திற்குமுன்னும், பிரளயகாலத்திலும், பிரளயகாலத்திற்குப்பின்னும் இருந்ததால் அவரைப் பிரளயமுனிவர் என்று அழைப்போமாக. இவருடைய சொந்தப்பேர் நோவா. முன் காலத்தில் பூமியிலிருந்த பரிசுத்தவான்களையும், மகாத்துமாக்களையும்பற்றிய நிச்சயமான நடபடிகளை அறிவது புத்திமான்கள் எவர்களுக்கும் அதிகப் பிரீதியாயிருக்கவேண்டியது.

பரமேறிமுனிவர் சாகாமல் கூட்டோடு பரமபதி அடைந்த விஷயம் அக்காலத்தில் இருந்த எல்லாராலும் அதிக விசேஷமாய்ப் பேசிக்கொள்ளப்பட்டதல்லாமல், அநேகர் அவ்வித பாக்கியத்தைத் தாமும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று முயற்சிசெய்திருப்பார்கள் என்று எண்ணத்தக்கதுதான். பரமேறிமுனிவர் பரலோகம் போனதுமுதல் உலகத்தில் தேவதாபக்தி விஷயத்தில் அநேக நல்ல மாறுதல்கள் உண்டாக ஆரம்பித்திருக்கவேண்டியது. ஏனெனில் பக்தன் தன் ஜீவியத்தால் கர்த்தருக்கு ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுகிறதைப் பார்க்கிலும், தன் மரணத்தால் அதிக ஆத்துமாக்களைச் சம்பாதித்துவைக்கிறவனைப்போல் இருக்கிறான்.

பரமேறிமுனிவருடைய தேவதாபக்திநெறியை அநேகர் பிடித்து நடக்கப்போகிறார்கள் என்பதை சாத்தான் அறிந்தோ அல்லது வேறெந்த முகாந்தரத்தாலோ அதற்குப் பின்னான காலத்தில் மனுமக்களை முன்னிலும் அதிகமாய்க் கெடுக்கும்படி முயற்சிசெய்தான். இனிமேல் ஒருவனையாவது ஏனோக்கைப்போல கூட்டோடு பரமலோகம் போகவிடக்கூடாதென்று பாதாளலோகத்து பூதகணங்கள் எல்லாம் பந்துகட்டுப்பண்ணிக்கொண்டார்கள் என்று சொன்னாலும் சொல்லலாம்.

இக்காலத்தில் ஆதிமனுஷனுடைய மூத்த குமாரனாகிய காயீனுடைய சந்ததியாரும், மூன்றாம் மகனாகிய சேத்துடைய சந்ததியாரும் திரண்ட கூட்டமாய்ப் பெருகியிருந்தார்கள். இவர்களில் காயீனுடைய சந்ததியார் மனுஷபுத்திரர் என்றும், சேத்துடைய சந்ததியார் தேவபுத்திரர் என்றும் பொதுவாக அழைக்கப்பட்டுவந்தார்கள்.*

* இரண்டு வம்சங்களிலுமுள்ள பக்திமான்களை தேவபுத்திரர் என்றும், அவபக்தியுள்ளவர்களை மனுஷபுத்திரர் என்றும் கருத்துக்கொள்வாருமுண்டு.



காயீன் முதலாம் தேவபக்தனாகிய ஆபேலைக் கொலைசெய்து கர்த்தருடைய சமுகத்தை விட்டுப் புறப்பட்டு, தன் இஷ்டப்படி காலங்கழித்த காலமுதல் ஆதாமாவது அவனில் இருந்து தோன்றின சேத்தினுடைய சந்ததியாவது, காயீனுடைய வகையராக்களுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டு ஜீவித்ததாகத் தோன்றுகிறதில்லை. காயீன் தன்னையும் தன் இனத்தாரையும் பிரத்தியேகப்படுத்திக்கொண்டு தன் மனம்போன வகையாய்க் காலங்கழித்தான். சேத்துடைய சந்ததியாரோ அந்த ஆகாதவர்களுடைய ஆலோசனைகளுக்கு இடங்கொடாமலும், அந்தப் பாவிகளுடைய வழிகளுக்கு இணங்காமலும், அந்த துன்மார்க்கரோடு வாசம்பண்ணாமலும், தேவ பிரசந்நத்தின் மேல் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவரை ஆராதித்துக்கொண்டு வணங்கிவந்தார்கள்.

ஆதியில் சர்ப்பத்தின்மூலமாய் ஆதித்தாயைக் கெடுத்த சாத்தான் இக்காலத்தில் மனுஷபுத்திரர் என்னப்பட்ட காயீனுடைய சந்ததியைச்சேர்ந்த பெண்கள்மூலமாய் சேத்துடைய சந்ததியில் பிரபலமாகிவந்த பக்திவளர்ச்சியையும், தெய்வீக அந்நியோந்நியத்தையும், நாசம்பண்ணும்படி பிரயத்தனப்பட்டான். எப்படியெனில் தேவபுத்திரர் என்னப்பட்டவர்கள் மனுஷபுத்திரிகள் என்னப்பட்ட அவபக்தியுள்ள பெண்களை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். இதினாலே பெண் கொள்ளவேண்டியவர்கள் இன்னாரென்பதை தேவன் எக்காலத்திலுமுள்ள தமது பிள்ளைகளுக்கு உணர்த்துகிறார் என்று சொல்லலாம். பூலோகத்தில் பக்திமுறை தாழவும் தேவகோபம் எழும்பவும் இதுவே காரணமாயிருந்தது. இந்தப் பாவம் இக்காலத்திலும் இருக்கிறது என்று துக்கத்தோடு சொல்லவேண்டியதாயிருக்கிறது.

காயீனுடைய சந்ததியார் நாம் முன்னே சொல்லியிருக்கிறபடி கைத்தொழில் வேலையிலும், கின்னரவாத்தியங்களிலும், பேரெடுத்துப் பிரபலமாயிருந்தார்கள். இதை அவர்கள் வம்சத்துப் பெண்களும்கற்றுப் பல விநோதமான கைத்தொழில்களில் தேர்ந்து கின்னரம்பழகி, கீதம்பாடி கீதவாத்தியவீரராக விளங்கியிருக்கலாம்; அவர்களுடைய இயல்பான போங்கு எவர்களையும் தங்களை நாடும்படியான நளினப்போங்காயுமிருக்கலாம். இம்முகாந்தரங்களினாலே அக்காலத்து பக்தர் எல்லாரும் மதிமயங்கி பக்தியுள்ள குடும்பத்துப் பெண்களை வேண்டாமென்று தள்ளி மனுஷகுமாரத்திகளைப்போய் விவாகஞ் செய்

தார்கள். அந்தக்காலத்தில் மேலேகாட்டிய குறிப்புகளே அஷ்டலக்ஷும் என்று அவர்கள் எண்ணிக்கொண்டார்கள்போலிருக்கிறது. மெய்தான், விசுவாசம் சாந்தம் அமைதல்முதலிய மன அழகு உலகத்தாருக்கு அழகாகக் காணப்படாமல், மயிரைப் பின்னி பொன்னாபரணங்களைத் தரித்துப் புறப்படும் பெண்களே அழகும் சிறப்புமாகக் காணப்பட்டுவருகிறார்கள்.

அக்காலத்தாருடைய நடபடிகள் கடவுளுக்கு எவ்வளவேனும் பொருந்தவில்லை. இந்த ஆகாமியத்திலிருந்து மனுஷரைத் திருத்தும்படி அவர் தமது ஞானமுள்ள முறைகள் அநேகத்தைக் கையாடியும் அக்காலத்தார் சீர்ப்படவில்லை. என்றாலும் அவர்களுடைய ஆகாமியம் அதிகமாய் மிஞ்சிப்போகாதபடி அவர்கள் ஆயுளைக் குறுக்கினார். அதற்குமுன் அநேக நூறு வருஷங்களுக்கு உயிரோடிருந்ததுபோக, அதுமுதல் நூற்றிருபது வருஷத்தையே நீண்ட ஆயுளின் காலஅளவாகத் தீர்மானம்பண்ணினார். அக்காலத்தில் கர்த்தர் "என் ஆவி என்றைக்கும் மனுஷரோடு போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே. அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம்" என்று தீர்ப்புச்சொன்னார்.

என்றாலும் பரிசுத்தம் வளர்ந்தோங்கவேண்டியதற்கு தேவையான காலஅளவு பாவம் வளர்ந்தோங்குவதற்கு வேண்டியதில்லை. ஒருவனை நல்லவனாக்க அநேகவருஷ காலஞ்செல்லும்; அவனை கெட்டவனாக்க ஒரு நொடி போதுமே. ஆகாமியத்தை மட்டுப்படுத்தும்படி ஆண்டவர் நீண்ட ஆயுளைக் குறுக்கினபோதிலும், அது அவ்வளவு காலத்திற்குள் வெகுவாய் ஓங்கிவளர்ந்தது. மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது, அவர்கள் இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தம் பொல்லாததாய் இருந்தது, அதை ஆண்டவர்கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார்.

ஆ! இது எவ்வளவு விசனமான காரியம். எல்லாச் சிருஷ்டிகளையும் உண்டாக்கி நல்லதென்றுகண்ட தேவன் மனுஷனை உண்டாக்கினபின்பு மிகவும் நன்றாயிருக்கிறதென்று சொன்னார்; இந்த மனுஷஜாதியைத் தமது சாயலாகவே சிருஷ்டித்து ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் அருளினார். இவ்வளவையும் தாம்செய்தும் சுமார் ஆயிரம்வருஷத்துக்குள்ளாக பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் என்று சொல்லத்தக்கதாக அவர்களுடைய பாவம் அவ்வளவு பெருகிற்று. இது அக்காலத்திலுள்ளவர்களுடைய



கெடுதலை உணர்த்தும் உரைகல்போல் இருக்கிறது. ஆண்டவர் உண்டாக்கின ஒளியும் ஆகாயவிரிவும், புல்லும் பூண்டும், விருட்சமும் மச்சமும், பட்சியும் ஜாதிஜாதியான மிருகங்களும், அவருக்கு ஒருநாளும் மனஸ்தாபத்தைக் கொடுத்ததில்லை. இவ்வளவுகாலமாகியும் அதினாலே ஆண்டவருக்கு மனநோவே இல்லை. மனுஷனால்மாத்திரம் ஆண்டவருக்கு மனநோவு. ஆ! மனுஷஜென்மமே உன் விழுதலின் நஷ்டம் இவ்வளவென்று கண்டாயா? மனுஷருடைய தொகை பூமியைமுழுவதும் நிரப்புமுன் அவர்களுடைய பாவங்களின் தொகை பூமியை மூடிக்குவிந்து வானபரியந்தம் எட்டிவிட்டது. தேவபுத்திரர் மனுஷபுத்திரரோடு சம்பந்தம்பண்ணிக்கொண்டதால் பக்தியுள்ள புருஷர்முதலாய் அவபக்தியில் சீக்கிரத்துக்குள் வல்லவர்களாகிவிட்டார்கள்; அவர்களிலிருந்து தோன்றின சந்ததியார் கலகக்குணமும், கடினஇருதயமும், இரும்புக்கழுத்தும், இளகாத நெஞ்சருமாயிருந்தார்கள். ஆதியில் ஆதாம் ஒரு ஸ்திரியினால் வஞ்சிக்கப்பட்டதுபோல இக்காலத்தில் மனுஷபுத்திரருடைய பெண்கள் தேவபுத்திரருடைய மாப்பிள்ளைகளை வஞ்சித்தார்கள். நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் பழத்தினுடைய அழகு ஏவாளைக் கெடுத்தது; மனுஷபுத்திரிகளின் அழகு தேவபுத்திரரைக் கெடுத்தது.

அநேக பாவங்களுக்குக் கண்ணே கருவியாயிருக்கிறது. ஏவாள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறதென்றுகண்டு அதின் கனியைப் பறித்துப் புசித்தாள். தேவபுத்திரர் மனுஷபுத்திரரின் பெண்களை அதிக சௌந்தரியமுள்ளவர்கள் என்றுகண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைக்கொண்டார்கள். கண்ணானது, சாத்தான் பெரும்பாலும் மனுஷ இருதயத்துக்குள் பவனிபோகும் ஒலிமுகவாசல் என்று சொல்லலாம். தன் கண்ணோடே உடன்படிக்கைபண்ணிக்கொள்ளாத ஆத்துமாக்கள் தங்கள் கண்களை சாத்தானுடைய வருகைக்குப் பெருக்கி ஆயத்தப்படுத்துகிறவர்களைப்போல் இருக்கிறார்கள். அந்தக் கண்ணுக்கு மையிட்டுக் கொள்ளுகிறவர்கள் அவன் வருகைக்கென்று தங்கள் கண்வாசலைச் சிங்காரித்துவைக்கிறவர்கள்போல் இருக்கிறார்கள். இந்த ஆகாமியக்காலத்தில் தேவன் தமது தாசனாகிய பிரளயமுனிவரைத் தோன்றப்பண்ணினார்.

பிரளயமுனிவருடைய தகப்பனுக்கு லாமேக்கு என்று பெயர். இவர் அக்கால ஆகாமியங்களுக்கு இடங்கொடாமலும்,

தமது குடும்பத்தார் மற்ற அநேகரைப்போல் பக்தியற்ற மனுஷபுத்திரருடைய பெண்களை விவாகம்செய்யாமலும் மெய்த்தேவபக்தியை தமது குடும்பத்துக்குள் விருத்திபண்ணினார் என்று தோன்றுகிறது. இவர் காலத்தில் ஆதிமனுஷனாகிய ஆதாமும் இருந்தார். இந்த பக்தன் ஆதிமனுஷனோடு அடிக்கடி சம்பாஷித்து அவனுடைய பூர்வ பரிசுத்த நிலைமையைத் திட்டமாய் அறிந்திருக்கலாம்; அக்காலத்து துன்மார்க்க ஸ்திதியை அவ்விருவரும் பலதரம் கலந்து பேசியுமிருக்கலாம். கடைசியாக மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும்படி ஒரு பரிசுத்த சந்ததி பூமியிலிருந்து வரவேண்டியது என்பதையும் அவர்கள் எண்ணியிருக்கலாம். அந்த இரட்சகரைத் தங்கள் கண்கள் கண்டால் நலமென்பதே அவர்கள் ஆவலாய் இருந்தது என்பது மெய் என்றாலும், ஆதிமனுஷனாவது லாமேக்காவது அந்தச் சந்ததியைக் கண்டதில்லை. ஆதிமனுஷன் மரித்து சில வருஷங்களுக்குள்ளாக பிரளயமுனிவருடைய தகப்பனாரும் இறந்துபோனார். அவருடைய மரணசமயத்தில் அவருக்கு எழுநூற்று எழுபத்தேழு பிராயம். இவர்தான் அக்காலத்தாருக்குள் குறைந்தவயதில் மரித்தார். அக்காலத்தில் நடந்த ஆகாமியம் அவருடைய மனதை வேதனைப்படுத்தினதால் அவர் விசனத்தால் குறைந்தவயதில் மரித்தாலும் மரித்திருக்கலாம். அல்லவென்று பாவிகள்மேல்வரும் ஆக்கினையைத் தீவிரிக்கும்படி தேவன் பக்தரை குறைந்தவயதில் தம்மிடம் சேர்த்துக்கொண்டாலும் சேர்த்துக்கொள்ளலாம்.

லாமேக்கு என்பவர் பிரளயமுனிவரைப் பெற்றவுடனே தேவாவியால் நிரப்பப்பட்டு “கர்த்தர் சபித்த பூமியிலே நமக்குண்டான வேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும் இவன் நம்மைத் தேற்றுவான்” என்றுசொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டார். இதினாலே அக்காலத்து பக்திமான்கள் சரீரப்பிரகாரமாய் மிகுந்த கஷ்டத்தையும் வருத்தத்தையும் அநுபவித்துவந்தார்கள் என்று தோன்றுகிறது. அவர்கள் காயீனுடைய சந்ததியாரைப்போல் கைத்தொழில்களாலும் வியாபாரத்தினாலும் திரண்ட செல்வத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்துடையவர்களாய் இராமல், தங்கள் உள்ளத்தில் மெய்ப்பக்தியையே ஆஸ்தியாக்கிக்கொள்ளும் கவலையில் இருந்தார்கள். லாமேக்கு என்பவர் தமது மகனைப்பற்றி நினைத்துச் சொன்னவாசகம் நிச்சயமாகவே இருந்தது என்பது பின்வரும் சங்கதிகளால் விளங்கும்.



## கப்பல் பருவம்.

பிரளயமுனிவருடைய பிதாவானவர் காலம்சென்றுவிட்ட பின்பு அக்குடும்பத்தைச்சேர்ந்த சகல கவலைகளும் அவர் தலைமேல் விழுந்தது. அவருக்கு அநேக சகோதரரும் சகோதரிகளும் இருந்தார்கள். அதோடு கடவுள் கடாட்சத்தால் அவரும் கலியாணமன்னராகி குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றார். இவர்கள் எல்லாரையும் ஒன்றுபோல பக்திநெறியில் நடத்தி ஆகாமியத்துக்கு நீங்கலாக வேலியடைப்பது அவருடைய வல்லமைக்கு மிஞ்சினவேலையாய் இருந்ததென்பதை எவர்களும் ஒத்துக்கொள்ளுவார்கள். தமது பிதாவானவர் மரித்துப்போனபிற்பாடு அவருடைய உடன்பிறந்தார் எல்லாரும் பிரளயமுனிவருடைய புத்திபோதனைகளைக் கேட்டு நடந்தார்களென்று சொல்ல ஏதுவில்லை. மற்றவர்கள் எப்படிப் போனாலும் அவர் தமது சொந்தபிள்ளைகளைத் திட்டவட்டமாய்க் காத்துவளர்த்துவந்தார். மற்றவர்களையும் திருத்தும்படி தம்மாலான மட்டும் முயன்றும் முடியாதபட்சத்தில் அவர்தான் என்ன செய்வார்?

பிரளயமுனிவர் சுமார் நானூற்றைம்பது வயதுள்ளவராய் இருந்தகாலத்தில் பூலோகத்தை பூலோகம் என்று சொல்லக்கூடாதவகையாய் அவ்வளவு கெட்டுப்போயிருந்தது. தேவபுத்திரர் மனுஷபுத்திரராகிய இருவம்சமும் கலந்ததால் இராட்சதர் என்ற ஒரு புதுஜாதி எழும்பிற்று. அவர்கள் தேவனுடைய சித்தத்தையும் செயலையும் ஆட்சேபிக்கிற இராட்சதராயும், அவருடைய வழிகளைக் கவிழ்த்துப்போடுகிற இராட்சதராயும், அவருடைய மார்க்கத்தைச் சீர்கெடச்செய்யும் இராட்சதக்குட்டிகளாயும் இருந்தார்கள். அக்காலத்துக் கேடுகளைக் கவனித்துச் சொல்லவேண்டுமானால் பாதாளலோகத்து பூதகணங்கள் எல்லாம் இராட்சதக்குட்டிகள் வேஷமாகவந்தது என்று சொல்லத்தக்கது. இந்த இராட்சதசந்ததி தொகையில் பெருகப்பெருக பாவமும் உலகத்தில் பெருகிக்கொண்டுவந்தது.

ஆதலால் ஆண்டவர் தமது இரக்கத்தையும் தயாளத்தையும் சற்று மறந்து, கோபத்தையும் உக்கிரத்தையும் காட்டுவது அவசியம் என்று காணப்பட்டது. இவ்வளவுக்குங் காரணம் மனுஷரேயன்றி தேவன் அல்ல. அப்பொழுது கர்த்தர் “நான் சிருஷ்டித்த மனுஷனை பூமியின்மேல் வைக்காமல் மனுஷன்முதற்கொண்டு மிருகங்கள் ஊரும்பிராணிகள் ஆகாயத்துப்பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்

பண்ணுவேன்” என்றார். ஒருகாலத்தில் “மனுஷனை உண்
டாக்குவோமாக” என்று வசனித்த திருவுளமானது இன்
னொருகாலத்தில் சமஸ்த வஸ்துக்களையும் “நிக்கிரகம்பண்ணு
வேன்” என்று திருவுளம்பற்றினது. ஆ பாவியே! உன்னிமித்
தம் உண்டாகிற நஷ்டங்களைக் கண்டாயா?

இவ்வண்ணமாக தேவன் தமது உக்கிரத்தை அணிந்து
கொண்டபோதிலும் தயவையும், இரக்கத்தையும், நீடிய சாந்தத்
தையும் களைந்துவிடவும் இல்லை; ஏதேனின் சோலைக்குள்
விளம்பின திருவாக்குத்தத்தத்தை மறந்துபோகவுமில்லை. அடித்
தாலும் இரட்சிப்பதே அவருடைய நோக்கம்; அழித்தாலும்
இரட்சண்யவித்தை காப்பதே அவருடைய திருவுளம். உலக
முழுவதும் கெடுக்கப்பட்டிருந்தாலும் நோவாவுக்குக் கர்த்த
ருடைய கண்களில் கிருபைகிடைத்தது. ஆ, பக்தியுள்ள முனி
வரே! உமக்கு வேறென்னதான் வேண்டும்? உலகமெல்லாம்
உம்மைப் பகைக்கிறது; ஆனால் உமக்குக் கர்த்தருடைய கண்
களில் கிருபை கிடைத்திருக்கிறது. உமது உடன்பிறந்தார்
சுற்றத்தார் எல்லாரும் உம்மை விரோதித்தார்கள்; உமது உடன்
பிறவா தேவன் உமக்குத் தமது கண்களில் கிருபைகிடைக்கச்
செய்கிறார். உமக்கினி பயமேன்? பதஷ்டமேன்? உலகமுழு
வதும் திரைகடல்போல் திரண்டுவந்தாலும் நீர் அஞ்சவேண்
டியதில்லை. பாதாள பூதங்கள் புடைசூழ்ந்துநின்று தங்கள்
அக்கினியாஸ்திரங்களையெல்லாம் சோனாமாறிபோல் பெய்தா
லும் உமக்கென்ன? உமக்கு கர்த்தருடைய கண்களில் தயவு
கிடைத்திருக்கிறது.

கர்த்தருடைய கண்களில் தயவுகிடைத்த பிரளயமுனி
வருடைய வாழ்வு இன்னதென்பது பின்வரும் சங்கதிகளால்
தெளிவாய் விளங்கும்.

பிரளயமுனிவர் தம் காலத்திலிருந்தவர்களுக்குள்ளே நீதிமா
னும் உத்தமனுமாயிருந்தார். இவருக்குமுன் நாம் சொன்ன
பரமேறிமுனிவரைப்போல் தேவனோடு சஞ்சாரஞ்செய்தார்.
ஆனால் அக்காலத்தவர்கள் தேவனுக்கு முன்பாகத் தங்கள் வழி
யைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது தேவன் ஒருநாள் பிரளயமுனிவருக்குத் தரி
சனமாகி, ஆ! நோவாமுனியே கேள்: “மாம்சமான யாவரு
டைய முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி
கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களை பூமியோடுங்
கூட அழித்துப்போடுவேன்; நீ கோப்பேர்மரத்தால் உனக்
கொரு கப்பலையுண்டாக்கு; அந்தக் கப்பலிலே அறைகளை



உண்டுபண்ணி உள்ளும் புறம்பும் கீல்பூசு” என்று சொல்லி
அந்தக் கப்பலுக்குரிய அளவுமாதிரியெல்லாம் சொல்லி திரு
வுளம்பற்றினார். நோவாவையும் அவன் குடும்பத்தையும் வேறு
விதமாய் இரட்சிக்க தேவனால் கூடும். ஆனால் இந்தப் பேழை
யானது, 1. நோவாவினுடைய விசுவாசத்தையும் பொறுமை
யையும் திருஷ்டாந்தப்படுத்தவும் (எபி. 11. 7.), 2. மனுஷ
ஜாதியின்மேல்வர இருக்கும் தேவனுடைய உக்கிரகோபத்தை
வெளியரங்கமாய் உணர்த்தி எச்சரிக்கவும், 3. ஞானஸ்நானத்
தின் மூலமாய்ச் சிலுவையில் அறையுண்ட இரட்சகனை விசுவா
சிப்பதை அறிக்கையிட்டு, அவருடைய சபையாகிய பேழை
யில் சேருவதால் கிடைக்கும் இரட்சண்யத்தின் பரமஇரகசியத்
தை முந்தியே நிழலாட்டமாய்க் காண்பிக்கவும் நோக்கமாய்த்
தெரிந்துகொள்ளப்பட்டது. (1 பேது. 3. 19–21.)

இந்தத் திருவுளக் குரலைக்கேட்ட பிரளயமுனிவர் எவ்வளவு
நடுக்கத்தையும் பயத்தையும் உடையவராய் இருந்திருக்கவேண்
டியது. இவர் பயத்தோடும் நடுக்கத்தோடும் தேவகட்டளைக்
குக் கீழ்ப்படிந்து கோப்பேர்மரங்களை கொண்டுவந்து கப்பல்
வேலையை ஆரம்பித்தார்.*

அக்காலத்து மனுஷபுத்திரர் கைத்தொழிலில் மகா திறமை
யுடையவர்களாய் இருந்ததால் வேலைசெய்ய ஆள்கிடையாமல்
போகவில்லை. எண்ணிறந்த மனுஷர் கூலிக்கென்று போகா
விட்டாலும் கேலிக்கென்றுவந்து கூடியிருப்பார்கள். கடலு
க்கு வெகு தூரத்துக்கப்பால் உள்நாட்டில் கப்பல் செய்கிறது
யாருக்குத்தான் நகைப்பாயிருக்கமாட்டாது! பிரளயமுனிவர்
அவர்களுடைய நகைப்பொன்றையும் கவனிக்கிறவராய் இரா
மல் தேவகட்டளைகளைமாத்திரம் உத்தம இருதயத்தோடு நிறை
வேற்றுகிறவராயிருந்தார். அவர் கட்டவேண்டிய பேழை முந்
நூறுமுழ நீளமும், முப்பதுமுழ உயரமும், ஐம்பதுமுழ அகலமு
முள்ளதாயிருக்கவேண்டுமென்று தேவன் திட்டஞ்செய்திரு
ந்தார். அதற்கிசைவாக அவர் மரங்களை அறுத்து பண்படுத்தி
வேலையை நடத்தினார். பிரளயமுனிவர் அக்காலத்தில் வாசம்
பண்ணின இடம் தற்காலத்தில் பாபிலோனியா என்று அழைக்
கப்படுகிற இடமாயிருக்கலாம். அவ்விடத்திலே தான் கோப்

* கோப்பேர் என்பதற்கு பிசின் என்பது சரியான கருத்து. ஆதலால்
பேழை கட்டப்பட்ட மரமானது கேதுரு, தேவதாரிமுதலிய விரு
ட்சங்களைப்போல் பிசின் உண்டாகும் ஒரு மரமாய் இருக்கலாம்.

பேர்மரமாகிய சைப்பிரஸ் மரமும் நல்ல கீலும் தாராளமாய் அகப்படும்.

பிரளயமுனிவர் கட்டிமுடித்த பேழைக்கு மூன்று தட்டுகள் இருந்தன. முதலாம் அடித்தட்டில் பெரிய மிருகங்களும், இரண்டாம் தட்டில் உணவுபதார்த்தங்களும் பலிபதார்த்தங்களும், மூன்றும் தட்டில் முனிவரும், அவருடைய குடும்பமும், பட்சிமுதலிய சிறு பிராணிகளும் வாசம்பண்ணியிருக்கலாம். அதிலுள்ள ஜன்னல் மேல்தட்டுக்கு ஒருமுழத் தாழ்த்தியிலேயும் கதவு பேழையின் பக்கத்திலேயும் இருந்தன. தேவன் கட்டளையிட்டிருந்தபடியே அந்தப் பேழையைச் செய்துமுடிக்க நூற்றிருபதுவருஷம் சென்றது.*

இந்த நூற்றிருபது வருஷகாலமாய் பிரளயமுனிவர் விடாமுயற்சியை எடுத்து தமக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வேலையை முடிக்கும்படி பிரயாசப்பட்டார். பிரளயமுனிவர் இக்காலத்தில் பேழைக்குரிய வேலைக்காரனைக் கண்காணிக்கிறதோடு, அக்கால உலகத்தாருக்கு வரப்போகிற பெரிய அழிவையும் உருக்கத்தோடு சொல்லிவந்தார். அவருடைய கைகப்பல் வேலையிலும், வாய் ஆத்துமாக்களை உணர்த்தி எச்சரிக்கும் வேலையிலும் பிரயோகிக்கப்பட்டு வந்தது என்று சொல்லவேண்டியது. தேவன் துன்மார்க்கரைத் தண்டித்தாலும் தமது கோபத்தினாலே அல்ல மட்டாய் தண்டிக்கிறார். அவர் நூற்றிருபதுவருஷம் தவணை கொடுத்ததுமாத்திரமல்ல ஒரு தகுந்த பிரசங்கியையும் கொடுத்து, வரப்போகிற தமது தண்டனையின் நிச்சயத்துக்கு அடையாளமாக பேழையையும் உண்டுபண்ணும்படி கட்டளையிட்டார். இந்தப் பேழையானது தேவன் நோவாவோடே செய்யும்படித் தீர்மானித்த உடன்படிக்கைக்கு வெளியரங்கமான அடையாளமாய் இருந்தது. மனுஷன் ஒரு ஸ்திரியின் வித்தின்மூலமாய் மரணத்தையும் சாபத்தையும் ஜெயங்கொள்ளவேண்டுமென்று வாக்குத்தத்தம்பண்ணியிருந்தபடியினாலே, தேவன் மனுஷஜாதியனைத்தையும் சமூலமாய் அழித்துப்போடுவது கூடாமையாய் இருந்தது. தேவன் ஏதேனின் சோலைக்குள் கூறின இரட்சண்யவாக்கை நோவா

* பேழையின் அளவைப்பற்றிச் சொல்லிய குறிப்புகளைக்கொண்டு அதில் 42,413 டன் நிறையுள்ள பாரம் ஏற்றக்கூடியதென்றும், தற்காலப் பெரிய போர்க்கப்பல் பதினெட்டு கொண்டது அந்தப் பேழைக்குச் சமமாகும் என்றும் ஹேறல் என்னும் சாஸ்திரியார் சொல்லுகிறார்.



வுக்குப் பேழையின்மூலமாய் உறுதிப்பண்ணினார்; அவனில் மனுஷஜாதியின் இரட்சண்யவித்து தற்காக்கப்பட்டது.

பிரளயமுனிவர் பேழைகட்டும் வேலையிலும் பிரசங்கவேலையிலும் இருந்தாலும், அக்காலத்தார் அதை உணரவே இல்லை. அவருடைய சொந்த சகோதரர் வந்தும் அவரைப் பரியாசம் பண்ணி அதிக பக்தி உம்மை பைத்தியக்காரராக்கிவிட்டது என்று சொல்லி பகடிபண்ணியிருக்கலாம். அவர்கள் என்ன சொன்னபோதிலும் அது பிரளயமுனிவருடைய விசுவாசத்தைக் குலைத்துப்போடவே இல்லை. உலகத்தார் தேவனுடைய பிள்ளைகளுடைய சத்தத்துக்கு செவிகொடுக்கவேமாட்டார்கள். தேவனுடைய பிள்ளைகள் அவர்களுடைய பார்வைக்குத் தீட்பானவர்களாய் இருக்கிறார்கள். இதினாலே தேவனுடைய புத்திரர் ஒருக்காலும் சோர்ந்துபோகமாட்டார்கள். உலகத்தால் வரும் இகழ்ச்சிகளையெல்லாம் அவர்கள் கிறிஸ்துவினிமித்தம் புகழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு, தங்கள் விசுவாசத்தில் வல்லவர்களாக வேண்டியது. உலகத்தார் மதிப்பில் நாம் எப்படியிருக்கிறோம் என்பது பெரிதல்ல. கர்த்தருடைய கண்களில் தயவுகிடைத்திருக்கிறதோ என்று ஒவ்வொரு ஆத்துமாவும் கேட்கவேண்டியது.

## பிரளய பருவம்.

பேழை கட்டப்பட்டு கீல் பூசப்பட்டவுடனே பரியாசக்காரரின் பரியாசங்கள் பல திசையிலுமிருந்து பிரளயமுனிவர் மேல் பொழிந்தன. பரியாசமாரியே பிரளயமுனிவர் கண்ட முதலாம் ஜலப்பிரளயம்போலிருந்தது. பகைவரின் பரியாசம் ஒழியவே சூரியவெப்பம் தணிந்தது; மேகமந்தாரங்கள் இடைக்கிடையே கூடிக்கலைந்தது; அதோடு பழைய உலகத்தாரின் பாவங்களும் பெருகிற்று. அவர்கள் நோவாவை மூடரின் முற்பிதா என்றும், பித்தரின் பாட்டன் என்றும் தீர்மானித்திருக்கலாம். அவர்கள் உண்டார்கள், உடுத்தார்கள், பெண்கொண்டார்கள் கொடுத்தார்கள்; வரப்போகிற பிரளயத்தைப்பற்றிக் கனவிலும் நினைக்கவில்லை; நேற்றிருந்தவண்ணமே இன்றைக்கும் இருக்கிறது; போனவருஷத்தின் தோற்றமே இவ்வருஷத்திலுங் காணப்படுகிறது; இப்படியெல்லாம் இருக்கிறது. இந்த வயோதிப நோவா கண்டபடி புலம்புகிறான்.

"அறுபதுக்குமேலே கிறுகிறுப்பு"

என்ற பழமொழிப்படி நரைத்த கிழவன் நாவில் எலும்பில்லாத

படியால் நாடினபடியெல்லாம் பேசி, காட்டைக் கலக்குகிறானேயன்றி வேறு காரியமொன்றுமில்லை என்றிப்படிப் பலவாறாகப் பேசிக்கொண்டிருக்கலாம்.

இவர்களுடைய சக்கந்தம் ஒரு பக்கத்தில் இருந்தாலும் தேவ பிரசங்கமும் வெளிப்படுத்தலும் அந்நாட்களில் அதிகமாய் இருந்தது; அது வரப்போகிற பிரளயத்தின் நிச்சயத்தை அவர் மனதில் நன்றாக உணர்த்திவந்தது என்று சொல்லவேண்டியது.

இப்படியிருக்குங்காலத்தில் மேகலோகத்தில் கடும் ஓட்டமும், கிரகலோகத்தில் மட்டற்ற இருளும் அந்தகாரமும் காணப்பட்டது; கெடுதிமழைக்குரிய வாடை பகலை பயப்படுத்திற்று; நாசமழைக்குரிய இடியும் மின்னலும் இரவை பயப்படுத்திற்று. இவ்வளவு சம்பவித்தும் பழைய உலகத்தார் அசையவில்லை; ஐயோ! அவர்கள் உணரவில்லை. இந்தத் தோற்றங்களைக் கண்ட பிரளயமுனிவர் தமக்கும் தம்மோடு பேழையில் தற்காக்கப்படவேண்டிய ஜீவன்களுக்கும் உணவாகச் சம்பாதித்து வைத்திருந்த நவதானியங்களையும், புல் வைக்கோல் முதலியவைகளையும் பேழையில் ஏற்றினார். இதுகண்ட பழைய உலகத்தார் கொல்லென்று நகைத்து,

பிரளய முனிவரிலும்
பெரும்பித்தனுண்டோ

என்று சொல்லிக்கொண்டிருந்திருக்கலாம். இவ்விரு பட்சத்தாரில் யார் பெரும்பித்தன் என்பது சீக்கிரத்தில் விளங்கிப் போம். பிரளயமுண்டாக இன்னம் ஏழுநாள் இருக்கும்போது தேவன் முனிவரை நோக்கி: "சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொருஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்படுவதற்கு பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்" என்று உத்தரவுசெய்திருந்தார். இந்த உத்தரவை விருத்தாப்பியமுள்ள பிரளயமுனிவர் எப்படி நிறைவேற்றக்கூடும்? இச்சமயத்தில் அவருக்கு அறுநூறுவயது. இவ்வளவு பெரிய வயதுடையவர் எந்த மலைக்குகைக்குள் இருக்கிற புலியைப் பிடித்துவருவார், எந்தக் காட்டிற்குப் போய் மானைப்பிடிக்க ஓடுவார், எந்த விருட்சத்திலேறி அங்கு தங்கும் மயிலைப்பிடித்துத் திரும்புவார்? அவர் அக்கம்பக்கம் போகாமலிருக்கும்போதே தேவனே அவைகளை முனிவரிடம் வரும்படிசெய்தார் என்று சொல்லவேண்டியது. முன் ஒரு காலத்தில் அவை அனைத்தையும் ஆதிமனுஷனுக்கு முன்பாக வரப்பண்ணி அவைகளுக்குப் பேரிடச்சொன்னவரே இப்பொழுதும் அவைகளை நோவாவுக்குமுன் மந்தை மந்தையாகக் கூடும்படிசெய்தார்.



ஒருவேளை மேகலோகத்திலும் கிரகலோகத்திலும் காணப்பட்ட பயங்கரத்தோற்றங்களை மிருகங்கள்கண்டு அஞ்சி, ஒதுக்கிடந்தேடி நோவாமுனிவரிடத்தில் வந்து சேர்ந்தாலும் சேர்ந்திருக்கலாம். ஐயோ! மாடு தன் எசமானையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரவேல் அறிவில்லாமலும் என் ஜனம் உணர்வில்லாமலும் போயிற்று என்ற வாசகம் நிச்சயமாய் இவர்கள் விஷயத்தில் விளங்குகிறது. முனிவர் தம்மிடம்வந்த எல்லா ஜீவஜந்துக்களையும் சேர்த்துக் கொள்ளாமல் கடவுளுடைய கட்டளைப்படியே சுத்தமான ஜந்துக்களில் வகை ஒன்றுக்கு ஏழுஜோடும், சுத்தமில்லாத ஜந்துக்களில் வகை ஒன்றுக்கு ஒவ்வொருஜோடும் பேழையில் சேர்த்துக்கொண்டார்.*

இப்படி ஜீவஜந்துக்களெல்லாம் வந்துகூடி அவைகளில் சிலமாத்திரம் முனிவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மற்றவைகள் துரத்திவிடப்பட்ட சமயமானது பழைய உலகத்தாருக்குக் கொண்டாட்டமான நாளாய் இருந்திருக்கலாம். முடவன் மடிக்குள் முயல்பாய்ந்தால் எப்படியோ, அப்படி அவர்கள் எல்லாரும் யாதொரு பிரயாசமுமின்றி மான்களையும் கொழுத்த ஆடுகளையும் பிடித்துச் சமைத்து சம்பிரம விருந்துகொண்டாடியிருக்கலாம்.

இவ்வண்ணம் பேழையில் தற்காக்கப்படவேண்டிய ஜீவன்களும், அவர்களுக்கு வேண்டிய உணவுபதார்த்தங்களும் சேகரித்து வைக்கப்பட்டவுடனே நோவா தன் மனைவியையும், தன் மூன்று குமாரரையும் அவர்களுடைய மனைவிகளையும் பேழைக்குள் பிரவேசிக்கப்பண்ணி, தானும் பழைய உலகத்துக்கு பயத்தோடும் பக்தியோடும் வந்தனம்கூறி ஏறிக்கொண்டார். இவர்கள் எல்லாரும் ஏகமாய் நோவாவுடன்கூட ஏறிக்கொண்ட விஷயமானது அக்குடும்பத்தின் நல்லொழுக்கத்தையும் சன்மார்க்க ஸ்திதியையுங் காட்டுகிறது.

பிரளய முனிவரும் அவருடைய குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்தவுடனே பழைய உலகத்தார் எதிர்பாராதவண்ணம்

* பேழைக்குள்ளிருந்த ஜாதிஜாதியான ஜீவஜந்துக்கள் திருச்சபையிலுள்ள யூதர், புறச்சாதியார், சுத்தர் அசுத்தர், அறிவீனர் அறிவுள்ளோர் ஆகிய பலமாதிரி மனுஷருக்கு முன்னடையாளமாய் இருந்தது. (அப். 10. 10–12. ஏசா. 11. 6–9.)

காரியங்கள் நடந்தது. மேகங்கள் தாழஇறங்கி, புசலடித்து மின்மின்னி இடிஇடித்து எவரும் மிக நடுங்கும்படிசெய்தது. இவ்விதக் காட்சியை அக்காலத்தார் ஒருக்காலுங் கண்டதே இல்லை. வானத்தை அளாவிநின்ற விருட்சங்கள் வானவரின் காற்றைத் தாங்காமல் அடியோடுவிழுந்து, புல்பூண்டுகளை நமஸ்காரம்பண்ணிற்று; கல்வீடுகள் களிமண்வீடுகளுக்குச் சமமாய் இடிந்துவிழுந்தன; அண்டமுழுவதிலும் ஆட்டமுண்டாயிற்று; அறைவீடுகளில் அழுகையும், புறத்திண்ணைகளில் புலம்பலும், தெருவீதிகளில் தியக்கமும் கேட்கப்பட்டன என்று சொல்லலாம்.

இச்சமயத்தில்தான் அவர்கள் நோவாவின் பிரசங்கத்தையும், பேழையின் தாத்பரியத்தையும் தங்கள் மனதில் உணர்ந்தார்கள் என்று சொல்லலாம். இனி புலம்பியாவதென்ன? அலறியாவதென்ன? பிரளயமுனிவர்முதலாய் இரங்கிக் கதவைத் திறந்து துன்மார்க்கரைப் பேழைக்குள் சேர்த்துவிடாதபடிக்கு தேவன் அதன் கதவை அடைத்திருந்தார். அக்காலத்திலுண்டான பூமிஅதிர்ச்சியினாலே அது பெரும்பிளப்பாய் பிளந்து பாதாளப் பிரளயத்தைப் பொங்கப்பண்ணிற்று. இடியும் மின்னலும் ஆகாயத்தைக் கிழித்து ஆகாயப்பிரளயத்தைப் பொழிந்தது. இவ்வண்ணம் பாதாளப்பிரளயமும் ஆகாயப்பிரளயமும் ஒன்றுகூடி சந்திக்கும்போது அதின் மத்தியிலிருந்து தவிக்கும் மனுஷர்களுக்கு அழிவேயன்றி வெறென்ன கிடைக்கும்! பிரளய மழையானது நாற்பதுநாள் இரவும் பகலும் பெருமழையாய்ப் பெய்தது; பேழை ஜலத்தின்மேல் பிரளய இராணி போல் மிதந்தது.

பிரளயமுனிவரே, நீரே பாக்கியவான்! பரமபிதாவானவர் கோபங்கொள்ளுகிற காலத்திலேயும் இரக்கத்தை நினைவுகூருகிறார் என்பதும், அவர் சாகிறவனுடைய சாவை விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார் என்பதையும், நீர் பேழைக்குள் தற்காக்கப்பட்டிருக்கிற விஷயத்தினால் அறிகிறோம். நீர் தேவனுக்குப் பிரியமாய் நடந்தபடியால் தேவன் உம்மை உயரமான கேதுருக்களுக்கும் உன்னதமான மலைச்சிகரங்களுக்கும் மேலாக உயர்த்தியிருக்கிறார். பாவம் பிரளயமாய்ப் பெருகியிருக்குங்காலத்தில் கிருபை பேழையாக மிதக்கிறது என்கிறதைக் காண்கிறோம்.

பிரளயம் பெருகி பேழை மிதக்கிற சமயத்தில் ஜனங்கள் பட்ட அவதிகளையும், அவர்கள் ஒவ்வொருவரும் தங்களை ரட்சித்துக்கொள்ளப்பட்ட பாட்டையும் யாரால் சொல்லக்கூடும்!



பேழையைக் கட்டக் கண்டவர்களும் பேழையில் கூலிவேலை செய்தவர்களும் எல்லாரும் மாண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் பேழை மிதக்கமிதக்க அதில் தொங்கிக்கொண்டு நோவை முனிவரைக்கெஞ்சி கதவைத் திறக்கும்படி வேண்டிக்கொண்டிருக்கலாம்; ஆனால் ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டுகிற தேவன் பேழையின் கதவை அடைத்துவிட்டபடியால் இனித் திறக்கமுடியாது.

"கதவு பூட்டினபின்பு தட்டுகிறது வீணாய் இருக்குமே! ஆக்கினை செலுத்துங்காலத்தில் இரக்கத்துக்காகக் கெஞ்சிக் கேட்கிறதற்கு காலம் கடந்துபோயிருக்கும்." தேவதண்டனைகள் நம்மைப் பின்தொடரும்போது நாம் தப்பியோடிப்போகாமல் மனந்திரும்ப அவருடைய பாதத்தண்டை ஓடிவருவதே புத்தியாயிருக்கும்.

பிரளயத்தின் ஜலம் உயர்ந்த மலைக்குமேல் பதினைந்துமுழம் பெருகிற்று. அப்பொழுது மாம்ச ஜெந்துக்களாகிய பறவைகளும் காட்டு மிருகங்களும் சகல ஊரும்பிராணிகளும் மனுஷ ஜன்மங்களும் நிக்கிரகமாயின; நோவாவும் அவனோடு பேழையிலிருந்த உயிர்களுமாத்திரம் தற்காக்கப்பட்டன; ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பதுநாள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருந்தது.

இவ்வளவு காலத்துக்குள் தேவன் தமது தண்டனையின் கோலைக் கீழேவைத்துவிடச் சித்தங்கொண்டார். கர்த்தாவே, உமது கோபம் ஒரு நிமிஷமும் உமது தயவு நீடியகாலமுமாய் இருக்கிறது.

தேவன் நோவாவையும் அவனுடைய பேழைக்குள்ளிருந்த ஜீவன்களையும் நினைத்தருளினார். இதற்குள்ளாக ஜலப்பிரளயமுண்டாகி சுமார் ஆறுமாதகாலமாகியிருந்தது. அறுநூறுவயதுள்ள விருத்தாப்பிய முனிவரும் அவருடைய குடும்பமும் குளிர்ந்த ஜலத்தின் கூதலால் அதிக சங்கடப்பட்டிருக்கவேண்டும். தேவன் அவர்களுக்குமாத்திரம் பாராட்டின அன்பைப்பற்றிய எண்ணமும், துன்மார்க்கம் அடியோடே பூமியிலிருந்து அற்றுப்போயிற்று என்ற சந்தோஷமும், வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட மேசியா தங்களுடைய குடும்பத்திற்குள்ளிருந்து தோன்றவேண்டுமேயன்றி வேறு போக்கில்லை என்ற ஆனந்தமும் அக்குளிர்காலத்தில் அவர்களுடைய இருதயத்தையும் இரத்தாசயத்தையும் அனலுண்டாக்கும் விறகுகுச்சுகள்போல் இருந்தன என்று சொல்லவேண்டியது.

கிருபைபொருந்திய தேவன் நோவாவையும் அவனோடு
பேழைக்குள்ளிருந்த ஜீவன்களையும் நினைத்தருளினார் என்பது
அவருடைய நன்மைத்தனத்தை நன்றாய் விளக்குகிறதல்லவா?
அவர்களை மறுபடியும் சீக்கிரத்துக்குள் பூலோகத்தில் குடி
யேற்றவும், பூமிக்குரிய சர்வ அதிகாரத்தையும் அவர்களுக்குக்
கையளிக்கவும் அவர்களை நினைத்தருளினார். இதற்கு ஜலப்
பிரவாகம் தடையாயிருந்தபடியால் ஜலம்வற்ற காற்றை வீசும்
படிசெய்தார். இது மழையையும் குளிரையும் நீக்கி சிரக சக்
கிரவர்த்தியாகிய சூரியனைத் தன் வல்லமையோடு பிரகாசிக்கச்
செய்யும் தென்றலாய் இருக்கலாம். காற்றுவீசின உடனே
"ஜலம் அமர்ந்தது" என்று வாசிக்கிறோம். அதாவது மேகலோக
ஊற்றுக்கண்களும், பாதாள ஊற்றுக்கண்களும் காற்றுவீசின
நாளில் அடங்கிவிட்டது. முதலாவது நாற்பதுநாள் இரவுபக
லாய் கெடுதிமழை பெய்தது, அப்பால் சுமார் ஐந்துமாதகால
மாய் தொடர்ச்சியாக மழைபெய்துகொண்டிருந்தது; காற்று
வீசினவுடனே அது முற்றிலுமாய் நின்றுவிட்டது. அது
முதல் ஜலம் வற்றிக்கொண்டேவந்தது. இந்த காற்றானது
பாதாளத்தையும் மேகத்தையும் அழைத்து ஆ, வானத்து மேகமே!
ஆழத்து ஊற்றே! நீங்கள் அவரவர் கக்கி பூமியில் பெருகச்
செய்த இவ்வளவு ஜலத்தையும், எவ்விதமாய்க் கக்கினீர்களோ,
அவ்விதமாய் உறிஞ்சிக்கொண்டு பூமியை வெட்டாந்தரையாக்
குங்கள் என்று கட்டளையிடுகிறதுபோல் இருந்தது. பிரளய
காலத்தில் பூமியை ஒரு வஸ்திரம்போல் மூடியிருந்த ஜலமானது
தேவன் அனுப்பின காற்றின் கண்டிதத்தால் விலகியோடி
மேகங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் பாதாளகேணிகளிலும்
ஒதுங்கிவிட்டது.

கர்த்தாவே! நீர் சொல்லஆகும்
கர்த்தாவே! நீர் கட்டளையிடநிற்கும்.

ஜலம் பூமியிலிருந்து நாளுக்குநாள் வற்றிக்கொண்டேயிருந்
தது.. நூற்றைம்பது நாளுக்குப்பின்பு ஜலம் வடிந்தது. ஜலம்
குறையக்குறைய உயர்ந்த பர்வதங்கள்முதலாவது காணப்படு
வது இயல்பு. பிரளய முனிவருக்கு ஜலம் குறைந்துவருகிறது
முதலாவது தெரியாமல் இருக்கலாம். ஆனால் அப்போதடித்த
காற்றால் கண்டவிடமெல்லாம் காற்றாடிபோல் ஆடியலைந்து
திரிந்த பேழையானது திடீரென்று ஒரு இடத்தில் மாட்டிக்
கொண்டு அக்கம்பக்கம் விலகாமலும் அசையாமலும் நின்றது.



அந்த மலை பிற்காலத்தில் ஆராத்து என்று அழைக்கப்பட்டது.* பேழை தங்கினகாலமானது ஒருவருஷத்தின் வசந்தகாலமாயிருந்தது.

பேழை ஆராத்து மலையின்மேல் தங்கின விஷயமானது நமது ஆண்டவருடைய உயிர்த்தெழுதலுக்கு முன்னடையாளமாயிருக்கிறது. ஏனெனில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சரீரமானது புதிய சிருஷ்டிப்பின் முதற்பலனாயிருப்பதுபோல, பேழையானது பழைய உலகத்தின் அழிவிலிருந்துண்டாகும் புதிய உலகத்தின் ஆரம்பமாயிருந்தது (1 கொரி. 15. 20, 21, 23.). மேலும் இவ்வுலகத்திலுள்ள போராடும் சபையானது தன் போர்த்தொழிலின் முடிவில் அநுபவிக்கும் இளைப்பாறுதலையும் அது முன்குறித்துக் காட்டினது.

பத்தாம்மாதமட்டும் ஜலம் வடிந்துகொண்டேவந்தது. ஏழாம் மாதம்முதல் பத்தாம்மாதம்வரையும் வருஷத்தின் கோடைகாலமானதால் தண்ணீர் வற்றிப்போகிறதற்கு ஏற்ற சமயமாயும் இருந்தது. இவ்விதமாக நோவாவின் பொறுமையானது நாள் நீடிப்பினால் பரீட்சிக்கப்பட்டது. பத்தாம்மாதம் முதலாம் தேதியிலே மலைச்சிகரங்கள் காணப்பட்டது; மலைச்சிகரங்கள் தோன்றின நாற்பதுநாளைக்குப் பின்பு ஜலம் எவ்வளவுதூரம் வற்றி இருக்கிறதென்று அறியும்படி பிரளய முனிவர் முதலாவது ஒரு காகத்தை விட்டார்; அது பிணங்களைத் தின்கிற பட்சியாதலால் ஜலப்பிரளயத்தினால் மாண்டு மிதந்துகிடந்த ஏதோ பிணத்தைத் தனக்கு சதமென்று தின்று பேழைக்குள் வராமலே தன் காலத்தைக் கழிக்கவேண்டுமென்று கருதி, பேழையண்டைவருகிறதும் மறுபடியும் போகிறதுமாயிருந்தது. அப்புறம் முனிவர் ஒரு புறாவை வெளியே விட்டார்; இது தன் கூட்டையும் ஜோடியையும் எப்போதும் நாடுகிறதும் கண்டபடி பறந்து திரியாததுமான ஒரு பட்சியானதால், தன் உள்ளங்கால்வைத்து இளைப்பாற இடங்காணாமல் திரும்பவும் பேழைக்குள் வந்துவிட்டது. பின்னும் ஏழுநாள்பொறுத்து ஒரு புறாவை விட்டார்; அது உடனேவராமல் சாயங்காலத்தில் திரும்பிவந்துவிட்டது; அதின் வாயிலோ ஒலிவ்மரத்தின் இலை இருந்தது. அதி

* இது அர்மீனியா நாட்டிலுள்ள ஒரு மலைமேடு. அந்த இடத்தை அர்மீனியர் இறங்குதுறையென்று அழைப்பதாகவும், பழைய பேழையின் அம்சங்கள்முதலாய் தங்கள் வசத்திலிருப்பதாகவும், பெருமைபாராட்டுகிறார்கள் என்று யோசேப்புஸ் என்பவர் சொல்லியிருக்கிறார்.

ளிலே மலைஉச்சியிலுள்ள ஜலம்மாத்திரமல்ல ஒலிவமரங்கள் தழைத்தோங்கும் பள்ளத்தாக்குகளிலும் ஜலம்வற்றி, மரங்கள் காணப்படுகிறதென்பதை முனிவர் அறிந்துகொண்டார். பிரளயமுண்டாகத் துவக்கின பத்தாமாதத்தில் ஜலம் முற்றிலும் வற்றிப்போயிற்று. பிரளயமுண்டாகி சரியாய் ஒருவருஷமும் பத்துநாளும் ஆனபின்பு பூமியானது காய்ந்து, மனுஷரும் மிருகங்களும் மறுபடியும் சஞ்சரிக்கிறதற்கு ஏற்றதாக இருந்தது.

அப்பொழுது தேவன் நோவாவைநோக்கி: நீயும் உன்னோடு கூட உன் மனைவியும், உன் மக்களும், உன் மருமக்கள்மாரும், உன்னிடத்திலிருக்கிற சகல மாம்சஜந்துக்களும், பட்சிகளும், ஊர்வனங்களும் பேழையைவிட்டு வெளியேவாருங்கள் என்று உத்தரவுகொடுத்தார். அவ்வுத்தரவைக் கேட்டவுடனே நோவாமுனிவர் ஒரு வருஷத்துக்கதிகமாய் அடைக்கப்பட்டிருந்த பேழையின் கதவைத்திறந்து, சகல ஜீவன்களையும் வெளியே விட்டார். அச்சமயத்தில் பிரளயத்துக்குத் தப்பிப்பிழைத்த அந்த ஜீவஜந்துக்களின் சந்தோஷமும், மனுமக்களின் மகிழ்ச்சியும் இவ்வளவென்றுசொல்ல எவராலும் முடியாது. தேவன் சகல ஜீவஜந்துக்களையும் மறுபடியும் ஒருதரம் ஆசீர்வதித்து, அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்து பலுகிப்பெருகக்கடவது என்றார். அடைபட்ட ஜீவன்கள் விடுதலையான சந்தோஷத்தோடு இந்த ஆசீர்வாதவாக்கின் சந்தோஷமும் சேர்ந்து அவர்களை ஆனந்தமடையச்செய்தது.

## வானவில் பருவம்.

பிரளயமுனிவர் பேழையிலிருந்து வெளிப்பட்டவுடனே* ஒரு பலிபீடங்கட்டி சுத்தமான சகல மிருகங்களிலும் பட்சிகளிலும் சிலவற்றை எடுத்து அவைகளை பலிபீடத்தின்மேல் தகனபலியாக பலியிட்டு தன் குடும்பத்தோடு கர்த்தரைவணங்கி தோத்திரஞ்செலுத்தினார். ஆண்டவரும் அந்த பலியை ஏற்றுக்கொண்டு, இனி நான் மனுஷர்நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை........நான் இப்பொழுது செய்ததுபோல இனிச் சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லையென்று திருவாய்மலர்ந்தருளினார்.

* பிரளயமுனிவர் பேழைக்குள்ளிருந்த காலத்தைக்காட்டும் பின்வரும் அட்டவணையை பாசினஜ் (Pasnage) என்பவர் குறிப்பித்திருக்கிறார்.



பிரளயமுனிவர் செலுத்திய முதலாம் பலியை ஏற்றுக் கொண்ட கர்த்தர் அவருக்குச் சில வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் கட்டளையையுங் கொடுத்ததுமன்றி, அவரோடு ஒரு உடன்படிக்கையையும் ஏற்படுத்தினார்.

I. அந்த வாக்குத்தத்தங்களாவன:

1. இனி நான் மனுஷன்நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை.
2. இனி நான் சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை.
3. இனி பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரி

உலகமுண்டாகி 1656-௵.

| | மாதம். | தேதி. | |
|---|---|---|---|
| 1 | அக்றோபர் | | நோவாவும் அவர் குடும்பமும் பேழைக்குள் பிரவேசித்தார்கள். |
| 2 | நவம்பர் | 17 | மகா ஆழத்தின் நீரூற்றுகள் பிளந்தன. |
| 3 | டிசம்பர் | 26 | மழை ஆரம்பித்து 40 நாள் இரவும் பகலும் வருஷித்தது. |
| 4 | ஜனுவரி | | பூமியிலுள்ள மனுஷரும் மிருகங்களும் ஜலத்தால் மூடப்பட்டு அழிந்தார்கள். |
| 5 | பெபுரவரி | | மழை இன்னும் பெய்துகொண்டே இருந்தது. |
| 6 | மார்ச்சு | | இருபத்தேழாம் தேதிவரையும் ஜலம் பெருகினபடியே இருந்தது; அப்பால் குறையத்துவக்கிற்று. |
| 7 | ஏப்பிரல் | 17 | பேழை ஆராத்மலையில் தங்கிற்று. |
| 8 | மேய் | | தண்ணீர் வடியுமட்டும் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. |
| 9 | ஜுன் | 1 | மலைகளின் உச்சிகள் தோன்றின. |
| 10 | ஜுலாய் | 11 | நோவா ஒரு காகத்தை வெளியே விட்டான். |
| 11 | „ | 18 | ஒரு புறாவை விட்டான் அது திரும்பவந்துவிட்டது. |
| | „ | 25 | ஒரு புறாவைவிட்டான், அது ஒலிவஇலையோடு வந்தது. |
| 12 | ஆகஸ்டு | 2 | மூன்றாந்தரம் ஒரு புறா விடப்பட்டது, அது வரவில்லை. |
| 13 | செப்றெம்பர் | 1 | வெட்டாந்தரை காணப்பட்டது. |
| 14 | அக்றோபர் | 27 | நோவா தன் குடும்பசகிதமாய் பேழையிலிருந்து வெளியே வந்தான். |

காலமும், பகலும் இரவும், ஒழிவதில்லையென்பதே அந்த வாக்குத்தத்தங்களாய் இருந்தன.

II. அந்த ஆசீர்வாதங்களாவன:

1. நீங்கள் பலுகிப்பெருகிப் பூமியை நிரப்புங்கள்.
2. உங்களைப்பற்றிய பயமும் அச்சமும் சகல மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் இருக்கும்.
3. பூமியில் நடமாடுவதையும் சமுத்திர மச்சங்களையும் உங்களுக்குக் கையளிக்கிறோம் என்பதே அந்த ஆசீர்வாதமாயிருந்தன.

III. அந்தக் கட்டளைகளாவன:

1. நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவையும் நீங்கள் புசிக்கலாம். மாம்சத்தை இரத்தத்தோடு புசிக்கக்கூடாது. (ஆதி. 9. 4.)
2. உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்துக்காகப் பழிவாங்குவேன் (ஆதி. 9. 5.); அதாவது ஒருவனும் தன்னைக் கொலைசெய்யக்கூடாது.
3. ஒருவனும் தன் பிறனைக் கொலைசெய்யக்கூடாது.
4. பழிக்குப் பழிவாங்கப்படவேண்டியது. (ஆதி. 9. 6.)

ஆகிய இவைகளே அந்தக்கட்டளைகளாயிருந்தன.

மேலேசொல்லிய வாக்குத்தத்தங்களும் ஆசீர்வாதங்களும் கட்டளைகளுமே நோவாமுனிவருக்கு அருளிச்செய்யப்பட்ட வேதமார்க்கமாய் இருந்தது என்று சொல்லவேண்டியது; இவைகளை தேவன் நோவாமுனிவரோடுசெய்த உடன்படிக்கையின் வரலாறுகள் என்று சொன்னாலும் சொல்லலாம். இவை அனைத்துக்கும் நிச்சயமான சாட்சியாகவும் என்றுமுள்ள அடையாளமாகவும் தேவன் வானவில்லை ஸ்தாபித்தார். இந்த வானவில் பிரளயகாலத்துக்குமுன் இருந்தது என்பது மெய்யானாலும் இப்பொழுதுதான் தேவன் அருளிச்செய்த உடன்படிக்கையின் அடையாளமாக ஏற்படுத்தப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் அடையாளத்தை தேவன் ஸ்தாபிக்கும்போது நோவாவையும் அவன் குமாரரையும் நோக்கி: நான் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததி



யோடும், உங்களோடு பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள்முதல் இனி பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம் பறவைகளோடும் நாட்டுமிருகங்களோடும் உங்களிடத்திலிருக்கிற சகல காட்டுமிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்; இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லை; பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயமுண்டாவதுமில்லை. நான்செய்கிற உடன்படிக்கைக்கு அடையாளமாக என் வில்லை மேகத்திலே வைத்தேன்; அந்தவில் மேகத்திலே தோன்றும்போது தேவனுக்கும் பூமியிலுள்ள ஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையாகிய என் உடன்படிக்கையை நினைவுகூரும்படிக்கு நோக்கிப்பார்ப்பேன் என்று திருவாக்கருளி அந்த உடன்படிக்கையை ஸ்தாபித்தார்.

பாவத்தினிமித்தம் பிரளயம்பெருகின காலம்போக இப்போது கிருபையின்மேல் கிருபை பெருகும் காலமாகிறது. ஆ, பிதாவே! நீர் மனுஷனை நினைவுகூரவும், அவனை நோக்கிப் பார்க்கவும், அவனோடு உடன்படிக்கை பண்ணவும் அவன் எம்மாத்திரம்? எங்களிலும் பரிசுத்தரும் சாகாவரமுடையவர்களுமான சம்மனசுகளின் சேனையோடு நீர் ஒருகாலத்திலும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டதாக நாங்கள் வாசித்ததுமில்லை, கேட்டதுமில்லையே. பாவிகளாகிய எங்களோடு நீர் உமது உடன்படிக்கைகளோடு உடன்படிக்கைகளையும், வாக்குத்தத்தங்களோடு வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களோடு ஆசீர்வாதங்களையும் கூட்டுகிறீரே; உம்மை ஸ்துதிக்கிறோம், புகழுகிறோம்; உம்மைப் பணிகிறோம், சேவிக்கிறோம்; நாங்கள் உம்மைவிட்டு விலகிப்போகாதபடி பரிசுத்தக் கட்டளைகளால் எங்களை கட்டி, வாக்குத்தத்தங்களால் எங்களை வளைந்து, ஆசீர்வாதங்களால் எங்களை அணைத்து, உடன்படிக்கையின் அடையாளங்களால் உற்சாகப்படுத்துகிறீரே! இவ்வளவு தயவுக்கும் தாட்சண்யத்துக்கும் காரணமென்ன? காரணமேதாவதுண்டானால் அது உமது நேசமேயன்றி வேறல்ல. அந்த நேச வெள்ளம் எங்கும் போகாமல் எங்களையே பின்தொடருகிறதின் இரகசியத்தை நாங்கள் இன்னும் அறியாதபடி ஆச்சரியத்தோடு குனிந்து அடிபணிந்து விழுகிறோம்; அடியாரைத் தேற்றும்.

இவ்வண்ணமாகப் பிரளயமுனிவர் இரண்டாம் உலகத்தின் ஆதாமாக நின்றார். அவனில் பூமியின் வம்சங்களின் வித்தும் சர்வலோகத்தின் இரட்சண்யவித்தும் நிலைத்திருந்தது. ஆனால்

இந்த இரண்டாம் சிருஷ்டிப்பின் அல்லது புதிதாக்குதலின் காலத்தை முதலாம் சிருஷ்டிப்பின் காலத்துக்கு இணையென்று ஒருக்காலும் சொல்லலாகாது. முதலாம் சிருஷ்டிப்பின் காலத்தில் தேவன் மனுஷனை சிருஷ்டித்து தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் நோக்கிப்பார்த்தார்; "அது மிகவும் நன்றாய் இருந்தது." ஆனால் பிரளயகாலத்துக்குப்பின்பு தேவன் பேழையிலிருந்து வெளிப்பட்ட சகல ஜீவன்களையும் நோக்கிப் பார்த்தபோதோ காரியம் அப்படியிருக்கவில்லை. பிரளயகாலத்துக்குப்பின்பு செலுத்தப்பட்ட முதலாம்பலியை தேவன் அங்கிகரித்து மேலேசொல்லிய ஆசிர்வாதங்களைப் பொழிந்தபோதிலும், அவ்வாசிர்வாதங்கள் பிரளய ஜலக்குவியலின் அளவுக்கும் உயரமாக பெருகிநிற்கும் கிருபைவரங்களாய் இருந்தபோதிலும் "மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாய் இருக்கிறது" என்று தேவன் சொல்லத்தக்க ஸ்திதியில்தான் இருந்தது. வானத்து மதகுகளும் பாதாளத்து ஊற்றுகளும் பாவிகளை உலகத்திலிருந்து கழுவிவிட வல்லமையுடையதாயிருந்ததேயன்றி, பாவத்தைச் சமூலமாய்க் கழுவிவிட வல்லமையுடையதாக இருக்கவில்லை. இதுபோல இன்னும் அநேக ஜலப்பிரளயம் வந்தாலும் அதினால் பாவிகள் சாவார்களேயன்றி பாவம் சாகமாட்டாது. பாவத்தைச் சாகப்பண்ணும்படி வானத்து மதகுவழியாயும் பாதாளத்து ஊற்று வழியாயும் அல்ல, சிலுவையில் அறையுண்ட இயேசு சுவாமியின் திருவிலாவழியாய்வந்த செந்நீர்ப்பிரளயத்தினால் மாத்திரம் கூடும்.

"செந்நீர் நிறைந்த காயங்கள்
சுமந்த கர்த்தனே!
என்னால் விளைந்த பாவங்கள்
எல்லாம் அகற்றுமே."

ஜலப்பிரளயத்திலிருந்து தற்காக்கப்பட்ட எட்டுப்பேருக்குள்ளும் பாவம் இருந்தது என்று சொல்லவேண்டியதுதான். நோவாமுனிவரை நீதிமான் என்று சொல்லும்போது பாவத்திற்கு முற்றும் விலகினவர் என்று கருத்தல்ல. அவர்கள் பாவங்களோடுங்கூட தேவன் அவர்கள்மேல் இரங்கி அவர்களுக்கு தமது கிருபை உடன்படிக்கையை ஸ்தாபித்தார் என்பதும், இனிவரும் உலகத்தை அழிக்கமாட்டோம் என்பதற்கு அத்தாட்சியாக வானவில்லையும் ஸ்தாபித்தார் என்றும் நாம் அறியும் விஷயங்கள் கடவுளின் நன்மைத்தனத்தையும் அவருடைய அன்பின் பெருக்கத்தையும் நமக்கு உணர்த்துகிற விஷயங்களாய் இருக்கின்றன. ஏதேனின் மீறுதலின் தண்டனையின் முடிவில் கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப்பட்டயத்தையும் காண்கிறோம்; பழைய உலகத்தாருடைய மீறுதலின் தண்டனைமுடிவிலோ அழகான குளிர்ந்த வானவில்லையும் அதற்குள்ளிருந்து தொனிக்கும் கிருபையுடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களையும் நாம் கேட்கிறோம்.



பிரளயமுனிவருடைய பலியின்மேல் பண்ணப்பட்ட உடன்படிக்கையின் அடையாளமான வானவில்லானது, திவ்வியவாசகரால் வானத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிம்மாசனத்தின்மேல் வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாய் வீற்றிருந்தவரைச் சுற்றிலும் காணப்பட்ட மரகதநிற வானவில்லுக்கு நிழலாட்டமாக இருக்கிறது (வெளி. 4. 2, 3.). நோவாவின் காலத்து வானவில்லுக்குள்ளிருந்து எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாது. இனி யாம்சமானவைகள் எல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லை என்ற சப்தம் உண்டானது என்று சொல்லக்கூடுமானால் இந்த மரகதநிற வானவில்லுக்குள்ளிருந்து "உன்மேல் நான் கோபங்கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்துகொள்வதில்லையென்றும் ஆணையிட்டேன். மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்குமென்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்" என்ற சத்தம் தொனிக்கிறது என்று சொல்லலாம். (ஏசா. 54. 9, 10.)

இதன் பின்பு நாம் பிரளயமுனிவரைப்பற்றிக் கொஞ்சம்தான் வாசிக்கிறோம். அந்தக் கொஞ்சமும் அவ்வளவு திருப்திகரமான விஷயங்களல்ல. பிரளயகாலத்திற்குப்பின்பு அவர் சுமார் இரண்டொருவருஷகாலமாக பேழைக்குள் சேகரிக்கப்பட்டு மீதியாய்ப்போன தானிய தவசங்களைவைத்துப் புசித்து நாள் கடத்தியிருக்கலாம்; அப்பால் அவர் பயிர்த்தொழில் செய்யும்படி ஆரம்பித்தார். இது ஆதிமனுஷன் பாவஞ்செய்யாதிருந்த காலத்தில் தேவனால் அவனுக்குக் கட்டளையிடப்பட்டிருந்த வேலையாய் இருந்தது; இந்த வேலை அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும் கொடுத்தது. ஏனெனில் ஜலப்பிரளயத்திற்குப்பின்பு பூமியில் முளைத்தெழும்பிய தாபராசிகள் தங்கள் செழிப்பிலும் அழகிலும் முன்னிலும் ஆனந்தமாகக் காணப்பட்டன. ஆதாமின் பாவத்தாலும் காயீனின் கர்மத்

தாலும் பூமியின்மேல் கூறப்பட்டிருந்த சாபமானது இப்பொ
ழுது முற்றிலுமாய் நீக்கப்பட்டதினால் அது முன்னிலும் மங்க
ளமாய் விளங்கவேண்டியதுதானே. இக்காலத்தில் ஜனங்கள்
மண்வெட்டி பிடிப்பது மானக்கேடு, ஏர் உழுவது இளப்பம்,
சமுசாரித்தனம் சர்வ முட்டாள்கள் வேலையென்று சொல்லி
சர்க்கார் உத்யோகம், சர்க்கார் உத்யோகம் என்று சாடுகிறார்கள்;
இது மகா பிசகு.

"தொழுதூண் சுவையின்
உழுதூண் இனிது"

என்று ஔவை சொன்ன வாசகம் நல்ல முதுமொழிதான்.
அதாவது சேவித்து உண்ணும் உணவின் ருசியிலும் பயிர்
செய்து உண்ணும் உணவின் ருசி இனிமையாகும்.

மற்றப் பயிர்களோடு பிரளயமுனிவர் திராட்சத்தோட்ட
மும் பயிரிட்டார். அதன் கனிகாலத்தில் அவர் ஒருக்கால
முங் காணாத பலனைக் கண்டார். அவர்கள் பழமாய்த் தின்ற
மீந்ததை ஒருவேளை வற்றலாக்கிச் சாப்பிட்டிருக்கலாம்.

பிரளயகாலமுண்டாகி அநேக வருஷங்களுக்குப் பிற்பாடு
திராட்சரசத்தை எடுக்கும் முறையை அக்காலத்தார் கையாடி
வந்தார்கள் என்று தோன்றுகிறது. ஏனெனில் ஜலப்பிரளயத்
துக்குமுன் அந்த வழக்கம் இருந்ததற்கு யாதொரு குறிப்பை
யும் நாம் காண்கிறதில்லை. ஒருநாள் நோவா திராட்சரசத்
தைக் குடித்து வெறிகொண்டு தன் கூடாரத்தில் வஸ்திரம் வில
கிப் படுத்திருந்தான். மெய்யாகவே நோவாமுனிவர் வெறிக்
கக் குடிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு அதை பானம்ப
ண்ணியிருக்கவேமாட்டார். இப்படி இரசத்தைப் பிடித்து
வைத்துக் குடிக்கிற வழக்கம் அப்போதுதான் புதிதாக ஆரம்பித்
திருக்கலாம். பழமாக எவ்வளவு தின்றாலும் ஒன்றும் செய்ய
மாட்டாதது இப்பொழுதும் அப்படியே வித்தியாசம் செய்ய
மாட்டாதென்ற சுத்த நினைவோடு அவர் அதைப் பானம்பண்
ணினார் என்றே சொல்லவேண்டியது. ஒருவேளை மதுவைப்
பேணும் முறை முன்னமே வழங்கிவந்திருக்கலாம் என்று
அபிப்பிராயப்பட்டாலும், அக்காலத்து திராட்சப்பழங்கள்
முன்னுள்ளதைப்போல சாதாரணமானதாயிராமல் பூமியின்
கொழுமையினாலே அதிகச் சாரமும் வல்லமையும் பொருந்திய
தாய் இருந்திருக்கலாம்; அதின் மோசத்துக்கு ஏதுவான வல்ல
மையின் தன்மையை நோவாமுனிவர் முற்றிலும் அறியாமல்
இருந்திருக்கலாம்.



எப்படி இருந்தபோதிலும் இது நோவாமுனிவருடைய பேருக்கு ஒரு குறைதான். இதினாலே எவ்வளவு நீதிமானும் பாவிகள் வரிசையில் சேர்ந்தவன்தான் என்றும், அவன் பல வீனத்தால் லேசில் விழுவான் என்றும், போஷிக்கும் அமுதே கொல்லும் நஞ்சாகும் என்றும் திட்டமாய் அறிந்துகொள்ளுகி றோம். இந்த சங்கதி ஜலப்பிரளயமுண்டாகி அநேக ஆண்டு களுக்குப் பின்தான் நடந்திருக்கவேண்டியது. ஏனெனில் இதில் நோவாவின் பேரப்பிள்ளைகளில் ஒருவனாகிய கானான் என்பவன் சம்பந்தப்பட்டிருக்கிறான்.

இந்தக் கானான் என்பவன் முனிவர் ஸ்மரணை தப்பிக்கிடக் கிறதைக் கண்டு அவர் பேணா நாற்றம்படி முதலாவது தன் தகப்பனாகிய காமிடத்தில்போய் சொன்னான். ஒருவேளை நோவாமுனிவரின் மனைவி இதற்குள்ளாக மரித்துப்போயி ருக்கலாம். காமாவது அதை அம்மட்டோடே மறைத்து தன் தகப்பனை கனப்படுத்த முயலாமல் இதை ஒரு பெரிய காரிய மாய்த் தன் மனதின்மேல் சுமந்து தன் மூத்த சகோதரராகிய சேமிடத்திலும் யாப்பேத்திடத்திலும் சொன்னான். அவ்விரு வரும் ஒரு வஸ்திரத்தை எடுத்து தங்கள் இருவருடைய தோள் மேலும் போட்டுக்கொண்டு பின்னிட்டுவந்து தங்கள் தகப்ப னுடைய நிருவாணத்தை மூடினார்கள். பின்பு அநேக ஆண் டுகளுக்குப்பின்பு "உன் தகப்பனையும் தாயையும் கனம்பண் ணுவாயாக" என்று மோசேக்குக் கல்லின்மேல் எழுதிக்கொடுக் கப்பட்ட பிரமாணமானது, அக்காலத்தில் அவர்கள் இருதய மாகிய பலகையின்மேல் எழுதப்பட்டிருந்தபடியால் அப்ப டிச் செய்தார்கள்.

நோவாமுனிவர் வெறிதெளிந்து விழித்தபோது, நடந்த சமாசாரங்களையெல்லாம் கேள்விப்பட்டு தன்னைக் கனவீனப் படுத்தத் துணிந்த கானான் சபிக்கப்பட்டவன், அவன் தன் சகோதரரிடத்தில் அடிமைக்கு அடிமையாய் இருப்பான் என்று சாபங்கூறினார். அவர் மதுபானப் பிரியனாயிருந்து அதைக் குடித்து அதினாலே ஸ்மரணை தப்பிக்கிடந்தால் இப்படிச் சபித்திருக்கமாட்டார். தன் மனமே தன்னைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதால் சும்மாய் இருந்திருக்கலாம். இந்தச் சாபம் கானா னையும் அவன் குடும்பத்தையும் இந்நாளிலும் பிடித்திருக்கிறது. அவனுடைய சந்ததியிலிருந்து தோன்றின ஆப்பிரிக்காவின் குடிகள் இந்நாட்களிலும் அடிமைகளாக விற்கப்பட்டு மற்ற வர்களுக்குத் தொண்டு செய்துவருகிறார்கள்.

சேமும் யாப்பேத்தும் தங்கள் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அவர் சேமை நோக்கி: “சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; கானான் அவனுக்கு அடிமையாய் இருப்பான்” என்று சொல்லி ஆசீர்வதித்தார். இந்தச் சேமுடைய சந்ததியிலேதான் மேசியாவாகிய தேவனாகிய கர்த்தர் தோன்றினார். “அவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்துக்கும் மேலான தேவனானவர், ஆமென்.” ஆசியாவிலுள்ள தேசங்களில் வாசஞ்செய்கிற ஜனங்கள் இவருடைய சந்ததியாரென்று நினைக்கப்படுகிறது.

அதன்பின்பு முனிவர் யாப்பேத்தை நோக்கி: “யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார், அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான், கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்” என்று சொன்னார். இந்த வாக்கின்படியே யாப்பேத்தின் சந்ததியிலிருந்து தோன்றின ஐரோப்பிய ஜாதியார் அறிவிலும், நாகரீகத்திலும், ஐசுவரியத்திலும், கைபலத்திலும் மென்மேலும் விர்த்தியாகிக்கொண்டேவருகிறார்கள். இக்காலத்தில் உலக முழுவதும் அவர்களுடைய ஆளுகை பலத்துக்குள் இருக்கிறது என்று சொல்லவேண்டியது.

இந்த ஒருகுறை பிரளயமுனிவரைப்பற்றி வேதாகமத்தில் கூறப்படுவதினால் முனிவரின் பலவீனம் விளங்குகிறதைவிட வேதாகமத்தின் உண்மைத்தனம் வெளிப்படுகிறது என்னலாம். அதுதான் பக்தரின் நன்மையையும் தீமையையும் வெளிப்படுத்தும் உரைகல்போல் இருக்கிறது.

ஜலப்பிரளயத்திற்குப் பின்பு நோவா முந்நூற்று ஐம்பது வருஷம் உயிரோடிருந்தார். இந்த முந்நூற்று ஐம்பது வருஷமும் அவர் தமது பிள்ளைகளை தேவபக்தியில் நிலைநிறுத்த முயன்று அவர்களுடைய சீர்ப்படுதலுக்கேற்ற பல பிரயத்தனங்களைச் செய்திருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை.* அவர்

* இக்காலத்தில் நோவாமுனி தமக்குப் பின்னடியார் கைக்கொள்ளும்படியான ஏழு கட்டளைகளைக் கொடுத்தார் என்று யூதருக்குள் பாரம்பரையாக இறங்கிவந்து அவர்களால் அதிக விசுவாசத்தோடு ஒப்புக்கொள்ளப்பட்டுவந்தன. அக்கட்டளைகளாவன: 1. விக்கிரகாராதனை செய்யக்கூடாது; 2. தேவனை கனவீனம்பண்ணலாகாது; 3. கொலைசெய்யக்கூடாது; 4. காமவிகாரம் ஆகாது; 5. கள்ளம் கபடம் ஆகாது; 6. மேலானவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கவேண்டும்; 7. உயிரோடிருக்கும் எந்த மாம்சத்தையும் புசிக்கலாகாது.



ஒருவேளை பாபேலின் கோபுரம் கட்டப்பட்டதையும் பாஷை தாறுமாறானதையும் தன் ஜீவகாலத்திலேயே கண்டு மனநோவு அடைந்திருக்கலாம். சபிக்கப்பட்ட கானான் இந்த ஆகாமியங்களுக்கு வழி திறந்திருக்கலாம்.

கடைசியாக முனிவருடைய சரித்திரம், “நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பதுவருஷம், அவன் மரித்தான்” என்ற சிறு வாசகத்தோடு முடிகிறது. இவருடைய சரித்திரத்தினாலே மனுஷருடைய சீர்கேடு வரவர அதிகப்படுகிறதென்பதை திட்டமாய்க் காண்கிறோம். இக்காலத்து உலகத்தின் ஸ்திதியைப் பார்த்தால் நோவாவின் காலத்தைவிட சீராயிருக்கிறது என்று சொல்லக்கூடாததாய் இருக்கிறது. தேவனுடைய புத்திரராகிய கிறிஸ்தவர்கள்முதலாய் தங்கள் அழைப்புக்கு அபாத்திரராய் நடந்துகொள்ளுகிறதைப் பார்க்கும்போது எவ்வளவு துக்கப்படவேண்டியதாயிருக்கிறது. நாம் தினந்தோறும் விழிப்புள்ளவர்களாயிராவிட்டால் பக்திநெறியிலிருந்து விழுந்துவிடுவோம். ஆதலால் தன்னை நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடி பார்க்கக்கடவன்.

## ABRAHAM.

## விசுவாச முனிவர்.

(ஆபிரகாம்.)

இப்பொழுது நாம் வாசிக்கப்போகும் சரித்திரமானது பல முகாந்தரங்களையிட்டு விசேஷமான ஒரு சரித்திரம் என்று சொல்லவேண்டியது. ஆபிரகாம் என்பவர் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் பேர்போனவராய் விளங்கினார். மேலும் ஆதாம்முனிவர் பழைய உலகத்துக்கும், நோவாமுனிவர் புது உலகத்துக்கும், முதல் மனுஷரும் தலைவருமாயிருந்தார்கள். ஆபிராம்முனிவரோ விசுவாசிகளுக்கும் தேவனுடைய பிள்ளைகளடங்கிய திருச்சபைக்கும் ஆதிமனுஷனாக இருக்கிறார். இவருடைய தேவதாபக்தியையும், விசுவாசத்தையுந்தொட்டு இவர் “தேவனுடைய சிநேகிதன் என்னப்பட்டார்” (யாக். 2. 23.). இனி இவருடைய வரலாற்றைச் சற்று விபரமாய் ஆராய்வோமாக.

## நாடுவிடு பருவம்.

நம்முடைய தேசத்துக்கு மேற்கே மெசொப்பொத்தாமியா என்று ஒரு தேசமிருக்கிறது. அது நீர்வளமும் நிலவளமும் பொருந்திய ஒரு நாடாயிருந்தது. இந்த நாட்டைச்சுற்றிலும் திகிரிஸ், ஐபிராத்து என்னும் இரண்டு நதிகள் ஓடினது. இந்த நாட்டுக்குள்ளேயே பழைய ஏதேன் தோட்டமும் இருந்தது என்று சொல்லவேண்டியது. மெசொப்பொத்தாமியா என்றதற்கு நதிக்கிடைதேசம் என்று அருத்தம். இதில் ஆடுமாடுகளை மிகுதியாய் உடைய ஒருவர் இருந்தார். அவருக்குத் தேராக்கு என்று பேர். இவரைக் கடவுள் புத்திரசந்தானத்தினாலும் ஆசீர்வதித்திருந்தார். அவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள் இருந்தார்கள்; அவர்களுக்கு நாகோர், ஆரான், ஆபிராம் என்று பேர்.

இவர் காலத்திலிருந்த மனுமக்கள் அவ்வளவு நல்லவர்களென்று சொல்லக்கூடாது. தேராக் என்பவர் நோவாமுனிவர் மரணமடையுமுன்னே இரண்டொரு பிள்ளைகளுக்குத் தகப்பனாயிருந்தார். அவ்வளவு காலத்துக்குள் பூமியில் ஆகாமியம் பெருகிவிட்டது. பிரளயகாலத்துக்கு அடுத்தகாலத்தில் பிரபலமாய் விளங்கின முதலாம் ஆகாமியம் செல்வச்செருக்கும் பெருமையுமே. பழைய உலகத்தாருடைய சொத்துக்கள் அனைத்தையும் புது உலகத்தின் குடிகளாகிய சேம், காம், யாப்பேத் என்னும் மூன்று வீட்டாரும் பங்கிட்டு அனுபவித்ததுதான் இந்தப் பெருமைக்குக் காரணம் என்று நினைக்கலாம். பிரளயகாலத்துக்குப்பின் பூமியானது தன் சாபத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருந்ததால் திரண்டபலனைக் கொடுத்தது. அந்தப் பலனை அனுபவிக்க ஆட்கள் கொஞ்சமாய் இருந்ததால் ஆஸ்திகள் பெருகி அதோடு பெருமையும் ஆணவமும் வளர்ந்துவிட்டது என்றும் சொல்லவேண்டியது. இந்த ஆணவத்தினாலும் செல்வச் செருக்கினாலும் அவர்கள் நிரம்பினதினாலேதான் பாபேல் என்னும் கோபுரத்தைக் கட்டித் தங்களுக்கு ஒரு பேர் உண்டாக்கவேண்டுமென்று ஆலோசித்திருக்கிறார்கள் என்று அனுமானிக்கலாம். மேலும் பிரளயகாலத்துக்குப் பின்பு தேவன் வானவில்லின் மூலமாய் மனுஷரோடு உடன்படிக்கைபண்ணி, இனி நான் முன்போல உலகத்தை ஜலப்பிரளயத்தினால் அழிப்பதில்லையென்று வாக்குத்தத்தம்பண்ணின விஷயமானது, அவர்களைத் தங்கள் இஷ்டம்போல ஆகாமியத்துக்கு ஏவிவிடும் யத்தனமாக சாத்தானால் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம். இது மனுஷருடைய இயல்பான சுபாவமாகவே



இருக்கிறது. தேவதயவு நம்மேல் எவ்வளவுக்கு பெருகுகிறதோ அவ்வளவுக்கு நாம் தாழ்மையும், கீழ்ப்படிதலுமாயிருக்கிறதற்குப் பதிலாகக் கெட்டுப்போகிறோம். "தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல் அவருடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?" என்று பரிசுத்த பவுல் சொன்ன வாசகம் எக்காலத்துக்கும் அடுத்த பொதுவாசகம் போலிருக்கிறது.

செல்வச்செருக்கும் பெருமையும் எப்போது உண்டாகுமோ அப்போதே தேவதாபக்தி குறையும் என்பது நிசம்; ஆதலால் அதற்கு அடுத்தகாலத்தில் விக்கிரகாராதனை இவ்வுலகில் தலைப்பட்டது. இந்த விக்கிரகாராதனைக்கு ஆதாரமாயிருந்த ஏதுக்கள் பலது என்பதைப்பற்றி பலரும் பலவிதமாய் அபிப்பிராயப்படுவதுண்டு. சிலர் ஏதேனின் வாசலில் வைக்கப்பட்டிருந்த கேருபீன்கள் என்றும், வேறு சிலர் பேழை என்றும், வேறு சிலர் வானவில் என்றும், வேறு சிலர் நோவாமுனிவரைப்பற்றிப் பின்சந்ததியாருக்கு இருந்த உயர்ந்த மதிப்பே காரணமென்றும் பலவாறாகச் சொல்லுகிறதுண்டு. மற்றவர்கள் அதைப்பற்றி என்ன சொன்னபோதிலும் நாம் ஒரே வாசகமாய்ச் சொன்னால் "தேவனைத் தங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்காததே" சகலவிதமான விக்கிரகாராதனைக்கும் ஆரம்பம் என்று சொல்லவேண்டியது.

மனுமக்கள் எவ்வளவு சீர்கெட்டுப்போனாலும் அவர்களுக்குள் எவ்வளவு ஆகாமியம் பரம்பினபோதிலும், தேவன் லோக இரட்சகரைப்பற்றி ஏதேனின் சோலைக்குள் சொன்ன வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி ஒரு சந்ததியைக் காத்துக்கொண்டேவந்தார். பிரளயகாலத்தில் அது நோவாவின் குடும்பத்திலிருந்தது; இக்காலத்திலோ அது ஆபிரகாமின் வழியாய் இறங்கிவரவேண்டியதாயிருந்தது.

ஆபிராமுனிவர் பிறந்து வெகுகாலமாக தன் முன்னோர்களைப்போல் விக்கிரகாராதனைக்காரராகவே இருந்தார். என்றாலும் அக்காலத்து விக்கிரகாராதனையை இக்காலத்தில் இத்தேசத்தில் நடந்துவரும் விக்கிரகாராதனையோடு சம்பந்தப்படுத்தவே கூடாது. அக்காலத்தார் வானஜோதிகளைமாத்திரம் தொழுதுகொண்டுவந்தார்கள்; ஆனால் நம்முடைய தேசத்தாரோ கல்லாலும், களிமண்ணாலும், வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பட்ட குரங்கையும், நாயையும், பருந்தையும், பல்லியையும், காளியையும், கூளியையும் ஆகத் தொகையாய் முப்பத்துமுக்

கோடி தேவர்களை வணங்கிவருகிறார்கள். இத்தேசத்தில் குடியிருக்கிற ஜனத்தொகையின் மொத்தம் சுமார் 25 கோடி. ஆகவே ஒவ்வொரு ஆளுக்கு சுமார் 1½ சுவாமிகளாகிறது. ஐயோ! இது எவ்வளவு விசனமான காரியம். முற்காலத்திலிருந்த ஒரு பௌஹீகதரிசி ஒரு ராஜ்யத்தைப் பார்த்து, "யூதாவே உன் பட்டணங்களின் இலக்கமும், உன் தேவர்களின் இலக்கமும் சரி" என்று சொன்னார், ஆனால் நம்முடைய தேசத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமானால்,

இந்தியாவே உன் குடிகளின் தொகைக்கு
உன் தேவர்களின் தொகை ஒன்றரைப் பங்கு

என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. நமது தேசத்தின் மாட்சிமைகள் இந்த விக்கிரகாராதனையினாலே கறைபட்டுப் போகிறது.

"ஆ! கர்த்தாவே இந்துதேசர்
கல்வியற்ற காப்பிரிகள்
பிரமர் சீனர் யூதர் கிரேக்கர்
தீவாரான துஷ்டர்கள்
மற்றெல்லாரும்
உம்மைப் போற்ற செய்திடும்."

ஜலப்பிரளயமுண்டான சுமார் முந்நூற்றைம்பது வருஷங்களுக்குள்ளாக விக்கிரகாராதனை இவ்வளவு பிரபலமாய் உலகத்தில் பிரஸ்தாபமான விஷயம் எவருக்கும் விசனத்தைக் கொடுக்கத்தக்கதுதான். முள்ளுச்செடிக்குள்ளே முல்லைமலர் தோன்றினால் எப்படியோ, அப்படி அந்த விக்கிரகாராதனைக்காரர் நடுவிலே ஆபிராம்முனிவர் இருந்தார். இவர் தம் ஜீவிய ஆரம்பத்தில் தமது முன்னோரைப்போல் விக்கிரகத் தொழும்பராகவே இருந்தார்; ஆனால் வரவர மெய்த்தேவனைப்பற்றிய அறிவை எப்படியோ அடைந்து அந்தரங்கத்தில் தேவதாபக்தனாய் இருந்தார். கடவுள்மேல் அவர் கொண்டிருந்த பக்தியை கடவுள் ஒருவர்தவிர வேறொருவரும் அறியவில்லை.

இப்படியிருக்கும் காலத்தில் மகிமையுள்ள தேவன் அவருக்குத் தரிசனையாகி, "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நானுனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என்று கட்டளையிட்டார் (அப். 7. 3.). இந்த தரிசனை ஆபிராம்முனிவருக்கு எந்தவிதமாய் அருளிச்செய்யப்பட்டதென்று தெரியாது. முற்காலத்தில் தேவன் சொப்பனங்களின் மூலமாயும், தரிசனங்களின் மூலமாயும் தமது சித்தத்தை



வெளிப்படுத்திவந்தார். இவ்விரண்டிலொருவகையாக தேவன் முனிவரை அழைத்திருக்கலாம்.

இந்த அழைப்பு அவருக்கு சொல்லமுடியாத வருத்தத்தையும் சங்கடத்தையும் கொடுத்திருக்கவேண்டியது. இக்காலத்தில் தேவன் கொடுத்த கட்டளைகள் அமைதலாக அடைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தேன்கூட்டைக் குத்திக் கலைக்கிறதுபோல் இருக்கிறதல்லவா? ஆபிராம்முனிவர் தமது தேசத்தையே விடவேண்டியதிருந்தது. இது மகா நல்ல தேசமாயிருந்தது. இதைப் போல் நிலவளமும் நீர்வளமுமுள்ள தேசம் கிடைப்பது பிரயாசை. அத்தேசம் நான் முன்சொல்லியிருக்கிறபடி இரண்டு நதிகளுக்கு நடுவே இருந்தது. இதேக்கேலின் தெள்ளூற்றும் ஐப்பிராத்தின் அருஞ்சலமும், இத்தேசத்தை செழிப்பாக்கிக் கொண்டிருந்தது. இங்குள்ள பள்ளத்தாக்குகளில் ஆபிராம் முனிவரின் ஆடுமாடுகள் நன்றாய் மேய்ந்து கொழுத்துப் பெருகிவந்தன. இப்படிப்பட்ட நல்ல தேசத்தைவிட யாருக்குத்தான் மனம்வரும். இத்தோடு முடிந்ததோ? இல்லை. தன் இனத்தையும் விடவேண்டியது என்று உத்தரவுகொடுத்தார். ஆபிராம் முனிவருக்குத் திரண்ட இனபந்துக்கள் அக்காலத்தில் இருந்தார்களென்றும், அவர்கள் அவரை நன்றாய் மதித்து கனப்படுத்தி வந்தார்கள் என்றும் தோன்றுகிறது. இந்தக் கட்டளை தன் தாயின் மடியில் பால்குடித்துக்கொண்டிருக்கிற பிள்ளையைக் கையைப் பிடித்திழுத்து இனி உன் தாயண்டை போகாதே என்று விலக்குகிறதுபோலிருக்கிறதல்லவா. அவர் தமது இனத்தாரையும் சிநேகிதரையும் அடியோடு மறக்கவேண்டியது என்று உத்தரவு கொடுக்கிறது மனுஷசுபாவத்திற்கு எவ்வளவு விரோதமாகக் காணப்படுகிறது. இவ்வளவுதானா? அல்ல, அல்ல. நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்றும் உத்தரவு கொடுத்தார். அந்தத் தேசத்தின் திசை அல்லது பேரைச் சொல்லலாகாதா? அல்லது அதின் தூரத்தைச் சொல்லக்கூடாதா? அதொன்றும் சொல்லவில்லை.

இவ்விடத்தில் தேவன் கொடுக்கிற உத்தரவு நமது புத்திக்கு எவ்வளவு விபரீதமாய்க் காணப்படுகிறது. தேவன் சிநேகிக்கிறவனுக்கு இப்படியா செய்யப்படவேண்டும்? ஆம், இதுதான் தேவனுடைய முறை. உங்கள் வழிகள் என் வழிகள் அல்ல, என்வழிகளும் உங்கள் வழிகள் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். அவருடைய வழிகள் கற்பாறையிலும் வலுத்தண்ணீரிலும் உள்ளது. கர்த்தருடைய சித்தத்தை அறிந்தவன் யார்? என்ற வாசகம் உள்ளதுதான்.

நமக்கு விபரீதமாகத் தோன்றும் இக்கட்டளைகள் ஒன்றும் ஆபிராம்முனிவருக்கு விபரீதமாகத் தோன்றவில்லை; அவருடைய மனதுக்கு இவை அனைத்தும் நேர்மையும் செம்மையுமாயிருந்தன. இதற்கு முகாந்தரமென்ன? தேவன்பேரில் அவருக்கிருந்த விசுவாசமும் நம்பிக்கையுமே இக்கண்டிப்பான உத்தரவுகளை தயாள ஆலோசனைகளாக்கிவிட்டது. எபிரேயர் நிருபத்தை எழுதின ஆகமக்காரன் சொல்லுகிறபடி "விசுவாசத்தினாலே ஆபிரகாம்.......அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல்போனான்."

தேவனைச் சேருகிறதும் அவரைப் பின்பற்றுகிறதும் சின்ன காரியமல்ல, தேசத்தையும் இனத்தையும் மறக்கவேண்டியதோடு ஒரு புது இடத்தையும் நாடிப்போகவேண்டியது. இவ்விடத்தில் விளங்கிய ஆபிராம்முனிவருடைய விசுவாசத்தில் கீழ்ப்படிதல், பற்றுதல் ஆகிய இரண்டு சிறந்த லட்சணங்கள் கலந்திருக்கிறது என்று பார்க்கிறோம். தேவனுக்குக் கீழ்ப்படிகிறதும் அவர்பேரில் சார்ந்து பற்றுதலாயிருக்கிறதும் விசுவாசமாகிய விருட்சத்தின் கனிகள் என்று சொல்லலாம். இந்த விசுவாசம் வேதத்தை வாசிக்கிறதினாலாவது, தியானிக்கிறதினாலாவது தானே உண்டாகிறதில்லை; இது உன்னதத்திலிருந்து வருகிற ஒரு விசேஷித்த ஈவு. இந்த விசுவாசம் இல்லாததினாலேதான் கிறிஸ்துமார்க்கத்துக்கு வரும்படி அழைக்கப்படுகிற இந்து சினேகிதர்வர ஆசைப்பட்டும் இன்னும் வந்துசேரக் கால் எழும்பாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றையும் விட்டுவிடாமலே கிறிஸ்துமார்க்கத்தின் ஆசீர்வாதங்கள் கிடைக்கமாட்டாதா என்று ஏங்குகிறார்கள். அவர்கள் அப்படி ஏங்கி ஏங்கிச் சாகிறவர்களேயன்றி நித்தியஜீவனைக் கண்டடைகிறவர்கள் அல்ல. இதை ஒரு இந்து சிநேகிதன் வாசிக்கிறதுண்டானால், சிநேகிதனே! நான் உனக்குச் சொல்லவேண்டிய ஒரு வாசகமுண்டு. நீ விதிக்கிற நிபந்தனைகளிலே ஆத்தும ரட்சிப்பையும் தேவ சிநேகத்தையும் சம்பாதித்துக்கொள்ளலாமென்று எண்ணவேவேண்டாம். நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் ஜாதிக்கட்டுப்பாட்டையும் விட்டு கிறிஸ்துமார்க்கத்தின் நிபந்தனைகளுக்கு உட்படவேண்டியது. உனக்குப் பிரியமில்லாத நிபந்தனைகள் உன்னைத்தொட்டு மாற்றப்படமாட்டாது; அந்த நிபந்தனைகளுக்கெல்லாம் நீ அடங்கவேண்டியது.

இக்கட்டளை பிறந்தவுடனே ஆபிராம்முனிவர் ஆத்திரத்



தோடு பண்ணவேண்டிய சகல ஒழுங்குகளையும்பண்ணி புறப்பட ஆரம்பித்தார்; தம்முடைய கொடுக்கல் வாங்கலையாவது பயிர் பச்சைகளையாவது கவனிக்கவே இல்லை. தேவகட்டளைக்குக் கீழ்ப்படிகிறது மாத்திரமல்ல, உடனே கீழ்ப்படிவதுதான் ஆஸ்தியும் செல்வமும் என்றெண்ணினார் என்று சொல்லவேண்டியது. ஆபிராம்முனிவர் ஊர்விட்டுப் பேர் தெரியாத் திசையைநோக்கிப் புறப்படுகிறசெய்தி அந்த நாடெங்கும் பிரசித்தப்பட்டிருக்கலாம். ஏனெனில் இக்காலத்தைப்போல் தேசம்விட்டு தேசம்போய்விடும் வழக்கம் அக்காலத்தில் இல்லவே இல்லை. அவரவர் பிறந்த ஊரே பூலோகம் என்றும், வளர்ந்த இடமே வையகமென்றும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆதலால் அச்செய்தி அக்காலத்தாருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கவேண்டியது. மேலும் ஆபிராம்முனிவர் அவர்களுக்குள் பேர் எடுத்தவராகவும் இருந்தார். எப்படியிருந்தபோதிலும் அவ்வூராரும் இனத்தாரும் அவரைச் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வழிவிட்டனுப்பி இருக்கமாட்டார்கள். அவர்களில் சிலர் ஐயோ, பக்தன் நம்மைவிட்டுப் போகிறானே என்று அனுதாபப்பட்டபோதிலும் மிச்சமானவர்கள் பகடிபண்ணி முனிவரை மூடன் என்றும் பித்தன் என்றும் பலவாறாகத் திட்டி, இப்படிப்பட்ட ஞானபைத்தியக்காரர் நம்மைவிட்டுத் தொலைந்தால்தான் நாடுநகரமும் நளினமாய் விளங்கும் என்று சொல்லியிருக்கலாம். அது மாத்திரமோ? ஆபிராம்முனிவர் மாத்திரமல்ல அவரோடு தன் தகப்பனும், மனைவியும், மைத்துனன் லோத்தும் புறப்பட்ட விஷயமானது அவர்களுக்கு நகைப்பை உண்டாக்கியிருக்கலாம், ஊர் சிரித்தாலென்ன? உலகம் நகைத்தாலென்ன? உத்தமர் உத்தமத்திலிருந்து விலகுவார்களா? விலகார்கள். அவர்கள் பரியாசம் ஒன்றையும் அவர் கவனிக்கவுமில்லை, யோசிக்கவுமில்லை. கர்த்தருடைய கட்டளைகளைக் காப்பதையே அவர் பெரிய காரியமென்று தெரிந்துகொண்டார்.

ஆபிராம்முனிவருடைய மனதுக்கு அவருடைய தகப்பனாரும் இணங்கிக் கூடவே புறப்பட்ட விஷயம் அதிகப் புகழப்படத்தக்கதுதான். இவர் தமது மகனைப்பார்த்து, அப்பா மகனே, நான் தள்ளாத கிழவனாகிவிட்டேன், இனி எனக்குப் பிரயாணம்பண்ணி பாலைவனங்களைக் கடக்கவும், யாத்திரைபண்ணி இராத்தூக்கமற்றுப்போகவும் முடியாது. உன்னை அழைக்கிற தேவனுடைய கட்டளையின்படியே நீ பயணப்படு. நான் என் பிதாக்களின் கல்லறையிலே அடக்கம்பண்ணப்

படும்படி என்னை விட்டுவிடு என்று சொன்னாலும் சொல்லலாம். ஆனால் அப்படி அவர் சொல்லவில்லை. அவர் உடனே தமது குமாரனைப் பின்தொடர்ந்தார். தேராக்குமாத்திரமல்ல, அவரோடுகூட வந்தவர்கள் எல்லாரும் மனோற்சாகமாய் ஆபிராமைப் பின்தொடர்ந்தார்கள். ஆபிராம்முனிவர் அவர்கள் எல்லாருக்கும் தலைவரானார். விசுவாசி தன் உலக தகப்பனுக்குத் தலைவனாகிறான்.

இந்த முதலாம் அழைப்பு ஆபிராம்முனிவருக்கு மாத்திரமல்ல, தேராக்கு என்பவருக்கும் கடாட்சம் பண்ணப்பட்டதென்று நினைக்கவேண்டியதாய் இருக்கிறது. ஏனெனில் "தேராக்கு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமின் மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக்கொண்டு.............புறப்பட்டான்" என்றும் வாசிக்கிறோம் (ஆதி. 11. 34.). அவர்கள் ஊர் என்ற கல்தேயர்தேசத்தைவிட்டுக் கிழ்த்திசையாக பயணம்பண்ணி சுமார் முந்நூறுமைலுக்கு அப்பால் இருந்த காரான் என்னும் ஊருக்கு வந்தார்கள். அந்த நாடு கல்தேயர் தேசத்தைப்போலவே அவ்வளவு செழிப்பாய் இருந்தது; அது ஒரு மலையடிவாரத்திலுமிருந்தது. அதுதான் தங்க நல்ல இடமென்று அவர்கள் எல்லாரும் தாமதித்தார்கள். இவ்விதமாகக் கர்த்தர் ஆபிராம்முனிவரை விக்கிரகாராதனைக்காரர் நடுவில் இருந்து தமது சொந்தமான ஜனமாகவும் ஜாதியாகவும் பிரித்தெடுத்தார். அவ்விடத்தில் சிலகாலம் இருக்கவே முனிவருடைய பிதாவாகிய தேராக்கு இருநூற்றைந்து வயதுடையவராய் மரித்துப்போனார். தேராக்கு என்பவரின் மரணம் ஆபிராமுக்கும் அவரோடு தேசம் விட்டுவந்த எல்லாருக்கும் மிகுந்த சஞ்சலத்தைக் கொடுத்திருக்கும் என்பது மெய்.

தேராக்கு மரித்த சில காலத்துக்குள்ளாக தேவன் ஆபிராமுக்குத் திரும்பவும் தரிசனமாகி அங்கிருந்து திடீரென்று புறப்படவேண்டுமென்று கட்டளையிட்டார். இந்த இரண்டாம் அழைப்பு முதலாவதைப்போல வெறுங்கட்டளைகளாக மாத்திரமிராமல், அநேக வாக்குத்தத்தங்கள் அடங்கினதாயுமிருந்தது.

அக்கட்டளைகளாவன:

1. உன் தேசத்தை விட்டுப் புறப்படு,
2. உன் இனத்தை விட்டுப் புறப்படு,
3. உன் தகப்பன் வீட்டைவிட்டுப் புறப்படு,
4. நான் காண்பிக்கும் தேசத்துக்குப் போ



என்பதே. முந்தின அழைப்பிலே தகப்பனுடைய வீட்டை விடும்படி சொல்லவில்லை. இதினாலே தேராக்கு என்பவர் காரானுக்கு வந்து குடியேறினபின்பு அதுதான் தேவன் காண்பிக்கும் தேசமென்று எண்ணி சொந்தத்துக்கு நிலம்வாங்கி வீடு கட்டி வாழ்ந்திருக்கலாம் என்று நினைக்கத்தக்கதாய் இருக்கிறது. அது காரான் அல்ல என்பதை முனிவர் இப்பொழுது அறிந்துகொண்டார். மேலும் முதலாம் அழைப்பில் "நான் உனக்குக் காண்பிக்கிற தேசத்துக்கு வா என்று சொன்னவர் இப்போது போ" என்று உத்தரவு கொடுக்கிறார். ஆண்டவர் எப்படிச் சொன்னாலும் கீழ்ப்படிவதுதான் நமது கடமை என்று முனிவர் நினைத்து தமது பயணத்தைக் கூட்டினார். மேலும் அக்கட்டளைகளோடு முன் கேள்விப்படாத திவ்வியமான வாக்குத்தத்தங்கள் கலந்திருந்தன.

அவ்வாக்குத்தத்தங்களாவன:

1. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்.
2. உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப் படுத்துவேன், நீ ஆசீர்வாதமாயிருப்பாய்.
3. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்.
4. பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்பதே.

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் விசுவாசியின் காதுக்குள் விழும்போது அவன் கால் தாமதிக்குமோ? தள்ளாடுமோ? இவ்வாக்குத்தத்தங்கள் அவன் ஊன்றுகோல்போல் இருந்தது. பயணத்தின் தூரத்தையும், சங்கடத்தையும்பற்றிய நினைவு வரும்போதெல்லாம் இந்த வாக்குத்தத்தங்களைப்பற்றிய ஞாபகம் மனதில் சந்தோஷ ஊற்றைப் பொங்கப்பண்ணிற்று.

இந்த வருத்தமான பிரயாணங்களுக்கும், கட்டளைகளுக்கும் முனிவருடைய மனைவியாகிய சாராளும் தன் மனச்சம்மதியை சந்தோஷமாகக் கொடுத்தாள் என்பதற்கு ஐயமில்லை. அக்காலத்தில் பயணம்பண்ணுவது லேசல்ல, இக்காலத்தைப் போல நல்ல ரோட்டுகளும் புகைவண்டிகளும் அக்காலத்தில் இல்லை. வனத்தின்வழியாய் ஒட்டகம் ஏறி அநேக ஆறுகளையும் பள்ளத்தாக்குகளையும் மலைகளையும் மைதானங்களையும் கடக்கவேண்டியதாயிருந்தது. ஆபிராம்முனிவருக்கு தேவ அழைப்பினால் என்ன சம்பவிக்குமோ அதிலெல்லாம் சாரா

ளும் ஒரு பங்கை எடுத்துக்கொள்ளுகிறவளாய் விளங்கினாள். இந்த குணம் கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு இருந்தால் எவ்வளவோ நல்லது. ஸ்திரீகளே! தேவன் தமது ஊழியத்திற்கு என்று உங்கள் புருஷனை அழைத்துப் புறப்படக் கற்பிக்கும்போது நீங்கள் இந்த சாராளைப்போல் தேவசித்தத்துக்கு இணங்கி தடைபண்ணாமல் புறப்படுங்கள்.

மேலேகாட்டிய நாலு வாக்குத்தத்தங்களில் முதல் மூன்றும் ஆபிராமுக்குச் சொந்தமானதாகவும், நாலாவதானது பூமியிலுள்ள வம்சங்கள் யாவுக்கும் அடுத்ததாகவும் இருக்கிறது. "பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்பது அவன் சந்ததியிலிருந்து சர்வலோக இரட்சகராகிய மேசியா எழும்புவார் என்பதை உணர்த்தி உறுதிப்படுத்துகிறதாயிருக்கிறது. ஆ! பிதாவே, உலக இரட்சகரைப் பற்றிய திருவாக்கை நீர் ஒருதரம் அல்ல அநேகந்தரம் திரும்பவும் கூறி அடியாரை சந்தோஷிப்பிக்கிறீரே. இவ்வளவு தயவுக்கு நாங்கள் எவ்வகையில் பாத்திரர்? பூமிக்குள் இருக்கும் அக்கினிவெள்ளங்கள் வேளாவேளை பொங்கி மலைகளுக்கூடே வெடித்து பாய்கிறதுபோல, எங்கள்மேல் வைத்த நேசவெள்ளம் பரலோகத்திலிருந்து வேளாவேளை பொங்கி இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை எங்கள் மனமாகிய மலையின்மேல் பொழிகிறதென்று காண்கிறோம்.

இக்கட்டளையைக் கேட்டவுடனே முனிவர் தமது மனைவியோடு புறப்பட்டார்; லோத்தும் கூடப்போனான். ஆனால் கல்தேயாவிலிருந்து அவரோடு புறப்பட்டுவந்த ஆரான்மாத்திரம் தன் குடும்பத்தோடு காரானில் தாமதித்துக்கொண்டான். அவர்கள் காரானிலிருந்து புறப்பட்டு சீகேம்ஊர் வழியாய்ப் பயணம்பண்ணினார்கள். அவர்கள் மோரே என்னும் மைதானத்தில் தாமதித்திருக்கையில் கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி,

"உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்" என்று வாக்கருளினார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். பின்பு அவன் அவ்விடம் விட்டுப் பேர்ந்து தன்னிஷ்டம்போல பல இடங்களிலும் தங்கி காலங்கழித்துவந்தான். அதுமுதல் அவன் கானானைத் தன் சொந்ததேசம் என்றெண்ணி விசுவாசத்தினாலே பரதேசியைப்போல சஞ்சரித்துக் கூடாரங்களில் குடியிருந்தான். ஏனெனில் தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்கள் உள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.



ஆபிராம்முனிவர் எங்கேபோய் கூடாரமடித்து வாசம்பண்ணினாரோ அங்கெல்லாம் பலிபீடங்கட்டி, தேவனை தொழுதுகொண்டார் என்று வாசிக்கிறோம். இந்த பக்தி ஆபிரகாம் விசுவாசித்தவனை விசுவாசிக்கிற எல்லா விசுவாசிகளுக்கும் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்!

## பஞ்சகால பருவம்.

ஆபிராம்முனிவர் கானான்தேசத்திற்குப் போய்க் குடியேறின சில காலத்துக்குள்ளாக அத்தேசத்தில் கொடிய பஞ்சகாலம் ஒன்று உண்டாயிற்று. இது அவருக்கு மட்டற்ற மனநோவைக் கொடுத்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இவர் யாரிடத்தில்போய் அண்டுவார், யார்தான் இந்தப் புதுகுடியானவனுக்கு உதவி[illegible]வார்கள்! அவரவர் தன்தன் குடும்பத்தைக் காப்பாற்றிக்[illegible]ள்வதே இக்காலத்தில் கஷ்டமாச்சுதே. மற்றவர்களைக் காப்பாற்றுவதெப்படி? மேலும் ஆபிராம்முனிவர் தனிமையாய் அல்ல பெரிய சமுசாரத்தையுடையவராயிருந்தார். என்றாலும் இந்த துன்பகாலத்தில் தன்னைச் சுயதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையோடு இருந்தார். பஞ்சத்தைக் கண்டவுடனே அவருடைய பக்தி பறந்துபோகவுமில்லை; மலிவைக் கண்டவுடனே அவருடைய மனம் மாறவுமில்லை. தேவன் தம்முடைய பிள்ளைகளை அநேக உபத்திரவங்களின் மூலமாய்ப் பூரணப்படுத்துகிறார் என்பதை பக்தர் பகுத்தறிந்துகொள்ளமாட்டார்களா?

பஞ்சம் வரவர அதிகரித்தது. பஞ்சம் அதிகரிக்க அதிகரிக்க அவர் தமது பரிவாரங்களோடு தென்திசையை நோக்கினார். ஏனெனில் தெற்கே போகப்போக ஆடுமாடுகளுக்குப் புல்லும், ஆட்களுக்கு தானியமும் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் கிடைக்கக்கூடியதாய் இருந்தது. அதுவும் சிலகாலத்திற்குள்ளாக மாறிப்போயிற்று; பச்சையெல்லாம் பட்டது; பயிரெல்லாம் காய்ந்தது; மானுமாரிக் குளங்கள் சோனுமாரி இல்லாமல் கானலாய்ப் போயிற்று. மனுஷரும் மாடாடுகளும் மாண்டன. ஆதலால் இனி நாம் என்னசெய்யலாமென்று கலங்கித் தவித்தார்.

கடைசியாக தமது இருப்பிடத்துக்குச் சமீபமாய் எகிப்து என்று ஒரு தேசம் இருக்கிறதென்று கேள்விப்பட்டு அங்கே போய் பஞ்சம் பிழைக்கத் தீர்மானித்தார். அது மகா நல்ல தேசமாயும் தானியதவசங்களுக்கு ஒரு குறைச்சலுமில்லாத

நாடாயும் இருந்தது. அத்தேசத்தை நீர்ப்பாய்ச்சின நீல் என்னும் நதி மேகமடர்ந்திறங்கும் உன்னத சிகரங்களில் உற்பத்தியாகி பிரளயமாய்ப் புரண்டுவந்து அந்நாட்டை நீர்ப்பாய்ச்சினதால் பருவகாலமின்றி எக்காலமும் அந்நாடு செழித்திருந்தது. அவ்விடத்தில் அரசன் அரண்மனையும் பிரபுக்கள் கொலுமண்டபமும் இன்னும் அநேக மாளிகைகளும் இருந்தன. அவ்விடத்தார் ஐசுவரியத்திலும், கல்வியிலும், வல்லமையிலும் பேர் பெற்றிருந்தார்கள். அந்த நாட்டிலே பஞ்சம் பிழைக்கவேண்டுமென்ற ஆவல் முனிவருக்கு இருந்தபோதிலும் ஒரு பயமும் இருந்தது. அத்தேசத்தார் விக்கிரகாராதனைக்காரராயிருந்ததோடுகூட துன்மார்க்கராயும் இருந்தார்கள். பக்தர் பொல்லாதவர்களுக்கு பயப்படுவது வழக்கந்தான்; அப்படிப் பயப்படுவதும் சரிதான். ஏனெனில் துன்மார்க்கர் சன்மார்க்கருக்கு என்ன தீமை செய்வார்களோ யார் அறிவார்? துன்மார்க்கரைப்பற்றி பயப்படுவது நன்மைதான். அந்த பயம் இருக்குமட்டும் சன்மார்க்கன் துன்மார்க்கன் கையில் அகப்படமாட்டான். இயல்பாய் இருக்கக்கூடிய இந்த பயத்தை நீக்கும்படி முனிவர் தப்பான ஒரு முறையைக் கையாடினார். இதில் முனிவர் தமது உத்தமத்திலிருந்து தவறிவிட்டார் என்று தெளிவாய்ச் சொல்லவேண்டியதுதான்.

அவர் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது தன் மனைவி சாராயைப்பார்த்து, நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீயென்று அறிவேன்; உன் அழகை எகிப்தியர் கண்டு என்னைக் கொன்றுபோட்டு உன்னை எடுத்துக்கொள்ளுவார்கள்; ஆதலால் உன்னை என் மனைவியென்று சொல்லாமல் சகோதரியென்று சொல்லு என்றார். சாராளும் அன்பினாலே பொய்சொல்ல உடன்பட்டாள். இவ்விஷயத்தில் இருவருடைய விசுவாசமும் மாறுகிறது. முனிவர் தமது மனைவியைத் தம்மட்டில் காத்துக்கொள்ளும்படி என்ன பிரயத்தனஞ்செய்தாரோ அதுவே அவளை இழந்துபோகிறதற்கான ஏதுவாயிற்று. அவளுடைய அழகைப்பற்றி பலரும் அரசனிடம் புகழ்ந்து பேசினதால் அரசன் அவளை யாரென்று விசாரித்து அவள் ஒரு புருஷன் மனைவியாயிராமல் ஒருவனுடைய சகோதரியாய் மாத்திரம் இருக்கிறதால் தாம் அவளை விவாகம் செய்துகொள்வதாகக் கூட்டிக்கொண்டு வரச்சொன்னார். அக்காலத்தில் இப்படி அநேகம் மனைவிகளைப் படைக்கிறது பாவமாக எண்ணப்படவில்லை. ஒருவனுடைய மனைவிகளின் தொகைக்குத் தக்கதாக அவனை மகாப் பிரபு என்று மதிக்கிற காலமாய் இருந்



தது. அக்கிரமங்கள் அதிகப்படும்போது ஆகாமியமே சிறப்பாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறதுண்டு. எகிப்து அரசனாகிய பார்வோன் ஒரு புது மனைவியைச் சம்பாதித்த சந்தோஷத்தில் தன்னை வேணுமென்று மைத்துனனாக்கிக்கொண்ட புருஷனாகிய முனிவருக்கு அநேக ஆடுகளையும் மாடுகளையும் கழுதைகளையும் வேலைக்காரரையும் ஒட்டகங்களையும் நன்கொடையாகக் கொடுத்தான். பார்வோனுடைய மனதுக்கு அவைகள நன்கொடைதான்; தேவனுக்கோ அவை அனைத்தும் அவனுக்குப் போடும் அபராதமாயிருந்தது என்று சொல்லலாம். "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது" என்ற பழமொழி போல மனைவியைச் சகோதரியென்று சொன்னதால் அவளை இழந்துபோக நேரிட்டது.

அன்று முனிவர் எவ்வளவு விசனமும், வியாகுலமும் அடைந்திருப்பார் என்பதை யாராவது ஆட்சேபிக்கக்கூடுமா? அவர் உடனே கடவுளுடைய சமுகத்தைத் தேடி தமது தப்பிதத்தை அறிக்கையிட்டு, தான் சொன்ன பொய்க்கு இது தகுமான தண்டனைதான் என்று ஒத்துக்கொண்டு நீரே சகாயம் செய்யும் என்று கெஞ்சியிருப்பார் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

முனிவருடைய மனைவியினிமித்தம் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளினாலே வாதித்தார். கர்த்தாவே! நீர் உமது பிள்ளைகளைக் காக்கிறீர்; அவர்கள் விழுந்தாலும் நீர் தூக்கியெடுக்கிறீர்; அவர்களைச் சத்துருவின் கையில் ஒப்புக்கொடாதிருக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

பார்வோன் தேவச்செயல்களை உணருகிற மனுஷனாயிருந்தான்; தன் வீட்டில் நேரிட்டவாதைகள் எல்லாம் சாராளால் உண்டானதென்பதை அவன் நன்றாக உணர்ந்துகொண்டான். அப்பொழுது பார்வோன் ஆபிராம்முனிவரை அழைப்பித்து "நீ எனக்கு ஏன் இப்படி செய்தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியாமல் போனதென்ன? இவளை நீ உன் சகோதரியென்று சொன்னதென்ன? என்று கடிந்துகொண்டான். ஒருவேளை இந்த விபரங்களையெல்லாம் தேவன் சொப்பனத்தின் மூலமாய் பார்வோனுக்கு வெளிப்படுத்தியிருக்கலாம். அப்புறம் ஆபிராம் சாராளைக் கூட்டிக்கொண்டு அரசனுடைய உத்தரவின்படியே எகிப்தைவிட்டு மறுபடியும் கானானின் தென்னாடுகளில் வந்து வாசம்பண்ணினார்கள்.

தேவாசீர்வாதம் ஆபிராம்முனிவரோடிருந்ததால் அவர் உலக ஆஸ்தியில் பெருகி திரளான ஆடுமாடுகளும், வேலைக்காரர் வேலைக்காரிகளும் உடையவராயிருந்தார். அவரோடுகூட வந்த லோத்தும் தன்மட்டில் ஆடு மாடுகளுடைய சீமானானான். இவ்விருவருடைய ஆடு மாடுகள் திரளாயிருந்தபடியால் மேய்ச்சல் ஸ்தலத்தைப்பற்றி இருபட்சத்து மேய்ப்பருக்குள்ளும் அடிக்கடி வாக்குவாதமுண்டானதால், இருவரும் ஒரோர் திசைக்குத் திரும்பிப்போய் வாசம்பண்ணினார்கள். லோத்து சோதோமின் திசைகளில்போய் குடியேறினார்.

லோத்து முனிவரைவிட்டுப் பிரிந்தபிற்பாடு தேவன் மறுபடியும் ஒருதரம் முனிவருக்குத் தரிசனமாகி: 1. நீ பார்க்கிற இந்தத்தேசம் முழுமையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் கொடுப்பேன், 2. உன் சந்ததியை பூமியின் தூளைப்போல் பெருகப்பண்ணுவேன் என்றும் வாக்குக் கொடுத்தார். இதிலே நாம் கவனிக்கவேண்டிய ஒரு குறிப்பு உண்டு. முனிவரோடுவந்த ஆள்கள் குறையக் குறைய அவர்மேல் கூறப்படும் ஆசீர்வாதங்கள் அதிகப்படுகின்றன. தேவன் நமக்கென்று விசேஷித்து வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை நாம் தனிப்படும்பொழுதுதான் நிறைவேற்ற சித்தமுடையவராய் இருக்கலாம்; ஆதலால் நாம் தேவ நடத்துதல்களின்படிக்கும் சித்தத்தின்படிக்கும் பிரிந்து தனிப்படுவதற்காக மனச்சோர்வடையக்கூடாது. அவருடைய நாமத்தின் மகிமைக்கென்று நம்மை நாம் பிரித்து தனிமைப்படுத்திக்கொள்ளாமலிருந்தால் அவர் நமக்கென்று வைத்திருக்கும் ஆசீர்வாதங்கள் அநேகத்தை இழந்துபோக நேரிடலாம். அதன்பின்பு ஆபிராம்முனிவர் தமது கூடாரத்தைப் பேர்த்து மம்ரே என்ற மைதானத்தில் வந்து வசித்தார்.

மம்ரே என்ற இடத்தை அடுத்து வேறு இரண்டு பிரபுக்களும் இருந்தார்கள். அவர்களுக்கும் ஆபிராமைப்போல ஆடு மாடுகளும் வேலைக்காரரும் திரளாய் இருந்தார்கள். ஆபிராமோடு கர்த்தர் இருக்கிறார் என்பதை அறிந்த அவர்கள் அவனுடைய சிநேகத்தை நாடி, ஒருவருக்கொருவர் ஆதரவும் துணையுமாய் இருக்கவேண்டுமென்பதாக உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். அதுமுதல் முனிவர் ஆறுதலோடு தமது காலத்தைக் கழித்தார். தேவனுடைய பிள்ளைகள் தங்கள் உத்தமத்தில் நிலைத்திருப்பது மெய்யானால் உலகத்தார் அவர்களுக்கு பயந்திருப்பார்கள் என்பது உண்மைதான். ஆபிராம்முனிவருடைய பக்திவிநயமும் விசுவாசமுமே மற்றவர்கள் அவருடன் ஐக்கிய



மாயிருப்போம் என்று உடன்படிக்கை பண்ணிக்கொள்ள ஏதுவாயிற்று. முன்னே எகிப்து முழுவதும் அவருக்கு பயந்து தங்கள் தேசத்திலிருந்து மரியாதையோடும் வெகுமதிகளோடும் அனுப்பினது, இப்போது மம்ரே அவரைப்பற்றிய பயத்தை உடையதாயிருந்தது.

முனிவர் மம்ரேயில் மனமகிழ்ச்சியோடே காலங்கழித்த நாட்களில் அத்திசையில் ஒரு பெரிய யுத்தமுண்டாயிற்று. முனிவரே அந்த யுத்தத்தில் தளகர்த்தனாயிருந்து எதிரிகளை மடக்கி தமது பாகத்துக்கு வெற்றியைச் சம்பாதித்தார். அதின் வரலாறுகளை லோத்தென்பவன் சரித்திரத்தில் விபரமாய்ச் சொல்லுவோம். இதுதான் முனிவர் மனுஷருக்குமுன்பாக பேர்பிரஸ்தாபமடையும் முதலாம் சமயமாய் இருந்தது. அயல்நாட்டிலிருந்து தனிமையாய் வந்து காலங்கழிக்கிறவர் சில காலத்திற்குள்ளாக தளகர்த்தனாகி தலைமுறைதத்துவமாய் அரசுபுரிந்த மன்னரை மடக்கிவிடுகிறது சின்ன காரியமா? முனிவருடைய சந்ததியார் அத்தேசத்திலே யுத்தசந்நத்தராகி ஜாதிகளை அடக்கி செங்கோல்செலுத்துவார்கள் என்பதை இது அந்தரங்கமாய் உணர்த்தும் அடையாளமாயிருந்தது என்று சொல்லலாம். முனிவர் ஜெயகோலமாய்த் திரும்பிவரும்போது அவ்விடத்து ராஜாக்கள் அவருக்கு எதிர்கொண்டுபோய் மங்களம் கூறினார்கள். கர்த்தர்மேல் பற்றுதலாயிருக்கிற மனுஷன் இவ்வண்ணமாய் ஆசீர்வதிக்கப்படுகிறான். ஆபிராம் தேவனால் விசேஷித்த வகையாய் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது போலும், அவருடைய விசேஷித்த பாதுகாப்புக்குள் இருப்பதுபோலும் அத்திசை அதிபதிகளும் அரசரும் எண்ணி, ஒன்றுகூடி அவருக்கு மரியாதைசெய்யும்படியாக எதிர்கொண்டு போயிருக்கிறார்கள். அவர்களில் மெல்கிசேதேக்கு என்பவர் முக்கியமானவர். இவர் சாலேமின் இராசனும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தார். பலிசெலுத்தும் வழக்கத்தைப்பற்றி நாம் ஆதிமுதல் தொடர்ச்சியாக அறிகிறதாயிருந்தாலும் ஆசாரிய ஊழியத்தைப்பற்றி இவ்விடத்தில்தான் முதலாவது வாசிக்கிறோம். இவ்வூழியங்கள் ஆதியில் அந்தந்த குடும்பத்தலைவரால் நிறைவேற்றப்பட்டுவந்தது. இந்த மெல்கிசேதேக்கு என்பவர் அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து முனிவரை ஆசீர்வதித்து தேவனை ஸ்தோத்திரித்தார். தேவன் தமது தாசரை மேன்மேலும் ஆசீர்வதிக்கிறார். மெல்கிசேதேக்கு முனிவருக்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்த விஷயமானது ஆபிராமுடைய சந்ததியார் சுதந்தரமாக அனுப

விக்கும் கானான்தேசத்து நன்மைகளின் அச்சாரமாயும், உன்னதமான தேவனுடைய ஆசிர்வாதங்களின் அத்தாட்சியாயும் இருந்ததென்று சொல்லவேண்டியது. அப்படியே மகா பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து தமது சரீரத்துக்கும் ரத்தத்துக்கும் ஐக்கியப்படுதலாயும் நமது பரமசுதந்தர பாக்கியங்களின் அச்சாரமாயும் அப்பத்தையும் திராட்சரசத்தையும் தமது பிள்ளைகளுக்குரிய திவ்விய நியமமாக ஸ்தாபித்தார். இந்த பரிசுத்த நினைவுகூறுதலின் சாக்கிரமெந்தின் மூலமாய் நம்மைத் தம்மோடு ஐக்கியமாக்கிக்கொண்ட இயேசு சுவாமிக்கு எந்நாளும் ஸ்தோத்திரமுண்டாவதாக.

## புத்திரசந்தான பருவம்.

இந்தக் காரியங்கள் சம்பவித்தபிற்பாடு ஒருநாள் தேவன் மறுபடியும் அவனுக்குத் தரிசனமாகி அவனை இன்னும் ஆசிர்வதிக்கச் சித்தமானார். தேவதரிசனையைப் பெற்றதிலும் அவருடைய ஆசிர்வாதத்துக்குப் பங்கானதிலும் ஆபிராமுக்கு மிஞ்சின ஆதாமின் மகன் ஒருவனுமிருந்ததில்லை. அத்தரிசனையை அவன் பெற்றது இராக்காலமாயிருந்தது. அக்காலத்தில் நமக்கு வெளிப்படுத்தப்படாத ஏதோ கவலையும் கலக்கமும் பயமும் முனிவருக்கு உண்டாயிருக்குமென்று அநுமானிக்கவேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் அவருக்குத் தரிசனமாகிய தேவன்,

ஆபிராமே! பயப்படாதே,
நான் உனக்குக் கேடகமும்
உனக்குப் பெரிய பலனுமாயிருக்கிறேன்

என்று திருவுளம்பற்றினார். இந்தத் தரிசனையின் நிச்சயம் அப்போது நடந்த சம்பாஷணையினால் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆபிராமின் கவலையும் கலக்கமும் தன்னையும் தற்காலத்தையும் பற்றினதாயிராமல், பின்சந்ததியையும் பிற்காலத்தையும் பற்றினதாய் இருந்தது என்று தோன்றுகிறது. அந்தத் தரிசனையில் முனிவர் தேவனை நோக்கி: ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக் கர்த்தனாய் இருக்கிறானே; தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டில் பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாயிருக்கிறான் என்று சொன்னான். இப்படி முனிவர் ஜெபிப்பதற்கு முகாந்தரம் இருக்க



லாம். ஒருவேளை முனிவர் வீட்டிலே பிறந்து வளர்ந்த ஒரு அடிமையின் குமாரனாகிய எலியேசர் தன் எசமானும் எசமாட்டியும் பாராட்டின பட்சத்தால் கர்வங்கொண்டு சுயாதீனமாய்ச் சில காரியங்களைச் செய்யத் தலைப்பட்டதால் அவர்கள் மனம் நொந்து இருக்கலாம்; அல்லது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தங்களுடைய இடுப்பிலிருந்தல்ல எப்படியாவது தங்கள் பண்ணைக்குள்ளிருந்து எழும்புவதால் நிறைவேற்றப்படலாம் என்று எண்ணியிருக்கலாம். எவ்விதமாக அவர்கள் எண்ணினாலும் அது தப்பிதந்தான்.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்குண்டாகி "இவன்" அதாவது எலியேசர் "உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாய் இருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான்" என்று சொன்னதுமன்றி, அவனை வெளியே அழைத்து "நீ வானத்தை அண்ணாந்து பார், அதோ காணும் நட்சத்திரங்களை எண்ண உன்னால் கூடுமானால் அவைகளை எண்ணு. உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" என்றார். அப்படியே ஆவதாக என்று முனிவர் முழுமனதோடு விசுவாசித்தார். அதை தேவன் அவருக்கு நீதியாக எண்ணினார்; அதோடு அத்தேசசுதந்தரமும் அவருக்கு என்பதை தேவன் மறுபடியும் வாக்குத்தத்தம்பண்ணினார். அந்த வாக்குத்தத்தத்தை ஒரு உடன்படிக்கையின் அடையாளத்தின் மூலமாய் உறுதிப்படுத்தவும் சித்தமானார். தேவன் சிலதரம் தமது உத்தமத்துக்குத் தக்கதாக மாத்திரமல்ல, மனுஷருடைய பயத்துக்கும் சந்தேகத்துக்கும் தக்கதாக தமது வாக்கை அவர்களுக்கு அடையாளங்களினாலே நிச்சயப்படுத்துகிறார். அந்த அடையாளங்கள் மனுஷனுடைய பலவீனத்தையும் சந்தேகத்தையும் காட்டுகிறதாயிருக்கிறதோடு, அவைகளை நீக்கி நிலைநிறுத்தும் ஏதுக்களாயும் இருக்கின்றன என்று உணர்ந்துகொள்ளவேண்டியது.

முனிவர் ஆண்டவரை நோக்கி, இதைச் சுதந்தரித்துக்கொள்வதை எதினாலே அறிவேன் என்று கேட்டபோது, கடவுள் கிருபையாய் அவரை நோக்கி, ஒவ்வொன்றும் மூன்று வயதான ஒரு கிடாரியையும், ஒரு வெள்ளாட்டையும், ஒரு செம்மறியாட்டையும் கொண்டுவருகிறதோடு ஒரு காட்டுப்புறாவையும் பலியிடுவாயானால் அதின் நடுவில் நாம் நமது உடன்படிக்கையை உறுதிப்படுத்துவோம் என்று திருவுளம்பற்றினார். அந்தப்படியே முனிவர் ஆயத்தப்படுத்தி கிடாரியையும் ஆடுகளையும் இரண்டு இரண்டாகப் பிளந்து மத்தியில் ஆள்நடக்கும் இடம் அளவு விலகி பிளந்த அந்தப் பாகங்களை எதிருக்கெதிராக வரி

சைப்படுத்தி தேவதரிசனைக்குக் காத்திருந்தான். அவன் காத்திருந்து வெகு நேரமாயிற்று, அவன் கண்ணும் பூத்துப்போயிற்று. ஆதலால் அப்படியே மயங்கி சோர்வடைந்து அயர்ந்த நித்திரைபோனான். அந்த நித்திரையிலே திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொள்ளுகிறதைப்போல் கண்டான். தேவனும் அவனுக்குத் தரிசனையாகி அவனுடைய பின்சந்ததியாருக்குச் சம்பவிப்பதெல்லாவற்றையும் தீர்க்கதரிசனமாகக் கூறினார். அத்தீர்க்கதரிசனங்களாவன:

1. உன் சந்ததியார் அந்நியதேசத்தில் பரதேசிகளாயிருப்பார்கள்;
2. உன் சந்ததியார் அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள்.
3. அவர்களைச் சேவிக்குங்காலம் நானூறுவருஷம்;
4. நாலாம் தலைமுறையில் அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்பவும் வருவார்கள்

என்பதே. பிள்ளையும் கொள்ளியும் இல்லாத கிழமுனிவருக்கு இதெல்லாம் எப்படியிருக்கும்? அவர் இவையெல்லாம் சம்பவிப்பது நிசம் என்று விசுவாசித்தார். முனிவருடைய பின்சந்ததியின் உபத்திரவங்களை தேவன் சொன்னதோடு 1. அவர்களை உபத்திரவப்படுத்துகிறவர்களைத் தண்டிப்பேன் என்றும், 2. அவர்கள் திரண்ட செல்வத்தோடே திரும்புவார்கள் என்றும் சொன்னார். மேலும் முனிவருடைய பிற்காரியம் அப்போதே அறிவிக்கப்பட்டது.

1. நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்,
2. நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய்

என்றும் சொன்னார். தன் முடிவின் பாக்கியத்தைப்பற்றிக் கேட்ட முனிவருக்கு மட்டற்ற மனமகிழ்ச்சியுண்டாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இவை அனைத்துக்கும் அத்தாட்சியாக சூரியன் அஸ்தமித்துக் காரிருள் உண்டானபின்பு இதோ, புகைகிற சூளையும் அத்துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிச்சுவாலையும் தோன்றின. இவ்வண்ணமாய் தேவதரிசனை ஆபிராம்முனிவருக்குக் கிடைத்தது.

கிருபையுள்ள தேவனே! அடியானுக்கும் உமது திருத்தரிசனை கிட்டாதா? என் ஆத்துமா வாஞ்சிக்கும் தேவனே! உம்மைத் தரிசிக்கும்படி நான் செய்யவேண்டியது இன்னதென்று



சொல்லுமேன்! ஆபிராம்முனிவர் செய்ததுபோல நான் கடாக்களையும் கிடாரிகளையும் அல்ல, இதோ என் இருதயத்தை இரண்டாகக் கிழித்து, அதை நொறுக்கி உமக்குமுன் படைக்கிறேன். தயவாய் அதனூடே நடந்துவாரும். அதின் மத்தியில் பாவமன்னிப்பின் தீபஜுவாலை கடந்துபோவதாக. என் உள்ளம் வானத்து அக்கினியாகிய தெய்வீக அன்பால் கொளுத்தப்பட்டு புகைவதாக. அதின் மத்தியினின்று என் பாவ அடிமைத்தனத்தின் வரலாறுகளைக் கூறும். என் ஆவி கேட்டுக் கலங்கி மயங்கி அயர்ந்து கிடக்கட்டும். பரம கானானைச் சுதந்தரிக்கும்படி உன்னைப் பாவலோகத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே என்ற வாசகத்தை என் ஆத்துமா கேட்டுக் களிப்பதாக.

என் நெஞ்சை சுவாமி உமக்குமுன்
வெட்டிப்பிளந்து படைக்கிறேன்
நீர் அத்துண்டத்தின் மத்தி வந்து
ஜுவாலையாய் நின்றென்னோடே பேசும்.

நெஞ்சே உன் மத்தியில் துன்பதுக்க ஜுவாலையும், சாவு தாழ்வின் ஜுவாலையும் பலதரம் கடந்துபோனதுண்டே! ஆனால் பாவத்தைப் பரிகரிக்கும் இரட்சண்ய ஜுவாலையும் பாவமன்னிப்பையருளும் கிருபையின் சுவாலையும் கடந்துபோனதுண்டா? நசரேயனாகிய இயேசுவே! பாவத்தால் நசல்கொண்ட என் நெஞ்சைப் பச்சாத்தாபத்தால் கிழித்து, இதோ படைத்து உமது சமுகத்துக்குக் காத்திருக்கிறேன். நீர் உன்னதத்திலிருந்திரங்கி உமது அடியானுடைய நெஞ்சத்தில் கடந்துபோவீராக. "நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்" என்ற சத்தத்தை என் உள்ளம் கேட்டுத் துள்ளுவதாக.

ஆண்டவர் ஆபிராம்முனிவருடைய பலியை ஏற்றுக்கொண்டு முன்சொன்ன தீர்க்கதரிசனங்களையும் வாக்குத்தத்தங்களையும் கூறினதோடு, அவரோடு இந்தப் பலியின்மேல் உடன்படிக்கையும்பண்ணி, அவன் கானானில் சுதந்தரிக்கும் தேசத்துக்கு எல்லையையும் குறிப்பித்தார். விசுவாசத்தினாலே ஆபிராமின் பிள்ளைகளாகிற எல்லாப் பக்தருக்கும் எல்லையில்லா மோட்சலோகத்தை அவர் ஆயத்தம்பண்ணியிருக்கிறார். அல்லேலூயா!

உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் என்ற திருவாக்கு முனிவர் மனதிலும் அவருடைய மனைவிமனதிலும் வைரத்திலே வெட்டின எழுத்துப்போல் அழியாமல் இருந்தது. அவ்விருவரும் திங்களோடு திங்களாய்ப்பார்த்தும் ஒன்றையும் காணோம். பிள்ளைப்பாக்கியம் அற்றிருப்பது அவ்விடங்களில் மகா தாழ்

வாய் எண்ணப்பட்டது. புத்திரசந்தானம் இல்லாதவர்கள் கனவீனம் பண்ணப்பட்டார்கள். இதில் முனிவரைவிட அவர் மனைவியே ஆத்திரப்பட்டாள். அவள் தேவனுடைய காலங்கள் தன் கணக்கின்படியே நொடி, நிமிஷம், மணி, நாள், வாரம், மாதம், வருஷமாக இருக்கிறதென்று நினைத்தாள்போல் தோன்றுகிறது. மனுஷருடைய ஆயிரம்வருஷம் தேவனுக்கு நேற்றுக்கழிந்த நாளும் இராச்சாமமும்போலிருக்கிறது என்பதை சாராய் கவனிக்கவில்லை. வருஷங்கள் செல்லச் செல்ல வாக்குத்தத்தம் அபத்தமாகிப்போயிற்று என்று அவர்கள் எண்ணினார்கள்.

தேவன் புத்திரசந்தான வாக்குத்தத்தம்பண்ணி சுமார் பதினைந்து வருஷமாகியும் இன்னும் ஒன்றையும் காணோமே என்று சாராய் ஆத்திரப்பட்டு, தன் அடிமைப்பெண்ணை தன் கணவனுக்கு மனைவியாக ஒப்புக்கொடுத்தாள். "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு" என்ற வாசகம் நிசர்தான். உன் கர்ப்பப்பிறப்பாய் இருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று ஆண்டவர் சொன்ன வாசகம், தன்னையும் முனிவரையும் மாத்திரம் அடுத்ததாயிராமல் முனிவரையும் வேறெந்த ஸ்திரீயையும் அடுத்ததாய் இருக்கலாமென்று அவள் எண்ணிக்கொண்டாள்போல் இருக்கிறது. அவள் தன் பெலவீனத்தையும் வயசையும் கவனித்தாளேயன்றி நீண்ட ஆயுசுள்ளவரின் பலத்தையும் அவருடைய வாக்குத்தத்தத்தின் நிச்சயத்தையும் கவனித்தாளில்லை. ஒருவேளை சாராய் என்பவள் வாக்குத்தத்தங்களை செய்வது தேவனுடைய வேலை, அவைகளை நிறைவேற்றிக்கொள்ளுவது நம்முடைய வேலை என்று தப்பாய் எண்ணியுமிருக்கலாம்.

சாராயின் தொல்லை பொறுக்கமாட்டாமல் இவ்விதமாயாகிலும் அவள் ஆவல் நிறைவேறட்டும் என்று முனிவர் எண்ணினார்போலிருக்கிறது. அக்காலத்தில் பிரபுக்களும் பெரியோர்களும் ஒன்றுக்கதிகமான மனைவிகளைப் படைக்கிறது வழக்கம். இந்த வழக்கத்தையே ஆபிராம்முனிவர் கைக்கொண்டுவந்தாலும் அதினாலே அவரைக் குற்றவாளியல்லவென்று சொல்லக்கூடாது. இந்த கெட்ட வழக்கத்தை முதலாவது இவ்வுலகத்தில் ஸ்தாபித்தவன் லாமேக் என்பவன்தான் (ஆதி. 4. 19.). அதுமுதல் ஒன்றுக்கதிமான ஸ்திரீகளை மனைவிகளாகப் படைத்துக்கொண்ட் நல்ல மனுஷராவது கெட்ட மனுஷராவது அதினாலேபட்ட அவஸ்தைகளுக்கும், நிர்ப்பாக்கியங்களுக்கும் ஒரு அளவில்லையென்று புத்திபூர்வமாய் விளங்குகிறது.

சாராய் ஆபிராமின் மடியிலே கொடுத்த அடிமைப்பெண்



ணுக்கு ஆகார் என்று பேர். அவள் எகிப்திய ஸ்திரீ. முனிவர் பஞ்சம் பிழைக்கப்போன காலத்தில் இவளை விலைக்கு வாங்கியிருக்கலாம்; அல்லது எகிப்தின் இராசா முனிவருக்கு நன்கொடையாகக் கொடுத்த வேலைக்காரிகளில் ஒருத்தியாய் இருக்கலாம். அவள் துடுக்கும், பலமும், மூர்க்கமும், கர்வமுமுள்ள ஒரு பெண்ணாய் இருந்தாள்போல் தோன்றுகிறது. அவள் கர்ப்பவதியானதுதான் தோஷம், தன் எஜமாட்டி சாராயை அவமதித்தாள். இனி தன்னை எஜமாட்டியைப்போலும் சாராயை அடிமைப்பெண்போலும் நடத்தினாள். சாராயே, உனக்கு இவ்வளவு வேண்டியதுதான். அப்போது சாராய் புருஷனண்டைபோய் அபயமிட்டு,

என் அநியாயம் உமதுமேல் சுமரும்,
என் அடிமை என்னை அற்பமாய் எண்ணுகிறாள்,
கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று தீர்ப்பார்

என்று ஓலமிட்டாள். தன் தலைமேல் தானே குப்பையை வாரிப்போட்டுக்கொண்டு ஊரெங்கும் ஓலமிட்டால் அது சரியா?

ஆபிராம் ஆகாரின் மூலமாய் உண்டாகும் வித்தையல்ல, சாராயின் மூலமாய் உண்டாகும் வம்சத்தை எதிர்பார்த்தபடியால் சாராயின் மன இஷ்டப்படி ஆகாரை நடத்த உத்தரவுபண்ணினான். அதுமுதல் தன் அடிமைப்பெண்ணுக்கு இளக்காரங்கொடாமல் அவளை நடத்தவேண்டிய பிரகாரமாய் நடத்தினாள். அதினாலே ஆகார் ஓட்டம்பிடித்தாள். "அட்டையைப்பிடித்து தொட்டிலில் கிடத்தினால் கிடக்குமா?" ஓடிப்போன அவளுக்கு ஒரு தேவதூதன் தரிசனையாகி அவளுடைய கீழ்ப்படியாமையைக் கண்டித்து மறுபடியும்போய் சாராய்க்கு வணங்கி நடக்கும்படி கட்டளையிட்டான். அந்தப்படியே அவள் திரும்பிவந்தாள். அவள் கர்ப்பத்திலிருந்த பிள்ளைக்கும் அநேக ஆசீர்வாதங்கள் கூறப்பட்டன. பக்தனைப் பற்றினதும் ஒட்டினதும் ஆசீர்வதிக்கப்படுகிறது. "பூவாலே நாறும் மணம்பெற்றது" என்ற பழமொழிபோல ஆபிராம்முனிவராலே ஆகாரும் மணம்பெற்றாள். சாராய் எழுபத்தாறு வயதாயிருக்கையில் ஆகார் ஆபிராமுக்கு ஒரு ஆண்குழந்தையைப் பெற்று தேவதூதன் சொன்னபடியே அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிட்டாள். இஸ்மவேல் என்பதற்கு "கேட்கும் கடவுள்" என்று அர்த்தமாகும்; அவன் பிறக்கும்போது ஆபிராமுக்கு எண்பத்தாறுபிராயம்.

ஆண்டவர் பலியின்மேல் உடன்படிக்கைபண்ணி தரிசனை அளித்து பின்பு சுமார் பதினைந்து வருஷமாய்க் கடவுளுடைய

பிரசன்னம் முனிவருக்குக் கிடைக்கவில்லை. முனிவருடைய எழுபத்தைந்தாம் வயதுக்கும் எண்பத்தைந்தாம் வயதுக்கும் இடையிலுள்ள சுமார் பத்துவருஷகாலத்துக்குள் ஐந்துமுறை தேவதரிசனை அவருக்குக் கிடைத்தது என்று காண்கிறோம். அவர் சாராளுடைய பேச்சைக்கேட்டு ஆகாரோடே வாழ்ந்த காலமுதல் தேவன் அவருக்குத் தரிசனமாகவில்லை. இதனாலே ஆபிராம்முனிவர் ஆகார்விஷயத்தில் நடந்துகொண்ட விஷயமானது தேவசித்தத்துக்குப் பொருந்தவில்லையென்று தெளிவாய் விளங்குகிறது. அடிக்கடி தேவதரிசனையைப் பெறும் பாக்கியத்தைப்பெற்ற முனிவர் பதினைந்துவருஷமாய் அதைப் பெறாவிட்டால் எவ்வளவு விசனமும் சஞ்சலமும் இருக்கும்! அவர் தம்முடைய தப்பிதத்தை அனேகந்தரம் அறிக்கையிட்டிருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் அதுமுதல் முனிவர்வீட்டில் இருந்த சமாதானம் குறைவுபட்டது. முனிவர் அடிக்கடி இரண்டு நாய்க்கிட்ட எலும்புபோல் இரண்டு மனைவிகளாலும் கடும் பாடுபட்டார்.

ஆண்டவர் முனிவருக்கு இரக்கஞ்செய்ய நினைத்து, அவர் தொண்ணூற்றொன்பது வயதாயிருக்கையில் மறுபடியும் தரிசனமானார். ஆண்டவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்; என்றைக்கும் கோபங்கொள்ளார். இந்தத்தடவை ஆண்டவர் முனிவரோடு பேசத்துவக்கினபோது முன்போல அன்பை மாத்திரமல்ல தமது வல்லமையையும் நீதியையும் அவர் மனதில் உணர்த்திக் காட்டும்படி "நான் சருவத்துக்கும் வல்ல தேவன்; நீ எனக்குமுன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு" என்றுசொல்லி தமது வாக்குத்தத்தத்தை ஆரம்பித்தார். தேவன் தமது அன்பையே நமக்குக்காட்டி ஆசீர்வதிக்கும்போது நாம் அதை நமது மீறுதலுக்கு ஊன்றுகோல்போல் வைத்துக்கொள்ளுகிறோம். ஆதலால் தேவன் தமது சர்வவல்லமையையும் நீதியையும் வேளாவேளை உணர்த்திவருவது நியாயந்தான். இந்த சத்தத்தைக் கேட்டவுடனே முனிவர் முகம் குப்புறவிழுந்து வணங்கினார்; முனிவர் முகம் குப்புறவிழுந்த இந்தச் செய்கையானது,

சர்வ வல்லமையுள்ள தேவனே
அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்

என்று கெஞ்சி மன்றாடுகிறதாயிருக்கிறது. ஆண்டவர் தாழவிழுந்த பிள்ளையைத் தண்டிக்கமாட்டார்; கீழே விழுந்த பிள்ளையின் கழுத்தில் மிதிக்கமாட்டார். அவர் முகம் குப்புறக்கிடக்கும் தமது பிள்ளைகளைத் தமக்கென்றும் சொந்தமாக முத்திரையிடுகிறார். முனிவர்முகம் குப்புறக்கிடக்கையில் ஆண்டவர் தமது அநேக புது வாக்குத்தத்தங்களை அவன்மேல் பொழிந்து புதிய உடன்படிக்கையினால் முத்திரைபோட்டார். அப்புது வாக்குத்தத்தங்களாவன:

Qbwx M87



1. நான் சாராளாலே உனக்கொரு குமாரனைத் தருவேன்,
2. உங்களிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்,
3. நான் உனக்கும் உன் சந்ததிக்கும் தேவனாயிருப்பேன்

என்பதுதான். இந்த வாக்குத்தத்தங்களுக்கும் இதற்கு முந்தின திருவாக்குகளுக்கும் அத்தாட்சியாக விருத்தசேதன முறைமையை முத்திரையாக ஸ்தாபித்தார். இந்தப் புதிய உடன்படிக்கையின்படி ஆபிரகாமும் இஸ்மவேலும், அவன் சந்ததிக்குள் பிறக்கும் சகல ஆண்களும், அவனுடைய அடிமைகளும் அவர்களுடைய பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டியதாயிருந்தது. மேலும் அதுமுதல் அவர்களுக்குள் பிறந்த ஆண்சாதியெல்லாம் எட்டாம்நாளில் விருத்தசேதனம்பண்ணப்படவேண்டியதாயிருந்தது. நுனித்தோலின் மாம்சத்தை அறுத்துப்போடுதலாகிய விருத்தசேதனச் சட[illegible]க்குரிய இரண்டு விசேஷித்த கருத்துகள் அடங்கியிருந்தன. 1. ஒருவனுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் சமூலமாய் தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்யவேண்டுவதையும், 2. ஒருவன் தன் மாம்சத்தையும் அதின் இச்சைகளையும் அழித்துப்போடவேண்டுமென்பதையும் அது கருத்தாய் உணர்த்தினது. கிறிஸ்துசபையில் வழங்கிவருகிற ஞானஸ்நானத்துக்கு அது நிழலாட்டமான முன் குறிப்பாய் இருந்தது.

9.7.117

இந்த அந்நியோந்நியத்தின் உடன்படிக்கைக்கு அத்தாட்சியாக தேவன் முனிவர் பேரையும் அவர் மனைவி பேரையும் மாற்றினார். இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல் ஆபிரகாம் என்றும், சாராயை இனி சாராய் என்று அழையாமல் சாராள் என்னப்படுவாள் என்றும் சொன்னார். ஆபிராம் என்பது உயர்ந்த பிதா என்றும், ஆபிரகாம் என்பது திரள் ஜாதிகளின் பிதா என்றும் பொருள்கொள்ளும். சாராய் என்பது என் நாச்சியார் என்றும், சாராள் என்பது திரள்ஜாதிகளின் நாச்சியார் என்றும் பொருள்கொள்ளும். இனி நாம் இவர்களை ஆபிரகாம், சாராள் என்றபேரால் அழைப்போமாக.

இந்தத் தரிசனையில் கிடைத்த புது வாக்குத்தத்தங்களில் சாராளாலே தனக்கு ஒரு குமாரன் கிடைப்பானென்ற விஷய

மானது அவருக்கு சந்தேகத்தையல்ல, அதிசயத்தைக் கொடுத்ததால் முனிவர்முகம் குப்புறக்கிடந்தே தமக்குள் நகைத்து நூறு வயதானவனுக்குப் பிள்ளைபிறக்குமோ, தொண்ணூறுவயதான சாராள் பெறுவாளோ என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு,

இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக.

அதாவது இனி இந்த கிழவனுக்கு பிள்ளை என்னத்துக்கு, இஸ்மவேலை நீர் காப்பாற்றி அவனுக்கு என் ஆசீர்வாதங்கள் இறங்கும்படி சித்தங்கொண்டால் போதும் என்பதாகச் சொன்னார். அப்பொழுது தேவன் சாராள் நிச்சயமாக ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; அவனுக்கே என் உடன்படிக்கைகளும் ஆசீர்வாதங்களும் இறங்கும் என்று சொன்னார். இப்படி ஆணையோடு அடியாரை ஆசீர்வதிக்கச் சித்தமான தேவன் எவ்வளவு துதிக்குப் பாத்திரராய் இருக்கிறார். முனிவர் இஸ்மவேலுக்காகப் பண்ணின விண்ணப்பத்தினிமித்தம் தேவன் அவனையும் ஆசீர்வதித்தார்; ஆனால் அந்த ஆசீர்வாதங்களெல்லாம் பூமிக்குரிய பாக்கியத்தை மாத்திரம் அடுத்ததாய் இருந்தது. கடைசியாக தேவன் முனிவரைப் பின்னும் சந்தோஷப்படுத்த சித்தமாகி சாராளால் உண்டாகும் வித்தின் காலத்தை நெருக்கி, வருகிற வருஷத்தில் குறித்தகாலத்தில் சாராளால் ஈசாக்கு பிறப்பான் என்று திருவுளம்பற்றி முனிவரைவிட்டு எழுந்தருளினார்.

அன்றையத்தினமே முனிவர் தேவகட்டளையின்படி விருத்தசேதனமாகிய புது உடன்படிக்கையினால் தேவனோடு ஐக்கியப்பட்டார்.

உலகமுண்டாகி இம்மட்டும் தேவன் மனுஷனோடு செய்த உடன்படிக்கை எல்லாம் ஆடுமாடுகளின் இரத்தத்தால் உறுதிப்படுத்தப்பட்டது. இப்பொழுதுதான் அது முதலாவதாக மனுஷ இரத்தத்துளிகளால் உறுதிபண்ணப்படுகிறது. தொண்ணூற்றொன்பது வயதுள்ள ஆபிரகாம் தேவனைவிட்டுப் பிரிந்துபோவதைப்பார்க்கிலும், தன் இரத்தத்தை சிந்தி அவரோடு சம்பந்தப்பட்டுக்கொள்ளவே ஆசைபட்டான். அவன் தேவகட்டளைப்படியே தன்னை முதலாவது விருத்தசேதனம்பண்ணிக்கொண்டு மற்றவர்களையும் அந்த உடன்படிக்கையில் தன்னோடு பங்குபெறும்படிச் சொன்னான்; அதைக் கைக்கொள்ளுவதால் உண்டாகும் நோவை அதனாலுண்டாகிய தெய்வீக சிநேக சம்பந்தமாகிய தைலத்தால் ஆற்றிக்கொண்டான் என்று சொல்லவேண்டியது. நாம் தேவனுடைய பிள்ளைகளாகி அவரோடு அந்நியோந்நியமாவதற்கு தடையுண்டாகும் பாகங்கள் தொலைந்து



போனால்தான் என்ன? நாம் நமது சரீரத்தைவிட தேவநியமங்களை மதிக்கவேண்டியதுதான்.

தேவன் முனிவரோடு விருத்தசேதன உடன்படிக்கையை ஸ்தாபித்து, பேரையும் மாற்றிச் சில நாட்களுக்குப்பின்பு ஒரு நாளும் முகமறியாத மூன்று விருந்தாடிகள் அவருடைய கூடாரத்தை நோக்கிவந்தார்கள். அப்பொழுது உச்சிநேரமாயிருந்தது. முனிவர் அச்சமயத்தில் உஷ்ணம் பொறுக்கமாட்டாமல் காற்றுக்காக கூடாரவாசலண்டை உட்கார்ந்திருந்தார். அவர்கள் மூவரும் தமது இருப்பிடம் வர நோக்கங்கொண்டிருக்கிறதை அவர் கண்டு, அவர்களுக்கு எதிர்கொண்டோடி தரைமட்டும் குனிந்து, தமது கூடாரம்மட்டும் வந்து இளைப்பாறித் தங்கள் வழியே போகவேண்டுமென்று கேட்டார்; அவர்கள் அப்படியே வந்தார்கள். முனிவர் உடனே அவர்களுக்கு கால்களைக் கழுவ ஜலங்கொடுத்து, தாகத்துக்குக் கொடுத்து, விருந்துசெய்வதற்கேற்ற ஒழுங்குகளைத் திட்டஞ்செய்தார். அவர் மனைவி முனிவர் மனம்போல் அவர்களை உபசரித்து அறுசுவையோடு அமுதளித்தாள். இச்சமயத்தில் ஆபிரகாமும் சாராளும் காண்பித்த உபசரிப்பும் தாழ்மையும் புகழப்படத்தக்கதுதான். இதிலும் மாசிறந்த தாழ்மையை நமது இரட்சகரிடத்தில் காண்கிறோம். அவர் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே போசனத்தைவிட்டெழுந்து வஸ்திரங்களைக் கழற்றிவைத்து ஒரு சீலையையெடுத்து அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்திலே தண்ணீர்வார்த்து சீஷருடைய கால்களைக் கழுவவும் தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.

ஆ! உன்னத தாழ்மையே!
நான் உன்முன் பணிகிறேன்.

வந்த விருந்தாடிகள் வெண்ணெயையும் பாலையும் இறைச்சியையும் சாப்பிடுகையில் அவர்களில் ஒருவர் முனிவரை நோக்கி: ஒரு உற்பத்திகால திட்டத்திலே உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பானென்று திருவுளம்பற்றினார். இதைச் சாடையாய்க் கேட்டுக்கொண்டிருந்த சாராள் நம்பாமல் நகைத்து, நான் கிழவியும் என் ஆண்டவன் முதிர்வயதுமுள்ளவரானபின்பு எனக்கேது பிள்ளை என்று சொன்னாள். அவள் நகைத்ததை கர்த்தர் கண்டு, சாராள் நகைப்பானேன்? கர்த்தரால் ஆகாதகாரியமுண்டோ என்று சொல்லித் தாம் சொன்னபடி ஒரு பிராணஉற்பத்தி காலத்திலே ஒரு பாலன் பிறப்

பது நிச்சயம் என்று மறுபடியும் சொன்னார். உடனே சாராள் பயந்து நான் நகைக்கவில்லையென்று பொய் சொன்னாள். அதற்கு அவர் இல்லை நீ நகைத்தாயென்று மறுபடியும் சொல்லி அவளை வெட்கப்படுத்தினார். இப்படி பயந்தாவது, விளையாட்டாயாவது, பொய் சொல்லக்கூடாது. நமது தேசத்தார் தாகமெடுத்தால் உடனே தண்ணீரை எப்படி கண்டபடி குடிக்கிறார்களோ அப்படியே வாயைத் திறந்தவுடனே கண்டபடி பொய்சொல்லுகிறார்கள். “பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானது.”

அப்புறம் அந்த விருந்தாடிகள் சோதோமை நோக்கிப் போனார்கள். அம்மூவரும் மனுஷராயிராமல் பரலோக வாசிகளாயிருந்தார்கள். சோதோமியருடைய அக்கிரமத்தினிமித்தம் அந்த நகரத்தை அழிக்கும்படி வந்தார்கள். அவர்களில் ஒருவர் கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார். பிற்காலத்தில் அவதார புருஷராய் வெளிப்பட்ட தேவன் அக்காலத்தில் தூதர் சாயலாய்த் தமது தாசருக்கு வேளாவேளை தரிசனமானார். அவரே அக்கினிமயமாய்க் காட்சியளித்ததுமுண்டு. முனிவர் அவர்களை வழிவிட்டனுப்பும்படி வெகுதூரம் போனார். கர்த்தர் முனிவருக்கு சோதோம் அழிக்கப்படுவதின் விபரங்களைச் சொன்னார், அது அவருக்கு விசனமாயிருந்தது. அது அழிக்கப்படாதபடி வெகுவாய் மன்றாடினார். அவர் சோதோமியர் அழிவை தம்முடைய அழிவைப்போல் எண்ணினார். இதில் அவருடைய பிறர்நேசம் விளங்குகிறது. நாம் மற்றவர்களுடைய அழிவையல்ல அவர்களுடைய ஜீவனையே விரும்ப வேண்டியது. தன் மன்றாட்டினால் சோதோம் அழிவினின்று தப்பமாட்டாதென்பதை முனிவர் அறிந்து ஆண்டவர் தமது சித்தத்தின்படியே சோதோமை நடத்துவாராக என்று மனதில் எண்ணி திரும்பிவந்துவிட்டார். இதன் விபரங்களை லோத்தின் சரித்திரத்தில் தெளிவாகக் காண்பிப்போம்.

சோதோம் அழிக்கப்பட்டதின் பின்பு முனிவர் தம் கூடாரத்தைப் பேர்த்துத் தென்திசையாய்ப்போய்க் கேரார்தேசத்தில் குடியிருந்தார். இவ்வளவு பெரிய நாசத்தைக் கண்ணாலேகண்ட இடத்துக்கு அப்பாலேபோய்க் குடியிருந்தால் தாவிளை என்று அவர் எண்ணியிருக்கலாம். அல்லது அத்திசையிலிருந்து வீசின கந்தகக்காற்று அவருக்கும் அவர் மந்தைக்கும் சுகவீனத்தை உண்டாக்குகிறதாயிருக்கலாம். தேவனால் முனிவருக்குத் தீர்மானிக்கப்பட்ட பரதேச ஜீவியத்துக்கு இதுவும் ஒரு திருஷ்டாந்தமாயிருக்கிறது. கேரார்நாடு பெலிஸ்தருடையதாயிருந்தது. இத்தேசத்தில் அவர் போனபோது முன்போல புருஷனும் மனைவியும் பொய்சொல்லத் தீர்மானித்துக்கொண்டு மனைவியைச் சகோதரி என்று அழைத்துவந்தார். விசுவாசிகளின் தகப்பனென்று அழைக்கப்பட்டவரிடத்தில் இப்படிப்பட்ட பலவீனத்தை நாம் மறுபடியும் காண்பது துக்கமல்லவா? எந்த மகாத்துமாவும் தன் பக்தியைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பதை இது உணர்த்தும் பாடமாயிருக்கிறது. இதினாலே சாராள் தொண்ணூறு வயதுடையவளாயிருந்தும் ஈசாக்குப் பிறக்குங்காலத்தில் புதுப்பெலனை அடைந்து வாலிபம்போல் காணப்பட்டாள் என்பதையும் உத்தேசிக்கலாம். தேவன் மோசே, காலேப் என்பவர்கள் விருத்தாப்பியத்தையும் வாலவயதாக்கினார் (உபா. 34. 7.). எகிப்தில் என்ன சோதனை நேரிட்டதோ அதேசோதனை முனிவருக்கு இங்கேயும் நேரிட்டது. கேராரின் அரசனாகிய அபிமெலேக் சாராள் உள்ளபடி ஆபிரகாமின் சகோதரியாக்கும் என்று எண்ணி அவளை அழைப்பித்தான். ஆனால் தேவன் ஆபிரகாமின் ஆளாகநின்று அன்றிரவில் சொப்பனத்தில் தோன்றி, நீ அழைப்பித்த ஸ்திரீயின் நிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாய் இருக்கிறாள் என்று சொன்னார். அதோடு அரசன் பயந்து தன் குற்றத்தை தேவனிடத்தில் அறிக்கையிட்டு அவளைத் திரும்பவும் அனுப்பிவிட்டான். அரசன் அவளைக் கூப்பிட்டதின் அபராதமாக ஆடு மாடுகளையும் வேலைக்காரரையும் நன்கொடையாகக் கொடுத்து தன் தேசத்தில் சாங்கோபாங்கமாய்க் குடியிருக்கும்படி கட்டளையிட்டான். அப்பால் முனிவர் அபிமெலேக்குக்காக விண்ணப்பம் பண்ணினதால் அவர்கள் மேல் சுமத்தப்பட்ட சாபத்திலிருந்து அவர்களை இரட்சித்தார். ஏனெனில் தேவன் அபிமெலேக்கின் வீட்டாரின் கர்ப்பத்தை அடைத்திருந்தார்.



ஒரு பிராண உற்பத்தியின் காலத்தில் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தின் புத்திரன் பிறந்தான். அவன் பிறந்தவுடனே நூறு வயசுள்ள முனிவருக்கு இருந்த சந்தோஷத்தை என்ன சொல்ல; இன்றுதான் அவர்கள் சிந்தை நீங்கிற்று. இனி அவர் பிள்ளை கவலையால் தமது மனதை கிலேசப்படுத்தவேண்டியதில்லை. பிள்ளைபிறந்த எட்டாம் நாளில் தேவகட்டளையின்படி விருத்தசேதனம்பண்ணி, தேவதூதனால் சொல்லப்பட்டதின்படியே அவனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டார். ஈசாக்கு பிறந்தது இஸ்மவேலுக்குத் தாழ்வாயிற்று. இஸ்மவேலும் லேசான பையனல்ல. ஈசாக்கு சுமார் மூன்றுவயதாகி பால்

மறந்து நடந்தோடித் திரிகையில் இஸ்மவேல் அவனைப் பரியாசஞ்செய்தான். இதை சாராள் கண்டுகொண்டாள். இதற்கு முன் பலதரம் செய்திருப்பான். ஆனால் இன்றுதான் அகப்பட்டான். இச்சமயத்தில் இஸ்மவேலுக்கு சுமார் பத்தொன்பது வயது. பதினாறு வருஷத்துக்குப்பின் பிறந்த பயல் நாம் நம்பியிருந்த வாழ்வையெல்லாம் கைப்பற்றப்போகிறானே என்கிற எண்ணம் அவனுக்குள் மேற்கொண்டிருக்கலாம். இந்த வர்மத்தை அவன் தாய்தான் வளர்த்துவிட்டிருக்கவேண்டும்.

இஸ்மவேலின் பரியாசம் ஒரு விளையாட்டாய் இராமல் ஏதோ கடினமானதாய் இருந்ததால் சாராள் மனவருத்தப்பட்டாள். அவள் முனிவரிடத்தில் போய் அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் அரைநிமிஷம் இங்கே வைக்கக்கூடாது, அனுப்பிவிடும் என்று சொன்னாள்.

அடிமையைக் கொடுப்பானேன்? சாராளே
அலறித் திரிவானேன்?

இது முனிவருக்கு சொல்லிமுடியாத விசனத்தைக் கொடுத்தது. இரண்டு பெண்ஜாதிகளைக் கட்டின லாபம் இப்போது நன்றாய்த் தெரிகிறது. தன் பிரிய பெண்ஜாதியின் பேச்சைத் தட்டினால் அவள் மனம் புண்ணாகுமே என்கிற கவலை ஒரு பக்கத்திலும், இம்மட்டும் கூடவே இருந்து பிள்ளைபெற்றவளையும் அவள் புத்திரனையும் அடியோடு துரத்தச் சொல்லுகிறாளே என்கிற கவலை ஒரு பக்கத்திலும் முனிவரை வதைத்தது.

ஆகாரைத் தொடுவானேன்? முனிவரே
அபயமிடுவானேன்?

முனிவர் இப்போது என்னசெய்தார்? அவர் ஒன்றும் செய்யாமல் தேவனிடத்தில் தன் கவலைகளை அறிவித்து அவர் சொல்லும் கட்டளைகளுக்குக் காத்திருந்தார். ஏனெனில் இஸ்மவேலைக்குறித்தும் சில வாக்குத்தத்தங்கள் கூறப்பட்டிருந்தன. அப்பொழுது தேவன் அவனுக்கு தரிசனையாகி, தமது வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஈசாக்கினுடைய சந்ததியின் வழியில் நிறைவேறும் என்றும், இஸ்மவேலையும் அவன் தாயையும் அனுப்பிவிடவேண்டுமென்றும் உத்தரவுசெய்தார். அவ்வுத்தரவின்படியே முனிவர் அனுப்பிவிட்டார். எப்படியும் துக்கம் துக்கந்தான்.



## நரபலிப் பருவம்.

ஈசாக்குப் பிறந்ததுமுதல் ஆபிரகாமின் வீடு அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டது. வாக்குத்தத்தத்தின் புத்திரன் பிறந்த உடனே, வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதல்பெறத் துவக்கின. முனிவர் எடுத்த முயற்சிகளிலும் ஆரம்பித்த கிரியைகளிலும் விருத்தியானதை அத்திசையிலுள்ள எவரும் கண்டு அதிசயப்பட்டார்கள். முன்னே முனிவர் மம்ரேயில் குடியிருக்கையில் மூன்று எமோரிய பிரபுக்கள் அவரோடு உடன்படிக்கை பண்ணியிருந்தார்கள். இப்போது கேராரின் அரசனாகிய அபிமெலேக்கும் ஆபிரகாமோடே உடன்படிக்கை பண்ணும்படி பிரயத்தனம் பண்ணினான். இந்தப் பெரிய அரசன் ஒண்டிக் குடித்தனக்காரனாகிய முனிவரோடு உடன்படிக்கைபண்ண ஆவல்கொண்டது அதிசயமாயிருக்கிறது. முனிவரைப்பற்றிய பயம் அரசனுக்குப் பூரணமாய் இருந்தது. இதற்குச் சில புறக்காரணங்களும் இருந்திருக்கலாம். ஈசாக்குப் பிறந்த செய்தியைக் கேள்விப்பட்டு சாலேமில் வசித்த எபூசியருடைய மகா அரசனாகிய மெல்கிசேதேக் என்பவரும், முன் அவரோடு உடன்படிக்கைபண்ணியிருந்த எமோரிய பிரபுக்களும் தங்கள் பரிவாரங்களோடேயும் வெகுமானங்களோடேயும் வந்து வாழ்த்துதல் கூறியிருக்கலாம். அல்லது அவர்களுடைய பலத்த உறவு முனிவருக்கு இருக்கிறது என்பதை அபிமெலேக்கு கேள்விப்பட்டிருக்கலாம். மேலும் பாபிலோன் பார்சியா முதலிய மாட்சிமைபொருந்திய நாலு மகா மன்னரை முனிவர் முந்நூற்று பதினெட்டு ஆட்களோடு போய் முறியடித்து அவர்கள் கொண்டுவந்த பொருட்களையும் கொள்ளையிட்ட பொருட்களையும் திருப்பிக் கொண்டுவந்தார் என்ற சங்கதியையும் கேட்டிருக்கலாம். இவை எல்லாவற்றோடும் முனிவரையிட்டு தன் குடும்பத்திலுண்டான சாபத்தையும் அவருடைய ஜெபத்தினாலே அந்தச் சாபம் நிவிர்த்தியானதையும் உணர்ந்திருக்கலாம். இவையெல்லாம் சேர்ந்து முனிவரைப்பற்றிய அச்சத்தையுண்டாக்கினதால் அபிமெலேக்கு அரசன் ஒரு ஆணையின்மூலமாய் தங்கள் அறிமுகத்தையும் நேசத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ள ஏவப்பட்டான் என்று நாம் தாராளமாய்ச் சொல்லலாம்.

அபிமெலேக்கு அரசனும், அவனுடைய சேனாபதியாகிய

பீகோலும்* ஒருநாள் முனிவரிடம் வந்து முனிவரே, நீர் செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உம்முடனே இருக்கிறார்; ஆகையால் நீர் எனக்காவது என் குமாரனுக்காவது என் பேரனுக்காவது வஞ்சனைசெய்யாமல் நான் உமக்கு செய்த தயவின்படியே நீர் எனக்கும் என் தேசத்துக்கும் தயவுசெய்வேன் என்று தேவன்மேலே எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கவேண்டுமென்று கேட்டான். முனிவர் மனதில் இருந்த ஒரு சங்கடத்தைத் தீர்த்துக்கொள்ள இது ஒரு நல்ல சமயமாயிருந்தது. ஏனெனில் அதற்குச் சில காலத்திற்குமுந்தி அரசனுடைய வகையறுவுக்கும் முனிவருடைய ஆட்களுக்கும் ஒரு துரவைப்பற்றி சச்சரவு உண்டாயிற்று. அந்த வரலாறுகளை எடுத்து முனிவர்பேசினார். நித்திய சமாதானத்துக்கு ஏதுவுண்டாக இடையிலுள்ள மனவருத்தங்களை இப்போதே சொல்லித் தீர்த்துக்கொள்ளுவது நலமென்று முனிவர் நினைத்தது புத்திதான்; இந்த வரலாறுகள் ஒன்றும் அரசனுக்குத் தெரியாததால் அதிசயப்பட்டு இருவரும் சமாதானமாய்ப் போனார்கள். சமாதானத்துக்கு அத்தாட்சியாக முனிவர் ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளைத் தனியே நிறுத்தி ஒருவருக்கொருவர் ஆணையிட்டுக்கொண்டார்கள். ஒரு கிணற்றைவெட்ட ஒருவருக்கொருவர் ஆணையிட்டுக்கொண்டபடியால் அந்த இடம் அதுமுதல் ஆணையின் கிணறு என்று பெயர்கொள்ளும் பெயெர்செபா என்னப்பட்டது. இதுதான் வேதத்தில் சொல்லப்பட்ட முதலாம் ஆணையின் வரலாறு. அபிமெலேக் இந்த விஷயத்தில் நடந்துகொண்ட விஷயத்தைக் கவனிக்கும்போது அவன் இயல்பாகவே தேவபயமுடையவனாகவிருந்தான் என்றும், தன் குடும்ப பாக்கியத்தையும் தேச சமாதானத்தையும் எப்போதும் கருதினவனாய் இருந்தான் என்றும் விளங்குகிறது. உடன்படிக்கை முடிந்தபின்பு அரசனும் சேனாபதியும் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள். முனிவர் தம்மை இவ்வளவாய் கனப்படுத்திவிட்ட யெகோவாவை உள்ளங்களித்து எந்நாளும் துதித்து வணங்கும்படியாகத் தமது குடியிருப்புக்குச் சற்று அப்பால் ஒரு தோப்பை உண்டாக்கி அந்திசந்தி அவ்விடம் போய்த் தனித்தும் குடும்பசகிதமாகவும் தேவனை ஆராதித்துவந்தார். அதுமுதல் சதாகாலமுமுள்ள தேவனாகிய

*அபிமெலேக், பீகோல் என்னும் இரண்டுபதங்களும் பெலிஸ்த அரசனுக்கும் சேனாபதிக்கும் பட்டப்பெயர்களாயிருந்தன என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது.



கர்த்தருடைய நாமம் பெலிஸ்தியர் தேசத்தில் தொனிக்க ஆரம்பமாயிற்று.

முனிவர் தமக்கு முதிர்வயதிலே பிறந்த ஈசாக்கை நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய் வளர்த்தார். அவனுக்கென்ன குறைச்சல்? பாலுக்குக் குறைவா, பணத்துக்குக் குறைவா? ஆளுக்குக் குறைவா, ஆதரவுக்குக் குறைவா? பசியை அவன் கண்டதில்லை, தாகத்தை அவன் உணர்ந்ததுமில்லை. இஸ்மவேல் தொலைந்துபோனதால் அவனைப் பழிப்பாருமில்லை; ஆகார் போய்விட்டதால் அவனை ஆகடியம்பண்ணுவாருமில்லை. அவன் ஊருக்கெல்லாம் செல்லப்பிள்ளையும், வீட்டுக்கெல்லாம் அதிகாரியுமாக வளர்ந்துவந்தான். ஆபிரகாம் அவனைக் கண்டபொழுதெல்லாம் ஆண்டவரைத் துதித்தார்; சாராள் அவனைக் கண்டபொழுதெல்லாம் சதாகாலங்களிலும் இருக்கிறவரைப் புகழ்ந்தாள்.

அச்சமயத்தில் எவரும் பிரமிக்கத்தக்க விஷயம் ஒன்று சம்பவித்தது. அச்சம்பவங்களைக் கேட்கும் கல்நெஞ்சனும் கண்ணீர் சொரிவான்; இரும்புநெஞ்சனும் இளகாதிரான்; வைரநெஞ்சனும் வசியாதிரான். தேவன் தமது தாசனாகிய ஆபிரகாமைத் தேடிவந்து ஆபிரகாமே! என்று கூப்பிட்டார். சுமார் இருபத்தைந்து வருஷகாலமாய் தேவதரிசனையை இழந்த முனிவர் அச்சத்தம் கேட்டவுடனே “இதோ அடியேன்” என்றார். அப்பால் ஆண்டவர் பேசத்துவக்கினார். முனிவர் கேட்க குனிந்தார். ஆண்டவர் முனிவரை நோக்கி:

உன் புத்திரனும்
உன் ஏகசுதனும்
உன் நேசகுமாரனுமாகிய
ஈசாக்கை
நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு
மோரியாதேசத்துக்குப் போய்,
அங்கே நான் குறிக்கும் மலையின்மேல்
அவனை தகனபலியாக பலியிடு

என்று சொன்னார். இதைப்பார்க்கிலும் பலத்த இடியுண்டோ? இச்செய்தியைக் கேட்கவா முனிவர் இதோ, அடியேன் என்று சொல்லி எழுந்து ஓடினார்? ஆ, முனிவரே! உமது உள்ளம் இதைக் கேட்டவுடனே பிரமிப்படையவில்லையா? நீர் திமிராகிக் கல்லைப்போல் நிற்கவில்லையோ? மாரிகாலம் துவக்கமாகி

மேகங்கள் வானத்தை அடர்ந்துமூடி மின்னல்கள் பளிச்
சென்று வீசும்போது இடிவிழுவது வழக்கம். இந்த இடியோ
உமது சந்தோஷத்தின் சூரியனும் வாழ்வின் பிரகாசமும் வல்
லமையாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற உமது பாக்கியத்
தின் பட்டப்பகலிலே விழுகிறதைக் காண்கிறோமே. அநேக
ஆயிரவருஷத்துக்குப் பின்பு அதின் வரலாறுகளை வாசிக்கிற
எங்கள் நெஞ்சம் பதைக்கிறதே! அதை முதலாவதாகக் கேட்ட
உமது உள்ளம் எவ்வளவாய்ப் பதைத்திருக்கமாட்டாது.

முனிவருக்குக் கொடுக்கப்பட்ட இக்கட்டளையானது பத்து
மிலாறுகள்கொண்ட ஒரு சவுக்கால் ஒரேநேரத்தில் வீசியடிக்
கும் தண்டனைபோலிருக்கிறது. இல்லை. அதிலும் அதிகமாய்
ஆண்டவர் முனிவரை ஆசீர்வதிக்கும்படி வந்தவரைப்போல்
கூப்பிட்டு, ஆள் வந்தவுடனே தமது அம்பறாத்தூணியைத்
திறந்து பத்து அம்புகளை ஒரேநேரத்தில் முனிவர் நெஞ்சத்தில்
பாய எய்ததுபோலிருக்கிறது. முனிவர் 1. ஒரு அடிமையை
அல்ல புத்திரனையும், 2. எந்த மகனையுமல்ல ஏகசுதனையும்,
3. பகைக்கிற பிள்ளையையல்ல நேசமகனையும், 4. இஸ்ம
வேலையல்ல ஈசாக்கையும், 5. மற்றவர்களைக் கொண்டல்ல
அவரே, 6. நினைத்த காலத்திலல்ல இப்பொழுதே, 7. ஊருக்கு
அருகிலல்ல மோரியாதேசத்தில், 8. பள்ளத்தாக்கிலல்ல எவ
ரும் அறிய ஒரு மலையின்மேல், 9. பலியிடவேண்டும், 10.
அந்த பலியிடும்வகை தகனபலியிடுகிற முறையின்படி இருக்க
வேண்டும் என்ற கட்டளையைப் பெற்றார்.

இந்த வரலாறுகள் நம்மை மனம் பதைக்கப்பண்ணுகிறதே
ஆனால் விசுவாசிகளின் பிதாவாகிய ஆபிரகாமுக்கு இவை
ஒன்றும் மனம் பதைப்பாய் இருக்கவில்லை. மெய்தான். எக்
காலத்திலும் உள்ளவர்கள் இதை வாசிக்கக் கேட்கையில் தங்
கள் கண்களை ஏற விழித்து வாயைமூடி நின்று, இதில் யாரைப்
பற்றி நாம் பிரமிக்கிறது? தேவனுடைய இந்தக் கட்டளையைக்
குறித்து பிரமிக்கிறதா, முனிவரின் கீழ்ப்படிதலைப்பற்றி பிர
மிக்கிறதா? என்று அசந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மகனுக்
காக அழுகையோடும் கண்ணீரோடும் காத்திருந்தார். காத்
திருந்தபடி கிடைத்தது. இப்பொழுது அவனையே தகனபலி
இடும்படி உத்தரவாகிறது. எந்தப் பொன்னும் இவ்வளவு காங்
கையான நெருப்பினால் உருக்கப்பட்டிருக்கமாட்டாது. இரக்
கமுள்ள தேவன் இரத்தத்தின்மேல் பிரியப்படுகிறவராய் விளங்
குகிறார். கொலைசெய்வதையே மெய்விசுவாசத்துக்கு அத்
தாட்சியாக நிலைநிறுத்தப்போகிறதுபோல் இருக்கிறது.



இக்கட்டளையைப் பெற்ற முனிவர் ஆண்டவரோட வழக்
காடவேண்டுமானால் தகுதியான நியாயங்களுமிருந்தன. முனி
வர் ஆண்டவரை நோக்கி: "கர்த்தாவே, நரபலியின்மேல் ஆண்
டவருக்குப் பிரியமானால் அதற்கு வேறு வழியில்லையா?
பூலோக முழுவதிலும் என் மகனுடைய இரத்தமா உமக்கு
இனிப்பாயிருக்கும்? இஸ்மவேலின் இரத்தம் ஆகாதா, ஈசாக்
கின் இரத்தமா உமக்கு வேண்டும்? கர்த்தாவே, உம்மை இரக்க
முள்ளவர் என்கிறார்களே! இதுதானா உமது இரக்கம்! நீர் ஆயி
ரம் தலைமுறைகளுக்கு கிருபையளிக்கிறவராமே, என்னை இந்த
ஒரே தலைமுறையில் கருவறுத்துவிடுகிறதுபோலிருக்கிறதே.
இதற்காகவா எனக்குப் புத்திரனைத் தந்தீர்! இவன் பிறப்பா
னென்று நீர் சொன்னபோது, இனி எனக்கேன் பிள்ளை, இஸ்
மவேல் பிழைத்தால் போதுமென்று நான் சொன்னதில்லையோ?
இவனைக் கொலைசெய்யச் சொல்லும் முகாந்தரமென்ன?
இவன் மூலமாய் நிறைவேற இருந்த வாக்குத்தத்தங்களை எல்
லாம் நிறைவேற்றாமல் நிறுத்திக்கொள்ளவா! இந்தத் துயரச்செய்
தியைக் கேட்கிற யார்தான் என்னைப் பழிக்கார்கள்! என்
மனைவி முதலாய் என்னைவிட்டு ஓடிப்போவாளே! மகனைக்
கொன்ற பாதகன் அதோ போகிறான் என்று ஊர் உலகமெல்
லாம் வசைகூறுமே என்றிப்படி பலவாறாகப் பேசக்கூடும்.
ஆனால் முனிவர் ஒன்றும் பேசினதில்லை.

ஆபிரகாம் இக்கட்டளையின்படியே நிறைவேற்ற ஆரம்பித்
தார். ஈசாக்கினிடத்தில் அவனுடைய சந்ததி விளங்கும் என்று
சொல்லப்பட்டிருந்ததே. இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப்
பெற்றவர் மரித்தோரிலிருந்து தேவன் எழுப்ப வல்லவராயி
ருக்கிறார் என்று எண்ணி, தன் ஒரேபேறான குமாரனையே
பலியாக ஒப்புக்கொடுக்கும்படி புறப்பட்டுப்போனார். இந்
தக் கட்டளை ஒருநாள் இரவில் உண்டாயிருந்தது. மறுநாள் அதி
காலையில் முனிவர் எழுந்து, தன் கழுதையின்மேல் சேணம்
கட்டித் தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன்
ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு தகனபலிக்குக் கட்டைகளை
யும் பிளந்துகொண்டு தேவன் தனக்குக் குறித்த இடத்துக்குப்
புறப்பட்டார். அவர் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் வழி
களை சரியோ சரியல்லவோ என்று கவனிக்கிறவராய் இராமல்,
அதின் முடிவைமாத்திரம் விசுவாசத்தோடு எதிர்நோக்குகிறவ
ராய் இருந்தார். உத்தம விசுவாசி தேவனுடைய செயல்களை
வகையறுக்கிற விஷயத்தில் தன் நேரத்தைச் செலவிடாமல்

அவருடைய கட்டளையைக் காப்பதிலேயே தன் காலத்தைச் செலவழிக்கக் கருத்தாயிருப்பான்.

தேவன் குறித்த இடத்திற்குப் போக முனிவருக்கு மூன்று நாள் சென்றது. பெயெர்செபாவிலிருந்து அந்த மலைக்கு நெடுந்தூரமில்லாவிட்டாலும் இதினாலே முனிவர் ஆத்திரபுத்தியினாலே அல்ல, தீர்க்க ஆலோசனையோடு தமது விசுவாசத்தை வெளிப்படுத்தும் சூளைக்குட்பட்டார் என்று விளங்குகிறது. கிறிஸ்துவானவர் மூன்றும்நாளில் நிறைவடைந்ததற்கு அது முன்னடையாளமாயுமிருக்கலாம். மூன்றும் நாளில் தேவன் குறித்த மோரியாமலை அவர் கண்ணுக்குத் தென்பட்டது. அப்பொழுது முனிவர் தமது வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் மலைமட்டும் போய் தேவனைத் தொழுதுகொண்டு திரும்பிவருவோம் என்று சொன்னார். இதினாலே தாமே பலியிடப்போகிற மகன் தேவனால் உயிரோடெழுப்பப்பட்டு திரும்பவும் கொடுக்கப்படுவான் என்கிற விசுவாசம் முனிவர் மனதில் திட்டமாய் இருந்ததென்று விளங்குகிறது. முனிவர் தமது மகனைமாத்திரம் கூப்பிட்டு அவன் தலைமேல் அவனைக் கொளுத்தும் கட்டைகளை ஏற்றி, தன் வலதுகையிலே கத்தியையும் இடதுகையிலே நெருப்பையும் எடுத்துக்கொண்டு மலையை நோக்கிவந்தார். அவ்விருவரும் சற்றுநேரம் மௌனமாய் நடந்துபோகவே, ஈசாக்கின் மனதில் தாங்கள் செய்யப்போகும் பிரயத்தனத்துக்கு ஆதாரம் ஒன்றும் காணோமே, கட்டைநெருப்பு கத்தியெல்லாம் சரியாயிருக்கிறது, பலியிடும் பொருளைக் காணோமே, தகப்பனார் மறந்துபோனாரோ என்கிற சந்தேகம் உண்டாயிற்று. ஏனெனில் இம்மட்டும் அவன் எப்போது தகப்பனோடு பலிசெலுத்தப் போவானோ அப்பொழுதெல்லாம் ஒரு ஆட்டை அல்லது வேறொரு ஜந்துவை கூடகொண்டுபோவது வழக்கமாயிருந்தது. தகப்பனாருடைய ஞாபகப்பிசகை தூண்டிக் காட்டவும் குறிக்கப்பட்ட மலையின்மேல் போனபின்பு ஆகா, பலிஆடு கொண்டுவர மறந்தோமே என்று திரும்பவும் சங்கடப்படாதபடிக்கும் அந்தக் கவலையைத் தீர்த்துக்கொள்வது நலமென்று தனக்குள்ளே உத்தேசித்து, இருவரும் நடந்துபோகும்போதே "என் தகப்பனே" என்று கூப்பிட்டான். முனிவர் உடனே "என் மகனே என்ன? சொல்லு" என்றார். அப்பொழுது ஈசாக்கு:

இதோ நெருப்பும் கட்டையுமிருக்கிறது
தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?



என்று கேட்டான். இது அச்சமயத்தில் கேட்கவேண்டிய ஒரு கேள்விதான் என்று எவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். ஈசாக்கு இப்படிக் கேட்டதினாலே அப்பொழுது அவன் சிந்தை பலியிடுவதுமேலேயே கரிசனையாயிருந்தது. நாம் தேவாலயத்துக்குப் புறப்பட்டு நடந்துவரும்போது நமது சிந்தை முழுவதும் தேவாராதனையின்மேலேயே சார்ந்திருக்கவேண்டும் என்பதை இது நன்றாய் உணர்த்துகிறது. இந்த வார்த்தைகள் முனிவருடைய மனதுக்கு எவ்வளவு துயரமான எண்ணத்தைக் கொடுத்திருக்கவேண்டியது என்று நாம் எண்ணுவோம். இல்லை. அவர் முகம் இந்த வார்த்தைகளால் வாடவுமில்லை, இந்தக் கேள்வியால் சுருங்கவுமில்லை. இந்த வருத்தமான கேள்விக்குத் தாராளமான உத்தரவு அவர் வாயிலிருந்து புறப்பட்டது. "என் மகனே, தேவன் தமக்கு தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்ளுவார்" என்று சொன்னார். இந்த உத்தரவினால் முனிவருடைய மனத்திடம் நன்றாய் விளங்குகிறது. இந்த மறுமொழியானது பக்திவிநயத்தோடு கேட்ட ஈசாக்கின் மனதுக்கு திர்ப்திகரமானதாயிருந்தது.

அப்புறம் அவர்கள் இருவரும் கூடிப்போய் மோரியாமலையின் உச்சியில் சேர்ந்தார்கள். முனிவர் இப்போதாவது பலியாடு பிடிக்கும்படி பிரயத்தனப்பட்டாரோ? அல்ல, அல்ல. அவர் பலிபீடம் கட்டுகிறவேலையில் கவலைப்பட்டுத் தமது மனதுக்கேற்றபடி கல்லுகளைச் சேர்த்தார். இதிலெல்லாம் முனிவரைவிட ஈசாக்குதான் அதிக வருத்தத்தை எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். அவ்விடத்தில் முனிவர் கட்டின பலிபீடம் இம்மட்டும் ஈசாக்குப் பாராத புதுமாதிரியாய் இருந்திருக்கும். இம்மட்டும் ஆடு அல்லது காளைகள் பலியிடப்பட்டதால் அது சதுரமாய்க் கட்டப்படலாம். இப்போது மனுஷனை பலியிடவேண்டியிருப்பதால் அது சதுரமாயிராமல், சமமான ஒரு கல்லறைமேடுபோல கட்டப்பட்டிருக்கலாம். பலிபீடம் கட்டப்பட்டவுடனே முனிவர் கட்டைகளை அடுக்கினார். பலியிடவேண்டிய ஆயத்தங்களெல்லாம் முடிந்தாயிற்றே, ஆட்டைக் காணோமே என்று ஈசாக்கு தனக்குள் யோசித்திருக்கலாம். முனிவர் முதல்தரமான ஒரு ஆட்டைப் பிடிக்கிறார்; அது வெள்ளாட்டு மந்தையிலிருந்தல்ல, செம்மறியாட்டுமந்தையிலிருந்துமல்ல; அது வரையாடுமல்ல, காட்டாடுமல்ல. நூறுவயதுள்ள தானும் தொண்ணூறுவயதுள்ள தன் மனைவியும் வாக்குத்தத்தத்தினால் பெற்று விருத்தசேதனத்தினால் தேவனுக்கென்று பிரதிஷ்டையாக்கின முதல்பேறும் முழுப்பேறுமாகிய தன் குமா

ரன் ஈசாக்கையே ஆண்டவருக்குப் பலியிடும் ஆடாகப் பிடித்தான். ஆண்டவர் தெரிந்துகொண்ட ஆடு அவன்தான்.

முனிவர் தமது குமாரனை அழைத்துத் தமக்குமுன் நிறுத்தி என் நேச மகனே! மூன்றுநாளுக்கு முன்னே நடந்த ஒரு தேவதரிசனையைக் கேள். சர்வத்துக்கும் வல்லவரான தேவன் எனக்குக் காக்ஷியாகி, நான் உன்னை இந்த மலையின்மேல் தகன பலியிடவேண்டுமென்று கட்டளையிட்டார். இப்பொழுதும் என் மகனே! இப்பூலோகத்திலே எத்தனையோ அழகும் பராக்கிரமமுமுள்ள வாலிபர் இருப்பார்கள்; அவர்களில் ஒருவரையும் அவர் தமக்கென்று தெரிந்துகொள்ளாமல் உன்னைப் பேர்சொல்லித் தெரிந்துகொண்டிருக்கிறது உனக்கு இக்காலத்தில் ஆறுதலைக் கொடுக்கவேண்டியது. ஆ! என் நேசமே, என்னால் நேசிக்கப்பட்டிருக்கிறதைவிட நமது தேவனால் நேசிக்கப்பட்டிருக்கிறாய் அல்லவா? என் நேசம் என் உயிரோடே முடியுமே, அவர் நேசமோ முடிவில்லாதது. அவர் என்றும் பிழைத்திருக்கிறார் அல்லவா? உன்னை அவருக்குப் பலியாக ஒப்புக்கொடுக்கும் ஊழியத்துக்கு அவர் என்னையே ஆசாரியனாக ஏற்படுத்தியிருக்கிறார். ஆதலால் ஆறுதலின் மகனே, நீயும் என்னைப்போல தேவ கட்டளைக்கு சமூலமாய்க் கீழ்ப்படிந்து மனோச்சாகமான உன் பாவிய ஜீவனை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுக்கு ஒப்புக்கொடுக்கும்படி இதோ, பலிபீடத்தின்மேல் அடுக்கப்பட்டிருக்கிற கட்டைகளின்மேல் படுப்பாயாக; நான் உன்னை இந்தக் கயிறுகளால் கட்டி, இதோ இந்த கத்தியால் அறுத்து, உன் உடலை யாகம்பண்ணி, உன்மேலும் என்மேலும் ஆசீர்வாதங்களைக் குவித்துக்கொள்வேனாக. சருவத்துக்கும் வல்ல தேவன் உன்னை எனக்குத் திரும்பவும் தந்தருளுவாராக என்று சொல்லியிருப்பார்.

தன்னையே பலியாடாகத் தகப்பன் கூப்பிட்டவுடனே ஈசாக்கு ஒன்றும்பேசாமல் கர்த்தர் தமக்குச் சித்தமானபடி செய்வாராக என்று கட்டைகள்மேல் படுத்தான். முனிவர் அவனைக் கட்டினபின்பு கத்தியை எடுத்து வானத்தை அண்ணாந்துபார்த்து, பிதாவே! இப்படிச் செய்வது உமது சித்தமாயிருக்கிறது; இதோ, அடியேன் செலுத்தும் பலியை அங்கிகரிப்பீராக என்று தன் குமாரனை வெட்டும்படி கத்தியை ஓங்கினார்!!

இச்சமயத்தில் பரலோகம் பிரமிப்பாலும் ஆச்சரியத்தாலும் நிரப்பப்பட்டன என்று சொல்லலாம். தேவதூதர் சிருஷ்டிக்கப்பட்ட காலமுதல் இப்படிப்பட்ட காட்சியை இப்பூமண்டலத்தில் கண்டிருக்கமாட்டார்கள். இதற்குமுன் பரலோகம்



போன ஆபேல், ஏனோக், நோவாமுதலிய பக்தரின் ஆத்துமாக்கள் இக்காட்சியைக் கண்டு தங்களுடைய ஜீவகாலம் இவ்வளவு பிரகாசமான விசுவாச விளக்கினாலும், கீழ்ப்படிதலின் ஜோதியாலும் ஜொலிக்கவில்லையென்று ஒத்துக்கொள்ளலாம்.

பாதாளலோகம் இச்சமயம் வெட்கத்தாலும் நிந்தையாலும் துக்கம்கொண்டாடின என்று சொல்லலாம். கீழ்ப்படியாததினிமித்தம் தள்ளுண்ட தூதரெல்லாரும் ஆதாமின் மகனிடத்தில் விளங்கும் கீழ்ப்படிதலைக் கண்டு வெட்கப்பட்டார்கள். கர்வங்கொண்டு தள்ளப்பட்ட சம்மனசுகளெல்லாம் இவ்வதிசய உத்தமத்தைக் கண்டு தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். அவிசுவாசிகளின் தலைவனாகிய பெயெல்செபூல் என்பவன் ஆபிரகாமிடத்தில் ஜெயங்கொள்ளவில்லையென்று கண்டு மனக்காய்ச்சல் கொண்டான் என்று சொல்லலாம்.

இவ்வண்ணம் முனிவரின் விசுவாசம் பரலோகத்துக்கும் பாதாளலோகத்துக்கும் தெரிந்திருந்தாலும் பூலோகத்துக்கு அப்போது தெரியாதிருந்தது. ஆபிரகாம் முனிவர் செய்யப்போகும் பிரயத்தனம் அக்காலத்து பூலோகத்துக்குத் தெரியுமானால், நாம் இந்த இரண்டேபேரை மாத்திரமா மோரியாமலைமேல் பார்ப்போம்! இல்லை. சாலேமின் அரசனும் அவன் சேனைகளும் அபிமெலேக்கும் அவனுடைய தளங்களும் கானானின் ஜாதியனைத்தும் அந்த இடத்தில் கூடிவந்திராதோ! கூடினது நிச்சயமானால் முனிவரின் விசுவாசபந்தம் வல்லமையாய்ப் பிரகாசியாதென்று அறிந்தோ, வேறெதினாலோ தேவன் இவ்வளவு அந்தரங்கத்தில் அதை நடக்கச்செய்தார்.

கத்தி ஓங்கும் முனிவரே சற்றே நில்லும்,
வெட்டப்போகும் முனிவரே அதோ பாரும்.

முனிவர் தமது மகனை பலியிட வெட்டும்படி கத்தியை ஓங்கும்போது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து தடுக்கும்படி ஆபிரகாமே! ஆபிரகாமே! என்று கூப்பிட்டார். அவன் இதோ அடியேன் என்றான். அப்பொழுது அவர்:

பிள்ளையின்மேல் கை போடாதே,
அவனுக்கொன்றும் செய்யாதே,
உன் பயபக்தியைக் கண்டோம்

என்று மொழிந்தார்.

அல்லேலூயா! வாசிக்கிறவனே, இச்சமயத்தில் நீ இவ்வளவு தயவுள்ள தேவனை என்னோடுகூட ஸ்தோத்திரத்தால்

மேன்மைப்படுத்தாமலிருப்பாயோ? கர்த்தாவே, நீர் சாகிறவனுடைய சாவை விரும்புகிறவரல்ல. ஈசாக்கை சாகாதபடி காத்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

உடனே முனிவர் மனங் களித்தது, அவர் பிள்ளையாண்டானை அவிழ்த்துவிட்டார். இருவரும் அவ்விடத்தில் பிரசன்னமான தேவசமுகத்தண்டை குனிந்து நின்றார்கள். பின்பு முனிவர் தங்களுக்குச் சமீபமாய்ப் புதரிலே கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக்கண்டு,அதைப்பிடித்து, தமது குமாரனுக்குப் பதிலாக தகனபலியிட்டார். அப்பலியின் புகை வானத்திற்கேறிற்று. கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து முனிவரைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து, இந்தக் காரியத்தைச் செய்தபடியால் நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நக்ஷத்திரங்களைப்போலவும் கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களையும் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும்; நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால் உன் சந்ததிக்குள் பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும், என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

ஆ! முனிவர் மோரியாமலையின் உச்சியில் ஏற்றப்பட்ட விளக்காக இருக்கிறார். மலையின்மேல் எறியும் விளக்கு மறைக்கப்பட்டிருக்கமாட்டாதே; மோரியாமலையின்மேல் விளங்கின ஆபிரகாமின் விசுவாசமும் மறைக்கப்படமாட்டாது. இவ்விடத்தில் அவர் விசுவாசத்தில் வல்லவன் என்று விளங்கி, விசுவாசிகளின் தகப்பன் என்ற பரலோகப் பட்டத்தைப் பெற்றார். மோரியாமலையே! இன்றுமுதல் உன்மேல் பனியும் மழையும் பூரணமாய்ப் பெய்வதாக. ஏனெனில் விசுவாசத்தின் பராக்கிரமசாலி அவிசுவாசமென்னும் பாதாள வேதாளத்தை தமது ஏகசுதனை பலியிடத்துணிந்து பழிவாங்கிப்போட்டார். இவ்வளவுமாத்திரமோ? மோரியாவே! இல்லை. இந்த பர்வதத்தையே தேவன் தமது வாசஸ்தலமாகத் தெரிந்து இங்கே தமது வல்லமைகளை விளங்கச்செய்ய சித்தமானார். இதையே மகா இராசாவின் நகரமாயும் பரமசீயோனின் திருஷ்டாந்தமாயும் நியமித்தார். இங்கிருந்தே இஸ்ரவேல்ஜாதியின் ஜெபங்களும் தோத்திரங்களும் பலிகளின் கார்மேகத்தோடும் தூபவர்க்கங்களின் வெண்மேகத்தோடும் பரலோகத்துக்கு எழும்பின.



இந்த மலையை அடுத்தே பரமபிதாவானவர் தமது நேசகுமாரன் என்றும் பாராமல், நம்மெல்லாருக்கும் இயேசுவை பாவம்போக்கும்பலியாக சிலுவையில் ஆணிகளால் கடாவி கொலைக்குட்படுத்தினார்.

இப்பொழுது முனிவரையும் அவர் மகனையும் மலையிலிருந்து இறங்கிவரப் பார்க்கிறோம். அவருடைய முகமானது இப்போதுதான் மலர்ந்த ரோசாவின் மலரைப்போல் மகிழ்ச்சியாய் விளங்குகிறது. அவருடைய நடைகள் விருத்தாப்பிய நடைகளாயிராமல் வாலிபநடைகள்போல் துடுக்காயிருக்கின்றன. வெட்டுக்கத்தியோடும் வெறும் நெருப்போடும் விறகுக்கட்டோடும் பெருமூச்செடுத்து ஏறிப்போன தகப்பனும் மகனும் ஆசீர்வாத மூட்டைகளைத் தங்கள் தலைமேலும், அநுக்கிரக பாரத்தைத் தங்கள் தோள்மேலும் உடையவர்களாய் ஆறுதலின் செட்டைகளால் பறந்து மலையடிவாரம் வருகிறது போலிருக்கிறது. வாரும், முனிவரே வாரும். உமது விசுவாசக்கிரியையை ஒளிப்பிடத்திலே ஒருவரும் அறியாமல் செய்தீர். அதன் வாசனையோ பரலோகத்தையும் பூலோகத்தையும் பரிமளித்து இந்நாளும் எந்நாளும் உம்மை எவரும் மதித்துப் பின்பற்ற ஏவுகிறது. ஆ! மரித்துப்போன விசுவாசிகளின் ஸ்தானம் "ஆபிரகாமின் மடி" என்று பேர்வழங்கப்படும்படியாக அவ்வளவு மகிமையாய் உமது விசுவாசத்தைத் திருஷ்டாந்தப்படுத்தினீர்.

முனிவர் தமது மகனை பலியிட்ட சில வருஷங்களுக்குள்ளாக சாராள் நூற்றிருபத்தேழு வயதுடையவளாய் மரித்தாள்.* இதுதான் முனிவர் தனித்தபின் நேரிட்ட முதலாம் மரணம். முனிவர் அதிகமாய் விசனப்பட்டார்; ஏனெனில் வீட்டை நடத்த வேறொருவருமில்லை. அவர் அவளைச் சொந்தநிலத்தில் அடக்கம்பண்ணவேண்டுமென்று கருதி, மக்பேலா என்னப்பட்ட குகையை கிரயத்துக்கு வாங்கி அதிலே புலம்பலோடும், கண்ணீரோடும் நேசமனைவியை அடக்கம்பண்ணினார். மரித்தோரை அடக்கம்பண்ணினதற்கு இதுதான் நேரான முதலாம் அத்தாட்சியாய் இருக்கிறது. அப்பால் அவர் சில காலம் தமது மனைவிக்காகத் துக்கங்கொண்டாடித் தமது நேசகுமாரனாகிய ஈசாக்கை வீடும் குடியுமாக்கக் கருதி, தனக்கு உண்மையுள்ள உக்கிராணக்காரனாயிருந்த எலியேசரைத் தன் இனத்

---

* ஆதியாகமம் முழுவதிலும் சொல்லப்படும் ஸ்திரீகளில் சாராளின் வயது மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது.

தாரண்டையனுப்பி, ஒரு பெண்ணை வரவழைத்து அவனுக்கு விவாகஞ்செய்துவைத்தார். தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் தகுந்த வயதில் பக்தியுள்ள ஒரு பெண்ணைத் தேடி அவர்களுக்கு விவாகஞ்செய்துவைப்பதும் ஒன்றா யிருக்கிறது.

அதன்பின்பும் தேவன் முனிவரை மேன்மேலும் ஆசீர்வதித்துவந்தார். அவருடைய வயது அதிகப்பட்டதோடு பலமும் அதிகப்பட்டது. அவர் கேத்தூராள் என்னும் பெண்ணை விவாகஞ்செய்து ஆறு குமாரரைப்பெற்று* தமது ஜீவகாலத்திலேயே அவ்வாறு பிள்ளைகளுக்கும் கொடுக்கவேண்டிய நன்கொடைகளைக்கொடுத்து அனுப்பிவிட்டு, மற்றச் சுதந்தரங்களையெல்லாம் ஈசாக்கின் வசம் ஒப்புவித்தார். முனிவர் நூற்றெழுபத்தைந்து வயதானபோதோ, இந்த உத்தமனை தேவன் தாழ்ந்த கானானிலிருந்து உயர்ந்த கானானாகிய மோட்சத்துக்கு வரவேண்டுமென்று சித்தங்கொண்டதால் முதிர்வயதிலே முதிர்ந்த விசுவாசத்தோடு தன் சுதந்தர தேசத்தையும் சொத்துக்களையும் மறந்து மரணவாகனமேறி பரமலோகஞ் சேர்ந்தார். அவருடைய உடலை ஈசாக்கும் இஸ்மவேலும் மக்பேலா கெபியில் அடக்கம்பண்ணினார்கள்.

ஆபிரகாம் முனிவருடைய சரித்திரமுழுவதிலும் நாம் கண்டறிகிற இரண்டு விசேஷித்த குறிப்புகள் அவருடைய கீழ்ப்படிதலும், விசுவாசமுந்தான். தேவனுக்குக் கீழ்ப்படிகிறதில் நமக்கு எவ்வளவு வருத்தங்களும் சங்கடங்களும் நேரிடுகிறாற்போல் காணப்பட்டாலும், நாம் அவருக்குக் கீழ்ப்படிய பின்தங்கவே கூடாது. தமக்குக் கீழ்ப்படிகிறவர்களைத் தேவன் மேன்மைப்படுத்துகிறார்; கீழ்ப்படியாமல் எதிர்த்துநிற்கிறவர்களுக்கு அவரும் எதிர்த்துநிற்கிறார். அதோடுகூட நாம் தேவனுடைய வார்த்தைகளை நம்பி விசுவாசிக்கவும்வேண்டும். நமக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கிருபைகளுக்கு விரோதமாக காரியங்கள் நடக்கிறதுபோலிருந்தாலும் அவைகளை நாம் கவனியாமல், அவருடைய வாக்கை நம்புகிறதே நமது வேலை என்றிருக்கவேண்டும். இவ்விருகுணங்களும் இருதயத்தில் ஸ்திரப்படுகிறது இலேசானதல்ல. ஆனால் தேவாவியின் உதவியைக்கொண்டு எவன் இவ்விருகுணங்களையும் விருத்திபண்ணும்படி முயற்சிசெய்கிறானோ அவன் தன்னை ஆபிரகாமின் குமாரனென்று சொல்லிக்கொள்ளலாம். ஆபிரகாம்முனிவர்

* இவ்வாறு குமாரரும் அரபிதேசத்துப் பல ஜாதிகளின் தலைவரானார்கள்.



இவ்விரு நற்குணங்களோடு கூடாரங்களிலேயே வாசம்பண்ணி நிலையான பட்டணமாகிய மோக்ஷத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்; நாமும் ஆவியின்படி ஆபிரகாமின் பிள்ளைகளாகி இவ்வுலகவாழ்வைச் சதமென்றெண்ணாமல் மறுலோக பாக்கியத்துக்கே நமது மனதை ஏறெடுப்போமாக.

# LOT.

# லோத்து.

லோத்து என்ற பேரை இதற்கு முந்தின விசுவாசமுனிவருடைய சரித்திரத்தில் கேட்டோமே. இதில் இவருடைய வரலாற்றைச் சற்று விபரமாய்ச் சொல்லிக்காட்டுவோம். நாம் பூர்வ மகாத்துமாக்களின் சரித்திர வரலாறுகளை வாசிக்கும்போது அவர்களில் விளங்கிய சிரேஷ்ட குணங்கள் இன்னதென்று கண்டு, அவைகளைப் பின்பற்றுகிறதோடு, அங்கங்கே விளங்கும் தீயகுணங்களை ஒழித்துவிடவும் பிரயாசப்படவேண்டியது. வேதாகமத்தில் அவர்களுடைய நல்வினை தீவினைகளாகிய இரண்டும் எழுதப்பட்டிருக்கின்றன. அதினாலே முதற்றரமான பக்தரிடத்திலும் நாம் சீ என்று அருவருக்கத்தக்க பல குணங்களைக் காண்கலாம். மனுஷசுபாவத்தைச் சரியாய்க் காட்டும் படங்களை வேதத்திலன்றி வேறெங்கும் காணக்கூடாது. இப்பொழுது நாம் சொல்லப்போகும் சரித்திரத்தில் அது நன்றாய் வெளிப்படுகிறதென்பதை நீங்கள் கண்டுகொள்ளுவீர்கள்.

லோத் என்பவன் விசுவாசமுனிவருக்கு மனைவியோடு கூடப்பிறந்த மைத்துனனும், தன்னோடு பிறந்த சகோதரன் மகனுமாய் இருக்கிறான். இவன் தகப்பனாகிய ஆரான் மரணத்துக்குப்பின்பு இவனும் இவனுடன் பிறந்த சாராளும் தேராக்கின் அடைக்கலத்தில் இருந்து வளர்ந்தார்கள் என்று தோன்றுகிறது. விசுவாசமுனிவர் ஊர் என்ற கல்தேயாவிலிருந்து புறப்பட்டகாலத்தில் லோத்தும் அவர்கள் கூட்டத்தோடு பயணப்பட்டுவந்தார். அதுமுதல் லோத்தும் ஆபிரகாமோடே தங்கி வீட்டிலும் வெளியிலும் அவனுக்குத் துணையாகநின்று, அவனோடே தேவனை ஆராதித்து தன் காலத்தைக் கிரமமாய்ச்

கழித்திருக்கிறான். பக்தனை அடுத்து ஜீவனம்பண்ணுவது பல வகைக்கு நல்லதுதான். தேவனைச் சிநேகித்து அவருடைய வழிகளை அறிந்த குடும்பத்தோடு ஒட்டிக்கொள்ளுகிறதால் தேவ சிநேகமும், அவனை வழிப்படுதலும், நெஞ்சத்துக்குக் கிட்டுமென்று சொல்லலாம்.

லோத் என்பவன் தேராக்கோடே சஞ்சரித்தகாலத்தில் தன் பிதாவுக்குரிய பங்கையும் ஆடுமாடுகளின் சுதந்தரத்தையும் உடையவனாயிருந்தான்; வரவர அவனுடைய ஆடுமாடுகளும் ஆஸ்திகளும் பெருகினபடியால் அவனும் சீமானானான். இவன் விசுவாசமுனிவரோடேகூட எகிப்துக்குப்போய் பஞ்சகாலத்தைக் கழித்துத் திரும்பவும் கானானின் எல்லைக்குள் வந்தபிற்பாடு இவனுடைய குடியிருப்பும் சற்று மாறும்படி நேரிட்டது. இந்த மாறுதலுக்குக் காரணம் அவனுடைய ஆஸ்தியின் வளர்ச்சிதான். லோத்துக்கு ஆபிராம்முனிவனைப்போல ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன. அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தன. அவ்விடத்திலிருந்த மேய்ச்சலும், விளைச்சலும் இருவருடைய குடித்தனத்துக்கும் போதாததாயிருந்தது என்பதே அதின் கருத்து. இதினாலே முனிவருடைய வேலையாட்களுக்கும் லோத்துடைய வேலையாட்களுக்கும் அடிக்கடி வாக்குவாதம் உண்டாயிற்று. ஒருவேளை இக்காலத்தில் லோத்து கானானிய பெண்ணொன்றை விவாகஞ்செய்திருக்கலாம். அந்த மனைவி மெதுவாய் லோத்தின் காதில் ஓதி பூர்வ குடும்பஐக்கியத்திலிருந்து பிரிந்து தன் மனமன்னனாயிருக்கும்படி குத்திவிட்டிருக்கலாம். இந்த சச்சரவு வரவர முற்றி லோத்தும் ஆபிரகாமும் அவரவர்மட்டில் பிரிந்து குடியிருக்கும்படியான ஒழுங்குகளைச் செய்ய ஏதுவாயிற்று. லோத்தைவிட ஆபிரகாமே இதற்காக அதிகமாய்ப் பிரயத்தனப்பட்டார்போல் தோன்றுகிறது. மனஸ்தாபத்தோடு முகமுகமாய் வாழ்ந்து அதை அதிகப்படுத்திக்கொள்ளுகிறதைவிட தூர இருந்து சமாதானமாய் வாழ்வது நலமென்று அவர் எண்ணினார்போலிருக்கிறது; மேலும் எந்தப் பிரிவினையையும் அதின் ஆரம்பத்தில் திருத்திக்கொள்வது நலம் என்று நினைத்தார்போலுமிருக்கிறது. நல்லோரின் பிரிவினைகள் ஜலப்பிளப்பைப்போல் சீக்கிரம் கூடிக்கொள்ளுகிறதாயிருக்கிறது; ஆனால் பொல்லாரின் பிரிவோ கற்பிளப்பைப்போல் ஒருநாளும் ஐக்கியப்படக்கூடாததாயுமிருக்கும்.

இப்படி இருவருடைய மேய்ப்பருக்குள்ளும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்த காலத்தில் முனிவர் தமது மைத்துனன்



லோத்தைக் கூப்பிட்டு, ''எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்த தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது; நீ என்னை விட்டுப் பிரிந்துபோக மனமானால் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன்'' என்று சொன்னார். இதினாலே ஐசுவரியம் விருத்தியானாலும் ஆபிரகாமுடைய குணம் எவ்வளவு சாந்தமும் அமைதலும், இணக்கமுமுள்ளதாயிருந்தது என்று தோன்றுகிறது.

லோத்து இப்படி ஒரு சமயம் கிட்டவேண்டுமென்றுதான் காத்திருந்தார். தன் மட்டில் வாழ்ந்து லட்சாதிபதி என்று பேர் விளங்கவேண்டுமென்று தனக்குள்ளே கருதியிருந்தபடியால் இதைக் கேட்டவுடனே அதிக செழிப்பும் நீர்வளமுமுள்ள சோதோமின் மைதானத்தைத் தெரிந்துகொண்டார். இவர் முனிவருக்கு இளையவனும், இம்மட்டும் அவருடைய ஆசீர்வாதத்துக்குள்ளும், ஆதரவுக்குள்ளும் இருந்ததால் இடம் தெரிந்துகொள்வதில் அவருக்கு முதலாம்முறையைக் கொடுப்பது நியாயமாயிருக்கும். ஆனால் தன்னயமும், சுயவாழ்வும் மனதில் மேவிட்டிருக்கும்போது யாரைத்தான் மதிக்க மனம் எழும்பும்? எல்லாரும் தாழவேண்டும்; தான்மாத்திரம் வாழவேண்டுமென்று பிரயத்தனப்படுகிற லோத்தின் நெஞ்சத்தில் ஆபிரகாமை மதித்து, நீர் முதலாவது தெரிந்துகொள்ளும் என்று சொல்ல மனம் வருமா? அநேகருடைய தலை வாழ்வு தாங்காது. லோத்தும் அதில் சேர்ந்தவர், அவர் விரும்பிய வாழ்வே அவருக்குக் கண்ணியாயிருந்தது.

தனக்கு இஷ்டமான இடத்தைத் தெரிந்துகொள்ளும்படி ஆபிரகாம் சொன்னவுடனே லோத்தும் வெகு தேவதாபக்தியோடு தன் பிற்காரியங்களையெல்லாம் ஆராய்ந்துபார்த்து செய்கிறவனைப்போல தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து சோதோமைத் தெரிந்துகொண்டார். அவர் தெரிந்துகொண்ட இடமானது அவர் உள்ளத்தில் இருந்த பேராசையை நன்றாய்க் காட்டிவிட்டது என்று சொல்லலாம். அந்தச் சோதோமியர் மகா பொல்லாதவர்களாயிருந்தார்கள்; அதை லோத்து நன்றாய் அறிந்திருந்தார். கர்த்தருக்கு முன்பாக அவர்கள் மகா பாவிகளாய் இருந்தார்கள். லோத்து தன் கண்களின் காட்சியைக் கவனித்தானேயன்றி, காலின்கீழ் இருந்த கண்ணிகளைக் கவனிக்கவே இல்லை. ஒருவேளை அவன் மனைவி அந்த

ஊராளாய் இருந்தாலும் இருக்கலாம். அவர்கள் எல்லாரும் தனிமையாய்க் குடித்தனம்பண்ணி வாழ்வடையும்படி தங்கள் ஆட்டு மந்தைகளோடும், மாட்டு மந்தைகளோடும், ஒட்டகங்களோடும் புறப்பட்டுப்போனார்கள்.

இவர்கள் பிரிந்துபோன விஷயம் ஆபிரகாமுடைய ஆவிக்கு மிகுந்த விசனத்தைக் கொடுத்திருக்கவேண்டியது. என்றாலும் இந்தப் பிரிதலில் தேவனுடைய இரண்டு செயல்கள் தெளிவாய் வெளிப்பட்டன என்று சொல்லலாம். இருவரும் ஒன்றாய் இருப்பதால் இருவர் ஆஸ்தியும் ஒருவர் ஆஸ்திபோல் அவரவர் எண்ணி பெருமைக்கு இடம் கொடுக்கலாம். அப்படிப்பட்ட கேடு முனிவருடைய மனதில் உண்டாகி அவருடைய விசுவாசத்தைக் கெடுக்காதபடி இம்மட்டில் பிரித்துவிட்டிருக்கலாம். அதுவுமன்றி ஆபிரகாமை மற்றவர்களைப்போல பொதுவான வகையாய் நடத்தாமல் விசேஷித்த ஆசீர்வாதங்களினாலே நிரப்பும்படி அவரை இப்படித் தனிமைப்படுத்தினார் என்று சொல்லவேண்டியது. ஏனெனில் முனிவர் எவ்வளவுக்குக் கூட்டத்தைவிட்டு தனிப்படுத்தப்படுகிறாரோ அவ்வளவுக்கு அவருக்கு ஆசீர்வாதங்கள்மேல் ஆசீர்வாதங்கள் இறங்கின என்பதைக் காண்கிறோம்.

லோத்து என்பவன் சுயாதீனனாகி சோதோமில் குடியேறி சாங்கோபாங்கமாய் வாழ்ந்துகொண்டிருந்தகாலத்தில் அவ்விடத்தில் ஒரு யுத்தமுண்டாயிற்று. இதுதான் உலகத்திலுண்டான முதலாம் யுத்தம். இதற்குமுன் உலகத்தில் யுத்தம் என்ற சத்தம் கேள்விப்படவே இல்லை. லோத்து வாசம்பண்ணின திசைகளில் ஐந்து சிற்றரசர் இருந்தார்கள். அந்த ஐந்து அரசரும் நம்முடைய தேசத்துக்கு வடகிழக்காய் இருக்கிற பார்சிய அரசனுக்கு அக்காலத்தில் கப்பம் கட்டிவந்தார்கள். பன்னிரண்டு வருஷமாக கப்பங்கட்டிவந்த இவர்கள் பதின்மூன்றாம் வருஷத்தில் பந்துகட்டுபண்ணி கப்பம் கட்டமாட்டோம் என்று சொல்லி ஆட்சேபித்தார்கள். உடனே பார்சிய அரசனாகிய கெதர்லாகோமேர் என்பவன் தன்னோடு வேறே மூன்று அரசரைக் கூட்டிக்கொண்டுவந்து அந்த ஐந்து அரசரையும் முறியடித்து, அவர்கள் தேசங்களைக் கொள்ளையிட்டு, குடிகளை அடிமைகளாக்கி வெற்றி விருதோடு தன் தேசத்துக்குத் திரும்பினான். இந்தக் கொள்ளையில் லோத்தும் அவன் சேனையும் சேர்ந்திருந்தது. ஆ, லோத்தே! தானாய் விழப்போகிறீரே, இது தானா உமது வாழ்வு? சோதோமைத் தெரிந்துகொண்டீரே!



சோதோம் தரும் லாபம் இதுதானா? ஆஸ்தியைப் பெருக்கும்படிப் பிரிந்தீரே! பார்சிய அரசனுக்கு ஒப்புவிக்கத்தான் சேர்த்தீரோ? செழிப்பைப் பார்த்து சோதோமுக்கு ஓடினீரே! இப்போ சலித்துப்போயிற்றா? உலகவாழ்வை முதலாவதாக்குகிறவர்களுக்கு இதுவும் சம்பவிக்கும், இதற்கு மேலும் சம்பவிக்கும்.

இந்த யுத்தத்தில் தப்பியோடிப்போன ஒரு மனுஷன் நடந்த வரலாறுகளையெல்லாம் ஆபிரகாமிடத்தில்போய் சொன்னான். அச்செய்தி கேட்டவுடனே ஆபிரகாம் தன் வீட்டில் பிறந்து கைப்படிந்தவர்களாகிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கு ஆயுதம் தரிப்பித்து, தானே அவர்களை நடத்தும் தளகர்த்தனாகி அவர்களை மடக்கும்படிப் புறப்பட்டார். அவர் அந்த நாலு அரசரையும் தாண் என்ற இடம்மட்டும் தொடர்ந்து பின்பு பல பவுஞ்சுகளாகத் தம் படைகளைப் பிரித்து எதிரிகள்மேல் விழுந்து அவர்களை ஓடஓடத் துரத்தி சகல பொருட்களையும் திருப்பிக்கொண்டுவந்தார். இந்த யுத்தம் அத்தேசம் எங்கும் பிரபலமாயிற்று. இதைக் கேள்விப்பட்ட சாலேமின் அரசனாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து ஆபிரகாமை ஆசீர்வதித்து ஜெயவரம் சூட்டினார். ஆபிரகாம் அந்த ஆசாரியனுக்கு எல்லாவற்றிலும் பத்திலொன்று செலுத்தினார்.

இந்த ஜெயசெய்தி சோதோமின் அரசனுக்கும் மற்றச் சிற்றரசருக்கும் மட்டற்ற மதிப்பைக் கொடுத்திருக்கும் என்பதை யார் ஆட்சேபிக்கக்கூடும். அவர்கள் அக்கொள்ளைப்பொருட்களில் ஒருபாகத்தை முனிவருக்குக் கொடுக்கும்படி விரும்பினாலும் முனிவர் அதற்கு இணங்கவில்லை. ஆபிரகாம் என்னால் பெரியவீட்டுக்காரனாகிவிட்டான், என்று சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் ஒரு பாதரட்சையின் வாரையாகிலும் எடுத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிட்டார். இவர் அநேகரைப்போல் பொருளாசைக்காரனாய் இருந்தால் இதுதான் நல்லசமயம் என்று அகப்பட்டதையெல்லாம் பிடுங்கிக்கொள்ளுவார். ஆனால் அவரோ இவ்வுலக சம்பத்தையும், பேர் பிரஸ்தாபத்தையும் நாடாமல் விசுவாசத்தினாலே மறுலோகத்தையே கருதி, மச்சு மாளிகையில் அல்ல கூடாரத்தில் தமது ஜீவகாலத்தைக் கழிக்க மனமுடையவராய் இருந்தார். நாம் இவ்வுலகத்தில் வசித்தாலும் இவ்வுலகத்தை எவ்வளவுக்கு மதிக்கவேண்டும் என்பதற்கு இதில் நல்ல போதனை

இருக்கிறது. சோதோமின் அரசர் கேட்டுக்கொண்டபடி முனிவர் சம்மதித்திருப்பாரானால் அத்திசைகளிலுள்ள சகல பிரபுக்களிலும் அவர் சீமானாகிவிடுவார்; அவரோ மனுஷர் முன்பாகத் தம்மை வல்லமையுடையவனாக்கும்படி நாடாமல் விசுவாசத்தில் வல்லவனாய் விளங்குவதையே பெரிதென்று எண்ணினார். மேலும் ஆபிரகாம்முனிவர் இப்படித் தன்னை வெறுத்த விஷயமானது, பொருளாசையைச் சதமென்று நம்பி அதை முன்னிலும் அதிகமாய் விருத்திபண்ணும்படி சோதோமை நாடின லோத்துக்கு என்றென்றைக்கும் உணர்த்திக்காட்டும் போதனையாயிருக்கிறது.

சோதோமியர் ஆபிரகாமால் விடுவிக்கப்பட்டுத் தம்தம் அரமனைகளையும் ஆஸ்திகளையுமுடையவர்களாய் வாழ்வடைய மறுபடியும் துவக்கினார்கள். அவர்கள் அடிபட்டாலென்ன, பிடிபட்டாலென்ன? வறுமையானாலென்ன, அடிமையானாலென்ன? அவர்கள் கேடு அவர்களைவிட்டு நீங்கவில்லை. அது அடிபட்ட ஜலம்போல் அந்நேரம்மாத்திரம் விலகி பின்னேரத்தில் கூடிக்கொண்டது. அவர்கள் தங்களை இப்படி ஆச்சரியமான விதமாய் மீட்டு இரட்சித்த ஆபிரகாமின் தேவனுக்கு அந்நேரமுதல் அடிமைகளானார்கள் என்றால் அது நியாயமாயிருக்கும். அப்படி அவர்கள் ஆகவில்லை. அவர்கள் நடுவில்போய்க் குடியிருந்த நீதிமானாகிய லோத்தாவது இந்த துன்மார்க்கரோடு வாழ்ந்ததற்கு வந்த லாபத்தைக் கண்டோம் என்று உணர்ந்து அப்புறமாவது தன் குடியிருப்பை மாற்றிக்கொண்டாரா? இல்லை. அவரிடத்திலிருந்த சகல நீதியுள்ள கிரியைகளோடேயுங்கூட இந்த கேடுகெட்ட பொருளாசையுமிருந்தது. மனபக்தியோடே பணபக்தியையும் இவர் ஒன்றுபோல வளர்க்கலாம் என்று பிரயாசப்பட்டார்போல் தோன்றுகிறது. துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் இருக்கிறதே மெய்பக்திக்கு அநுசரணையாய் இருக்கும் என்பதை லோத்து தன் ஜீவியத்தில் காட்டப் பிரயாசப்படவில்லை. இது அவரைப்பற்றிச் சொல்லக்கூடிய ஒரு பெரிய குறையாயிருக்கிறது.

முந்தின யுத்தமுண்டாகி சில வருஷங்களுக்குள்ளாக சோதோமியருடைய அக்கிரமம் வானபரியந்தம் வளர்ந்துவிட்டது. முன்னொருகாலத்தில் இருந்தவர்களுடைய அக்கிரமநிமித்தம் அவர்களைத் தண்டிக்கும்படி தேவன் ஜலப்பிரளயத்



தை அனுப்பினார். இவர்களுடைய அக்கிரமத்திற்கு ஜலத்தால் தண்டிப்பது லேசான தண்டனைபோல் காணப்பட்டது. இவர்கள் அக்கினிப்பிரளயத்தால் அழிக்கப்படவேண்டுமென்பது தேவதிருவுளத்துக்கு ஏற்றதாயிருந்தது. அண்டசராசரங்களையும் படைத்த தேவனே சோதோமை அதோகதியாக்கும்படியாக இறங்கிவந்தார். அதன் வரலாறுகளைத் தெளிவாய்ச் சொல்லுவது நியாயமாயிருக்கும்.

ஆபிரகாம்முனிவர் ஒருநாள் சாங்கோபாங்கமாய்த் தமது கூடாரவாசலில் உட்கார்ந்திருந்தார். அப்போது சுமார் உச்சிவேளையாயிருந்தது. முனிவர் முகமறியாத மூன்றுபேர் அப்போது வந்து அவரோடேகூட இருந்து பலகாரியங்களைப் பேசிக்கொண்டிருந்து, புசித்து இளைப்பாறிச் சாயங்காலவேளை தங்கள் வழியேபோக ஆரம்பித்தார்கள். அவர்களை இன்னாரென்று அறியாத முனிவர் வழியனுப்பும்படி கொஞ்சதூரம் போனார். அப்படிப்போகவே அம்மூவரில் சிரேஷ்டராகக் காணப்பட்டவர் ஆண்டவராய் இருந்தார். அவர் வேஷமாறி மனுஷனைப்போல் காணப்பட்டார் என்று சொல்லவேண்டியது. ஆண்டவர் தமது சுயசாயலின்படி மனுஷருக்குக் காட்சியானால் அம்மனுஷன் அந்நிமிஷமே மாண்டுபோகவேண்டியது. ஆதலால் மனுஷருடைய பலவீனத்தினிமித்தம் அவர் அந்தச் சாயலோடு காணப்படவேண்டியதாயிருந்தது. கொஞ்சதூரம் போகவே கர்த்தர் முனிவரை நோக்கித் தாம் சோதோமின் அக்கிரமத்தினிமித்தம் அதையும், அதையடுத்த பட்டணங்கள் அனைத்தையும் அதோகதியாய் அழித்துவிடப்போகிறோமென்று சொன்னார். இச்செய்தி கேட்டவுடனே முனிவர் அசந்துபோனார். தமது ஏகசுதனை மோரியாமலைமேல் கொண்டுபோய் பலியிடவேண்டுமென்று உண்டான சத்தத்தைவிட இது அதிக வல்லமையாய் அவர்மனதில் பட்டது. தேவன் தமக்குப் பிரியமான காணிக்கையாக ஒரு உயிரை எடுத்துக்கொள்ளுகிறதற்கும், தமக்கு விரோதமாய் பாவஞ்செய்ததினிமித்தம் அவர்களை அழிக்கிறதற்கும் வெகுவித்தியாசம் உண்டென்பதை மெய்யுணர்வுள்ளவர்களெல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். பக்தர் மற்றவர்களுடைய அழிவை விரும்புகிறதில்லை. துன்மார்க்கரோ மற்றவர்களுடைய அழிவுக்கு அல்லும்பகலும் காத்திருக்கிறது மாத்திரமல்ல, அதற்குரிய வழிவகைகளையும் கண்ணிகளையும் ஆயத்தப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். சோதோமின் அழிவைக்குறித்துச் சொன்னவுடனே ஆபிரகாம் அதற்காக விண்ணப்பம்பண்ணத் துவக்கி

ஞர். அவர் பண்ணின விண்ணப்பம் நீதிமான்களுக்காகவே இருந்தது. அவர் கர்த்தரை நோக்கி, ஆண்டவரே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் சோதோமில் வசிக்கலாமே, அவர்களெல்லாரையும் துன்மார்க்கரோடு அழிப்பீரோ? என்று கேட்டார். இதுதான் அவ்விடத்திலுள்ள நீதிமான்களைப்பற்றிச் சொல்லும் குறைந்ததொகை என்று ஆபிரகாம் எண்ணியிருக்கலாம். அத்திசைகளில் நூற்றுக்கணக்கான விசுவாசிகள் இருக்கலாம் என்று அவர் நினைத்தார்போலிருக்கிறது. அதற்குக் கர்த்தர் நான் சோதோமில் ஐம்பது நீதிமான்களைக் கண்டால் அழிக்கமாட்டேன் என்றார். ஆ! கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ள தேவன். அவர் பாவிகளின் அழிவையல்ல, அவர்கள் மீட்பையே எப்போதும் கருதிக்கொண்டிருக்கிறார். அதன்பின்பு ஆபிரகாம் நாற்பத்தைந்து நீதிமான்களினிமித்தமும், நாற்பது, முப்பது, இருபது, பத்து நீதிமான்களினிமித்தமும் அதைத் தப்பவிடக்கூடாதோ என்று கருத்தோடு பிரயாசப்பட்டுக் கெஞ்சினார். முனிவர் கேட்டபடியெல்லாம் கடவுளும் இரங்கினார். பத்து நீதிமான்கள் இருந்தாலும் நான் சோதோமை அழிக்கமாட்டேனென்று கர்த்தர் சொன்னார். அதற்கப்புறம் முனிவர் தாமே வெட்கப்பட்டு சும்மாய் நின்றுவிட்டார். அச்சமயத்தில் லோத்தின் வீட்டில் பத்து ஆத்துமாக்கள் இருந்தார்கள்போலிருக்கிறது. அந்தப் பத்துப்பேருமாவது தேவபக்தியுள்ளவர்களாயிருந்திருக்கலாம் என்று முனிவர் எண்ணி அந்தத் தொகைமட்டும் மன்றாடினார். அதற்கும் வழியில்லாமல் போயிற்று. ஆ! இது எவ்வளவு துயரமான செய்தி. அநியாயமும் அக்கிரமமும் சோதோமைக் கவிந்துகொண்டிருந்ததால் அவ்விடத்தில் நன்மை வாசமாயிருக்கவில்லை. கடைசியாக முனிவர் கர்த்தர் தமது சித்தத்தின்படியே நிறைவேற்றுவாராக என்று அமைதலாய்த் திரும்பிவிட்டார்.

ஆண்டவர் ஆபிரகாமோடே பேசிமுடித்தபின்பு சோதோமை அழிக்கும்படி தமது தூதருக்குக் கட்டளையிட்டார். அக்கட்டளையை நிறைவேற்றும்படியாக இரண்டு தூதர் சோதோமுக்குப் போனார்கள். சோதோமியருடைய அழிவு எவ்வளவுக்கு நெருங்கினதோ அவ்வளவுக்கு அவர்கள் அக்கிரமத்தின் அளவு வெளிப்பட்டது. அந்த தூதர் சோதோமூரைச் சேரும்போது லோத்து ஊரின் வாசலிலே உட்கார்ந்திருந்தார். முற்காலத்தில் ஊரின் பெரியமனுஷர் வேலை ஓய்ந்து வழக்குப்பேசவும், கலந்து கதைபேசிக் காலங்கழிக்கவுமாக ஊரின்



முகப்பில் கூடிவருகிறது வழக்கம். அந்த வழக்கத்தின்படியே அவர் உட்கார்ந்திருக்கையிலே தனக்கெதிரே வருகிற பரலோகவழிப்போக்கரைக்கண்டு அவர்கள் பூலோகவழிப்போக்கராக்குமென்று எண்ணி, தங்கள் ஆசாரப்படி எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து "ஆண்டவன்மார்களே அடியேனுடைய வீட்டுமுகமாய் நீங்கள் திரும்பி உங்கள் கால்களைக் கழுவி இராத்தங்கி காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம்" என்று கூப்பிட்டார். அவர்களோ அல்ல அல்ல, நாங்கள் வீதியில் இராத்தங்குவோம் என்று சொன்னார்கள். கடைசியாக லோத்து அவர்களை மிகவும் வருந்திக்கேட்டுக் கொண்டதின்பொருட்டு அவருடைய வீட்டுக்குப் போனார்கள்.

லோத்து என்பவர் இச்சமயத்தில் காண்பித்த அன்பும் உபசாரக்குணமும் புகழப்படத்தக்கதுதான். அவரிடத்தில் வெளிப்படுகிற இந்த நற்குணங்களோடுகூட துன்மார்க்கரோடே வாசம்பண்ணும்படி கடைசிமட்டும் அவரிடத்தில் விளங்கிய தீயகுணமும் இருந்தது. வந்த விருந்தாடிகளுக்கு லோத்து அப்பங்களைச்சுட்டு அமுது அளித்தார். அவர்கள் படுக்கிறதற்கு முன்னதாக சோதோம் பட்டணத்தார் முழுவதும் லோத்தின் வீட்டைச்சுற்றிலும் பட்டாளம் கூடினாற்போல் கூடிநின்றுகொண்டு லோத்தைக் கூப்பிட்டு, "இந்த இராத்திரி உன்னிடத்தில்வந்த மனுஷர் எங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்தில் வெளியே கொண்டுவா" என்று கேட்டார்கள்.

இவ்வளவு கலசத்துக்கும் குழப்பத்துக்கும் காரணமென்ன? அந்தப் பிரயாணிகளின் அழகும், சவுந்தரியமும், அவர்களை ராஜகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணச்செய்து, அவர்கள் திரண்டதிரவியத்தோடு வந்திருக்கலாமென்று உத்தேசித்து, அவ்வளவையுங் கொள்ளையடித்து ஊர்ப்பங்கு போட்டுவிடலாம் என்று எண்ணியிருக்கலாம்; அல்லது அவர்கள் இராஜவம்சத்தைச்சேர்ந்த வேவுகாரராயிருந்து இந்தப் பட்டணத்தின் ஸ்திதியை அறியும்படி அந்தரங்கமாய் வந்திருக்கலாமென்று தப்பாய் யோசித்திருக்கலாம். அல்லவென்று லோத்து தன் குமாரத்திகளை அந்த ஊர் மாப்பிள்ளைகளுக்கு கலியாணஞ்செய்யத் திட்டஞ்செய்திருக்கிறதால் யாரோ புது மாப்பிள்ளைகள் வந்து அவர்களைக் கொண்டுபோகிறார்களாக்குமென்று எண்ணி, அந்த மாப்பிள்ளைகளுடைய துர்ப்போதனையால் கூடின கலகக்கூட்டமாயிருக்கலாம். எந்த முகாந்தரமிருந்தபோதிலும் இதில்

சோதோமியருடைய அக்கிரமம் நன்றாய் வெளிப்பட்டது. அவர்கள் தங்கள் அக்கிரமங்களைப் படம்பிடிக்கும்படி இப்படிக் கூடிவந்தார்களென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது.

லோத்து அவர்களுடைய மூர்க்கத்தைச் சாந்தப்படுத்தும்படி தன்னாலானமட்டும் கெஞ்சி மன்றாடினாலும் அந்தப் பிரபல துஷ்டர் அவர் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்லை. அவர்கள் லோத்துவை அசட்டைபண்ணி "அப்பாலே போ, பரதேசியாய்வந்த இவனா நியாயம்பேசுகிறது" என்று சொல்லி அவனை அடிக்கவும், அவர் வீட்டுக்கதவை உடைக்கவும் கிட்டினார்கள். ஆ, சோதோமே! உன் பாவம் வளரக்கூடியமட்டும் வளர்ந்தாயிற்று; அது செழித்துப் பழுக்கக்கூடியமட்டும் செழித்துப் பழுத்தாயிற்று. உன் அறுப்புக்காலமும், உன் அழிவுகாலமும் நெருங்கும்போது நீ பூலோக மனுஷரை மாத்திரமல்ல, பரலோக வாசிகளையும் மனநோவடையச் செய்கிறாய். உன் பாவம் வானபரியந்தம் எட்டி பரமபிதாவின் கிருபாசனத்தையும் முட்டினதே. அது லோத்துவின் கதவை வந்து உடைப்பது அதிசயமா! ஆ! நமது பாவம் நம்மை கீழ்நோக்கியும் கெடுக்கிறது, மேல்நோக்கியும் கெடுக்கிறது. கீழ்நோக்கி அது நம்மைப் பாதாளத்தின் கதவில் முட்டும்படி செய்கிறது; மேல்நோக்கி அது பிதாவின் ஆசனத்தையும் அசைத்து அவருடைய கோபாக்கினையைக் கிளப்பிவிடுகிறது.

சோதோமியர் லோத்துவைத் துன்பப்படுத்துகிறதைக் கண்ட சம்மனசுக்கள் கோபாக்கினையால் மூண்டு லோத்துவைத் தங்கள் அண்டைவீட்டுக்குள் இழுத்துக்கொண்டு கதவைப்பூட்டி தெருவாசலில் இருந்த சிறியோரும் பெரியோருமாகிய மனுஷருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள். அப்பொழுது அவர்கள் வாசலைத்தேடி அலுத்துப்போனார்கள். குருட்டாட்டம் பிடித்தபின்பாவது அவர்கள் மனந்திரும்பக் கூடாதா? அப்புறம் அவர்கள், ஐயோ! அதமானோம் என்று அபயமிடுகிறதற்குப் பதிலாக மறுபடியும் கதவை உடைக்கும்படி தடவித்திரிவானேன்? அவர்கள் மனந்திரும்பி குணப்படும்படி இந்த அற்புதம் போதாதா? அற்புதங்களைக் கண்டால் விசுவாசிப்போம் என்று சொல்லுகிறவர்கள் பேச்சை நாம் நம்பவேகூடாது. அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக ஆயிரம் அற்புதங்கள் நடந்தாலும் அவர்கள் மனந்திரும்பமாட்டார்கள். இரட்சண்யபாதைக்கு வெகு தூரமாகி அழிவுக்குச் சமீபிக்கும்போதுதான் ஆத்துமா அற்புதம் வேண்டுமென்று விரும்புமென்று சொல்லலாம். இவையெல்லாம் கடின இருதயத்தின்



குணங்குறியே அன்றி கனிந்த இருதயத்தின் குணங்குறிகள் அல்ல. சோதோமியர் இவ்வளவு பகிரங்கமாய் நடந்த அற்புதங்களைக் கண்டும் தங்கள் கடினமனதிலிருந்து சீர்திருந்தவில்லை என்பதைக் கவனமாய்த் தியானிக்கவேண்டியது.

அப்பால் அந்த பரமபுருஷர் சோதோமை அழிக்கும்படியாகவே தாங்கள் வந்ததாக லோத்துவுக்கு அறிவித்து, லோத்துவை நோக்கி, "இவ்விடத்தில் உனக்கு இன்னம் யார் இருக்கிறார்கள்? மருமகனாவது உன் குமாரனாவது, உன் குமாரத்திகளாவது பட்டணத்தில் உனக்கிருக்கிற எவர்களாவது இருந்தால் அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டுபோ" என்று உத்தரவு கொடுத்தார்கள். அப்பொழுது லோத்து தன் குமாரத்திகளுக்குத் திட்டம்பண்ணியிருந்த மருமக்கள்மாரண்டைபோய் சங்கதிகளைச் சொல்லித் தன் குடும்பத்தோடு பட்டணத்தை விட்டு வரும்படி கேட்டார். அவர் பேச்செல்லாம் அவர்களுக்கு "செவிடன் காதிற் சங்கு ஊதினதுபோல்" இருந்தது. இவ்வளவு சங்கதிகளுக்குள்ளாக இராமாறி கிழக்குவெளுத்தது; சோதோமை அழிக்கும் நேரமும் வந்தது. அப்போது தூதர் லோத்துவையும் அவர் மனைவி மக்களையும் கட்டாயமாய்ப் பட்டணத்துக்கு வெளியே கொண்டுபோய்

"உன்ஜீவன் தப்ப ஓடிப்போ,
பின்னிட்டுப்பாராதே,
இந்தச்சமபூமியில் எங்கும் நில்லாதே,
நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ"

என்று கட்டளையிட்டார்கள். இந்தக் கட்டளை லோத்துவுக்கும் விசேஷமாய் அவர் மனைவிக்கும் மக்களுக்கும் மட்டற்ற விசனத்தைக் கொடுத்திருக்கும் என்பது மெய். லோத்துவைப் போகும்படி சொன்ன மலை சற்று தூரமாயிருந்ததால் அவர் மறுபடி[illegible]யும் மன்றாடி சமீபமாயிருந்த ஒரு ஊரில்போய் தாம [illegible] உத்தரவுகேட்டார். அந்தச் சிற்றூரும் அழிவுக்கு திக்கும்படி [illegible]டிருந்தது; ஆனால் லோத்துவினிமித்தம் அது அழி நியமிக்கப்பட[illegible]ப்பட்டு அவருக்கு வாசஸ்தலமாகக் கொடுக் விலிருந்து நீக்க[illegible]லோத்து சோவார் என்ற அந்தச் சிற்றூருக்கு கப்பட்டது. [illegible]ரியன் உதயமாயிற்று. அப்பொழுது கர்த்தர் வரும்போது [illegible]லும் கொமோராவின்மேலும் வானத்திலிருந்து சோதோமின்[illegible]தகமும் வருஷிக்கப்பண்ணி அந்த பட்டணங் அக்கினியும் க[illegible]ச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்க களையும், அந்[illegible]

ளின் எல்லாக்குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார். ஐயோ, சோதோமே! நான் உனக்காகப் புலம்புகிறேன். நீ ஒருகாலத்தில் இச்சிக்கப்படத்தக்க தேசமாயிருந்தாய்; நீ அரசரின் அரண்மனைகளினாலும் பிரபுக்களின் மாளிகைகளாலும் பிரகாசித்தாய்; உன் நிலவளமும் நீர்வளமும் சகல ஜந்துக்களையும் உன்னண்டை இழுத்தது. ஆ! நீ கர்த்தருடைய தோட்டத்தையும் ஏதேனையும்போலிருந்தாய்; இப்போதோ உன்னதமானவர் உன் அக்கிரமத்தினிமித்தம் உன்னைச் சிறுமைப் படுத்திவிட்டார். அவர் உன் மகிமையை உரிந்து உன்னை உவர்நிலமாக்கினார். செல்வம்பொழிந்த உன் நாட்டில் இப்போ சாக்காற்று வீசுகிறது. நீ கசப்புள்ள பிச்சும் அநீதிக்கட்டுமுள்ள தேசமுமானாய். சகலராலும் பேர்பெற்ற நீ பழமொழியானாய். உன்னிலிருந்து மோகஅக்கினி எழும்பி வானத்துக்கேறிற்று; ஆனால் உன்னதத்திலிருந்து கந்தக அக்கினி எழும்பி உன்மேல் இறங்கிற்று. இவ்வளவு சாபமும் உன்னதமானவரை அசட்டைசெய்து உன் வழிகளின்படி நடந்ததினால் உனக்கு லபித்தது. நீ அவரோடு போர்செய்தாய்; அவர் உன்னை அதோகதியாக்கிவிட்டார். உன் அழிவை இன்று கேட்கிற நான் நடுநடுங்கி தலைகுனிந்து

சர்வ வல்லமையுள்ள தேவனே
நீர் பரிசுத்தர், பரிசுத்தர்;
உமது வழிகள் நீதியுள்ளவைகள்,
உமது செயல்கள் சத்தியமுள்ளவைகள்

என்று அறிக்கையிடுகிறேன்.

சோதோம் அக்கினியால் வேகுகையில் சோவாருக்கு ஓடின
லோத்துவின் மனைவிக்கு அவள் விட்டுப்போன ஆஸ்திகள்
மேலும், ஆடு மாடுகள்மேலுமே கவனமிருந்தது. பொரு ... ளா
சைக்காரன் பரலோக பயணத்தில் நிலையாய் ஓடுவது வ ... ருத்தம்.
ஒட்டகமானது ஊசியின் காதில் நுழைகிறது எளி ... தாயிருந்தா
லும் ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் சேருகி ... றது எளிதல்ல
என்று இரட்சகர் சொன்ன வாசகம் சத்திய ... ...
வின் மனைவி தன் சொத்துகளை இழந்துபோ ... ான். லோத்து
துதனுடைய கட்டளைக்கு விரோதமாகப் பி ... மனமற்று தேவ
"உப்புத்தூண் ஆனாள்." ... ிட்டுப்பார்த்து
"உப்புத்தூண் ஆனாள்" என்ற வாசகம் ...
உன் உடம்பு சிலிர்க்கச் செய்யவேண்டா ... சிக்கிறவர்களே!
... லோத்துவி...



மனைவி சோதோமின் அழிவுக்குத் தப்பினாலும், அதைப் பின்தொடர்ந்த சாபத்துக்குத் தப்பவில்லை.

"உப்புத்தூண் ஆனாள்"

என்ற வாசகம் சோதோமின் கந்தக அழிவை நமது கண்களுக்கு முன்பாக சிறியதாக்கிவிடுகிறது. இவளுடைய அக்கிரமமானது சகல சோதோமியருடைய பாவங்களிலும் மிஞ்சினதாயிருந்தது என்று உணர்த்துகிறதுபோல் இருக்கிறதல்லவா? சோதோமின் அழிவுக்கு இவள் கிரீடம்போல் இருக்கிறாள் அல்லவா? இவள் நரகமாகிய நித்திய சவக்கடலில் மானிடர் வந்து சாடி நாசமடையாதபடி அதின் நடுவே நிற்கும் உன்னத சிகரம்போல் விளங்கும் எச்சரிப்பு ஸ்தம்பமாய் இருக்கிறாள் என்று சொல்லலாம்.

சோதோமியர்மேல் இறங்கின இந்த தண்டனையானது மட்டு மிஞ்சினது என்று சொல்லவேகூடாது. இதோ கர்வமும், ஆகார திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமாகிய இவைகளே சோதோமின் அக்கிரமமாயிருந்தது. சிறுமையும் எளிமையுமானவருடைய கையை அவர்கள் பலப்படுத்தவில்லை; அவர்கள் தங்களை உயர்த்தி கர்த்தருக்குமுன்பாக அருவருப்பானதைச் செய்தார்கள். அதை அவர் கண்டபோது அவர்களை ஒழித்துவிட்டார் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி உரைத்திருக்கிறார் (எசே. 16. 49, 50.). பரி. யூதா சொல்லுகிறபடி "அவர்கள் நித்திய அக்கினியின் ஆக்கினையையடைந்து திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்."

சோதோமியருக்குள் இருந்த பாவங்களை நாம் இப்போது எத்தனையோ ஊர்களிலும் பட்டணங்களிலும் காணலாம். மெய்யாகவே அவர்களுக்குக் கிடைத்த கிருபையிலும் நமக்குக் கிடைத்த கிருபை மேலானதாய் இருக்கிறதல்லவா? ஆதலால் தேவன் நம்மில் அநேகரைப்பார்த்து, "நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம்நாட்டுக்கு நேரிடுவது இலகுவாய் இருக்கும்" என்று சொல்லவேண்டியதாய் இருக்குமல்லவா?

லோத்தும் அவருடைய இரண்டு குமாரத்திகளுமாக சோவாரில் குடியிருக்கப் பயந்து ஒரு மலைக்குகையிலேபோய்க் குடியிருந்தார்கள். ஒருவேளை சோவார் ஊராருடைய பாவமும் தோஷமும் சோதோமியருடைய பாவத்தைப்போல் பயங்கரமாய் இருக்கிறதென்று கண்டு, தங்கள்மட்டில் விலகிப்போயிருக்கலாம்.

இப்பொழுது லோத்து ஒரு கைதியைப்போல் மலைக்குகைக்குள்ளே வாசம்பண்ணுகிறார். நாம் அவரோடு சற்று பேசுவோமாக. ஆ, லோத்துவே! உம்முடைய மந்தை எங்கே? உமது மனைவி எங்கே? நீர் விசுவாசமுனிவரின் கூட்டுறவைவிட்டு அவிசுவாசிகளின் மத்தியில் வாழ்ந்ததின் லாபம் இந்த மலைக்குகைதான். தேவனுடைய பிள்ளைகளின் கூட்டத்தை விட்டுப் பிரிந்து தங்கள் மனம்போனபடி நடக்கிறவர்களுடைய முடிவு பெரும்பாலும் இப்படியே இருக்கும். "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்ற வேதவசனத்துக்கு லோத்துவின் சரித்திரம் ஒரு வியாக்கியானம்போல் இருக்கிறது.

லோத்துவின் கடைசி காலசரித்திரம் மிகுந்த் விசனத்தைக் கொடுக்கத்தக்கதாய் இருந்தது. அவர்கள் சோதோமைவிட்ட போதிலும் அதின் பாவம் அவர்களை விடவில்லை. அது அந்த மலைக்குகைக்குள்ளும் தன் வல்லமையைப்பாராட்டி அவர்கள் ஜீவனையும் ஆயுசையும் நிந்தையாலும் வெட்கத்தாலும் மூடிற்று. நீதிமான் என்று ஒருகாலத்தில் பேர்வழங்கப்பட்ட லோத்து தன் பக்தி நெறியிலிருந்து தவறி ஒருநாளும் எழுந்திருக்கக்கூடாத பள்ளத்தில் விழுந்துவிட்டார். இதோடு இவரை மறந்துபோவதும் தகுதியாயிருக்கும். ஆனால் அவரிடத்தில் காணப்பட்ட குறைவானது எக்காலத்திலிருக்கும் பக்தனையும் பார்த்து

நிற்கிறேன் என்று எண்ணுகிறாய்,
விழாதபடி பார்க்கக்கடவாய்

என்று எக்காளமுழக்கம்போல தொனித்துக்கொண்டிருக்கிறது போல் இருக்கிறது. அவர் அந்தக் குகைக்குள்ளே குடித்து முறைகேடான பாவத்தைச் செய்து தன் ஜீவனின் முடிவை கசப்போடு பின்னிட்டார். மதுபானத்தின்மேல் பிரியப்படுகிறவர்கள் மற்றொரு பாவத்துக்கும் அஞ்சவேமாட்டார்கள்.



# ISAAC.

## ஈசாக்கு முனிவர்.

பூர்வ மகாத்துமாக்களின் சரித்திரங்களை திருச்சபை சம்பந்தமாய் நாம் தியானிக்கும் காலத்தில் திடீரென்று ஒரு அதிசயமுண்டாகிறது. சிலதரம் தேவனுடைய சபையானது ஒரே ஆளிலிருக்கிறதென்றும் இரட்சண்ய வாக்குத்தத்தம் எல்லாம் மயிர்த்துவார அளவான ஒரு நுண்ணியகால்வாய் வழியாய்மாத்திரம் வருகிறதுபோலும், அக்கால்வாய் முதலாய் சுவறிப்போகிற ஸ்திதியிலிருக்கிறதுபோலும் காணப்படுகிறது. பிரளயகாலத்தில் ஏதோ காரணத்தால் பேழையானது கவிழ்ந்து அல்லது ஆழ்ந்துபோய்விட்டால் இரட்சண்ய வாக்குத்தத்தங்கள் எல்லாம் அவத்தமாய் முடியுமல்லவா? ஆபிராம்முனிவர்காலத்தில் அவருக்கே அகாலமரணமாகிவிட்டால் அல்லது அவர் வெகு காலம் இருந்தபடி வாக்குத்தத்தத்தின் புத்திரனே கடாட்சம் பண்ணப்படாவிட்டால், அல்லது கடாட்சம்பண்ணப்பட்ட ஈசாக்கு பலியிடப்பட்டுப்போனால் அல்லது அகாலமரணமடைந்துபோனால் எல்லாம் தொலைந்துபோமே. இப்படிப்பட்ட நினைவெல்லாம் உலக இயல்புக்கேற்ற மாம்சசம்பந்தமான எண்ணங்களாயிருக்கின்றன. ஆனால் காரியத்தின் மாறுதல் உன்னதமானவருடைய கரத்திலிருந்தது. அவருடைய ஆலோசனை நித்தியகாலமாய் உள்ளது. சர்வலோகமெங்கும் அவர் நடப்பிக்கும் செயல்களில் தமது மகிமைப்பிரதாபமும், தமது திருச்சபையின் வாழ்வும் அவர் சிந்தையிலிருக்கிறதென்பதை நாம் திட்டமாய் உணர்ந்துகொள்ளவேண்டியது. திருச்சபையானது ஆதியில் ஆபிரகாமில்மாத்திரம் நிலைத்திருக்கிறது என்று சொல்லத்தக்கதாய் இருந்தாலும், வெகு காலத்துக்குப் பின்பு அது ஈசாக்கின்வழியாய் இறங்கிவருகிறதென்பதைக் காண்கிறோம்.

ஈசாக்கின் சரித்திரம் நாம் இம்மட்டும் எழுதின சரித்திரங்களுக்கு வெகுதூரம் வித்தியாசப்பட்டிருக்கிறது. இவர் பேர்ப்பிரபல்லியமான எந்தக் கிரியையையும் நிறைவேற்றினதாகத் தோன்றவுமில்லை; ஏதாவதோர் பெரும் சம்பவம் இவர் ஜீவியத்தில் நேரிட்டதாக நாம் அறிகிறதுமில்லை. இவர் துடுக்கும் வீரதீரமுமுள்ள ஒரு புருஷனாய் விளங்காமல் அமைதலும்,

அடக்கமும், தனிவாசமுமான ஒரு புருஷனாய் விளங்குகிறார். அவருடைய குணங்களில் யாதொரு பிணக்குகள் காணப்படாமல் இணக்கமும் ஒழுக்கமுமுடையவராய் இருக்கிறார். இவருடைய ஜீவியத்தில் குற்றமேயிருந்ததில்லை என்று நாம் சொல்லக்கூடாவிட்டாலும் இவருடைய சரித்திரத்தைக்கொண்டு மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால் அவரை நீதிமானுக்கு ஒருமாதிரி மனுஷன் என்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. வேதாகமமானது அவரை அதிகமாய் மேன்மைப்படுத்தியிருக்கிறது. தேவனும் தம்மை ஆபிரகாமின் தேவன் என்று அழைக்கிறதுபோல ஈசாக்கின் தேவனென்றும் அழைத்துக்கொள்ளுகிறார்.

ஈசாக்கு என்பவருடைய சரித்திரத்தின் பல குறிப்புகள் ஆபிரகாம்முனிவருடைய சரித்திரத்திலேயும் வந்திருக்கிறது. என்றாலும் அவைகளில் சிலவற்றை இவ்விடத்திலும் குறிப்பிக்கிறது தகுதியாயிருக்கும். அவருடைய பிறப்பானது சுமார் பத்துமுறை தேவனால் முன்னறிவிக்கப்பட்டதாயிருந்தது. ஒவ்வொரு அறிவிப்பிலும் அநேக தீர்க்கதரிசனங்களும் ஆசீர்வாதங்களும் அவரைத் தழுவினதாய் இருக்கின்றன. அவருடைய பிறப்புக்காக ஆபிரகாமும் சாராளும் எவ்வளவு ஆவலோடு ஆசித்தார்களோ அவ்வளவு தாமதத்தோடு அது நிறைவேறுகிறதாயிருந்தது. ஈசாக்கை அவர்களுடைய பிள்ளையென்று நினையாமல் தேவனுடைய கடாட்சம் என்று அவர்கள் உணரும் காலமும் வேளையும் வருமட்டும் தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமல் நிறுத்திவைத்துக்கொண்டிருந்தார். அந்த காலம் வந்தபோது "கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்." நாம் நமது விண்ணப்பங்களின் வல்லமையின்மேல் நம்பிக்கைவைக்காமல் தேவனுடைய சித்தத்துக்கு நமது விண்ணப்பத்தின் விஷயங்களைச் சமூலமாய் ஒப்புவிக்கவேண்டியது. அப்படிக்கில்லாதபட்சத்தில் நமது விண்ணப்பங்களும், அதினால் நாம் விரும்பி ஏங்கும் வியாகுலங்களுமே நமக்கு லாபமாய் முடியும்.

பிள்ளை ஜநநமானவுடனே தேவதூதனால் முன்னறிவிக்கப்பட்ட ஈசாக்கு என்ற பேரை அதற்கு இட்டார்கள். ஈசாக்குப் பிறந்தது, பிராயம் சென்றிருந்த ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் சிரிப்பாயிருந்ததோடு அதை கேட்ட யாவருக்கும் சிரிப்பாய்த்தானிருந்தது. ஆதலால் சிரிப்பு என்று அர்த்தங்கொள்ளும் ஈசாக்கு என்ற பேர் அதற்கு இடப்பட்டது.

ஈசாக்கு பிறந்த எட்டாம்நாளில் தேவகட்டளையின்படியே



விருத்தசேதனம் செய்யப்பட்டான். சுமார் மூன்றுவயதாயிருக்கும்போது பால்மறந்து, பண்டபதார்த்தங்களை உண்டு பலமுள்ளவாலிபனாய் எழும்பினான். சாராள் அவனை நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக வளர்த்தாள். ஈசாக்கு பால் மறந்தநாளிலே ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினான்.

ஈசாக்கின் பாலியவயதிலே அவனுக்கு ஒரு சத்துரு எழும்பினான். அந்தச் சத்துரு அவனோடு ஒரே வீட்டுக்குள் வளர்ந்துவந்தான். அவன் பேர் இஸ்மவேல். இவன் தன் பகையையும் விரோதத்தையும் பரியாசத்தின் மூலமாய் நாள்தோறும் பாராட்டிக்கொண்டிருந்தான். இஸ்மவேலுக்கும் ஈசாக்குக்கும் இருந்த பகையானது மாம்சத்துக்கும் ஆவிக்கும் இருக்கிற விரோதத்துக்கு உபமானமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட குணத்தை ஆகார் சிறுபிராயமுதல் அவன் மனதில் அஸ்திபாரப்படுத்தியிருக்கவேண்டும். இஸ்மவேல் பரியாசம்பண்ணினதை ஒருநாள் சாராள் கண்டுகொண்டாள். இச்சமயத்தில் அவன் பதினாறுவயது வாலிபனாயிருந்தான். செல்வச்செருக்கினாலும் பாலும் வெண்ணெயும் தின்ற பவிசினாலும் அவன் மகாபுஷ்டியும் பலமும் உள்ள ஒரு வாலிபனாய்த்தான் காணப்பட்டிருப்பான். நமக்குப் பதின்மூன்று வருஷத்துக்குப்பின் பிறந்தபயலுக்குச் செய்யப்படுகிற பரிசனை என்ன? பாதுகாப்பென்ன? கிழவனும் கிழவியும் அவனை வைத்துக்கொண்டாடுகிறதென்ன? மகிழுகிறதென்ன? மூன்றுவயது பயலுக்கு முப்பதுவயது ஆண்பிள்ளைக்குச் செய்கிற மரியாதையெல்லாம் நடக்கிறதே. இவன் வந்து இனி ஆஸ்தியிலும் முதல்பங்கை அல்லது முழுவதையுமே கையாட்சி செய்யப்போகிறானே என்றிப்படி பலவாறாக அவன் கண்பட்டு அவனைப் பரியாசம்பண்ணி தன் வர்மத்தைத் தீர்த்துக்கொள்ள முயன்றான்போலிருக்கிறது.

இஸ்மவேல் தன் மகனைப் பரியாசம்பண்ணுகிறதைக் கண்ட சாராள் உக்கிரகோபமாகி, தன் புருஷனிடத்தில் நடந்த சங்கதிகளை எல்லாம் விபரமாய் அறிவித்து, "இந்த அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்; இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாய் இருப்பதில்லை" என்று சொன்னாள். இந்த வார்த்தைகள் ஆபிரகாமுடைய மனசுக்கு மட்டற்ற மனவருத்தத்தைக் கொடுத்தபோதிலும் அவர் தேவ உத்தரவின்படியே அவர்களை அனுப்பிவிடத் தீர்மானித்து, ஒருநாள் அதிகாலையில் எழுந்து அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் ஆகாருடைய தோளின்மேல்வைத்து பிள்ளையையும்

ஒப்புக்கொடுத்து அவர்களைத் தன் வீட்டைவிட்டு அனுப்பிவிட்டார்.

ஆபிரகாமிலிருந்து தோன்றின இஸ்மவேலும் ஈசாக்கும் தேவனுடைய சபையைச் சேர்ந்த பேர்க்கிறிஸ்தவர்களையும் மெய்க்கிறிஸ்தவர்களையும் திருஷ்டாந்தப்படுத்துகிறதாயிருக்கிறது. அடிமையின் மகன் வாக்குத்தத்தத்தின் புத்திரனை பரியாசம்பண்ணினதுபோல பாவ அடிமைத்தனத்தின் பிள்ளைகளாகிய பேர்க்கிறிஸ்தவர்கள் தேவாவியினாலே மறுபடியும் பிறந்த உத்தமதாசராகிய தேவனுடைய பிள்ளைகளை அவதூறுபண்ணி நிந்தித்து அவமதிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்; என்றாலும் கடைசியிலே அவர்கள் தேவனுடைய வீட்டின் சுதந்தரங்களுக்குப் புறம்பாகத் தள்ளப்பட்டுப்போவார்கள்.

இச்சமயத்தில் ஆகாருக்கும் அவள் குமாரனுக்கும் செய்யப்பட்ட ஒழுங்கானது நமது மனதுக்கு சற்று வருத்தத்தைக் கொடுக்கலாம். இத்தனை வருஷம் கூடவே இருந்து சகல பாக்கியங்களையும் சாங்கோபாங்கமாய் அனுபவித்தவர்களைத் திடீரென்று வெளியே துரத்திவிட்டது சரியல்ல என்பதுபோலக் காணப்படலாம். லோகப்போக்கின்படியும் மாம்ச சிந்தையின்படியும் நாம் இவைகளை யோசிக்கும் காலத்தில் அநியாயமான ஒழுங்காய்க் காணப்பட்டாலும் ஆவியின்பிரகாரம் தியானிக்கும்போது எல்லாம் நியாயமாய் இருந்தது. இஸ்மவேலின் குணமும், அவன் தாயின் போக்கும், அவர்களுடைய பிற்காரியங்களையும் நாம் பார்க்கும்போது அவர்கள் அனுப்பிவிடப்படாமல் ஈசாக்கோடுகூடவே குடியிருந்தது மெய்யானால் அவரிடத்தில் பிற்காலத்தில் விளங்கிய கீழ்ப்படிதல், அடக்கம், விசுவாசம், அமைதல் முதலிய சிறந்த குணங்களுக்கு வெகு தடையாயிருக்கும். இடறல் உண்டாக்குகிறவர்களுடைய உபத்திரவங்களையல்ல, அவர்களால் உண்டாகிற நஷ்டங்களை ஆராய்ந்துபார்த்து அவர்களைப் பிரித்துவிடுகிறது தெய்வீகஞானத்தின் குணம் என்று சொல்லவேண்டியது. ஆபிரகாமுடைய வீட்டை விட்டு அனுப்பப்பட்ட அடிமைப்பெண் இதைத் தனக்கு நேரிட்ட தேவதண்டனையாக எண்ணி தன் மனதைக் கீழ்ப்படிதலினால் அடக்கிக்கொண்டிருந்தால் ஆபிரகாமும் சாராளும் அவளுக்குச் செய்யவேண்டிய உதவிகளுக்கு எதாவது ஒரு ஒழுங்கு செய்திருக்கலாம்; அப்படிக்கில்லாமல் அவள் பழிவாங்கவேண்டுமென்று விரும்புகிறவளைப்போல தன் பிள்ளையை ஒருசெடியின்கீழ் கிடத்திவிட்டு அதின் சாவைநாடி மனம் பொங்கி



அழுது கூக்குரலிட்டாள். அவள் தன் உள்ளத்தில் எண்ணினபடி அவளுக்காவது இஸ்மவேலுக்காவது யாதாமோர் பிராணநஷ்டம் உண்டாகிறதாய் இருந்தால் விசுவாசமுனிவருடைய பேர் பிரஸ்தாபத்துக்கும் கனத்துக்கும் எவ்வளவு நஷ்டமுண்டாகியிருக்கலாம். ஆனால் தேவன் தமது தாசனை நடத்தினார் என்று ஆகார் அறியும்படி அவள் அழுதுகொண்டிருந்த வனாந்தரத்தில் தமது தூதனை அனுப்பி அவளை ஆறுதல்படுத்தினார். தேவன் ஆகாருடைய நடக்கையின்மேல் பிரியப்படாவிட்டாலும் இஸ்மவேலோடே இருந்து அவனுக்குச் சொன்ன கிருபைகளை நிறைவேறும்படி செய்தார். இஸ்மவேலாவது ஆகாராவது அப்புறம் ஆபிரகாமிடத்தில் போனதாக யாதொரு குறிப்பையும் நாம் காண்கிறதில்லை. அவள் தன் எகிப்திய புத்தியின்படி ஆணவமும் கீழ்ப்படியாதவளுமாய்த் தன் காலத்தைக் கழித்திருக்கவேண்டியது. இஸ்மவேல் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து வில்வித்தையிலே வல்லவனானான். அவன் பாரான் வனாந்தரத்திலே குடியிருக்கையில் அவன் தாய் எகிப்துதேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம்பண்ணுவித்தாள். ஆபிரகாம்முனிவர் ஆகாரைப்படைத்து எகிப்தை காணாக்கும்படி பார்த்தார். ஆனால் ஆகாரோ தன் மகனுக்கு எகிப்து பெண்ணைத்தான் நாடினாள். எகிப்து எகிப்தைத்தான் நாடும்.

தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபடியே இஸ்மவேலுக்குப் பன்னிரண்டு பிரபுக்கள் தோன்றினார்கள். அவன் பாரான் வனத்து வடிப்பமான சுதந்தரத்தில் சாங்கோபாங்கமாய் வாழ்ந்து மக்களையும் பேரப்பிள்ளைகளையும் கண்டு களிகூர்ந்து நூற்றுமுப்பத்தேழு வருஷம் உயிரோடிருந்து மரித்தான். இம்மட்டோடே நாம் இஸ்மவேலை மறந்து ஈசாக்கைத் தொடருவோமாக.

இஸ்மவேல் வீட்டைவிட்ட நாள்முதல் ஈசாக்கு வீட்டுக்கு அரசனானான். இவனுக்கு சுமார் இருபத்தைந்து வயதானபோது தேவன் இவனை தகனபலியிடவேண்டுமென்று ஆபிரகாம் முனிவருக்கு உத்தரவு கொடுத்தார். இதன் விபரங்களை நாம் முன்னே விபரமாய்ச்சொல்லியிருந்தாலும் இவ்விடத்தில் ஈசாக்கென்ற வாலிபனிடம் விளங்கிய பக்தியையும் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் சற்றே ஆழ்ந்து ஆராய்வது தகுதியாயிருக்கும். ஈசாக்கு முதலாவது தன் தகப்பனாரோடே மோரியா மலைக்குப் பயணப்பட்டபோது தான் பலியிடப்படவேண்டிய ஆடு என்பதைக் கிஞ்சித்தும்

அறியாமலிருந்தான். அவன் தன்னைத் தன் தகப்பனோடும் வேலைக்காரரோடும் கூடப்போய்த் தொழுதுகொள்ளுகிற ஒரு ஆளாகமாத்திரம் எண்ணிக்கொண்டிருந்தான். கடைசியாக முனிவர் வேலைக்காரரை நிறுத்திவிட்டுத் தாமும் மகனுமாய் மலையை நோக்கிப்போகும்போது பலியிட ஆடு இல்லையே என்று கவனித்து அதைக்குறித்துத் தன் தகப்பனாருடன் சம்பாஷித்தபோதாவது தன்னைத்தான் பலியிடப்போகிறார்கள் என்று அறிந்துகொள்ளவுமில்லை. இப்படியெல்லாமிருந்தும் பலிபீடம் கட்டி அதன்மேல் படுக்கும்படி கேட்டபோது யாதொரு மறுபேச்சும்பேசாமல் தன்னை சமூலமாய் தேவனுக்கு தத்தம்பண்ணின குணத்தை என்னவென்று சொல்ல! இதில் அந்த வாலிபனிடத்திலிருந்த கீழ்ப்படிதலும், பொறுமையும், அன்பும் தெளிவாய் விளங்குகிறதல்லவா? இச்சமயத்தில் ஈசாக்குத் தன் பிதாவின் கையைவிட்டு ஓடிப்போகவேண்டுமானாலும் அல்லது அவன் சொல்லைத் தட்டிப்போடவேண்டுமானாலும் கூடுமே. அப்படியொன்றும் செய்யாமல் பிதாவின் சித்தத்துக்குத் தன்னை ஒப்புவித்துக் கட்டைகளின்மேல் கிடத்தப்பட சம்மதித்த விஷயமானது இவ்வுலகத்திலுள்ள இருபத்தைந்து வயது வாலிபரையெல்லாம் வெட்கப்படுத்தவேண்டிய விஷயமாய் இருக்கிறதல்லவா? ஈசாக்கில் விளங்கிய இந்தக் குணமானது சர்வலோகத்தாருக்காகவும் பலியிடப்படும்படியாக அவதாரமெடுத்த இயேசுகிறிஸ்துவாகிய தேவாட்டுக்குட்டிக்கு முன்குறிப்பாய் இருந்தது. ஈசாக்கு தனக்கு நடக்கப்போகிறவைகளொன்றையும் முன்னமே அறியாமலிருந்தாலும் சம்மதித்தான். இயேசுவோ தமக்குச் சம்பவிக்கப்போகிற யாவற்றையும் நுட்பமாய் அறிந்து, அவைகளைச் சொல்லிக்கொண்டே அநுபவித்து, சிலுவையின்மேல் வானத்தை நோக்கிப் படுத்து, மூன்று ஆணிகளும் அவருடைய திருக்கரங்களையும், கால்களையும் ஊடுருவப் பாயுமட்டும் பொறுமையாய் பகைவரின் சுத்தியலின் அடியைச் சகித்து அப்பால் சிலுவையிலே தொங்கித் தம்மைத் துன்பப்படுத்தின பாதகருக்கு மன்றாடினாரே! இந்தப் பொறுமைக்கு நான் என்ன பேர் இடுவேன்! இந்தச் சகிப்புக்கு என்ன காரணத்தைச் சொல்வேன்! வானமே! நீயே அந்த இரகசியத்தை அறிவாய். வையகமோ அதை அறியாமல் இன்னம் மயங்கிக்கிடக்கிறது. ஈசாக்கு பலியிடப்பட்ட சரித்திரத்தைச் சொல்லும் யூதசரித்திரக்காரன் ஆபிரகாம் அவனை ஓடிப்போகாமல் கயிற்றால் காலையும் கையையும் நன்றாய்க் கட்டும்படியாகப் போனான் என்றும், அச்சமயத்தில் அவன் தன் பிதாவை நோக்கி,



பிதாவே, கயிறுகள் என்னத்துக்கு, நான் என் கைகளையும் கால்களையும் பலமாய்க் கட்டிக்கொண்டு கட்டையின்மேல் அசையாமல் கிடக்கிறேன், நீர் யேகோவாவின் கட்டளைப்படியே என்னை பலியிடும் என்று சொன்னதாக எழுதுகிறான். என் நேச இயேசுவே! அது ஒரு பாரம்பரையாய்மாத்திரம் இருக்கிறது. நீரோ நிச்சயமாய் சிலுவையில் கயிறுகட்டப்படாமலே அறையப்பட்டு அதின்மேல் தொங்கினீர்! இல்லை. ஒரு கயிற்றை என் ஆத்துமா காண்கிறது. அது சணல்நூலால் அல்ல, பஞ்சுநூலால் அல்ல, பட்டுநூலாலுமல்ல; ஆ! அது இரும்புவடமுமல்ல, பித்தளைச் சங்கிலியுமல்ல. உம்து உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் சுற்றப்பட்டு உம்மை அழுத்தும் ஒரு கயிற்றைக் காண்கிறேன்.

அது அன்பின் கயிறு ஐயா!
அது அன்பின் கயிறுதான்.

அதினாலே நீர் கட்டப்பட்டு எனக்காக பலியானீர். அன்புதவிர வேறெது உம்மைக் கட்டக்கூடும்? சிம்சோன் அநேகக் கயிறுகளை வைக்கோலைப்போல அறுத்துப்போட்டானே! உமக்கு இரும்பாணி எம்மாத்திரம்? உலகம் உம்மை என்ன சொன்னாலும் சொல்லட்டும்; என் கண்ணுக்கு நீர் இரும்பாணியில் அல்ல,

அன்பின் ஆணியில் தொங்கினீர்,
அன்பின் ஆணியில் தொங்குகிறீர்.

ஈசாக்கு தான் பலியிடப்போகிற கட்டைகளைத் தானே சுமந்துபோனது நமது இரட்சகர் சிலுவையை சுமந்துபோனதற்கு முன்னடையாளமாயிருந்தது. மேலும் அதே செய்கையானது, நாம் அவரவர் நமக்கு இவ்வுலகத்தில் சம்பவிக்கும் உபத்திரவங்கள் துன்பங்களாகிய சிலுவையை மொறுமொறுப்பின்றி பொறுமையாய்ச் சுமக்கவேண்டும் என்பதையும் நமக்கு உணர்த்துகிறதாய் இருக்கிறது. "ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று இரட்சகர் சொல்லியிருக்கிறார்.

ஈசாக்கு நாற்பது வயதுள்ள வாலிபனானான். அவன் கலியாணமன்னனாகிவிட்டதைக் கண்ட தகப்பன் அதற்கேற்ற ஒழுங்கைச் செய்யும்படி பிரயத்தனப்பட்டான். இது நல்ல தகப்பன்மார் எல்லாருக்கும் இருக்கவேண்டிய பிரதான இலட்சணந்தான். பிள்ளைகளைப் பெறுகிறதும் வளர்க்கிறதும் பெரிய

காரியமல்ல. நாயும் பூனையும் அப்படிச் செய்கிறதைக் காண்கிறோம். ஆனால் அவர்களுடைய பிற்காலவாழ்வு தேவனுடைய புத்திரருக்கேற்றதாய் இருக்கும்படி அவர்களுடைய கலியாண காரியத்தை நடத்திவைக்கிறது மிகவும் அவசியமாய் இருக்கிறது. பழைய உலகத்திலிருந்த தகப்பன்மார் தங்களுடைய பிள்ளைகளைப்பற்றி இப்படி கவலைப்படாததினாலேதான் அவபக்திக்கேதுவான அநேக சம்பவங்களுண்டாகி, குடும்பங்களும் கோத்திரங்களும் கெட்டு தேவகோபத்துக்கேதுவாகி ஜலப்பிரளயத்தையும் வருவித்துவிட்டது. இக்காலத்தில் சாராளும் மரித்துப்போய்விட்டாள்; ஆதலால் ஈசாக்குக்குத் தகுமான ஒரு பெண்ணைக் கட்டிவைக்கும் கவலை முழுவதும் ஆபிரகாமுடைய தலைமேல் விழுந்தது. இப்படி அற்புதமாய்ப் பிறந்த அருமை மகனை மாலைக்கழுத்தோடே பார்க்கும்படி சாராள் வெகுவாய் ஆவல்கொண்டிருப்பாள். அவள் ஆசையைத் தேவன் நிறைவேறச் செய்யவில்லை. இக்காலத்தில் ஆபிரகாமின் வீட்டுவாழ்வு முன்னிலும் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது.

இதுதான் ஆபிரகாம் என்பவர் நடப்பிக்கப்போகும் முதலாம் சம்பந்தம். இம்மட்டும் இஸ்மவேல் வீட்டிலிருந்ததுண்டானால் அவன் விவாகம் நடந்திருக்கும். ஆனால் அவன் துரத்தப்பட்டு தன் இஷ்டப்படி எகிப்தியபெண் ஒன்றைக் கட்டிக்கொண்டான். ஈசாக்குக்கு எந்த இடத்தில் பெண் தேடலாம் என்பது ஆபிரகாமுடைய மனதில் வெகுநாளாய் வாதித்துக்கொண்டிருந்தது. இப்படி எண்ணுவதும் யோசிப்பதும் சரிதான்.

பாத்திரமறிந்து பிச்சை கொடு,
கோத்திரமறிந்து பெண்ணை எடு

என்று ஒரு சுலோகமுமிருக்கிறது. ஒருவேளை எகிப்தியபெண்ணைக் கட்டின இஸ்மவேல் அத்தேச அவபக்தியில் வளர்ந்துவிட்டான் என்று ஆபிரகாம் கேள்விப்பட்டு, எகிப்தியபெண் தன் மகனுக்கு ஆகாது என்று தீர்மானித்திருக்கலாம். அவன் இருந்த கானான்தேசத்திலும் அநேக அழகுள்ள பெண்கள் இருந்தாலும் லோத்து அத்திசையிலுள்ள பெண்ணைக் கட்டி சம்பாதித்த லாபம் இன்னதென்பதை ஆராய்ந்துணர்ந்து அவ்விடத்துப் பெண்களும் ஆகாதென்று தீர்மானித்திருக்கலாம். மற்றப்படி எத்தின் புத்திரரும், கானானிய பிரபுக்களும், பெலிஸ்திய அரசனும் ஈசாக்குக்கு நான் கொடுப்பேன் பெண், நான் தருவேன் பரிசம் என்று வலியவர்திருக்கலாம். என்றாலும், அப்



பெண்கள்மேல் ஆபிரகாமின் மனமும் மாப்பிள்ளையின் பிரியமும் இருக்கவில்லை. ஆபிரகாமும் ஈசாக்கும் ஒரு பெண்ணின் கண்ணழகு, காலழகு, முன்னழகு, பின்னழகு, நடையழகு, உடையழகு இவைகளையாவது நகை நட்டுகளின் சிறப்பு, ஆடுமாடுகளின் இனம், காணிபூமியின் சீதனம் இவைகளையாவது நோக்கவுமில்லை. அவர்கள் நோக்கினதெல்லாம் தங்கள் குடும்பத்திலிருக்கிற தேவதாபக்தியையும், அருளையும் கெடுத்துவிடாமல் வளர்த்துவிடத்தக்க பெண்ணொன்று தங்களுக்குக் கிடைத்தால் போதும் என்றே எண்ணினார்கள். இது எவ்வளவு நல்ல தீர்மானமாயிருக்கிறது! இந்த குணத்துக்கு மிஞ்சின அழகு வேறென்ன உண்டு. "மயிரைப் பின்னிப் பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்கக்கடவது" என்று சத்தியவேதம் சொல்லுகிறது. இவ்வித அலங்காரமும் அழகுமுள்ள பெண்ணே தன் மகனுக்கு வேண்டுமென்று ஆபிரகாம்முனிவர் விரும்பினார். இவ்வித குணமுள்ள பெண்ணையே நான் கட்டுவேனென்று ஈசாக்கு தனக்குள் நினைத்துக்கொண்டார். பிதாக்களே! இவ்வித குணமுள்ள பெண்ணையே உங்கள் மக்களுக்கு கட்டிவையுங்கள்; அப்போது உங்கள் குடும்பம் தழைக்கும். வாலிபரே! இப்படிப்பட்ட குணமுள்ள பெண்ணையே கட்டுவோம் என்று தீர்மானம்பண்ணுங்கள்; அப்போ உங்கள் வீடு வாழும்.

ஈசாக்கு விரும்பிய தேவலட்சணம்பொருந்திய பெண் கானானிய நாட்டில் கிட்ட எதுவில்லாதபடியால் ஆபிரகாம் கல்தேயதேசத்தை நாடவேண்டியதிருந்தது. எனெனில் கானானியர் எல்லாரும் விக்கிரகாராதனைக்காரராய் இருந்தார்கள். அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக என்கிற தேவாவியின் பிரமாணம் அக்கால வேதாகமங்களில் வரையப்படாதிருந்தாலும் அவர்கள் மனதில்வரையப்பட்டிருந்தது. ஆதலால் அந்தக் கிழபக்தன் தன் வீட்டுவேலைக்காரர் எல்லாரிலும் சிரேஷ்டனும், தனக்குண்டான எல்லாவற்றையும் ஆண்டு நடத்திவந்தவனுமாகிய தன் ஊழியக்காரனை நோக்கி, * "நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்

* இவன் தமஸ்குஊரானாகிய எலியேசராய் இருக்கலாம்.

துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்கு தேவனும் பூமிக்கு தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படி, நீ உன் கையை என் தொடையின்கீழ் வை" என்று சொன்னான். அவன் அப்படியே வைத்து ஆணையிட்டுக்கொடுத்தான்.

இந்த வேலைக்காரனுக்கு ஒரு சிறந்த குணமிருந்தது. இவன் தன் எஜமானுடைய வாயிலிருந்து விழுந்த வார்த்தைகளின் படியே செய்கிறவனாய் இருந்தான். இந்த விஷயத்தில் தன் எஜமானுடைய கட்டளையில் ஒரு பெரிய வருத்தமிருக்கிறதென்றுகண்டு, அவ்வருத்தத்தையும் முந்தியே அறிவித்து ஆலோசனை பெற்றுக்கொள்ளுகிறது நலமென்று கண்டு தன் எஜமானை நோக்கி, மாமுனிவரே! அடியேன் உமது வாக்கின் படியே நிறைவேற்றக் காத்திருக்கிறேன். ஆனால் அவ்விடத்துப் பெண் என்னோடுகூட இவ்விடத்துக்குவரத் தடைசொல்லி மாப்பிள்ளைவந்து கட்டிக்கொண்டுபோகட்டும் என்று சொன்னால் நீர் உமது நேசமகனை அனுப்பவேண்டியதிருக்குமே; இதைப்பற்றித் தங்கள் சித்தமறிய காத்திருக்கிறேன் என்று கேட்டான். இப்படிச் சொன்னவுடனே முனிவர் விழித்துக் கொண்டார். இதைப்பற்றி வேலைக்காரன் முந்தியே சொல்லிக்காட்டினது அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது; அப்படிப்பட்ட ஒழுங்கு அவருக்குப் பிரியமில்லை. மாப்பிள்ளை பெண் வீட்டுக்குப் போய் அத்தேச வழக்கப்படி கலியாணம் நடப்பிக்கிறதாயிருந்தால் ஏதோ பெரிய நஷ்டம் தனக்கு நேரிடப்போகிறதுபோல் அவர் மனதில் பட்டது. தேவாசீர்வாதம் குறைந்துபோனாலும் போகலாம் என்று அவர் எண்ணியிருக்கலாம். அவர் தமது உத்தம ஊழியக்காரனை நோக்கி: நீ என் குமாரனை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுபோகாதபடி எச்சரிக்கையாயிரு என்று கண்டிப்பாய் உத்தரவுகொடுத்து, நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டுவரும்படிக்கு "வானாதி தேவன் தமது தூதனை உனக்கு முன்னே அனுப்புவாராக" என்று வாழ்த்தி விண்ணப்பஞ்செய்து அனுப்பினான். இந்த வார்த்தைகள் வேலைக்காரனுக்கு தைரியத்தைக் கொடுத்தது. தான் போகும் காரியத்தில் அனுகூலம் உண்டாகும்படி உடனே ஒரு தேவதூதன் தனக்கு முன் போகிறானென்று அவன் நம்பிப் பறப்பட்டான். தேவன் அப்படியே தமது தூதனை அனுப்பி ஈசாக்குக்கு ஒரு பெண்ணைத் திட்டம்பண்ணினார் என்பது பின்வரும் வரலாறுகளால் விளங்கும். இந்த வேலைக்கார



னிடத்திலிருந்த அநேக சிறந்த குணங்களோடுகூட விவேகமும் இருந்தது. இவன் தான் போகும் காரியம் அனுகூலமாகும்படியாகத் தன்னாலான முயற்சிகளையும் செய்தான். தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களையும் பெண்ணுக்குப்பிரியமான பல விலையுயர்ந்த நகைகளையும் எடுத்துக்கொண்டு, வானாதிதேவனிடத்தில் வரங்கேட்டு, ஒரு பரிவாரமாய்ப் புறப்பட்டுப்போனான். தன் பரிசங்களையும் பரிவாரங்களையும் கண்டவுடனே தன் எஜமானுடைய அந்தஸ்தையும் மாப்பிள்ளையின் வாழ்வையும் பெண்வீட்டார் கண்டு வலியப் பெண்ணை அனுப்பிவிட மனமுண்டாகட்டும் என்று நினைத்துக்கொண்டான்போல் இருக்கிறது.

மாப்பிள்ளை வீட்டுக்கும் தான் பெண்தேடும் இடத்துக்கும் சுமார் ஐஞ்ஞூறு மயில் தூரமிருந்தது. அவர்கள் எல்லாரும் ஒட்டகவாகனமேறி தாமதமாய்ப் பிரயாணம்பண்ணினார்கள். ஏனெனில் ஒட்டகங்கள் பெரும்பாலும் மெதுவாகத்தான் நடக்கும். அதோடு அந்தந்த இடங்களில் இறங்கி அவைகளுக்கு இரை சம்பாதிக்கவேண்டியதுமிருந்தது; மேலும் இப்பொழுதுபோல நல்ல பெரும்பாதைகள் இருக்கவில்லை. அவர்கள் வரும் வழியானது கரிசல் பூமியானதால் வெயில் காலத்தில் வெடித்து அவ்வெடிப்புப் பள்ளங்களினால் பிரயாணிகள் சங்கடப்படவேண்டியதுண்டு; மழைகாலமானால் அவ்விடங்களில் சேறு முழங்காலுக்குமேல் இறங்கும். இப்படிப்பட்ட பாதை வழியாக ஐஞ்ஞூறு மயில் பயணம்பண்ணுவது சங்கடமல்லவா! எத்தனை தூரம்போனாலும், எவ்வளவு சங்கடமிருந்தாலும் ஈசாக்குக்கு நல்ல பெண் கிடைக்க வேண்டுமென்பதே அவன் மனதிலிருந்தது. அவன் வெகு நாள் பயணம்பண்ணி கடைசியாகத் தான் நாடின நாட்டுக்கு வந்துசேர்ந்தான். அங்கே யாரை அறிவான்? யார் பேர் அவனுக்குத்தெரியும்? ஐஞ்ஞூறு மயிலுக்கப்பாலிருந்து வந்து ஆளைக் கண்டவுடனே பெண்கேட்கிறது சரியாகுமா? வானாதிதேவனை நம்பின ஆபிரகாமின் மகன் கலியாண காரியத்தை வானாதிதேவனே நடத்தி முடிக்கவேண்டியது என்று அவன் அப்போது நன்றாய் நினைத்தான். அவன் ஊர் சமாசாரங்களை அறியும்படி தகுந்த இடம் கிணற்றோரந்தானென்று ஆலோசனைபண்ணி தான் சேர்ந்த முதலாம் ஊரின் கிணற்றண்டை பொழுதுசாயும் வேளையில் தன் ஒட்டகங்களோடு போய் இறங்கினான். அக்கிணற்றண்டை சேர்ந்த உடனே தன் பயணத்தை இம்மட்டும் சுகமாய் வாய்க்கச்செய்த தேவனை

பணிந்துகொண்டு தான் வந்தவேலை ஒரு அடையாளத்தின் மூலமாய் நிறைவேறும்படி ஒரு பொருத்தனைபண்ணினான். அந்தப் பொருத்தனைநேரத்தில் அவன் பண்ணின ஜெபமாவது:

என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே,
இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி,
என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவுசெய்தருளும்.
இதோ, நான் இந்ததண்ணீர் துரவண்டையிலே நிற்கிறேன்,
இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர்மொள்ளப்
புறப்பட்டுவருவார்களே. நான்குடிக்க உன் குடத்தைச்
சாய்க்கவேண்டுமென்று நான் சொல்லும்போது:
குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி
வார்ப்பேன் என்றும் சொல்லும்பெண் எவளோ,
அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய
ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும்,
என் எஜமானுக்கு அநுக்கிரகம்செய்தீர்
என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும்

என்று ஜெபித்தான். இது எவ்வளவு அருமையான ஜெபமாய் இருக்கிறது! "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதை கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" என்ற வேதவசனத்தின் கருத்தை இவன் திட்டமாய் உணர்ந்திருக்கிறான். இவ்வளவு பக்திவிநயமான எண்ணம் ஆபிரகாமின் மூலமாய் இந்த வேலைக்காரனுக்கு உண்டாகியிருக்கிறது. கர்த்தர்பேரில் முழுவதும் தன் பாரத்தைப்போட்டு அவருடைய தயவுள்ள நடத்துதலுக்கு தன்னை சமூலமாய் ஒப்புக்கொடுப்பதே மெய்ப்பக்தியின் முதலாம்படியாய் இருக்கிறது. சிநேகிதரே! நீங்கள் வேலைக்காரரின் ஆத்துமவாழ்வை விரும்புகிறவர்களாய் இருக்கிறீர்களா? இல்லையானால் ஆபிரகாம்முனிவருடைய மாதிரியைப்பார்த்து படிக்கிறது நல்லது.

இந்த ஜெபம் சிலருக்கு ஒரு விகடமாய்க் காணப்படலாம்; ஆனால் தேவனுக்கு இது சுகந்தவாசனையான காணிக்கைபோல் இருந்தது. இந்த விண்ணப்பத்தின் தொனி தேவசிம்மாசனத்தில் படிகளைத் தட்டினவுடனே தேவன் அதற்குச் செவிகொடுத்து ஈசாக்குக்கு தமது சித்தத்தின்படியான ஒரு பெண்ணைக் கடாட்சம்பண்ணினார். எப்படியெனில், தாம் ஈசாக்குக்கு நியமித்த பெண்ணை அந்நேரத்திலே குடமெடுத்துக் கிணற்றண்டை வரும்படிசெய்தார். அதை ஈசாக்கின் வேலைக்காரன் அறியவில்லை. அவன் தன் விண்ணப்பத்தில் கேட்ட



அடையாளத்தையே தியானித்துக்கொண்டிருந்தான். அந்த பெண்ணோடு வேறு பல பெண்களும் தண்ணீர்க்கு வந்திருக்க வேண்டியது. வேலைக்காரன் தண்ணீர் வேண்டுமென்று பலரிடத்தில் கேட்டும், அவர்கள் எல்லாரும் போக்குச்சொல்லி விட்டார்கள். ஒருவேளை அநேகர் அவனுடன் எரிச்சலாய்ப் பேசியுமிருக்கலாம். ஆனால் அவன் ஈசாக்குக்கென்று தேவனால் குறிக்கப்பட்ட பெண்ணிடத்தில்போய் அம்மணி! உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய் குடத்தைத் தன் கையிலிருந்து இறக்கிக்கொண்டு அவனுக்குக் குடிக்கக்கொடுத்தாள்; பின்பு ஒட்டகங்களுக்குத் தண்ணீர்காட்டுகிறேனென்று மொண்டு வார்த்தாள். அவள் நடந்துகொண்ட வகையினாலே இவள்தான் நமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாய் இருக்கும்படி தேவன் காட்டும் பெண் என்று அவன் உத்தேசித்து, சில காதுநகைகளையும் கைக்கடகங்களையும் அவளுக்கு இனாமாகக்கொடுத்து, அவளுடைய பூர்வோத்தரங்களையும் விசாரித்தான். அந்தப்பெண்ணின் பேர் ரெபெக்காள். அவள் ஆபிரகாம்முனிவருடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்தவளாயிருந்தாள். இதினாலே ஆபிரகாம்முனிவருடைய எண்ணமானது தேவசித்தத்துக்கு இசைவாய் இருந்ததென்று தெளிவாய் விளங்குகிறதல்லவா? கடைசியாக அந்தப் பெண் தான் பெற்றுக்கொண்ட புது வெகுமானங்களின் மகிழ்ச்சியோடு வீடுபோய்ச்சேர்ந்தாள். ஊரார் எல்லாரும் அவளுடைய வீட்டாரும் வெறுங்கையாய்ப் போன இவள், இவ்வளவு விலை உயர்ந்த நகையோடு திரும்பி வருவதைக்கண்டு ஆச்சரியப்பட்டிருக்கலாம். அந்த வேலைக்காரனுக்கு முதலாவது தண்ணீர் வார்க்கமாட்டோமென்று சொன்ன பெண்கள் எல்லாம் ஆகா, இப்படிக் கூலி கிடைக்குமென்று தெரியாதே என்று அங்கலாய்த்திருக்கலாம். ரெபெக்காள் நடந்த சமாசாரங்களை எல்லாம் தன் வீட்டாருக்குச் சொன்னாள். அதைக்கேட்ட அவளுடைய சகோதரன் துரவண்டை ஓடி அந்த வழிப்போக்கனையும் அவன் ஆட்களையும் தன் வீட்டுக்கு அழைத்து வந்தான்.

இப்படியிருக்குங்காலத்தில் அந்த வேலைக்காரனுக்கு உண்டான சந்தோஷம் அதிகமாயிருந்தது. தான் பொருத்தனை பண்ணினபடியே தேவன் கடாட்சம்பண்ணினாரென்று அவன்

தேவனை ஸ்தோத்திரித்து, இன்னும் கடைசிமட்டும் அவரே முன்னின்று தன்னைத் தன் எஜமானுடைய வீட்டில் கொண்டுபோய் சேர்க்கவேண்டுமென்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டிருந்தான். ஏனெனில் தன் விண்ணப்பம் இவ்வளவு தீவிரமாய்க் கேட்கப்படும் என்று அவன் நினைக்கவே இல்லை.

அன்றிரவு சாப்பிடுகிற நேரம் வந்தது; விருந்தாடிமுன் போசனம் வைக்கப்பட்டது. அப்பொழுது அவன், நான் வந்தகாரியத்தைச் சொல்லுமுன்னே புசிக்கமாட்டேனென்றான்; நல்லது, சொல்லுமென்று கேட்டபோது அவன் சொல்லுவான்: நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன், கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாய் இருக்கிறார். கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும் பொன்னையும், வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும் கழுதைகளையும் கொடுத்திருக்கிறார். என் எஜமானுடைய மனைவியாகிய சாராள் முதிர்வயதிலே என் எஜமானுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவர் தமக்குண்டான யாவையும் அவனுக்குக் கொடுத்திருக்கிறார்; அவர் என்னை நோக்கி, என் மகனுக்குக் கானானிய பெண்களில் ஒன்றைக் கொள்ளாமல், நீ என் தகப்பன் வீட்டுக்கும், என் இனத்தாரிடத்திற்கும்போய் என் குமாரனுக்குப் பெண் கொள்ளவேண்டுமென்று ஆணைவாங்கிக்கொண்டு அனுப்பினார்; ஒருவேளை அந்தப் பெண் என் பின்னாலே வராதேபோனாலோ? என்றும் கேட்டேன். அதற்கு அவர், நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தமது தூதனை அனுப்பி உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார்; என் இனத்திலே நீ என் குமாரனுக்குப் பெண்கொள்ளவேண்டும் என்று சொல்லி அனுப்பினார் என்று சொல்லி, அன்று சாயந்தரம் தான் ஊர்க்கிணற்றண்டை வந்தவுடன் செய்த பொருத்தனையையும் அது நிறைவேறின விபரத்தையும் சொல்லி ரெபெக்காளை பெண் கேட்டான். வந்த விருந்தாடி சொன்ன கதை விந்தையாகவே இருந்தது. அவன் அதைச் சொன்னபோங்கும், அதின் பொருளும் அவர்கள் எதிர்ப்பேச்சு ஒன்றும் பேசாதபடிபண்ணிற்று; அவனுடைய வரலாறுகளெல்லாம் இந்த விவாகவிஷயம் முற்றிலும் தேவச்செயலாயிருக்கிறது என்று அவர்கள் உணர்ந்துகொள்ளும்படி பண்ணிற்று. அவர்கள் உடனே "இதோ ரெபெக்காள் உமக்குமுன்பாக இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படி அழைத்துக்கொண்டுபோம்" என்று சொன்னார்கள். அதைக்கேட்ட வேலைக்காரன் தரைமட்டும் குனிந்து, தன் பயணத்தை இவ்வளவு க்ஷேமமாயும் சுறுக்காயும் முடிக்கச்செய்த தேவனைப் பணிந்துகொண்டான். அப்பால் பெண்ணுக்கும் பெண்வீட்டாருக்கும் பல நகைகளை இனாம்பண்ணி புசித்துக் குடித்து அன்றிரவைப் பின்னிட்டார்கள்.



மறுநாள் காலையில் தன்னையும் பெண்ணையும் அனுப்பிவிடும்படியாகக் கேட்டான். இவ்வளவு சடிதியாய் அனுப்புவது அவர்களுக்குப் பிரியமில்லாதிருந்தது; ஆனால் பெண்ணுடைய மனம் எப்படியென்று கேட்டபோது

"நான் போகிறேன்"

என்று சொல்லிவிட்டாள். அத்தோடு அவர்கள் பிரயாணத்துக்கேற்ற ஒழுங்குகளை ஆயத்தம்பண்ணிக்கொண்டு புறப்பட்டார்கள். ரெபெக்காள் இந்தக் காரியமெல்லாம் கர்த்தரால் நடக்கிறதென்பதைத் திட்டமாய் அறிந்தபடியினாலேதான் அவ்வளவு சந்தோஷத்தோடு புறப்படத் துணிந்தாள்.

வேலைக்காரன் பெண் தேடப்போன காலத்தில் ஈசாக்கின் கவலை அதிகப்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. தன் தாய் இறந்த விசனத்தோடு இனி நமக்கு வரப்போகிற பெண் எப்படிப்பட்டவளாய் இருப்பாளோ என்று அடிக்கடி யோசித்திருப்பான். ஈசாக்கே, நீ மகா அதிஷ்டசாலியப்பா! உனக்குப் பெண்பார்த்தவரும் பெண்திட்டம் செய்தவரும் மண்ணுலக மாந்தரல்ல; அவர் விண்ணுளும் வேந்தர்; வானாதிதேவன் வானாசனத்திலிருந்து பூமண்டலத்துப் பெண்களைக் கண்ணோக்கி உனக்கென்று ரெபெக்காளைக் கூட்டி அனுப்பினார். உன் அதிசய பிறப்பைக் கூறினவரும், உன்னை அதிசயமாய் மோரியாமலையில் இரட்சித்தவருமான கர்த்தருடைய தூதனானவர் உனக்கு ஒரு வாசஸ்தலத்தை எடுப்பித்திருக்கிறார். அவர் எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவாராக.

ஈசாக்கு இயல்பாகவே ஜெபத்தியானமுள்ள புருஷனாய் இருந்தான்; அவன் தன் தியானத்துக்குப் பெரும்பாலும் சாயரட்சைவேளையைத் தெரிந்துகொண்டான். வயல்வெளிகளே அவனுடைய ஜெபத்தியான ஸ்தானமாய் இருந்தது. ஒருவேளை அவர்களுக்கிருந்த அநேக வேலைக்காரருடைய தொந்தரவும், ஆடுமாடுகளின் கூக்குரலும் தன் தியானத்துக்கு அடிக்கடி தடையாயிருக்கிறதென்று கண்டு, வயல் வெளிகளைத் தெரிந்துகொண்டான்போல் இருக்கிறது. அல்லது அடைக்கப்பட்டிருக்கிற ஒரு அறைக்குள்ளிருந்து தேவ வல்லமைகளையும் ஞானத்தையும் தெளிவாய் உணர்ந்தறிகிறதைவிட

ஏகவெளியில் போய் அவருடைய கிரியைகளின் ஐசுவரியத்தையும், மகிமையின் ஐசுவரியத்தையும் விஸ்தாரமாய்க்கண்டு தியானித்துக்கொள்ள விரும்பியிருக்கலாம். இது அவர் தமது தியான சிந்தையில் முதிர்ந்தவராய் இருந்தாரென்றும் விளங்குகிறது. தியானசிந்தையில் குறைவுடையவர்கள் அடைபட்ட வீட்டுக்குள்ளிருந்துகொண்டு பல காட்சிகளிலிருந்து தங்கள் சிந்தைகளை ஒடுக்கி ஒரே பொருளைத் தங்கள் மனதால் கவர்ந்துகொள்ள முயலலாம். தியானத்தில் முற்றினவர்களோ, தாங்கள் காணும் எக்காட்சிகளாலும், அக்காட்சிகளின் திரளாலும் தங்கள் சிந்தையை சிதைவுபடவிடாமல் பரவசப்படுத்தலாம். இவ்வித வழக்கத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் பின்பற்றுவது நலம். தியானமில்லாத வாசிப்பும் ஜெபமும், சுவை உணராமல் ஒரு பதார்த்தத்தை உண்ணுவதற்கு இணையாகும். வேதவாசிப்பும் ஜெபமும் பாவியை தேவனிலிருந்து பிரித்துவைத்து அவருடைய கிருபையை அநுபவிக்கப்பண்ணுகிறதாயிருக்கிறது; தியானமோ அவனை தேவனோடு அந்நியோந்நியப்படுத்தி ஆனந்தங்கொள்ளச் செய்கிறதாயிருக்கிறது.

தன் ஜெபத்தியான வழக்கத்தின்படியே அவன் ஒரு நாள் சாயரட்சை வயல்வெளிகளில் தன் காலக்ஷேபத்தை செய்யும்போது தூரத்தில் பத்து ஒட்டகங்களும் அதின் பவுஞ்சும் வருகிறதைக் கண்டான். அவர்கள் வந்த திசையையும் குறிப்பையுங்கண்டு, அது தன் வேலைக்காரன் கொண்டுபோன ஒட்டகங்கள் என்று உத்தேசித்து, அவன் இவ்வளவு திடீரென்று திரும்பிவிட்டதால் போனகாரியம் பலிக்கவில்லையென்று உத்தேசித்திருக்கலாம். எனெனில் உலகப்பிரகாரமாய் இப்படிப்பட்ட விஷயத்தில் சீக்கிரம்வருகிற மறுமொழி அநுகூலமாய் இருக்கிறதில்லை; தேவன் விஷயத்திலோ அது முற்றிலும் வேறே. அவருடைய செயல்களை மனுஷருடைய எவ்வித போக்குக்கும் இணையாக ஒப்பிட்டுச் சொல்லுவது அசாத்தியமாகவே இருக்கிறது. அந்தக்கூட்டம் கிட்ட வரவர போனகாரியம் ஜெயமாய் முடிந்திருக்கிறதென்று ஈசாக்கு கவனித்துக் கடவுளை ஸ்தோத்திரித்தான். சுமார் முப்பதுநாள் பயணத்துக்கு அப்பால் இருக்கப்பட்ட பெண் இவ்வளவு தீவிரமாய் அகப்பட்டதென்ன என்பது அவன் மனதில் ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கலாம். ஆனால் கர்த்தர் அதற்குமுன்னே அந்தப் பெண்ணைப் பேசி உறுதிபண்ணியிருந்தபடியால் அது இவ்வளவு சீக்கிரம் அநுகூலமாய் முடிந்திருக்கிறது. கர்த்தர் தமது தூதனைக்கொண்டு செய்யும் வேலையில் காலதாமதமா



காதே. "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்." தன்னுடைய வேலைக்காரன் திரும்பிவருகிறதைத் தூரத்திலே கண்ட ஈசாக்கு எதிர்கொண்டுபோனான். அந்தப் புது பெண் எதிரேவரும் ஆளைக் கவனித்து, அதோ, எதிர்கொண்டுவருகிற வாலிபன் யார் என்று கேட்டாள். அவன் புன்னகையோடு அவர்தான் என் எஜமானுடைய குமாரன், அவர்தான் கலியாண மாப்பிள்ளை என்று சொல்லியிருப்பான். அச்செய்தி கேட்டவுடனே அவள் மரியாதையோடு ஒட்டகத்திலிருந்து இறங்கி தன் முகத்தில் முக்காடிட்டுக்கொண்டாள். ஈசாக்கு தன் வேலைக்காரனிடத்தில் கேட்கவேண்டிய விஷயங்களையெல்லாம் கேட்டு சந்தோஷத்தோடு பெண்ணைத் தன் வீட்டுக்குக் கூட்டிவந்தான்.

ஈசாக்கின் கலியாணவரலாறும், பந்தல் சிறப்பும், பந்திச் சிறப்பும் ஒன்றும் வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆபிரகாம் இதை உலகப்பிரகாரமான ஆடம்பரத்தோடு செய்யக் கருதினால் பெலிஸ்தரின் அரசனும் அவன் பிரதானிகளும், ஏத்தின் புத்திரரும், கானானிய பிரபுக்களும் அவரவர் தங்கள் பரிவாரங்களுடனும் வெகுமானங்களுடனும் வந்துகூடுவார்கள் என்பது மெய். ஆனால் அவர் மெத்த அமைதலோடும் சொஸ்தபுத்தியோடும் தன் மகனுக்கு விவாகம் செய்திருக்கவேண்டியது. யாரையாவது அவர் கூப்பிட்டிருந்தால் அது சாலேமின் அரசனும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாகிய மெல்கிசெதேக்காய்மாத்திரம் இருக்கலாம். தேவன் பார்த்த பெண்ணுக்கு தேவன்தாமே குருவாயிருந்து ஆசீர்வாதங்கூறி கலியாணத்தை நிறைவேற்றினார் என்று சொல்லவேண்டியது.

ஈசாக்கு ரெபெக்காளை விவாகஞ்செய்து தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதலடைந்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். தற்காலத்தில் நமக்குள் நடக்கிற அநேக கலியாணங்கள் அப்படிச் சொல்லக்கூடாத ஸ்திதியில் இருக்கிறது. இந்தப் பெண்ணைக் கட்டி ஆறுதலடைந்தேன் என்று சொல்லுகிறவர்கள் மெத்தக் கொஞ்சம்பேர். பெரும்பாலும் அநேகர்

> அப்பா! உலகத்தில் பெண்கொண்டு நான்பட்ட
> அவதிகள் மெத்த உண்டு

என்று புலம்புகிறதையும், வேறு சிலர் ஐயோ, வேடனுடைய கண்ணிக்குத் தப்பாத கலைமான்போலும் வேட்டைநாயின் வா

ய்க்குத் தப்பாத புல்வாய்போலும் ஆனேனே என்று பிரலாபிக்கிறதையும் காண்கிறோம். இதெல்லாம் நகையுள்ள பெண்ணையும் நடையுள்ள பெண்ணையும், ஆடையுள்ள பெண்ணையும் அழகுள்ள பெண்ணையும், அவர்கள் மனப்படிக் கட்டிக்கொள்ளுகிறதினாலுண்டாகிறதின் லாபமே ஒழிய வேறல்ல. ஆனால் தேவ சித்தத்தின்படி அவருடைய நடத்துதலுக்கு தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்து, தான் தெரிந்துகொள்ளும் பெண்ணையல்ல, அவர் காட்டும் பெண்ணைக் கட்டுகிறவன் ஈசாக்கைப்போல் தன் மனைவியால் ஆறுதலடைவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

ஈசாக்கு விவாகஞ்செய்து இருபதுவருஷகாலம் பிள்ளையில்லாமலிருந்தான். அது அவனுக்கும் அவன் தகப்பனுக்கும் மிகுந்த விசனமாயிருந்தபோதிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நினைத்து, அவர் தமக்குச் சித்தமான ஒருகாலத்தில் புத்திர பாக்கியத்தைக் கடாட்சம்பண்ணலாமென்று எண்ணியிருக்கலாம். இக்காலத்தில் ஈசாக்கும் அவன் மனைவியும் நடந்துகொண்டவிஷயமானது மிகவும் புகழப்படத்தக்கது. அவன் தன் தகப்பனைப்போல் வேறு ஸ்திரீயைச் சேர்த்துக்கொன்ளவுமில்லை; அல்லது ரெபெக்காள் தன் மாமியைப்போல வேறு ஸ்திரீயை அவன் மடியிலே கொடுக்கவுமில்லை. அவர்கள் இருவரும் தங்கள் குறைவை நிவர்த்தியாக்கத் தாங்களே ஒருமுறையைக் கையாடாமல் தங்கள் இருவருடைய நம்பிக்கையையும் கர்த்தர்பேரில் போட்டார்கள். அவர்கள் இந்த இருபது வருஷகாலமாய் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் விண்ணப்பங்களிலிருந்து ஓயவுமில்லை, அவநம்பிக்கை என்னும் பள்ளத்தில் விழவுமில்லை.

ஈசாக்கு அறுபது வயதாயிருக்கையில் தேவன் அவர் விண்ணப்பங்களுக்குச் செவிகொடுத்தார்; ரெபெக்காள் கர்ப்பம் தரித்தாள். அவள் தன் கர்ப்பகாலத்தில் சொல்லமுடியாத வேதனையடைந்து கர்த்தரிடத்தில் சகாயத்துக்காக வேண்டுதல் செய்துகொண்டுவந்தாள். பிரசவகாலம் பூரணமானபோது அவளுக்கு இரட்டைப்பிள்ளைகள் பிறந்தது. சிலவேளை தேவன் நமது விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்கத் தாமதப்பட்டாலும், அவைகளை நிறைவேற்றும்போது ஒட்டிக்கு இரட்டியாய்க் கொடுத்து நிறைவேற்றுகிறார்.

இந்தப் பிள்ளைகள் பிறந்த சிலகாலத்திற்குப் பிற்பாடு அத்திசைகளில் பெரும் பஞ்சமுண்டாயிற்று. அக்காலத்தில் ஈசாக்



குப் பஞ்சம்பிழைக்கும்படியாக எகிப்துக்குப் போகவேண்டுமென்றிருந்தான். ஆனால் தேவன் எப்படியோ அவன் யோசனையைத் தடுத்து, பெலிஸ்தியர் வாசம்பண்ணின கேரார்தேசத்திற்குப் போகும்படி உத்தரவுகொடுத்தார். அவன் அப்படியே கேரார்தேசத்தில் போய்க் குடியிருந்தான். அவ்விடத்திலிருக்கையில் முன் அவன் தகப்பன் என்ன தப்பிதத்தில் விழுந்தானோ அதே தப்பிதத்தில் இவனும் விழுந்தான். எப்படியெனில், அவனுடைய மனைவி மகா அழகுள்ளவளாய் இருந்ததால் பெலிஸ்தர் தன்னைக் கொலைசெய்து அவளை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று பயந்து, அவளைத் தன் சகோதரி என்று கேட்டவர்களுக்கெல்லாம் சொல்லிவந்தான். ஈசாக்கு வாசம்பண்ணின வீடு ராஜஅரமனைக்குச் சமீபமாயிருந்தது. ஆகையால் அவன் பிரபுக்கள்வரிசையில் தன் காலத்தைக் கழித்திருக்கவேண்டியது. இதொன்றுதான் நாம் ஈசாக்கின் சரித்திரத்தில் அவனைப்பற்றித் துக்கத்தோடு வாசிக்கிற விஷயம். இதனால் எவ்வளவு தேறின பக்தனுக்குள்ளும் குறைவுகள் இருக்கிறதென்கிற சத்தியம் வெளியாகிறது. அசுத்தமான மனுஷருக்குள் பூரண சுத்தனைக் கண்டுபிடிக்கத்தக்கவன் யார்? ஈசாக்கின் பொய் வெகு சீக்கிரத்தில் வெளியாகிப்போயிற்று. "கெட்டிக்காரன் பொய் எட்டுநாளைக்குமாத்திரம்" என்று ஒரு பழமொழியும் உண்டல்லவா!

தேவன் கேராரில் வசித்த ஈசாக்கை அதிகமாய் ஆசீர்வதித்தார். அவன் அநேகவருஷம் அங்கே தங்கி, நிலங்களைச் சம்பாதித்து சீமானாகிவிட்டான். ஒருவருஷம் அவன் நிலத்தில் ஒன்றுக்கு நூறுமேனி விளைவு கண்டது. பிறர் வாழச் சகியாத பலரை நாம் கண்டிருக்கிறோமே; இந்தப் பெலிஸ்தரும் அப்படிப்பட்டவர்கள்தான். ஈசாக்கின் வாழ்வையும் சொற்சத்தியையும் கண்ட அந்த பெலிஸ்தர் பொறாமைப்பட்டார்கள். கடைசியாக அரசன்முதலாய் அங்கலாய்க்கும்படியாக அவன் ஐசுவரியம் அவ்வளவு பெருகிவிட்டது. அதினாலே அவனை அந்த நாட்டிலிருந்து போய்விடும்படி ராஜகட்டளை பிறந்தது. அவன் அப்படியே அவர்களுடைய தேசத்தின் எல்லையை விட்டுத் தாண்டி ஒரு மைதானத்தில் போய்க் குடியிருந்தான். அதன் பின்பு பெலிஸ்தியர் ஈசாக்கை நஷ்டப்படுத்தும்படி ஆரம்பித்து அவன் வெட்டின துரவுகளை எல்லாம் தூர்த்துப் போட்டார்கள். அவனோ அவர்கள் தனக்குச் செய்யும் நஷ்டங்களை தேவனிடத்தில் அறிக்கையிட்டு பொறுமையோடு காலம் கழித்தான். வானம் கொடுக்கிறதையெல்லாம் பூமி விழுங்கும்

படிபார்த்தால் முடியுமா? வானத்திலும் பூமி எவ்வளவோ மடங்கு சிறிதாயிருக்கிறது. ஈசாக்கின் வாழ்வு முன்னிலும் அதிகமாய் விருத்தியாயிற்று. மேலும் தேவன் தாம் ஆபிரகாம்முனிவருக்குச் செய்த வாக்குத்தத்தங்களையெல்லாம் இவனுக்கும் புதிப்பித்து உறுதிப்படுத்தினார். தேவாசீர்வாதமானது ஈசாக்கை மூடும் திரையாயும், அவருடைய தயவானது அவனைச் சுற்றிநிற்கும் மதிலாயுமிருக்கக்கண்ட பெலிஸ்தர், இனி அவனோடு விரோதம்பாராட்டுவதிலும் உறவாகிக்கொள்வது உத்தமமென்று கண்டு சமாதான உடன்படிக்கை செய்யும்படி வந்தார்கள். இவர்கள் நடந்துகொண்ட நடபடிக்கையானது "எட்டினால் குடுமியைப் பிடி, எட்டாவிட்டால் காலைப் பிடி" என்று சொல்லப்படும் கள்ளத்தன பழமொழிக்கு இசைவாய் இருக்கிறது என்று சொல்லவேண்டியது.

தன்னுடன் உடன்படிக்கை செய்யவந்த பெலிஸ்தரை ஈசாக்கு பார்த்து, நீங்கள் என்னை உங்கள் நாட்டைவிட்டு அடித்துத்துரத்திவிட்டீர்களே, இப்போது என்னிடம் ஏன் வந்தீர்கள் என்று கேட்டான். அதற்கவர்கள், "நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடுகூட இருக்கிறார் என்று கண்டோம்" என்று சொன்னார்கள். ஈசாக்கை அவர்கள் இவ்வளவு மதிப்பதற்கு அவனிடத்திலிருந்த தேவபக்தியே காரணமாய் இருந்தது. தேவனுடைய பிள்ளைகள் உலகத்தில் இருந்தால் இப்படி சத்துருக்களால் சாட்சிபெறுகிறவர்களாய் இருக்கவேண்டும். மற்றப்படி லாபமென்ன? நல்லோர் சச்சரவையும் மனமுறிவையுமல்ல, சமாதானத்தையும் மனநேர்மையையுமே கருதுகிறார்கள். ஈசாக்கும் அவர்கள் விரும்பிவந்தபடியே பெலிஸ்திய அரசனோடும், அதிபதிகளோடும் ஆணையிட்டு உடன்படிக்கை பண்ணிக்கொண்டான்.

ஐக்கியத்துக்கு மிஞ்சின பெலனுமில்லை,
அந்நியோந்நியத்துக்கு மிஞ்சின ஆறுதலுமில்லை.

ஈசாக்கின் வெளிக்காரியங்கள் எல்லாம் செல்வமும் சிறப்புமாய் இருந்தபோதிலும் அவன் வீட்டுக்குள் அவ்வளவு மனச்செழிப்பு உண்டாயிருக்கவில்லை. ஏனெனில், அவர்களுக்கு ஒரே கர்ப்பத்தில் பிறந்த இரண்டு பிள்ளைகளும் அவ்வளவு சமாதானமாய் இருக்கவில்லை. இவ்வளவுக்கும் காரணம் அந்தப் பெற்றோர்தான். இவர்களில் தகப்பன் தனக்கு அடிக்கடி வேட்டையாடி விநோதமான கறிகளைக் கொண்டுவந்து கொடுத்த ஏசாவையும், தாயானவள் தன் பக்கத்திலிருந்து தன்னைத் தடவி முத்தமிட்டு ஏமாற்றிக் காலங் கழித்த யாக்கோபையும் பங்குபோட்டு நேசிக்கிறதுபோல் நேசித்துவந்தார்கள். பெற்றோரின் அந்தரங்கச் சிநேகம் அவரவரைப் பெருமைக்கு ஏவிவிட்டதால் சகோதரருக்குள் இணக்கமில்லாமல் பிணக்கமாயிற்று. இதனால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பாரபட்சமாய் நேசிக்கக்கூடாதென்று நன்றாய் விளங்கும். இவர்கள் வரவர அதிகப்பட்டுக் கடைசியாக ஒருவரை ஒருவர் கொலைசெய்துபோடும்படியான எண்ணமும் அவர்களுக்குள் உண்டாயிற்று. இதில் முதல் பிறந்தவனாகிய ஏசா என்பவன் தன் பெற்றோர் சம்மதியில்லாமல் தானே பெண்தேடி ஒன்றின்பின் ஒன்றாக மூன்று பெண்களைக் கட்டிக்கொண்டான்.



அவன் பெண்கொண்ட குலமும் பல பெண்களைக் கட்டினவிஷயமும் ஈசாக்குக்கு சொல்லமுடியாத மனவருத்தத்தைக் கொடுத்தது. இக்காலத்தில் அநேக வாலிபர் தன் மூப்பாய் பெண்களைத் தெரிந்துகொள்ளவும், பிதா மாதாக்களை அசட்டையாய் பேசவும் காண்கிறோம். அந்தப் பாடத்தை அவர்கள் ஏசாவின் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள் என்று சொல்லவேண்டியது. ஏசாவின் பிசகையெல்லாம் அவன் கொண்டுவந்த வேட்டைக்கறிகள் மாற்றிவிட்டதுபோல தோன்றுகிறது. ஏனெனில் இப்படியெல்லாம் செய்த ஏசாவை அவன் பிதா பின்னும் நேசித்துவந்தான் என்று காண்கிறோம்.

இன்னொரு மகனாகிய யாக்கோபின் செய்கைகளாவது அவன் மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை. அவன் தான் நேசித்த ஏசாவை ஏமாற்றி அவனுடைய சேஷ்டபுத்திர பாகத்தையும் ஆசீர்வாதத்தையும் தந்திரமாய் அபகரித்துக்கொண்டான். இந்த வரலாறுகளைப் பிந்தின சரித்திரத்தில் தெளிவாகக் காட்டுவோம். ஆகவே இரண்டு மக்களைப்பற்றியும் அவன் மனதில் சந்தோஷம் உண்டாகவில்லை என்று சொல்லவேண்டியது. என்றாலும் கடைசியாக ஒருவருக்கொருவர் தூரமாய்ப்போனால் அவர்கள் மனதிலிருக்கும் வர்மம் தணியுமென்றும், யாக்கோபு தன் தமையனைப்போல் கானானிய பெண்களைக் கட்டாமல் தன் பந்துவழி ஜனத்தில்போய் பெண் எடுக்கும்படியாகவும், அவனைப் பதான்அராமிலிருக்கிற தன் தாய்வழி பந்துக்களிடம் அனுப்பிவிட்டான்.

இக்காலத்தில் அவன் கண்கள் இருளடைந்து அவன் முதிர்வயதாகிவிட்டாலும் பின்னும் அநேககாலம் உயிரோடிருந்து ஒருகாலத்தில் பிராணசத்துருக்களாயிருந்த தன் மக்கள் இருவரும் மறுபடியும் சிநேகிதராய் காலங்கழிக்க கண்குளிரக்கண்டு,

பூரண ஆயுசுள்ளவனாய் நூற்று எண்பதாம் வயதில் மோரியா மலையில் தன் ஜீவனை தற்காத்த ஆண்டவரிடத்திற்குப் போய் என்றென்றைக்கும் வாசமாயிருக்கும்படி தன் ஜீவ ஓட்டத்தை முடித்தான். அவன் பெற்ற இரண்டு குமாரராகிய ஏசாவும் யாக்கோபும் சேர்ந்து, தங்கள் பிதாவை அக்காலவழக்கம்போல பரிமள தைலங்களுடன் அவர்கள் பிதாக்களின் பாதாள அரமனைக்குள் சேர்த்தார்கள்.

ஈசாக்கின் சரித்திரமானது மொத்தத்தில் உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை முன்குறிப்பிக்கிறதாய் இருக்கிறது. ஈசாக்குத் தன் தாய் பெறக்கூடிய நிலைமை தாண்டின காலத்தில் பிறந்தான்; இயேசு தமது தாயார் பெறக்கூடிய நிலைமைக்குவருமுன் கன்னிகைகாலத்தில் பிறந்தார். ஈசாக்கு என்ற பேருக்கு "நகைப்பு" அல்லது "களிப்பு" என்பது பொருளாகும். இயேசு ஜநநமானகாலத்தில் மரியம்மாள், என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது என்று அறிக்கையிட்டாள். ஈசாக்கு மரணபரியந்தம் கீழ்ப்படிந்து நடந்ததுபோல இயேசுவும் சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகத் தம்மைத்தாமே தாழ்த்தினார். அவன் கட்டைகளைச் சுமந்து மோரியாமலையின்மேல் ஏறினான்; இயேசு சிலுவையைச் சுமந்து கொல்கொதாமலை ஏறினார். அவன் ஆபிரகாமின் ஒரே குமாரனும் வாக்குத்தத்ததேசமாகிய கானானின் ஏக சுதந்தரவாளியுமாயிருந்தான்; இயேசு பிதாவின் ஒரே நேசகுமாரனும் பரம கானானின் முழுச்சுதந்தரவாளியுமாய் இருக்கிறார். அவர்மூலமாய் நாமும் அந்தச் சுதந்தரத்துக்குப் பங்காளிகளாகிறோம். அல்லேலூயா.

இனி நாம் ஈசாக்கைப்போல் "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே" என்று கலக்கப்பட்டுக் கேட்கவேண்டியதில்லை. ஏனெனில் நமது பஸ்கா ஆடாகிய கிறிஸ்து அடிக்கப்பட்டிருக்கிறார்; அவரைப் பிதாவாகிய தேவன் பாவநிவாரண பலியாடாக்கினார். அவருடைய இரத்தம் நமது பாவங்களைக் கழுவி நம்மைச் சுத்திகரிக்கின்றன. அவரை விசுவாசித்து அவர்மூலமாய் பரம கானானுக்குள் நுழையும் சலாக்கியத்தையும் அதின் சுதந்தரங்களில் பங்குபெறும் பாக்கியத்தையும் தேடிக்கொள்வதே நமது கடமையாயிருக்கிறது.



# JACOB.

# யாக்கோபு முனிவர்.

## ஜநநபருவம்.

வேதாகம வரலாறுகள் ராஜசம்பந்தமும் ராஜ்ய சம்பந்தமுமானவைகளாய் இராமல், ஆள்சம்பந்தமும் ஆண்டவருடைய செயல்சம்பந்தமுமான ஆழ்ந்த வரலாறுகளாகவே இருக்கின்றன. இதில் ராட்சதர் எழும்பி எவ்வண்ணம் ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள் என்றும், வீரர்கூடி தங்கள் வீரத்துவத்தை எப்படி விளங்கப்பண்ணினார்கள் என்றும் நாம் பார்க்கிறதில்லை. இப்படிப்பட்ட சம்பவங்கள் சாதாரண உலகத்தை ஆச்சரியப்படப் பண்ணுகிறதுண்டு. நாம் இங்கே அரமனை அலங்காரங்களையும் தெருவீதிச் சிறப்பையும்பற்றிப் பேசாமல், கூடாரகுடியிருப்புகளையும் வனசஞ்சாரங்களையும்பற்றியே பேசிவருகிறோம். எப்படியிருந்தபோதிலும் இச்சரித்திரவரலாறுகளால் மெய்த்தேவவணக்கத்தையும் ஆராதனையையும் தேவன் எவ்வண்ணம் பிரபல்லியப்படுத்தி இவ்வுலகில் நிலைநிறுத்தப்பார்த்தாரென்றும், இரட்சண்யஜோதி ஆதியில் மின்மினிப்பூச்சுபோல் விளங்கினாலும் வரவர உச்சிநேர பகலோன்போல் பிரகாசிக்க ஆரம்பிக்கிறதென்றும் தெளிவாய் அறிந்துகொள்ளுகிறோம்.

ஆதியில் தேவன் ஒரே குடும்பத்தை சத்தியத்தின் பொக்கிஷ அதிகாரியாக ஸ்தாபித்தார்; இப்பொழுதோ அதைப் பிரபல்லியப்படுத்தும் மூன்று அதிகாரிகளைக் காண்கிறோம். இந்த மூவர் பேராலும் தேவன் தமது நாமத்தைச் சூட்டிக்கொள்ளச் சித்தமாகி, அத்திருச்சித்தப்படியே தம்மை "ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன்" என்னும் நாமதேயத்தால் அழைத்துக்கொண்டார்.

யாக்கோபுமுனிவர் தமது பிதாவையும் முற்பிதாவையும்போல் அந்நியனும் பரதேசியும்போல ஜீவித்துவந்தார். ஆதலால் அவரை இக்காலத்தில் மச்சுமாளிகைகளில் வசிக்கும் மன்னரோடும், ரதவாகனமேறி ஆடம்பரமாய்க் காலங்கழிக்கும் பிரபுக்களோடும் ஒப்பிட்டுப்பார்க்க ஏதுவில்லை. ஆனால் பல குறைகளோடு அவரிடத்தில் விளங்கிய பக்தியும், தேவன் அவர்பேரில் பொழிந்த கிருபாபிஷேகங்களும் அவரை மதிக்

கும்படி எவர்களையும் ஏவுமென்பதற்குச் சந்தேகமில்லை. உள்ளபடிச் சொன்னால் அவரே யூதசாதியின் அடித்துளிராய் இருந்தார்; அவரிலிருந்து பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களாகிய கிளைகள் எழும்பினது; அவர் மேசியாவின் முற்பிதாவாயிருந்தார். வரப்போகிற மேசியா சிலதரம் யாக்கோபு என்ற பேராலும் அழைக்கப்பட்டிருந்தார். எக்காலத்திலுமுள்ள பரிசுத்த வித்தாராகிய விசுவாசிகள் எல்லாம் இவருடைய பேரைமுன்னிட்டு "யாக்கோபின் வித்து" என்றும், "தேவனுடைய இஸ்ரவேலர்" என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாக்கோபு முனிவரைப்பற்றி பொதுவாக நாம் இம்மட்டும் சொன்னவைகள் போதும். இனி அவருடைய ஜநநகாலமுதல் அந்தியகாலமட்டுமுள்ள வரலாறுகளை ஆதியோடந்தமாய்ச் சொல்லுவோம்.

யாக்கோபு முனிவருடைய ஜநநசம்பவமானது அவருடைய பிதாவின் ஜநநசம்பவத்தைப்போலவே ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. அவருடைய பிதாமாதாக்கள் விவாகம்செய்து இருபது வருஷகாலமாகியும் அவர்களுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. இந்த இருபது வருஷகாலமாய் இருபேரும் ஆவலோடும் அநுதாபத்தோடும் ஆண்டவருடைய பாதத்தைப்பிடித்து விண்ணப்பம் பண்ணிக்கொண்டே இருந்தார்கள். கடைசியாக இருபதுவருஷமாகக் கேளாதவர்போலிருந்த தேவன் அவ்விருவருடைய இருதயமும் மகிழும்படியான பலனைக் கட்டளையிட்டார். இவருடைய தாயாகிய ரெபெக்காள் கர்ப்பமாயிருந்தகாலத்தில் மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அநுபவித்தாள். ஏனெனில், அவள் கர்ப்பத்திலே இரண்டு பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன. இப்படியே எல்லா கர்ப்பவதிகளுக்கும் இருக்கலாம் என்று அவள் துவக்கத்தில் நினைத்திருப்பாள். ஆனால் இப்படி இருக்கிறதில்லை என்பதை அவள் பலராலும் விசாரித்தறிந்த பின்பு இந்த கர்ப்பமோதுதல் தன் மரணத்துக்கேதுவாயிருக்குமோ என்றஞ்சி ஆண்டவரிடத்தில் முறையிட்டாள். அப்பொழுது தேவன் அவளுக்குத் தரிசனமாகி,

இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்திலிருக்கிறது,
இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்துபிரியும்.
ஒன்றைவிட ஒன்று பலத்திருக்கும்,
மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்

என்று சொன்னார். இந்த நாலு வாசகங்களால் தன் கர்ப்பத்தின் தன்மையும், தன் கர்ப்பத்திலிருந்து புறப்படுவோரின் பிற்காலஸ்திதியும் இன்னதென்று அவளுக்குத் திட்டமாய்த் தெரிந்துபோயிற்று. அதுமுதல் எப்பொழுதாவது கர்ப்பத்தில் பிள்ளைகள்மோதி அவள் வருத்தப்பட்டால் மேலேசொன்ன நாலு வாசகத்தையும் நினைத்து தன்னைத் தேற்றிக்கொள்ளுவாள். என்றாலும் தன்னில் தோன்றும் ஜனம் இரண்டுவிதமாய் இருக்கும் என்றும், ஒன்றைவிட ஒன்று பலத்திருக்கும் என்றும், மூத்தவன் இளையவனுக்குக் கீழ்ப்பட்டவன் என்றும் உணர்த்தும் வார்த்தைகள் அவளுக்கு விளங்கவில்லை. பிரசவகாலம் பூரணமானபோது அவள் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றாள். இவள்தான் முதலாவது இரட்டைப்பிள்ளைகளைப் பெற்ற தாய் என்று நாம் அறிந்துகொள்ளுகிறோம். முதலாவது பிறந்தபிள்ளை சிவந்த நிறமுள்ளவனாகவும், சர்வாங்கமும் ரோமஅங்கி போர்த்தவன்போலவும் வெளிப்பட்டான்; அவனுக்கு ஏசா என்று பேரிட்டார்கள். பின்பு அவன் சகோதரன் தன் கையினாலே முந்தினவனுடைய குதிங்காலைப் பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான்; அவனுக்கு யாக்கோபு என்று பேரிட்டார்கள். ஏசா என்ற பேருக்கு "மூடிக்கிறவன்" என்றும், யாக்கோபு என்ற பேருக்கு "குதிங்காலன்" என்றும் அருத்தம். இந்த இரட்டைப்பிள்ளைகளின் பிறப்பின் தன்மையால் இவ்விருவருக்கும் கர்ப்பத்திலே போராட்டம் துவங்கியிருக்கிறதுபோல் இருக்கிறது. இளையவன் மூத்தவனைக் கீழ்ப்படுத்தும்படி கர்ப்பத்திலிருந்தே யுத்தம்பண்ணியிருக்கிறான்; பிரசவகாலத்திலும் அவன் தன் யுத்தமுயற்சியை நிமிஷநேரம் நிறுத்தாமல் முந்தினவனுடைய குதிங்காலைப் பிடித்துக்கொண்டே வருகிறான். இந்த அறிகுறியானது இளையவன் மூத்தவனைப் பார்த்து உன் காலை வாரிஅடிக்கிறேன் பார் என்று வாதாடுகிறதுபோலவும், உனக்கும் எனக்கும் உலக அந்தஸ்தில் யாதொரு வித்தியாசமில்லை, உன்னோடு நான் ஒட்டிப்பிறந்தேன்; உன் கால்முழுமையும் வெளிப்படுகிறதற்குள்ளாக என் கை வெளிப்பட்டிருக்கிறது என்று வழக்குக் கூறுவதுபோலும் இருக்கிறது.



இந்தப் பிள்ளைகளை தாயும் தகப்பனும் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்த்தார்கள். அவர்கள் பெரியவர்களானபோது ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமானான்; யாக்கோபு குணசாலியும் கூடாரவாசியுமாய் இருந்தான். இந்தப் பிள்ளைகள் வளருங்காலத்தில் ரெபெக்காள் தன் சந்தானத்தைக்குறித்து தேவதூதனால் முன் அறிவிக்கப்

பட்ட வரலாறுகளை அடிக்கடி தன் புருஷனுடன் பேசிக்கொண்டிருந்திருக்கலாம். தன்னிடத்தில் "இரண்டுவித ஜனங்கள்" உண்டாவார்கள் என்ற வார்த்தையால் தங்கள் மக்களுடைய குணாதிசயங்கள் வேறுபட்டிருக்கும் என்பது அவர்களுக்கு நன்றாய் தெரிந்திருந்தது. மேலும் "இளையவனை மூத்தவன் சேவிப்பான்" என்ற வாசகத்தால் இவ்விருவரில் தேவனுக்குப் பிரியமானவன் எவன் என்றும் அவர்கள் தெளிவாய் அறிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது. அப்படியிருந்தும் ஈசாக்கு வனசஞ்சாரியாயிருந்த ஏசாவை நேசித்தான். இந்த நேசத்துக்கு ஒரு முகாந்தரமும் இருந்தது. ஏசா வனங்களுக்குப்போய் காடை கவுதாரி, மணிப்புறா மாடப்புறா, முதலியவைகளை வேட்டையாடிக் கொண்டுவருகிறது ஈசாக்கின் வாய்க்கு ருசிகரமாயிருந்ததாம்; அதினாலே ஏசாவை சிநேகித்தான் என்று பார்க்கிறோம். இளையவன்மேல் கூறப்பட்ட தேவவாக்குகளையெல்லாம் ஏசாவின் வேட்டைக்கறிகள் மாற்றிவிட்டது என்று பார்க்கிறோம். உலககாரியங்களினிமித்தம் தேவகாரியங்கள் எவ்வளவு அற்பமாய் எண்ணப்படுகின்றன என்பதை நாம் இங்கே கவனித்துக்கொள்ளுகிறோம். ரெபெக்காளின் நேசமோ இளையபிள்ளையின் பட்சமாய் சாய்ந்திருந்தது. ஒருவேளை வீட்டு வேலைகளிலும் மற்றும் சில்லறை விஷயங்களிலும் இவன் எப்போதும் தாயோடு கூடிக்கொண்டிருந்தானாக்கும்; அல்லது மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்ற திருவாக்கைஅவள் அடிக்கடி நினைவுகூர்ந்து அப்படி நடந்துகொண்டாளாக்கும். கர்ப்பப்பகையோடு பெற்றோர் இப்படிப் பிரித்துநேசிக்கும் விஷயமானது அவர்களுக்குள் அதிக விரோதத்தை உண்டாக்குகிறதாக இருந்தது. அயல்வீட்டு ஆயிரம்பிள்ளைகளை நடத்தி ஆளுவதிலும் தன் வீட்டு இரண்டு பிள்ளைகளை ஆண்டு நடத்துவது அதிக வருத்தமென்று இதினாலே தெரியவருகிறது.

## முனிவர் கூழ்விற்ற பருவம்.

அவ்விருவரும் வாலிபமாயிருந்த காலத்தில் ஒருநாள் ஏசா தன் வழக்கம்போல் தன் வில்லையும், கவணையும், மற்றும் வேட்டை வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டு வேட்டையாடிக் காலம்போக்கும்படி வனத்துக்குப் போனான். அவன் வனம் போன வேளையிலே யாக்கோபு தன் தாயைத் தொந்தரவு பண்ணி கூழுக்கேற்ற பதார்த்தங்களை வாங்கி விளையாட்டுப்



போல கூழ் சமைத்தார். கூழ் வெந்து இறக்கப்போகும் சமயத்தில் வனம்போன ஏசா இளைத்துக் களைத்துவந்துசேர்ந்தான். அச்சமயத்தில் அவனுக்குண்டான பசிக்கு ஒரு அளவில்லை. தாயார் அப்பொழுது வீட்டிலுமில்லை; ஏதோ வேலையாய் வெளியே போயிருந்தாள்போலிருக்கிறது. அந்தக் கூழ் கண்ணுக்கு அழகாயும் அதன் வாசனை நாசிக்கு மதுரமாயும் இருந்தது. இப்படிப்பட்ட கூழை என் நாவு ருசித்து என் தொண்டை விழுங்கி வயிறு குளிர்ந்தால் என்ன இன்பமாய் இருக்குமென்று அவன் மனதுக்குள் எண்ணம் பிறந்தது. பசித்தவனுக்குப் பச்சைத்தண்ணீரும் பாலாம். இந்தக் கூழ் அப்படியானால் தேனாமிர்தமாயிருக்கமாட்டாதா? அந்தக் கூழ் ஏசாவுக்கு தேவாமிர்தம்போல இருந்தது. அப்பொழுது ஏசா தன் தம்பியிடம்போய் தம்பி! அந்தச் சிவந்த கூழிலே எனக்குக் கொஞ்சம் தா, இளைப்பினால் காதடைக்கிறது, கண்ணும் மயங்குகிறது என்று கேட்டான். அப்பொழுது யாக்கோபு, உன் சேஷ்டபுத்திரபாகத்தை இன்று எனக்கு விற்றுப்போடு, அப்படி விற்றால் உனக்குக் கூழ் தருகிறேன் என்று சொன்னார். ஏசாவை விழுங்கிப்போடவேண்டுமென்றும், சகல சுதந்தரங்களுக்கும் சுயாதீனனாகவேண்டுமென்றும் யாக்கோபுமுனிவர் கர்ப்பத்துக்குள்ளேயே பிரயத்தனப்பட்டார். அந்த கர்ப்ப காலத்துக்குள் அவர் நினைத்த காரியம் சித்திபெறாமல்போனதால் இப்பொழுது அதை அநுகூலப்படுத்திக்கொள்ளப் பிரயாசப்படுகிறாராக்கும். ஏசாவின் ஆதிக்கத்தை அடியோடு மாற்றிப்போட கர்ப்பத்துக்குள் அவன் குதிங்காலைப் பிடித்தார்; இப்பொழுது அவன் வயிற்றில் அடித்து அதைப் பிடுங்கப் பார்க்கிறார். அதற்கு ஏசா இதோ, நான் சாகப்போகிறேனே, இந்த சேஷ்டபுத்திரபாகம் என்னத்துக்கு என்று சொல்லி முனிவர் கேட்டுக்கொண்டபடி ஆணையிட்டு, தன் சேஷ்டபுத்திரபாகத்தை முனிவருக்கு விற்றுப்போட்டான். உடனே முனிவர் கூழோடுகூட அப்பமும் கொடுத்து அவன் பசியை ஆற்றினார். அவன் புசித்துக் குடித்து எழுந்துபோய்விட்டான்.

இந்த வரலாறுகளை நாம் கேட்கையில் யாக்கோபுமுனிவரை தீட்பாகப்பேசி அப்பா, இவன் கல்நெஞ்சன்; அன்னமிட்டுக் கன்னமிடுகிறான்; அண்ணன் என்றும் பாராமல் அநியாயம் செய்துவிட்டான்; கொஞ்சம் கூழ் கொடுத்தால் இவன் குறைந்தாபோவான் என்றிப்படிப் பலவாறாகச் சொல்லலாம். இவ்விஷயத்தில் ஏசாவின் பட்சத்திலிருக்கிற பிழைகளைக் கவனிக்கவேண்டியது. "ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை

அலட்சியம்பண்ணினன்" என்று வேதம் அறிவிக்கிறது. சேஷ்டபுத்திரபாகமென்பது லேசானவிஷயமல்ல, இது மகா விலையுயர்ந்தது. சிரேஷ்டபுத்திரனுக்கு ஆஸ்தியில் இரட்டைப் பங்குண்டு; அதிலும் அதிகமாய் அவனே குடும்பத்துக்கு பூசாசாரியாய் இருக்கவேண்டியது. இவ்வளவு விலையேறப்பெற்ற சுதந்தரத்தை அவன் அலட்சியம்பண்ணினது எவ்வளவு துக்கப்படத்தக்க விஷயமாயிருக்கிறது! இப்படி அலட்சியம் செய்கிறவனிடத்தில் ஒன்றும் கொடாமலே அந்தச் சுதந்தரமுழுவதையும் பிடுங்கிப்போடுவது நியாயமல்லவா? மேலும் ஏசாவுக்கு வயிறே தேவனாய் இருந்திருக்கிறது. இவன் தன் அந்தஸ்துக்கு ஏற்ற தேவமுறைமைகளை ஒழுங்காய் நடத்திவந்தான் என்று சொல்லவும் ஏதுவில்லை. வேட்டையாடுவதும் வேட்டைக் கறிகளைப் பொரித்து தன் வயிற்றை நிரப்புவதுமே அவன் முக்கிய கவலையாய் இருந்ததென்று சொல்லவேண்டியது. எபிரெயர் நிருபத்தை எழுதின ஆகமக்காரன், இப்படி ஒருவேளை போசனத்துக்காக தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவை "சீர் கெட்டவன்" என்று சொல்லுகிறார் (எபி. 12. 16.). இவ்வண்ணம் ஏசா கூழுக்காக தன் சுதந்தரத்தை விற்காமல் அந்தப் பசியினாலே செத்திருப்பானானால் அவனை நாம் புகழவேண்டியது நியாயமாய் இருக்கும். மேலும் அவன் தன் தம்பி கூழுக்காக கேட்கும் கிரயத்தைப் பற்றிய வரலாறுகளைத் தன் தாய்தந்தையிடம் சொன்னது மெய்யானால் அவர்கள் இவ்வளவு மோசமான நிலைமையில் அவனை விழத்தள்ளியிருக்கமாட்டார்களே! இல்லை, இல்லை. அவன் பெரும்வயிற்றுச் சோம்பேறி; அவனுடைய தேவன் வயிறு. அவன் சிந்தையும் கவனமும் பூமிக்குரியவைகளையே நாடியிருக்கிறதென்று விளங்குகிறது. இப்படிப்பட்டவனுக்கு இரட்டைப் பங்கென்னத்துக்கு? ஆசாரியவூழியமேன்மை என்னத்துக்கு? இப்படி பெரும் காரியங்களை அலட்சியம் பண்ணுகிறவன் அவைகளை வேறே யாருக்கும் விற்றுப்போடாதபடி யாக்கோபு முனிவர் அதை வாங்கிக்கொண்டது சந்தோஷமான காரியந்தான்.

இவையெல்லாவற்றோடு தேவசெயலும் நடத்துதலும் எப்படியென்று கவனிக்கும்போதும் நாம் யாக்கோபுமுனிவனைக் குற்றஞ்சொல்ல ஏதுவில்லை. இவர்களுடைய ஜநநத்திலே மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும் தேவன் தமது சுயாதீன சித்தத்தின்படியே யாக்கோபைச் சிநேகித்து ஏசாவை வெறுத்தார். இதற்கு முகாந்



தரம் என்ன என்று கேட்கத்துணிவது தேவனுக்கு ஒருபடி மேலேறவேண்டுமென்று விரும்புகிற ஆணவமாய் இருக்கும். எப்படியிருந்தபோதிலும் ஏசாவின் நடபடிக்கையானது யாக்கோபுமுனிவர் நடந்துகொண்டதிலும் மோசமானதாய் இருக்கிறது. நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியானது ஏவாளை இழுத்து மோசம்போக்கினது; யாக்கோபின் பயற்றங்கூழின் வாசனையும் நிறமும் ஏசாவை இழுத்து அவன் சுதந்தரங்களிலிருந்து அவனைப் புறம்பாக்கியிருக்கிறது. தன்னை உலகத்தோடு இழுக்கும் ஆசாபாசங்களை அறுத்து அநுதினமும் ஆண்டவரை அண்டிக்கொண்டிருப்பது அவருடைய அடியாரின் வேலையாய் இருக்கவேண்டியதேயன்றி, இழுத்த திசைக்கெல்லாம் இசைந்து, அடிக்கும் காற்றுக்கெல்லாம் அசைந்து ஐயோ, நான் என்னசெய்வேன் என்று அலறிக் காலங்கழிப்பது அடியாருடைய தொழிலாய் இருக்கக்கூடாது.

ஏசா தன் சிரேஷ்டபுத்திரபாகத்தை இழந்துபோனதையிட்டு வெகுகாலமாய்க் கவலைப்படவே இல்லை என்று சொல்லவேண்டியது. எப்படியும் ஒருகாலத்தில் அதின் நஷ்டத்தை உணர்ந்தான். அவனுக்கு நாற்பது பிராயமாகையில் விவாகம் செய்துகொள்ளும்படி ஆசைப்பட்டு ஏத்தின் புத்திரரை அடுத்து அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டுபெண்களை விவாகம் செய்தான். அவன் பெண் தீர்மானம்செய்த வரலாறு ஒன்றும் ஈசாக்குக்குத் தெரியாது; அவன் ஈசாக்கின் ஆலோசனையை இந்தவிஷயத்தில் கேட்கவுமில்லை. ஏசாவின் விவாகசம்பந்தம் அவன் பெற்றோருக்கு எவ்வளவேனும் மனச்சந்தோஷமாயிருக்கவில்லை. ஒருவேளை இதை வாசிக்கும் கலியாணம்பண்ணாத வாலிபன், தன் தலையைத் துலுக்கிக்கொண்டு ஓகோ, நாற்பது வயதுள்ள புத்திசாலி தாய்தகப்பனைக் கேட்கவும்வேண்டுமா? அவன் உயர்ந்த பிரபுக்கள் குடும்பத்திலேதான் பெண் எடுத்தான்; அதற்காக அவனுடைய பெற்றோர் சந்தோஷப்படவேண்டியதல்லவா? அப்படியிருக்க அவன் சம்பந்தம்பண்ணிக்கொண்டவிஷயம் பெற்றோருக்குப் பிரியமில்லையாமே; அதேன்? ஏழை ஏசாவுக்கு அந்தக்கேடும், அறிவீனமுமான பெண்ணைக்கட்ட யோசித்தார்களாக்கும் அண்ணா! ஏசா, நீர்தான் புத்திசாலி என்று சொல்லிக்கொள்ளலாம். உலகப்பிரகாரமாய்ப் பார்த்தால் அது நல்ல சம்பந்தந்தான்; உயர்ந்த குடும்பந்தான்; நகைநட்டு அதிகம் அகப்பட்டிருக்கும்; சீதனம் கொடுத்திருக்கலாம்; அறுசுவையுள்ள போசனமும், அக்கம்பக்கத்தார் உறவும் நன்றாய்த்தானிருந்தது. ஆனால் அவர்களிடத்தில் தேவ

பயமில்லாததாலும், அவர்கள் அனைவரும் விக்கிரகாராதனைக்காரராய் இருந்தபடியாலும் அவர்கள் நடுவில் சம்பந்தம்பண்ணப் பெற்றோருக்குப் பிரியமில்லாதிருந்திருக்கிறது. வாலிப வயசுக்கு இது பெரிய காரியமாய்க் காணப்படாவிட்டாலும், விருத்தாப்பியருக்கு இதுதான் பெரிய காரியமாய் இருக்கும். அவர்கள் தற்கால இன்பங்களைப் பாராமல் எக்காலமும் குடும்ப கோத்திரத்தின் வாழ்வு தாழ்வு எப்படியென்று கவனித்துப் பெண்களைத் திட்டஞ்செய்வார்கள். அதைப் பிசகென்று சொல்லலாமா? ஏசா தன் இஷ்டம்போல பார்த்துக்கொண்ட பெண்கள் “ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. புதுப்பெண்கள் தங்கள் புருஷன் வழிஜனத்தோடு மெய்த்தேவனை ஆராதிக்கவும் பயபக்தியாய் நடக்கவும் பிரியங்காட்டாமல், சுய குடும்பவழக்கப்படி அந்நியதேவர்களை நாடவும் வணங்கவும் பிடிவாதம் பண்ணினதே அவர்கள் மனநோவுக்குக் காரணமாய் இருக்கலாம்.

அதற்கப்பால் வெகு வருஷங்களாய் நாம் முனிவருடைய சரித்திரத்தைப்பற்றி யாதொன்றும் வாசிக்கிறதில்லை. முனிவர் தமது வழக்கம்போல் ஆடுகளைமேய்த்து அமைதலாய் ஜீவனம் பண்ணியிருக்கலாம். தாம் பயற்றங்கூழினால் சம்பாதித்த சிரேஷ்டபுத்திரபாகத்தை கையாட்சைசெய்யும்படியாக விசேஷ பிரயத்தனம் செய்யவுமில்லை. ஆனால் அவருடைய தகப்பனார் முதிர்வயதாகி பார்வையற்றிருந்தகாலத்தில் ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. அது என்னவென்று கேட்பாயோ?

தகப்பனார் தமது மூத்தமகனைக் கூப்பிட்டு, மகனே! நான் முதிர்வயதானேன், என் மரணம் இன்னநாளில் என்று அறியேன்; ஆதலால் நீ உன் வேட்டைக்குரிய ஆயுதங்களோடு புறப்பட்டு வனத்துக்குப்போய் எனக்காக வேட்டையாடி என் மனம்போலச் சமைத்து நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே உன்னை ஆசீர்வதிக்கவும் என்னிடத்தில் கொண்டுவா என்று சொன்னான். இந்தச் சமாசாரம் பேசப்படும்போது யாக்கோபுமுனிவர் வீட்டில் இல்லை; ஆனால் ரெபெக்காள் இருந்தாள். அன்று விசேஷித்த பலிகள் செலுத்தப்படவும் ஒருவேளை திட்டஞ்செய்திருக்கலாம். தகப்பனாருடைய விருப்பத்தின்படி வேட்டையாடும்படியாக ஏசா போனான். இதனிடையில் ரெபெக்காள் ஒரு பெரிய மோசம்பண்ணினாள். அவள் நடந்த விபரங்களையெல்லாம் தன் இளையமகனிடத்தில் சொல்லி, மகனே, நீ ஆட்டுமந்தைக்கு ஓடி இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளைக் கொண்டுவா. நான் அவைகளை உன் தகப்பனுடைய நாவுக்கு ருசியாகச் சமைத்துத் தருகிறேன், நீ அதை உன் அண்ணன்பேரைச் சொல்லிக்கொண்டு படைத்து அவர் தரும் ஆசீர்வாதத்தை வாங்கிக்கொள் என்று சொன்னாள். அதற்கு உடன்பட முனிவர் இணங்கிக்கொண்டார் என்றாலும், அதற்கு ஒரு தடையும் சொன்னார். தன் தமையன் சுதந்தரங்களைப் பிடுங்கிக்கொள்வது அவருக்குப் பிரியமாயிருந்தாலும் தகப்பனுடைய விசனத்தைச் சம்பாதித்துக்கொள்ளக்கூடாதென்று எண்ணித் தன் தாயை நோக்கி: அம்மா! அண்ணன் உடம்பில் அதிக ரோமம் இருக்கிறது, என் உடம்பில் அப்படி இல்லையே; ஒருவேளை தகப்பனார் கிட்டவரச்சொல்லித் தடவிப்பார்த்தாலோ? அப்பொழுது நான் எத்தனாய்க் காணப்பட்டு என்மேல் ஆசீர்வாதத்தையல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்வேனே, அதற்கு என்னயோசனை என்று கேட்டார். அதற்குத் தாய்சொல்லுவாள், மகனே! உன்மேல்வரும் சாபம் என்மேல் வரட்டும்; என் சொல்லைமாத்திரம் கேட்டு அதின்படிச்செய் என்றாள். உடனே முனிவர் மந்தைக்கு ஓடி கொழுத்த ஆட்டுக்குட்டிகளைக் கொண்டுவந்தார். அறுபது வருஷத்துக்கு அதிகமாய் வீட்டுக்குடித்தனம் செய்த ரெபெக்காளுக்குத் தன் புருஷன் நாவுக்கேற்ற கறிகளைச் சமைக்கச் சொல்லியாகொடுக்கவேண்டும்? அவள் கிழமுனிவருக்கு ஏற்றாற்போல பதார்த்தங்களைச் சமைத்து மூத்தமகனாகிய ஏசா, குடும்ப ஆசாரிய ஊழியங்களைச் செய்யும்போது தரித்துக்கொள்ளும் நல்ல வஸ்திரங்களையும் இவருக்கு உடுத்தி, கைகளிலேயும் ரோமமில்லாத அவர் கழுத்திலேயும் வெள்ளாட்டுக்குட்டியின் தோலைப்போட்டு, தான் சமைத்த போசனத்தையும் கொடுத்து, பேசவேண்டிய உபாயங்களையெல்லாம் கற்றுக்கொடுத்து அனுப்பினாள். இந்த வேலையை நடப்பிக்கிறதற்கு அவளே மந்திராலோசனைக்காரியாயும், ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைக்கும் மடைப்பள்ளியாயும், அன்னத்தையும் ஆளையும் சிருஷ்டிக்கிற கர்த்தாவாயுமிருந்தாள். அவள் அவர் வாயிலே தந்திரமான வார்த்தைகளையும், தேகத்திலே பரிமளவாசனைவீசின வஸ்திரங்களையும், கழுத்திலும் கையிலும் ஆட்டுத்தோலையும் போர்த்து, கையிலே அறுசுவையுள்ள போசனத்தட்டோடு அவரைப் புறப்படப்பண்ணினாள். ஐயோ! ரெபெக்காளே! என்னவேலைசெய்தாய்? இது ஒருதாய் செய்யும் தருமசெய்கையா? இப்படிச் செய்யவா நீ முனிவருக்குக் கட்டுப்பட்டாய்? தவித்தவன் தண்ணீர்கேட்க, உனக்கும் உன் ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்றுசொன்ன தர்மகுணம் எங்கே?

உன் மகனுக்குப் படித்துக்கொடுக்க உனக்குத் தெரிந்த படிப்பு
இந்தப் பொய்யும் பித்தலாட்டமுந்தானா?

அம்மாள் பேச்சை தலைமேல்கொண்டு, முனிவர் அன்னமும்
கையுமாய் அப்பனிடம் போனார். தான்போகும் கோலத்தை
யும் உடையையும் தகப்பனார் கவனித்து, நமது மகன் தகுந்த
ஆயத்தத்தோடும், விசேஷித்த பலிசெலுத்துதலோடும், தேவ
வணக்கத்தோடும் புறப்பட்டுவருகிறான் என்று நினைத்துக்கொள்
ளட்டும் என்று தன் தமையனுடைய ஆசாரிய உடுப்பையும்
போட்டுக்கொள்ளச் சம்மதித்தார்போலிருக்கிறது. இப்படியே
அநேகர் பக்தியின் வேஷந்தரித்துப் பராபரனின் கிருபாபலன்
களில் பங்குபெறலாமென்று பிரயத்தனப்படுகிறதை இன்
றைக்கும் நாளைக்கும் நாம் காணலாம். இப்படிப்பட்டவர்கள்
பரிசுத்த பவுல் சொல்லியபடி தேவபக்தியின் வேஷத்தைத்
தரித்து அதன் பலனை மறுதலிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

முனிவர் தமது தகப்பனிடத்தில்வந்து, என் தகப்பனே! நான்
உமது மூத்தகுமாரனாகிய ஏசா; நீர் எனக்குச் சொன்னபடியே
செய்தேன்; உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி
நீர் எழுந்து உட்கார்ந்து நான் வேட்டையாடிக் கொண்டுவந்
ததைப் புசியும் என்று சொன்னார். அதைக்கேட்டு ஈசாக்கு
அதிசயப்பட்டு, மகனே! இது உனக்கு இத்தனை சீக்கிரமாய்
எப்படி அகப்பட்டது? என்று கேட்டான். அதற்கு, உம்மு
டைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார் என்று
சொன்னார். இப்படி இரண்டுதரம் யாக்கோபு பேசினவுட
னே தகப்பனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. கிழவனுக்குக்
கண்மயங்கிபோனாலும் மதியிருந்தது. அப்பொழுது அவன்
என் மகனே! நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ என்று
நான் உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்டவா என்றான். ஆகா!
இச்சமயத்தில் யாக்கோபுமுனிவருடைய உள்ளம் கலங்கியிருக்
கும் என்று நாம் நினைப்போம். இல்லை, இல்லை. "நாய்வேஷம்
போட்டால் குலைத்துத்தான் தீரவேண்டும்" என்று உலகத்
தார் சொல்லுகிறபடி கள்ளத்தனம்பண்ணின இவர் முழுக்கள்
ளனாய்ப் போனார். தாம் யாதொரு சூதும் தந்திரமும் செய்யாத
வர்போல கிட்டப்போனார். கிழவன் இவரைத் தடவிப்பார்த்து,

சத்தம் யாக்கோபின் சத்தம்,
கைகள் ஏசாவின் கைக்கள்

என்றுசொல்லி, இன்னான் என்று திட்டமாய் அறியாமல் ஏசா
தானாக்கும்; வேட்டைக்குப் போனவிடத்தில் ஏதோ தண்ணீ



ரைச் சாப்பிட்டு சத்தம் மாறிப்போயிற்றாக்கும் என்று தமக்குள்
உத்தேசித்து, மறுபடியும் ஒருதரம் நீ என் குமாரனாகிய ஏசா
தானோ என்று கேட்டான். இப்படிக் கிழவன் சத்தத்தைக்
கவனிப்பான் என்று அவள் நினைத்திருக்கமாட்டாள்; நினைத்
திருந்தால் அதற்கும் ஒரு கள்ளச்சத்தம் கற்றுக்கொடுத்திருப்
பாள். அவர் நான்தான் என்று சொன்னார். அப்புறம் அவன்
கொண்டுவந்த போசனத்தைப் புசித்து, உண்ட மகிழ்ச்சியால்
மகனே! நீ கிட்டவந்து என்னை முத்தஞ்செய் என்றான்; அவர்
கிட்டப்போய் முத்தஞ்செய்தார். அப்பொழுது அவருடைய
வஸ்திரங்களின் வாசனையை மோந்து "இதோ, என் குமாரனு
டைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனை
யைப்போலிருக்கிறது. தேவன் உனக்கு வானத்துப்பனியையும்
பூமியின் கொழுமையையும் திரள்தானியத்தையும் திராட்சரசத்
தையும் தந்தருளுவாராக; ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும்ஜாதி
கள் உன்னை வணங்கவும் கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமா
னாய் இருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்கு
வார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும்,
உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய்
இருப்பார்கள்" என்றுசொல்லி அவரை ஆசீர்வதித்தான். யாக்
கோபின் சமுசயமெல்லாம் ஏசாவின் வஸ்திரவாசனையால்
மாறிப்போயிற்று. ஆதலால் ஈசாக்குத் தன் முன்நிற்பது ஏசா
தான் என்று விசுவாசித்து ஆசீர்வதித்தான். பரமபிதாவான
வர் பாவிகளாகிய நமதுமேல் நம்முடைய மூத்த சகோதரரா
கிய கிறிஸ்துவின் நீதியாகிய அங்கியின் வாசனையை மோந்து
கொள்ளும்போது அவர் நம்மை ஆசீர்வதியாமல்விடார்.

இவ்வண்ணம் தந்திரமாக அவர் தன் சகோதரனுடைய
ஆசீர்வாதத்தைப் பெற்றார். இந்த முறையை ஒருவரும் புக
ழ்ந்துகொள்ளமாட்டார்கள். இந்த விஷயத்தில் யாக்கோபும்
அவர் தாயும் செய்த செய்கை முற்றிலும் மாறுபாடு என்பது
நிச்சயந்தான். இதில் அவர்கள்பட்சத்தில் சேர்ந்து ஒரு வார்த்
தையும் பேசுவது தர்மமல்ல. இந்த நடபடிக்கையால் நாம் ஒரு
தகாத பிரயத்தனத்தை நிறைவேற்றும்படி முயற்சிசெய்கையில்
அதைப் பொய்யின் போர்வையாலும் மாறுபாட்டின் மூடி
யாலும் மறைக்கப்பார்க்கிறோம் என்பது தெளிவாகிறது.
இந்த ஒரேவிஷயத்தில் முனிவர் ஒன்றின்பின் ஒன்றாக ஆறு
பொய் சொல்லியிருக்கிறார். இவ்வளவுக்கும் காரணம் அவரு
டைய தாய். பிள்ளைகள் விழுகிற அநேக பாவங்களை தாய்மார்
படித்துக்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். இவ்வளவு உபா

யமாய்க் காரியத்தை நடத்தினால்தான் உலகத்தில் பிழைக்கலாமென்று பலர் நினைப்பார்கள். அப்படி எண்ணுவது பிசகு. அநேகம் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு உலகத்தைப் படித்துக்கொடுக்கிறதில் வெகுகவலையாய் இருக்கிறார்கள். அவர்கள் ஆளுக்கேற்ற வேஷமாயும், காலத்துக்கேற்ற கோலமாயும் நடந்துகொள்ளுகிற சாஸ்திரத்துக்கு மிஞ்சின சாஸ்திரம் ஒன்றுமில்லையென்று சொல்லுகிறவர்களாயும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாரும் ரெபெக்காளின் புத்திரராயிருக்கிறார்கள். இவ்வித ஜீவியத்தின் போங்கு சரீரத்தின்படி பிழைக்கும் புத்தி என்று சொல்லிக்கொள்ளப்பட்டாலும் ஆவியின்படி இதுதான் சாகும் புத்தியாய் இருக்கிறது என்று நினைத்துக்கொள்ளவேண்டியது. ரெபெக்காள் தான் கர்ப்பமாய் இருந்தகாலத்தில் "மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" என்று சொன்ன தீர்க்கதரிசனத்தை அடிக்கடி நினைவுகூர்ந்ததோடு அதைத் தன் இளையமகனுக்குச் சொல்லி, மூத்தவனை இளையவனுக்குக் கீழ்ப்படுத்தும்படி நாம் என்னபிரயத்தனம் செய்தாலும் அது தேவனுக்குப் பிரியமாயிருக்கும் என்று தப்பாய் நினைத்து, இவ்வளவு உபாயம்செய்யத் தலைப்பட்டிருக்கலாம்; அப்படி நினைத்துச் செய்வதும் பிசகுதான். தேவன் தமது வாக்குத்தத்தத்தைத் தமது சித்தம்போல நிறைவேற்றவிடாமல் அதைத் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளவேண்டுமென்று பிரயாசப்பட்டதால் அந்த முழு ஆசீர்வாதங்களையும் யாக்கோபு அநுபவிக்கவே இல்லை; அதற்குப்பதிலாக அண்ணனுடைய விரோதத்தையும், வீட்டு சுதந்தரத்தையும் அடியோடு இழந்தேபோனார். அவர் அவைகளை விலைக்கு வாங்கினதுபோலத் தந்திரமாய்ப் பெற்றுக்கொண்டாலும் அநுபவிக்கும் பாக்கியம் அவருக்கு அருளப்படவில்லை. இதன்பின்னால் வரும் முனிவருடைய சரித்திரம் அதைத் திட்டமாய் விளக்கிக்காட்டும்.

யாக்கோபுமுனிவர் தகப்பனிடத்தில் தந்திரமாய் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பினவுடனே வேட்டையாடப்போன ஏசாவும் வீடுவந்துசேர்ந்தான். முன்னே பசியினால் கூழுக்கு இழந்த சுதந்தரத்தை இப்போது தன் தகப்பனைப் பசியாற்றுகிற வேட்டைக்கறியால் சம்பாதிக்கலாமென்ற முகமலர்ச்சியோடு போனான்; தான் போனதின் இடையில் நடந்த சமாசாரங்கள் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அவன் தான் வேட்டையாடிக் கொண்டுவந்த பதார்த்தங்களை நன்றாய்ச்சமைத்துக்கொண்டு தகப்பனிடம்வந்து, தகப்பனே! உமது கட்டளைப்படி வேட்டையாடிவந்தேன்; இதோ, அறுசுவையுள்ள



போஜனமிருக்கிறது, எழுந்து புசித்து என்னை ஆசீர்வதியும் என்று கேட்டான். உடனே தகப்பன் அதிசயப்பட்டு நீ யார் என்று கேட்டான்; நான் உமது மூத்தமகனாகிய ஏசா என்று சொன்னான். அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே நான் திர்ப்திகரமாய்ச் சாப்பிட்டு, இன்னின்னபிரகாரம் ஆசீர்வதித்துப்போட்டேனே! அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான் என்றான். இம்மட்டும் ரெபெக்காள் ஒன்றும் அறியாதவள்போல் சாடையாய் நின்றிருக்கலாம்.

"அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான்" என்ற வார்த்தைகள் அவளுக்கு உள்ளுக்குள் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும்.

தகப்பனுடைய வார்த்தைகளைக் கேட்டவுனே ஏசா மிகவும் மனங்கசந்து உரத்தசத்தமிட்டு அலறி, என் தகப்பனே! என்னையும் ஆசீர்வதியும் என்று கெஞ்சினான். ஏசாவின் ஆசையை நாம் புகழவேண்டியதுதான். இந்தப்பிரகாரம் ஒவ்வொருபாவியும் ஆண்டவரை கெஞ்சவேண்டியது. இதினால் தகப்பனுடைய நல்வார்த்தைகளுக்குப் பிள்ளைகள் எவ்வளவு ஆவலோடு காத்திருந்தார்கள் என்று விளங்குகிறது; அவன் அநேக காரியங்களைச்சொல்லி வாய்விட்டலறி, கண்ணீரோடே கேட்டால் தன் தகப்பனுடைய மனம் மாறி, தந்திரமாய் ஆசீர்வாதத்தைப் பெற்றவனைச் சபித்து, அவனுக்குக் கூறின பாக்கியங்களையெல்லாம் தன்மேல் ஊற்றுவான் என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். "அவன் கண்ணீர்விட்டுக் கவலையோடு தேடியும் தன் தகப்பனிடத்தில் மனமாறுதலைக் காணாமல்போனான்." ஒருவேளை ஏசா யாக்கோபுமுனிவரால் ஏமாற்றப்பட்டிராவிட்டாலும், அவருக்குக் கிடைத்த ஆசீர்வாதம் இவனுக்குக் கிடையாதபடி தேவன் தகப்பனுடைய இருதயத்தை ஆண்டுகொண்டிருக்கலாமே. ஏசாவானவன் முனிவருக்கு முந்தியேபோய் அறுசுவையுள்ள அமுதை அளித்தாலும், பின்பு கூறப்பட்ட வார்த்தைகளே அவனுக்குக் கிடைத்திருக்கலாம். ஏனெனில் இதிலெல்லாம் தேவன் தமது செயல்களை நடத்திவந்தார். முனிவர் இடையில் தந்திரங்களைப் பிரயோகித்தது அவருடைய சுயகுற்றமேயன்றி, அதனாலே தேவசெயலைப் பழுதுகூறக்கூடாதே.

முனிவர் தந்திரமாய் நடந்துகொண்டவிஷயமானது அவருக்கே துன்பமும் நஷ்டமுமாய் முடிந்தது; எப்படியெனில்

அதுமுதல் ஏசா முனிவரைக் கொலைசெய்துபோடவேண்டும் என்று சமயம்பார்த்துக்கொண்டிருந்தான். இந்த விஷயத்தில் பழையகாயீனுடைய சுபாவம் இவனிடத்தில் வெளிப்படப் பார்க்கிறோம். இந்தச் சமாசாரம் சாடையாய் ரெபெக்காளின் காதில் விழுந்தவுடனே அவளும் புருஷனும்கூடி முனிவரை இரகசியமாய் அழைத்து, தங்கள் ஜநநபூமியாகிய பதான்அராமிலிருக்கிற பந்துக்களிடம் போய்விடும்படி துரிதம்பண்ணினார்கள். அதோடு கானானியபெண்களை அவர் கலியாணம் செய்யாமல் தங்கள் நாட்டுப்பெண்ணை கட்டிக்கொள்ளுவது நலமென்று தோன்றிற்று. அந்த ஆலோசனையின்படியே இரகசியமாய் முனிவர் புறப்பட்டு பதான்அராமுக்கு ஓடினார்.

## முனிவர் ஏணிகண்ட பருவம்.

தேவசித்தத்திலிருந்த கிருபைகளைத் தகாதவிதமாய்ச் சம்பாதித்ததற்கு இது ஒரு தண்டனையாயிருந்தது. முனிவரே! கூழைவிற்றுக் கொழுத்த சுதந்தரத்தை வாங்கினீரே, இப்போது அதை அநுபவியாமல் ஓட்டம்பிடிப்பதேன்? வேஷம்போட்டு ஆசீர்வாதத்தைப் பிடுங்கிக்கொண்டீரே, அதன் பலனைக் காணாமல் பயந்தோடுவதேன்? தேவநடத்துதல்களை அறியாமல் நீர் உமது மனதுக்கேற்றபடி அவைகளை வருவித்துக்கொள்ளப் பிரயாசப்பட்டதினாலேயல்லவா இப்படி ஓடிப்போகநேரிட்டது. உமது தாயார் உம்மை இவ்வளவு சங்கடத்துக்கு இழுத்துவிட்டதால் இனி அவளுடைய மரணநாள்மட்டும் நீர் அவளைப் பாராதபடிக்கு தேவன் துரத்துகிறார். நீர் வீட்டைவிட்டுத் துரத்தப்படாவிட்டால், ஏசாவின் விரோதம் உம்மைத் தொடராவிட்டாலும் உமது தாயின்கேடுகள் முன்னிலும் அதிகமாய் உம்மைத்தொடர்ந்து பற்றிக்கொள்ளலாம். அதற்கிடமிராதபடிக்கு தேவன் உம்மைத் துரத்துகிறாராக்கும்! முனிவரே! நீர் விசனப்படாமல் பதான்அராமை நோக்கி ஓடும்; உமது பிற்காலவாழ்வுக்கும் பாக்கியத்துக்கும் அநுகூலமாக தேவன் இப்படி வீட்டைவிட்டுத் துரத்துகிறாராக்கும்! நடவும் முனிவரே! நடவும்; நானும் உம்மோடுகூட ஓடி நடந்து உமது வரலாறுகளை அறிந்துகொள்ளும்படி ஆவல்கொள்ளுகிறேன்.

முனிவர் ஒருவரும் அறியாதவேளையில் கோலுங்கையுமாய் புறப்பட்டார். தமது சகோதரனைப்பற்றிய பயமானது அவரைப் பின்னின்று சவுக்கால் அடித்துத்துரத்தும் ஆளோட்டிபோலிருந்தது. அவருக்கிருந்த ஆறுதல் எல்லாம் புறப்பட்ட



சமயத்தில் தமது பிதாவானவர் சொன்னவார்த்தைகள்தான். பிதாவும் லேசான வார்த்தைகள் சொல்லித் தமது மகனை அனுப்பவில்லை. “என் மகனே! சர்வவல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து நீ பல ஜனக்கூட்டம் ஆகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும்பண்ணி, தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளின ஆசீர்வாதத்தை உன் சந்ததிக்கும் அருளுவாராக” என்று வாழ்த்தி அனுப்பினார். இந்த வார்த்தைகள்தான் முனிவர் பயத்தை ஆற்றும் மருந்தும், அவருடைய பயணத்தில் அவரைத் தேற்றும் துணையாளும்போல் இருந்தது.

இப்படிப் பயணம்பண்ணும்காலத்தில் அவர் எழுபத்தெட்டு பிராயமுடையவராயிருந்தார். இவ்வளவு வயசாகிய முனிவர் பதிவிரதாபக்தனாய் இருந்தபடியால் பிரயாணம்செய்ய பலமுடையவராகவே இருந்தார் என்று சொல்லவேண்டியது. அவர் போய்ச்சேரவேண்டிய ஊர் நானூறுமயிலுக்கு அப்பால் இருந்தது; நாளொன்றுக்குப் பதினைந்துமயில் நடந்தாலும், அவர் போக விரும்பிய ஸ்தானத்தில் சேரக் கொஞ்சங்குறைய ஒரு மாதம் செல்லும். முதலாம் நாளில் அவர் தமது பயணத்தை ஒரு காட்டுக்குள் நிறுத்தி, அங்கே அன்றிரவைப் பின்னிட்டார். அது உலகப்பிரகாரம் இரவாய் இருந்தாலும், ஆவியின் பிரகாரம் அதுதான் அவர் தமது ஜீவகாலத்தில் எல்லாம் அநுபவித்த பட்டப்பகல் என்று சொல்லவேண்டியது. அவர் தாம் வழிக்கென்று கொண்டுவந்த பலகாரங்களைத் தின்றுவிட்டு அக்காட்டுக்குள்ளே நித்திரைபோனார். அவருக்குப் பூமியே கட்டிலாகவும், வானமே வீட்டுக்கூரையாகவும், ஒருகல்லே தலையணையாகவும் இருந்தது. ஒருவேளை அதன் சமீபமாக ஒரு ஊர் இருந்திருக்கலாம்; அதில் தங்க அவருக்கு எவ்வளவேனும் பிரியமிருந்ததில்லை. துன்மார்க்கர் கூட்டத்தைவிட்டு ஒருமுழம் ஒத்தியிருப்பது நலம் என்று தமக்குள் எண்ணிக்கொண்டாரோ, அல்லது ஊருக்குள் போனால் அவர்கள் இவனை யார்? எவரென்று வினாவி இவருடைய வரலாறுகளை அறிந்துகொள்ளுவார்கள், அச்செய்தி ஏசாவுக்கு எட்டினால் அவன் நம்மைப் பின்தொடருவான் என்று பயந்தாரோ தெரியவில்லை. எப்படியும் இதற்குப் பின்னால்வரும் சங்கதிகளைக்கொண்டு தேவன் அன்றையதினம் முனிவரோடு சாங்கோபாங்கமாய்ப் பேசிக்கொள்ளும்படி அவரை இப்படி ஊரைவிட்டுக் காட்டுக்குள் கிடத்திவிட்டார் என்று எண்ணவேண்டியதாய் இருக்

கிறது. பகலெல்லாம் கடும்பயணம் செய்தமுனிவருக்கு உயர இருந்த வானமானது மெல்லிய நீலப்பட்டுப்போலும், தாழ இருந்த பூமியானது பீதாம்பரப்பட்டின்மேல் புஷ்பந்தெளித்த மெத்தைபோலும், கரடுமுரடான ஒரு நீளக்கல் இலவம்பஞ்சின் இதமான தலையணைபோலும் இருந்ததால் அவர் சுகமாய் நித்திரைபோனார். நித்திரைபோம் முனிவரே! நீர் நித்திரைபோம்; உமக்குமேல் தேவகிருபை என்னும் வானவில் தன் கிரணங்களை வீசிக்கொண்டிருக்கிறது. முனிவர் அசைவற்று குறட்டைவிட்டு தூங்குகிறார்; இடைக்கிடையே புன்சிரிப்பு அவர் முகத்தில் காணப்படுகிறாற்போல் இருக்கிறது; அதேதென்று கேட்போமாக.

அங்கே அவர் ஒரு சொப்பனங்கண்டார்; அச்சொப்பனத்தை வாசிக்கிற கண்ணும், கேட்கிற காதும், உணர்ந்துகொள்ளும் இருதயமும், தியானிக்கும் உள்ளமும் அதிசயப்படாமலிராது. நாமும் நமது வயசில் பலதரம் சொப்பனம் கண்டிருப்போமே; இந்த சொப்பனத்தையும் கேட்போமாக: இதோ, ஒரு எணி பூமியில் வைக்கப்பட்டிருந்தது; அதின் நுனி வானத்தையெட்டியிருந்தது. இது எவ்வளவு மகிழ்ச்சியான காட்சியாய் இருக்கிறது! வானத்துக்கும் பூமிக்கும் நித்திய சம்பந்தமிருந்தபோதிலும் அது நமக்கு விளங்குகிறதேயில்லை. வானத்திலிருந்து பூமியைவந்தெட்டும் சூரிய சந்திரரின் ஜோதிகளும், பூமியிலிருந்து வானத்தையெட்டும் நீராவி அணுக்களும் இருலோகங்களுக்கும் சம்பந்தமுண்டென்பதை இயல்பாகவே நமக்கு உணர்த்துகிறது. ஆவியின் பிரகாரமாயும் வானத்துக்கும் பூமிக்கும் சம்பந்தமுண்டு. அந்த சம்பந்தத்தின் எணி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, அல்லது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவே என்று இந்த எணியால் முனிவருக்கு உணர்த்துவிக்கப்பட்டது.

முனிவர்கண்ட எணியின் தலை வானத்திலும், அதின் அடி பூமியிலும் தொட்டது. இயேசுகிறிஸ்து தேவதன்மையின்படி பிதாவோடிருந்தார். அவர் தமது ரட்சண்ய எணியை பூமியின்மேல் நாட்டும்படி கன்னிமரியம்மாளின் கர்ப்பத்தில் உற்பவித்தார். அவருடைய அவதார ஜீவியமே தமது ரட்சண்ய எணியை பூமிமட்டும் தாழ்த்தினதைக் குறிக்கிறதாயிருக்கிறது. அப்படி வானத்தையும் பூமியையும் தொட்டுக்கொண்டிருந்த எணியிலே தேவதூதர் எறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள் என்றும் முனிவர் கண்டார். இது முனிவர் விஷயத்தில் தேவதூதருடைய துணையும் ஆதரவும்



பூரணமாயிருக்கும் என்பதைக் காட்டுகிறதோடுகூட எக்காலத்திலும் கிறிஸ்துவின் ரட்சண்ய எணியின் வழியால் பரலோகம் எற விரும்புகிறவர்களுக்குத் தேவதூதர் பணிவிடை ஆவிகளாக தேவனால் கடாட்சம்பண்ணப்படுகிறார்கள் என்பதையும் உணர்த்துகிறதாயிருக்கிறது.

முனிவர் கண்ட சொப்பனம் இவற்றோடு முடியவில்லை. அந்த எணியின் நுனிக்குமேலாக கர்த்தர் நின்று: "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும், பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக்காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்" என்று திருவுளம்பற்றினார். இதை வாசிக்கிற சிநேகிதனே! உன் இருதயம் குலுங்கவில்லையா? உன் உடம்பு சிலிர்க்கவில்லையா? இப்படிப்பட்ட தேவனை நீ வேறெங்கும் கண்டதுண்டோ? கேட்டதுண்டோ? உன்னததேவனே! உமதுமுன் பணிகிறேன். தேவரீருடைய வார்த்தைகளை இன்றுகேட்கிற எனக்கு அவைகள் தேனிட்ட கச்சாயம்போலிருக்கிறது; உமது கிருபைக்குத் தாண்டின கிருபையுள்ள ஒருவரை நான் கண்டதே இல்லை, இது நிச்சயம்; உமது காருண்யத்துக்கு மிஞ்சின காருண்யத்தை நான் பார்த்ததே இல்லை, இது சத்தியம். உமது அன்புக்கு உயர்ந்தவரை நான் அறிந்ததேயில்லை, இது பிரமாணம்.

உலகமே! பார். உன்னதமானவர் மண்ணறைபோம் மனுஷனோடு தந்திவைத்துப் பேசுகிறார். ஒரு எணியின் உச்சி அவருடைய திரு உதடுகளின் ஒரத்திலும், அதின் அடி ஆதாமின் மகனாகிய ஒரு பாவியின்காதின் ஒரத்திலும் இருக்கிறது. அவர் தம்மை ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாக இருக்கிறேன் என்கிறார்; தம்மை அவர் கேருபீன்களின் தேவன் சேராபீன்களின் தேவன் என்றால் முனிவர் பயந்துபோவார் என்றோ? பிதாக்களின் பேரைச்சொல்லி அவாந்தரக்காட்டில் அகதியாய்க்கிடக்கும் முனிவருக்கு ஆறுதல் அளிக்கத்தானோ? முனிவர் படுத்திருந்த பூமியை அவருக்குச் சொந்தமாக்குகிறார்; ஒரு சொத்தின் கையாட்சை அதற்கு விரோதமாய் உண்டாகும் வழக்குக்குப் பத்தில் ஒன்பது பங்கு நியாயத்தையும் ருசுவையும் கொடுக்கும் என்பது ஒரு உலக

வதந்தியாயிருக்கிறது. முனிவர் படுத்திருந்ததே அவருடைய பாத்திபத்தை உறுதிப்படுத்துகிறதுபோல் இருக்கிறது. மேலும் சர்வலோகத்தாருக்கும் இரட்சகராகவரும் மேசியாவும் அவருடைய குடும்பத்திலே தோன்றுவார் என்பதை திரும்பவும் இவரிடத்தில் புதுப்பிக்கும்படியாக, பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் ஆசீர்வதிக்கப்படும் என்று சொன்னார். பின்னும் அவருடைய பிரசந்நமும் அவரோடுகூட இருக்கும் என்றும், அவர் இப்பொழுது போகும் வழியே திரும்பவும் வருவார் என்றும் கடவுள் திருவாக்கருளினார். முனிவருடைய பிதாக்களின் தேவனே அவரோடு பேசி, அவருக்கு உலகத்துக்குரிய ஆசீர்வாதங்களையும் இரட்சகனாக்குறித்த ஆசீர்வாதங்களையும் ஏணித் தந்திமூலமாய்ப் பேசும்போது முனிவர் மகிழாரோ? அவர் இருதயம் களிகூராதோ?

முனிவர் கண்ட ஏணியானது அவருடைய பிற்காலவாழ்வை மாத்திரம் உணர்த்துகிறதாயிராமல், உலகம் முடியுமட்டும் பூலோகத்தின் புத்திரருக்குப் பரத்திலிருந்து கிடைக்கும் பாக்கியங்களையும், விசேஷமாய் இயேசுகிறிஸ்துவாகிய ஞான ஏணியின் மூலமாய்ப்பாவிகளுக்குக் கிடைக்கும் பாவமன்னிப்பின் கிருபைகளையும் உணர்த்துகிறதாயிருக்கிறது. இனி பரலோகத்துக்குப் பாவிகள் தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப ஒரு தந்தியுமில்லையே என்று சொல்லக்கூடாது. இயேசுவின் சிலுவைப்பாடுகள் அதற்கேற்ற ஒரு தந்திக்கம்பிபோல் இருக்கிறது; அதில் தன் மனதைவைத்து தன் பாவங்களை ஒருவன் அறிக்கையிடும்போது அது பரலோகத்தில் கிறிஸ்துவின் மூலமாய்ப்போய் ஏறுகிறது; அவர் தமது பாவமன்னிப்பை அருளுகிறார்.

இவ்வளவு பரமகாட்சியோடும் பரோபகாரமொழிகளோடும் தேவன் தமது தாசனைச் சந்திக்கும் வேலையை முடிக்கவில்லை. அவர் கடைசியாக ஆணையிடுகிறதுபோல, “நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை” என்று திருவுளம்பற்றினார். நமது தேவன் மனுஷருடைய பலவீனத்தையறிந்து அதற்குத் தக்கதாக அவர்களை மேன்மேலும் தேற்றுகிறவராய் இருக்கிறார்.

இந்த மாட்சிமைபொருந்திய சொப்பனக்காட்சியை தேவன் முனிவருக்குக் கடாட்சம்பண்ணினபின்பு அவர் திடுக்கென்று விழித்தார். சிலர் இன்பமுள்ள சொப்பனத்தின் கால்வாசியில் அல்லது நடுவில் விழித்து அதன் முடிவு எப்படியோ



என்று கலங்குகிறது உண்டு; முனிவருக்கு அப்படிப்பட்ட கலக்கம் யாதொன்றும் இல்லை. அவர் பயத்தோடும் நடுக்கத்தோடும் எழுந்து,

மெய்யாகவே கர்த்தர் இங்கிருக்கிறார்
அதை நான் அறியாமல்போனேன்.
இந்த ஸ்தலம் மாபயங்கரமானது,
இது தேவனுடைய வீடு,
இது வானத்தின் வாசல்

என்று சொல்லி மறுபடியும் படுத்துத் தூங்கினார். இன்னும் இப்படிப்பட்ட சொப்பனம் கண்டால் நல்லதென்று அவர் ஒருவேளை நினைத்திருக்கலாம். அதிகாலையில் முனிவர் எழும்பி அந்த விசேஷித்த ஸ்தலத்துக்கு ஒரு அடையாளம் வைக்கவேண்டுமென்று கருதி, தான் தலையணையாக வைத்திருந்த கல்லை எடுத்து ஒருதூணாக நிறுத்தி, அதன்மேல் தாம் கொண்டுவந்திருந்த எண்ணெயை வார்த்து அந்த ஸ்தலத்துக்கு பெத்தேல் என்று பேரிட்டார். பெத்தேல் என்பதற்கு கர்த்தருடைய வீடு என்று அருத்தம். முனிவர் புறப்பட்ட சமயத்தில் தாம் லேசாய் சுமக்கக்கூடிய ஒரு மூட்டையில் சில சாமான்கள் கொண்டுவந்தார்போலிருக்கிறது. எப்படியும் வனவழிபோகையில் தலையில் உஷ்ணம் தணிக்கும்படி கொஞ்சம் எண்ணெய் கொண்டுபோய் இருக்கிறார். இந்தக் காட்சியின் மகிழ்ச்சி அவருடைய நரம்புகளையும், எலும்புகளையும், மூளையையும், ஊனையும்கூட குளிரப்பண்ணி ஸ்திரப்படுத்திவிட்டதால் அதற்கென்று கொண்டுவந்த எண்ணெய் இனி ஏன் என்பதுபோல தேவாபிஷேகமாக ஊற்றிவிட்டாராக்கும். அல்லது ஏணிக் காட்சியால் தம்மை அபிஷேகம்பண்ணினவருக்கு அதே இடத்தில் எண்ணெய்வார்த்து, இன்றுமுதல் நான் உமக்கு அடிமை என்று பிரமாணஞ்செய்துகொடுக்கிறாராக்கும். எப்படியும் முனிவர் வார்த்த அபிஷேக எண்ணெயானது ஒவ்வொரு பாவியும் பச்சாத்தாபத்தால் தன் நெஞ்சை உருக்கி, தன்னை இரட்சித்த நாயனுக்கு ஆணையோடு ஒப்புவிப்பதையும், தன்னுள்ளத்தில் ரட்சண்ய தீபத்தை வளர்க்கும்படி தீர்மானம் செய்வதையும் உணர்த்திக் காட்டுகிறதாயிருக்கிறது என்று சொல்லலாம்.

முனிவர் அவ்விடத்திலிருந்து புறப்படுமுன்னே தன்னைச் சந்தித்த தேவனை தானும் சந்திக்க ஏவப்பட்டு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டார்:—அதாவது, “தேவன் என்னோடிருந்து,

நான்போகிற இந்தவழியில் என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என் தகப்பன் வீட்டுக்குத் திரும்பிவரப்பண்ணுவாரானால் கர்த்தர் எனக்குத் தேவனாய் இருப்பார். நான் தூணாக நிறுத்திய இந்தக் கல் ஒரு தேவாலயமாகும். நான் எனக்குக் கிடைக்கும் யாவற்றிலும் பத்திலொன்றைச் செலுத்துவேன்" என்று சொன்னார். இந்தப் பொருத்தனையின் வார்த்தைகளால் முனிவர் சொப்பனத்தின் மூலமாய் சொல்லப்பட்ட தேவவாக்கைப்பற்றி அவநம்பிக்கை கொண்டார் என்று நினைக்கலாகாது. அச்சமயத்திலுண்டான அவருடைய மன எழுச்சியையும் தீர்மானத்தையும் அந்த வார்த்தைகளால் குறிப்பிக்கிறார் என்றுமாத்திரம் நினைத்துக்கொள்ள வேண்டியது. அவர் தமக்குக் கேட்ட வாழ்வெல்லாம் உண்ண உணவும் உடுக்க வஸ்திரமுந்தான். இந்த உணர்வுள்ள புத்தி இன்று புதிதாய் வந்தது என்று அறிந்துகொள்ளவேண்டியது. இதற்குமுன் தான் தன் பிதாவின் சொத்துமுழுவதுக்கும் சுதந்தரவாளியாகவேண்டுமென்றும், தன் தமையன் தாழ்ந்துபோகவேண்டுமென்றும் இரவும்பகலும் எண்ணினார். நாமும் இவ்வுலக ஆஸ்திகள்மேல் மனதை வையாமல்

உண்ண உணவும்,
உடுக்க வஸ்திரமும்

கிடைத்தால் போதும் தேவனே என்று மன்றாடுவோமாக. மேலும் தேவனுக்கு பக்திக்கென்று செலுத்துவதைப்பற்றிய தீர்மானத்தை இப்போதுதான் தெளிவாய்ப் பார்க்கிறோம். இதற்கு முன்னமே விசுவாசமுனிவராகிய ஆபிரகாம் என்பவர் ராஜாக்களை முறியடித்துத் திரும்பினபோது, தான் சம்பாதித்ததில் எல்லாம் பத்திலொன்றைச் செலுத்தினாலும் இதுமுதல்தான் அது ஒருசட்டம்போல் பின்னடியாரால் அங்கிகரிக்கப்பட்டன.

அப்பால் முனிவர் தமது நீளமான பயணத்தை நடத்தினார். அப்பயணங்களில் நடந்த சம்பவங்கள் இன்னதென்று நமக்கொன்றும் தெரியாது. ஏணிக்காட்சியின் நினைவும், ஏணியின் மேல் நின்று கூறப்பட்ட திருவாக்குகளுமே அவருக்கு ஆறுதலும், துணையுமாய் இருந்திருக்கவேண்டியது. முனிவரைத் துரத்தின ஏசாவின் பயம் இதுமுதல் ஓய்ந்துபோயிற்று. அவரை இன்றுமுதல் தேவகிருபை என்னும் தூதன் துரத்தினான். அவர் அனாதி தேவனுடைய நிழலுக்குள் நடந்து, தாம் பெத்தேலில் கண்ட ஏணிமார்க்கமே வேளாவேளை பரலோகப் பரவசமாகி சாங்கோபாங்கமாய்த் தமது பயணத்தை நடத்தினார்.



## முனிவர் மந்தைமேய்க்கும் பருவம்.

முனிவர் இவ்வண்ணமாக நானூறு மயிலையும் நடந்து கடந்து தாம் நாடிவந்த ஊர்வந்து சேர்ந்தார். அந்த ஊர் வயல் வெளிகளால் சூழப்பட்டிருந்தன. வயலின் நடுவிலே ஒரு பெரிய கிணறும் சில மரங்களும் இருந்தன; அவ்விடத்தில் சில ஆட்டுமந்தையும், மேய்ப்பரும் உட்கார்ந்திருந்தார்கள்; அங்கிருந்தவர்களெல்லாரும் அவரை இனம்விசாரித்தார்கள். முனிவர் அவர்களிடத்தில் தன் தாய் மாமனாகிய லாபானைக்குறித்து விசாரித்தார். அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் லாபானை அறிவதாகச் சொன்னதோடு, தூரத்தில் வந்த ஒரு சிறு பெண்ணைக் காட்டி அதோ, அவன் குமாரத்தியாகிய ராகேல் ஆடுகளை ஓட்டிக்கொண்டுவருகிறாள் என்று சொன்னார்கள். அவள் கிணற்றண்டை வந்தவுடனே தன்னை இன்னானென்று இனம் செப்பி அவளை முத்தமிட்டு, சந்தோஷத்தால் கொஞ்சம் அழுதுங்கொண்டார். பின்பு தன் மாமனுடைய ஆடுகளுக்கு எல்லாம் தண்ணீர் காட்டினார். ஆகவே முனிவர் பதான்அராமுக்கு வந்த முதலாம் நாளில்தானே தமது மந்தைமேய்க்கும் வேலையைத் துவங்கினார் என்று சொல்லவேண்டியது. ராகேல் ஊருக்குள் ஓடி கிணற்றண்டை நடந்த சமாசாரங்களையெல்லாம் தன் தகப்பனிடத்தில் சொன்னாள். தன் சகோதரி வீட்டைவிட்டுப் புறப்பட்டநாள்முதல் அவள் வரலாறு இன்னதென்று அறியாமலும் அறியக்கூடாமலும் இருந்த லாபான், இச்செய்தி கேட்டவுடனே அவனுக்கு எதிர்கொண்டோடி, அவனைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டு தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோனான். "விருந்தும் மருந்தும் மூன்றுநாள்" என்றல்லவா ஒரு பழமொழியுண்டு; இவனோ தன் சகோதரி மகனுக்கு சுமார் ஒருமாதம் விருந்துகொடுத்தான். இந்த லாபான் லேசான ஆசாமியல்ல. முனிவர் தனித்துவந்திருக்கிற விபரங்களைத் திட்டமாய் அறியவேண்டுமென்று சாடையாய் இருந்தான்போலிருக்கிறது. ஈசாக்குக்குப் பெண்கேட்கவந்த வேலைக்காரன் பத்து ஒட்டகங்களோடு வந்திருக்க, அவருடைய மகன் கோலுங்கையுமாய் புறப்பட்டுவந்திருக்கிறது அவனுக்கு அதிசயமாயிருக்கமாட்டாதா? இக்கோலமாய்த் தன் சகோதரியின் மகன் வந்திருப்பதால் அவர்கள் வாழ்வெல்லாம் கெட்டு எல்லாரும் மாண்டு, இவன் திக்கற்ற மனுஷனாய் நமது திண்ணைப்புறம் தேடிவந்தானாக்கும் என்றும் உத்தேசித்திருக்கலாம். முனிவர் தங்கியிருந்த ஒருமாசத்துக்குள் எல்லாவிபரமும் அவ

னுக்குத் தெரியவந்தது. தவித்த முயலைப்பார்த்து தாவிப்பிடிக்கிற குணமுடைய இந்த லாபான் சங்கடப்பட்டு வந்திருக்கிற முனிவரை சாடையாய் விடுவானா? விடமாட்டான். முன்னே எலியேசருக்கு ஒருநாள் உபசாரம் காட்டினதற்கு உயர்ந்த நகைகளை நன்கொடையாக இவன் பெற்றிருக்க, வெறுங்கையாய் வந்த முனிவரைச் சும்மாய்விடுவானா? விடமாட்டான்.

லாபான் முனிவரைநோக்கி, நீ என் மருமகனாயிருப்பதால் சும்மா எனக்கு வேலைசெய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய் சொல் என்றான்; இதின் கருத்து, நீ இனிமேல் பணம் கொடாவிட்டால் உனக்குச் சாப்பாடில்லையென்று சொல்லுகிறதுபோலும், அல்லது நீ என்னுடைய பந்துவல்ல வேலைக்காரன் என்று சொல்லுவதுபோலும் இருக்கிறது. உடனே முனிவர் நாம் சம்பளம்வாங்கினோம் என்றபேர் இருக்கவும்கூடாது, தெண்டச்சாப்பாடு சாப்பிடுகிறோம் என்றபேர் இருக்கவும் கூடாதென்று உத்தேசித்து, உமது இளையகுமாரத்தியாகிய ராகேலுக்காக ஏழுவருஷம் வேலைசெய்கிறேன் என்று உடன்பட்டார். முனிவர் கூலிபேசாமல் பெண்கேட்டாலும் கொடுக்கப் பாத்தியப்பட்ட லாபான் அகமகிழ்ந்து, நல்லது, அப்படியே ஆகட்டும் என்று சம்மதித்தான். பசித்துவந்த அண்ணன் ஏசாவுக்கு பயற்றங்கூழ் கொடுத்து சேஷ்டபுத்திரபாகத்தை எல்லாம் வாங்கின காலம்போக, இப்படி ஏழுவருஷம் கஷ்டப்பட்டு பின்பு ஒரு பெண்ணைக்கட்டும்படி சம்மதிக்கவேண்டியகாலம் வந்தது. முனிவர் மூத்தவளைக் கேளாமல் இளையவளைக் கேட்டது லாபானுக்கு உள்ளுக்குள் பிரியமில்லாதிருந்தது. மூத்தவளாகிய லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாய் இருந்தது; ராகேலோ, ரூபவதியும் அழகானவளுமாய் இருந்தாள். ராகேல்மேலிருந்த பிரியத்தால் அந்த வருஷங்கள் முனிவருக்கு கொஞ்சநாளாகத் தோன்றினது. முனிவர் ராகேலுக்காகப்பட்ட அவஸ்தைகளானது, கிறிஸ்து திருச்சபையில் அன்புகூர்ந்து அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததற்கு ஒரு நிழல்போலிருக்கிறது. நம்மை மீட்பதற்காக அவர்பட்ட நிந்தைகளும் அவஸ்தைகளுமடங்கிய முப்பத்துமூன்றுவருஷமும் கொஞ்சநாள்போலவே இருந்தது. இவ்வண்ணம் நேசித்த இயேசுவே! உமக்கு ஸ்தோத்திரம்.

உடன்படிக்கை பண்ணிக்கொண்ட ஏழுவருஷமும் நிறைவேறினவுடனே முனிவர் விவாகத்துக்கடுத்த கோரிக்கைகளைச் செய்தார். அப்பொழுது லாபான் தன் பந்துக்கள் எல்லாருக்கும் செய்தியனுப்பிவிட்டு, இந்த மங்களகாரியத்துக்கு நீங்



கள் எல்லாரும் வரவேண்டுமென்று கோரினான். முகூர்த்தநாளில் முதியோரும் மற்றோரும் பெண்வீட்டில் கூடி புட்பங்கள், பரிமளங்கள் தெளித்து, வந்தனங்கள் வாழ்த்துதல்கள் கூறி, மணமுறைசெய்து மங்களமாய் மணம்முடித்தார்கள். அதில் ஒரு தந்திரமும் நடந்தது: எப்படியெனில், அந்தக் கலியாணம் ஒரு இரவில் நடந்தது. மறுநாள் அதிகாலைமட்டும் தனக்கு மங்கிலியப்பெண்ணானது ராகேல் அல்ல லேயாள் என்று முனிவருக்குத் தெரியாமல்போயிற்று. இது முனிவருக்குச் சொல்லிமுடியாத மனநோவாய் இருந்தது. முனிவர் மற்றவர்களை ஏமாற்றின காலம்போக, மற்றவர்களால் ஏமாற்றப்படுகிறகாலம் ஆரம்பித்திருக்கிறது. முனிவரே! ஆத்திரப்படாதேயும். நீர் எந்த அளவினால் அளந்தீரோ? அந்த அளவினால் உமக்கு அளக்கப்படுகிறது. இந்த விஷயத்தில் நாம் லாபானைப் புகழவுங்கூடாது; லாபான் இப்படிச் செய்கிறது சரியல்ல. ஆனால் இதினாலே தேவன் யாக்கோபுமுனிவரை அவருடைய பழைய தப்பிதங்களை நன்றாய் உணரும்படி தமது செயலைக் காட்டிவருகிறார் என்று எண்ணிக்கொள்ளவேண்டியது. முனிவருடைய குணமும் போக்கும் ஏணித்தரிசனையுண்டானகாலமுதல் வெகுதூரம் மாறிப்போயிற்று. பழையபடிமாத்திரமிருந்தால் இந்த தந்திரத்துக்கு ஒட்டிக்கு இரட்டிதந்திரம் அவர் செய்திருப்பார். அந்த ஏணித்தரிசனைக்குப்பின்பு அவர் முற்றிலும் புது மனுஷனைப்போல தன் செய்கைகளெல்லாவற்றிலும் மாறிப்போனார்.

ஏன் இப்படிச் செய்தாய் என்று மாமனைக் கேட்டபோது, "மூத்தவள் இருக்க இளையவளைக் கட்டுவது எங்கள் தேசவழக்கமில்லை" என்று அவன் சொன்னதோடு, இன்னம் ஏழுவருஷம் எனக்கு வேலைசெய்வதாக நீ வாக்குக்கொடுத்தால் இன்றைக்கு ஏழாம் நாளில் இளையவளையும் கட்டித்தருகிறேன் என்று சொன்னான். தன் பழைய ஏமாற்றுதல்களுக்கு தேவன் இதை தண்டனையாகப் பிரயோகிக்கிறார் என்று முனிவர் நினைத்து, அதற்கும் உடன்பட்டார். அந்தப்படியே ஏழாம் நாளில் அவருடைய இரண்டாம் விவாகம் நடந்தது. ஊராருக்கு அது இரண்டாம் கலியாணம்போல் காணப்பட்டாலும் அவருக்கு அதுதான் முதலாம் கலியாணம்போல் காணப்பட்டது. லாபானுக்கு மருமகனாகிறதற்கு முனிவர் இத்தனை வருஷங்களாய் வெயிலின் வெப்பத்தையும் பகலின் காந்தியையும் சகித்ததோடு இரவின் குளிரையும் பனியையும் சகித்தார். நாம் தேவனுடைய மக்களாகிறதற்கு எவ்வ

ளவு அதிக வருத்தத்தை அநுபவிக்கவேண்டியது நியாயமாய் இருக்கிறது? இப்படி முனிவர் இரண்டாம் ஏழுவருஷத்தைக் கஷ்டத்தோடு கழித்துவரும் காலத்தில் தாம் அசட்டை பண்ணின லேயாள்மேல் கடவுள் கண்ணோக்கமாகி அவள் மடியில் புத்திரபாக்கியத்தைக் கட்டளையிட்டார். அவள் ஒன்றின்பின் ஒன்றாக நாலு ஆண்பிள்ளைகளைப் பெற்றாள். மனுஷரால் கைவிடப்படுகிறவர்கள் தேவனால் சகாயம் பெறுகிறார்கள்.

லேயாளின் பிள்ளைகள் நடந்தோடி வீட்டை அலங்கரிக்கிறதைக்கண்ட ராகேல் பொறாமையால் மூண்டு, தன் புருஷனண்டை போய் அழுதாள். முனிவர் அவளைக் கோபித்து, தேவன் அல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் என்று உணர்த்தினார். லேயாளின் குறைவு கண்ணிலிருந்தது, ராகேலின் குறைவோ அவள் கர்ப்பத்திலிருந்தது. ராகேலின் அழகு லேயாளிடத்தில் இல்லை, லேயாளின் புத்திரபாக்கியம் ராகேலிலில்லை. ஆதலால் ஒருவரையொருவர் உயர்த்தவேண்டிய நியாயத்தைக் காணோம். அப்பால் ராகேல் தனக்குப் பிள்ளையில்லாவிட்டாலும் தன் வேலைக்காரியினாலாவது பிள்ளைபிறக்கட்டும் என்று அவளை தன் புருஷனிடத்தில் ஒப்புவித்தாள். இதினால் ராகேல் விக்கிரகாராதனை செய்த தன் தகப்பனாகிய லாபானுடைய சுபாவத்தை நன்றாய்க் காட்டிவிட்டாள். ராகேல் இப்படி செய்ததற்குப் பதிலாக தன் சொந்த சகோதரியின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள்போல் எடுக்கவும் வளர்க்கவும் திட்டம்பண்ணியிருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? அவள் செய்த மாதிரியின்படி மூத்தவளும் செய்தாள். இவ்வண்ணமாக சிலவருஷங்களுக்குள் முனிவருக்கு அநேக பிள்ளைகள் பிறந்தார்கள். உன் சந்ததி பூமியின் மணலத்தனை பெருகிப்போம் என்று தேவன் அநேக ஆண்டுகளுக்கு முன்னே சொன்ன வாக்குத்தத்தமானது இப்போதுதான் துளிர்த்து பல கிளைகளாக எழும்புகிற ஒரு விருட்சம்போல்விளங்க ஆரம்பிக்கிறது. கடைசியாக ராகேலும் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள். அதுமுதல் அவளுக்கு உண்டான சந்தோஷம் கொஞ்சமல்ல; அதற்கு யோசேப்பு என்று பெயரிட்டாள். ராகேலுக்காக வாக்குக்கொடுத்த ஏழுவருஷங்களும் முடிந்தபின்பு முனிவர் தமது சொந்த குடும்பத்துக்கு பிற்கால ஆதரவுக்கேற்ற ஒழுங்குகளைச் செய்யவேண்டுமென்று கருதினார். அந்த ஆலோசனைப்படி அதுமுதல் புள்ளியுள்ள ஆடுகள் எல்லாம் முனிவர் பங்கு என்று



தீர்மானிக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஆடுகள் கொஞ்சத்தொகைமாத்திரம் இருந்தது; ஆனால் முனிவர் அதற்கு இணங்கிக்கொண்டார். போதும் என்கிற மனதுடனே கூடிய மெய்த்தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்று அவருக்குப் பரிட்சையினால் உணர்வுண்டாயிருந்தது. இக்காலத்தில் முனிவர் ஒரு உபாயம் செய்தார். எப்படியெனில், ஆடுகள் தண்ணீர் குடிக்கிறபொழுது தொட்டிக்குள் பச்சையாயிருக்கிற புன்னை வாதுமை அர்மோன்முதலிய கொப்புகளை வெட்டி இடைக்கிடையே வெண்மை தோன்றும்படி பட்டையை உரித்து தான் உரித்த கொப்புகளை ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் தொட்டியிலும், கால்வாயிலும் போட்டுவைப்பார். அச்சமயத்தில் சினையாகும் ஆடுகள் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டன. இவ்வண்ணமாக கொஞ்சகாலத்திற்குள் அம்மாதிரி ஆடுகள் அதிகமாய்ப் பலுகிவிட்டன. இதைப் பலர் முனிவர்பேரில் குற்றமாகக் கூறுகிறதுண்டு. இதில் அவரைக் குற்றம்சொல்லக் கூடாது; கடின வேலை வாங்கின லாபானுக்கு இதுவும் செய்யலாம், இதற்கு மிஞ்சியும் செய்யலாம் என்பாரும் உண்டு. ஆனால் இதில் யாதொரு மந்திர தந்திரபலம் இருந்ததென்று நினைக்கவேகூடாது. இவர் செய்த முறைமையை மற்றவர்கள் கையாடினால் அது பலிக்கவுமாட்டாது. இவர் இப்படிச் செய்யாவிட்டாலும் தேவன் இவருடைய மந்தையை லாபானுடைய மந்தையிலும் ஆசீர்வதிக்கும்படி சித்தங்கொண்டிருந்தார் என்றே சொல்லவேண்டியது. இதற்கு இவர் செய்தமுறை, கிழவிகளுடைய கட்டுக்கதைகளைக் கேட்டுச் செய்ததுபோலிருக்கிறது. புள்ளியுள்ள ஆடுகளின் பலுக்கத்துக்கு அவர் செய்தமுறையையே காரணமாகச் சொல்லக்கூடாது. "இடையன்புத்தி பிடரியிலே" என்று ஒரு பழமொழி நமது தேசத்திலுண்டே; அந்த பிடரிபுத்தியினாலே இது நடந்ததேயன்றி வேறல்லவென்று நாம் நிதானிக்கிறோம். எப்படியும் தான் வாழவும் தன் மாமன் தாழவும், தன் மந்தை பெருகவும் தன் மாமன் மந்தை குறையவும், பேராசைகொண்டு முனிவர் இதைச் செய்தது அவர் பேரில் குற்றந்தான். இச்சமயத்தில் அவர் தமது ஏணித்தரிசனை பக்திநிலையிலிருந்து விழுந்து பழைய கூழ்விற்ற புத்திக்கு வந்திருக்கிறார் என்று சொல்லவேண்டியது.

தேவனுடைய மந்தையின் ஆடுகளுக்கும் ஒரு அடையாளம் உண்டு. அவைகள் சிலுவைமரக்கிளைகள் என்று சொல்லக்கூடிய இரட்சகரின் பாடுகளினாலே மறுபிறப்புக்குரிய மாறு

தலைப் பெற்று, தங்கள் இருதயத்தில் தேவாட்டுக்குட்டியின் இரத்தப் புள்ளிபட்ட ஆடுகளாய் இருக்கிறார்கள்; அந்த இரத்தப்புள்ளிகளைக்கொண்டு இது இன்னாருடைய ஆடு என்று மனுஷருக்கும் தூதருக்கும் விளங்கும். வாசிக்கிறவனே! அந்த இரத்தப்புள்ளிகள் உன்னில் உண்டா? பார். முனிவர் பங்கு மந்தை பலுகுகிறதைக் கண்டு, ஒருவேளை முனிவர் செய்த உபாயமே இதற்குக் காரணமென்று லாபான் தப்பாய் நினைத்து, பத்துமுறை அவருடைய சம்பளத்தை மாற்றினான். லாபானும் லேசானவன் அல்ல; "கரட்டுக் கொம்புக்கேற்ற முரட்டுக் கோடரி" என்ற பழமொழிப்படிதான் இருந்தான். லாபான் எப்படி முனிவர் சம்பளத்தை மாற்றினாலும், முனிவர் காரியம் முடிவில் ஜெயமாய் இருந்தது. ஏனெனில் முனிவர் அல்ல, அவருடைய பிதாக்களின் தேவன் அவரை ஆசீர்வதித்துவந்தார். தேவன் ஆசீர்வதிக்கிறவனை தாழ்த்திப்போட லாபானால் முடியுமா? வானாதிநாதன் ஒருவனை உயர்த்தும்பொழுது பூலோகபுத்திரன் அவனைத் தாழ்த்தும்படி யோசித்தால் ஆகுமா?

இந்தக் காட்டுத்தொல்லையோடு முனிவருக்கு வீட்டுத்தொல்லையும் அதிகமிருந்தது. இரண்டு மனைவிகள், வேறு இரண்டு மறுமனையாட்டிகள், அவர்கள் ஒவ்வொருவரும் பெற்ற பிள்ளைகள் ஆகிய இவர்களெல்லாரும் அவருக்கு ஓயாத தொல்லையையும் ஒழியாத மனவருத்தத்தையும் கொடுத்தார்கள். அந்தி நேரம் மந்தைவிட்டு வீடுவந்தால் அத்தனைபேரும் அவரைச் சூழ்ந்துகொண்டு ஒருவர்மேலொருவர் கண்டபடிப்பேசி காதடைக்கக் கத்துவார்கள். இக்காலத்தில் முனிவர் மட்டற்ற பொறுமையைக் கையாடி இருக்கவேண்டியது.

இவர்கள் எல்லாரும் ஒருகாலத்தில் ஒரே மனமும் ஒரே இருதயமும் உடையவர்களானார்கள். எப்படியெனில், லாபானும் அவன் குமாரரும் யாக்கோபுமுனிவரின் மக்கள் வாழ்வையும், மந்தை வாழ்வையும், வீட்டு வாழ்வையும், காட்டு வாழ்வையும் கண்டு வன்கண்பட்டு, முனிவரோடும் அவர் மனைவி மக்களோடும் பேசாமல் அடக்கமாய் முகங்குருவித் திரிந்தார்கள். இது முனிவருக்கு வருத்தமாய் இருந்தது. அவர் தமது வருத்தத்தைச் சஞ்சலப்படுவோரைத் தேற்றும் சச்சிதானந்தக் கடவுளண்டைபோய்க் கொட்டினார். அந்தக் கருணாநாதன் முனிவருக்குத் தரிசனமளித்து, "உன் பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் திரும்பிப்போ, நான் உன்னோடுகூட இருப்பேன்" என்று திருவுளம்பற்றினார். இது



எரியும் உள்ளத்துக்கு ஏற்ற ஆறுதலாய் இருந்தது. ஏணித் தரிசனை கண்டு இருபது வருஷத்துக்குப் பிற்பாடு இந்தத்தரிசனை அவருக்குக் கிடைத்திருக்கிறது. உடனே அவர் தமது மனைவிகள் இருவரையும் தமது மந்தைக்கு வரவழைத்து அவர்கள் தகப்பனுடைய மாறுபாடான செய்கைகளையெல்லாம் விவரித்து, அதோடு தேவதரிசனையையும் அவர் கட்டளையின் திருவாக்கையும் சொன்னார். அச்செய்தி கேட்டவுடனே அவர்கள், நீர் எப்படிச் சொல்லுகிறீரோ அப்படி நடந்துகொள்ளுகிறோம் என்று இணங்கினார்கள். தங்களுடைய தகப்பனார் முனிவரை நடத்தின விதம் அவர்கள் ஒருவருக்கும் திருப்திகரமாய் இருக்கவில்லை. "எங்கள் தகப்பன் வீட்டிலே இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும் உண்டோ? அவர் எங்களை விற்று எங்கள் பணத்தையும் வாயிலேபோட்டுக்கொண்டார்" என்று அவர்கள் அறிக்கையிட்டார்கள். தங்கள் தகப்பன் தங்களுக்குக் கலியாணம் பண்ணுவித்த வகையானது மங்களவிஷயமாய் அவர்சள் மனதில்படாமல் விற்ற பாவனைபோல் அவர்கள் மனதில்பட்டிருந்தது.

முனிவர் தமது மனைவிகள் இருவரும் ஆட்சேபனை சொல்லாமல் தம்மோடு புறப்பட விரும்புகிறதைக் கண்டு தேவகட்டளையின்படியே புறப்பட்டார். அவர் தமது பங்குக்குரிய மிருகஜீவன்களையும் தமது சொந்தப்பொருட்களையும் மாத்திரம் சேர்த்துக்கொண்டு மனைவி மக்களுடன் புறப்பட்டார். அப்பொழுது அவருக்கு பதினொரு குமாரரும் ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். அவர்கள் புறப்பட்ட செய்தி லாபானுக்கு மூன்று நாளைக்குப்பின்பு தெரிந்தது; உடனே அவன் தன் பந்துக்கள் பலரோடுவந்து முனிவர்மேல் குற்றஞ்சுமத்தி அவர் வசமிருந்த மந்தைமுழுதும் திருப்பிவரவேண்டுமென்று பிரயத்தனப்பட்டான். அவன் முனிவரைத் திருடனாக்கி, அவரைக் கைதிபண்ணும் யோசனையாய் வந்தான். ஏனெனில் அவன் வீட்டிலிருந்த ஒரு பொன்விக்கிரகத்தை ராகேல் திருட்டுத்தனமாய்க் கொண்டுவந்துவிட்டாள். இது முனிவருக்குத் தெரியாதிருந்தது. முனிவர் புறப்பட்ட ஏழாம்நாளில் லாபான் அவரை வழியில் கண்டுபிடித்தான். அப்போது அவருக்கு அதிக கலக்கமிருந்தது; போகிற இடத்தில் தமையனைப்பற்றியும் அவருக்கு அச்சமிருந்தது. ஆனால் இவ்விரண்டு பயத்தையும் தேவன் நடுநின்று விலக்கிவிட்டார் என்பதை வரவர அறிந்துகொள்ளுவோம். லாபான் முனிவரைச் சந்திக்கும் நாளுக்கு முந்தின இரவில் தேவன் சொப்பனத்

தில் அவனுக்குத் தரிசனமாகி, "நீ யாக்கோபோடே நன்மையேயன்றி தீமையொன்றும் பேசாதபடி எச்சரிக்கையாயிரு" என்று சொல்லியிருந்தார். அந்தப் பயத்தினாலே லாபான் முனிவரைக் கண்டவுடன் கடிந்துபேசாமல், இத்தனை வருஷமிருந்த நீர் கடைசியாக சந்தோஷமாய் வழியனுப்பிக்கொண்டு போகாமல், இவ்வண்ணம் புறப்பட்டதென்ன? என்று விசனமாய்ப் பேசினான். அதற்கு முனிவர், தாம் இருபதுவருஷக் காலமாய் அவனிடம் பட்டபாடுகளையும் அவன் அவருக்குச் செய்த மோசங்களையும் விபரமாய்ச் சொல்லி வாயடைத்தார். இந்தப் பாதகன், மருமகன் என்று பாராமலும் முனிவரால் தன் ஆஸ்தி விருத்தியானதைக் கவனியாமலும் மலைவனங்களில் துஷ்டமிருகங்களால் பீறுண்டதையும், பகலிலும் இரவிலும் களவுபோனதையும்முதலாய் முனிவர்கையில் வாங்கிவந்தான். முனிவர் பேசினவார்த்தைகள் லாபானை வெட்கப்படுத்தினதோடு, அவன் கூட்டிவந்த ஆட்கள் எல்லாரையும் அவர் பட்சம் ஏவிவிட்டிருக்கும் என்பது நிசம். கடைசியாக தன் வீட்டில் களவுபோன பொன் விக்கிரகத்தைப்பற்றிப் பேசினான்; அப்பொழுதுதான் அந்தச் சங்கதி முனிவருக்குத் தெரிய வந்தது. உடனே அவர் தமது மாமனைப்பார்த்து, நீர் எங்கள் கூடாரத்தை பரிசோதனைபண்ணிக்கொள்ளும் என்று சொன்னார். ஆனால் ராகேல் அதைத் தந்திரமாய் மறைத்துக்கொண்டதால் அவன் கைக்கு அகப்படாமல்போயிற்று. என்றாலும், இந்தக் குறிப்பினாலே லாபான் வரவர மெய்த்தேவவணக்கத்தைவிட்டு தன்னைச் சுற்றிலுமிருந்தவர்களைப்போல் விக்கிரகாராதனையில் வளர்ந்துவிட்டான்போலிருக்கிறது. இனி நெடுங்காலம் முனிவர் அங்கிருந்தால் அவருடைய குடும்பமும் கெட்டுப்போம் என்று கடவுள் நினைத்து, அவரைப் பதான்அராமிலிருந்து புறப்படப்பண்ணினார் என்று நினைக்கவேண்டியதாய் இருக்கிறது. அப்புறம் அவ்விருவரும் உடன்படிக்கைபண்ணி விருந்துண்டு அவரவர்வழியே பிரிந்துபோனார்கள்.

---

## தேவபோராட்டப் பருவம்.

மாமனைப்பற்றிய கவலையிருந்த மனதின் பக்கத்தில் அண்ணனைப்பற்றியிருந்த கவலை அதிகமாய்ப் படர்ந்து அதை நிரப்பிற்று. மாமனை முதுகுக்குப் பின்னாலே கடத்திவிட்ட முனிவர் அண்ணனை முகத்துக்குமுன்னே கண்டார். இச்



சமயத்தில் இருபது வருஷமாக மறந்துபோயிருந்த பழைய வீட்டு நடபடிக்கைகள் எல்லாம் அவருடைய ஞாபகத்தில் வந்தது. கூழ்விற்றதும், பங்குபெற்றதும், ஆடுபிடித்ததும், ஆக்கினதும், அண்ணனுடைய அங்கிபோட்டதும், ஆட்டுத்தோல் போர்த்ததும், தந்திரம்பண்ணித் தந்தையிடம் நல்வாக்குப் பெற்றதும், நேற்று நடந்த சமாசாரம்போல் அவருடைய நெஞ்சை வதைத்தது. ஐயோ! முனிவர் மனதில் இக்காலத்தில் உண்டான ஆயாசத்தை என்னவென்று சொல்ல! ஆனாலும் ஏணிகண்டதரிசனையின் காட்சியும், ஏணியின் உச்சியிலிருந்து பேசினவரின் திருவாக்கும் அவரை ஆறுதல்படுத்தினது என்று சொல்லவேண்டியது. இவை எல்லாவற்றோடு நமது மாமனை வழிமறித்து மனமாற்றின வானதேவன் அண்ணனுடைய மனதையும் மாற்றமாட்டாரா என்று ஆவியிலே வேண்டுதல்பண்ணிக்கொண்டிருந்தார். அப்படியிருக்கும் காலத்தில் தாம் முன்னொருதரம் ஏணியின்மேல் ஏறவும் இறங்கவுங்கண்ட சம்மனசுக்களின் சேனை அவருக்குக் காணப்பட்டது. இனி அவர் பயப்படவேண்டியதென்ன? அது மாயாதோற்றமாயிராமல் மெய்க்காட்சியாயிருந்தபடியால் அந்த இடத்துக்கு "மக்னயீம்" என்று பேரிட்டார். அதற்கு இரட்டைச்சேனை என்று அர்த்தம். ஒருவேளை அத்தூதர்சேனை முனிவருக்கு வலது இடது பக்கமாய் அல்லது முன்பின்னாக நின்று அவரைக் காவல்காத்தது என்று தோன்றுகிறது. இனி அவர் ஒருவருக்கும் அஞ்ச அவசியமில்லை. அவர் பக்கத்தில் ஆயிரம்பேரும் அவர் வலது பக்கத்தில் பதினாயிரம்பேரும் வந்தாலும் அவர் பயப்படவேண்டியதில்லைதான்.

முனிவர் இயல்பிலே சற்று யூகமுடையவராயும் இருந்தார். தூதர் தனக்கு இருக்கிற பலத்தைக்கண்டு அண்ணனை அசட்டையாய் எண்ணவுமில்லை. அவர் தமது வரவைத் தெரிவிக்கும்படி சில வேவுகாரரைத் தன் தமையனிடத்தில் அனுப்பினார். அனுப்பின ஆட்கள்வசம் எனக்கு எருதுகளும் கழுதைகளும் ஆடுகளும் வேலைக்காரரும் உண்டு என்று சொல்லவும் சொன்னார். கோலுங்கையுமாய்ப் போனவன் திரும்பவும் எலும்பும் தோலுமாய் வந்து பிதாக்கள் சொத்தில் பங்குபோட வருகிறானென்று ஏசா தனக்குள் சொல்லிக்கொள்ளாதபடிக்கும், நான் முன் கூழால் சம்பாதித்த சுதந்தரம் ஒன்றும் வேண்டாம் அண்ணா என்று முந்தியே சொல்லியனுப்புகிறதுபோலுமிருக்கிறது. ஏசா அச்செய்தி கேட்டவுடனே பின்னும் விபரமாய்த் தன் தம்பியைப்பற்றிய வரலாறுகளை விசாரித்தறிந்து

கொண்டு தான் அவனைச் சந்திக்க நானூறுபேரோடு எதிர்கொண்டுவருவதாக மறுசெய்தி சொல்லியனுப்பினான்.

தூதுபோன ஆள் இந்த சமாசாரம் சொன்னவுடனே முனிவர் மனந்தள்ளாடிப்போனார். ஆனால் தைரியத்தை விடாமல், நாம் சமாதானம்பாராட்டும் பிரயத்தனங்களைச் செய்வோம் என்று உத்தேசித்து தமையனுக்கு வெகுமதிகளாக சில ஒட்டகங்களையும் சில ஆடுமாடுகளையும் தெரிந்தெடுத்து, மீதியை இரண்டு பவுஞ்சாகப்பிரித்து, ஒன்று முந்தவும் மற்றது பிந்தவும் திட்டம் செய்துகொண்டார். அப்பால் அவர் நெருக்கப்படுகிறகாலத்தில் சகாயம்செய்கிற தேவனை நோக்கி தமது மனவருத்தங்களையெல்லாம் சொல்லிக்கெஞ்சினார். தன் தமையனுக்குக் கொடுக்கும் வெகுமதிகளை முதலாவது அனுப்பி, அதன்பின்பு தமது மந்தைகளை பங்குபங்காகப் பிரித்து நடத்தி, கடைசியாகத் தமது மனைவி மக்களும் தானுமாய் நடந்துபோனார்கள். அவருடைய கண் முன்னிட்டுவரும் ஆட்களையும், மனம் வானுதி தேவனையும் நோக்கினதாக இருந்தது. அன்று பகலில் முனிவர் தமது தமையனைச் சந்திக்கவில்லை. இரவில் யாப்போக் என்னும் ஒரு ஆற்றங்கரையில் தாமதித்து மறுநாள் விடியற்காலத்தில் அங்கிருந்து மறுபடியும் புறப்பட்டார். புறப்பட்டவுடனே தமது மந்தைகளையும் மனைவி மக்களையும் நடந்துபோகச் சொல்லி, தாம் ஆற்றோரத்தில் தேவனை நோக்கி விண்ணப்பஞ்செய்யும்படி தாமதித்தார். இதை நாம் ஜெபமென்றுமாத்திரம் சொல்லாமல் போராட்டம் என்று சொல்லவேண்டியது. ஏனெனில் முனிவர் முழங்கால்படியிட்டவுடனே தாம் இம்மட்டும் காணாத ஒருஆள் அவரோடு போராடினார்; அந்த ஆள் இன்னாரென்று நாம் அறியுமுன்னே முனிவர்செய்யும் போராட்டத்தைச் சற்றே பார்ப்போம். அவர் முழங்காலில் நிற்கிறார், குனிகிறார், எழுந்திருக்கிறார், சாஷ்டாங்கமாய்விழுகிறார், கைகளை உயர்த்துகிறார், கைகளால் கெஞ்சுகிறார்; அவர் கையில் ஈட்டியாவது தடியாவது வல்லயமாவது காணோம். ஆனால் தம் முன் ஓர் ஆள் நிற்கிறதுபோல ஜெபத்தில் போராடுகிறார். அந்தரரூபி நான் போகட்டும், பொழுதுவிடிகிறது என்றார். ஆனால் முனிவரோ:—

“நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய
உம்மைப் போகவிடேன்”

என்று வாதாடினார். கர்ப்பத்தில் முனிவர் தமது சகோதரன் குதிங்காலைப்பிடித்து வாதாடினதுபோக, இப்போது பரமபுரு



ஷன் பாதம்பிடித்துப்போராடுகிறார். இப்பொழுது அந்த ஆளுடைய ஊரும் பேரும் தொழிலும் விளங்கிப்போயிற்று. இம்மட்டும் முனிவர் ஆசீர்வாத கர்த்தரோடு போராடுகிறார்; பக்தரே, ஆசீர்வாதம் வேண்டுமென்றே போராடும். ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்று போராடுகிறார். இதெல்லாம் ஆண்டவரை மடியைக் கட்டியிழுக்கிறதுபோல் இருக்கிறது. வாசிக்கிறவனே! ஜெபம்பண்ணினால் இப்படிப் பண்ணவேண்டும். பேருக்கு முழங்கால்படியிட்டு என்ன பலன்?

அவர் முனிவருடைய பேரைமாற்றி, நீ தேவனோடும், மனுஷரோடும் போராடி மேற்கொண்டபடியால் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்று அழைக்கப்படுவாயாக என்று சொல்லி அதற்கடையாளமாக முனிவரைத் தொட்டார்; உடனே முனிவருடைய தொடை நரம்பு ஒன்று சுளுக்கிற்று. அதுமுதல் அவர் ஜீவகாலபரியந்தம் நொண்டிநடந்தார். தேவனுடைய விசேஷித்தசெயல்கள் சரீரத்தின் ஒரு விசேஷித்த மாறுதலால் அடையாளம் காட்டப்படுகிறது. பரிசுத்த பவுல் ஆண்டவரைக்கண்ட லாபத்துக்கு அவருடைய கண் பார்வையற்றுப்போயிற்று. அதுமுதல் முனிவர் மனத்திடனடைந்தார்.

அவர் நொண்டி நடந்து ஆற்றைக்கடந்து தமது பரிவாரங்களுடன் கூடிக்கொண்டார். அவர்கள் எல்லாரும் முனிவர் நொண்டும் இரகசியம்தெரியாமல் அநுதாபப்பட்டிருக்கலாம். அப்பால் அவர் தாம் முன் ஒழுங்குபண்ணியிருந்தபடி முதலாவது தமையனுடைய வெகுமதிகளின் பவுஞ்சையும், அதன்பின்பு தன் மந்தைகளின் பவுஞ்சையும், ஒன்றின்பின் ஒன்று சற்றுதூரமிருக்கத் திட்டம்செய்து, அதன்பின்பு தமக்கு வேலைக்காரிகளால் பிறந்த குமாரரையும், அப்பால் லேயாளையும் அவள் மக்களையும், கடைசியாக ராகேலையும் அவள் குமாரனையும் நடத்திக்கொண்டுபோனார். போகவே தூரத்தில் தமது தமையனார் நானூறுபேரோடு வருகிறதைக்கண்டு முன்னாக எட்டி நடந்து ஏழுதரம் தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தார். தமையன் பழைய விசனங்களை எல்லாம் மறந்து எதிர்கொண்டு ஓடிவந்து தம்பியைத்தழுவிக் கழுத்தைக்கட்டி முத்தஞ்செய்தான். இருவரும் அழுதார்கள். முன் தந்திரத்தால் நிறைந்திருந்த தன் தம்பியின் குணமானது முற்றிலும் தன்னை மதிக்கவும், மரியாதைசெய்யவும் கண்டது ஏசாவுக்கு சொல்லமுடியாத ஆனந்தமாயிருந்

தது. ஆகவே இருபதுவருஷம் பிரிந்திருந்த சகோதரர் மறுபடியும் கூடிக்கொண்டார்கள். அவ்விருவரும் பிரிந்த வரலாற்றைக் கேட்ட நாம், திரும்பவும் கூடிக்கொண்ட வரலாற்றைக் கேட்கிறது சந்தோஷமாயிருக்கிறது. "ஆ! சகோதரர் ஒருமித்து வாழுகிறது எத்தனை நன்றும், எத்தனை இன்பமுமானது" என்று ஒரு பக்தன் கூறிய வாசகம் சிறந்த வாசகந்தான்.

அவ்விருவரும் சமாதானமானபின்பு, தமது மனைவிமக்களை இனம்காட்டினார்; அவர்களெல்லாரும் தங்கள் தங்கள் பிள்ளைகளோடு சேர்ந்துவந்து ஏசாவை வணங்கினார்கள். இவ்வண்ணமாய் அன்று ஏசாவின் மனதில் தன் சகோதரனைப்பற்றிய நல்லெண்ணம் பெருகிற்று. அவன், தனக்குத் தன் சகோதரன் அனுப்பின வெகுமதிகளை வேண்டாமென்று சொல்லியும் முனிவர் அவனை வருந்தி, "நான் உம்முடைய முகத்தைக்கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோலிருக்கிறது. என் காணிக்கையை ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும்" என்று சொன்னதின்பின்பு ஏற்றுக்கொண்டான். பின்பு ஏசா நாமிருவரும் கூடிப்போவோம் வா என்று கூப்பிட்டான். அதற்கு முனிவர் மந்தையின் போக்கையும், மக்கள்போக்கையும் மற்றப்போக்கையும் சொல்லித் தாம் பிந்திவருகிறதாக ஒழுங்குபண்ணிக்கொண்டார். ஒருவேளை மறுபடியும் ஒருவருக்கொருவர் சமீபித்து வாழ்ந்தால் முன்போல் சமாதானக்கேடு உண்டாகும் என்று பயந்தார்போலிருக்கிறது. அப்புறம் ஏசா வழியனுப்பிக்கொண்டு தன் வீட்டாரும் மந்தையும் வாசம்பண்ணின சேயீர் மலை நோக்கிப்போனான். அன்றையத்தினம் யாக்கோபுமுனிவருக்கு இருந்த சந்தோஷம் கொஞ்சமல்ல, ஒரே ஒரு துக்கந்தான் அவரைச் சற்று வதைத்தது; அது தாயார் இறந்துபோனாள் என்ற சமாச்சாரந்தான். ஆனால் அநுகூலமாய் முடிந்த மற்றக் காரியங்கள் எல்லாம் அந்த விசனத்தைத் தணித்துவிட்டது.

அப்பால் முனிவர் சுக்கோத்துக்குப் பிரயாணம்பண்ணி தனக்கு ஒரு வீடுகட்டி மிருகங்களுக்குக் கொட்டாரங்களைப் போட்டார். பின்னும் கொஞ்சக்காலத்துக்குப் பின்பு அவர் யோர்தான் ஆற்றைக்கடந்து கானானின் எல்லைக்குட்பட்டு அதின் பிரதான ஸ்தலமாயிருந்த சீகேமில் பூமிவாங்கி குடியேறி, அந்த விக்கிரகாராதனைக்காரர் நடுவில் மெய்த்தேவ ஆராதனையை நிலைநிறுத்தும்படி ஒரு பலிபீடமும் கட்டினார். இந்த இடத்தில் முனிவருக்குண்டான துன்பத்துக்கு ஒரு தொகையில்லை. அவருடைய பிள்ளைகளில் பெரும்பாலார் நல்லவர்களாய் நடந்



துகொள்ளவில்லை; அதைவிட்டு அந்த நாட்டுமனுஷரோடு அவருக்குப் பெரிய சண்டைகளும் மனஸ்தாபங்களும் நெடுகிலும் உண்டாகிக்கொண்டேயிருந்தது.

அக்காலத்தில் தேவன் முனிவருக்குத் தரிசனமாகி, தாம் முன்னே ஏணித்தரிசனை கண்ட இடத்தில் போய்க் குடியேறவும், பலிபீடம் கட்டவும் உத்தரவுகொடுத்தார். அவ்வுத்தரவுக்கு இணங்கி முனிவர் புறப்பட்டுப்போனார். இந்த இடத்துக்கு முனிவர் இம்மட்டும்வந்து தாம் வாக்குக்கொடுத்த காணிக்கைகளைப் படைத்து ஆண்டவரை ஸ்தோத்திரஞ்செய்யாமலிருந்தது அவர்பேரில் தப்பிதம் என்று சொல்லவேண்டியது. எப்படியும் அதை நிவிர்த்திபண்ணிக்கொள்ளும்படியாக தமது படைபண்டாரங்களுடன் பேர்ந்துபோனார். அவர்கள் பெத்தேலுக்குப் புறப்படுமுன்னே, முனிவர் அவர்கள் வசத்திலிருந்த விக்கிரகங்களையெல்லாம் அகற்றித் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவுகொடுத்தார். இதினாலே மோசேயின் பிரமாணத்தினால் எழுத்துமூலமாய் விலக்கப்பட்டதும் விதிக்கப்பட்டதுமான பல கட்டளைகளும் சடங்குகளும் வாய்மொழியாய் இறங்கி அந்தந்த காலத்துமனுஷரால் அனுசரிக்கப்பட்டு வந்ததென்று தோன்றுகிறது. ஒருவேளை ராசேல் ஒரு விக்கிரகம் கொண்டுவந்ததுபோல வேலைக்காரர் சிலர் தங்கள் வீட்டு விக்கிரகங்களைக் கொண்டுவந்து வணங்கியிருக்கலாம்; அதோடு சீகேமியரோடு சண்டையுண்டானபோது அவர்களுடைய விக்கிரகங்களில் சிலவற்றை இவர்கள் திருடிக்கொண்டிருக்கலாம். அதையெல்லாம் தமது வசம் ஒப்புக்கொடுக்கும்படிக் கேட்டார்; அவர்கள் சில நகைகளையும் கழற்றிக்கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம். அவைகள் ஆபரணமாய்ப்போட்ட நகைகளாய் இராமல் மந்திரபலமுள்ளதாக எண்ணி, அந்த முறைப்படி செய்துபோட்டுக்கொண்டிருந்த நகைகளாய் இருக்கலாம். அவைகள் எல்லாவற்றையும் முனிவர்வாங்கி ஒரு கர்வாலிமரத்தடியில் புதைத்துப்போட்டார். இன்றுதான் அவர்கள் எல்லாரும் அந்நியதேவனைவிட்டு மெய்த்தேவனாகிய யேகோவாவை தங்கள் தெய்வமாக்கிக்கொண்டார்கள்.

முனிவர் பெத்தேலில் சேர்ந்தவுடனே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அங்கே பலியிட்டு தான் முன் பொருத்தனைபண்ணின பிரகாரம் பலிகளைச்செலுத்தித் காணிக்கைகளைப் படைத்தார். தேவன் அவருக்கு மறுபடியும் அவ்விடத்தில் தரிசனமாகி, பழைய வாக்குத்தத்தங்களையெல்லாம் மறுபடியும் உறுதிப்படுத்தினார். அவர் பெத்தேலிலிருந்து புறப்பட்டுவருகையில்

வழியில் தமது நேசமனைவியாகிய ராகேலை அடக்கம்பண்ணும்படி நேரிட்டது. அவள் தன் இரண்டாம் புத்திரனைப் பெற்ற பேறுகாலவேதனையால் மரித்தாள். பிள்ளைக்காகச் சண்டைபோட்ட அவளுடைய காலம் பிள்ளை பெறுவதினாலே முடிவாகும்படி ஆண்டவர் திட்டஞ்செய்தாராக்கும்! முனிவர் அவளை வழியிலே அடக்கம்பண்ணி அவள் பெற்ற பாலனுக்கு பென்யமீன் என்று பேரிட்டார்.

இதற்குப் பின்பு முனிவர் மனம் தமது மக்களின் துர்நடக்கையால் புண்ணாய்ப்போயிற்று. அவர் தமது பிதாவாகிய ஈசாக்குமுனிவர் வசித்த மம்ரேக்கு வந்து அவருடன் சுமார் பதின்மூன்றுவருஷம் பின்னிட்டார். இதனிடையில் தன் மக்கள் எல்லாரும்கூடி யோசேப்பை விற்றுப்போட்டு, துஷ்டமிருகம் பட்சித்துவிட்டது என்று பொய்சொன்னார்கள். இவ்வகையாய் முனிவர் கானானுக்குவந்த துவக்கத்தில் அவருடைய காலம் அவ்வளவு சந்தோஷமானதாயிருக்கவில்லை. அநேக வருஷங்களுக்குப் பின்பு யோசேப்பு உயிரோடிருக்கிற செய்தியை அறிந்து சந்தோஷமாகி, அடிமையாக விற்கப்பட்ட மகன் விரும்பியபடி எகிப்துக்குத் தங்கள் மக்கள் மனுஷரோடுபோய்ப் பதினேழுவருஷம் பாக்கியமாய்க் காலங்கழித்தார். அவருடைய அந்தியகாலம் நெருங்கும்போது தமது மக்கள் எல்லாரையும் வரவழைத்து, தேவாவியால் நிறைந்து அவரவருக்கேற்ற பிற்காலவாழ்வுகளைக் கூறி ஆசீர்வதித்து;

"கர்த்தாவே! உம்முடைய
இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்"

என்று அறிக்கையிட்டு, தமது பிதாக்கள் கல்லறையிலே தம்மையும் அடக்கஞ்செய்யவேண்டுமென்று திட்டஞ்செய்து நூற்று நாற்பத்தேழு வயசுடைய தமது மண்கட்டையை பூமியில் வைத்துப்போட்டு, ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய தமது பிதாக்களின் தேவனுடைய சமூகம் போய்ச்சேர்ந்தார். அவருடைய அருமைமகனாகிய யோசேப்பு திரண்டபணங்களைச் செலவிட்டு நாற்பதுநாளாக அவருடைய பிணத்துக்குப் பரிமள தைலமேற்றினார். முனிவருக்காக எழுபதுநாள் துக்கம் கொண்டாடினார்கள். அவருடைய மக்களும் பார்வோனின் பிரபுக்களும், அவனுடைய சகல உத்தியோகஸ்தரும், ரதவீரரும் குதிரைவீரரும் ஏகமாய்ப்போய் அவருடைய பிதாக்களின் கல்லறையிலே அடக்கம்பண்ணிவிட்டுத் திரும்பினார்கள்.



முனிவருடைய பிரேதம் மண்ணறைக்குள் சென்றாலும் அவர் பேர்பிரஸ்தாபம் மண்ணறைக்குள் செல்லவில்லை; அவருக்குப் பின்னுள்ள எல்லாத் தலைமுறையாரும் அவரை நினைவுகூர்ந்துவருகிறார்கள்.

தேவன் அவருக்குக் காட்டின விசேஷித்த தயவுகளே அவரை நினைவுகூரும் ஞாபகஸ்தம்பங்கள்போல் இருக்கிறது. தீர்க்கதரிசிகள் யூதரை மனந்திரும்ப ஏவும்படி யாக்கோபுக்கு தேவன் செய்த கிருபைகளையே எடுத்துக்கூறுகிறார்கள் (ஓசி. 12. 3, 4, 12. மல். 1. 2.). இயேசு இரட்சகர் காலத்திலும் முனிவர்பேர் மங்கிப்போகவில்லை; இரட்சகருடைய இனத்தான் ஒருவனும் இன்னும் சிலரும் யாக்கோபு என்ற முனிவர்பேரால் அழைக்கப்பட்டார்கள்; யூதர்மாத்திரமல்ல அவர்களுடைய எதிரிகளாகிய சமாரியருங்கூட அவரை மதிப்பாய் எண்ணிவந்தார்கள். முனிவர் மரித்து 1720 வருஷமாகிப் போனபோதிலும் ஒரு சமாரியஸ்திரீ உலகஇரட்சகரைப் பார்த்து, எங்கள் பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? என்றுகேட்டாள். அவ்வளவாகப் பின்சந்ததியாரால் அவர் நினைவுகூர்ந்து மேன்மைபடுத்தப்பட்டார் (யோவா. 4. 5, 12.). அதுவுமன்றி, முனிவர் ஏசாவைப்பார்க்கிலும் தேவசகாயம் பெற்றதும், ஏசாவின் சுதந்தரம் மாறினதும், அவர்கண்ட ஏணித்தரிசனையும், அவர் பஞ்சம்பிழைக்க எகிப்துக்குப் போனதும், அங்கே மரணமடைந்ததுமான விஷயங்கள் புதிய ஏற்பாட்டு ஆகமக்காரராலே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது என்று பார்க்கிறோம்.* முனிவர் தேவதயவைப் பெறும்படி இருந்தவழிகளைவிட அதிக மேன்மையான வழி இப்பொழுது நமக்கு இருக்கிறது. அவர் தமது அந்திய காலத்தில் ஆவலோடு எதிர்பார்த்த ரட்சிப்பு ஒருகாலத்தில் அவதாரபுருஷராய் வெளிப்பட்ட இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வெளிப்பட்டது; இயேசுகிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிக்கிறவர்கள் அந்த ரட்சிப்புக்குப் பங்காளிகளாவார்கள். அவர்கள் மரிக்கும்போது முனிவரோடு பந்தியிருந்து அந்த இரட்சிப்பை அனுபவிப்பார்கள். அந்த பாக்கியம் எனக்கும் கிடைப்பதாக; வாசிக்கிறவனே! உனக்கும் கிடைப்பதாக.

* ரோ. 9. 11, 13. பரி. யோவா. 1. 51. எபி. 12. 16. அப். 7. 12, 16.

## JOSEPH.

# சொப்பன முனிவர்.

(யோசேப்பு.)

இம்மட்டும் நாம் வாசித்த சரித்திரங்களுக்கு இந்த சரித்திரம் சற்று வித்தியாசமானதாகவே இருக்கிறது. இதிலே ஒரு மனுஷன் பூலோகத்தின் தாழ்ந்த நிலைமையையும், அதன் உயர்ந்த நிலைமையையும் அநுபவித்த வரலாறு வெளிப்படுகின்றது. ஒருகாலத்தில் அடிமையாய் இருந்தவன் திடீரென்று மந்திரியானான் என்கிற சங்கதி அதிசயமல்லவா? மேலும் இச்சங்கதிகளால் "பூமிக்கெல்லாம் நியாயாதிபதியானவர் நீதிசெய்யாதிருப்பாரோ" என்கிற பரம உணர்ச்சியும் உண்டாகிறது. மனுஷன் தன் பிற்காலகாரியங்களை ஒழுங்குபடுத்துகிறவனாய் இராமல் தேவனே தமது சுயாதீன சித்தத்தின்படி அதை ஒழுங்குபடுத்துகிறார் என்று விளங்குகிறது. எல்லாவற்றிலும் மேலாக தேவன் தமது திருச்சபையாகிய பயிரை அந்தந்த காலத்தில் எவ்விதமாகக் காத்து ஆதரித்துவருகிறார் என்று இந்த வரலாறுகள் நமக்குத் தெரிவிக்கிறதுமாய் இருக்கின்றன; எந்த நிலைமையில் இருந்தாலும் அந்த நிலைமையில் மனச்சந்தோஷமாய் இருக்கவேண்டும் என்பதற்கும், வாலிப இச்சைகளுக்கு விலகிவோடி தன் சரீரத்தையும் ஆத்துமாவையும் கறைபடாதபடிக் காத்துக்கொள்வதே தெய்வீக வீரத்துவம் என்றும் இச்சரித்திரம் நன்றாய்ப் படிப்பிக்கிறது.

நாம் இப்பொழுது வாசிக்கும் வரலாறுகள் விசேஷமான சில சொப்பனங்களைக்கொண்டு ஆரம்பித்திருப்பதாலும், இதில் நாம் விபரிக்கப்போகிற முனிவர் இளம்பிராயத்தில் சொப்பனங்கள் கண்டு, அச்சொப்பனங்களின்படியே அவருடைய ஜீவியமுழுவதும் நடந்துவந்திருப்பதாலும், வேறு பலர் கண்ட பரம இரகசிய சொப்பனங்களை இவர் திட்பமாய் வியார்த்தி பண்ணிவந்திருப்பதாலும், இவரை சொப்பனமுனிவர் என்னும் பேரால் இவ்விடத்தில் அழைத்திருக்கிறோம்.



## சோப்பனப் பருவம்.

சொப்பனமுனிவர் யாக்கோபு முனிவருடைய பன்னிரண்டு ஆண்பிள்ளைகளில் ஒருவர். இவருடைய தந்தையின் வரலாறுகளை இதற்குமுந்தின சரித்திரத்தில் விபரமாய்க் காட்டியிருக்கிறோம். இவருடைய தாயாராகிய ராகேலம்மாள் திருமங்கிலியமாகி அநேக ஆண்டுகளாக பிள்ளையற்றிருந்தாள். கடவுள் தன் கர்ப்பத்தில் புத்திரபாக்கியத்தைக் கட்டளையிடவேண்டுமென்பதே நிமிஷந்தோறும் அவளுடைய விண்ணப்பமாயிருந்தது. அவளுடைய விண்ணப்பத்தினாலேயல்ல, தேவன் தமது கிருபையினாலே வெகுகாலத்துக்குப்பின்பு இந்த சொப்பனமுனிவரைக் கொடுத்தார். முனிவருடைய தாயார் இயல்பாகவே மகா சௌந்தரியமுள்ளவளாயிருந்ததால் தன்னைப்பற்றி அதிக பெரிய எண்ணம் இருந்தது; அதோடு முறிந்த மஞ்சள் நிறமுள்ள அழகான முனிவரை மடியில்வைத்து பால் கொடுத்தது அவளுக்கு அதிக பெருமையை உண்டாக்கிற்று என்று சொல்லலாம்; வீட்டுக்கெல்லாம் இவர் செல்லப்பிள்ளையாய் இருந்தார். தகப்பனும் தாயும் இவரை மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமாய் நேசித்தார்கள்.

முனிவர் பேசப்படித்ததுமுதல் பெற்றோரின் அன்பு முன்னிலும் அதிகமாய் அவர்பேரில் பாராட்டப்பட்டது. அவருடைய பிதா பகலெல்லாம் ஆடுமேய்க்கும்படி வெளியே போய்விட்டு அந்திநேரத்தில் வீட்டுக்கு வருவார்; உடனே முனிவர் ஓடிப்போய் அவர்மடியில் உட்கார்ந்துகொண்டு, பிதா வீட்டைவிட்டுப்போனதுமுதல் அதுவரையில் நடந்த சமாசாரங்களையெல்லாம் தன் மழலைச்சொல்லால் பிதற்றிச் சொல்லுவார்; ஆதலால் இவரைப்பற்றி வீட்டிலிருந்த எல்லாருக்கும் அச்சம்தான்.

அவர் அங்கும் இங்கும் திரிந்தலையக்கூடிய வயசானபோது முனிவர் தமது பிதாவுக்குப்பதிலாகப் பல வேலைகளையும் பார்வையிட்டு அதின் வரலாறுகளை வந்துசொல்லுவார். அவருடைய உடல் எவ்வளவு அழகும், சுத்தமுமாயிருந்ததோ அவ்வளவு அவருடைய உள்ளமும், மனமும் சுத்தமாய் இருந்தது. முனிவர் பிறந்த கொஞ்சகாலத்துக்குப்பின்பு வேறொரு தம்பியும் பிறந்தான். அவனுக்கு பென்யமீன் என்று பெயர். பென்யமீனைப் பெற்ற பேறுகாலத்தில் முனிவருடைய தாயார் பரலோகப்பிராப்தி அடைந்துவிட்டதால் இவர் தாயற்றபாலனாய் வளர்ந்தார்.

சொப்பனமுனிவர் தமது பிதாவின் முதிர்வயதிலே பிறந்தபடியினாலும், இவர் சிறுபிராயமாய் இருக்கும்போதே தாயார் இறந்துபோய்விட்டதாலும், இவர் மகா அழகுள்ளவராய் இருந்தபடியாலும், தந்தையின் மனதுக்கேற்ற நற்குணம் இவரிடத்தில் பொருந்தியிருந்தபடியாலும், அவர் தமது பிதாவால் அதிகமாய் நேசிக்கப்பட்டவராய் இருந்தார். இந்த நேசத்தை முனிவரின் பிதாவானவர் தமது மனதுக்குள் வைத்துக்கொள்ளாமல் வெளிக்கும் காட்டினார்; எப்படியெனில் இவருக்குமாத்திரம் பலவருண அங்கிகளைத் தைத்துக்கொடுத்துவந்தார். இப்படியெல்லாரிலும் இவர் அன்பாயும் மேன்மையாயும் நடத்தப்பட்டது மற்றப் பிள்ளைகளுக்கு எவ்வளவேனும் பொறுக்கவில்லை. பிதாவானவர் இவரைமாத்திரம் நேசித்துவந்தபடியால் மற்றவர்களெல்லாரும் ஒன்றாகச்சேர்ந்துகொண்டு இவருடன் பேசக்கூடாதென்று தீர்மானம்பண்ணிக்கொண்டார்கள். தாய் தகப்பன்மார் மக்களில் பட்சபாதம் பாராட்டக்கூடாது; பெற்றோரின் பட்சபாதம் பிள்ளைகளின் பொறாமைக்குக் காரணமாய் இருக்கிறது. மொத்தமாய்ச் சொன்னால் யாக்கோபுமுனிவருடைய வீடு இரண்டுபட்டுப்போயிற்று; தகப்பனும் முனிவரும் ஒருபட்சமாயும் மற்றவர்களெல்லாரும் மறுபட்சமாயும் இருந்தார்கள்; ஆதலால் "கோட்டைக்குள்ளே குத்தும் வெட்டும்" என்ற பழமொழிபோல் அவர்கள் குடும்பத்துக்குள்ளே குரோதமும் விரோதமும் இருந்தன. இந்தக் குரோதவிரோதங்களுக்கு நாம் சொப்பனமுனிவரைக் குற்றஞ்சாட்டக்கூடாது. அவருக்கு ஒரேநோக்கம் இருந்தது; அதாவது தமது பிதாவின் நேசத்தைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டியது என்பதுதான். இது நல்நோக்கம் என்பதை யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். ஒவ்வொரு மனுஷனும் தன் பரமபிதாவாகிய தேவனுடைய தயவைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்று ஆவல்கொண்டிருப்பது எவ்வளவு சிறந்தது!

சொப்பனமுனிவர் சுமார் பதினேழு பிராயமாயிருக்கும்போது தமது தமையன்மாரோடு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். மந்தைகளின் சமாசாரத்தையும் மக்களின் சமாசாரத்தையும், அறியும்படி யாக்கோபு இவரை அடிக்கடி கூப்பிடுவார்; இவர் பிதாவண்டைவந்து உண்மையுள்ள உக்கிராணக்காரனைப்போலச் சகல சங்கதிகளையும் அறிவிப்பார். யாக்கோபு முனிவர் தமது மக்களின் சன்மார்க்க நடக்கையையும் சம்பாஷணைகளையுங்குறித்து அதிக கவலையுள்ளவராயிருந்ததால் அதற்கடுத்த விபரங்களையும் சொப்பனமுனி



வரிடம் கேட்பார்; அவர் அண்ணன்மார் நடக்கைகளையும் பேச்சையும் மூடிவையாமல் எல்லாவற்றையும் தந்தையின் காதில் போடுவார். தந்தையானவர் தமது மக்களின் ஆத்தும வாழ்வை விரும்பினபடியால் அவரவரைக் கூப்பிட்டு அவரவர் தப்பிதங்களை உணர்த்திக் கண்டித்துவந்தார். முன்னிருந்த பகையோடு இவ்விஷயமானது கூடினதால் அவர்களெல்லாரும் முழுப்பகையாய்ப் பகைத்தார்கள். "யதார்த்தவாதி வெகுஜனவிரோதி" என்று ஒரு பழமொழியுண்டல்லவா? முனிவர் தமது சகோதரருடைய நடக்கையைப்பற்றிய சத்தியசெய்திகளைச் சொல்லி அவர்களுக்குச் சத்துருவானார். அவர்களெல்லாரும் முனிவரைப்பற்றி உள்ளுக்குள் வைத்துக்கொண்டிருந்த வர்மம் முனிவருக்குத் தெரியாது.

முனிவர் அவர்களைப்பற்றி ஒன்றும் நினையாமல் அவர்களோடு காட்டில் சஞ்சரித்து, மந்தைகளை மடக்கிப் படுத்துக்கொண்டிருந்த ஒருநாள் இரவு தூக்கங்கலைந்து அண்ணன்மாரைக் கூப்பிட்டு, அண்ணன்மாரே! நான்கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள்: நாம் எல்லாரும் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம், அச்சமயத்தில் என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கிநின்றது. இப்படிக் கனாக்கண்டு திடுக்கென்று விழித்தேன் என்றார். இதற்குமுன் சொப்பனமுனிவர் ஒருநாளும் சொப்பனங் கண்டதில்லை போலிருக்கிறது; இது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. தேவன் தமது சித்தத்தை முனிவருக்கு வெளிப்படுத்தச் சித்தமானார் என்னும் உயர்ந்த எண்ணம் பதினேழு பிராயத்து வாலிபனுக்கு இயல்பாய் உண்டாகமாட்டாதே. அல்லது அவர்கள் எல்லாரும் ஏகமாய்க்கூடி அரிக்கட்டுகளைக் கட்டினதை அவர் ஒரு விசேஷமாய் எண்ணி,தங்களுடைய குடும்பத்துக்கெல்லாம் நல்லவிளைச்சல் உண்டாகிறதென்பதை உணர்ந்து, அதை உடனே வெளியிட்டுச் சொல்லியிருக்கலாம். அவர் தமது சொப்பனத்தின் பின்பாகமாகிய கட்டுகளின் வணக்கத்தை, தமதுமேல் தமது அண்ணன்தம்பிமார் பாராட்டுகிறதாக தாம் எண்ணிக்கொண்ட அன்புக்கு சாட்டிக்கொண்டிருக்கலாம். அதன் நிச்சயமான தாற்பரியத்தை இவர் அறிந்தது மெய்யானால் அதை அவர்களுக்குச் சொல்லியிருக்கமாட்டார். அவர்கள் எல்லாரும் அவருக்கு மூத்தவர்களும் அநேக சொப்பனங்களின் நிறைவேறுதலைப்பற்றிக் கேள்விப்பட்டவர்களுமாயிருந்தபடியால் இதைக் கேட்டவுடனே அதின் கருத்தை அறிந்துகொண்டார்கள். அவர்

கள் காடுதங்கி ஆடுமேய்த்தாலும் இதை கிரகித்துக்கொள்ள இயலாதவர்களாயிருக்கவில்லை. அச்சொப்பனத்தைக் கேட்ட சகோதரர் முனிவரைப்பார்த்து, நீ எங்கள்மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவர்கண்ட சொப்பனத்தினிமித்தம் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். இந்தச் சொப்பனம் அணைந்தநெருப்புக்கு அனல் மூட்டினதுபோல் இருந்தது.

முனிவர் வேறொரு சொப்பனங்கண்டு தமது சகோதரருக்கும் தகப்பனுக்கும் அறிவித்தார். "சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் தம்மைவந்து வணங்கினதுபோலிருந்தது." முன் அவர்கண்ட சொப்பனத்திலும் இது முக்கியமானதாயிருந்தது. அவருடைய பிதா இதைக்கேட்டவுடனே இதின் கருத்தை அறிந்துகொண்டு முனிவரைச் சற்று கண்டிக்கிற பாவனையாக "நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்குவோமோ?" என்று சொன்னார். இந்தச் சொப்பனம் அவர் சகோதரருக்கு வெடிமருந்தில் நெருப்புப்பொறி விழுந்தாற்போலிருந்தது. தகப்பனோ முனிவர் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டார். இச்சமயத்தில் முனிவர் சற்று விவேகத்தாழ்ச்சியாய் நடந்துகொண்டாரென்றாவது, தமது பிற்கால பிரபலத்தையிட்டுப் பெருமைகொண்டிருந்தார் என்றாவது சொல்லக்கூடாது. அவர் ஒன்றையுங்குறித்து சூது நினையாமல் வாலிபபுத்தியால் தாம் கண்ட சொப்பனத்தை தமது பந்துக்களுக்குத் தெரியப்படுத்தினாரேயன்றி வேறல்ல. தேவன் பழையகாலங்களில் தமது சித்தத்தை சிலவேளை சொப்பனங்கள்மூலமாய் தெரியப்படுத்திவந்தார். இப்பொழுது அவர் மனுப்புத்திரர்களுக்கு வெளிப்படுத்த வேண்டியவைகளையெல்லாம் தமது குமாரன் மூலமாயும், தமது ஆவியின் மூலமாயும் வேதாகமத்தில் பூரணமாய் வெளிப்படுத்தியிருக்கிறதால், அப்படி முன்போல் சொப்பனத்தின் மூலமாய்த் தெரியப்படுத்த அவசியமில்லை. இதுமுதல் முனிவருடைய அண்ணன்மார் அவருடைய பேரைமாற்றி "சொப்பனக்காரன்" என்னும் வசைப்பேரை அவருக்கு வழங்கிவந்தார்கள். தேவன் அவர்கள் எல்லாருடைய பொறாமையின் வழியாகவே சொப்பனமுனிவரை உயர்த்தவும் அக்குடும்பம் முழுவதுக்குமாத்திரமல்ல, ஒரு பெரிய ராஜ்யத்துக்கும் அவரை அதிகாரியும் தகப்பனுமாக்கவும் சித்தங்கொண்டார். தேவனுடைய வழிகள் கடல்களிலும் வலுதண்ணீர்களுக்கூடேயும் இருக்கிறது.



சொப்பன முனிவருடைய தந்தைக்குத் திரண்ட ஆடுமாடுகள் இருந்தன; அவைகள் எல்லாத்துக்கும் போதுமான மேய்ச்சல் கிட்டுவது வருத்தமாகவே இருந்தது. சிலவேளை முனிவரின் சகோதரர் பச்சை எங்கேயுண்டு, பசுமை எங்கே அகப்படும் என்றுபார்த்து, தொலைதூரம்போய் வெகுநாள் பொறுத்து வீட்டுக்கு வருவார்கள். அவர்கள் அப்படி தொலைதூரம் போயிருந்த ஒருகாலத்தில் பிதா தமது வீட்டிலிருந்த செல்லமகனாகிய சொப்பனமுனிவரைக் கூப்பிட்டு, அப்பா! அண்ணன்மார் அநேக நாட்களாக வரக்காணோம், அவர்களுடைய க்ஷேமம் எப்படியென்றும், ஆடுகளின் க்ஷேமம் எப்படியென்றும் போய்ப் பார்த்து மறுசெய்தி கொண்டுவா மகனே என்று சொன்னார். உடனே முனிவர் காலதாமதம் செய்யாமல் பயணத்துக்குரிய ஆயத்தங்களையெல்லாம் செய்துகொண்டு தகப்பனை மினவிக் கொண்டு புறப்பட்டார். அவர் வழிதப்பிக் காடுமேடுகளில் அலைந்துதிரிகையில் ஒரு வழிப்போக்கன் அவரைக்கண்டு என்ன சமாசாரமென்று விசாரிக்க, முனிவர் சொல்லுவார்: என் சகோதரரைத் தேடுகிறேன்; அவர்கள் எங்கே ஆடுமேய்க்கிறார்கள் என்று தெரியவில்லை என்றார். அந்த மனிதன் உடனே முனிவரை தைரியப்படுத்தி, தான் அவர்களைக் கண்டதாகவும், தோத்தான் என்னும் ஒரு இடத்திற்குக் கிடைபெயர்ந்து போகவேண்டுமென்று அவர்கள் பேசிக்கொண்டிருந்ததாகவும் சொன்னான். உடனே முனிவர் தோத்தானைநோக்கிப் போனார். ஐயோ! தோத்தானில் சம்பவிக்கப்போகிற சங்கதி அவருக்குத் தெரிந்திருந்தால் அவ்விடத்திற்குப் போகார். அதுதான் தமது பிதாவின் சமுகத்தையும் வீட்டையும்விட்டுப் பிரிந்து போகவேண்டிய வேளை என்று முனிவருக்கு எவ்வளவேனும் தெரியாதிருந்தது. யாக்கோபு நினைத்தகாரியம் வேறே, யாக்கோபின் தேவன் நினைத்தகாரியம் வேறே.

முனிவர் தூரத்தில் போகும்போதே தமது மந்தைகளை அடையாளம் அறிந்துகொண்டார்; இவருடைய சகோதரரும் அவரை இன்னாரென்று தூரத்தில் வரும்போதே கண்டுகொண்டார்கள். முனிவர் அவர்களைக் கண்டவுடனே அவர் மனம் களித்தது, ஆனால் சகோதரர் அவரைக் கண்டவுடனே அவர்கள் மனம் கொதித்தது. முனிவர் அண்ணன்மாரைக் கட்டி முத்தமிட ஆவலாய் ஓடுகிறார், அண்ணன்மாரோ முனிவரை அன்றோடு தொலைத்துவிட ஆலோசனைபண்ணுகிறார்கள். முனிவர் தூரத்திலே வருகிறதைக் கண்ட அந்த கல்நெஞ்சர் ஒருவரையொருவர் கூப்பிட்டு, "இதோ சொப்பனக்காரன் வருகிறான்,

நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்றுசொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம்" என்று சொன்னார்கள். முனிவர் வந்தவுடனே சகோதரர் அவரை முரட்டுத்தனமாய்ப் பிடித்திழுத்துக் கொல்லப்போனார்கள். அவர்களில் மூத்தவனாகிய ரூபன் என்பவன் மற்றவர்களைப்போல் யோசேப்பைப் பகைக்கவில்லை. அவன் தன் சகோதரரைப்பார்த்து: அப்பா அவனைக் கொல்ல வேண்டாம்;எங்கேயாவது ஒருகுழியில் போட்டுவிடுங்களென, சரி சரி என்று எல்லாரும் ஒத்துக்கொண்டு அவருடைய பஞ்சவர்ண சட்டையைக் கழற்றினார்கள்.

தன் அண்ணன்மார் தனக்குச் செய்யப்போகிற தீமையை முனிவர் அறிந்து தன்னைத் தகப்பனிடத்தில் அனுப்பிவிடும்படியாக மாலைமாலையாய்க் கண்ணீர்விட்டழுது கெஞ்சினார். அதெல்லாம் பலிக்கவில்லை. அவரைக் கட்டாயமாய் இழுத்து தொப்பென்று ஒருகுழியில் போட்டார்கள். செந்தாமரை போலிருந்த முனிவரின் சிவந்தமுகம் பசியினாலும் தாகத்தினாலும் சோர்ந்துபோயிற்று. அந்தப் பரமசண்டாளர் முனிவர் புலம்பி அழுததையும், விம்மியழுததையும் கேளாதவர்கள்போல் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்களெல்லாரும் சிரித்துச் சிரித்துச் சாப்பிடும்போது முனிவர் ஓர் பாழ்ங்கிணற்றுக்குள்ளிருந்து தமது கண்ணீரையே பானமாக அருந்திக்கொண்டிருந்தார்; இப்பொழுது நாம் முனிவரோடு அந்தக் குழிக்குள் இறங்கி அவரை ஆறுதல்செய்வோமாக. சொப்பனமுனிவரே! தேம்பி அழ வேண்டாம், தேவன் உமது மேன்மைக்கு இதையே வழியாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்; உமது அண்ணன்மார் எல்லாரும் அகமகிழ்ந்து சிரிக்கிறார்கள்; நீர் புலம்பும்படி ஆண்டவர் திட்டஞ்செய்தார்; ஆனாலும் இப்பொழுது அழுகிற நீர் இனிமேல் நகைப்பீர். நீர் பூமியின் தாழ்விடங்களிலிருந்து கூப்பிடுகிறீர்; உமது கூக்குரல் உமக்குச் சொப்பனத்தை அருளிச்செய்தவருடைய திருச்செவிகளில் ஏறிற்று; அவர் உம்மைத் தற்காக்கும்படி எகிப்துதேசத்திலிருந்து ஆட்களை அனுப்பியிருக்கிறார்.

அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது தூரத்தில் சில மனுஷர் வரக் கண்டார்கள். அவர்களெல்லாரும் வியாபாரிகள்; சில வாசனைச்சரக்குகளை ஒட்டகங்களின்மேல் ஏற்றிக்கொண்டு எகிப்து என்னும் ஒரு தேசத்துக்குப் போகிறவர்கள். அப்பொழுது அவர் அண்ணன்மாரில் ஒருவனாகிய யூதா என்பவன் மற்றவர்களைப்பார்த்து: நம்முடைய தம்பியைக் கொன்று



போடுகிறதினால் லாபம் என்ன? அவனை இந்த வியாபாரிகளுக்கு விற்றுப்போடுவோமே என்று சொன்னான். இதே நல்ல யோசனை என்று எல்லாரும் ஒத்துக்கொண்டு முனிவரைக் குழியிலிருந்து எடுத்து, இருபதுரூபாய்க்கு விற்றார்கள்.* அவர் தன் அண்ணன்மாரைக் கெஞ்சி, நின்று கும்பிட்டார், விழுந்து கும்பிட்டார், காலைப்பிடித்தார், கையைப்பிடித்தார், நாடியைத் தாங்கினார், நயந்துகேட்டார்; அதெல்லாம் பலிக்கவில்லை. "செவிடன் காதில் சங்கூதினதுபோலவே" இருந்தது. அவர் போக மாட்டேனென்று அழுதார். பணங்கொடுத்தவர்கள் சும்மாய்விடுவார்களா? அவரைக் கையோடு கொண்டுபோய்விட்டார்கள். இம்மட்டும் நடந்தசம்பவங்களில் தேவநடத்துதலிருந்ததென்று முனிவரும் எண்ணவில்லை, அவருடைய சகோதரரும் நினைக்கவில்லை. முனிவரை விற்றதோடு நமது சனியன் தொலைந்தது என்று சகோதரர் நினைத்தார்கள். இனி நமது செய்திகள் கிழவன் காதில் போகவுமாட்டாது, கிழவன் நம்மைக் கண்டபடிபேசி எச்சரிக்கவும் இடமிராது, நமது மனம் போனபடியெல்லாம் செய்யலாம் என்றெண்ணி ஆனந்தங்கொண்டார்கள். துன்மார்க்கரும் தேவனை மறக்கிற விரோதிகளும் தங்களுக்கு எதிரிகளாய் நின்று வாதாடி தங்கள் வழிகளைத் தடுக்கிற உத்தமர் தொலைந்து போகும்படி பிரயத்தனப்படுகிறார்கள். ரூபன் முனிவரைத் தன் துஷ்டசகோதரரின் பட்டயத்துக்குத் தப்புவித்தான்; யூதா அவர் பசியினாலே வதங்கி குழியிலே சகாதபடிக்கு மீட்டான். ஆனால் தேவனே அவரை மேன்மைப்படுத்தி சகோதரர் எல்லாரும் முனிவரைவந்து வணங்கும் மேலான ஸ்தானத்தில் சேர்க்கும்படி தமது வழியை ஆயத்தஞ்செய்தார்.

மூத்தவனாகிய ரூபன் ஏன் குழியில் போடச்சொன்னான் என்றால், தான் ஒருவரும் அறியாமல் திரும்பவந்து அவரைத் தூக்கி ரட்சிக்கலாமென்று எண்ணினதினாலேதான். அவன் இல்லாத சமயத்தில் முனிவரை விற்றுப்போட்டார்கள். ரூபன் திரும்பவந்து குழியைப் பார்த்தபோது அவரைக் காணவில்லை; அவன் மிகுந்த துக்கப்பட்டுத் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான். பின்பு தன் சகோதரரிடத்தில் வந்து தம்பியைக் காணோமே, ஐயோ! நான் எங்கே போவேன் என்று அழுதான். ஆனால் மற்றவர்கள் அவரைச் சட்டைபண்ணவில்லை.

* வல்கெட் என்னும் இலத்தீன் திருப்புதலிலும், காத்தின் பிரபந்தம் என்னும் ஆகமத்திலும் யோசேப்பை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

வர்த்தகர் முனிவரைக் கொண்டுபோனபின்பு அவர்களெல்லாருங்கூடி, முனிவர் எங்கே என்று தகப்பனார் கேட்டால் நாம் என்னசொல்லலாமென்று யோசித்து, ஒரு ஆட்டை அறுத்து அதின் இரத்தத்தில் அவர் சட்டையைத் தோய்த்து, பின்பு அந்தத் துணியைத் தகப்பனிடத்தில் கொண்டுபோய், இதை நாங்கள் காட்டில் கண்டெடுத்தோம், இது உமது மகன் சட்டையோ அல்லவோ என்று பாரும் என்றார்கள். யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவரைப் பட்சித்துப்போட்டது என்று புலம்பினான். அவன் அநேக நாளாக முனிவருக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான். அவன் மக்கள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொன்னார்கள். அவன் மனம் ஆறாமல், "நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன்" என்று சொன்னான். இந்தப் பொல்லாத மக்கள் விருத்தாப்பியமுள்ள தங்கள் தகப்பனை ஏமாற்றிப்போட்டார்கள். ஆயினும் தேவனை ஏமாற்ற இயலுமா? அவர்கள் பாவஞ்செய்ததை அவர் கண்டார்; அந்தப் பாவத்தை மூட அவர்கள் சொன்ன பொய்களையெல்லாம் கேட்டார். தேவனுக்குமுன்பாக மறைவானது ஒன்றுமில்லை.

வர்த்தகர் முனிவரை தயவாய் நடத்தியிருப்பார்களென்பதற்குச் சந்தேகம் இல்லை. முனிவரின் அழகிய மேனியும் அவருடைய அநுதாபக் குரலும் அவர்கள் மனதை இளகச்செய்திருக்கவேண்டியது. அவர்கள் அவரைத் தங்களோடு ஒட்டகத்தின்மேல் எற்றிக்கொண்டு முனிவர் மனதைத் தேற்றிக்கொள்ளும்படி பல சங்கதிகளையும் எடுத்துப்பேசியிருக்கலாம்; முனிவர் அவர்களுக்குத் தமது சகோதரரின் வரலாறுகளையெல்லாம் சொல்லியிருக்கலாம். வர்த்தகர் முனிவரை விலைக்குவாங்கின சமயத்தில் தாங்கள் கீலேயாத்தில் சம்பாதித்த கந்தவர்க்கம், பிசின், வெள்ளைப்போளம் ஆகிய சம்பாரங்களிலும் விலை உயர்ந்த பொக்கிஷம் தங்கள் வசமிருக்கிறதென்பதை அறியாதிருந்தார்கள். அந்த வர்த்தகர் தங்கள் தேசத்துக்குப் பிற்காலத்துக்கு அதிகாரியாகவேண்டியவரை இருபதுரூபாய்க்கு விலைக்குவாங்கிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்லவேண்டியது.

அக்காலத்தில் பிரபலம்பெற்று அரசாட்சிசெலுத்தி, அநேக தேசங்களைத் தன் ஆக்கினைசக்கரத்துக்குள் அடக்கிக்கொண்டிருந்த எகிப்து முழுவதற்கும் தாம் அதிகாரியாகவேண்டுமென்று விரும்பி, திரண்ட படையோடும் போர்வீரரோடும் அத்தேசத்திற்குப் படையெடுத்துப்போயிருந்தால் எத்தனை பெரிய



யுத்தமும், குழப்பமும், கொலையும், பிராண நஷ்டமும் உண்டாகியிருக்கலாம். ஆண்டவரோ அந்த வழியாக அல்ல, அடிமையின் வழியாக முனிவரை அதிகாரியாக்கச் சித்தங்கொண்டார். இதின் விபரங்கள் பின்னால் தெளிவாய் விளங்கும். முனிவரை வாங்கின வர்த்தகர் அவராலே நல்ல லாபம் சம்பாதித்தார்கள். எப்படியெனில் எகிப்திலே போத்திபார் என்ற ஒரு பிரபு இருந்தான். அவன் இராஜாவின் பிரதானியும், அவனுடைய தலையாரிகளுக்கெல்லாம் அதிபதியுமாயிருந்தான். ஒரு அழகிய வாலிபன் அடிமையாக விற்கப்படக் கொண்டுவரப்பட்டிருக்கிறான் என்ற சத்தம் ஊரில் எழும்பியிருக்கலாம்; அல்லது அந்த வியாபாரிகளே இந்த அழகுள்ள வாலிபனை அதிபதியிடம் கொண்டுபோனால் அவர் நாம் சொன்ன விலையைக் குறைக்காமல் கொடுப்பார் என்றெண்ணி தாங்களே கொண்டுபோயிருக்கலாம். எப்படியும் அந்த அதிபதி முனிவரை வாங்கிக்கொண்டான். ஆனால் எவ்வளவு தொகை கொடுத்தான் என்று தெரிகிறதில்லை. "அரையளவு பிள்ளை வளர்க்க ஆயிரம் பொன்" என்று ஒரு பழமொழியுண்டு. பதினேழுவயது அழகுமணி முனிவரை வாங்க இடைக்கிடை பொன்னைக் கொடுத்தாலும் தகுமல்லவா?

## சிறைச்சாலைப் பருவம்.

இம்மட்டும் வீட்டுக்கெல்லாம் செல்லப்பிள்ளையாய் வளர்ந்து பலவருண அங்கிகளைப் போட்டு பவுசாகத் திரிந்தலைந்த முனிவர் அடிமையாகி, வேலைக்காரரோடு தங்கி, அவர்களுடைய உடுப்புகளை உடுத்திக்கொண்டு தமக்குக் குறிக்கப்பட்ட அன்றாடக ஊழியங்களை நிறைவேற்றிவந்தார். இக்காலத்தில் முனிவர் தமது பிற்கால வாழ்வைப்பற்றி முன்கண்ட சொப்பனங்களையெல்லாம் மறந்து போத்திபாரே நமது தகப்பன், அவர் மனைவியே நமது தாய், நமது வேலையே நமது போஜனம், நமது எஜமானனையும் எஜமாட்டியையும் பிரியப்படுத்தி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே நமது சுயாதீனம் என்று எண்ணிவந்தார். அக்காலத்தில் அவர் இட்டவேலையைத் தட்டாமல் செய்தார், செய்த வேலைகளைத் திருத்தமாகச் செய்தார். அக்காலத்து அடிமைகள் செய்கிறதுபோல தமது எஜமானுடைய ரதத்துக்கு முன் ஒடி, ஆள் விலக்கி அநேக நாட்களைக் கழித்திருப்பார். எஜமானுடைய கோபத்துக்கு எவ்வளவேனும் இடம்வைத்துக்கொள்ளவே இல்லை; அவர்

கள் காலாவிட்ட வேலையை இவர் கையால் செய்வார். இவ
ரிடத்தில் காணப்பட்ட உண்மையை எவரும் கண்டு ஆச்சரி
யப்பட்டார்கள். இந்த நிலைமைக்கும் வேலைக்குமென்றே
அவர் பிறந்தாரென்று ஊரும், உலகமும் சொல்லத்தக்கதாக
அவ்வளவு சீராய் தமது ஊழியங்களை நிறைவேற்றிவந்தார்.
இவர் போத்திபார் வீட்டுக்குப் போன காலமுதல் அவன்
வீடு ஆசீர்வதிக்கப்பட்டது. கர்த்தர் முனிவரோடு இருக்கிறா
ரென்றும், முனிவர் கைதொட்டுச் செய்யும் எந்த வேலையை
யும் அவர் ஆசீர்வதித்து வருகிறாரென்றும் எஜமான் சீக்கிரத்
துக்குள்ளாக அறிந்துகொண்டு முனிவர்மேல் தயைவைத்து,
அவரைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசார
ணைக்காரனுமாக்கி, தனக்குண்டான யாவற்றையும் அவருக்கு
ஒப்புவித்தான். ஆகவே இம்மட்டும் அடிமைகளோடு கூட
வாசம்பண்ணி அடிமைக்குரிய தாழ்ந்த வேலைகளைச் செய்தவர்,
அந்த அதிபதியின் வீட்டிலே வசித்து வீட்டுவேலைக்காரரு
டைய அந்தஸ்துக்குரியவரானார். இவ்வண்ணம் முனிவரின்
நிலைமையைப் போத்திபார் உயர்த்தினதினிமித்தம் கர்த்தர்
அவன் வீட்டை ஆசீர்வதித்தார். தம்முடைய தாசர்பேரில்
அன்பு பாராட்டி அவர்களுக்கு தயைபாராட்டுகிறவர்களைத்
தேவன் ஆசீர்வதிக்கிறார். வீட்டிலும் வெளியிலும் அவனுக்
குண்டான எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதமிருந்தது.
ஆகையால் அவன் தனக்குண்டானதெல்லாம் முனிவர் கை
யிலே ஒப்புக்கொடுத்துவிட்டு தான் புசிக்கிற போசனந்தவிர
தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக்குறித்தும் விசாரியாதிருந்
தான்.

இப்படியிருக்குங் காலத்தில் எவரும் நடுங்கத்தக்க ஒரு விசே
ஷம் அந்த வீட்டில் நடந்தது. முனிவர் சிவந்த மேனியும்,
செந்தாமரைப் புஷ்பம்போன்ற கன்னங்களும், தேய்பிறை
போன்ற நெற்றியுமுள்ள அழகுள்ளவர். அவருடைய எஜமாட்டி
மகா பொல்லாதவளாயிருந்ததால், முனிவருக்கு ஆசைவார்த்
தை சொல்லி அவரைப் பாவத்திற்கு உடன்படுத்திக்கொள்ளப்
பிரயாசப்பட்டாள். அது அவர் இணங்கத்தக்க பலத்த சோத
னையாயிருந்தது. அவர் மாத்திரம் சம்மதித்தால் எஜமாட்டி
அவர்பேரில் மெத்தப் பிரியம் வைப்பாள். சம்மதியாவிட்
டால் என்ன பண்ணுவாளோ என்று பயப்படவுஞ்செய்தார்.
ஆனாலும் முனிவர் ஆச்சரியமாய் அந்த சோதனையை மேற்கொ
ண்டார். அவர் அவளைப் பார்த்து: "நான் இத்தனை பெரிய
பொல்லாப்புக்கு உடன்பட்டுத் தேவனுக்கு விரோதமாய்ப்



பாவம் செய்வதெப்படி" என்றார். தன்னை அன்பாய் நடத்
தின எஜமானனுக்கு அவதூறுண்டாக்க விரும்பவில்லை; விசே
ஷமாய் உன்னத வானத்தில் வல்லமையோடு வீற்றிருக்கும்
தேவனைப் பிரியவீனப்படுத்தவும் விரும்பவில்லை. நீங்கள்
பாவஞ்செய்ய மனம் வருகிறபோது முனிவர் சொன்ன அந்த
நல்ல வார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள். நாம் மனுஷ
ருக்குப்பயப்படாமல் தேவனுக்கே பயப்படவேண்டும். போத்
திபாரின் மனைவி தினம் தினம் முனிவரைத் தன் துர்நினைவு
க்கு இணங்கும்படி தொந்தரவு செய்துகொண்டேவருவாள்.
அவரோ, அவளுடைய சொல்லுக்கு இணங்காமல் அவளைப்
பார்த்து: தாயே! என்மேல் இச்சைவேண்டாம், இதோ எஜ
மான் வீட்டிலுள்ள எல்லாவற்றையும் ஒப்புவித்திருக்கிறாரே,
உம்மைத் தவிர வேறொன்றையும் விலக்கவில்லையே, நான்
உன் பேச்சைக் கேட்டு இத்தனை பெரிய பொல்லாப்புக்குடன்
பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வதெப்படி
என்று கனிவோடு கண்டித்தார். காமப்பேயால் பிடிபட்டி
ருந்த அந்த மனுஷிக்கு அவ்வார்த்தைகள் ஒன்றும் உணர்வைக்
கொடுக்கவில்லை. இப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள் வீட்
டில் முனிவரைத்தவிர வேறொருவரும் இல்லாதபொழுது,
போத்திபாருடைய மனைவி அவருடைய துணியைப் பிடித்
திழுத்து பாவஞ்செய்யக் கூப்பிட்டாள்; உடனே அவர் துணி
யை விட்டுவிட்டு ஓட்டம்பிடித்தார். முன்னொருதரம் அண்
ணன்மார் பொறாமை முனிவரின் வஸ்திரத்தை உரிந்தது,
இப்பொழுது இந்த பொல்லாத ஸ்திரீயின் இச்சை அவர் வஸ்தி
ரத்தை உரிந்துவிட்டது. அவர் வஸ்திரம் போனாலும் போகட்
டும், என் கற்பை விடேன் என்று ஓடிவிட்டார். "வாலிப இச்
சைகளுக்கு விலகி ஓடு." போத்திபாரின் மனைவி அங்கிமிஷ
மே பெருங்கூச்சலிட்டு, வேலைக்காரரைக் கூவிக்கூப்பிட்டு
சங்கதிகளையெல்லாம் சொல்லி, தன் புருஷன் வந்தவுடன்
தான் மகா பதிவிரதைபோல் பாசாங்குபண்ணி, எண்ணத்தொ
லையாத பொய்யையும் பித்தலாட்டத்தையும் சொல்லி அழுது,
சில கள்ளச் சாட்சிகளைக்கொண்டு அவரைக் குற்றஞ்சாட்டி
அவர் துணியையும் அடையாளமாகக் காட்டினாள். "ஒருதலை
வழக்கு நூலிலும் செவ்வை" என்கிற பழமொழிப்படி போத்
திபார் தன் மனைவி சொன்னதெல்லாம் யதார்த்தம் என்று
ஒப்புக்கொண்டு, ஆய்ந்தோய்ந்துபாராமல் முனிவரின்மேல் உக்
கிரகோபங்கொண்டு அவரை உண்டசோற்றுக்கு இரண்டகம்
பண்ணின மகா நன்றிகெட்ட துரோகியென்றெண்ணி, அவ

ளைப் பிடித்துச் சிறையில்போட்டு விலங்கிட உத்தரவுபண்ணினான். சொப்பனமுனிவர் நடந்த வரலாறுகளை வெளியிட்டிருக்கமாட்டார் என்று தோன்றுகிறது. தமக்கு என்ன சம்பவித்தாலும் சம்பவிக்கட்டும், மற்றவர்களை அவதூறு செய்யக் கூடாதென்று சும்மாயிருந்துவிட்டார். நல்லோர் மற்றோரை அவதூறு படுத்துவதிலும் தாங்கள் துன்பங்களைச் சகித்துக் கொள்ள பிரியப்படுகிறார்கள். முனிவர் சேவித்துவந்த எஜமானன் எகிப்தின் உயர்ந்த உத்தியோகஸ்தனாய் இருந்தான். அவனுக்கு ராஜ அரமனைக்குரிய யாதொரு அலுவல் இல்லாதிருந்தாலும், தற்கால போலீஸ் அதிகாரிகளைப்போல் குற்றவாளிகளைத் தண்டிக்கவும் சிறையில் போடவுமான அதிகாரம் இருந்தது என்று தெரியவருகிறது. இச்சமயத்தில் அவன் யாதொரு விசாரணையும் செய்யவில்லையென்று தோன்றுகிறது. ஐயோ! காதாரக் கேட்டவிஷயங்களில் எத்தனையோ பொய் இருக்கிறது. தீரவிசாரித்தறிந்து தண்டிக்கும் துரைத்தனத்தை அல்லவா எல்லாரும் வாழ்த்துகிறதுண்டு. ஒருவேளை தன் மனைவியின் பேச்சை முற்றிலும் நம்பிக்கொண்டதினாலே அப்படிச் செய்திருக்கலாம்; அல்லவென்று இதை வெளியரங்க விசாரணைக்குக் கொண்டுவந்தால் தன் வீட்டுக்கும், அந்தஸ்துக்கும் கனவீனம் என்று எண்ணி அப்படிச் செய்திருக்கலாம். என்றாலும் அக்காலத்துச் சட்டம் முனிவரைத் தன்னிஷ்டப்படி கொலைசெய்யும்படியான அதிகாரத்தைக் கொடுக்கவில்லை.

இம்மட்டும் முனிவர் வீட்டுவாழ்வையும், காட்டுவாழ்வையும், குழிவாழ்வையும், அடிமைவாழ்வையும் அநுபவித்தார். இப்பொழுது அவர் சிறைச்சாலைவாழ்வை அநுபோகம் செய்யவேண்டுமென்று கடவுள் சித்தமானார். முனிவர் இருந்த சிறைச்சாலையானது சாதாரணமான ஒரு காவல் கூடமாயிருக்கவில்லை; பெரிய குற்றவாளிகளும் விசேஷமாய் இராஜதுரோகிகளும் வைக்கப்பட்ட கட்டடமாயிருந்தது; அதைச் சுற்றிலும் கோட்டை கட்டப்பட்டு கடுங்காவலுக்குள் இருந்தது. முனிவருடைய எஜமானே அச்சிறைச்சாலைக்கு அதிகாரியாயும் இருந்தான். அவன் கையின்கீழ் ஒரு தலைவன் இருந்தான். போத்திபார் இட்டதே சட்டமாயும் அவன் சொன்னதே தீர்ப்பாயும் இருந்தது. காவல்கூடத்திலும் முனிவர் அதிக தயவாய் நடத்தப்பட்டார். முனிவர்மேல் போத்திபார் கொண்டிருந்த மேலான உள்ளன்பு அவரை இவ்வளவு பக்ஷமாய் நடத்தும்படி ஏவியிருக்கலாம்; அல்லது தன் மனைவியின் வரலாறுகள் யதார்த்தமோ அல்லவோ என்பதை ஆர



அமர ஆராய்ந்துபார்க்க நோக்கமாய் அப்படி பட்சமாய் நடத்தியிருக்கலாம். "முதுகில் புண் இல்லாவிட்டால் குனிய பயமேன்?" என்னும் பழமொழிபோல கற்பில் கறைபடாத முனிவர் காவலில் இருந்தாலும் தமது மனச் சந்தோஷத்தை விடவில்லை. தேவன் அவரோடுகூட இருந்தபடியால் எந்த நிலைமையிலிருந்தாலும் மனச் சந்தோஷமாய் இருக்க அறிந்துகொண்டார். இவ்விடத்தில் முனிவர் அநுபவித்த ஆத்தும சுகத்தை வேறெந்த இடத்திலும் அவர் தமது ஆயுள்காலத்தில் இதற்குமுன் அநுபவித்தவரல்ல. இவ்விடத்தில் தகப்பனார் வீட்டில் கிடைத்த பலவருணமும் நீளமுமான அங்கிகள் கிடையாமல்போனாலும் தம்மைக் கிலாயத்துக்குக் கொண்ட எஜமானாகிய போத்திபாரின் கையால் கைதிகள் கட்டும் முண்டை அவர் சந்தோஷமாய்க் கட்டிக்கொண்டார்; தமது கால்களிலும் கரத்திலும் போடப்பட்ட இரும்புவிலங்குகளை தம்மைப் பெற்ற தகப்பன் கையால்போட்ட தங்கக் காப்புகளைப்போலும், கால் சலங்கைகள்போலவும் மதித்துவந்தார். இவ்விடத்தில் அண்ணன்மாரின் விரோதமும், தன்னுடன் போத்திபார் வீட்டில் அடிமைகளாய் இருந்தவர்களின் பொறாமையும் விசேஷமாய் தன் எஜமாட்டியின் காமபாணங்களும் வந்தெட்டமாட்டாதென்று அறிந்து அகமகிழ்ந்தார். அவருக்குப் போத்திபாரின் வீடு நரகம்போலும், இந்தச் சிறைச்சாலையானது மோட்சம்போலும் இருந்தது. காவலில்போட உத்தரவானவுடனே அவர் தம்மை இப்படி பாவவலையிலிருந்து பாதுகாத்த பக்தவச்சலரைத் துதித்து, நான் வேடனுடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போலிருக்கிறேன்; கண்ணி தெரித்தது, நான் தப்பினேன் என்று அகமகிழ்ந்து கூறியிருக்கலாம். பக்தர் பாவத்தின் வழிகளிலிருந்து தப்புவதை சிங்கத்தின் வாயிலிருந்து தப்புவதிலும் உயர்வாய் மதிப்பார்கள். ஒருவேளை போத்திபார் தன் மனைவியின் பேச்சை முற்றிலும் நம்பாமலே இருக்கலாம்; இதற்குமுன் அவள் தன் நடக்கையில் சீராய் இருந்திருக்கமாட்டாள். அக்காலத்து எகிப்திய சீமாட்டிகள் தங்கள் ஒழுக்கத்தில் பெரும்பாலும் தாழ்ந்தவர்களாகவே இருந்தார்கள். அவர்களுடைய விவாக காலத்தில் ஒவ்வொரு புருஷனும் தன் மனையின் வார்த்தைக்குக் கீழ் அடங்கி நடப்பேன் என்று பிரமாணம்செய்வதும் வழக்கமாய் இருந்தது. இப்படிப்பட்ட பெண்ணரசு நாட்டில் முனிவருக்கு நாம் முன் சொன்ன சோதனைகள் உண்டாகிறது ஆச்சரியமல்ல.

முனிவர் சிறைச்சாலையில் இருக்கையில் சிறைச்சாலைக்காரனுடைய தயவு அவருக்கு ஒரு பலமாயிருந்ததோடு அங்கிருந்த கைதிகள் எல்லாரும் அவரை அதிகமாய் நேசித்தார்கள். போத்திபார் வீட்டதிகாரம் பார்த்தவருக்கு சிறைச்சாலையிலும் ஒரு ஆதிக்கம் கிடைக்கும்படி தேவன் சித்தங்கொண்டார். சிறைச்சாலைத் தலைவனே அச்சிறையிலிருந்த யாவரையும் அவர் கையிலே ஒப்புவித்தான். தேவகடாட்சம் முனிவரைச் சூழ்ந்திருந்ததால் தமக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட எல்லா காரியங்களையும் அவர் கிரமமாய் நிறைவேற்றி ஒருவரும் குற்றஞ்சொல்லாதபடி நடந்துகொண்டார். முனிவர் எதைச் செய்தாரோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியால் அவர் வசமாயிருந்த யாதொன்றைக் குறித்தும் சிறைச்சாலைக்காரன் விசாரிக்கவில்லை.

இந்த சிறைச்சாலைக்குள் முனிவர் எவ்வளவு காலம் இருந்தாரென்று திட்டமாய்த் தெரியாது. அவர் அச்சிறையிலிருந்த காலத்தில் எகிப்து இராச அரமனையிலிருந்த இரண்டு உத்தியோகஸ்தர் காவலில் போடப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் அரசர் சாப்பிடும் அப்பங்கள், பலகாரங்கள், லட்டுகள், அல்வாமுதலிய அரும்பதார்த்தங்களை ஆயத்தப்படுத்தும் தலைவனாயிருந்தான்; இன்னொருவன் அரசர் பக்கத்திலே நின்று அடிக்கடி ருசியுள்ள திராட்சப்பழங்களைப் பிழிந்து பொற்பாத்திரங்களில் ஏந்தி இராசாவின் வாய்க்கு நீட்டுகிற அலுவல்காரன். இவ்விரு உத்தியோகங்களும் உயர்ந்த அந்தஸ்துள்ளதாக எண்ணப்பட்டுவந்தது; நம்பிக்கையுள்ள பிரபுக்களும் பத்தாரே இவ்வுத்தியோகத்துக்கு நியமிக்கப்படுவார்கள். ஏனெனில் அரசனின் உயிர் இவ்விருவர் கையிலுமிருந்தது. பகைவர் நஞ்சிட்டு அரசனைக் கொன்றுபோடாதபடிக்கு இந்தப் பிரபுக்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்; அரசருக்குப் படைக்கும் அமுதனைத்தையும், இவ்விருவரும் பரிசோதித்து அனுப்பவேண்டியது. போசனவிஷயமாய் யாதாமோர் நோயுண்டானால் இவர்கள் இருவர்தான் அதற்கு உத்தரவாதிகளாய் இருந்தார்கள். முனிவர் கைதியாயும் கைதிகளுக்கு அதிகாரியாயும் இருந்த காலத்தில் இவ்விருவர்மேலும் அரசன் சமுசயங்கொண்டு அவர்களைச் சிறைச்சாலையில் போடுவித்தான். இவர்கள் கைதிகளாய் வந்தது முனிவருக்கு அதிக ஆறுதலாயிருந்தது. இப்படிப்பட்ட பிரபுக்களே சிறையில் இருக்கிறார்களே, நமக்கேன் மனமுறிவு என்று அநேக கைதிகள் தங்களைத் தேற்றிக்கொள்ளுகிறதுமுண்டு. இவ்விருவரும் வெளியில் எவ்



வளவு அதிகாரம் செலுத்தினபோதிலும் இவ்விடத்தில் சொப்பனமுனிவருடைய விசாரணைக்குள்தான் இருக்கவேண்டியதிருந்தது.

ஒவ்வொருநாள் காலையிலும் சொப்பனமுனிவர் காவல் அறைகள் ஒவ்வொன்றுக்கும் போய் கைதிகளின் சுகசெய்திகளை விசாரித்து, அவர்கள் வாய்ப்பிறப்பைக் கேட்டு அவரவருக்கு வேண்டியவற்றை ஒழுங்குசெய்து வருவார். அப்படிப் போகும் ஒருநாளில் புதிதாகக் காவலில் வைக்கப்பட்ட இராசாவின் வேலைக்காரர் இருவரும் முழங்கையை முழங்காலில் ஊன்றி தாடையைப் பிடித்துத் தியங்கி, பூமிபார்த்த கண்ணாய் குறுவியிருந்தார்கள். இதைக் கண்டு உங்கள் முகம் இன்று துக்கமாய்க் காணும் காரணமேது என்று கேட்டார்; அதற்கு அவ்விருவரும் சொல்வார்கள்: நேற்றிரவு தூக்கத்தில் நாங்கள் அவரவர் ஒவ்வோர் சொப்பனம் கண்டோம். அதற்கு அர்த்தம் சொல்லுகிறதற்கு ஒருவரும் இல்லை; அச்சொப்பனத்தின் கருத்துத் தெரியாமல் கலங்கி இருக்கிறோம் என்றார்கள். அத்தேசத்தில் சொப்பனங்களுக்கு கோவில் பூசாசாரிகள்மாத்திரம் அருத்தம் சொல்லுகிறதும் அந்த வழியாய்த் திரண்ட பணம் சம்பாதிக்கிறதும் வழக்கமாயிருந்தது. சிறைச்சாலையில் கைதிகளாய் இருக்கிறவர்கள் எந்த பூசாசாரியிடம் போய்க் கேட்கக்கூடும்? ஆதலால் நாம் கண்ட சொப்பனப்பலன் எப்படியோ என்று அவரவர் கலங்கிக்கொண்டிருந்தார்கள். முனிவர் அவர்களை நோக்கி, சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுவது தேவனுக்குரியதல்லவா? அந்தச் சொப்பனத்தைச் சொல்லுங்கள் பார்ப்போம் என்று கேட்டார். உடனே பானபாத்திரத் தலைவன் சொல்லுவான்: "என் சொப்பனத்திலே ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருக்கக்கண்டேன். அந்தத் திராட்சச்செடியிலே மூன்று கொடிகள் இருந்தது; அது துளிர்க்கிறதாயிருந்தது; அதில் பூக்கள் மலர்ந்திருந்தது; அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது. பார்வோனுடைய பாத்திரம் என் கையிலே இருந்தது; நான் அந்தப் பழங்களைப் பறித்து, அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன்" என்று தன் சொப்பனத்தைச் சொன்னான்.

அதற்கு முனிவர் "அந்த மூன்றுகொடிகளும் மூன்றுநாளாம். மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார்; முன்னே, அவருக்குப் பானம்கொடுத்துவந்த வழக்கத்தின்படி பார்வோ

னின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பாய்" என்று அர்த்தம் சொன்னார். பின்பு முனிவர் பானபாத்திரத்தலைவனைப் பார்த்து, "நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும்" என்று சொல்லி, தான் தன் சொந்த தேசத்திலிருந்து அடிமையாய் விற்கப்பட்டதையும், தான் ஒரு குற்றமும் செய்யாதிருக்கச் சிறையில் வைக்கப்பட்டிருப்பதையும் விவரித்துச் சொன்னார்.

பானங்கொடுக்கிறவன் கண்ட சொப்பனத்தில் எவ்வளவு நேர்த்தியான அர்த்தம் அடங்கியிருக்கிறதென்று அப்பம் சுடுகிறவர்களின் தலைவன் கண்டு ஆநந்தங்கொண்டு, ஆத்திரத்தோடே தான் கண்ட கனாவைச் சொல்லுகிறான்: "நானும் என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின்மேல் இருக்கக்கண்டேன்; மேற்கூடையிலே பார்வோனுக்காகச் சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது; என் தலையின் மேல்கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது," என்று கண்டேன் என்றான். அதற்கு முனிவர்: "அந்த மூன்று கூடைகளும் மூன்று நாளாம். இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார்; அப்பொழுது பறவைகள் உன் மாம்சத்தைத் தின்னும்" என்று சொன்னார்.

முனிவர் சொன்னபடியே சகலமும் நடந்தது. மூன்றாம் நாள் இராசாவின் பிறந்தநாளாயிருந்தபடியால் அவன் தன் ஊழியக்காரர் யாவருக்கும் விருந்து வைத்தான். அப்பொழுது இராசா பானங்கொடுக்கிறவர்களின் தலைவன் குற்றத்தை மன்னித்து, அவனைப் பழைய வேலையில் வைத்துக்கொண்டு, அப்பம் சுடுகிறவர்களின் தலைவனையோ தூக்கிற்போடுவித்தான்.

பானங்கொடுக்கிறவர்களின் தலைவன் முனிவருக்கு வாக்குக்கொடுத்தபடி நிறைவேற்றவில்லை; வெகுநாளாய் மறந்துபோனான். "நன்றிக்கேடு பெருந்துரோகம்."

"நன்றி மறப்பது நன்றன்று." (குறள்.)

அவன் முனிவரின் சொப்பன வியார்த்தியின் சக்தியைக் குறித்து ஆச்சரியப்பட்டு வாக்குக் கொடுத்தபோதிலும் தன் வாழ்வு திரும்பினபோது முனிவரை முற்றும் மறந்துபோனான்.



தம்மை அவன் மறவாதபடி முனிவர் தமது பூர்வசரித்திரங்களையெல்லாம் சொல்லிவைத்திருந்தார்; அப்படியிருந்தும் அவன் மறந்துபோனான். இச்சமயத்தில் நாம் அவனுடைய மறதியைக்குறித்து அதிகமாய்ப் பேசவேண்டியதில்லை. பானபாத்திரத்தலைவன் மறவாமல் நினைத்து ஏதாவது ஒரு சகாயத்தைச் செய்தபோதிலும் அது தேவசித்தத்திலிருந்த சகாயத்துக்கு தாழ்வானதாகவே இருக்கும். அவர் அக்காலத்தில் சிறையிலிருந்து வெளியேற்றப்பட்டாலும் மறுபடியும் ஒரு வீட்டில் அடிமையாகத்தான் காலங்கழிக்கவேண்டியது வரும். தேவனோ அவரை எகிப்து முழுவதுக்கும் அதிகாரியாக ஏற்படுத்தும்படி இன்னும் சிலகாலம் அவரை சிறைச்சாலையில் வைத்துப் படிப்பிக்கும்படி சித்தமானார் என்றே சொல்லவேண்டியது. இம்மட்டும் முனிவர் தாம் சிறுபிராயமாய் இருக்கும்போது கண்ட சொப்பனங்களைப்பற்றி ஏனோதானோ என்றிருந்தபோதிலும், அவருடைய காரியங்களெல்லாம் அதற்கு விரோதமாய் நடந்துவந்தபோதிலும், இராசாவின் வேலைக்காரருடைய சொப்பனப் பலனைக் கைமெய்யாய்க் கண்டதுமுதல் தாம் முன்கண்ட சொப்பனமும் ஒருகாலத்தில் நிறைவேறலாம் என்று தமக்குள் உத்தேசித்திருக்கலாம். அது அப்படியே நிறைவேறிற்று என்பது பின்வரும் சரித்திரத்தால் தெளிவாய் வெளியாகும்.

## மந்திரிபருவம்.

அரசனுக்குப் பானம்கொடுக்கிறவன் சிறையிலிருந்து வெளியாகி சுமார் இரண்டு வருஷம் ஆகியும் அவனால் யாதொருசகாயமும் முனிவருக்குக்கிடைக்கவில்லை. முனிவர் பொறுமையோடு தமது விலங்குகளையே தமது பிதாவின் சொத்துபோல் தூக்கிச் சுமந்துகொண்டு தமது கடமைகளைத் திட்டமாய் நிறைவேற்றிவந்தார். இப்படியிருக்கும் காலத்தில் அத்தேச அரசனாகிய பார்வோன் ஒரே இராத்திரியில் இரண்டு வெவ்வேறான சொப்பனங்களைக் கண்டு அதன் கருத்தொன்றும் விளங்காமல் கலங்கிவிழித்தான். விடிந்தவுடனே அவன் தனக்குச் சொப்பன வியார்த்திசெய்யும் சாஸ்திரிகளை வரவழைத்து தான் கண்ட சொப்பனங்களைச் சொல்லி அதன் தாற்பரியம் என்னவென்று கேட்டான். அவர்கள் உடனே உட்கார்ந்து சகலசாஸ்திரங்களையும் பரிசோதித்து தங்கள் தலை கோவெடுக்கும்மட்டும் அதன் பொருளைக் கிரகித்தும், அது அவர்கள் புத்திக்குத் தென்படவில்லை. அத்தேசத்தில் சொப்பனப்பலன் கேட்பது சாதாரண

வழக்கமாயிருந்தது. அத்தொழில் பூசாசாரிகளே செய்துவந்தார்கள். அதனால் அவர்களுக்கு வந்த வருமானம் கொஞ்சமல்ல. இப்படிச் சொப்பனப்பலன் சொல்லுகிற பூசாசாரிகள் பல வகுப்புடையவர்களாய் அத்தேசமெங்கும் பரம்பிக் குடியிருந்தார்கள். அவர்களில் தேறின வித்துவான்கள் இராசாவுக்குச் சொப்பனப்பலன் சொல்லும்படி எப்போதும் அரமனையில் தங்கி ராஜசம்பளம் பெற்றுவந்தார்கள்; எவனாவது அவர்களையறியாமல் சொப்பனப்பலன் சொல்லுகிறதுண்டானால் அவன்மேல் பிரியாதுசெய்து அவனைக் கொலைக்குட்படுத்துவது அத்தேசவழக்கமாய் இருந்தது; அரசனுடைய அன்றாடககருமங்களெல்லாம் நக்ஷத்திரப்பலன்களாலும் சொப்பனவியார்த்தியாலுமே ஒழுங்குபடுத்துகிறது வழக்கமாயிருந்தது. இராஜசபையிலிருந்த சொப்பனவியார்த்திக்காரர் இந்தச் சொப்பனம் தங்கள் புத்திக்கு எட்டவில்லை என்று கண்டு அரசனுடைய அநுமதிப்படி அந்த இராச்சியமெங்குமிருந்த மந்திரவாதிகளையும் அழைப்பித்தார்கள். எத்தனைபேர் கூடினாலும், எவ்வளவு கூர்மையாய் யோசித்தாலும், அச்சொப்பனத்தின் அர்த்தம் அவர்களுக்குத் தென்படவில்லை. நாம் ஏன்தான் இந்த அலுவலை நமது தலைமேல் எடுத்துக்கொண்டோம் என்று தங்களை நொந்துகொள்ளும்படியாக அவ்வளவு கலக்கம் அவர்களைப் பிடித்தது. அதோடு நமது அறியாமையை அரசன் கண்டுகொண்டாரே, இன்றோடு நம்மைப்பற்றி இத்தேசத்திலிருக்கிற மதிப்பும் மரியாதையும் போய்விடுகிறதே, அரசன் எங்கே கோபதாபமாகி சிரசாக்கினை செய்யும்படி கட்டளையிடுகிறாரோ என்று பலவாறாக அவர்கள் தங்களுக்குள் யோசித்துக் கலங்கினார்கள் என்று சொல்லவேண்டியது. அவர்களைவிட அரசன் மனஞ்சோர்ந்து, நாம் ஒருநாளும் இப்படிப்பட்ட சொப்பனம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையே! இதின் கருத்து என்னவாய் இருக்குமோ, வானம் என்மேல் தயவையோ தண்டனையையோ அருளப்போகிறது; இந்தச் சந்தேகசாகரத்திலிருந்து என்னை மீட்டு இரட்சிக்க சோதிடர்கள் வரமாட்டார்களா என்று எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார்.

இவ்வண்ணம் அரசரும், மந்திரவாதிகளும், ராஜ்யத்தின் அதிபதிகளும் கலக்கத்தோடிருக்கையில் இராசாவுக்குப் பானம் கொடுக்கிறவர்களின் தலைவன் மெதுவாய் அரசர் சமுகம் ஏறி சிம்மாசனத்துக்கு முன் சாஷ்டாங்கமாய் விழுந்து தெண்டனிட்டான். அவனை அரசர் கண்டவுடனே, தமது கவலை நீக்கும் திராட்சபானம் வேண்டுமோ என்று கேட்க வந்ததாக



அவன் எண்ணியிருக்கலாம். அவனோ அரசனை நோக்கி: மகாமன்னரே! உமக்கு எந்நாளும் மகிழ்ச்சியுண்டாவதாக; அடியேனுடைய வார்த்தைகள் அரசர்காதில் விழுவதாக; உமதடியானும் அப்பஞ்சுடுகிறவர்களின் தலைவனும் என் ஆண்டவனால் சிறையில் போடப்பட்டிருந்தோமே; அடியார் சிறையிலிருக்கையில் ஒரே இரவில் இருவரும் வெவ்வேறு சொப்பனம் கண்டு விடியற்காலத்தில் கலக்கத்தோடு உட்கார்ந்துகொண்டிருந்தோம். அச்சமயத்தில் தலையாரிகளுக்கு அதிபதியானவரிடம் அடிமையாயிருந்த ஒரு எபிரெயவாலிபன் எங்களோடு சிறையிலிருந்தான்; அவன் எங்கள் சொப்பனங்களைச் சொன்னவுடனே ஒரு அர்த்தம் சொன்னான். அவன் எப்படி அர்த்தம் சொன்னானோ அதின்படியே அடியான் மறுபடியும் உமக்குப் பானம் கொடுக்கும்படி சலாக்கியம் பெற்றேன்; அப்பம் சுடுகிறவர்களின் தலைவனோ தூக்கிற்போடப்பட்டு ஆகாயத்துப் பட்சிகளுக்கு ஆகாரமானான். அரசர் அந்த வாலிபனை வரவழைத்து தமது சொப்பனத்தைச் சொல்வதுண்டானால் அவன் அதின் தாற்பரியத்தைச் சொல்லுவான் என்று அடியேனுடைய சிந்தையில் தோன்றுகிறது என்று சொன்னான். நடுக்கடலில் புசலில் அகப்பட்டு திசைதப்பித் திரியும் மாலுமிக்கு ஒரு கரை தென்பட்டால் எப்படியோ அப்படி இந்தச் செய்தி இராசாவுக்கு இருந்தது. பானபாத்திரத்தலைவன் இம்மட்டும் அரசன் வாயில் ஏந்திக்கொடுத்த அரும் ரசத்தின் மதுரத்திலும் மகிழ்ச்சியிலும் இது சிரேஷ்டமாய்க் காணப்பட்டது. அந்நிமிஷமே சிறையிலிருந்த சொப்பனமுனிவரை அரசர் சமுகம் வரும்படிக் கட்டளை பிறந்தது.

இந்த சமாசாரம் அரசன் வசித்த மெப்பிஸ்பட்டணமெங்கும் பிரசித்தமாயிற்று; இராசாவின் வேலைக்காரர் காவற்கூடத்துக்குப் போய் சொப்பனமுனிவரைக் கூட்டிவரப் போனார்கள். இராஜ சமுகமேறும் எந்த மனுஷனும் குறிக்கப்பட்ட சில சடங்குகளின்படி சுத்திகரிக்கப்பட்டு ராஜசபைக்கேற்ற உடைதரித்து தரிசனம்பெறவேண்டுமென்று அத்தேச வழக்கமாயிருந்தது; மேலும் சொப்பனத்தை வியார்த்திபண்ணிப்போகிறவன் முதலாவது தன்னை பூசாசாரியாக்கிக்கொள்ளவேண்டும். இவ்விருமுறைகளையும் முனிவர் ஒரே நேரத்தில் திடும்பிரவேசமாய் நடந்த சடங்குகள்மூலமாய் கடந்துபோயிருப்பார் என்று சொல்லவேண்டியது. அந்தச் சடங்குகளில் சருவாங்கம் சவரஞ்செய்யவேண்டியது ஒன்றாய் இருந்தது. இராஜ சபையேறும் கிரமப்படி செய்யவேண்டிய காரியங்களையெல்

லாம் செய்தபின்பு முனிவர் ராஜசபையேறினார். கைதியாய் இருந்து விலங்கைச் சுமந்து நெடுங்காலம் கஷ்ட ஜீவனம்பண்ணின முனிவர் சிறைச்சாலையை விட்டுப் புறப்படும்போது தாம் முன்கண்ட சொப்பனங்கள் பலிக்கும் காலந் துவக்கிற்று என்ற ஆநந்தம் உள்ளுக்குள் இருந்தாலும், தம்மை ராஜசமுகத்தில் ஏறச்செய்த தேவாதிதேவனுக்கு எந்நாளும் ஸ்தோத்திரமுண்டாவதாக என்று வாழ்த்தி, உமது சகாயமே என் துணையாய் இருப்பதாக என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டே வந்திருப்பார்.

இந்த விசேஷித்த சமயத்தில் மெப்பிஸ்பட்டணத்துப் பிரபுக்கள் யாவரும் வந்து கூடினார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. மகா மன்னனாகிய பார்வோன் தனது தந்த அரமனையிலிருந்து புறப்பட்டு கொலுமண்டபமேறி சிம்மாசனபதியாக வீற்றிருந்தான்; மந்திரிகளும் பிரதானிகளும், சாஸ்திரிகளும் சோதிடரும், ஆசாரிமாரும் பூசாரிமாரும், படைத்தலைவரும் சேனாவீரரும், யூகத்தலைவரும் அணித்தலைவரும், புரோகிதரும் பெரியோரும் தம்தம் ஆசனங்களில் வீற்றிருந்தார்கள். இராகத்தலைவரும், வீணைத்தலைவரும் தம்தம் பரிவாரங்களுடன் ராஜசபைமுன் நின்று கீதவாத்தியங்களை வாசித்து அவர்களை மனமகிழப்பண்ணினார்கள். கொலுமண்டபம் முழுவதும் பரிமளவாசனையால் நிறைந்திருந்தது. இவ்வளவு ஆடம்பரங்கள் நிறைந்திருந்த கொலுமண்டபத்தின் படிகளைக்கடந்து முனிவர் ராஜசபையேறி சாஷ்டாங்கம்பண்ணி, மகாமன்னரே! தண்டம் என்று நமஸ்காரம்பண்ணினார். கறுத்த நிறமுள்ள அந்த எகிப்திய சபையிலே முனிவர் தோன்றினது காகங்களின் நடுவே கொக்குப் பிரவேசித்ததுபோல் இருந்தது. ஏனெனில் முனிவர் சிவந்த மேனியும் இராஜயோக்கியனுமாய் இருந்தார்; தேவ அருள் அவருடைய முகத்தில் வீசிற்று.

அரசன் முனிவனை நோக்கி: நான் ஒரு சொப்பனம் கண்டேன், அதன் அர்த்தத்தைச் சொல்ல ஒருவரும் இல்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால் அதன் அர்த்தத்தைச் சொல்லுவாய் என்று உன்னைக்குறித்து நான் கேள்வியானேன் என்று சொன்னான். அப்போது முனிவர் அவனை நோக்கி, மன்னரே! நான் அல்ல, தேவனே அரசர் சொப்பனத்துக்கு மங்களமான வாக்கை அருளிச்செய்வார் என்று சொன்னார்.

அப்பால் அரசன் தன் சொப்பனத்தைச் சொல்லுகிறான்: ‘‘என் சொப்பனத்திலே, நான் நதியோரத்திலே நின்றுகொண்டிருந்தேன். அப்போது அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள்



நதியிலிருந்து, ஏறிவந்து புல் மேய்ந்தது. அவைகளின் பின் இளைத்ததும் மகா அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்தது. இவைகளைப்போல அவலட்சணமான பசுக்களை எகிப்துதேசமெங்கும் நான் கண்டதில்லை. கேவலமும் அவலட்சணமுமான பசுக்கள் கொழுமையான முந்தின ஏழு பசுக்களையும் பட்சித்துப்போட்டது. அவைகள் இவைகளின் வயிற்றுக்குள் போயும், வயிற்றுக்குள் போயிற்றென்று தோன்றாமல், முன் இருந்ததுபோலவே அவலட்சணமாயிருந்தது. இப்படிக் கண்டு திடீரென்று விழித்தேன்; பின்னும் நான் தூங்கினேன். என் சொப்பனத்திலே நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்கள் ஒரேதாளிலிருந்து ஓங்கிவரக் கண்டேன். பின்பு சாவியானவைகளும் கீழ்காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்தது. சாவியான கதிர்கள் அந்த நல்ல கதிர்களையும் விழுங்கிப்போட்டது; உடனே திடுக்கென்று விழித்தேன். இவ்விரு சொப்பனங்களையும் நான் என்மந்திரவாதிகளிடத்தில் சொன்னேன். இதன் பொருளை எனக்கு விடுவிக்கிறவன் ஒருவனும் இல்லை’’ என்று சொல்லி முடித்தான்.

அரசன் தன் சொப்பனத்தைச் சொல்லச்சொல்ல தேவனால் அனுப்பப்பட்ட ஒரு சம்மனசு அசரீரியாய் முனிவர் காதோரம் நின்று அதன் பொருள் ஒவ்வொன்றையும் சொல்லிக்கொடுத்தார் என்று சொல்லவேண்டியது. அரசன் சொல்லிமுடித்தவுடனே முனிவர் இதற்கு என்ன தாற்பரியம் சொல்லப்போகிறாரோ என்று அறியும்படி எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. அரசனுடைய மந்திரவாதிகள் அச்சொப்பனத்தை வியார்த்திபண்ணும்படி பட்ட கஷ்டங்களையும் செய்த பிரயத்தனங்களையும் முனிவர் படவுமில்லை, செய்யவுமில்லை. ஞானத்தின் தேவனைத் துணையாகக்கொண்டு அர்த்தம் சொல்லப்போகும் முனிவருக்கு கஷ்டமேன், கவலையேன்?

முனிவர் தமது கண்களை இராஜதிஷ்டிக்கு நோக்கிச் சொல்லுகிறார்: மன்னரே! உமது இரண்டு சொப்பனங்களும் ஒன்றுதான். ஆண்டவர் தாம் செய்யப்போகிறது இன்னதென்பதை அரசருக்கு அறிவித்திருக்கிறார். நீர் கண்ட ஏழு நல்ல பசுக்களும், ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷமாம்; அவைகளின் பின் காணப்பட்ட ஏழு கேவலமான பசுக்களும், சாவியான கதிர்களும் ஏழு வருஷமாம்; எகிப்து தேசமெங்கும் பரிபூரணமுள்ள விளைச்சலுள்ள ஏழுவருஷங்களிருக்கும்; அதன்பின்பு

பஞ்சமான ஏழு வருஷங்களிருக்கும். அப்பொழுது எகிப்து தேசத்தில் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டுப்போம், அந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கிப்போடும். இந்தக்காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதென்பதையும், எந்தப் பிரயத்தனமும் இதை மாற்றக்கூடாதென்பதையும், இது சீக்கிரத்துக்குள் ஆரம்பிக்கும் என்பதையும் குறிக்கும்பொருட்டு, இந்தச் சொப்பனம் என் மன்னருக்கு இரட்டித்துக் காட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லிமுடித்ததோடு; மன்னனுக்கு தேவாலோசனை சொல்லுகிறதுபோல பின்னும் சொல்லுவார்: மன்னரே! நீர் விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி அவனை எகிப்துதேசத்துக்கு அதிகாரியாக ஏற்படுத்தவேண்டியது; மேலும் தேசத்தின்மேல் விசாரணைக்காரரைவைத்துப் பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்துதேசத்திலே விளையும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கைச்சேர்த்துக் கட்டிவைக்கவேண்டியது; தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகாதபடிக்கு அந்த தானியம் உதவும் என்று சொல்லிமுடித்தார். முனிவர் சொன்ன அர்த்தமும், அவர் சொன்ன ஆலோசனைகளும் அரசனுக்கும் அன்று கூடிவந்திருந்த இராஜசபைக்கும் சரியான தாற்பரியமாய்க் காணப்பட்டது. முனிவர் சொன்ன அர்த்தத்தை ஆட்சேபிப்பார் எவரும் இருந்ததில்லை; மந்திரவாதிகளும் சோதிடரும் அதைக் கேட்டு முகம் குருவிப்போனார்கள் என்று சொல்லவேண்டியது.

இராஜன் இந்த நல்லாலோசனையைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு "தேவஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல் வேறொருவனுண்டோ? நான் உன்னை எகிப்துதேசமெங்கும் அதிகாரியாக்கினேன்" என்று சொல்லி தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி, முனிவர் கையிலிட்டு, பட்டுப்பட்டாவளிகளை அவருக்கு உடுத்தி, பொற்சரப்பணியை அவர் கழுத்திலிட்டு, தன்னுடைய இரண்டாம் இரதத்தின்மேலேற்றி, முன்காவல் பின்காவலுடன் வெண்சாமரை வீச, பேரிகைகள் முழங்க, கொடிகள் பறக்க, வெடிகள் தீர, நாட்டியங்கள் ஆட, நாகசுரம் வாசிக்க ஊர்கோலம் பண்ணுவித்து, வருவாரும் போவாரும் அவரை வணங்கவேண்டுமென்று கட்டியங்கள் கூறச்செய்தான். முன் தமக்கு எஜமானாயிருந்த போத்திபாரைவிட இப்பொழுது உயர்ந்துவிட்டார். எகிப்துதேசமெங்கும் இராஜாவுக்கடுத்த முதல்வர் இவரே. அரசன் இவருக்கு சொப்பனங்களை வியார்த்திபண்ணுகிறவன் என்ற அர்த்தங்கொள்ளும் சாப்நாத்பன்னேயா என்று பேரிட்டு, எகிப்துதேசத்திலுள்ள ஒருவனும் முனிவர் உத்தரவில்லாமல் ஒரு பிரயத்தனமும் செய்யக்கூடாதென்று கட்டளையிட்டான்.



இவ்வண்ணமாய்க் குழியில் போடப்பட்டு, அப்பால் இரண்டுதரம் விலைக்கு விற்கப்பட்டு, அதின் பின்பு சிறையில் வைக்கப்பட்ட முனிவர் ஒரே நிமிஷத்தில் எகிப்து ராஜ்யத்தின் தலைவரானார். முனிவர் மந்திரி என்று காட்டும் இராஜமுத்திரையோடு அரசன் சமுகத்திலிருந்து புறப்பட்டது இதற்கு முந்தின அவருடைய சரித்திரத்தைக் கேட்ட நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறதல்லவா?

முனிவரை அரசன் அதிகமாய் நேசித்து நன்குமதித்துவந்தான். அவருக்கு உயர்ந்த குடும்பத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து விவாகஞ்செய்யும்படி நோக்கங்கொண்டு, ஓன் என்னும் பட்டணத்து பிரதான பூசாரியின் மகளைப் பெண்கேட்டான். முனிவர் விசேஷித்த சடங்குகள் மூலமாய் பூசாரிகள் வரிசைக்கு உயர்த்தப்பட்டிருந்தபடியாலும், உயர்ந்த அந்தஸ்துடையவராகிவிட்டதாலும் போத்திபிரா என்னும் அந்தப் பிரதான பூசாரி சந்தோஷமாய்ச் சம்மதித்தான். உடனே கலியாணத்துக்கேற்ற பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. முகுர்த்த நேரம் வந்தபோது பார்வோன்மன்னர் புஷ்பங்கள் பெய்ய, பிரதானிகளும் தலைவரும் மங்களங்கள்கூற, பன்னீர் ஜலம் பனிநீர்போல் முனிவர்மேல் இறங்க, பதினெட்டுவகை மேளதாளங்களும் தங்கள் நாதங்களை முழக்க, முனிவர் திருமங்கிலியத்தை ஏந்தி ஆஸ்நாத் என்னும் அழகிய மங்கையின் கழுத்தில் அணிந்தார்; மெப்பிஸ்பட்டணமுழுவதும் அன்றையதினம் மகிழ்ச்சிகொண்டாடினது. அக்காலம் மலிவானகாலமாய் இருந்தபடியால் தேசம்முழுவதும் சந்தோஷம் கொண்டாடினது என்று சொல்லவேண்டியது. சில வருஷங்களுக்குள் முனிவருக்கு இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தார்கள். அவர் மூத்த பிள்ளைக்கு மனாசே என்றும், இரண்டாவது பிள்ளைக்கு எப்பிராயீம் என்றும் பேரிட்டார்.

## பஞ்சகாலப் பருவம்.

முனிவர் தேசத்தின் அதிகாரியான பின்பு நாடெங்கும் சுற்றிவந்து பட்டணங்கள்தோறும் களஞ்சியங்களைக் கட்டி, பஞ்சகாலத்துக்கென்று தானியங்களைச் சேர்த்துவைத்தார். செழிப்பான ஏழு வருஷங்களிலும் பூமி பூரண பலனைக் கொடுத்தது; அவர் தானியத்தைக் கடற்கரை மணலத்தனையாய்க் கட்டி

வைத்தார். தேவனுடைய கிருபைகளை காலாகோலமாய்ச் செலவிடுகிறதைப்பார்க்கிலும், அவைகளைப் பாதுகாத்து பிரயோகித்துவருவது அதிக புத்தியாயிருக்கிறது.

பஞ்சம் வந்தபோது ஜனங்கள் போஜனத்துக்காக ராஜாவை நோக்கி ஓலமிட்டார்கள். அதற்கவன்: "நீங்கள் முனிவரிடத்திற்குப்போய் அவர் உங்களுக்குச் சொல்லுகிறபடிசெய்யுங்கள்" என்று சொன்னான். அப்போது முனிவர் களஞ்சியங்களையெல்லாந் திறந்து தானியத்தை விற்றார்.

பஞ்சம் எகிப்தில் மாத்திரமல்ல, அதைச் சுற்றிலுமுள்ள தேசங்கள் எங்கும் இருந்தது. எகிப்திலன்றி வேறெங்கும் தானியம் கிடையாது; ஆதலால் நாலாதிசையிலுமிருந்தவர்கள் முனிவரின் காலில் வந்து விழுந்து அவர் தயவுக்குக் காத்திருந்தார்கள்.

எகிப்திலே தானியம் உண்டென்று முனிவரின் தகப்பன் கேள்விப்பட்டு தன் மக்களை நோக்கி, "நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படி நீங்கள் எகிப்துக்குப்போய், நமக்காக தானியம் கொள்ளுங்கள்" என்று அனுப்பினான். யாதாமோர் மோசம் வருமென்று நினைத்து, தன் இளையமகன் பென்யமீனைமாத்திரம் அவர்களுடன் அனுப்பவில்லை.

வந்தவர்கள் எல்லாருக்கும் தானியம் உத்தரவுபண்ணுவது முனிவரின் வேலையாய் இருந்ததால், அவர் சகோதரரும் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டார்கள். அவர்களைக் கண்டவுடனே அவர் இனம் அறிந்துகொண்டார். ஆனால் முனிவர் ஒரு பிரபுவினுடைய உடைதரித்து சிம்மாசனபதியாயிருப்பதையும், சேவகர் வாய்பொத்தி கைகட்டி அவருக்கு உத்தரவு சொல்லுவதையும், வருவார் போவார் அவரை வணங்குவதையும், பிரபுக்கள் பெரியோர் அவரைச் சந்திப்பதையும் அவர்கள் கண்டதால் அவரை அறியவே இல்லை. அண்ணன்மார் பத்துப்பேரும் முகங்குப்புறவிழுந்து அவரை வணங்கினார்கள். முன்னே தாங்கள் விற்றவனிடத்தில் வாங்கப்போகிறார்கள். முன்னே முனிவர் வணங்கினார், இப்போது இவர்கள் கும்பிடுகிறார்கள். காலங்களின் மாறுதல் உன்னதமானவருடைய கரத்திலிருக்கிறது. உடனே தன் அரிக்கட்டைத் தன் அண்ணன்மார் அரிக்கட்டுகள் கும்பிட்டதாகக் கண்ட சொப்பனத்தை நினைத்து, தேவன் அந்தச் சொப்பனத்தின்படியே நிறைவேறப்பண்ணினார் என்று உணர்ந்துகொண்டார்.

முனிவர் உடனே தன் சகோதரருக்கு மன்னிப்புச்செய்ய நினைத்தார். ஆயினும் அவர்கள் தங்கள் குற்றத்தை உணர்ந்தார்களா இல்லையா என்று அறியவும், தன் தகப்பனையும் தன்



இளைய சகோதரனையும் நேசிக்கிறார்களா என்று காணவும் முதலாவது அவர்களுடன் கடினமாய்ப்பேசி, "நீங்கள் எங்கேயிருந்துவந்தீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள்: "கானான்தேசத்திலிருந்து தானியம் கொள்ளவந்தோம்" என்றார்கள். அப்பொழுது அவர்: "நீங்கள் வேவுகாரர், தேசம் எங்கே திறந்து கிடக்கிறதென்று பார்க்கவந்தீர்கள்" என்று மறுபடியும் உருட்டினார். அதற்கவர்கள் பதறிப்போய்: "அப்படியல்ல, ஆண்டவனே! உமது அடியாராகிய நாங்கள் தானியம் கொள்ளவந்தோம்; நாங்களெல்லாரும் ஒரே தகப்பனுடைய பிள்ளைகள்; நாங்கள் நிஜஸ்தர்; உமதடியார் வேவுகாரர் அல்ல" என்று பணிவாய்ச் சொன்னார்கள். அதற்கு முனிவர்: அல்ல, அல்ல; தேசம் எங்கே திறந்துகிடக்கிறதென்று பார்க்கவந்தீர்கள் என்று மிரட்டினார். அதற்கவர்கள்: "உமது அடியாராகிய நாங்கள் பன்னிரண்டு சகோதரர்; கானான்தேசத்திலுள்ள ஒரு தகப்பன் பிள்ளைகள்; இளையவன் இப்பொழுது எங்கள் தகப்பனிடத்திலிருக்கிறான்; ஒருவன் காணாமல்போனான்" என்றார்கள்.

முனிவர் அவர்களை நோக்கி: உங்கள் பேச்சின் நிஜம் பொய் அறிய உங்களில் ஒருவன்போய் அந்த இளைய சகோதரனைக் கூட்டிவரவேண்டும்; அவனைக் கூட்டிவருமட்டும் மற்றவர்கள் சிறைச்சாலையில் இருக்கவேண்டும் என்று உத்தரவு கொடுத்தார். இப்படிச் சொல்லவே அவர்களுக்கு உண்டான பயம் கொஞ்சமல்ல; ஏனெனில் தகப்பன் பென்யமீனை அனுப்ப மாட்டாரென்று நன்றாய்த் தெரியும்; ஆகையால் ஒருவனாவது நான்போய் அவனைக் கொண்டுவருகிறேனென்று சொல்லத் துணியவில்லை. முனிவர் அவர்களெல்லாரையும் மூன்றுநாள் சிறைச்சாலையில் அடைத்துவைத்தார். இது அவர்கள் அவருக்குச் செய்த அநியாயங்களையெல்லாம் நினைக்க நல்ல சமயமாயிருந்தது. மூன்றாம்நாள் அவர் அவர்களைக் கூப்பிட்டு, "நீங்கள் நிஜஸ்தரானால் சகோதரராகிய உங்களில் ஒருவன் காவல்கூடத்தில் கட்டுண்டிருக்கட்டும்; மற்றவர்கள் உங்கள் குடும்பத்துக்குத் தானியம் கொண்டுபோய்க்கொடுத்து, உங்கள் இளையசகோதரனை என்னிடத்தில் அழைத்துக்கொண்டுவாருங்கள்; அப்பொழுது உங்கள் பேச்சு நிஜம் என்று விளங்கும்" என்றார்.

இதைக் கேட்டது "ஈரப்புண்ணில் ஈர்க்கெடுத்துக் குத்தினதுபோல" இருந்தது. தாங்கள் முன் முனிவருக்குப் பண்ணின நிஷ்டூரங்களை நினைத்து, ஒருவரோடொருவர்: "நம்முடைய சகோதரனுக்கு நாம்செய்த துரோகம் நம்மேல் சுமந்தது;

அவனுடைய மனவியாகுலத்தை நாம் கண்டும் அவனுக்குச் செவிகொடாமல் போனோமே. ஆகையால் இந்த ஆபத்து நேரிட்டது" என்று சொல்லிக்கொண்டார்கள். இப்படித்தான் நாம் அநேக வருஷங்களுக்குமுன் செய்த பாவங்கள் பிற்காலத்தில் நம்மைக் குற்றஞ்சாட்ட எழும்பும். முனிவர் ஒரு துபாசியைக்கொண்டு அவர்களுடனே பேசினதால் தாங்கள் பேசினதொன்றும் அவருக்குத் தெரியாதென்று எண்ணிக்கொண்டார்கள். அவரை ஒரு எகிப்தியன் என்றே நினைத்தார்கள். தாங்கள் செய்த குற்றத்தைத் தன் அண்ணன்மார் உணர்ந்துகொள்ளுகிறதை முனிவர் கண்டு, மனம்பொறுக்கமாட்டாமல் மறைவிடத்திற்போய் அழுதார். கண்ணீர் அவர் கன்னங்களில் தாரைதாரையாய் வடிந்தது; அதை அவர்கள் அறியவில்லை. பின்பு அவர்கள் செய்த துரோகத்தை நன்றாய் உணரும்படி சிமியோனை அவர்கள் கண்களுக்கு முன்னே கட்டிவைக்கச் சொன்னார்; மற்றவர்களையோ தங்கள் தேசத்துக்குப் போகவும், தங்கள் தம்பியை அழைத்துவரவும் அனுப்பிவிட்டார்.

முனிவர் தம் சகோதரரின் சாக்குகளில் தானியத்தை நிரப்பி, அவர்கள் கொண்டுவந்த பணத்தை அவரவர் சாக்கிலே போட்டு வைக்கும்படி உத்தரவுபண்ணினார்; அதுவுமன்றி, வழிக்கு ஆகாரமும் கொடுத்தார். அவர்கள் தானியமூட்டைகளை கழுதைகளின்மேலேற்றிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களில் ஒருவன் வழியில் தன் கழுதைக்குத் தீனிபோட தன் சாக்கைத் திறக்கையில் தான் கொடுத்த பணம் தன் சாக்கிலிருக்கக் கண்டான்; எல்லாரும் இதைப்பார்த்து அதிசயப்பட்டுக் கலங்கினார்கள். அண்ணன்மார் வீட்டுக்கு வந்தவுடனே நடந்த சமாசாரங்களையெல்லாம் தங்கள் தகப்பனுக்குச் சொன்னார்கள். பின்பு அவர்கள் தானியத்தைக் கொட்டினபோது அவரவர் சாக்கில் பணமுமிருக்கக் கண்டார்கள். பென்யமீனை அனுப்பச் சொன்னபோது, "அவர்கள் தகப்பன் அவர்களை நோக்கி: என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்புமில்லை, சிமியோனுமில்லை, பென்யமீனையும் கொண்டுபோகப்பார்க்கிறீர்கள். இதெல்லாம் எனக்கு விரோதமாக நேரிடுகிறது" என்றான். அப்பொழுது ரூபன் தகப்பனைப் பார்த்து: "நான் அவனைத் திரும்பிக் கொண்டுவராவிட்டால் என் இரண்டு குமாரரையும் கொன்றுபோடும்" என்றான். அதற்கு அவன்: "என் மகன் உங்களோடேகூட போவதில்லை; அவன் தமையன் இறந்துபோனான், இவன் ஒருவன் மீதியாயிருக்கிறான்; நீங்கள் போகும்வழியில் இவனுக்கு மோசம் நேரிட்டால்,



நீங்கள் என் நரைமயிரை சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள்" என்றான்.

எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியம் செலவானபின்பு தகப்பன் அவர்களைப் பார்த்து: "நீங்கள் திரும்பிப்போய், நமக்குக் கொஞ்சம் தானியம் வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றான். அப்பொழுது யூதா என்பவன்: "நாங்கள் பென்யமீனில்லாமல் போகக்கூடாது. ஏனெனில் எங்களுக்குத் தானியம் விற்றவன், உங்கள் இளையசகோதரன் உங்களோடேகூட வராவிட்டால் நீங்கள் என் முகத்தைப் பார்ப்பதில்லை என்றான்" என்று சொன்னான். அதற்கு யாக்கோபு: உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டென்று சொல்லி என் எனக்குத் துன்பத்தை வருவித்தீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்: "அந்த மனிதன் உங்கள் தகப்பன் இன்னும் உயிரோடிருக்கிறாரா? உங்களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டா? என்று விசாரித்தான். உங்கள் சகோதரனை இங்கே கொண்டுவாருங்கள் என்று சொல்லுவான் என்பதை நாங்கள் அறிந்தோமா?" என்றார்கள். பின்னும், யூதா தன் தகப்பனை நோக்கி: "பிள்ளையாண்டானை என்னோடே அனுப்பும். நான் அவனை உம்மிடத்தில் கொண்டுவந்து உமக்குமுன்பாக நிறுத்தாமல்போனால், எந்நாளும் அந்தக் குற்றம் என்மேலிருப்பதாக. நாங்கள் தாமதியாதிருப்போமானால் இதற்குள்ளாக இரண்டுதரம்போய்த் திரும்பவந்திருப்போமே" என்றான்.

கடைசியாக எகிப்திலிருந்து தானியம் வராவிட்டால் எல்லாரும் சாகவேண்டியதாயிருக்கும் என்று ஆலோசித்து, அன்பாகப் பெற்றுவளர்த்த அருமை மகனை அனுப்பினான். மேலும் எகிப்திலிருந்த அதிகாரிக்கு இனாமாக அத்தேசத்து உசிதமான வஸ்துக்களில் கொஞ்சம் பிசின் தைலமும், தேனும், கந்தவர்க்கமும், வெள்ளைப்போளமும், தொபிந்து கொட்டைகளும், வாதுமைக்கொட்டைகளும் அனுப்பினான். பின்னும் தன் மக்களைப் பார்த்து: "பணத்தை இரட்டிப்பாய் உங்கள் கைகளில் கொண்டுபோங்கள், சாக்குகளின் வாயிலே திரும்பக் கொண்டுவந்த பணத்தையும் கொண்டுபோங்கள்; அது கைப்பிசகாய் வந்திருக்கும். உங்கள் சகோதரனையும் கூட்டிக்கொண்டு அந்த மனிதனிடத்திற்கு மறுபடியம் போங்கள். அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும், பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்

கங்கிடைக்கப் பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றவனைப் போல இருப்பேன்" என்று புலம்பினான்.

அண்ணன்மாரெல்லாரும் எகிப்துக்கு வந்தபின்பு மறுபடியும் முனிவருடைய தரிசனம் பெற்றார்கள். தன் தம்பி பென்யமீனும் அவர்களுடன் நிற்கிறதை அவர் கண்டு, வீட்டு விசாரணைக்காரனை நோக்கி: நீ இந்த மனிதரை வீட்டுக்கு அழைத்துப்போய் சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை அடித்து ஆயத்தம்பண்ணு; மத்தியானத்தில் இவர்கள் என்னோடு சாப்பிடுவார்கள் என்றார். அப்படியே வீட்டுவிசாரிப்புக்காரன் அவர்களை முனிவரின் அழகிய அரமனைக்குக் கூட்டிக்கொண்டுபோனான். இது அவர்களுக்குச் சந்தோஷமாயிராமல் துக்கமாயிருந்தது. நம்முடைய சாக்குகளிலிருந்த பணத்தினிமித்தம் நம்மைக் குற்றஞ்சாட்டி, நமது கழுதைகளையும் எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் என்று அவர்கள் தங்களுக்குள் எண்ணி, வீட்டு விசாரிப்புக்காரனைப் பார்த்து: தாங்கள் இரட்டிப்பான பணம் கொண்டுவந்தோமென்றும், தங்கள் சாக்குகளில் பணம் வைத்தது இன்னாரென்று தெரியாதென்றும் சொன்னார்கள். அவனோ அவர்களைத் தைரியப்படுத்தி: "உங்களுக்குச் சமாதானம், பயப்படவேண்டாம்." உங்கள் தேவனும், உங்கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள் சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்டளையிட்டார். நீங்கள் கொடுத்த பணம் என் கையில்வந்து சேர்ந்தது என்று சமாதானப்படுத்தினான். அப்புறம் வீட்டு விசாரிப்புக்காரன் கட்டுண்டிருந்த சிமியோனை அவர்களண்டைக்கு அவிழ்த்துவிட்டு, பின்பு பாதசுத்தி செய்ய ஜலம் கொடுத்து, அப்புறம் அவர்களுடைய கழுதைகளுக்குத் தீனிபோட்டான். அண்ணன்மாரெல்லாரும் மந்திரிக்குக் கொண்டுவந்த வெகுமதிகளைத் தட்டில்வைத்து ஆயத்தப்படுத்தினார்கள். முனிவர் வீட்டுக்கு வந்தபோது, அவர்கள் அவருக்கு முன்பாகத் தங்கள் காணிக்கைத்தட்டுகளை வைத்து, பதினொரு அரிக்கட்டுகளும் எப்படிக் கும்பிட்டதோ அப்படித் தரைமட்டும் குனிந்து கும்பிட்டார்கள்.

இந்த தடவை முனிவர் அவர்களுடன் மகா பட்சமாய்ப் பேசினார். "நீங்கள் சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள்: எங்கள் தகப்பனாராகிய உமது அடியான் சுகமாயிருக்கிறார், இன்னும் உயிரோடிருக்கிறார் என்று சொல்லிக் குனிந்து வணங்கினார்கள். அவர் தம் சகோதரன் பென்யமீனை அவர்கள்



நடுவே கண்டு, நீங்கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானோ என்று கேட்டு, "மகனே! தேவன் உனக்கு கிருபைசெய்யக்கடவார்" என்று சொன்னார். முனிவர் இவ்வளவும் பேசினபின்பு அவர் மனம் பொங்கிற்று, அழுகையும் வந்தது. உடனே அவர் எழுந்திருந்து ஒரு அறைக்குட்போய் கதவைச் சாத்திக்கொண்டு அழுதார். அது துக்கக் கண்ணீர் அல்ல, ஆநந்தக் கண்ணீர். பின்பு தாம் அழுததை ஒருவரும் அறியாதபடி முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்ப வந்து வேலைக்காரரைக் கூப்பிட்டு, இவர்களுக்குப் பந்தி பரிமாறுங்கள் என்று உத்தரவுபண்ணினார். வேலைக்காரர் முனிவருக்குத் தனிப்படவும், அவர் சகோதரருக்குத் தனிப்படவும், எகிப்தியருக்குத் தனிப்படவும் பந்திவைத்தார்கள். ஏனெனில் எகிப்தியர் அவர்களுடன் சாப்பிடமாட்டார்கள். முனிவருடைய சகோதரர் அவரவர் வயசின்படி உட்காரவைக்கப்பட்டார்கள். மூத்தவன் முதலும், இளையவன் கடைசியிலும் இருந்தார்கள். எகிப்தின் அதிபதி தங்கள் வயசின்படி தங்களை உட்காரவைத்ததற்காக ஆச்சரியப்பட்டார்கள். முனிவர் தமக்கு முன்னிருந்த போசனத்தில் அவர்களுக்குப் பந்தி பரிமாறினார். ஆனால் பென்யமீனுக்கு மற்றவர்களிலும் ஐந்துமடங்கு கூட வைத்தார். அவர்கள் முன் முனிவர்மேலே பொறாமைகொண்டதுபோல இதற்காக பென்யமீன்மேலே பொறாமைப்பட்டார்களா? இல்லை. அவர்கள் புசித்துக் குடித்துச் சந்தோஷப்பட்டார்கள்.

அண்ணன்மார் தன் தம்பி பென்யமீனைச் சிநேகிக்கிறார்களா இல்லையா? என்று அறியும்படி தன் வேலைக்காரனைப் பார்த்து: "நீ இந்த மனிதருடைய சாக்குகளை அவர்கள் ஏற்றிக்கொண்டுபோகத்தக்க பாரமாய்த் தானியத்தாலே நிரப்பி, அவனவன் பணத்தை அவனவன் சாக்கின் வாயிலே போட்டு, இளையவனுடைய சாக்கின் வாயிலே வெள்ளிப்பாத்திரமாகிய என் பானபாத்திரத்தையும், தானியத்துக்கு அவன் கொடுத்த பணத்தையும் போடு" என்று கட்டளையிட்டார். அவன் அப்படியே செய்தான். மறுநாள் விடியற்காலத்தில் அண்ணன்மார் அவர்கள் கழுதைகளுடன் அனுப்பிவிடப்பட்டார்கள். அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு வெகு தூரம்போவதற்கு முன்னே, முனிவர் தன் வீட்டு விசாரிப்புக்காரனை நோக்கி: நீ ஓடிப்போய் அவர்களைப் பின்றொடர்ந்து அவர்களைப் பிடித்து: "நீங்கள் நன்மைக்குத் தீமை செய்ததென்ன?" என்று கேள் என்றார். அவர்கள் சந்தோஷமாய் ஒருவருடன்

ஒருவர் பேசி வழிநடந்துபோகையில் பின்னாலே ஒருவன் தலை தெறிக்க ஓடிவரக் கண்டார்கள். அவர்கள் கூர்ந்து பார்த்தபோது அது மந்திரியின் வேலைக்காரனென்று அறிந்துகொண்டார்கள்.

அவன் ஓடிவருகையில் சத்தமிட்டு: நில்லுங்கள், நில்லுங்கள்; என் எஜமானுடைய வெள்ளிப்பாத்திரத்தை நீங்கள் எடுத்துக்கொண்டுபோனதென்ன? என்று கேட்டான். அதைக் கேட்டு அவர்கள் அதிசயப்பட்டு: "எங்கள் ஆண்டவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதென்ன? இப்படிப்பட்டகாரியத்துக்கும், உம்முடைய அடியாராகிய எங்களுக்கும் வெகு தூரம். எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தை கானான்தேசத்திலிருந்து திரும்ப உம்மிடத்திற்குக் கொண்டுவந்தோமே; நாங்கள் உமது எஜமானின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் திருடிக் கொண்டுபோவோமா? உமது அடியாருக்குள்ளே அது எவனிடத்தில் காணப்படுமோ அவன் கொலையுண்ணக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம்" என்றார்கள்.

அதற்கு வீட்டுவிசாரணைக்காரன்: எல்லாரும் தண்டிக்கப்படவேண்டியதில்லை. பாத்திரம் யாரிடத்தில் அகப்படுமோ அவன் தண்டிக்கப்படுவான்; மற்றவர்கள் தாராளமாய்ப் போகலாமென்று சொல்லி, அவரவர் தங்கள் சாக்குகளைக் காட்டுங்கள் என்றான். அப்படியே மூத்தவன் முதல் இளையவன் மட்டும் அவரவர் சாக்கைத் திறந்து இதோ பார், இதோ பார் என்று காட்டினார்கள். கடைசியாய் அந்தப் பாத்திரம் எல்லாருக்கும் இளையசகோதரன் சாக்கில் கண்டெடுக்கப்பட்டது. உடனே அவர்களுக்குண்டான கலக்கமும் துக்கமும் இவ்வளவென்றல்ல. அண்ணன்மார் எல்லாரும் பென்யமீனை ஒப்புக்கொடுத்துப் போய்விடலாம்; அவர்கள் அப்படிப் போகவில்லை. முன் ஒருகாலத்தில் கடின மனதால் முனிவனை விற்றார்களே, அந்தப் புத்தியை அவர்கள் மறந்துபோனார்கள். எல்லாரும் துக்கப்பட்டு தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, பொதிகளை மறுபடியும் ஏற்றிப் பட்டணத்துக்குத் திரும்பிவந்தார்கள். அவர்களெல்லாரும் மந்திரியைக் கண்டவுடன் முகங்குப்புறத் தரையிலே விழுந்தார்கள். அவர் அவர்களைப்பார்த்து: இந்த வேலையும் உங்களுக்குப் பாடமா? ஏன் இப்படிச் செய்தீர்களென்று உருக்கினார். அப்பொழுது யூதா என்பவன், நடந்த காரியம் நடந்தாயிற்று, களவு கையும்மெய்யுமாய் அகப்பட்டிருக்கிறது; இனிப் பென்யமீன் திருட



வில்லையென்று முகாந்தரம் சொல்லியாவதென்ன என்று எண்ணி: "என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தைத் தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள்" என்றான்.

யூதா என்பவன் தேவன் தங்கள் பழைய குற்றங்களினிமித்தம் தண்டிக்கவேண்டுமென்று எண்ணித்தான் இப்படியெல்லாம் செய்கிறாரென்று நினைத்தான்.

முனிவரோ திருடின பென்யமீன் எகிப்தில் அடிமையாய் இருக்கவேண்டும், மற்றவர்கள் சுகமாய்த் தங்கள் தேசத்துக்குப் போகலாமென்று உத்தரவுபண்ணினார். அப்பொழுது யூதா முனிவர் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து, கும்பிட்டுக் கிட்டப்போய் சொல்லுவான்:—

"ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உமது செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர். உங்களுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டா என்று என் ஆண்டவன் உமதடியாரிடம் கேட்டீர். அதற்கு நாங்கள்: எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனாரும், அவருக்கு முதிர்வயதிலே பிறந்த இளைஞனும் உண்டென்றும், அவனுடைய தமையன் இறந்துபோனான் என்றும், அவன் ஒருவன்மாத்திரமே அவனைப் பெற்ற தாயாருக்கு இருப்பதினால் தகப்பனார் அவன்மேல் பட்சமாயிருக்கிறாரென்றும் என் ஆண்டவனுக்குச் சொன்னோம். அப்பொழுது நீர் அவனை என்னிடத்திற்குக் கொண்டுவாருங்கள்; என் கண்களினால் அவனைப் பார்க்கவேண்டும் என்று உமது அடியாருக்குச் சொன்னீர். நாங்கள் ஆண்டவனை நோக்கி: அந்த இளைஞன் தன் தகப்பனை விட்டுப் பிரியக்கூடாது, பிரிந்தால் அவர் இறந்துபோவார் என்று சொன்னோம். அதற்கு நீர்: உங்கள் இளைய சகோதரனைக் கொண்டுவராவிட்டால், நீங்கள் இனி என் முகத்தைக் காண்பதில்லையென்று உமது அடியாருக்குச் சொன்னீர். நாங்கள் உமது அடியானாகிய என் தகப்பனாரிடத்துக்குப் போனபோது, என் ஆண்டவனுடைய வார்த்தைகளை அறிவித்தோம். எங்கள் தகப்பனார் எங்களை நோக்கி: நீங்கள் திரும்பப்போய், நமக்குக் கொஞ்சம்தானியம் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதற்கு;

நாங்கள் போகக்கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே வந்தால் போவோம்; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே வராவிட்டால், நாங்கள் அந்தப் புருஷனுடைய முகத்தைக் காணக்கூடாது என்றோம். அப்பொழுது உமதடியானாகிய என் தகப்பனார்: என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள்; அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்து போய்விட்டான், அவன் பீறுண்டுபோயிருப்பான் என்றிருந்தேன், இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன், இதெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் இவனையும் என்னைவிட்டுப் பிரித்து அழைத்துப்போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்டால், என் நரைமயிரை வியாகுலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றார். ஆகையால் இளையவனை விட்டு, நான் என் தகப்பனாகிய உமதடியானிடத்துக்குப் போனால், அவருடைய ஜீவன் இவனுடைய ஜீவனோடு ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறபடியினால், அவர் இளையவன் வரவில்லையென்று அறிந்தமாத்திரத்தில் இறந்துபோவார்; இப்படி உமதடியாராகிய நாங்கள் உமதடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவோம். இந்த இளையவனுக்காக உமதடியானாகிய நான் என் தகப்பனுக்கு உத்தரவாதி; அன்றியும், நான் இவனை உம்மிடத்திற்குக் கொண்டுவராவிட்டால், நான் எந்நாளும் உமக்குமுன்பாகக் குற்றவாளியாயிருப்பேன் என்று அவருக்குச் சொல்லியிருக்கிறேன். இப்படியிருக்க, இளையவன் தன்சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடம் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன்" என்றான்.

## முனிவர் மன்னித்த பருவம்.

யூதா கண்ணீர்சொரிந்து சொன்னவார்த்தைகளையும், அவன் சகோதரர் எல்லாரும் இளைய சகோதரனுக்காக மாறாய் மறுகிறதையும் பார்த்து: அந்நியர் எல்லாரையும் வேலைக்காரரிடத்தில் சொல்லி வெளியே போகப்பண்ணினார். முனிவரும் அவர் சகோதரருமாத்திரம் இருந்தார்கள். அவர் வெப்பம் பொறுக்கமாட்டாமல் வெளியில் கேட்கத்தக்கதாய் சத்தமிட்டு



அழுதார். கடைசியாக அவர் அவர்களைப்பார்த்து: "நான் யோசேப்பு; என் தகப்பனார் இன்னும் உயிரோடிருக்கிறாரா" என்றார். இந்த வார்த்தைகள் ஒரு ஈட்டிபோல் அவர்கள் நெஞ்சைப் பிளந்தது; அவர்கள் பிரமித்து உத்தரவு சொல்லக்கூடாமலிருந்தார்கள். முன்செய்த குற்றத்துக்கெல்லாம் இப்பொழுது சேர்த்துப் பழிவாங்கப்போகிறார் என்றெண்ணி திடுதிடு கலக்கமாய் நின்றார்கள். அப்புறம் முனிவர் என்கிட்ட வாருங்கள் என்றார்; கிட்டப் போனார்கள். அப்பொழுது முனிவர் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான். என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம். ஜீவரட்சணை செய்யும்படிக்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும், அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்திற்கு அனுப்பினார். நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாக வைத்தார், என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்டாம். நீர் கோசேன் நாட்டில் வாசம்பண்ணி என் சமீபத்தில் இருக்கலாம். அங்கே உம்மைப் பராமரிப்பேன்; ஏனெனில் இன்னும் பஞ்சமுள்ள ஐந்து வருஷங்களிருக்கிறது. உமக்கும் உமக்கிருக்கிற குடும்பத்தாருக்கும் வறுமை வராதபடிக்கு அது உதவியாயிருக்கும். இதோ, உங்களோடே பேசுகிற வாய் என் வாய்தான் என்பதை உங்கள் கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின் கண்களும் காண்கிறதே. எகிப்தில் எனக்குண்டாயிருக்கிற சகல மகிமையையும் நீங்கள் கண்டயாவையும், என் தகப்பனுக்கு அறிவித்து, அவர் சீக்கிரமாய் இவ்விடத்துக்கு வரும்படி செய்யுங்கள்" என்றார்.

அப்புறம் அவர் பென்யமீன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதார்; மேலும் அவர் தன் அண்ணன்மாரெல்லாரையும் கட்டிக்கொண்டு அழுது முத்தமிட்டார். இப்படியெல்லாம் நடந்த பின்பு அவர்கள் துக்கம் சந்தோஷமாய் மாறிற்று.

முனிவரின் சகோதரர் வந்தார்கள் என்று பார்வோன் அரமனைக்குத் தெரியவந்தது. அச்செய்தி இராஜாவுக்கும் பிரதானிகளுக்கும் சந்தோஷமாயிருந்தது. அப்பொழுது அரசன் முனிவ

ளைப் பார்த்து: "நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும், மனைவிகளுக்காகவும் வண்டிகளை எகிப்திலிருந்து கொண்டுபோய், அவர்களையும் உங்கள் தகப்பனுடனே ஏற்றிக்கொண்டுவாருங்கள். உங்கள் தட்டுமுட்டுகளைக்குறித்து கவலைப்படவேண்டாம்; எகிப்துதேசமெங்குமுள்ள நன்மை உங்களுடையதாயிருக்கும் என்று சொல்லச்சொல்லி, உனக்கு நான் இட்ட கட்டளைப்படியே செய் என்று சொன்னான்."

யோசேப்பு இராஜன் விரும்பினபடி தன் சகோதரருக்கு வண்டிகளையனுப்பி, வழிக்கு ஆகாரத்தையும், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தார்; பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும், ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தார். முனிவர் தன் தகப்பனுக்கு தானியமும், உசிதமான பதார்த்தமும், இருபது கழுதைகளின் மேல் பொதியேற்றி அனுப்பினார். இவ்வண்ணம் முனிவர் தன் சகோதரரை சந்தோஷமாய் வழிவிட்டனுப்பி, "நீங்கள் போகும் வழியிலே சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள்" என்று புத்திசொல்லியனுப்பினார்.

முனிவரின் அண்ணன்மார் கானான்தேசத்திலுள்ள தங்கள் தகப்பனிடத்தில் வந்தபோது: "யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறான், அவன் எகிப்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான்" என்று அறிவித்தார்கள். உடனே யாக்கோபுக்கு மூர்ச்சையுண்டாயிற்று; அவன் அவர்களை நம்பவில்லை. ஆனால் முனிவர் அனுப்பிய வண்டிகளையும், உசிதமான பதார்த்தங்களையும் கண்டபோது, அவனுக்கு உயிர்பிறந்தது. அப்பொழுது அவன், "யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறானே, இது போதும்; நான் மரணமடையுமுன்னே போய் அவனைப் பார்ப்பேன்" என்றான்.

யாக்கோபு தன் ஆஸ்திபாஸ்திகள் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு எகிப்துக்குப் போனான். வழியில் ஒரே மெய்யான தேவனுக்குப் பலியைச் செலுத்தினான். அப்பொழுது தேவன் அவனுக்குத் தரிசனையாகி, அவனைப் பெரிய ஜாதியாக்குவோமென்றும், அவன் சந்ததியை மறுபடியும் கானானில் கொண்டுவந்து சேர்ப்போமென்றும் திருவாக்கருளினார். எகிப்திக்குப் போன யாக்கோபின் குடும்பத்தொகை எழுபதுபேர்.

தகப்பன் வருகிற செய்தியை முனிவர் கேள்விப்பட்டு தன் இரதத்தில் ஏறி, அவனுக்கு எதிர்கொண்டு போனார். தகப்பனைக் கண்டவுடனே ஓடிப்போய், கழுத்தைக் கட்டிக்கொண்டு வெகுநேரம் அழுதார். அப்பொழுது தகப்பன் மகனைப்பார்த்து: "நான் உன் முகத்தைக் கண்டேன், எனக்கு இப்போது மரணம் வந்தாலும் வரட்டும்" என்றான்.



தன் தகப்பனும் சகோதரரும் வந்த செய்தியை முனிவர் பார்வோனுக்குச் சொல்லி, அவர்களைக் கோசேனில் குடியிருக்க உத்தரவுகேட்டார். அவ்விடத்தில் அவர்கள் ஆடுமாடுகளுக்கு மேய்ச்சல் ஏராளமாயிருந்தது. அப்புறம் முனிவர் தன் சகோதரரில் ஐந்துபேரை ராஜதரிசனம் பெறச் செய்தார். "இராஜா அவர்களிடத்தில் உங்கள் தொழில் என்ன என்று கேட்டான். அதற்கவர்கள்: உமதடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தைமேய்க்கிறவர்கள்" என்றார்கள். அப்பொழுது இராஜா முனிவரைப் பார்த்து: "எகிப்துதேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படி செய்; அவர்களுக்குள்ளே திறமையுள்ளவனுண்டென்று உனக்குத் தெரிந்தால் அவர்களை என் ஆடுகளை விசாரிக்கிறதற்குத் தலைவராக வைக்கலாம்" என்றான். முனிவர் தன் தகப்பனையும் இராஜதரிசனைபெறச் செய்தார். அவன் மகா விருத்தாப்பியனும் நரைத்தவனுமாயிருந்தான். பார்வோன் அவனைப் பட்சமாயும் கனமாயும் நடத்தி, அவனிடத்தில் உமக்கு வயதென்ன என்று கேட்டான். அதற்கு யாக்கோபு: "நான் பரதேசியாய்ச் சஞ்சரித்த நாட்கள் நூற்றுமுப்பது வருஷம்" என்றான். அப்புறம் யாக்கோபு இராஜாவுக்கு ஆசீர்வாதமுண்டாகக் கடவுளைப் பிரார்த்தித்து தன் வீட்டுக்கு வந்தான். யாக்கோபு தன் அந்தியகாலத்தை எகிப்தில் பின்னிட்டுத் தன் பிள்ளைகுட்டிகளுடன் சந்தோஷமாயிருந்தான். முனிவர் மூன்று தலைமுறை உயிரோடிருந்து, பேரன் பேர்த்தி பூட்டன் பூட்டி கண்டு, நூற்றுப்பத்து வயதுடையவனாய் அரசன் கலங்க, அண்டம் குலுங்க, வைத்தியர் நடுங்க, பிரபுக்கள் நெருங்க, பிள்ளைகள் அலற, பெண்சாதி புலம்ப, அண்ணன்மார் அழ, அயலகத்தார் ஓலமிட, மந்திரியாயிருந்து மணக்கோலம் அணிந்தவர் பிணக்கோலமாகிப் பேரானந்தபதி சேர்ந்தார்.

யோசேப்பின் சரித்திரம் வாசிக்கிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் இனிமையைக் கொடுக்கிறது. அவருடைய ஜீவிய விருத்தாந்தம் திருஅவதார மூர்த்தியும், பரமகுருவுமாகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவிய விருத்தாந்தத்துக்கு அநேக விஷயங்களில் ஒத்திருக்கிறது. அவைகளில் இரண்டொன்றைமாத்திரம் சொல்லுகிறேன்:—

யோசேப்பு முந்திப் பட்டபாடுகளும் பிந்தியடைந்த மகிமையும், கிறிஸ்து பட்டபாடுகளுக்கும் அவரடைந்த மரணத்துக்கும் ஒப்பாயிருக்கிறது.

> “உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்
> உடன்பிறந்தே கொல்லும் வியாதி”

என்கிற பாட்டின்படி யோசேப்பை அவருடைய உடன்பிறந்தாரே பகைத்தார்கள்; “குலத்தைக் கெடுக்குமாம் கோடரிக்கை” என்கிற பழமொழிப்படி, கிறிஸ்துவையும் அவருடைய சொந்தக்குலத்தாரே பகைத்தார்கள். யோசேப்பு தன் வீட்டைவிட்டு காட்டிலிருந்த தன் அண்ணன்மாரைப் பார்க்கப்போனபோது, அவனை அவர்கள் படாதபாடெல்லாம் படுத்தினார்களே; அதுபோல் ஜகத் இரட்சகர் தமது சொந்தவீடாகிய பரமண்டலம் விட்டுப் பூலோகத்தாரை நேசித்து, அவர்களுக்கு இரட்சிப்பின் மங்களசெய்தியைத் தெரிவிக்கும்படி மனுஷீகம் எடுத்துவந்தபோது, துரோகிகள் அநியாயமாய் அவனைக் கொலைசெய்தார்கள். யோசேப்பை அவர் உடன்பிறந்தார் இருபது ரூபாய்க்கு விற்றதுபோல், கிறிஸ்துவும் முப்பது ரூபாய்க்கு விற்கப்பட்டார். யோசேப்பு காவலில் போடப்பட்டும் கடைசியில் மந்திரி உத்தியோகம் அடைந்ததுபோல், கிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டாலும் மனுஷரைப்போல் மண்ணுக்கு மண்ணாய்ப்போகாமல், வெற்றிவேந்தராய் மூன்றாம் நாளில் உயிரோடெழுந்திருந்து பின்பு பரலோகம் போனார். இவ்விதமாய்ப் பார்த்தால் யோசேப்பு கிறிஸ்துவுக்கு ஒரு சிறந்த முன்னடையாளம்.

பின்னும் யோசேப்பின் சரித்திரத்தில் நாம் அறிந்துகொள்ளத்தக்க அநேக போதனைகளுண்டு. கடவுளை நேசிக்கிறவர்களுக்குக் கடைசியில் எல்லாம் நன்மையாய் முடியுமென்று இவர் சரித்திரத்தால் தெரியவருகிறது.

யோசேப்பு என்பவர் தான் எப்போதும் தேவனுடைய முகத்துக்குமுன்பாக இருக்கிறதுபோல் எண்ணி, அவருடைய சித்தத்தை நிறைவேற்றக் கவலைப்பட்டார். இது துவக்கத்தில் அவருக்கு வருத்தத்தைக் கொடுத்தாலும், கடைசியில் கனத்தையும் அவர் குடும்பத்துக்கு நல்ல சவரட்சணையையும் கொடுத்தது. நீங்களும் இப்படியே மெய்யான தேவனுடைய சவரட்சணைக்குள்ளிருக்கும்படி கவலைப்படவேண்டும். அவர் இவ்வுலகத்தில் உயர்ந்த அந்தஸ்தை ஒருவேளை உங்களுக்குக் கொடுக்காவிட்டாலும், நன்மையானது இன்னதென்று அறிந்து அதை



உங்களுக்குக் கொடுத்து, கடைசியில் பொன்னகரியில் சேர்ப்பார்.

யோசேப்பின் சரித்திரத்தைக்கொண்டு நாம் மன்னிக்கிற சுபாவமுடையவர்களாயிருக்கவேண்டும் என்றும் படித்துக்கொள்ளலாம். தன்னை விற்றுப்போட்ட சகோதரர்பேரில் எவ்வளவு பட்சம் காட்டினார்! அவர்கள் தன் வசத்தில் அகப்பட்டும் தண்டியாமல் எல்லாவற்றையும் மன்னித்தார். அப்படியே நாமும் தீமையினாலே ஜெயிக்காமல் தீமையை நன்மையினாலே ஜெயிக்கவேண்டும்.

# MOSES.

# மோசே முனிவர்.

## சங்கடப்பருவம்.

நாம் பூர்வமகாத்துமாக்களின் வரலாறுகளை அறியும்படி பிரயாசப்படும்போது, தேவன் தமது நாமத்தை ஆராதிக்கும் ஜனக்கூட்டத்தை எவ்வண்ணம் ஆயத்தப்படுத்திவந்திருக்கிறார் என்பது முதலாவது தெரியவருகிறது; ஆதலால் நாம் அநேக ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஆட்களைப்பற்றி ஆராயும்போது தேவன் அக்காலங்களில் மெய்த்தேவவணக்கத்தை இன்னின்ன முறையாய் நிலைநிறுத்திவந்திருக்கிறாரென்று கண்டறிந்துகொள்ளவேண்டியது. தேவனை உத்தமமாய் ஆராதிக்கும் ஒரு ஜனக்கூட்டம் ஆதிமுதல் உலகத்தில் இருந்துவந்தது; அந்தக் கூட்டமானது தன் உத்தமத்திலிருந்து ஒருகாலத்தில் சமூலமாய் விலகிப்போனபோதிலும், தேவன் மறுபடியும் நோவா என்னும் முனிவரைப் பேழையில் தற்காத்து மற்றவர்களைப் பிரளயத்துக்கு இரையாக்கி, அந்த ஒரு பக்தன்மூலமாய் மறுபடி உத்தமதேவாராதனையை இப்பூவுலகில் ஸ்தாபித்தாரென்று பிரளயமுனிவருடைய சரித்திரத்தால் அறிந்தோம். அதன் பின்பு மறுபடியும் ஒருதரம் உலகம் சீர்கேட்டைத் தேடி தேவனைக் கைவிட்டகாலத்தில் ஆபிரகாம்முனிவரைத் தேவன் பிரித்தெடுத்து, அவர் மூலமாய் ஒரு சந்ததியை எழுப்பி தம்மை வணங்கும் வணக்கத்தை நிலைநிறுத்தினார் என்று விசுவாச

முனிவருடைய சரித்திரத்தால் அறிந்தோம். இப்பொழுது நாம் ஆராயும் சரித்திரம் அவை எல்லாவற்றிலும் விசேஷமானது என்றுசொல்லவேண்டியது.

விசுவாசமுனிவரிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட தெய்வீக விசுவாசமானது அநேக ஆண்டுகளாக சுத்தாங்கமாய் நிலைநின்றபோதிலும், சுமார் நானூற்றுமுப்பது வருஷத்துக்குள்ளாக அது மறுபடியும் சீர்கெட்டுப்போயிற்று. ஆபிரகாம் முனிவருடைய சந்ததியார் சொப்பனமுனிவர் என்ற பேரால் நாம் அழைத்த யோசேப்பு என்பவர்காலத்தில் கானான்சீமையை விட்டு தங்கள் ஆடுமாடுகளோடும், வேலையாட்களோடும் எகிப்துக்குப் போனார்களே. அவர்கள் வெகுகாலம் தங்கள் பிதாக்களின் தேவனாகிய யேகோவாவைத் தொழுதுகொண்டபோதிலும், காலம் செல்லச்செல்ல அந்தப் பரிசுத்தவழிகளை விட்டு விலகி எகிப்திய விக்கிரகபாதையிலே செல்லத் தலைப்பட்டார்கள்; ஆதலால் அவர்களை அவ்விடத்திலிருந்து பிரித்தெடுத்து தனிமையான ஒரு தேசத்தில் வைத்து மெய்மார்க்கத்தை மறுபடியும் புதுப்பிக்கவேண்டியதாய் இருந்தது. (எசே. 20. 8, 9.)

எகிப்தில் வெகுகாலம் சஞ்சரித்துத் திரள்கூட்டமாய்ப் பெருகிப்போயிருந்த இஸ்ரவேலரை ஆட்டுமந்தையைப்போல் கானான்தேசத்துக்குத் திருப்பிக்கொண்டுவரவும், அவர்களுக்கு தேவகட்டளைகளையும் ஆளுகைச் சட்டங்களையும் தமது சித்தத்தின்படி ஏற்படுத்தவும் அவர்களை வனாந்தரவழியாய்நடத்தி ஆளவும் ஒரு புருஷனை எழுப்பும்படி கடவுள் சித்தங்கொண்டார். இப்பொழுது நாம் இந்தப் பெரிய மகாத்துமாவைப்பற்றிய வரலாறுகளை வாசிக்கப்போகிறோம். இதை வாசிக்கும்போது நாம் மோசேமுனிவரைப் போற்றிப் பிரஸ்தாபிப்பதைவிட தேவாதி தேவனுடைய செயல்களையும், அவருடைய மகிமைப் பிரதாபங்களையும் நினைத்து, அவரைப் புகழ்ந்து பிரஸ்தாபிப்பது தகுதியாயிருக்கும். இவரால் முடியவேண்டிய பெரிய வேலைக்கேற்ற தகுதியைக் கடவுள் இவருக்கு அருளிச்செய்திருந்தார். இவரைப்போல் தேவப்பிரசன்னத்தின் அருளைப் பெற்றவர்களுமில்லை, தேவமகிமையின் பிரஸ்தாபத்தை நிலைநிறுத்தினவர்களுமில்லை என்று சொல்லவேண்டியது. (உபா. 34. 10–12.)

மோசேமுனிவர் பிறந்தகாலத்தில் இஸ்ரவேலர் சொல்லிமுடியாத கஷ்டங்களை அனுபவித்துவந்தார்கள். அவர்கள் வாழ்வும் சந்தோஷமும் யோசேப்போடு போயிற்றென்று சொல்லவேண்டியது; ஆனாலும் அத்தேசத்துக்கு அரசராய் வந்தவர்



கள் அநேக ஆண்டுகளாக சொப்பனமுனிவரால் தங்கள் தேசத்துக்கு வந்த வாழ்வுகளை நினைத்து, அவருடைய வீட்டாரையும் பட்சமாய் நடத்தினார்கள். வரவர அந்த ராஜ்யத்திலே ஒரு பெரிய மாறுதல் உண்டாகியிருக்கவேண்டியது. பழைய மந்திரியின் குடும்பத்தாரை அடியோடு வெறுத்த ஒரு பட்சத்தார் அங்கே எழும்பினார்கள். அவர்களின் சொற்சக்தி ராஜ்யத்தில் அதிகப்பட அதிகப்பட இஸ்ரவேலருடைய காரியம் கஷ்டத்திலிருந்தது.

அத்தேசம் மகா நீர்வளமும் நிலவளமும் பொருந்தியதாய் இருந்தது. அயல்நாட்டார் அந்நாட்டைக் கண்ணுற்றால் இப்படிப்பட்ட தலமும் பூலோகத்திலுண்டோ என்று சொல்லத்தக்கதாயிருந்தது. அந்நாட்டின்மேலிருக்கும் வானத்தில் மேகங்களைக் கண்டுபிடிப்பது அருமையானாலும், பூமிக்குள் மேகங்கள் இருந்தெழும்புகிறதாக்கும் என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு செழிப்பாக இருக்கும். மண்மாரியைத்தவிர விண்மாரியைக் காண்பது அபூர்வமாயிருந்தாலும், அநேக காத தூரத்துக்கப்பால் இருந்த உச்சிமலைகளில் கட்டியிருக்கும் பனிக்கட்டிகள் உருகி பிரளயமாய் ஓடி பல ஆறுகளாய்ப் பிரிந்து அத்தேசத்தைச் செழிப்பாக்கிற்று. அத்தேசத்தின் அரசன் தன் செல்வச்செருக்கினாலும் தானியப் பெருமையினாலும் சம்பிரமமாய்க் காலங்கழித்தான். அத்தேச அரசர் எல்லாருக்கும் பார்வோன் என்பது பட்டப்பெயராய் இருந்தது. சுமார் மூவாயிரத்து முந்நூறுவருஷங்களுக்குமுன்னே யோசேப்பை அறியாத பார்வோன் என்னும் ஒரு சக்கரவர்த்தி அத்தேசத்தில் செங்கோல் செலுத்திவந்தான். இவன் யோசேப்பின் காலத்திலிருந்த இராஜ குடும்பத்தைச் சேராமல், பின்பு எழும்பின புது இராஜவம்சத்தானாய் இருக்கவேண்டியது. இவன் மகா குரூரன். இவன் தன் அரசாட்சியைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டால் நாடும் நகரமும், கோட்டையும் கொத்தளமும் கலங்கும். இவன் பேரைக்கேட்டால் அஷ்டதிக்கும் அதிரும்; கொலைக்கு அஞ்சான், பழிக்குப் பதரான், பிறர் வாழச் சகியான், தான் வாழத்தெரியான், அண்டினோரை ஆதரியான், அடைக்கலம் புகுந்தவர்களோடு படைக்கலமெடுப்பான். இந்த வன்னெஞ்சனும் கன்னெஞ்சனுமான அரசனுடைய குடைக்குள் அமைதலும் சுறுசுறுப்புமுள்ள ஒரு ஜாதியார் நிலவரி நீர்வரி கொடுத்து, சட்டநிபந்தனைகளுக்கு அடங்கி, அவனவன் தன்தன் பயிர்பச்சை, ஆடுமாடுகளைப் பார்த்துக்கொண்டு சுக

மாய்க் காலங்கழித்துவந்தார்கள். அவர்களுக்கு எபிரெயர் அல்லது இஸ்ரவேலர் என்று பேர்.

அக்காலத்தில் இருந்த எகிப்தியர் தங்கள் செல்வச்செருக்கினால் சோம்பேறிகளாகி, சுகத்தை நாடி, வேலையை வெறுத்து, உலகஇன்பத்தில் ஆசைமூண்டு இருந்தார்கள் என்றும், எபிரெயரோ வழக்கப்படி கஷ்ட வேலைசெய்து காடுகளில் மந்தை மேய்த்து பணத்திலும், பராக்கிரமத்திலும் சிறந்திருந்தார்கள் என்றும், யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் சொல்லுகிறான். இந்த சற்புத்திரரான கூட்டத்தார் தொகையிலும் ஏராளமாயிருந்தார்கள். இவர்கள் ஏராளமாய்ப் பெருகுகிறது அரசன் கண்ணுக்குப் பொறுக்காமல் ஒருநாள் தன் மந்திரி பிரதானிகளைக் கூப்பிட்டு, ஓ, சகல கலைவல்லவர்களாகிய என் மந்திரிகளே! பிரதானிகளே! ஒரு காரியத்தை நீங்கள் இதுவரையும் கவனியாமல்விட்டதென்ன? அது உங்கள் தந்திரமோ, அறியாமையோ, பாரபட்சமோ, வேறென்னவோ? இதோ, எபிரெயர் நம்மைவிட தொகையிலும் பலத்திலும் மிஞ்சினவர்களாயிருக்கிறார்களே; ஒரு எதிரிவந்தால் அவர்கள் அவன் பட்சத்தில் சேர்ந்துகொண்டு நம்மை அர்த்தநாசம்பண்ணி, நமது தேசத்தையும் விட்டுப் போய்விடலாமே; அப்போது நமக்கு எவ்வளவு நஷ்டம்? வெள்ளம் வருமுன்னே அணைகட்டுவதல்லோ நன்று; நஷ்டம் நேரிடுமுன்னே நம்மைக் காத்துக்கொள்வதல்லோ புத்தி. உடைந்தபின் ஏரியைக் கட்டுவதிலும், உடையுமுன் அணையைப் பேணுவதல்லோ யூகம். ஆகையால் அவர்களை இனிப் பெருக இடங்கொடுக்கலாகாது. அவர்களை அடக்க நாம் ஏதாவதோர் உபாயம் தேடவேண்டும். இது உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஓ இராஜாபிமானமுள்ள என் மந்திரிகளே! பிரபுக்களே! சொல்லுங்கள் என்று கேட்டான்.

அதைக்கேட்ட மந்திரி பிரதானிகள் எல்லாரும் கால்பூட்டிப் பணிந்து, கைகட்டிக் குனிந்து, வாய்பொத்திப் பேசி, மகாராஜா மொழிக்கு எதிர்மொழியும் உண்டோ? அரசன் சொல்வதே சரியென்றார்கள். அப்பொழுது அவர்களைக் குறைக்க வேலையினால் ஒடுக்கினார்கள். அக்காலத்தில் அவர்கள் நீல்நதியிலிருந்து அத்தேசம் எங்கும் பாயும்படி பல கால்வாய்களை வெட்டினார்கள்; குளங்களை உண்டுபண்ணினார்கள்; கோட்டை கொத்தளங்களைக் கட்டினார்கள்; பிரமிட் என்று அழைக்கப்படும் உச்சிக்கோபுரங்களை எடுப்பித்தார்கள். இவ்வண்ணம் அவர்கள் வேலைகளால் பட்டவருத்தங்களுக்கு ஒரு அளவிருந்ததில்லை. இவர்கள் எவ்வளவிற்கு ஒடுக்கினார்களோ அவ்வள



வுக்கு அதிகமாய் அவர்கள் பெருகினார்கள். அவர்களை ஒடுக்க இவ்வளவு போதாதென்று அரசன்கண்டு, மருத்துவச்சிகளைக் கூப்பிட்டு, மருத்துவச்சிகளே! நீங்கள் இனி எபிரெயஸ்திரீகளுக்கு மருத்துவம்பார்க்கும்போது, ஆண்பிள்ளையானால் அந்நிமிஷமே கொலைசெய்துபோடவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால் நான் உங்களை லேசில் விடேன் என்று கட்டளையிட்டான். மருத்துவச்சிகள் அரசனுக்கோ ஆண்டவனுக்கோ, யாருக்கு பயப்படவேண்டியது? ஆண்டவருக்கல்லவா? அவர்கள் கடவுளுக்குப் பயந்து யாதொரு ஆண்பிள்ளைகளையும் கொலைசெய்யவில்லை. சிலநாள் பொறுத்து அரசன் மருத்துவச்சிகளைக் கூப்பிட்டு: நீங்கள் ஆண்பிள்ளைகளை உயிரோடுவைக்கிறீர்களே, அது என்னவிஷயமென்று கேட்டான். அந்த மருத்துவச்சிகள்: "பாம்பும் சாகவேண்டும், கோலும் ஒடியக்கூடாது" என்ற பழமொழிப்படி அங்குமிங்கும் சாராமல், மகாராஜாவே! எபிரெயஸ்திரீகள் எகிப்தியஸ்திரீகளைப்போல் அல்ல, அவர்கள் பலசாலிகள்; நாங்கள் போமுன்னே பெற்றெடுத்துப் பால்கொடுக்கிறார்கள்; ஆகையால் அரசன் கட்டளையை நாங்கள் நிறைவேற்ற ஏதுவில்லையென்று சொன்னார்கள். ஒரு எகிப்தியஜோசியன் இந்தக்காலத்தில் ஒரு விசேஷமான எபிரெயபுத்திரன் பிறப்பான் என்றும், எகிப்திய அரசாட்சியைத் தாழ்த்தி இஸ்ரவேலலைக் கனப்படுத்துவான் என்றும் அரசனுக்குத்தெரிவித்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறார்.

இதைக்கேட்ட அரசன், காரியம் இப்படியாயிருக்கிறது? இதற்கென்ன உபாயம் செய்யலாமென்று யோசித்து, இதுவே உபாயமென்று தெளிந்து, பறைமுறைசாற்றுகிறவனைக் கூப்பிட்டு, நீ எபிரெயர் குடியிருக்கும் ஊர் ஊராய்த் தெருத்தெருவாய் வீடுவீடாய் மேளங்கொட்டி, பிறக்கிற ஆண்குழந்தைகளையெல்லாம் நீல் என்னும் ஆற்றில் போட்டுவிடவேண்டுமென்று அரசன் ஆக்கியாபித்ததாக பறைசாற்று என்று உத்தரவு கொடுத்தான்.

உடனே மேளக்காரன்: தண்டம், மகா இராஜாவே தண்டம் என்று கும்பிட்டு, மார்பில் பெரியதோர் மேளத்தைத் தொங்கக் கட்டிக்கொண்டு ஊர் ஊராய்த் தெருத்தெருவாய் வீடுவீடாய்ப் போய்: இராஜாதி இராஜன், இராஜசெம்பீரன், இராஜ உல்லாசன், வில்லுக்கு விஜயன், வாளுக்கு வீமன், வீரத்தில் சூரன், நினைத்ததை முடிக்கும் நிபுணன், பார்த்ததைப் பறக்கடிக்கும் பார்வோன் மகா இராஜா, பிறக்கிற ஆண்குழந்தைகளையெல்லாம் நீலமாநதியில் நிமிஷம்பிந்தாமல் நீட்டிவிடக் கற்பிக்கிறார்

என்றுகூறி, டம, டம, டம என முரசடித்தான். இந்தமுரசைக் கேட்டவுடனே ஊர் கலங்கிற்று; தெருக் குலுங்கிற்று; வீடு நடுங்கிற்று; உதடு புலம்பிற்று; அழுவார் ஆயிரம், அங்கலாய்ப்பார் ஆயிரமாயிருந்தது; ஆனால் மன்னன் வாக்குக்கு மறுவாக்குண்டோ? அநேகம் தாய்மார் அசையாமல் சுமந்து, அன்பாகப்பெற்ற ஆண்குழந்தைகளை ஆருத்துயரத்தோடு ஆற்றில் எறிந்தார்கள்.

## முனிவர் ஜனனபருவம்.

இப்படிப்பட்ட நெருக்கமும், சிறுமாறுமுள்ளகாலத்தில் ஒரு ஸ்திரீ ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றாள்.* பெற்றவுடனே ஆற்றில் எறியவேண்டியதாயிருந்தாலும், அந்தப் பாலகன் அழகைப்பார்த்துப் பிரமைகொண்டு, இந்த அழகு சௌந்தர கனியை நான் எப்படிக் கொண்டுபோய் எறிய என்று புலம்பி, நாளைக்குப் போடலாம், நாளைக்குப் போடலாமென்று காலங்கடத்தி, மூன்றுமாதம் அயல்வீடு அண்டைவீடு தெரியாமல் ஒளித்துவைத்திருந்தாள். இந்த மூன்றுமாசங்களாய் இவளுக்குண்டாயிருந்த பயம் இவ்வளவென்றில்லை. அப்புறம் தாயாலே அந்தப் பிள்ளையை ஒளித்துவைக்கக்கூடாதிருந்தது. ஏனெனில் பாலகன் அடிக்கடி அழுதான். ஐயோ! அந்தப் பாலகனுக்கு அரசனுடைய சட்டம் தெரியுமா? வீட்டிலுள்ள துக்கம் தெரியுமா? இனிக் குழந்தையை அடக்கிவைக்கக்கூடாதென்று தெரிந்தபோது, நாணலால் ஒருபெட்டி செய்து, தண்ணீர் போகாதபடிக்கு உள்ளும் புறம்பும் கீல் பூசி, பாலகனை ஒருதடவைக்கு ஒன்பதுதடவை முத்தமிட்டு, பெட்டிக்குள் கிடத்தி மூடி, அழுது அங்கலாய்த்து ஆற்றுக்குக் கொண்டுபோய், அதினோரமாய் நின்ற நாணல் புதருக்குள் வைத்தாள். அதற்கு என்ன சம்பவிக்குமோ என்பதை அறியும்படி அதன் தமக்கை தூரத்திலே யாருமறியாதவள்போல் நின்றுகொண்டிருந்தாள்.

இப்படியாக அழகுமணிபாலன் ஆற்றில் மிதந்தான்; அவன் சகோதரி கரையில் உலாவினாள். அப்பொழுது அவ்விடத்து



இராஜகுமாரத்தி தன் பாங்கிமாரோடே சல்லாபமாய்ப்பேசி, ஒய்யாரமாய்நடந்து ஆற்றில் ஸ்நானஞ்செய்யவந்தாள். இராஜகுமாரத்தியோடே வந்த பாங்கிமாரில் ஒருத்தி மல்லிகை, முல்லை, இருவாட்சி முதலிய புஷ்பவர்க்கங்களையும், வேறொருத்தி சந்தனம், சவ்வாது, அத்தர், புனுகு, பன்னீர்முதலிய கந்தவர்க்கங்களையும் சுமந்துவந்தார்கள். அவர்களெல்லாரும் ஆற்றோரம் வரவே, ஒருநாளுங்கேளாத புதுக்குரல் நாணலுக்குள் கேட்டது. உடனே இராஜகுமாரத்தி: ஓ என் பாங்கிமார்களே! தாதிமார்களே! தோழிகளே! அதோ கேட்கிறதே அது என்ன சத்தம்! அது முதலைகளின் மும்முறமோ! தவளைகளின் கூக்குரலோ! தண்ணீரின் ததளிப்போ! நாணலின் சலசலப்போ! அதென்ன! ஆ! அது ஒரு பிள்ளையின் குரல், அது பாலகன் பாலில்லாமல் அழுகிறசத்தம், போய் எடுத்துவாருங்கள் என்றாள். இராஜகுமாரத்தி கட்டளைப்படி தாதிமார்போய் பெட்டியைத் தூக்கிவந்தார்கள். பெட்டியைத் திறந்தவுடனே சிவந்தமேனியும், அகன்ற நெற்றியும், கறுத்தகண்களும், செந்தாமரைநிற உதடும், ரோஜாவின் மலர்ந்த புஷ்பங்களையொத்த கன்னங்களும் உள்ள அழகுமணி ஆண், பெற்றதாய் பாலூட்ட எடுக்கிறாளாக்கும் என்றெண்ணி, மருகி மருகி, துடித்துத் துடித்து, பதறிபதறி அழுதான்.

அதன் முகச்சாயலைக் கண்டவுடன் இது எபிரெயஜாதியான பிள்ளையென்றும், அரசன் கட்டளைக்குப் பயந்து யாரோ இப்படி விட்டிருக்கிறார்களென்றும் சிந்தித்து, அவன் அழகைப் பார்த்துப் பிரமைகொண்டு, தான் அதை எடுத்துவளர்க்கத் தீர்மானித்தாள். ஆனால் பால்கொடுக்க என்னசெய்வாள்? எகிப்தியஸ்திரீயண்டைக் கொடுத்தால் ஒருவேளை கொன்றுபோடுவாள்; ஒருவேளை அவளிடத்தில் பால்குடிக்கவில்லையாக்கும், ஆகையால் எபிரெயஜாதியான ஆமாளே நல்லதென்று யோசித்தாள். இப்படி இவர்கள் ஒரு ஆள்தேடுகையில் பக்கத்தில் ஒன்றும் அறியாதவள்போல் காவலுக்கு நின்ற பெண், தானும் வேடிக்கைபார்க்கிறவள்போல் போய் அவர்கள் ஆலோசனையை அறிந்து, ஓ! நற்குண நற்சீல இராஜகுமாரத்தியே! புண்ணியவதியே! மகன் மாறாய் மருகுகிறானே, பாலகனைப் பாலூட்டி வளர்க்க எபிரெயஜாதியான ஒரு பெண்பிள்ளையை நான் ஓடிப்போய்க் கூட்டிவரட்டுமா? என்று கேட்டாள்.

இராஜகுமாரத்தி அவளைத் தட்டிக்கொடுத்து: நல்லது பெண்ணே; நீ ஒரே ஓட்டமாய் ஓடிப் பால்கொடுக்க ஒரு ஆமாளைக் கூட்டிவா என்றாள். அவள் காலதாமதம்பண்ணாமல் தலைதெ

* மோசே முனிவரின் பிறப்பும், அவரால் இஸ்ரவேலுக்குண்டாகும் இரட்சிப்பும் இன்னதென்று தேவன் அவருடைய பிறப்புக்குமுன்னமே பெற்றோருக்குச் சொப்பனத்தின் மூலமாய் விபரமாய்ச் சொல்லியிருந்ததாக யோசேப்புஸ் எழுதியிருக்கிறார். அவர் பிறந்த இடம் எலியோப்போலீஸ் நகரமென்று மெனித்தோ சொல்லியிருக்கிறார்.

றிக்க, நெஞ்சுதுடிக்க, நினைவுதடுமாற ஓடி, தன் தாயண்டை நடந்த சமாசாரங்களைச் சொல்லி வரும்படி கூப்பிட்டாள். அதைக்கேட்ட தாய் ஆண்டவனைப் போற்றி, ஆனந்தத்தால் பூரித்து, அங்கமெல்லாம் வேர்வைசாட கால்தடுக்க நடந்து, குடல்துடிக்க ஓடி, கைகடந்த பாலனை கைகொடுத்துப் பாலூட்ட வந்தாள். இராஜகுமாரத்தி அவளைப்பார்த்து: ஓ! எபிரெய ஸ்திரீயே! இதோ ஒரு எபிரெயபிள்ளை; இதை நீ கொண்டு போய்ப் பால்கொடுத்து உன் சொந்தப்பிள்ளையைப்போல் பேணி எனக்காக இதை வளர்த்திடு, நான் உனக்குக் கூலி கொடுக்கிறேன் என்றாள். தன் பிள்ளையைத் தான் வளர்க்கமாட்டாளா? உடனே அவள் நூறு கும்பிடுபோட்டு, நான் இந்தப் பாலகனை உமது மனதுக்கேற்றபடி வளர்க்கிறேன் தாயே என்று சொல்லி, இராஜகுமாரத்தியை வாழ்த்தி வரமளித்துப் பிள்ளையை வாங்கிக்கொண்டுபோனாள். அதுமுதல் பயமின்றிப் பாலகனுக்குப் பாலூட்டி நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்த்தாள். பிள்ளை பால்குடி மறந்து, ஓடியாட பிராயமானவுடனே அவனை அரசன் மகளிடம் ஒப்புவித்தாள். இராஜகுமாரத்தி இவனுக்கு என்னபேரிடலாமென்று வெகு நேரம் யோசித்து, கடைசியாக: ஜலத்திலிருந்து எடுத்தேன், ஆகையால் உன் பேர் மோசே என்று நாமதேயம் சூட்டினாள்.* அன்றுமுதல் அவன் அரசன் மகளுக்குக் குமாரன் ஆனான். எப்போதும் அரசன் வீட்டிலேயிருந்தான்; இராஜகுமாரத்தியோடேயே சாப்பிடுவான், விளையாடுவான்.

அவனைப் படிக்கவைக்கப் பிராயம் வந்தபோது, கணக்கற்ற திரவியங்களைச் செலவிட்டு, அத்தேசத்தின் சகல கல்விகளையும் நாற்பது வயதுமட்டும் கற்றுக்கொடுத்தாள். அதனால் அவன் இலக்கண இலக்கியங்களில் தேறி, கணிதநூலில் கரைகண்டு, தர்க்கசாஸ்திரத்தில் தாண்டி, வாள்வித்தை, வில்வித்தை, அம்பு வித்தை, ஆயுதவித்தை இவற்றில் வல்லவனாகி சர்வசாஸ்திர பண்டிதனாக விளங்கினான். இவன் இப்படிச் சகல கலைவல்லோனாகிறதைக் கண்ட இராஜகுமாரத்தி ஆனந்தங்கொண்டு அவனுக்கு வேண்டிய சலாக்கியங்களையெல்லாம் கொடுத்துவந்தாள். இவ்விதமாய் மோசே நாற்பதுவயதுமட்டும் அரசன் வீட்டில் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.†

* எகிப்தியர் ஜலத்துக்கு "மோ" என்று சொல்லுவார்கள்.

† இக்காலத்தில் மோசேமுனிவரைப்பற்றிய வரலாறு ஒன்றும் நமக்கு வேதாகமத்தில் சொல்லப்படக்காணோம். ஆனால் யோசேப்புஸ்



இவன் சில வேளாவேளை தன் சுயஜாதியார் படும் அவஸ்தைகளையும், அவர்கள் செய்யும் வேலையையும் போய்ப்பார்த்து பெருமூச்சுவிட்டு பரதபிப்பான். இவன் பார்த்துப் பரிதபித்தாவதென்ன? ஒருநாள் சாயந்தரம் அவன் தன் வழக்கப்படி உலாவப்போகையில், ஒரு எகிப்தியனும் ஒரு இஸ்ரவேலனும் ஏதோ விஷயத்தையிட்டு வாதுகூறி சண்டைபண்ணினார்கள். உடனே இவன் தன் சுயஜாதியானோடு சேர்ந்து அந்த எகிப்தியனைக் கொன்று மண்ணில் புதைத்து யாதுமறியாதவன்போல் போய்விட்டான். மறுநாளும் அவன் அப்படியே உலாவப் போகையில் தன் ஜாதியான இருவர் வாதாடிச் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது மோசே அநியாயம் செய்கிறவனைப் பார்த்து: "நீ உன் தோழனை ஏன் அப்பா அடிக்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு அவன்: எங்கள்மேல் உன்னை அதிகாரியாகவும், நியாயாதிபதியாகவும் வைத்தவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையும் கொன்றுபோட யோசிக்கிறாயோ? என்று முறுக்காய்ப் பேசி கூச்சலிட்டான்.

இந்தச் செய்தி அரசன்மட்டும் எட்டிவிட்டது; ஆதலால் அரசன் அவனைக் கொலைசெய்யவேண்டுமென்று தீர்மானம் பண்ணினான். இதை அறிந்து மோசே இனி அரைநிமிஷமும் இங்கே தாமதிக்கலாகாது என்று தீர்மானம்பண்ணி, தான் எட்டிமிதித்த திசையாய் நடந்து மீதியான் என்னும் ஒரு தேசம் வந்து சேர்ந்தான். ஆனால் அந்த ஊரில் யார் வீட்டிற்போய் இறங்குவான்? இனஜனங்களாவது, சிநேகிதராவது யாருமில்லை. ஒரு கிணற்றண்டை இளைத்துக் களைத்து உட்கார்ந்தான். அச்சமயத்தில் ஏன்தான் வந்தோமென்று யோசிப்பான்; என்னதான் செய்வோமென்று ஆலோசிப்பான்; சிலதரம் அரசன் வீட்டுப் பவுசுகளை நினைப்பான்; சிலதரம் வழியில் நேரிட்ட சங்கடங்களை யோசிப்பான்; சிலதரம் மறுபடியும்

என்பவருடைய ஆகமத்தினால் எத்தியோப்பியர் எகிப்துக்கு விரோதமாய்ப் படையெடுத்து வந்ததாகவும், அதற்கு மோசே முனிவர் படைத்தலைவனாகப் புறப்பட்டுப்போய் வீரபராக்கிரமத்தோடு அவர்களை எதிர்த்து மடக்கிவிட்டார் என்றும் சொல்லுகிறார். இந்த வரலாறை ஐரேனியஸ் என்பவரும் தமது ஆகமத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார். அப்போஸ்தலர் நடபடிஆகமத்தில் "செய்கையிலும் வல்லவனானான்" என்று சொல்லப்படும் குறிப்பு இந்த விஷயத்தையே உணர்த்துகிறது என்று பலரால் நினைக்கப்படுகிறது. (அப். 7. 22.)

போய்விடலாமோ என்று தியானிப்பான். இப்படிப் பல நினைவாயிருக்கையில் பொழுதுசாயும் நேரத்தில் சில கன்னியாஸ்திரீகள் அந்தக் கிணற்றண்டை ஆடுகளை ஓட்டித் தண்ணீர் காட்ட வந்தார்கள். அவர்கள் அந்த ஊர் பூசாசாரியின் குமாரத்திகள். அந்தத் தேசத்தில் பெண்டுகள் ஆடுமாடுகளை மேய்ப்பது சாதாரணம். அவர்கள் ஆடுகளுக்குத் தண்ணீர்காட்ட தொட்டியில் தண்ணீரை நிரப்பினார்கள். அப்பொழுது மற்ற இடையர் அவர்களைத் துரத்தி தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டத் துணிந்தார்கள். இடையர் ஏழைப் பெண்களுக்குச் செய்த அநியாயத்தை பக்கத்திலிருந்த மோசே பார்க்கச்சகியாமல் எழுந்திருந்து, அவர்களுக்காக ஏற்பட்டு அந்த இடையரைத் தடுத்து இந்தப் பெண்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். இதனாலே எப்போதும் பிந்திவரும் பெண்கள் அன்று வீட்டுக்கு முந்திவந்தார்கள். தகப்பன் இதைக் கவனித்து: ஏதம்மா நீங்கள் எந்நேரத்தைவிட இன்று முந்திவந்துவிட்டதென்ன? என்று கேட்டான். அதற்கு அவர்கள்: துறவண்டை நடந்த சமாசாரத்தைச் சொன்னார்கள். "உப்பிட்டாரை உள்ளளவும் நினை" என்றபடி இவன் அந்தச் சகாயத்தையுணர்ந்து இவ்வளவு உதவிசெய்த புண்ணியவானை ஏன் வீட்டுக்குக் கூட்டிவரவில்லை? இக்ஷணமே போய் கூட்டிவாருங்கள் என்று சொன்னான். உடனே அந்தப் பெண்கள் ஓடிப்போய் வீட்டுக்குவரக் கூப்பிட்டார்கள். பொழுதும் அஸ்தமிக்குதே, என்ன செய்வேன்? எங்கே போவேன்? என்று அங்கலாய்த்துக்கொண்டிருந்த மோசேக்கு இந்தச் செய்தியானது நடுக்கடலில் திசைதப்பித் திரியும் மாலுமிக்கு ஓர் கரை தென்பட்டாற்போலிருந்தது. உடனே மூட்டையைத் தோளிலும் தடியைக் கையிலும் பிடித்துக்கொண்டு உள்ளுக்குள்ளே அந்தப் பூசாசாரியை வாழ்த்தி வழிநடந்து வீடுபோய்ச் சேர்ந்தான். இவனுடைய நற்குணத்தையும் நேர்மையையும் கல்வித் திறமையையும் பார்த்து, திரைகடல் கடந்து திரிலோகம் சுற்றினும் தன் மகளுக்கு இவனைப்போலொத்த மாப்பிள்ளை கிடையாதென்று அறிந்து, தன் மூத்த மகளை அவனுக்குக் கட்டிக் கொடுத்தான். இவ்விதமாய் நாடுவிட்டு நாடுவந்தவனை வீடும் குடியுமாக்கினான்.*

* மோசேமுனிவர் பார்வோன் வீட்டில் வளர்ந்து சேனாதிபதியாக இருந்த காலத்தில் எத்தியோப்பியரை முறியடித்து, அவர்களுடைய தலைநகரியைப் பிடிக்கும்படி முற்றுகைப்போட்டிருந்த சமயத்தில்



## தேவகாட்சிப் பருவம்.

இவன் கலியாணம் செய்தது முதல் மாமனுடைய ஆடுகளை மேய்க்கும்படி அமர்ந்து உண்மையாய் நடந்து பட்சமாய் மேய்த்துவந்தான். ஆடுகளுக்குப் புல் அகப்படவில்லையானால் வெகுதூரம்போய், மலையடிவாரங்களில் மேய்த்து நெடுநாள் பொறுத்துவருவான். சூலாடுகளை மெதுவாய் நடத்துவான், குட்டிகளைத் தோளில் சுமந்துபோவான். இப்படியாக நாற்பது வருஷம் இரவும் பகலும் மேய்த்து வெயிலையும், பனியையும், மழையையும் அநுபவித்துக் காலங்கழித்துவந்தான். எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேலர் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு கணக்கு வழக்கு இல்லை. பார்வோனைத் தட்டுவாரும் கொட்டுவாரும் இல்லாததால் தன் மனங்கொண்டபடி நடந்தான். மனுஷர் ஒருவரும் கேளாவிட்டாலும் தேவனும் கேளாதிருப்பாரோ? "அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்." அவர் அவன் செய்த நிஷ்டூரங்களையெல்லாம் அறிந்தார். ஒடுக்கத்தையும் இடுக்கத்தையுமடைந்த இஸ்ரவேலர் தாங்கமாட்டாமல் கடவுளை நோக்கி ஓலமிட்டார்கள். மோசே தன் மாமனுடைய ஆடுகளை மேய்க்க அடிக்கடி வீடுவிட்டுத் தொலைதூரம் காட்டுக்குப் போவான். ஒருநாள் இவன் ஆடுகளை ஓரேப் என்னும் மலைச்சார்பில் மேய்த்துக்கொண்டு நின்றான். அவன் தன் தடியை தாடியினடியில் வைத்துக் குனிந்துநிற்கவே, அந்தக் காட்டில் ஒருகாலும் காணாத அதிசயத்தைக் கண்டான். அவனுக்கு எதிரே சற்றப்பாலிருந்த ஒரு முட்செடி தீப்பற்றியெரிந்தது. அதைப் பார்த்து இந்தக் காட்டில் யார் வந்து தீவைத்தது? இது என்ன புதுமை, யாரையும் காணோமே என்று தனக்குள் யோசித்தான்; வெகுநேரமாய் செடி சுவாலித்து எரிந்தாலும் அதின் ஒரு இலையாவது தளிராவது, பூவாவது காயாவது, கொம்பாவது வேகவில்லை. அந்தச் சுவாலையிலே கடவுள் நின்றார்; அதை அவன் அறியவில்லை. இதை அவன் கவனித்து இதென்னடா அதிசயம், நெருப்புக்குமுன் இது எம்மாத்திரம்? அப்படியிருக்க, இது வேகாமலிருக்கிறதென்ன? நெருப்பு திபுதிபென்று சுவாலித்து

அவ்விடத்து இராஜாவின் மகள் ஆள் எடுத்துவிட்டு தன்னை விவாகம் செய்துகொள்ளும்படிக் கேட்டதாகவும், அதின்படி அவர் "தார்பீஸ்" என்னும் பேருடைய அந்தப் பெண்ணை விவாகம்பண்ணியிருந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (யோசேப்புஸ்.)

எரியுதே; இதைத் தான் கிட்டப்போய்ப் பார்ப்போமென்று சொல்லி, நின்ற இடத்தைவிட்டு மெதுவாய்ச் செடியண்டை வந்தான். அவன் அந்த முட்செடியின் கிட்டவருகையில் சுவாலையின் நடுவிலிருந்து பேரிடிமுழக்கம்போல் ஒரு சத்தமுண்டாகி: மோசேயே! மோசேயே! என்று தொனித்தது. அதற்கவன்: இதோ! அடியேன் என்று மறுமொழிகொடுத்தான். அப்பொழுது இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களிலிருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி. நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உன் பிதாக்களுடைய தேவனுமாயிருக்கிறேன் என்று விளம்பினது. மோசே தேவனைப் பார்க்கப் பயந்ததினால் தன் முகத்தை மூடிக்கொண்டான். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை; பிதாவின் மடியிலிருந்த ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார். பின்னும் அந்தச் செடியிலிருந்து: "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள்படுகிற வேதனைகளையும் அறிந்தேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி கானானியரும், ஏத்தியரும், எமோரியரும், பெர்லியரும், எவியரும், எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும்தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன். இப்பொழுதும் இஸ்ரவேல்புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்தெட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன். நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவரும்படிக்கு உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புகிறேன் வா" என்ற கடவுளுடைய சத்தமும் வந்தது. தேவன் மோசேயை பார்வோனிடத்துக்குப் போகச் சொன்னபோது அவன் பயந்து, அந்த வேலைக்கு நான் எம்மாத்திரம்? நான் போனால் நம்புவார்களா? நான் திக்குவாயனும் மந்த நாவுள்ளவனுமாய் இருக்கிறேன்;* நான் வாக்கு வல்லப

* மோசேமுனிவர் திக்குவாயனாய்ப் பிறக்கவில்லையென்றும், பின்வரும் காரணத்தால் அவர் திக்குவாயனாய்ப் போனார் என்றும் தல்மூத்து ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது: முனிவர் குழந்தையாய இருந்தகாலத்தில் ஒருநாள் பார்வோனின் குமாரத்தி அவரை அரசன் மடியில் வைத்தபோது அரசன் அதிகப் பிரியத்தோடு பாலனை சுமந்து விளையாட்டுக்காட்டும்போது பாலகன் தன் கையால் அரசன் சிரசிலிருந்த கிரீடத்தை இழுத்துக் கீழே தள்ளித் தன் காலால் உதைத்தாராம்; அரசன் பெரும்பாலும் அற்பத்தில் சந்தேகிக்கிற குணமுடையவனாயிருந்ததால் அதையிட்டு மனஸ்தாபப்பட்டு அதில் ஏதோ ஒரு பெரிய அந்தரங்கம் இருக்கிறதென்று உத்தேசித்து தன் ஞானிகளை வரவழைத்து, நடந்த சங்கதியைச் சொல்லி அதின் கருத்தை அறிய விரும்பினானாம். தேவன் காபிரியேல் சம்மனசை ஒரு கிழஞானியின் ரூபமாய் அனுப்பி, இது குழந்தைப்பிள்ளையின் விளையாட்டேயன்றி மற்றொன்றுமில்லையென்று சொல்லி அவன் மனதை மாற்றப்பார்த்தும் கூடாமலிருந்தபோது, சம்மனசு இது பேதைக்குணமோ ஞானக்குணமோ என்று அறிய ஒரு பரீட்சை சொன்னாராம். ஒரு பாத்திரத்தில் பொன்னையும் இரத்தினத்தையும் நிரம்பவைக்கவும், இன்னொரு பாத்திரத்தில் தகதகவென எரியும் நெருப்புத்தழலை வைக்கவும் சொல்லி, பேதைக்குணமானால் நெருப்பில் கைவிடும், ஞானக்குணமானால் பொன்னில் கைவிடும் என்று சொன்னாராம். அரசன் சம்மதித்து அந்தப்படியே கொண்டுவரவே புத்தியுள்ள முனிவர் இரத்தினபாத்திரத்துக்கு நேரே கைநீட்டினாராம்; ஆனால் அச்சமயத்தில் காபிரியேல் சம்மனசு அசரீரியாய்ப் பாலன் கையை விலக்கி நெருப்புச்சட்டியில் கைவிடப்பண்ண ஒரு சிறு நெருப்பை முனிவர் எடுத்து சட்டென்று தமது வாயில் போட்டதால் அவருடைய நாவு வெந்துபோயிற்றாம்; இதுதான் அவர் திக்குவாயனாய்ப் போனதற்குக் காரணமாம்.



னல்லவே; வேறே யாரையாவது இந்த வேலைக்கு அனுப்புமேன் என்று பல போக்குகளைச் சொன்னான். அப்பொழுது தேவன் நான் உன்னோடுகூட இருப்பேன், நீ பயப்படாதே; உன் சகோதரன் ஆரோனையுங் கூட்டிப்போ என்றார். மேலும் உன்னை அவர்கள் நம்பும்படிக்கு உனக்கு அற்புதவரம் தருவேனென்று சொல்லி, உன் தடியைத் தரையிலே போடு என்றார். அவன் போட்டான் உடனே அது பாம்பாயிற்று; அதின் வாலைப்பிடி என்றார், பிடித்தவுடன் தடியாயிற்று; மறுபடியும் கையை மடியிலேபோடு என்றார், போட்டவுடன் அது வெண்குஷ்டமாய்ப்போயிற்று; அதையெடுத்து மறுபடியும் போடச் சொன்னார், அது நல்ல கையாய்ப்போயிற்று. இவ்விதமாய் அவனைத் தைரியப்படுத்தினார். கடைசியாய் அவன் மகா கஷ்டத்தோடே சம்மதித்து, எல்லாம் சரிதான், உன்னை யாரடா அனுப்பினது? அவருடைய பேரென்ன என்ற கேட்

கவனிப்பு. இதில் பின்வரும் பரிசோதனைமுறையைத்தவிர மற்றதெல்லாவற்றையும் யோசேப்புஸ் என்ற சரித்திரக்காரனும் சொல்லுகிறார்.

டால், நான் என்ன உத்தரவு சொல்வேனென்று கேட்டான்.
அதற்கு என் பேர் "இருக்கிறவராக இருக்கிறேன்;" "இருக்
கிறேன்" என்கிறவர் என்னை அனுப்பினார் என்று சொல்
என்றார். இவ்வளவையுங் கேட்டு மனதில் வைத்துக்கொண்டு
தன் மாமன் வீட்டுக்கு வந்து: மாமனாரே! என் இன ஜனத்
தைப் பார்க்க எகிப்துக்கு ஓர் பயணம் போய்வர யோசிக்
கிறேன் என்று கேட்டான்; மாமன் சந்தோஷமாய் உத்தரவு
கொடுத்தான். உடனே அவன் தன் மனைவி மக்களைக் கூட்
டிக்கொண்டு பிரயாணப்படத் தீர்மானித்தான். என்றாலும்
"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்ற பழமொழிப்
படி முந்தின கொலைச்சங்கதி அவன் ஈரல்குலையைக் குத்
தினது. அப்பொழுது தேவன்: நீ பயப்படாமல் எகிப்துக்
குப் போ, உன்னைக் கொல்லத்தேடின மனுஷர் எல்லாரும்
இறந்துபோனார்கள் என்று தைரியம் சொன்னார். அப்புறம்
அவன் பின்னிடையாமல் புறப்பட்டுப்போனான். வழியிலே
தங்கியிருந்த ஒரு இடத்தில் முனிவருக்குப் பிராணன்போகத்
தக்கதான ஒரு அபாயம் தேவாதீனமாய் நேரிட்டது; அது
இன்னதென்று விவரமாய்ச் சொல்லப்படவில்லை. என்றாலும்
அதின் வரலாறுகளைக்கொண்டு மோசேமுனிவரும் அவர் மனை
வியும் விருத்தசேதன உடன்படிக்கைக்குட்பட்ட ஆபிரகாமின்
சந்ததியாரா யிருந்தார்கள் என்றும், அவர்கள் அந்தக் கட்டளை
யின்படி தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணாமல்
ஏதோ முகாந்தரத்தாலே தாமதப்பட்டிருந்தார்கள். அதினிமித்
தம் தேவன் அவர்களை முனிவருக்கு உண்டான ஒரு நோயின்
மூலமாய் எச்சரித்தார் என்றும் தோன்றுகிறது. பிள்ளைக்கு
வழியில் விருத்தசேதனம்செய்ய அவருடைய மனைவிக்கு மன
மில்லாமல் இருவருக்கும் சற்று மனஸ்தாபமுண்டாகியிருக்கி
றது. அதனாலே கூடவந்த மனைவி மறுபடியும் தன் தகப்பன்
வீட்டுக்குப் போகும்படித் திட்டம்செய்துவிட்டு தாம் ஒண்டி
யாக எகிப்துக்கு வந்தார். எப்படியும் பிள்ளைக்கு விருத்தசேத
னம் செய்தவுடனே முனிவரைப் பிடித்த நோய் தீர்ந்துவிட்
டது. மார்க்கவிஷயங்களில் ஆண்டவர் ஏற்படுத்தியிருக்கிற
புறம்பான கடமைகளுக்குரிய கட்டளைகளை நாம் அசட்டை
செய்யவேகூடாது. நமக்குண்டாகிற சரீரதுன்பங்களில் அநே
கம் நாம் கிறிஸ்துமார்க்கத்துக்கடுத்த வெளியரங்கமான தேவகட்
டளைகளைக் கைக்கொள்ளாததினாலே உண்டாகலாம். ஒரு கட
மையைக் கைக்கொள்ளாதிருக்கிறதும், தப்பிதமாய் அதைக் கைக்
கொள்ளுகிறதும், இரண்டும் பாவமாகவே இருக்கிறது; அவ்



விரண்டின் தண்டனையும் ஒன்றுதான். எல்லாவற்றுக்கும்
மேலாக முனிவர் வழியில் உண்டான ஆபத்து, தாம் இம்மட்டும்
தமது பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யாததினாலேதான்
என்று உணர்ந்துகொண்டு உடனே அந்தச் சடங்கை முடிக்
கப் பிரயத்தனப்பட்டது அதிசயந்தான். பக்தர் தேவனுடைய
வழிகளை உடனே கண்டுகொள்ளுகிறார்கள்.

காரியம் இப்படியிருக்கையில் தேவன் எகிப்திலிருக்கிற
இவர் தமையன் ஆரோனுக்குத் தரிசனையாகி, நீ வனாந்தரமட்
டும் உன் தம்பிக்கு எதிர்கொண்டுபோ என்றார். அவன்
காரியம் தெரியாமல் கடவுளுடைய கட்டளைப்படி புறப்பட்
டுப்போய், சுமார் நாற்பதுவருஷமாய்க் காணாமலிருந்த கண்
மணித்தம்பியைக் கண்டு களிகூர்ந்தான். அவனுக்கு மோசே:
தேவன் தரிசனமானதையும், அவருடன்பண்ணின சம்பா
ஷணையையும் சொல்லிக்கொண்டு இருவருமாய் எகிப்துக்கு
வந்தார்கள். வந்தவுடனே குலத்தில் பெரியவர்களாயிருந்த
வர்களைக் கூட்டி நடந்த சம்பவங்களையெல்லாம் சொல்லி,
கடவுள் கொடுத்த அற்புதங்களையும் அவர்கள் கண்காணச்
செய்தான். அதையெல்லாம் கண்ட ஜனங்கள் மெய்யாகவே
கடவுளே அவரை அனுப்பினாரென்று நம்பி: ஐயா! நீர் சொன்
னபடியெல்லாம் ஆடுவோம் என்று வாக்குக்கொடுத்தார்கள்.
ஒருநாள் எகிப்தின் அரசனாகிய பார்வோன் சிம்மாசனபதி
யாய்க் கொலுவிருந்தான்; அவன் பிரபுக்கள் பெருமையாயும்,
மந்திரிகள் மங்களமாயும், ஆலோசனைச்சபை அழகாயும் வீற்
றிருந்தார்கள். அச்சமயத்தில் மோசேயும் ஆரோனும் இராஜ
சபையேறி, அரசனுக்கு ஆசீர்வாதம் சொல்லி, மங்களம் கூறி,
வந்தனஞ்செய்து, வாழ்த்தி வரமளித்து, சாஷ்டாங்கம்பண்ணி
னார்கள். அரசன் அவர்களைப் பார்த்து: நல்லது, வந்த காரிய
மென்ன? என்றார். அதற்கு அவர்கள்: மகா ராஜாவே! நாங்க
ளும் எங்கள் ஜாதி ஏகமும், எங்கள் தேவனுக்கு வனாந்தரத்தில்
போய் பண்டிகைகொண்டாடி திரும்பிவர விடைதர வேண்
டுகிறோம் என்றார்கள். அதற்குப் பார்வோன்: நான் இஸ்ர
வேலரைப் போகவிட கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிற
தற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவே
லரை விடுவதில்லையென்று சற்று முறுக்காய்ப் பார்த்துக் கடுப்
பாய்ப் பேசி உதறினான். அவர்கள் என்னமாய்க் கும்பிட்டுக்
கூத்தாடினாலும் காரியம் வாய்க்கவில்லை. அரசன் அவர்களைத்
துரத்தி அவர்களை மேல்விசாரிக்கிறவர்களுக்குத் தாக்கீது
அனுப்பி வேலையைப் பின்னும் கடினப்படுத்தக் கட்டளை

யிட்டு ஒடுக்கினான். குணப்படுகிற பாவி சாத்தானுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடையும்படி பிரயாசப்படும்போது, சாத்தான் அநேக பாவ இன்பங்களை அவனுக்குக் கொடுத்து அவைகளை நிறைவேற்றுகிறதினால் அவனுடைய சரீரம் நொறுங்கி, ஆத்துமா பலட்சயப்பட்டுப்போகும்படிச் செய்கிறான். ஒரு பாவத்துக்கு ஒன்பது பாவத்தை அவன் கூலியாகக் கொடுக்கிறான்; பழைய பாவச்சிநேகிதனைவிட்டு அவனைப் பிரித்து, முதற்றரமான பாவவீரனை அவனுக்குத் துணையாக்குகிறான்.

பார்வோன் தேவனுடைய தானாதிபதிகளை அசட்டைசெய்ததையும், இஸ்ரவேலரை அதிகமாய் ஒடுக்குகிறதையும் ஆண்டவர் கண்டு, அவனையும் அவன் பவுசையும் அடியோடு எடுத்து, அதோகதியாக்கிவிடத் தீர்மானித்தார். மோசே தைரியங்கொண்டு மறுபடியும் பார்வோனண்டைபோய், இஸ்ரவேலரை விடும்படி கேட்டு தான் தேவனால் அனுப்பப்பட்டவன் என்பதை ருஜுப்படுத்த சில அற்புதங்களைச் செய்தான். அவன் அந்த அற்புதங்களைக் கண்டும் இஸ்ரவேலரைவிடாமல், என்னை மடக்க யாரால் ஆகும் என்று தான் எண்ணினான். அப்புறம் மோசே தேவ உத்தரவால் பல வாதைகளை உண்டுபண்ணினான்; அதனாலே முதலாவது எகிப்தின் நீர்நிலைகளெல்லாம் இரத்தமாய் மாறிற்று. நீர் நிலைகளிலிருந்த மீன்களெல்லாம் செத்து நாற்றமெடுத்தன, ஜனங்களுக்குத் தண்ணீரில்லாததால் ஊற்றுத்தோண்டிக் குடித்தார்கள். இந்த வாதை ஏழுநாள்மட்டும் இருந்தது, இதற்கும் பார்வோன் அஞ்சவில்லை. அப்புறம் தேசம் அடங்கலும் தவளைகளை வரப்பண்ணினான்; உடனே தவளைகள் குறுங்குறுங்குறுங்கென்று கத்தி: மச்சுவீடு, குச்சுவீடு, கட்டில், தொட்டிலெங்கும் நிறைந்திருந்தது. இதன் தொல்லை பொறுக்காமல் அரசன் மோசேயையும் ஆரோனையும் கூப்பிட்டு, முந்தி இந்தத் தவளைகளைத் தொலையுங்கள், பிந்தி நீங்கள் போங்களப்பா என்றான். அப்படியே தேவன் தவளைகளை நீக்கினார். தவளைகள் தொலைந்ததுதான் தோஷம்; பார்வோன் ஜனங்களை விடமாட்டேன் என்றான். அப்புறம் கொள்ளைநோய்கள், கொப்புளங்கள், கல்மழை இவைகள் எல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் வந்தன. உடனே அரசன் மோசேயைக் கூப்பிட்டு: நான் இந்தமுறை பாவஞ்செய்தேன், கர்த்தர் நீதியுள்ளவர், நானும் என் ஜனமும் துன்மார்க்கர், நான் பட்டபாடு போதுமப்பா, இந்த இடியும் மழையும் ஓயும்படி உங்கள் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள்; நான்



உங்களைப் போகவிடுவேன்; இனி உங்களுக்குத் தடையில்லை என்றான். அதற்கும் மோசே இணங்கி, தேவனை வேண்டிக்கொண்டு வாதையை நிறுத்தினான். "காரியமாகுமட்டும் காலைப் பிடிப்பான், காரியமானபின் குடுமியைப் பிடிப்பான்" என்றபடி, வாதைகள் நின்றவுடனே அவன் தன் பழைய தொழிலைக் காட்டி, இஸ்ரவேலரை விடமாட்டேன் என்றான். "ஒருதரம் பட்டால் ஒதுங்கிவாழ்" என்றொரு பழமொழி உண்டு. இவனோ பலதரம் பட்டும் ஒதுங்கி வாழமாட்டேன் என்கிறான். இனி என்னபாடுகள் படுகிறான் பாருங்கள்!

அப்புறம் தேசமெங்கும் வெட்டுக்கிளிவர மோசே கற்பித்தான். எகிப்தியர் இதைக் கண்டவுடனே அரசனிடம்போய் முறையிட்டு, அந்த ஜனங்களுடைய சங்காத்தமே நமக்கு வேண்டாம், போகச்சொல்லும்; அவர்கள் நம்மோடிருக்கவிருக்க நமக்கே தீமையென்று கூறினார்கள். அரசன் மனம் உரங்கொண்டது, அவன் இஸ்ரவேலரை விடப் பிரியப்படவில்லை. அப்புறம் மூன்று நாளாய் தேசமெங்கும் காரிருள் வந்தது; ஆனால் இஸ்ரவேலருச்குக் காரிருள் இருக்கவேயில்லை. உடனே மோசேயைக் கூப்பிட்டு, அப்பா! நீயும் உன் ஜனமுமாய்ப் போய் உங்கள் சுவாமிக்கு ஆராதனை செய்யுங்கள்; உங்கள் ஆடுமாடுகள், நகைநட்டுகளெல்லாம் இங்கே இருக்கட்டும் என்றான். அதற்கு மோசே இணங்காமல், நாங்கள் எங்கள் ஆஸ்திபாஸ்திகளோடு போவோம்; நாங்கள் திரும்ப வருவோமென்றும் சொல்ல ஏதுவில்லை என்றான். இதைக் கேட்டவுடனே அரசன் உக்கிரமானான். அவன் கண்கள் சிவந்து மீசை துடித்தது. அரசன் கோபத்தோடே என்னைவிட்டு அப்பாலே போ, இனி நீ என் முகத்தைக் காணாதபடி எச்சரிக்கையாயிரு, நீ இனி என் முகத்தைக் காணும் நாளில் சாவாயென்று சொன்னான். அப்படியே ஆகட்டுமென்று மோசே சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

"அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும்" என்கிற பழமொழியும் உண்டு. இந்த அரசனோ நகரவே இல்லை; ஆகையால் தேவன் அவனை வேரோடே பிடுங்கச் சித்தமானார். நடு இராத்திரியிலே தேவன் தமது தூதனை அனுப்பி, எகிப்தில் மிருகத்திலும் மனுஷனிலும் உள்ள முதற்பேறுகள் எல்லாவற்றையும் இரவில் சங்கரித்தார். இந்தச் சங்காரம் அரசன்வீடு முதல் ஆண்டிவீடுவரையுமிருந்தது. அழுகையில்லா அரண்மனையில்லை, கூக்குரல் இல்லாக் குடிசை இல்லை, புலம்பலில்லாத் தெருவில்லை. அரசன் வீட்டில் பட்டத்துப் புத்திரன்

பட்டான்; மந்திரிவீட்டிலும், பிரபுக்கள் வீட்டிலும், தலையாரிகள் வீட்டிலும், சேனாதிபதி வீட்டிலும், தளகர்த்தர் வீட்டிலும், ஆளோட்டிகள் வீட்டிலும் தலைப்பிள்ளை இறந்துபோயிற்று. மொத்தமாய்ச் சொன்னால் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல்கிடங்குகளிலிருக்கும் கைதிகளின் தலைப்பிள்ளைகள்வரைக்கும், மனுஷரின் முதற்பேற்றையும், மிருகஜீவன்களின் முதற்பேற்றையும் கர்த்தர் அழித்தார். அரசன் கத்தியால் ஆயிரம்பேர் நாசமானால், ஆண்டவர் கத்தியால் அடியோடு நாசமாகமாட்டாதா? இராஜவீதி, தேர்வீதி, தெருவீதி, கடைவீதி, சந்தைவீதி எங்கும் கூக்குரல் எழும்பிற்று. முன்னே ஒடுக்கப்பட்டவர்களின் கூக்குரல் வானத்துக்கு எழும்பினது; இப்போது ஒடுக்கினவர்களின் கூக்குரல் வானத்துக்கு ஏறிற்று.

சங்கரிக்கிற தூதன் இஸ்ரவேலருடைய வீட்டில் வந்ததே இல்லை; ஏனெனில் தேவன் ஒரு பண்டிகையை ஆசரிக்கச் சொல்லி, அவர்கள் வீட்டுவாசலின் நிலையில் ஆட்டு இரத்தத்தை அடையாளமாகப் பூசச்சொல்லியிருந்தார். தேவதூதன் இஸ்ரவேலருடைய வீடுகளை அந்த இரத்தத்தை அடையாளமாகப் பார்த்துக் கடந்துபோனதினாலே அந்த ஆட்டுக்குப் பஸ்கா ஆடு என்கிற பெயர்வந்தது. பஸ்கா என்றால் கடக்குதல் என்று அர்த்தம். இந்த பஸ்கா ஆடு சர்வலோக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்னடையாளமாய் இருந்தது. பஸ்கா ஆட்டின் இரத்தம் தெளிக்கப்பட்ட வீடுகள் சங்காரத்திற்குத் தப்பினதுபோல், கிறிஸ்துவாகிய ஞானபஸ்காவின் இரத்தம் யாருடைய இருதயத்தில் தெளிக்கப்படுகிறதோ அவர்கள் நரகதண்டிப்புக்குத் தப்புவார்கள்.

மேற்சொல்லிய சங்காரம் நடந்தவுடனே அரசனும் குடிகளும் ஏகமாய்க் கூடி, அர்த்த இராத்திரியில் மோசேயைக் கூப்பிட்டு, இந்நிமிஷமே நீங்கள் போகவேண்டும்; தாமதிக்கக் கூடாது என்று வலிய வலியத் துரத்தினார்கள். உடனே இஸ்ரவேலர் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கதவுள்ளபோதே அடைத்துக்கொள்" என்கிறபடி தங்கள் பண்டம் பாடிகளையும் ஆடுமாடுகளையும் சேர்த்துக்கொண்டு, அடிமைவீடாகிய எகிப்து தேசத்தைவிட்டுத் திடும்பிரவேசமாய்ப் புறப்பட்டார்கள்.



## யாத்திரைப் பருவம்.

மோசே அவர்களெல்லாருக்கும் தலைவனும் அரசனுமானான். அவர்களுடைய தொகை ஸ்திரீகள், குழந்தைகள் தவிர புருஷர்மாத்திரம் ஆறுலட்சம். இவ்வளவு திரண்ட ஜனக்கூட்டத்தை ஆடுகளை ஓட்டுகிறதுபோல் ஓட்டி நடத்தினான். எல்லாரும் அவனுக்குள் அடங்கினார்கள். அவனைப்பற்றிய பயத்தை தேவன் எல்லா ஜனத்துக்கும் கொடுத்தார். ஜனங்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட்டு இரண்டு மூன்று நாளைக்குப் பின்பு ஏத்தாம் என்று சொல்லப்படும் ஒரு ஊருக்கு வந்தார்கள். அதுமுதல் அவர்கள் இரவும் பகலும் பிரயாணம்பண்ணத்தக்கதாக பகலில் மேகஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினிஸ்தம்பத்தினாலும் தேவன் அவர்களை வழிநடத்தினார். இப்படி அவர்கள் போகும்வழியில் ஒரு பெரிய கடல் அவர்களுக்குக் குறுக்கிட்டது. ஐயோ! இனி என்னசெய்வார்கள்? இதுமாத்திரமோ? எகிப்தின் ராஜாவும் அவன் தலைவரும் இஸ்ரவேலர் கம்பிகாட்டிவிட்டார்களென்று அவர்களைத் திருப்பிக் கொண்டுவரும்படி தன் போர்வீரர், படைவீரர், வில்வீரர், வேல்வீரர், இரதவீரர், குதிரைவீரர் முதலிய சகல வீரருக்கும் எக்காளமூதி புறப்படப்பண்ணினான். உடனே அறுநூறு பெரிய இரதங்களும் இன்னும் அநேக சிறு இரதங்களும் புறப்பட்டன. இந்த ரதகஜதுரகபதாதிகளோடே அரசனும் வந்தான்; இப்பெருஞ்சேனையின் அரவம் வெகுதூரம் கேட்டது.

போர்வீரர் புலிவேகமாயும், இரதவீரர் மான்வேகமாயும் சென்றார்கள்; இரதங்களின் உருளைகள் வாயுவேகமாய் உருண்டன; அதனால் ஆகாயத்தில் புழுதி கார்மேகம்போல் திரண்டு சூரியனை மறைக்கலாயிற்று. சாத்தான் ஒரு பெரிய பார்வோன், அவன் தன் பாவ அடிமைத்தனத்திலிருந்து வெளியேறி பரலோகமார்க்கமாய் பரம கானானுக்குப் பறந்தோடும் பாவிகளைப் போனால் போகிறான் என்று விட்டுவிடுகிறதில்லை. பாவஜீவனத்துக்கும் பரிசுத்தஜீவனத்துக்கும் மத்தியில் அநேக தடைகள் இருக்கின்றன. நாம் பந்தயக் குதிரைகளைப்போல் அவைகளைத் தாண்டிப்போனாலும், அடுத்த தடையிலாவது விழமாட்டானா? அவனை அப்படியே பாதாளம் சேர்த்துவிடலாமே என்று சாத்தான் பின்றொடர்ந்துவருகிறான். தேவபக்தியாய் ஜீவனஞ்செய்ய முயலுகிறவனுக்கும் சாத்தானும் விரோதி, அவனுடைய சேனை அனைத்தும் விரோதிகளாயிருக்

கிறார்கள். இவ்வண்ணமாய் அரசனும் அவன் படையும் அட்டகாசம்பண்ணிக் கிட்ட நெருங்குகையில், இஸ்ரவேலருக்கிருந்த அதிர்ச்சியை என்னவென்றுதான் சொல்ல! ஜனங்கள் எல்லாரும் தங்கள் சேனாதிபதியைப் பார்த்து முறையிட்டார்கள். அவனோ கடவுள்மேல் நம்பிக்கைவையுங்கள், அவர் துணைநிற்பார் என்று ஆறுதல்சொல்லி, கடவுளைநோக்கி வேண்டிக்கொண்டான். தேவன் ஒரு விசேஷித்த தூதனை இஸ்ரவேலருக்குத் துணையாக அனுப்பியிருந்தார்; ஒரு மேகஸ்தம்பம் அவர்களுக்கு வழிகாட்டியாயிருந்தது. சத்துருக்கள் சமீபித்தபோது தேவன் அந்த மேகத்தை இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் நடுவே வரும்படிச்செய்து பார்வோனின் சேனையை மறைத்தார். என்றாலும் பார்வோனும் அவன் சேனையும் விடோம், விடோம் என்று பின்தொடர்ந்தார்கள். உடனே கடவுள் பிரசன்னமாகி, ஜனங்களைப் புறப்படச்சொல்லி கடலோரத்தில் ஐயோ என்பாரும், ஆகா என்பாரும், தொலைந்தோம் என்பாரும், புலம்பியழுவாரும், கையை நெறிப்பாரும், உதட்டைக் கடிப்பாருமாயிருக்கையில் மோசேயைப்பார்த்து: உன் கோலை சமுத்திரத்துக்கு நேரே நீட்டு என்றார். நீட்டினவுடனே சமுத்திர ஜலங்கள் இருபக்கமும் சுவர்போல் பிரிந்துநின்று வழிகாணப்பட்டது. உடனே அவர்கள் அவ்வழியாய்க் கடந்தார்கள். பாவியானவன் கொல்கொதாமலையில் சிலுவையில் தொங்கின இயேசுவின் திரு விலாவிலிருந்து எழும்பி பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் மத்தியில் கிடக்கிறாற்போலிருக்கும் இயேசுவின் இரத்தமாகிய பரிசுத்த செங்கடல்வழியாகவே பரம கானானுக்குப் போகவேண்டியது.

செந்நீர் நிறைந்த காயங்கள்
சுமந்த கர்த்தனே!
என்னால் விளைந்த பாவங்கள்
எல்லாம் அகற்றுமே.

அவர்கள் கடந்த ஜலஇடுக்குவழியாய் சத்துருக்களும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். இவர்கள் கடவுளுடைய ஜனங்களுக்கு ஒன்றும் செய்யாதபடி தேவன் அவர்கள் இரதங்களின் உருளைகள் உடையவும், வில்லுகள் ஒடியவும் செய்து அவர்களைத் தாமதப்படுத்தினார். இஸ்ரவேலர் கடலைக் கடந்தவுடனே மோசே மறுபடியும் தன் கோலைச் சுவர்போல் நின்ற ஜலத்தில் நீட்டினான். அக்ஷணமே ஜலங்கள் ஒன்றாய்க்கூடி நடுவிலிருந்த எகிப்தியரையும், அவர்கள் அரசனையும் ஆழ்த்திவிட்டது. கர்த்தாவே! உமது சத்துருக்கள் இப்படியே அழிவார்களாக. போர்க்கிறிஸ்தவர்கள் தங்களுக்குக் கேடுண்டாக இந்தப் பரிசுத்த கடலில் மிதித்துச் சாகிறார்கள்.



இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்தவுடனே இந்தப் பெரிய ரட்சிப்பை நினைத்து, தேவனை ஸ்துதிக்கும்படி மோசேமுனிவர் ஒரு பாட்டுக் கட்டினார். அந்தப் பாட்டை இஸ்ரவேலர் எல்லாரும் கூடிப் பாடி தேவனை ஸ்துதித்தார்கள். அந்தப் பாட்டின் போக்கு பின்வருமாறு:—

இராகம், பிலாஹம்சா. ஏகதாளம்.

1. கர்த்தரைப் பாட வாருங்கள்
மகிமையாய் வெற்றிசிறந்தார்
குதிரையை அதின் வீரனையுமோ
கடலில் தள்ளினார், கடலில் தள்ளினார்
என்று கர்த்தரைப் பாடி ஆடுவோம்.

2. கர்த்தர் என் பெலனும் கீதமும்
கர்த்தர் என் இரட்சிப்பானவர்
கர்த்தர் என் தேவன் ஆனவர்
தேவன் ஆனவர், தேவன் ஆனவர்
அவரை வாழ்த்தி உயர்த்துவேன் என்றும்.

3. கர்த்தரே யுத்தவல்லவர்
கர்த்தர் என்பது அவர்க்கு நாமம்
பார்வோன் ரதங்கள் அவனின் சேனைகள்
அனைத்தையு மவர், அனைத்தையு மவர்
ஆழ்கடலிலே ஆழ்த்திவிட்டாரே.

4. எகிப்தின் அதிபதிகளும்
செங்கடல் ஆழந்தனிலே
கருங்கல்போல் ஆழ்ந்துபோனாரே
கர்த்தர் கரம், கர்த்தர் கரம்
பலம் மகத்துவம் உள்ள கரமாம்.

5. தொடருவேன் பிடிப்பேன் நானும்
பட்டயம் நீட்டி வெட்டுவேன்
கொள்ளையைக் கொண்டுவருவேன்
என்று சொன்னவன், ஈயக்குண்டுபோல
இன்று செத்தனன் என்று பாடுவோம்.

இந்தப் பாட்டின் கவிகளை மோசேமுனிவரும் மற்ற எபிரெய புருஷரும் பாடினபோது முனிவரின் சகோதரியாகிய மீரி

யாம் என்பவள் தன் கையிலே தம்புரு எடுத்துக்கொண்டாள். சகல ஸ்திரீகளும் தம்புரோடும் அவளைத் தொடர்ந்து முனிவரின் கீதத்துக்கு எதிர்க்கீதமாக

கர்த்தரைப் பாடுங்கள் அவர்
மகிமையாய் வெற்றிசிறந்தார்,
குதிரையை அதின் வீரனையுமே
வீரனையுமே, வீரனையுமே
கடலில் தள்ளினார் கடலில் தள்ளினார்

என்று பாடினாள். இதனாலே முனிவர் குடும்பம் புலவராய் இருந்தார்களென்று தெரியவருகிறது. இப்பாட்டோடே முனிவருடைய புலவர்தொழில் முடிந்துபோகவில்லை. அவர் பின்னும் அநேக கீதங்களை உண்டுபண்ணியிருக்கிறார்.* எத்தனையோ ஆத்துமாக்கள் இதுபோலொத்த விசேஷித்த தயவுகளைப் பெற்றிருந்தாலும் அவரை ஸ்தோத்திரியாமலிருக்கிறார்கள்; நாம் தேவனுடைய சகாயங்களை உணர்ந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தவேண்டியது.

இஸ்ரவேலர் செங்கடல் அபாயத்துக்குத் தப்பி பிழைத்தபின் ஒரு வனத்தின் வழியாய் வந்தார்கள். அவ்விடத்தில் அவர்களுக்குத் தண்ணீர் கிடையாமல்போயிற்று. அங்கிருந்த கிணறு கடல்ஜலம்போல் உப்புக்கரித்தது; அப்போது முனிவர் தேவ கட்டளைப்படி ஒரு மரக்கிளையை அந்த ஜலத்தில் போட்டார்; உடனே அது நல்ல ஜலமாயிற்று. அப்பால் சிலநாள் பிரயாணம்பண்ணி சீன் என்னும் ஒரு வனத்துக்கு வந்தார்கள். அவ்விடத்தில் அப்பமும் இறைச்சியும் கிடையாமல்போயிற்று; அதையிட்டு ஜனங்களுக்குள்ளே முறுமுறுப்பு அதிகப்பட்டது. முனிவர் கடவுளிடம்போய் விண்ணப்பம்பண்ணினார். தேவன் அவர் விண்ணப்பத்தைக் கேட்டு காட்டிலிருந்து காடைகளை வரப்பண்ணி, அப்பத்துக்காக வானத்திலிருந்து மன்னாவை வருஷிக்கச் செய்தார். அந்த மன்னா ஒரு மல்லி அளவிருந்தது; அதின் ருசியோ தேனிட்ட கச்சாயம் போல் இருந்தது. அது ஓய்வுநாள்தவிர மற்ற வாரநாட்களில் விழுந்தது. இஸ்ரவேலருடைய அதிகாலைவேலை அந்த மன்னாவைச் சேர்க்கிறதுதான். மரணபரியந்தம் உண்மையாயிருந்து ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத் தேவன் மறைவான மன்னாவைக் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார்.

* யாத். 15. 1–19; 17. 16; 32. 18. எண். 21. 14; 15. 27–30. உபா. 32. 1–43; 33. 1–29. சங். 90.



அன்றாடகம் மன்னாவைத் தின்ற துவக்கத்தில் இஸ்ரவேலர் மோசேமுனிவரை வாழ்த்திப் புகழ்ந்தார்கள். அவர்கள் ரெவிதீம் என்ற இடத்தில் வந்தபோது மறுபடியும் அவர்களுக்குத் தண்ணீர் கிடையாமல்போயிற்று; உடனே இஸ்ரவேலர் முறுமுறுத்தார்கள். அப்பொழுது மோசேமுனிவர் தேவகட்டளையின்படி பக்கத்திலிருந்த ஒரு மலையைத் தமது தடியால் அடித்தார், உடனே திவ்வியமாகிய ஜலம் திரளாய்ப் பொங்கி வடிந்தது. சகல ஜனங்களும் தங்கள் இருகையாலும் ஏந்தி ஆசைதீரக் குடித்து, தங்கள் பாத்திரங்களையும் அந்த அற்புத ஜலத்தால் நிரப்பிக்கொண்டார்கள். பரமகானானின் நாட்டமாய் இப்பூலோகவனவழி போகும் பாவிக்கு அடிக்கடி ஆவிக்குரிய தவனமுண்டாகிறதுண்டு; அச்சமயத்தில் அவன்

எங்கே ஓடுவேன்
தாகமு மானேன்,
தாகம் இன்று என்னைக் கொல்லும்
என்னை ஆற்ற யார் வருவார்?
எங்கே ஓடுவேன்
தாகமு மானேன்

என்று புலம்புகிறான். அப்பொழுது கர்த்தராகிய இயேசு தாம் கொல்கொதாவில் ஒருதரம் சேவகனுக்குத் திறந்துகொடுத்த திருவிலாவின் செந்நீர் ஊற்றைக் காட்டி, ஓ, தாகமான பாவியே! தண்ணீருக்காக ஓலமிடும் பிள்ளையே! என்னிடம்வந்து பணமுமின்றி விலையுமின்றி பரலோக ஜீவவிருட்சமாகிய என்னிலிருந்து பாயும் திவ்வியபாலை அருந்து என்று கூப்பிடுகிறார். பாவிபோய்க் குடித்துக் களையாறித் தன் பிரயாணத்தை நடத்துகிறான். ரெவிதீம் என்ற பதத்துக்கு இளைப்பாறும் இடம் என்று அருத்தமாம். பாவி கிறிஸ்துவின் திருவிலாவையே தன் இளைப்பாறும் இடமாக தீர்மானித்துக்கொண்டு இரவும்பகலும் அந்த ரெவிதீமைச் சுற்றிவந்து

பிளவுண்ட மலையே
புகலிடம் தாருமே,
பக்கம்பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்,
பாவதோஷங்கள் யாவும்
நீங்கும்படி அருளும்

என்று விண்ணப்பம்பண்ணிக்கொண்டு தன் காலத்தை பரமகானான் பயணத்தில் செலவிடுகிறான்.

ரெவிதீம் சகத்துக்கும் ஜலசௌக்கியத்துக்கும் நல்ல இடமாய் இருந்ததால் முனிவர் தாம் எகிப்திலிருந்து நடத்திக்கொண்டு வந்த மனுஷமந்தையை அவ்விடத்தில் சிலகாலம் மடக்கியிருந்தார்போலிருக்கிறது; அவ்விடத்தில் திடீரென்று ஒரு யுத்தம் உண்டாயிற்று; அவ்விடத்து ஜனங்கள் அமலேக்கியர் என்று அழைக்கப்பட்டார்கள். பூர்வோத்தரத்தின்படி இஸ்ரவேலரும் அவர்களும் பங்காளிகள்போல்தான். ஏனெனில் அவர்கள் ஏசாவின் சந்ததியாயிருந்தார்கள்; இஸ்ரவேலரோ ஏசாவின் சகோதரனாகிய யாக்கோபின் சந்ததியாராயிருந்தார்கள். இவ்விருதிறத்தாருக்கும் திடீரென்று யுத்தம் ஆரம்பித்தகாரணம் இன்னதென்று தெரியவில்லை; அற்புதமாய் மலையிலிருந்துண்டான ஜலமே அதற்குக் காரணமாய் இருக்கலாம். அந்த ஜலப் பாக்கியம் அனைத்தையும் வழிப்போக்கரான மனுஷர் அநுபவித்துக்கொண்டு நமக்குக் கிடைக்கவிடுகிறார்கள் இல்லையே என்று அவர்கள் வாக்குவாதம்பண்ணி சண்டைக்கு வந்திருக்கலாம்; அல்லவென்று திரண்ட ஜனங்களாய் வந்திருக்கும் இஸ்ரவேலரால் அகவிலை குறைந்து பஞ்சம் வருகிறதுபோலக் காணப்படலாம்; அல்லவென்று தங்கள்வழியே சமாதானத்தோடு போகும் ஜனங்கள்மேல் அமலேக்கியர் சமுசயங்கொண்டு, அவர்கள் தங்களுக்கு விரோதமாய் யுத்தம்செய்யப் போகிறார்கள் என்று தப்பாய் எண்ணி வலிய சண்டைக்கு வந்திருக்கலாம். எப்படியோ இருபட்சத்தாருக்கும் யுத்தம் உண்டாயிற்று. இதுதான் முனிவர் இஸ்ரவேலரின் அதிபதியானதின் பின் உண்டாகும் முதலாம் யுத்தமாயிருந்தது. முனிவர் யுத்தப் பரீட்சையில் மிக நிபுணராயிருந்தார். அவர் தமது பட்டாளத்தை தமது உத்தம ஊழியனாகிய யோசுவாவின் வசம் ஒப்புவித்து யுத்தத்துக்குரிய கட்டளைகளையும் ஒழுங்குகளையும் செய்துவிட்டு தமது தமையனையும் மைத்துனனையும் கூட்டிக்கொண்டு ஒரு மலையின்மேல் ஏறினார். ஒருவேளை ஜலம் புறப்பட்டுவந்த மலைமேட்டுமேலேயே போயிருக்கலாம். அங்கே போய் தமது இருகரங்களையும் தமது கோலோடு வானத்துக்கு உயர்த்தி தமக்கு முட்செடியில் எழுந்தருளியானவரின் தயவும் சகாயமும் அருளிச்செய்யப்படவேண்டுமென்று மன்றாடினார். தமது சுய பலத்தையும் தமது பட்டாளத்துப் பராக்கிரமத்தையும் வில்லையும் அவர் நம்பாமல், தமக்கு ஒத்தாசைவரும் நித்திய பருவதங்களுக்கு நேராகத் தமது கையை ஏறெடுத்து விண்ணப்பஞ்செய்தார். அவதிப்படுகிறவர்களின் அங்கலாய்ப்பைக் கேட்க அநுதினமும் பூலோகமுகமாகத் தமது செவிகளைத்



தாழ்த்திக்கொண்டிருக்கிற தேவன் முனிவர் வேண்டுதலைக் கேட்டு எதிரிகளை முறியடிக்கச்செய்தார். இந்த அதிசய வெற்றியை நினைவுகூர்ந்து தேவனை ஸ்தோத்திரிக்கும்படி முனிவர் உடனே ஒரு பலிபீடங்கட்டி அந்த பலிபீடத்திற்கு "கர்த்தர் என் கொடி" என்று பேரிட்டு ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தினார். அதுமுதல் அமலேக்கியர் இஸ்ரவேலருக்கு நித்திய விரோதிகளானார்கள். இந்த ஜெயம் ஊரெங்கும் பிரபலமாயிற்று.

இந்த ஜெயத்துக்குப் பின்பு மோசேமுனிவரின் மாமனாகிய எத்திரோ தன் மகளையும் பேரன்மாரையும் கூட்டிவந்து முனிவரிடம் ஒப்புவித்தான்; அதோடு அவ்வளவு ஜனங்களையும் லேசாக நடத்தும்படியான ஆளுகைப்போக்கையும் தன் மருமகனுக்குப் போதித்தான். அது நல்லாலோசனையாய் இருந்தபடியால் முனிவர் அந்தப்படியே செய்தார். மோசேயும் ஜனங்களும் புறப்பட்ட நாற்பத்தேழாம் நாளிலே சீனாய் என்னும் மலைக்கு வந்துசேர்ந்தார்கள். அங்கே தேவன் முனிவருக்குக் காட்சியாகி இஸ்ரவேலருக்கும், பூமியிலுள்ள சகல ஜாதிகளுக்குமாகப் பத்துக்கற்பனைகளைக் கொடுக்க அவரை மலைமேல் வரச் சொன்னார். அவர் மலைமேல் ஏறி, நாற்பது நாளாய் இரவும் பகலும் அன்னம் ஆகாரமில்லாமலிருந்து அக்கட்டளையைப் பெற்றார். அந்தப் பத்துக்கற்பனைகளையும் தேவன் இரண்டு கற்பலகைகளில் தமது சொந்த விரலால் எழுதி முனிவருக்குக் கொடுத்தார். கடவுள் நியாயப்பிரமாணத்தைக் கொடுக்க மலையில் இறங்குகையில் அக்கினியும் புகைக்காடுமாயிருந்தது; எக்காள சத்தமும், இடியும், பூமி அதிர்ச்சியும் உண்டாயின. அந்தப் பத்துக்கற்பனைகளின் சுருக்கம் என்னவென்றால்:—

1. என்னையன்றி வேறே தேவனில்லை.
2. விக்கிரகங்களை வணங்கக்கூடாது.
3. தேவநாமத்தை வீணாய் வழங்காதே.
4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரி.
5. தாயையும் தகப்பனையும் பேணு.
6. கொலை செய்யாதே.
7. விபசாரஞ் செய்யாதே.
8. களவு செய்யாதே.
9. பொய் சொல்லாதே.
10. பிறனுடையதொன்றையும் இச்சியாதே

என்பவைகளே.

மோசே மலையில் போய்வரத் தாமதித்தபோது அவன் அங்கேயே செத்தானென்று ஜனங்கள் எண்ணி, மதிமயங்கித் தங்களை எகிப்திலிருந்து விடுதலைசெய்து நடத்திவந்த மெய்யான தேவனை மறந்து, தங்கள் நகை நட்டுகளையெல்லாம் உருக்கி, பொன்னாலே ஒரு கன்றுக்குட்டியைச் செய்து, அதன்முன் குப்புறவிழுந்து அதை தெய்வமாகப் பணிந்தார்கள். நாற்பதுநாள் கழித்து மோசே மலையிலிருந்து இறங்கிவருகையில் ஜனங்கள் செய்யும் விக்கிரகாராதனையைக் கவனித்து, கோபத்தினாலே பத்துக்கற்பனைப் பலகைகளை உடைத்துப்போட்டு, அவர்கள் வணங்கின பொன் கன்றுக்குட்டியை அக்கினியினால் சுட்டெரித்து தவிடுபொடியாக்கி, தண்ணீரில் கலக்கி அதை ஜனங்கள் குடிக்கும்படிசெய்தார். இவ்விதமாய் விக்கிரகாராதனையை அவர்கள் நடுவிலிருந்து விலக்கினார்.

நம்முடைய தேசத்தில் எத்தனையோ பேர் விக்கிரகத்தைக் கும்பிடுகிறார்கள்! இது மகா பெரிய துரோகம். விக்கிரகாராதனை கடவுளுக்கு அருவருப்பானது. விக்கிரகாராதனைக்காரர் எல்லாரும் நரக அக்கினியில் தள்ளப்படுவார்கள். மேலே சொல்லப்பட்ட பத்துக் கட்டளைகளும் உலகஇரட்சகரால் இரண்டு கட்டளைகளாக அமைக்கப்பட்டு, புதிய உடன்படிக்கையாகிய சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்விரு கட்டளைகளாவன:—

1. உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு மனதோடும், உன் முழுச் சிந்தையோடும் சிநேகிப்பாயாக.

2. உன்னைப்போலவே உன் பிறனையும் சிநேகிப்பாயாக என்பதே.

இவ்விரு கட்டளையையும் உத்தமமாய்க் கைக்கொள்ளுகிறவன் முனிவரின் பத்துக்கட்டளையையும் நிறைவேற்றுகிறவனாய் இருப்பான். மனுஷருடைய சன்மார்க்க நெறிக்கென்று தேவனால் கொடுக்கப்பட்ட இந்தப் பத்துக்கட்டளைகளோடு அவரை ஆராதிப்பதற்குரிய சடங்குப் பிரமாணமும், இஸ்ரவேலரை ஆளும்படியான துரைத்தனப் பிரமாணங்களும் மோசேமுனிவரால் தீர்மானிக்கப்பட்டன. இவ்விதமாய் முனிவர் இஸ்ரவேலரின் நியாயப்பிரமாணக் கர்த்தனானார். இஸ்ரவேலரின் குடித்தன சமாதானத்துக்கேற்ற பிரகாரமாய் முனிவர் தேவசித்தத்தின்படி ஏற்படுத்திய சட்டங்களே இக்காலத்தில் கிறிஸ்துமார்க்க இராசாங்க சட்டங்களின் மூலமும்



ஆதாரமுமாயிருக்கின்றன. சன்மார்க்கச் சட்டங்கள் அடங்கிய பத்துக்கட்டளைகளும் இரண்டு கற்பலகைகளில் எழுதிக் கொடுக்கப்பட்டது. முனிவர் அதைப் பத்திரப்படுத்தும்படி ஒரு அழகான பெட்டிசெய்து அதை பொன்தகட்டால் மூடினார். நாம் கர்த்தரின் கட்டளைகளை எவ்வளவாய் மதிக்கவேண்டுமென்பதை இதனாலே கற்றுக்கொள்ளுகிறோம். அவ்விடத்திலிருக்கையில் தேவனைத் தொழுதுகொள்ளவும் அவருடைய சித்தத்தை அறியவும் அவருக்குப் பலிகளைச் செலுத்தவும் நோக்கமாக ஒரு தேவாலயக்கூடாரமும் செய்து, அந்தக் கூடாரத்துக்குள் கற்பனைகள் அடங்கிய பொன்பெட்டியும் வைக்கப்பட்டது; அது உடன்படிக்கைப்பெட்டி என்று அழைக்கப்பட்டது. அந்தக் கூடாரத்தின்மேல் மேகம் இறங்கியிருந்தது. இவ்வண்ணம் விசேஷித்த பிரமாணங்களைப் பெற்று அவைகளைச் சனங்களுக்குக் கட்டளையிட்டபின்பு அவ்விடத்தை விட்டுப் புறப்படும்படித் தேவன் கட்டளையிட்டார். தேவ கட்டளையானது மேகத்தின்மூலமாய் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது; அந்த மேகம் கடந்து எத்திசையாய்ப் போகுமோ அத்திசையாய் அந்நிமிஷமே ஜனங்கள் புறப்பட்டுப்போவார்கள். அது தாமதிக்கிற இடத்தில் முனிவரும் அவருடைய மந்தையாகிய இஸ்ரவேலரும் தாமதித்திருந்தார்கள். அவர்கள் சீனாய் மலையடிவாரத்திலிருந்து புறப்பட்டு பாரான் என்னும் ஒரு வனவழி நடந்துபோனார்கள். முனிவர் சீனாய் மலையடிவாரத்திலிருந்த காலமெல்லாம் அவருடைய மாமனும் கூடவேயிருந்தார். அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டகாலத்தில் தமது மாமனையும் தம்மோடு கானானுக்கு வரும்படி வருந்திக் கூப்பிட்டும் அவர் சம்மதிக்கவில்லை. உலக நாட்டமுடையவர்கள் பரமகானானை நாடும்படி காடியைத் தாங்கினாலும் வரமாட்டோம் என்கிறார்கள்.

ஒவ்வொரு பயணத்தையும் முனிவர் ஜெபத்தோடு தொடங்கி ஜெபத்தோடு முடித்துத் தாமதிப்பார். ஜனங்கள் புறப்படும்படி மேகமானது எழுந்தருளியாகும்போது

கர்த்தாவே எழுந்தருளும்,
உமது சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக,
உமது பகைஞர் ஓடிப்போவார்களாக

என்று விண்ணப்பஞ்செய்வார். மேகம் தாமதிக்கும்போது

கர்த்தாவே அநேகமாயிரம் பேராகிய
இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக

என்று விண்ணப்பஞ்செய்வார். நாமும் நமது எந்தக் கிரியைகளையும் விண்ணப்பத்தைக்கொண்டு துவக்கி, விண்ணப்பத்தைக்கொண்டு முடிக்கவேண்டியது.

அவர்கள் புறப்பட்டு தபேரா என்ற ஒரு இடத்தில் வந்தார்கள். அவ்விடத்தில் இஸ்ரவேலர் தேவகிருபைகளை அவமதித்துக் கண்டபடிபேசி முறுமுறுத்தார்கள்; அவர்களைச் சிட்சிக்கும்படி தேவன் அக்கினியை அனுப்பினார். அந்த அக்கினியால் அநேகர்பட்டு விழுந்தார்கள்; அவர்களுக்காக முனிவர் தேவனிடத்தில் மன்றாடினார். உடனே அந்த அக்கினி அவிந்துபோயிற்று. அவர்கள் தங்கள் பிரயாணங்களில் போகப்போக முறுமுறுத்துக்கொண்டே போனார்கள். முனிவர் அதைப் பொறுமையோடே சகித்து தேவ உதவியினாலே அவர்களை நடத்திக்கொண்டேபோனார். ஒரு இடத்தில் அவர்களுடைய முறுமுறுப்புகளைச் சகிக்க இயலாமல் ஆண்டவரை நோக்கி, இப்படி இந்த ஜனங்களால் சங்கடப்படுகிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமென்று சொன்னார். அவர் மகா சாந்தமுடையவராயிருந்தும் துன்மார்க்கரின் அமளிகளும், துர்ச்சனரின் நன்றிக்கேடும் முனிவரின் சற்குணத்திலிருந்து அவரை வழுவி விழும்படிச் செய்தது. அப்படி அவர் பேசினது சரியல்ல, அவர் பேசினதைப் பார்த்தால் தேவனுக்கு ஊழியஞ்செய்வதை அவ்வளவு பெரிய காரியமாய் எண்ணாமல் தம்முடைய சுகத்தையும் அந்தஸ்தையும் பெரிதாக எண்ணுகிறது போலிருக்கிறது. முனிவரின் தப்பெண்ணத்தை தேவன் கண்டித்து அவருக்குத் துணையாக எழுபதுபேரை நியமித்தார். இதுதான் யூதருக்குள் சனதிரீம் சங்கத்தலைவர் ஏற்பட்டதின் பூர்வோத்தரமாய் இருக்கிறது. தேவன் அவர்கள்மேல் தமது அருளைப் பொழிந்ததினால் அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லவும், முனிவருக்கு உதவியாக ஜனங்களைக் கண்காணித்து ஆளவும் திறமையுடையவர்களானார்கள். அவர்கள் எல்லாரும் முனிவருக்கு அடங்கினவர்களாகவே தங்கள் ஊழியங்களை நடத்திக்கொண்டுவந்தார்கள்.

இதன்பின்பு முனிவருடைய வீட்டாரே அவருக்குச் சத்துருக்களாய் மாறினார்கள். முனிவரின் சொற்சக்தி அதிகப்படுகிறதைக் கண்டு அவருடைய சகோதரனாகிய ஆரோனும், சகோதரியாகிய மிரியாமும் வன்கண்பட்டு அதினால் ஜனங்களுக்குள் ஒரு கலகமுமுண்டாயிற்று. முனிவரைத் தங்களிலும் தாழ்ந்தவரென்று அவர்கள் காட்டும்படி அவர் பெண்கொண்ட ஜாதியை எடுத்துக்கூறினார்கள்; ஏனெனில் முனிவர் இஸ்ர



வேல்குடும்பத்தில் அல்ல, வேறு குடும்பத்தில் விவாகம்பண்ணியிருந்தார். இந்தக் குழப்பத்துக்கு மிரியாமே முதலாளியாயிருந்தாள். ஒருவேளை சம்பந்திக்கு சம்பந்தி சடுத்தமுண்டாகிற வழக்கப்படி மிரியாமுக்கும் முனிவருடைய மனைவிக்கும் மனஸ்தாபமுண்டாகி, அவளை விலக்கிப்போடவேண்டுமென்று மிரியாம் பிரயத்தனப்பட்டிருக்கலாம்; அல்லது முனிவரால் உண்டாகும் கனம் அவருடைய மனைவிக்குச் செல்லாமல் சகோதரியாகிய தனக்குச் செல்லவேண்டுமென்று பொறாமைப்பட்டிருக்கலாம்; அல்லது சிலர் நினைக்கிறபடி அவருடைய முந்தின மனைவி மரித்து அல்லது தள்ளப்பட்டுப்போனதால் முனிவர் இரண்டாம் மனைவியை விவாகஞ்செய்ய நேரிட்டபோது இஸ்ரவேலிலுள்ள பெண்ணைத் தேடாமல் எத்தியோப்பிய பெண்ணை மணம்புரிந்திருக்கலாம் (எண். 12. 1.). ஏதோ காரணத்தால் அவர்களுக்குள் மனஸ்தாபமுண்டாகிப் போயிற்று; அதில் ஆரோனும் சேர்ந்துகொண்டான். ஆதலால் அது அவர்கள் குடும்பவிஷயத்தாலுண்டான குழப்பமாகவே இருக்கலாம். ஒருவேளை சில காலத்திற்குமுன் நியமிக்கப்பட்ட எழுபது தலைவரில் ஆரோன் ஒருவனாய் இராததினாலே அவனும் வர்மங்கொண்டு இவ்விஷயத்தில் தமது சகோதரியோடு கூடிக்கொண்டிருக்கலாம். முனிவர் தமது சாந்தகுணத்துக்குள்ளே இந்த கலகத்தை அடக்கிச் சகித்துவந்தார். இதினால் அவருடைய மனதில் உண்டாயிருந்த வருத்தத்தை ஆண்டவர் கண்டு கூடாரத்தின்மேல் தங்கும் மேகத்தின்மூலமாய்த் தரிசனமாகி, அவ்விருவரையும் கூப்பிட்டுக் கடிந்துகொண்டு கலகத்துக்கு முதலாளியாயிருந்த மிரியாமைக் குஷ்டரோகத்தால் தண்டித்தார். உடனே அவர்கள் ஆகாமியத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்டார்கள்; முனிவரும் தமது சகோதரிக்காக வேண்டிக்கொண்டார். மிரியாம் எழுநாள் அந்த தண்டனைக்குள்ளிருந்து பின்பு சுத்தமாகி சுகமானாள். மோசேமுனிவரைப்பற்றி அந்தரங்கத்தில் குறைவாய்ப் பேசிக்கொண்ட பேச்சுகளையெல்லாம் இது ஒருவாறு அடக்கினது.

இச்சம்பவங்களுக்குப் பின்பு முனிவர் தேவகட்டளையின்படியே பன்னிரண்டுபேரைத் தெரிந்தெடுத்து, தாங்கள் இனிச் சுதந்தரிக்கப்போகிற தேசத்தைப் போய் வேவுபார்த்துவர அவர்களை அனுப்பினார். எகிப்தின்மேல் இன்னம் நாட்டங்கொள்ளும் முரட்டாட்ட இஸ்ரவேலருக்கு கானானின் வாழ்வைக் காட்டிச் சந்தோஷப்படுத்தும்படி நோக்கம் கொண்டாராக்கும். அந்தப் பன்னிருவரும் போய்த் திரும்பிவந்ததில் அவர்களு

டைய சாட்சி ஒன்றித்திராமல் வேறுபட்டிருந்தது. அதில் பத்துப்பேர் நமக்கு அந்தத் தேசம் உதவவே உதவாது என்று ஜனங்கள் மனதில் படும்படிப் பேசினார்கள். அது சர்ப்பக்குணமும், ஓநாய்க்குணமும், புலிக்குணமும், சிங்கக்குணமுமுள்ள பிரபல துஷ்டரின் குகைகள்போல் இருக்கிறதென்று குறைவாகப் பேசி, அவ்வளவு திரளான ஜனத்தின் இருதயங்களையும் தத்தளிக்கச் செய்துவிட்டார்கள். அதில் இரண்டு பேராகிய யோசுவாவும் காலேப்பும், அத்தேசச் செழிப்பையும் மகிழ்ச்சியையும் கூறிச் சனங்களை உற்சாகப்படுத்தினார்கள். இவ்விருவரும் கானானின் மண்ணைப் பார்த்து மகிழ்ந்தார்கள்; மற்ற பத்துப்பேரும் மனிதனைப் பார்த்துப் பயந்தார்கள். மண் அழியுமுன் மனிதர் அழிந்துபோவார்கள் என்று அவர்கள் யோசித்தார்கள் இல்லை. எப்போதும் முறுமுறுக்கிற ஜனத்துக்கு இரண்டுபேருடைய சொல் மதிப்பாகுமா? அந்த முரட்டாட்டமுள்ள ஜனங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப்பற்றி கவனியாமல் கண்கண்ட வாழ்வே வாழ்வு என்று சொல்லுகிறவர்களைப்போல் இருந்தார்கள். அந்த இரண்டு உத்தமரும் அத்தேச பலனைக் கண்ணாலே பார்க்கும்படித் திராட்சப்பழக் குலைகளைக் கொண்டுவந்தபோதிலும் அவர்கள் நம்பவில்லை. இதினிமித்தம் தேவன் அவர்களைத் தண்டித்து, அந்தத் தலைமுழுவதும் வனத்தில் சாகும்படி நாற்பதுவருஷம் அவர்களை அலையவைத்தார். இதினாலே அவர்களை நிர்மூலமாக்கவும் முனிவருடைய குடும்பத்தை பலுகச்செய்து தமது கிருபைகளை அவர்களில் நிறைவேற்றவும் தேவன் சித்தங்கொண்டார்; மறுபடியும் முனிவருடைய மன்றாட்டால் மன்னித்தார். கர்த்தரோடு வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள். இவ்வனாந்தரமான லோகத்தில் ஜீவிக்கும் நாமும் பரம கானானின் நாட்டத்தால் அதற்கு ஓடுகிறவர்களாய் இருக்கவேண்டும். அந்தப் பரம கானானை பரி. யோவான், பரி. பவுல் ஆகிய இரண்டு பேரும் வேவுபார்க்கப் போய் வந்து நற்செய்திகளை அறிவித்த சாட்சிகளைப்போல் இருக்கிறார்கள். உலகமெல்லாம் கூடி அதற்கு விரோதமாய் சாட்சிசொன்னபோதிலும் நாம் அதை நம்பவும் கூடாது, அதனால் நமது மனதைத் தளரவிடவும் கூடாது.

நான் ஓர் பரதேசி; விண் என் வீடு
பாழ்வனம் இப்பூமி; விண் என் வீடு.
அங்கே நான் போமட்டும்
சஞ்சலம் இக்கட்டும்



சூழ்ந்தெங்கும் நிற்கட்டும்
விண் என் வீடு

என்று தேம்பாடி இவ்வனத்தைக் கடந்துபோவதே நமது வேலையாக இருக்கவேண்டியது.

முனிவருடைய பிரயாணமெல்லாம் இஸ்ரவேலர் முறுமுறுத்துக்கொண்டே போனார்கள். கோராகு, தாத்தான், அபிராம் முதலிய இருநூற்றைம்பதுபேர் ஆசாரியபட்டம் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று கலகம்பண்ணி பயங்கரமான தண்டனையைப் பெற்றார்கள். மறுபடியும் ஒருதரம் அவர்களுக்குத் தண்ணீர்கிடையாமல் போயிற்று; உடனே ஜனங்கள் முறுமுறுத்து முனிவர்மேல் சாடினார்கள். முனிவர் தேவ கட்டளையின்படி ஒரு மலையோடுபேசி அதை அடித்தார்; அங்கிருந்து ஜலம் பிரளயமாய்வந்து அவர்களைச் சந்தோஷப்படுத்திற்று. என்றாலும் இந்த விஷயத்தில் தேவன் முறுமுறுத்த ஜனங்கள்மேல் தமது உக்கிரத்தைக் காட்டாமல் முனிவர்மேலும் அவருடைய சகோதரன்மேலும் காட்டினார்; அவர்கள் இருவரும் கானானில் பிரவேசிக்காமல் வழியில் சாவார்கள் என்று தீர்ப்பிட்டார். இந்தச் சமயத்தில் இவ்விருவரும் தேவனை நோகச்செய்த விபரம் இன்னதென்று ஒன்றும் சொல்லப்படவில்லை. மலையோடு பேசச்சொல்லியிருக்க இரண்டுதரம் அடித்ததுதான் குற்றமோ? அல்லது கலகக்காரரே! உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ? என்று கோபத்தோடு பேசினவார்த்தைகள்தான் குற்றமோ? தெரியவில்லை. ஒருவேளை அச்சமயத்தில் அவர்கள் உள்ளத்தில் தற்பெருமையும் சுயமேன்மையுமுண்டாகி, தேவனைப்பற்றிய அசட்டை மேலிட்டிருக்கலாம். இஸ்ரவேலர் முனிவருடைய ஆவியை விசனப்படுத்தினதினாலே அவர் பதறிப்பேசினார் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான். கடவுள் தமக்குக் கிட்டின பக்தரை பெரிய அடிகளால் அடிக்கிறார்.

இந்தக் காரியம் நடந்த சில காலத்துக்குள்ளாக தேவன் முனிவருடைய சகோதரனை மரணத்தால் அவரை விட்டுப் பிரித்தார். இஸ்ரவேலர் தாங்கள் முறுமுறுக்குங் குணத்தைவிடவே இல்லை. அவர்கள் ஒருதரம் ஒரு கஷ்டமான வழியாய்ப் பிரயாணஞ்செய்ய நேரிட்டபோது, வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவாகி: நாங்கள் வனாந்தரத்தில் சாகும்படி நீங்கள் எங்களை எகிப்துதேசத்திலிருந்து கூட்டிக்கொண்டுவந்ததென்ன? இங்கே அப்பமுமில்லை, தண்ணீருமில்லை என்று

சொல்லி தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாய் முறுமுறுத்தார்கள். அப்பொழுது தேவன் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அனுப்பிக் கடிக்கப்பண்ணினார்; அதனால் எண்ணிறந்த புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளும் பிரேதமாய் உருண்டார்கள். அப்பொழுது ஜனங்கள் தேவனை நோக்கி முறையிட்டார்கள். தேவன் அந்தச் சர்ப்பத்தைப்போல வெண்கலத்தினால் ஒன்று செய்யச் சொன்னார். மோசே அப்படியே செய்து அதை ஒரு கொம்பின்மேல் தூக்கிவைத்து, அதைப் பார்க்கச்சொன்னார். கொள்ளிவாய்ச் சர்ப்பத்தால் கடிக்கப்பட்டவர்கள் அதைப் பார்த்து உயிர்பிழைத்தார்கள்.

இந்த வெண்கலச் சர்ப்பம் லோகஇரட்சகராகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருந்தது. வெண்கலச் சர்ப்பம் உயர்த்தப்பட்டதுபோல் கிறிஸ்துவும் சிலுவைமரத்தில் உயர்த்தப்பட்டார். வெண்கலச் சர்ப்பத்தைப் பார்த்து அநேகர் பிழைத்தார்கள்; சிலுவையில் அறையுண்ட இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தோடு நோக்குகிறவர்கள் எல்லாரும் பாவ விஷத்தினின்று சுகமாவார்கள். அதைப்பற்றி சத்தியசாஸ்திரம் சொல்வதாவது: "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டதுபோல, மனுஷகுமாரனும், தம்மை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடைய உயர்த்தப்படவேண்டும்" என்று சொல்லுகிறது.

## முனிவரின் அந்தியகால பருவம்.

இவ்விதமாய் இடையனாயிருந்த முனிவர் லட்சாதிலட்சம் ஜனத்துக்கு அரசனும் அதிபதியுமாகி நீதிநெறிதவறாமல் ஆண்டு அந்தரவெளிவழியாய் நடத்தினார். அவர் இஸ்ரவேலரைக் கானானுக்கு வழிநடத்துகையில் அநேகம் பலத்த இராசாக்கள் அவருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்கள். கடவுளின் வல்லமையைக்கொண்டு எல்லாச் சத்துருக்களையும் மடங்கடித்துக் கீழடக்கினார். இவர்பேரைக் கேட்டால் அரசர் அடிபணிந்து வணங்குவார்கள். இவ்விதமாய் அவர் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தன வீட்டிலிருந்து மீட்டுக் கானான்தேசத்தின் எல்லை வந்துசேர்ந்தார். இவ்வளவு பாடுபட்டு முனிவர் இஸ்ரவேலரைக் கூட்டிவந்தாலும், அவரிடத்தில் காணப்பட்ட சில குற்றங்களினிமித்தம் தேவன் அவரைக் கானானில் பிரவேசிக்க இடங்கொடுக்கவில்லை.

ஒருநாள் முனிவர் தேவனைநோக்கி: தாம் கடந்துபோ



யோர்தானுக்கப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுக்க வேண்டிக்கொண்டார். அப்பொழுது தேவன்: போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடு பேச வேண்டாம்; நீ அதைப் பார்ப்பாய், ஆனால் பிரவேசிக்கமாட்டாய் என்றுசொல்லி, அவரை நேபோ என்னும் மலையிலுள்ள பிஸ்கா என்னும் உச்சிக்குவர உத்தரவுகொடுத்தார். அவர் அப்படியே ஏறிப்போனார். அந்த மலையின்மேல் நின்று இஸ்ரவேலர் சுதந்தரிக்கப்போகும் தேசத்தைச் சுற்று முற்றும் நன்றாய்ப் பார்த்தார். அதில் ஆறுகள் வெள்ளிக்கம்பிகள்போல் பாய்ந்தன; ஊற்றுகள் பால்போல் சுரந்தோடின; மரங்களும் சோலைகளும் பச்சென்று தெரிந்தன; பள்ளத்தாக்குகளில் பனிக்கட்டிகள் உறைந்து வெள்ளைத் துப்பட்டிகள்போல் தெரிந்தன; கேதுரு, தேவதாரு, புன்னை, சந்தனமுதலிய விருட்சங்கள் செழித்து வானத்தை அளாவி நின்றன; அவுரி, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகமுதலிய புட்பவனங்கள் அங்கங்கே நக்ஷத்திரக்கூட்டம்போல் தெரிந்தன; மலையின் சிறிய வெடிப்புகளில் தேன்கள் தட்டுவைத்து அதின் தெளிதேன் வடிந்தோடின; மலைகளில் மேயும் மாடாடுகளின் மடிகள் கசிந்து அவை படுத்திருந்த இடம் பாலாய் ஓடின. மெய்யாகவே அவருக்கு அத்தேசம் தேவலோகம்போலத் தோன்றிற்று. அக்காலத்தில் முனிவர் இஸ்ரவேல் ஜனமுழுவதையும் கூடிவரச்செய்து ஒரு உத்தம தகப்பனைப்போல் அவர்களை ஆசீர்வதித்து, தேவாவியினால் ஏவப்பட்டு அவர்களுக்குப் பிற்காலங்களிலுண்டாகும் வாழ்வு தாழ்வுகளைக் கூறினார். அதில் ஒரு வாசகம் யூதஜாதியிலிருந்து தோன்றும் உலக இரக்ஷகரைக் குறிக்கிறதாயிருந்தது; ஆதலால் அதுமுதல் அவர்கள் தங்கள் நடுவிலிருந்து தோன்றும் தேவபுத்திரனுக்கு எதிர்பார்த்திருந்தார்கள். இயேசுகிறிஸ்துவே முனிவரால் குறிக்கப்பட்ட தீர்க்கதரிசியாய் இருக்கிறார். அவர் சாட்சியிட்டது தம்மைக்குறித்துத்தான் என்று உலகஇரட்சகர் சொன்னார்.

இடையனாகிய முனிவர் அதிபதியும் அரசனுமாகி நாற்பது வருஷம் இஸ்ரவேலரை ஆண்டு நடத்தி, கடவுளுடைய கட்டளைப்படி தன் உத்தியோகத்தை தன் ஊழியக்காரனாகிய யோசுவா என்பவன் வசம் ஒப்புவித்து, நூற்றிருபது வயதுடையவராய் எகிப்தியர் மகிழ, இஸ்ரவேலர் அழ, எல்லா உயிரையும் ஆளும் ஏகனிடம் சேர்ந்தார். அவர் கண் இருளடையவுமில்லை, அவர் பெலன் குறையவுமில்லை. அவர் மரிக்கை

யில் ஒருவரும் மலையில் அவரோடிருந்ததில்லை; தேவனே அவரை அடக்கம்பண்ணினார். ஆனால் இந்நாள்வரையும் ஒருவனும் அவர் பிரேதக்குழியை அறியான். மலைக்குப் போன முனிவர் வராததால் இஸ்ரவேலர் அவருக்காக முட்டி அழுவாரும், மோதி அழுவாரும், கட்டி அழுவாரும், கதறி அழுவாருமாயிருந்தார்கள். ஆனால் அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வருமா? முடிந்துபோன காரியம் முட்டினாலும் கிட்டுமா? இஸ்ரவேலர் தங்களை ரட்சித்த அந்தக் குலாபிமானமுள்ள முனிவருக்காக முப்பதுநாள் துக்கங்கொண்டாடினார்கள்.

முனிவர் மரித்தபின்பு அவர் பிரேதத்துக்காக மிகாவேல் சம்மனசுக்கும், சாத்தானுக்கும் ஒரு பெரிய வாக்குவாதம் உண்டாயிற்று; இதினாலே முனிவரை தேவதூதர் கூடி அடக்கம் பண்ணினார்கள் என்று தோன்றுகிறது. முனிவருடைய பிணத்தை ஒரு விக்கிரகமாகவும், அவருடைய சமாதியை ஒரு விக்கிரக ஆலயமாகவும் ஆக்கி, இஸ்ரவேலர் முழுவதையும் கர்த்தரைவிட்டு விலக்கிப்போடவேண்டுமென்று சாத்தான் பிரயாசப்பட்டான்போல் இருக்கிறது. அந்த தர்க்கத்தில் பிரதான தூதனாகிய மிகாவேல் "கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்ளுவாராக" என்று சொல்லி உதம்பினார்* (யூதா. 9. வச.). சாவுமட்டும் கெடுக்கும் சாத்தான் நாம் செத்தபின்பும் நமது செய்கைகளைக்கொண்டு மற்றவர்களைக் கெடுக்கப் பிரயாசப்படுகிறான். முனிவர் மரணமடைந்து சுமார் ஆயிரத்து நானூற்றைம்பது வருஷங்களுக்குப் பின்பு மறுபடியும் ஒருதரம் இந்தப் பூலோகத்தில் காணப்பட்டார். உலகஇரட்சகர் ஒரு மலையின்மேல் மறுரூபப்பட்ட சமயத்தில் முனிவரும் வேறொரு மகாத்மாவும் வந்து இரட்சகர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற மரணத்தைக்குறித்துப் பேசினார்கள். இதினாலே மனுஷ ரட்சண்ய விஷயம் எவ்வளவு விசேஷமானதென்று விளங்குகிறது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டதின் இரகசியத்தை தேவதூதர் பிரமிப்போடு உற்றுப் பார்க்கிறார்கள்; அவருடைய ரட்சண்ய நிறைவேறுதலைப் பரிசுத்தவான்கள் எல்லாரும் ஆவலோடு பேசிக்கொள்ளுகிறார்கள்.

மோசேமுனிவரின் பேர் பூலோகத்தில் எவ்வளவு விசேஷமாய் எண்ணப்பட்டுவருகிறதோ அப்படியே பரலோகத்திலும்

* இது அக்காலத்தில் பாரம்பரையாக இறங்கிவந்த ஒரு சமாசாரமாயிருந்து பரி. யூதாவினால் எழுதப்பட்டிருக்கலாம்; அல்லது இப்போது காணமற்போன ஒரு பூர்வ பிரதியிலிருந்து அவர் வாசித்திருக்கலாம்.



எண்ணப்பட்டுவருகிறது. மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள் பரமபிதாவின் சமுகத்தில் பாடும் பாட்டுகளில் ஒன்றுக்கு "மோசேயின் பாட்டு" என்று பேர்வழங்கப்படுகிறது. அந்தப் பாட்டை பரி. யோவான் கேட்டு தமது ஆகமத்தில் எழுதி வைத்திருக்கிறார். (வெளி. 15. 3, 4.)

மோசேமுனிவரின் சரித்திரம் வாசிக்கிறவர்களுக்கும் கேட்கிறவர்களுக்கும் இனிமையைக் கொடுக்கிறது. இவருடைய ஜீவியவிருத்தாந்தம் திரு அவதாரமூர்த்தியும் பரமகுருவுமாகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவியவிருத்தாந்தத்துக்கு பல விஷயங்களில் ஒத்திருக்கிறது. அவைகளில் சிலவற்றை அடியில் சொல்லுகிறேன்:—

முனிவர் பிறக்குங்காலத்தில் இஸ்ரவேலருக்குள் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் கொலைசெய்யப்படவேண்டுமென்று ஒரு குரூரமான சட்டமிருந்தது; இயேசு பிறந்தகாலத்திலும் பெத்லகேமிலும் அதன் எல்லைகளிலும் இரண்டுவயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்பிள்ளைகளையெல்லாம் கொலைசெய்யவேண்டுமென்று ஒரு கட்டளைபிறந்தது. பார்வோன்கைக்குத் தப்ப முனிவர் மீதியான்தேசத்துக்கு ஓடிப்போனார்; ஏரோதுவின் கைக்குத்தப்ப கிறிஸ்து எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டார். மோசேமுனிவர் பார்வோன் அரண்மனையிலிருந்த பவுசுகளையெல்லாம் வெறுத்து, தேவனுடைய ஜனத்தோடு கஷ்டத்தை அநுபவிப்பதைத் தெரிந்துகொண்டார்; இயேசுவும் பரமண்டலத்திலுள்ள சகல சந்தோஷங்களையும் மகத்துவங்களையும் வெறுத்து, நம்மை இரட்சிக்கும்பொருட்டுத் தாழ்வான பூதலத்தில் தங்கவும், மனிதசாயலை அணிந்துகொள்ளவும் உற்சாகமாய்ச் சம்மதித்தார். மோசேமுனிவர் பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை மீட்டுக்கொண்டார்; இயேசுகிறிஸ்து பாவிகளாகிய மனிதரை பாவத்தினின்றும் சாத்தானுடைய அடிமைத்தனத்தினின்றும் மீட்டுக்கொண்டார்.

மோசேமுனிவர் சீனாய்மலையில் நியாயப்பிரமாணத்தைப் பெற்று ஜனங்களுக்கு அதைப் போதித்தார்; இயேசுகிறிஸ்துவும் தமது பிதாவின் சித்தத்தை பூலோகத்தாருக்கு வெளிப்படுத்தி, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே தெரியக்காட்டினார். தேவகோபம் ஜனத்துக்கு விரோதமாய் எழும்பின சமயத்தில் முனிவர் ஜனத்துக்கும் தேவனுக்கும் நடுவாக நின்று பரிந்துபேசினார்; கிறிஸ்து சர்வலோகத்தாருக்கும் மத்தியஸ்தராய் நின்று, பிதாவாகிய தேவனிடம் இரவும்

பகலும் பரிந்துபேசுகிறவராய் இருக்கிறார். இவ்விதமாய்ப் பார்த்தால் முனிவர் கிறிஸ்துவுக்கு ஒரு சிறந்த முன்னடையாளமாய் இருக்கிறார். பின்னும் முனிவரின் சரித்திரத்தால் நாம் அறிந்துகொள்ளத்தக்க அநேக போதனைகளும் இருக்கின்றன. தேவன் மனுஷர்மேல் மகா இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமுமுள்ளவராயிருந்தும், தமது நீதியை விட்டுவிடவேமாட்டாரென்று அறிகிறோம். எப்படியெனில், முனிவரைப் பிறப்புமுதல் மரணம்வரையும் விசேஷித்தவிதமாய் நடத்தி, அவருக்குப் பலதரம் காக்ஷியளித்து, அவரை அற்புதவரங்களினாலே நிரப்பி, திரண்ட ஜனத்துக்கு அவரை அதிபதியாக ஏற்படுத்தி, இவ்விதமாய் அவரைக் கிருபையினால் முடிசூட்டினாலும் அவர் இரண்டொருதரம் கடவுளை நோக நடந்ததால், தேவன் தமது நீதியின்படி அவரைக் கானானில் கால்மிதிக்கக் கடாட்சம்பண்ணவில்லை. “நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், துன்மார்க்கனும் பாவியும் எங்கே நிற்பான்?” என்று சத்தியசாஸ்திரம் சாற்றுவது யதார்த்தமே.

மோசேமுனிவரின் சரித்திரமானது பொதுவாக ஜனங்களுக்குப் போதனையைக் கொடுக்கிறதுமன்றி, விசேஷமாய்த் தேவ ஊழியக்காரருக்கடுத்த உணர்வுள்ள படிப்பினையையும் கொடுக்கிறது. அவர் தேவாலயத்தில் எங்கும் உண்மையுள்ளவராய் இருந்தார். அதாவது தேவாராதனைக்குரிய காரியங்களில் எல்லாம் அதிக பக்திவைராக்கியமாய் இருந்து, அந்த மெய்யான பக்திவைராக்கியத்தை இஸ்ரவேல்ஜாதியின் மனதில் நிலைநிறுத்தும்படிச் செய்யவேண்டிய முயற்சிகளையெல்லாம் செய்தார். தேவனுடைய ஊழியத்தில் ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு ஊழியனும் அவரிடத்தில் காணப்பட்ட உண்மையைப் பின்பற்றவேண்டியது. அவரிடத்தில் காணப்பட்ட பொறுமை, சகிக்கும் குணம், சாந்தம், உபத்திரவங்களைத் தாங்கிக்கொள்ளுகிற சிறந்தகுணங்கள் ஒவ்வொரு தேவஊழியக்காரரிடத்திலும் இருக்கவேண்டியது. அவன் தேவசித்தத்தின்படி தனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கும் ஞானமந்தையை இவ்வனந்தரமான லோகத்தில் வழிநடத்தி பரமகானானுக்குள் சேர்க்கிறவனாய் இருக்கவேண்டும். அப்படி அவன் செய்வானானால் அவனும் அவன் மந்தையின் ஆடுகளும் தங்கள் தங்கள் மரணத்தின்பின்பு பரலோகம் சேர்ந்து, மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவரின் பாட்டையும் பாடிக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்களோடு கூடிக்கொண்டு, “சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரி



யைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள். கர்த்தாவே, யார் உமக்கு பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருப்பார்கள்; தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் உமக்கு முன்பாகத் தொழுதுகொள்ளுவார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின” என்று தேவாட்டுக்குட்டிக்கு ஆனந்தமுண்டாக ஆடிப்பாடுவார்கள்.

## AARON.

## முதல் ஆசாரியன்.

(ஆரோன்.)

இப்பொழுது நாம் வாசிக்கப்போகும் சரித்திரம் இரண்டொரு விஷயத்தில் மற்றச் சரித்திரங்களிலும் விசேஷமானதாய் இருக்கிறது. ஆதிமனுஷன் காலமுதல் மனுஷர் மெய்த்தேவனை ஆராதித்துவந்தார்கள் என்பது மெய். அவர்களுடைய பின்சந்ததியார் வரவர மெய்த்தேவ ஆராதனையை ஒழித்து பல தேவவணக்கத்தை நாடிப்போனபோதிலும் தேவன் முள்ளுகளுக்குள்ளே லீலிபுஷ்பங்கள் பூப்பதுபோல் தம்மை வணங்கி உத்தமமாய் ஆராதிக்கும் பக்தரை அங்கங்கே எழும்பப்பண்ணிக்கொண்டே இருந்தார். அக்காலங்களில் தேவனை வணங்குவதற்கேற்ற பிரமாண்டமான ஆலயங்களும், அந்த ஆராதனையை நடத்துவதற்காக திரள் கூட்டமான குருக்களும் இருந்ததில்லை; அவரவர் வீடாவது ஒரு தோப்பாவது தேவனை வணங்கும் ஸ்தலமாயும், அந்தந்த வீட்டின் மூத்த மகன் அவ்வாராதனையை நிறைவேற்றும் பூசாசாரியாயும் இருந்தார்கள். இதுவே உலகமுண்டாகி இரண்டாயிரம் வருஷத்துக்கதிகமாய் தேவாராதனை முறைக்குரிய ஒழுங்காய் நடந்துவந்தன. இந்தப் பூர்வ ஒழுங்குகள் நாம் வாசிக்கப்போகும் ஆரோன் என்பவர் காலமுதல் தேவனால் மாற்றப்பட்டு, தேவாராதனைக்குரிய காலமும் இடமும் ஆகும் வகையும் பிரமாணங்களாலும் ஏற்பாடுகளாலும் தீர்மானிக்கப்பட்டன. இந்தப் புது ஏற்பாட்டின்படி தேவபணிவிடை செய்தவர்களில் ஆரோன் தலைவராய் இருக்கிறார். சாதாரண சனங்களிலிருந்து தேவா

ராதனைக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு, அபிஷேகத்தின்மூலமாய் உறுதிப்படுத்தப்பட்டு, தேவாராதனைக்கு நியமங்களை நிறைவேற்றிவருகிறவர்களுக்கும் இவரை மூற்பிதா என்று சொல்லலாம். ஆசாரியரின் மூற்பிதாவாகிய ஆரோனுடைய வரலாறுகளை இனிச் சொல்லுவோமாக.

இவரைப்பற்றி அதிக விபரமான விருத்தாந்தங்கள் சொல்லப்படக்காணோம். கொஞ்சம்மாத்திரம் இவரைக்குறித்து பரிசுத்த வேதத்தின்மூலமாய் நாம் அறியக்கூடியதாய் இருந்தபோதிலும், அந்தக் கொஞ்சமும் அதன விசேஷமுடைய வரலாறுகளாகவே இருக்கின்றன. இவரைக்குறித்துக் கொஞ்சமாத்திரம் சொல்லப்பட்டபோதிலும் இவருடைய ஊழியத்தைக்குறித்து வேதாகமம் எங்கும் பிரபலமாய்க் கூறப்பட்டிருக்கிறதால் இவரைப் பக்தரில் இரண்டாந்தரமானவர் என்று சொல்லக்கூடாது.

இவருடைய இளம்பிராயத்துச் சரித்திரம் ஒன்றும் நமக்குத் தெரியாது. இவர் மோசேமுனிவரின் சகோதரனும், அம்ராம் யோகபேத்து என்பவர்களின் சிரேஷ்ட புத்திரனும் இருந்தார். எகிப்திய அரசனாகிய பார்வோன் பிறக்கிற இஸ்ரவேலருடைய ஆண்பிள்ளைகளையெல்லாம் நீல்நதியில் போட்டுவிடவேண்டும் அல்லது கொலைசெய்துவிடவேண்டுமென்று விளம்பரம்பண்ணியிருந்த காலத்துக்குச்சுமார் இரண்டொரு வருஷத்துக்குமுன் பிறந்தார். பிறந்ததுமுதல் சுமார் எண்பத்துமூன்று வயதுவரைக்கும் இவரைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. இவர் தமது சிறு பிராயத்தில் பார்வோனுடைய குமாரத்தியால் தண்ணீரிலிருந்து தூக்கி எடுக்கப்பட்டு வளர்க்கும்படி தன் தாயினிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட தமது சகோதரனாகிய மோசேயைத் தூக்கிச் சுமப்பதும், அவருக்குக் காவல்காத்து காலங்கழிப்பதும் இவருடைய வேலையாய் இருக்கலாம். தமது தம்பியின் சவரட்சணைக்கென்று பார்வோன் குமாரத்தி அனுப்பின பால், தயிர், வெண்ணெய், பலகாரம் பண்டம் பலாதிகளில் இவருக்கும் ஒரு பங்கு கிடைத்திருக்கும். தமது தம்பியை வளர்க்கும்படி இராஜகுமாரத்தி கொடுத்த பண உதவியினால் இவருடைய உடை உணவுமுதலியவைகளில் இவர் சற்று க்ஷேமமாய் வாழ்ந்திருக்கலாம். அண்ணன் தம்பியாகிய இவர்களிருவரும் வெகு நேசமாய் இருந்தார்கள். தமது சகோதரன் அரண்மனையிலிருந்துவந்து அவ்விடத்து செய்தியை எல்லாம் சொல்ல, இவர் கேட்டிருக்கலாம்; தமது சகோதரன் படித்த அநேக சாஸ்திரங்களையும் ஞானங்களையும் கதைபோல் இவ



ருக்குச் சொல்ல, இவரும் அவைகளில் ஒரு அறிவடைந்திருக்கலாம்; தமது சகோதரனுடைய சொற்சக்தியையும், அரணமனைவாழ்வையும்தொட்டு இவரைப் பலரும் மதித்தும் இருக்கலாம். சுருக்கிச் சொல்லவேண்டுமானால் இவர் தமது தம்பி பேரைச் சொல்லித் தாமும் கலியாண மன்னனாகிவிட்டார்.

இவருக்கு நாற்பத்துமூன்று பிராயமானபோது ஒரு பெரிய விசனம் நேரிட்டது. அரண்மனையில் வாழ்ந்து பட்டத்துப் புத்திரன்போல் பலராலும் எண்ணிவந்த சகோதரனைத் திடீர் என்று காணாமல்போயிற்று. அதின் வரலாறுகளை மோசேமுனிவரின் சரித்திரத்தில் நுட்பமாய்க் கூறினபோதிலும் இவ்விடத்தில் சுருக்கமாய்க் காட்டுவது தோஷமல்ல. இவருடைய சகோதரனாகிய மோசேமுனிவர் ஒரு எகிப்தியனும் ஒரு இஸ்ரவேலனும் சண்டைபோட்டிருக்கிறதைக் கண்டு, எகிப்தியனைக் கொன்றுபோட்டு இஸ்ரவேலனை ரட்சித்தார். இச்செய்தி வரவர அரண்மனைக்குத் தெரியப்படவே, அவர் எவருக்கும் சொல்லாமல் ஓட்டம்பிடித்தார். அவர் எத்திசைக்குப் போனார் என்றாவது அவர் பிழைத்தாரோ செத்தாரோ என்ற சமாச்சாரமாவது இவருக்குத் தெரியாதிருந்தது. தம்பி ஊரைவிட்டு ஓடிப்போன சிலகாலத்துக்குள் அவருடைய பெற்றோரும் ஒருவர்பின் ஒருவராய் மாண்டு தங்கள் மண்ணறை சேர்ந்தார்கள். ஆரோனும் பிற்காலத்தில் இராஜகோத்திரமாய் விளங்கின யூதாக்கோத்திரத்திலுள்ள எலிசாபாள் என்னும் கன்னிகையை மணம்புரிந்தார். அவள் அவருக்கு நாலு ஆண்பிள்ளைகளைப் பெற்றாள். அந்த நாலு குமாரரும் நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்று அழைக்கப்பட்டார்கள்.

இவருடைய தம்பி ஓடிப்போனதுமுதல் எகிப்தியர் இவரையும் இவர் குடும்பத்தையும் வன்கண்ணோடு பார்த்துக்கொண்டுவந்தார்கள் என்று தோன்றுகிறது. தமது தம்பியின் செய்கையையிட்டு தம்முடைய குடும்பத்துக்குண்டான நிந்தை அவமானங்களையெல்லாம் சகித்துக்கொண்டு, கடவுளுடைய சகாயத்தைத் தேடிக் காலங்கழித்துவந்தார்.

ஆரோன் என்பவருக்கு எண்பத்துமூன்று பிராயமாகையில் ஒருநாள் கடவுள் இவருக்குத் தரிசனமானார். இதற்குமுன்னே தேவதரிசனை இன்னதென்று அவருக்கு எவ்வளவேனும் அனுபோகம் இருந்திருக்கமாட்டாது. இந்தத் தரிசனத்துக்கு முந்தி நாம் வேறொரு சங்கதியும் சொல்லவேண்டியிருக்கிறது. எப்படியெனில் எகிப்தைவிட்டு ஓடிப்போன மோசேமுனிவர் ஒரு பர்வதத்தின் சார்பில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கை

யில் முட்செடியில் அக்கினிமயமாய்த் தரிசனையாகி, அடிமைப்பட்டிருந்த இஸ்ரவேலரை மீட்கும்படிக் கட்டளையிட்டார். மோசேமுனிவர் தாம் போகக்கூடாதென்பதற்குப் பல முகாந்தரங்களைச் சொன்னதோடு, தமக்கு அரசனோடு பேசும்படி வாக்குவல்லபம் இல்லையென்றும் போக்குச்சொன்னார். அப்போது தேவன் பேச்சுசகாயத்துக்காகத் தமது சகோதரனாகிய ஆரோனைக் கூட்டிக்கொள்ளும்படி உத்தரவுகொடுத்தார். அந்த உத்தரவின்படியே அவரும் புறப்பட்டு நாற்பதுவருஷமாய் மறந்த எகிப்துதேசத்துக்கு மறுபடியும் வந்தார். மோசேமுனிவர் எகிப்துக்கு வருகிற வழியிலிருக்கும்போதுதான் ஆண்டவர் ஆரோன் ஆசாரியருக்குத் தரிசனமானார்.

கர்த்தர் ஆரோனை நோக்கி: “நீ வனாந்தரத்தில் மோசேக்கு எதிர்கொண்டுபோ” என்று தரிசனமூலமாய்க் கட்டளையிட்டார். இந்தச் சுருக்கமான கட்டளையினால் ஆரோனுக்கு மூன்று காரியங்கள் நிச்சயப்பட்டுப்போயிற்று: முதலாவது தன் சகோதரன் இன்னும் உயிரோடிருக்கிறான் என்றும், இரண்டாவது அவன் எகிப்துக்கு ஏதோ விசேஷித்த நோக்கமாய் தேவனால் ஏற்படுத்தப்பட்டு வருகிறான் என்றும், மூன்றாவது தனக்கும் அந்தக் கனத்தில் ஒரு பங்குண்டுபோல் இருக்கிறது என்றும் நிச்சயித்துக்கொண்டான். ஒரு வனத்தில் பல திசைக்கும் பிரியும் கிளைவழிகள் எத்தனையோ இருக்கும்! ஆனாலும் தேவாதீனமாய் இருவர் வழியும் ஒரு வழியாக ஒரு மலையடிவாரத்தில் கூடிற்று. அவர்கள் இருவரும் அம்மலையோரத்தில் ஒன்றாய்ச் சந்தித்து ஒருவரையொருவர் முத்தமிட்டுக்கொண்டார்கள். அவர்கள் ஒருவரையொருவர் வினவிக்கொண்ட பிறகு தங்களுடைய குடும்பகாரியங்களைக்குறித்துப் பேசினதாக யாதொரு குறிப்பும் வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. அப்பொழுது “மோசே தன்னை அனுப்பின கர்த்தருடைய சகலவார்த்தைகளையும், அவர் தனக்குக் கட்டளையிட்ட சகல அடையாளங்களையும் ஆரோனுக்குத் தெரிவித்தான்” என்று மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. இதினாலே அவர்கள் தங்கள் குடும்ப விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொள்ளவே இல்லை என்று நாம் சொல்லுகிறதில்லை; அப்படிப் பேசிக்கொண்டிருக்கலாம். அது அற்பசொற்பப் பேச்சாயும், அரைநாழிகைக்குள் முடிந்துபோன பேச்சாயுமிருக்கலாம். ஆனால் அவ்விருவரும் கண்ட தேவதரிசனைகளும் அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஊழியத்தின் வரலாறும் அதை அடுத்த ஆலோசனைகளுமே அவர்களுடைய முக்கிய பேச்சாய் இருக்



கவேண்டியது என்றுமாத்திரம் தீர்மானமாய்ச் சொல்லுகிறோம். இதினாலே தேவஊழியத்தை நாம் எவ்வளவு விசேஷமாய் மதிக்கவேண்டுமென்றும், நமது சொந்தக்காரியங்களை அதனிலும் விசேஷிக்கப்படாதென்றும் படித்துக்கொள்ளவேண்டியது.

ஆரோனும் மோசேயும் எகிப்துக்குவந்து வீண்காலம் போக்காமல் தங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட வேலையை உடனே ஆரம்பித்தார்கள். அவர்கள் இஸ்ரவேலரின் மூப்பரைக் கூடிவரச்செய்து சகல சங்கதிகளையும் அவர்களுக்குச் சொல்லி, இராஜசமுகமேறி இஸ்ரவேலரை விடுதலைசெய்யவேண்டுமென்று கேட்டார்கள். மோசே அதே அரண்மனையில் வெகுகாலம் ஜீவித்தவரானதால் இராஜதரிசனைக்குரிய சகல முறைமைகளையும் அறிந்திருந்தார். ஆரோனும் அவரோடுகூட சீஷப்பிள்ளைபோல் போய் அவர் பேசவேண்டுமென்று கற்பித்தபிரகாரம் பேசி, அவர் ஏவினபிரகாரமெல்லாம் செய்தார். மோசேமுனிவரின் திக்குவாய் சிலதரம் இராஜசபையைச் சிரிக்கப்பண்ணினாலும் ஆரோனுடைய தெளிந்த சொல் அவர்களைக் கலங்கப்பண்ணிற்று. இஸ்ரவேலரை விடுதலைசெய்யுமுன் மோசேமுனிவர் செய்த அடையாளங்களும் அற்புதங்களும் எல்லாம் ஆரோன் மூலமாகவே நிறைவேற்றப்பட்டன. எப்படியும் நாம் மோசேமுனிவர் சரித்திரத்தில் காட்டினபிரகாரம் கடைசியாக இஸ்ரவேலர் மோசே, ஆரோன் என்பவர்களைக் கொண்டு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் அதிசயமாய் செங்கடலைக் கடந்து சுமார் மூன்றுமாதம் பிரயாணம்பண்ணி மன்னாவை உண்டு மனமகிழ்ந்து, காடைகளைத் தின்று களிப்பாகி, சீனாய்மலையடிவாரத்துக்கு வந்தார்கள்.

அவர்கள் சீனாய்மலையடிவாரத்தில் சிலகாலம் தாமதித்திருந்தபோது மோசேமுனிவர் மலையின்மேலேறி, பத்துக்கட்டளைகளையும் வேறு அநேக பிரமாணங்களையும் கடவுளிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்படி நாற்பதுநாள் மலையின்மேல் பின்னிட்டார். அக்காலத்தில் ஆரோன் ஆசாரியர் ஒரு பெரிய சோதனைக்குட்பட்டார். எப்படியெனில், மலையின்மேல் போன மோசேமுனிவரை சிலநாளாய்க் காணாத இஸ்ரவேலர் அவர் செத்துப்போனார் என்றும், ஏதோ துஷ்டமிருகம் அவரைப் பட்சித்திருக்கலாம் அல்லது கடவுளே அவரை தம்மண்டைச் சேர்த்துக்கொண்டிருக்கலாம் என்றும் தப்பாய் எண்ணி பலவாறாகப் பேசிக்கொண்டார்கள். அவர்களில் சிலர் தங்கள்

இருதயங்களில் மறுபடியும் எகிப்துக்குத் திரும்பிப்போகும்படி நினைத்தார்கள் (அப். 7. 39.); வேறுசிலர் ஆரோனை நோக்கி: "எகிப்துதேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ, ஆதலால் எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும்" என்றும் தொந்தரவுசெய்தார்கள். ஆரோனிடத்தில் வாக்கு வல்லபமிருந்தாலும் மனோவல்லமை இருக்கவில்லை; ஆதலால் அவர்கள் மனதுக்கு இணங்கி ஒரு விக்கிரகத்தை யுண்டாக்கினார். அந்த விக்கிரகம் கன்றுக்குட்டி மாதிரியாய் செய்யப்பட்டது; அது முழுவதும் பொன்னாய் இருந்தது; அந்தப் பொன், நாணயப்பொன்னாய் இராமல், ஸ்திரீகளின் காதுகளிலும் கழுத்துகளிலும் அணிந்திருந்த ஆபரணமாய் இருந்தது; அந்தப் பொன் வேண்டுமென்று கேட்டால் பெண்பிள்ளைகள் கொடுக்கமாட்டார்கள். அதோடு ஜனங்களின் அமளி அடங்கிப்போம் என்ற நோக்கமாய்க் கேட்டதாக யூதர் தங்கள் ஆகமங்களில் எழுதிவைத்திருக்கிறார்கள். இதை ஒத்துக்கொண்டாலும் ஆரோன்மேல் நாம் குற்றம் சொல்லவேண்டியதுதான். இவர் ஜனங்களுடைய அமளிக்கு அஞ்சாமல் தன்னைக் கொல்லும்படி ஜனங்கள் தடியோடும் கல்லோடும் வந்தபோதிலும், தமது தம்பியைப்போல தேவனண்டைபோய் ஆலோசனை கேட்டுக்கொள்ளும்படி அவர் பாதத்தில் விழுந்தது மெய்யானால், இந்தக் காரியத்தை அடியோடு தடுத்து நிற்கும்படியான பலத்தையும் சத்துவத்தையும் அவரிடத்தில் பெற்றுக்கொண்டிருக்கலாம்.

எப்படியிருந்தபோதிலும் கொடுங்கோல் மன்னனாகிய பார்வோனையும், அவனுடைய மந்திரி பிரதானிகளையும் மடக்கிப் பேசவும், துணிந்து எதிர்க்கவும் தமது தம்பியோடுகூடச் சேர்ந்துநின்ற இவர் இப்போது தம்பியில்லாத நேரத்தில் இஸ்ரவேலரின் அடிமைபோல அவர்கள் சொன்னபடியெல்லாம் செய்தார். இதற்கென்று ஆரோன் அவர்களிடத்திலிருந்த பொன்நகைகளைக் கேட்டபோது, உடனே அவரவர் தந்தன் பெண்ஜாதிகள் காதிலும் கழுத்திலும் இருந்த நகைகளையெல்லாம் இறக்கி ஆரோனுடைய பாதத்தண்டை படைத்தார்கள். இக்காலத்திலும் ஜீவனுள்ள தேவனுக்கு காணிக்கையாகச் செலுத்தப்படுகிற பொன் வெள்ளி முதலியவைகள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்படுகிறதிலும் மெத்தக் கொஞ்சந்தான்.5 இந்தக் குறைவு இந்துதேசக் கிறிஸ்தவர்களுக்குள் பெரும்பாதலும் பார்க்கிறோம்; அவர்கள் மற்ற மார்க்கங்களைக் கொடுக்குக்



மார்க்கமாயும், கிறிஸ்துமார்க்கத்தை வாங்கும் மார்க்கமாகவும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இது மகா பிசகு. தேவனைக் குறிக்கும்படி இப்படிக் கன்றுக்குட்டியின் மாதிரியை ஆரோனும் இஸ்ரவேலரும் செய்யத் துணிந்தது அவர்கள் எகிப்தியர் வழங்கிவந்த கன்றுக்குட்டி வணக்கத்தினால் என்று தோன்றுகிறது. இதற்கு அநேக வருஷங்களுக்குப் பின்பு யெரொபெயாம் பெத்தேலிலும் தாணிலும் ஏற்படுத்தின கன்றுக்குட்டிகளின் விக்கிரகமும், அவன் எகிப்துதேசத்தில் சிலகாலம் சஞ்சரித்ததின் முகாந்தரத்தால்தான என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.*

ஆரோன் என்பவர் தாம் உண்டுபண்ணின விக்கிரகத்தை எகிப்திய விக்கிரகக் கன்றைப்போல உண்டாக்காமல் அதில் சிறகுகள் இருக்கிறாப்போல் உண்டாக்கி, எகிப்திய விக்கிரகத்திலிருந்து அதை வித்தியாசப்படுத்தி இருந்தார் என்று யூதர் சொல்லுகிறதுண்டு. அந்த அபிப்பிராயம் நிச்சயமாயிருக்கும் என்று நாமும் ஒப்புக்கொள்ளத் தகுந்த ஆதாரமில்லை. எப்படியும் அவருடைய நோக்கத்தில் ஒரு பெரிய வித்தியாசம் இருந்ததென்று தெளிவாகிறது. அவர் தாம் உண்டாக்கின விக்கிரகத்தை எகிப்திய தேவர்களை ஆராதிப்பதற்காக உண்டாக்காமல் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுதலையாக்கின மெய்யான தேவனாகிய யேகோவாவைக் குறிக்கும் சின்னமாகவே உண்டுபண்ணினார். அவர் அதை உண்டுபண்ணினபின்பு இஸ்ரவேலரே, உங்களை எகிப்திலிருந்து விடுவித்த தேவர்கள் இவர்களே என்று சொல்லி ஒரு புதுப் பண்டிகையையும் ஸ்தாபித்தார். இவருடைய மாதிரியையே பிற்காலத்தில் யெரொபெயாமும் செய்திருக்கிறான்.† எப்படி இருந்தபோதிலும் ஆரோனால் உண்டுபண்ணப்பட்ட உருவம் விக்கிரகமென்றும் அதற்

* ஒரேதரம் குட்டிபோட்டு மறுபடியும் அந்தப் பசு சினைப்படாதிருந்தால் அந்தக் கன்றை எகிப்தியர் எப்பிஸ்தெய்வம் என்று அழைத்து வணங்கிவந்தார்கள் என்றும், அந்த ஒரேகுட்டி வானத்திலிருந்து அக்கினி இறங்கி சினையாகிறதால் பிறக்கிறதென்றும், அதின் உடல் தேவர்களில் சிரேஷ்டராகிய ஒரிசிஸ் (Oricis) தேவனின் ஆத்துமா தங்கும் வாசஸ்தலமாய் இருக்கிறதென்றும் எகிப்தியர் எண்ணிவந்தார்கள் என்றும் ஏரோடாட்டஸ், புளுட்டார்க் என்னும் சரித்திரக்காரர் எழுதிவைத்திருக்கிறார்கள்.

† யெரொபெயாமின் விக்கிரகாராதனையை மற்றவர்களுடைய விக்கிரகாராதனையிலிருந்து பிரித்துப் பேசியிருக்கிறார். (2 இரா. 10. 28–31. 1 இரா. 16. 31–33. 2 இரா. 3. 2, 3.)

ருச் செய்யப்பட்ட ஆராதனை விக்கிரகாராதனையென்றும் தேவன் திட்டமாய்ச் சொன்னதுமன்றி, அதன் நிச்சயத்தை விசேஷித்த தண்டனையினாலும் திருஷ்டாந்தரப்படுத்தினார். ஆரோன் என்பவர் சீனாய்மலையடிவாரத்தில் நடப்பித்த இந்தக் கிரியையைக்குறித்து "அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியை உண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்; தங்கள் மகிமையைப் புல்லைத் தின்னும் மாட்டின் சாயலாக மாற்றினார்கள்" என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது (சங். 106.,19, 20.). நம்முடைய தேசத்தார் பசுக்களை வணங்குவதும், காராம்பசுக்களை மதிப்பதும் எகிப்திய விக்கிரக வணக்கத்திலிருந்து தோன்றின வழக்கமாய் இருக்கவேண்டியது. ஐயோ! நமது தேசத்தாரின் வணக்கம் பசுவோடும் கன்றோடுமோ முடிகிறது? அல்ல, அல்ல; ஒரு கிறிஸ்தவப் புலவர் பாடியவண்ணம்

"குஞ்சினைத் திருடும் பருந்தோ கருடன்
குலைக்கும் நாய் வயிரவசுவாமி
குரங்கதோ அனுமார் பன்றியும் மீனும்
கூர்மமும் விட்டுணு வடிவம்
துஞ்சிடக் கடிக்கும் பாம்பதோ நாக
சுவாமி விக்கினேசுரன் யானை."

ஆ, இந்தியாவே! உன்னிலுள்ள விக்கிரகங்களை நீ என்றைக்கு ஒழிக்கப்போகிறாய்? உன்னை உண்டாக்கின தேவனை நீ இவ்வளவுகாலம் மறந்தது போதாதா? அவரை உன் விக்கிரகவணக்கத்தால் இம்மட்டும் கனவீனம்செய்தது போதாதென்று நினைக்கிறாயோ? முற்காலத்தில் ஒரு தேசத்தைக்குறித்து "உன் பட்டணத்தின் இலக்கமும் சரி" என்று சொல்லப்பட்டது. அதை மாற்றிச் சொல்லவேண்டுமானால், இந்தியாவே! உன் ஜனங்களின் இலக்கத்துக்கு உன் தேவர்களின் இலக்கம் ஜாஸ்தியாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

"கர்த்தாவே இந்துதேசர்
கல்வியற்ற காப்பிரிகள்
பிரமர் சீனர் யூதர் கிரேக்கர்
தீவாரான துஷ்டர்கள்
மற்றெல்லாரும்
உம்மைப் போற்றச் செய்திடும்."

ஆரோன் என்பவரின் கன்றுக்குட்டியின் பளபளப்பையும்,



அதன்முன் கூடிநின்று கும்பிடும் ஜனத்திரளையும் மோசே மலையிலிருந்து இறங்கும்போதே கண்டு கோபமூண்டு, அந்த விக்கிரகத்தை உடைத்துப் பொடியாக்கவும் அந்தப் பொடிகளை ஜலத்திலே கலக்கி ஜனங்களைக் குடிக்கவும் செய்தார். அவர்கள் தாங்களே கையால்பண்ணி வாயால்போற்றி கண்ணால் பார்த்த விக்கிரகத்தை கையால் பொடியாக்கி, வாயால் குடித்து, வயிற்றால் ஜீரணித்துப்போகவும் செய்தார். மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால் அவர்கள் உண்டுபண்ணின சுவாமியை அவர்களே தின்றுபோட்டார்கள். மோசேமுனிவரே உம்மை வாழ்த்துகிறேன்; நீர் செய்ததுபோலவே தேவனுடைய உத்தமதாசர் அனைவரும் இத்தேசத்திலுள்ள விக்கிரகங்கள் ஒழிந்துபோகும்படிச் செய்யவேண்டுமென்பதே என் விண்ணப்பமாய் இருக்கிறது.

இந்தப் பெரிய காரியம் நடந்தபின்பு ஆரோன் என்பவருடைய அந்தஸ்து தேவனால் உயர்த்தப்பட்டது. எப்படியெனில் தேவன் பத்துக்கற்பனைகளாகிய சட்டங்களை இரண்டு கற்பலகைகளில் எழுதிக்கொடுத்ததோடு, தம்மை அந்திசந்தி ஆராதிப்பதற்குரிய பல நிபந்தனைகளையும் கொடுத்து, தமக்கென்று ஒரு தேவாலயக்கூடாரம் செய்யப்படவேண்டுமென்றும், அந்தக் கூடாரத்தில் ஊழியஞ்செய்யும்படி ஆரோனை அபிஷேகம் செய்யவேண்டுமென்றும் உத்தரவு கொடுத்தார். மேலும் ஆரோனுடைய கோத்திரமாகிய லேவியரெல்லாரும் அவனுக்கு ஊழியஞ்செய்யும் ஆசாரியராயும், ஊழியக்காரராயும் நியமிக்கப்பட்டார்கள். ஒருகாலத்தில் பொன் கன்றுக்குட்டிக்குமுன் பணிவிடைசெய்து அதை ஆராதித்த ஆரோன் சிலநாட்களுக்குப் பின்பு ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு முன்பாகப் பலிகளைச் செலுத்திக் காணிக்கைகளைப் படைத்து, அவருடைய நாமத்தால் ஜனங்களை ஆசீர்வதித்துவந்தார். இதினாலே தேவன் தமது சித்தத்துக்கேற்ற ஊழியங்களுக்கென்று பெரிய பாவிகளையும், பாவிகளின் தலைவனையும், வழிகாட்டிகளையும் தெரிந்துகொள்ளுகிறதுந் தவிர அவர்கள் அவருக்கு விரோதமாய் பெரிய பொல்லாப்புகளைச் செய்த கொஞ்சக்காலத்துக்குள்ளும் தெரிந்துகொள்ளுகிறார் என்றும் அறியலாம். இதினாலே அதிகமாய் தேவனுக்கு விரோதமான காரியத்தைச் செய்தால்தான் அவர் உலகத்தின் உயர்ந்த அந்தஸ்தைக் கொடுப்பார் என்று ஒருவன் எண்ணி துணிந்து பொல்லாப்பைச் செய்யக்கூடாது; அப்படிச் செய்வது பிசாசின் குணம். தேவகிருபைகள் நம்மை மனந்திரும்புகிறதற்கு ஏவுகி

றதென்பதே தேவதாபக்தருக்குரிய உணர்ச்சியாய் இருக்கவேண்டியது.

இந்தக் காரியங்கள் சம்பவித்தபின்பு எவரும் ஆரோனை அதிர்ஷ்டசாலி என்று சொல்லுவோம்; ஆம் அவர் அதிர்ஷ்டசாலிதான். அவருடைய மக்களும் அவனுக்குத் துணைநின்று அனுதினமும் கடவுளை ஆராதித்துவந்தார்கள். இப்படியிருக்குங் காலத்தில் ‘‘கோவில்பூனை தேவர்க்கஞ்சாது’’ என்கிற பழமொழிக்குச் சரியாக ஒரு சங்கதி நடந்தது. அதென்னவென்று கேட்பாயோ? ஆரோன் என்பவர் பிரதான ஆசாரியனாக தேவனுக்கு முன்பாக ஊழியஞ்செய்துவரும்போது, அவருடைய தலைமக்கள் இருவரும் தூபகலசங்களில் தூபமிட்டு தேவசந்நிதியில் தூபங்காட்டிவந்தார்கள். தேவாலயத்தில் செய்யப்படவேண்டிய சகல வேலைகளுக்கும் வானத்திலிருந்திறங்கின அக்கினி பிரயோகிக்கப்படவேண்டுமென்பதே தேவகட்டளையாயிருந்தது. இஸ்ரவேலருடைய பலியை தேவன் வானத்திலிருந்து அக்கினியனுப்பி பட்சித்து இவ்விதமாய் அங்கிகரித்தார். அந்த அக்கினிக்கு விறகிட்டு வளர்த்து அனுதினமும் பெருக்கி அதைக்கொண்டே தேவஆராதனைக்குரிய அக்கினி சம்பந்தமான ஆராதனைகள் எல்லாம் நடத்திவந்தார்கள். ஒரு நாள் ஆரோனுடைய மக்களாகிய நாதாபும் அபியூவும் குடித்து மதிமயங்கி தேவகட்டளைக்கு விரோதமாக தங்கள் தூபகலசங்களில் வீட்டு அக்கினியைப் போட்டுத் தூபம்காட்டினார்கள். இந்தக் காரியம் தேவனுக்கு உக்கிரகோபமுண்டாக்கினதால், அவருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது; அவர்கள் தேவசந்நிதியிலே மாண்டார்கள். இவ்விருவரும் கலியாணக்காரராயிருந்தார்கள் என்று நினைக்கவேண்டியது. ஏனெனில் ஆரோனின் மூன்றும் மகனுக்கு எகிப்திலிருக்கும்போதே பினேகாஸ் என்ற ஒரு குமாரன் பிறந்திருந்தான். தேவதண்டனையை அடைந்த இவ்விருவருக்கும் யாதொரு புத்திரசந்தானம் இருந்ததில்லையென்று தோன்றுகிறது. தங்கள் பிதாவிடத்தில் சிலகாலத்துக்கு முன் காணப்பட்ட குறைவே அவர் மக்களிடத்திலும் இப்போது காணப்பட்டது. அக்காலத்தில் தண்டியாமல் அவனை மேன்மைப்படுத்தின தேவனே இக்காலத்தில் தண்டித்தார். இந்த தண்டனை ஆரோன் என்னும் ஆசாரியனுக்கு நல்ல படிப்பினையாயும் இருந்தது. தேவன் தமது பரிசுத்தத்தைக் காக்கிறார் என்பது முன்னிலும் அதிக பலமாய் ஆரோனுடைய உள்ளத்தில் பட்டது. இந்தச் சாவுக்கு ஆரோனாவது, அவனுடைய மற்றக் குமா



ரராவது வழக்கமானபடி துக்கங்கொண்டாடவில்லை. அவர்கள் எல்லாரும் மோசேயின் கட்டளைப்படி தங்களை தேவனுடைய பட்சத்தைச் சேர்ந்தவர்கள்போலும், அவருடைய சத்துருக்களின் விரோதிகள்போலும் நடந்துகொண்டார்கள். இதினாலே கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்யும் குருக்கள் தாங்கள் குடும்பவிஷயங்களில் எவ்வளவாய்த் தலையிட்டுக்கொள்ளவேண்டுமென்றும், தேவ ஊழியத்தைப்பற்றிய கவலை எவ்வளவு அதிகமாய் இருக்கவேண்டுமென்றும் அறிகிறோம். இக்காலத்திலுள்ள நமது சுதேச தேவஊழியக்காரரில் சிலர் தங்கள் உயர்வையும் அந்தஸ்தையும் தங்களுடைய உலகசொற்சத்திக்கும் பணவிருத்திக்கும் அனுகூலமாகும் வழியாக ஒழுங்குபடுத்திக்கொள்ளப்பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட ஊழியக்காரருடைய சபை அதினாலே கெட்டு, விரோதத்தினாலும் பிரிவினையினாலும் நிறைந்து தேவபக்தியில் வளராமல் குறுகிப்போகிறது.

நாதாபும் அபியூவும் அன்னிய அக்கினியைக்கொண்டு தூபம் காட்டப்போன விஷயமானது வேறொரு நல்ல போதனையையும் கொடுக்கிறது. பூர்வ யூதர் குங்கிலியம் முதலிய வாசனைத் திரவியங்களைத் தேவசந்நிதிக்கு முன்பாகத் தூபமாகப் புகைக்கவேண்டியிருந்தது; நாமோ நமது ஜெபங்களையும் ஸ்தோத்திரங்களையும் தூபமாகப் படைக்கிறோம். இந்தத் தூபத்துக்கு அந்நிய அக்கினி உதவாது; பரிசுத்தாவியின் அருள் தேவஅக்கினிபோலிருக்கிறது. அது இல்லாமல் செய்யப்படுகிற ஜெபமும், தூபமும் தேவனுக்குப் பிரியமாய் இருக்கமாட்டாது. தேவனை நோக்கி ஜெபஞ்செய்யவும், அவருக்குப் பிரியமான ஸ்தோத்திரவார்த்தைகளை உத்தம இருதயத்தோடு சொல்லவும் நமக்குத் தெரியாது; நாம் ஆவியைக்கொண்டே ஜெபம்பண்ணினால்தான் அது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும். தேவஆவியானவர் நமக்குள் தங்கியிருக்க நாம் நமது தியானத்தை வளர்த்து நமது உதடுகளைத் திறப்பது மெய்யானால், அங்கிருந்து தேவன் முகரும்படியான இன்பமுள்ள தூபத்தின் புகையாகிய உத்தம ஜெபமும் ஸ்தோத்திரமும் பிதாவின் சமுகத்தில் ஏறும். நம்முடைய அநேக விண்ணப்பங்கள் இன்னும் கேட்கப்படாத முகாந்தரம் இதினாலேதான் என்று அறிந்துகொள்ளவேண்டியது.

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் தம்மில் விளங்கிய தேவதயவை தமது மக்களில் விளங்கிய தேவதண்டனையோடு சம்மந்தப்படுத்திப்பார்த்து, ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருக்

தார். கர்த்தருடைய கரத்துக்கு விரோதமாய் மனுஷனுடைய கை எழும்புமா? அவருடைய சொல்லைத் தடுக்க மனுஷன் தன் நாவைத் தூக்கலாமா? அவர் கர்த்தராமே, அவர் தமக்குச் சித்தமானபடி செய்வாராக என்று மௌனமாய் இருப்பதே பக்தரின் புத்தி.

ஆரோன் என்பவர் அந்தஸ்தில் உயர்ந்து இஸ்ரவேலர் எல்லாருக்கும் பிரதான குருவானபின்பு அவருடைய தாழ்மை மாறி, வரவர பெருமை சற்று அதிகப்பட்டது என்று சொல்லவேண்டியது. தேவனால் தனக்கு அருளப்பட்ட கனத்தோடு தானும் கூடக் கொஞ்சம் கனத்தைக் கூட்டிக்கொள்ள பிரயாசப்பட்டான்; இதற்கு அவருடைய சகோதரியாகிய மிரியாம் அவருக்கு உதவிசெய்தாள். இவர் பிரதான ஆசாரியராயிருக்கிறதுமாத்திரம் போதாது; சகல விஷயத்திலும் பிரதான ஆசாரியராயும் இருக்கவேண்டுமென்று கருதிக்கொண்டார்போல் இருக்கிறது. மோசேமுனிவர் தமக்கு இளயவனாகையால் இஸ்ரவேலரை ஆண்டு அதிகாரம்பண்ணும் விஷயத்திலும், இளயவனைப்போலவே நடந்துகொள்ளவேண்டுமென்று எண்ணங்கொண்டார்போல் இருக்கிறது. அவர் தமது தம்பியைப் பற்றிக்கொண்டிருந்த தகாத எண்ணத்தை நேரே காட்டாமல் அவர்கள் குடும்பசம்பந்தமாயுண்டாயிருந்த ஒரு காரியத்தோடு ஒட்டி, மிரியாமைக்கொண்டு மோசேயின் அதிகத்தை ஆட்சேபித்துப் பேசினார். இந்தக் காரியம் தேவனுக்கு விரோதமாயிருந்தபடியால் அவர் ஆரோனையும் மிரியாமையும் தம்மண்டை வரும்படிச்செய்து, அவர்களைக் கண்டித்து மிரியாமைக் குஷ்டரோகத்தால் தண்டித்தார். தேவனால் உயர்த்தப்படுகிறவர்களை மனுஷர் விரோதிக்கும்போது, தேவனே அவர்களுக்கு விரோதியாகிறார் என்பது இதினால் தெரியவருகிறது. மிரியாமுக்குண்டான தண்டனை ஆரோன் என்பவர்மனதை அசைத்துவிட்டது. சிலகாலத்துக்குமுன் அவர் தமது மக்கள் இருவரையும் ஒரே நேரத்தில் சாகக்கண்ட கண்ணால் தமது சகோதரி தம் பக்கத்தில் நின்றே வெண்குஷ்டமாகி ஜீவகாலமெல்லாம் நடைப்பிணமானாளே என்று கண்டார். அவர் முந்தின தண்டனையில் சும்மாயிருந்ததுபோல இப்பொழுது இராமல் தாம் விரோதித்த தம்பியை நோக்கி: “ஆ, என் ஆண்டவனே! நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும்; தன் தாயின் கர்ப்பத்தில் பாதிமாம்சம் அழுகி செத்துவிழுந்த பிள்ளையைப்போல் அவள் ஆகாதிருப்பாளாக” என்று கெஞ்சினார். இது ஆரோன் செய்த பாவஅறிக்கை



யாய் இருக்கிறது. பாவஅறிக்கை விஷயத்தில் ஒவ்வொரு பாவியும் தான் யாருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தானோ அவனிடத்திலும், அதன்பின் தேவனிடத்திலும் அறிக்கையிடவேண்டுமென்பதே வேதப்பிரமாணமாய் இருக்கிறது. சிலர் தங்கள் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிட்டால் போதும், நாம் யாருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோமோ அவர்களைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை என்கிறார்கள். ரோமைச் சபையோ நாம் தேவனிடத்தில் அறிக்கையிடவேண்டியதோடு குருக்களிடத்தில் அறிக்கையிட்டால் பாவமன்னிப்புக் கிட்டும் என்கிறார்கள். இவ்விருவகைப் போதனையில் ஒன்று அரைவாசிப் போதனையும், மற்றது முழுப் பொய்ப்போதனையுமாய் இருக்கிறது. பாவஅறிக்கையைப்பற்றிய வேததிருஷ்டாந்தரமும் போதனையுமோ, நாம் மேலே காட்டியபடி முதலாவது யாருக்கு விரோதமாய் நாம் பாவஞ்செய்தோமோ அந்த ஆளிடத்தில் அறிக்கையிட்டு, அதன்பின்பு தேவனிடத்தில் அறிக்கையிடவேண்டுமென்று நமக்கு உணர்த்துகிறது. இந்த முறையின்படி பாவஅறிக்கை செய்கிறவர்களுடைய பாவங்களைத் தேவன் கிறிஸ்துவினிமித்தம் இலவசமாய் மன்னிக்கிறார். பாவஅறிக்கைக்கும் பாவமன்னிப்புக்கும் இடையில் இன்னொரு சிறு தடுக்கல் உண்டு. அதாவது நமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாம் மன்னித்திருக்கவேண்டியது; நாம் மற்றவர்களுக்கு மன்னியாத பட்சத்தில் பரமபிதா நமக்கும் மன்னிக்கமாட்டார்.

ஆரோன் என்பவர் தமக்காகவும் மிரியாமுக்காகவும் முன்சொல்லியவண்ணம் மோசேமுனிவரிடம் மன்றாடவே, அவர் உள்ளம் கனிந்துவிட்டது; அவர் நீண்ட ஜெபம் செய்யவாவது, கனிந்த வார்த்தைகளால் திரும்பத்திரும்ப மன்றாடவாவது வாய்விளங்காமல்

“என் தேவனே அவளைக் குணமாக்கும்”

என்று கெஞ்சினார். அந்த விண்ணப்பத்தைத் தேவன் கேட்டு இன்னும் ஏழுநாளுக்குப் பின்பு அவள் குணமாவாள் என்று உத்தரவருளினார்; அப்படியே ஏழாம்நாளில் அவள் சொஸ்தமாகிப் பாளயத்துக்குள்ளே சேர்த்துக்கொள்ளப்பட்டாள். தேவன் நமது விண்ணப்பங்களின்படிச் செய்ய கிருபைகூர்ந்தபோதிலும் தமக்குச் சித்தமான காலத்தைத் தெரிந்துகொள்ளுகிறார் என்று இதினாலே அறிந்துகொள்ளுகிறோம்.

மிரியாமுக்குத் தண்டனையுண்டான சில காலத்துக்குப்

பின்பு ஆரோனுக்கும் அவன் குடும்பத்துக்கும் விரோதமாய் ஒரு பெரிய கலகமுண்டாயிற்று. எப்படியெனில் ஆரோனுடைய கோத்திரமாகிய லேவி வீட்டாரைச் சேர்ந்த கோராகு, தாத்தான், அபிராம் முதலிய குடும்பத்தலைவர் இஸ்ரவேல்புத்திரரில் சபைத்தலைவர்களும், சங்கத்தலைவர்களுமான இருநூற்றைம்பது பேரோடுங்கூட மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய்க் கூட்டங்கூடி, அண்ணனும் தம்பியுமாகிய நீங்கள் இருவரும் மாத்திரம் சபைக்கு மேலாக உங்களை உயர்த்திக் கொள்ளுவானேன் என்று வழக்குப்பண்ணி ஒரு பெரிய பிணக்கை இஸ்ரவேலருக்குள் உண்டாக்கினார்கள். மோசேயின் குடும்பத்துக்குள் உண்டானதாக நாம் முன்சொன்ன கலக்கமும், மிரியாமுக்குத் தேவனால் உண்டான வெண்குஷ்ட தண்டனையும் வேறு சில அற்பசொற்ப விஷயங்களுங்கூட மோசேயையும் ஆரோனையும் ஜனங்களுடைய மனதில் சற்று தாழ்வாய் எண்ணவும் பேசவும் ஏவிவிட்டிருக்கலாம். இவ்விஷயத்தில் கோராகும் அவன் வகையராக்களும் நடந்துகொண்ட செய்கையானது கடவுளுக்கு விரோதமாயிருந்தது. தேவனால் ஒருவன் தண்டிக்கப்படும்போது மனுஷர் அதை ஒரு காரணமாய் வைத்து அவனை மிதிக்கப்பார்க்கிறது வழக்கந்தான்; ஆண்டவர் அவனைக் கைவிடார். அவனைத் தொடர்ந்துபிடியுங்கள், இனி அவனை விடுவிப்பார் இல்லை என்று சொல்வதும் அச்சமயத்தில் அதிக இடையூறை அவனுக்கு உண்டுபண்ணுவதும் சரியல்ல; இது பிசாசின் குணம். அப்படிப்பட்டவர்களுக்குச் சகாயஞ்செய்யும்படி தேவன் எழுந்தருளியாவார்.

இந்த அமளியுண்டானவுடனே மோசேமுனிவர் தேவசந்நிதிக்குமுன்பாக முகங்குப்புறவிழுந்து மன்றாடினார். இப்படிப்பட்ட குணத்தை மோசேமுனிவரிடம் அடிக்கடி பார்க்கிறோம். அவருக்கு இஸ்ரவேலரால் நெருக்கமும் உபத்திரவமும் உண்டானவுடனே தமது பேச்சை வளர்த்து நியாயம் பேசத் துணியாமல், கடவுளுடைய பாதத்தை அண்டி அவருடைய பாதத்தைப் பிடித்து, அடியேனுக்கு என்ன உத்தரவருளுகிறீர் என்று குப்புறக்கிடந்தார். தமது காலைப் பிடிக்கும் மனுஷபுத்திரனைக் காலால் உதைக்கிறது கடவுளின் வழக்கமில்லை; அவனைக் கையால் தூக்கி இரட்சிக்கிறதே அவரது வழக்கமாயிருக்கிறது. தேவன் அவருக்குத் தரிசனையாகி, இந்த விஷயத்தில் மோசேயும் ஆரோனும் நடந்துகொள்ளவேண்டிய முறையை வெளிப்படுத்தினார். அந்த வெளிப்படுத்தலின்படியே மோசே ஆரோனையும் கோராகின் பட்சத்தாரையும் அவரவர்களுடைய தூபகலசங்களோடு தேவசந்நிதிக்குமுன் வரும்படி கட்டளையிட்டார்.



அப்படியே குறிக்கப்பட்ட நேரத்தில் எல்லாரும் வந்தார்கள். இது இஸ்ரவேலருக்குள் எழும்பின ஒரு பெரிய கலகமாயிருந்தது. இந்தக் கலகக்காரர் மோசேயையும் ஆரோனையும் இகழ்ந்துபேசினதற்கு ஒரு அளவில்லை. மோசே ஜனங்களைக் கண்டித்து அவர்களுடைய குற்றங்களை உணர்த்தும்படி எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டும் அவர்கள் மிஞ்சிப் பேசினார்கள்; இனி கடவுள்தான் அவர்களுக்குப் பதில் சொல்லி அடக்க வேண்டியதாயிருந்தது. அவர் கூடாரத்து சந்நிதிஸ்தானத்தில் எழுந்தருளியானார். “அவருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது.” கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: “இந்தச் சபையைவிட்டுப் பிரிந்துபோங்கள், ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்குவேன்” என்று சொன்னார். உடனே அவர்கள் இருவரும் முகங்குப்புறவிழுந்து, தேவனே, மாம்சமான யாவருக்கும் தேவனே! ஒரு மனுஷன் பாவஞ்செய்திருக்க சபையனைத்தையும் சங்காரம்செய்ய கடுங்கோபங்கொள்வீரோ? என்று சபைக்காக மன்றாடினார்கள். சபையிலுள்ள அதிகாரிகளும் தலைவரும் விசேஷமாய் போதகன்மாரும், தங்கள் சபையில் பிணக்குபண்ணுகிறவர்களுக்காக எவ்வளவு கனிவோடு விண்ணப்பஞ் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறார்கள் என்று இதினாலே கற்றுக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டைக் கர்த்தர் கேட்டு கலகத்தலைவரைமாத்திரம் தண்டிக்கச் சித்தங்கொண்டு கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தைவிட்டுச் சபையை விலகிப்போகவேண்டும் என்று உத்தரவுகொடுத்தார்; அப்படியே விலகிப்போனார்கள். அப்போது தேவன் பூமியைப் பிளக்கும்படிச்செய்து அவர்களையும் அவர்கள் வீடுகளையும் கோராகுக்குரிய எல்லா மனிதரையும் சகல பொருட்களையும் பூமிக்குள் அடக்கிவிட்டார். அவர்கள் உயிரோடே பாதாளத்துக்குள் சேர்ந்தார்கள். ஆ, தேவனுடைய கரம் எவ்வளவு வல்லமையுடையதாய் இருக்கிறது!

அற்புதமாய் நடந்த இந்த அழிவு சகல கலகத்தையும் குழப்பத்தையும் அடக்கிவிட்டிருக்கும் என்றல்லோ எவரும் நினைப்பார்கள்; ஆனால் காரியம் அதற்கு முற்றிலும் விரோதமாய் இருந்தது. கோராகும் அவன் பட்சத்தாரும் பாதாளம் போனபின்பு, அத்தேசத்து அதிகாரப் பிரபுவை அதிகமாய் மன்றாடி, பூமிக்கு மேலே மீதியாய் நடந்துதிரிந்த ஏழை இஸ்ரவேலரையும் தங்களைப்போல பாதாளத்துக்கு இழுத்துக்கொள்ள பிரயத்தனப்

பட்டார்களாக்கும் என்றெண்ணத்தக்கதாக அவ்வளவு அமளி நடந்தது. கலகமும், குழப்பமும், திட்டும், விரோதமும் கூடாரமெங்கும் நடந்தது; அதனாலே தேவதண்டனையும் அவர்களைப் பின்தொடர்ந்தது. தேவன் ஒரு வாதையை அனுப்பி பதினாலாயிரத்து எழுநூறுபேரைக் கொலைசெய்தார். அக்காலத்திலும் ஆரோன் தன் தூபகலசத்தோடு பாளயத்தின் மத்தியில் நின்று தூபம் காட்டி ஜனங்களுக்காக மன்றாடினான்; அப்போது வாதை நிறுத்தப்பட்டது.

இப்படிப்பட்ட கலகம் இனி ஒருக்காலும் நேரிடாதபடி தேவன் வேறொரு பிரயத்தனமும் செய்தார். அதாவது பன்னிரு கோத்திரத்தலைவரும் ஆளுக்கொரு கோலைக் கொண்டுவந்து அதில் அவரவர் குடும்பப் பேரை எழுதவேண்டுமென்றும், லேவிக்கோத்திரத்தின் கோலில் ஆரோனுடைய பேரை எழுதி வைக்கவேண்டுமென்றும், அந்தப் பன்னிரு கோலில் எவனுடைய கோல் துளிர்க்குமோ அவன் குடும்பமே எனக்கு முன் தூபங்காட்டி பலி செலுத்திவரவேண்டுமென்றும் திருவாய் மலர்ந்தருளினார். இது சரியான பரீட்சையாக எல்லாருடைய மனதிலும் பட்டது. ஆதலால் தேவசித்தப்படி மோசே கட்டளையிட்டபிரகாரம் அந்தந்தப் பிரபுக்கள் தங்கள் தங்கள் கோலைக் கொண்டுவந்தார்கள்; அவை அனைத்தும் மூலஸ்தானத்திலிருக்கும் சாட்சிப்பெட்டிக்கு முன்னே வைக்கப்பட்டன. மறுநாள் மோசே தேவசந்நிதியில் போய் பார்த்தபோது லேவிக்கோத்திரத்தைக் குறிக்கும் ஆரோனுடைய கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு பூப்பூத்து வாதுமைப்பழங்களைக் கொடுத்தது. அந்தக் கோல்களை எல்லாரும் அறிய வெளியே கொண்டுவந்தான். உடனே அவரவர் தங்கள் தங்கள் கோல்களை வாங்கிக்கொண்டு வெட்கத்தோடு தங்கள் கூடாரத்துக்குப் போனார்கள்; அதோடு அக்கலகமும் அடங்கிப்போயிற்று. இதினாலே தேவஊழியத்தின் மேன்மை விளங்குகிறது. அவர் தமக்கு முன்பாக ஊழியம்செய்யும்படி தமக்கு இஷ்டமானவர்களைத் தெரிந்துகொள்ளுகிறார்; அதையிட்டு மற்றவர்கள் பொறாமைப்படுகிறது தகாது.

பழையகாலத்தில் ஆரோனை பிரதான ஆசாரியனாக்கின தேவன் இந்தக் கடைசிகாலத்தில் எக்குடும்பத்திலும், எச்சாதியிலுமிருந்து தமக்குமுன் ஊழியஞ்செய்யும் பணிவிடைக்காரரைத் தெரிந்துகொண்டுவருகிறார். அவர்கள் எல்லாருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தலையும் மகா பிரதானஆசாரியருமாய் இருக்கிறார். ஆரோன் இந்தக் கனமான ஊழியத்தில்



அநேகவருஷம் இருக்கவில்லை. அவர் மேரிபா என்ற இடத்தில் மோசேயோடேகூடி அவருடைய பதஷ்டத்துக்கு இடம் கொடுத்து தேவனைப் பரிட்சைபார்த்தபடியால், தேவன் அவரைக் கானானுக்குள் பிரவேசிக்கவிடாமல் வழியிலே சாகும்படி பண்ணினார். இஸ்ரவேலர் ஓர் என்னும் பர்வதத்துக்கு வந்தபோது மோசே தேவ உத்தரவின்படி ஆரோனுடைய உடுப்புகளைக் கழற்றி அவைகளை அவர் மகனாகிய எலெயாசாருக்கு உடுத்தி, தேவாலயத்துக்கடுத்த சகல உத்தியோகத்தையும் அவன் வசம் ஒப்புவித்து அந்த மலைமேல் மரித்துப்போனார். அவர் மரிக்கும்போது நூற்றிருபத்துமூன்று பிராயமாய் இருந்தார்.

## BALAAM.

## ஜோஷியமுனி.

(பிலேயாம்.)

முன்னே நாம் லோத்து என்னும் ஒருவனைக் குறித்துச் சொன்னோமே; அவனையும் பிலேயாமையும் ஒரே தராசில் வைத்து நிறுக்கலாம். லோத்தும் பேராசையை நாடி சோதோமில் வசித்தான்; பிலேயாமும் பொருளாசையை நாடி அதற்காக விரைந்தோடி நஷ்டமடைந்தான். பொருளாசையைப் போல் மனுஷனுக்குத் தீமையையுண்டாக்குகிற சுபாவம் வேறு இல்லையென்று சொல்லவேண்டியது. பரி. பவுல் பொருளாசையை சகல தீமைக்கும் வேர் என்று சொல்லுகிறார். “ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்.” இவ்வுலகத்தில் தேவன் தமது தயவுள்ள சித்தத்தின்படியே பலரை உலகப்பொருட்களில் ஐசுவரியவான்களாக்கியிருக்கிறார். அநேகரோ அவருடைய சித்தத்துக்கு விரோதமாய்த் தங்களைத்தாங்களே ஐசுரியவான்களாக்கப் பிரயாசப்படுகிறார்கள். இப்படி ஐச்வரியவான்களாக விரும்புகிறவர்கள் “விசுவாசத்தை விட்டு விலகி அநேக வேதனைகளினாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள்.” இப்படிப்பட்ட

வர்களில் ஒருவனைக்குறித்து நாம் வாசிக்கப்போகும் இந்தச் சரித்திரம் நன்றாக வெளிப்படுத்தும். இனிமேல் இந்தக் குறிகார பிலேயாமின் வரலாற்றைச் சொல்லத்தொடங்குவோம்.

பிலேயாமின் பாலிய சரித்திரத்தைப்பற்றி நமக்கொன்றும் தெரியாது. ஆனால் இவன் தகப்பனுக்குப் பேயோர் என்பது பெயராயிருந்தது என்பதும், அவன் நதியருகேயுள்ள பெத்தூரில் வாசம்பண்ணிவந்தான் என்பதும் மாத்திரம் நமக்குத் தெரியும். இவன் நதியருகே குடியிருந்தான் என்ற குறிப்பு அதன விசேஷத்தைக் கொடுக்கிறது. ஏனெனில் ஆபிரகாம் முனிவர் வாசம்பண்ணின மெசொபொத்தாமியா நாடானது நதியருகான தேசமென்று அக்காலத்தில் அழைக்கப்பட்டுவந்தது; அதினாலே இந்தப் பிலேயாம் ஆபிரகாம்முனிவர் வாசம்பண்ணின தேசத்தைச்சேர்ந்தவன் என்று திட்டமாய் வெளிப்படுகிறது. விசுவாசமுனிவர் என்று நாம் அழைத்திருக்கும் ஆபிரகாம் என்பவர்காலத்தில் அத்தேசத்திலிருந்த தேவவணக்கமானது யாக்கோபுமுனிவர் அவ்விடம் போயிருந்த காலத்தில் கெட்டிருந்தது என்று எவருக்கும் விளங்கும். அது வரவர சுத்தாங்கவணக்கத்திலிருந்து விலகி, விக்கிரக வணக்கத்தில் வளர்ந்துவிட்டது. இந்தப் பிலேயாமின் தகப்பன் அதை அதிகமாய் முக்கியப்படுத்தி, தன் மகனை அதற்கொரு பூசாசாரியைப் போல் ஏற்படுத்தியிருந்தான் என்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. *

இந்தப் பிலேயாம் இயல்பிலே புத்திகூர்மையும் அக்காலத்தாருக்குள் அறிவாளியுமாய் இருந்தான்; தன்னிடத்தில் வரும் ஆட்களுடைய முகக்குறியைப் பார்த்தவுடனே அவர்களுடைய இருதயத்தை ஒருவாறு கண்டுபிடித்துக்கொள்ளுகிற சாமர்த்தியம் அவனுக்குள்ளிருந்தது. இந்த தேசத்திலிருக்கிற சில ஜோஷியரையும் மந்திரவாதிகளையும்போல அவன் இரு அர்த்தமுள்ள பல வாசகங்களைக் கூறி ஆட்களை மிரட்டிக்கொண்டு காலங்கழித்தான். அறிவும் நாகரீகமும் இல்லா

* இவனுடைய தகப்பன் பாகாலின் விக்கிரகாராதனையை ஊர்ஜி, படுத்தினவர்களில் ஒருவன் என்று அநுமானிக்கவேண்டியதா இருக்கிறது; ஏனெனில் பாகால் என்ற பேரால் ஸ்தாபிக்கப்பட் சூரியவணக்கத்துக்கு பெரும்பாலும் பாகால் பேயோர் எ பெயர் வழங்கப்பட்டிருக்கின்றது. அவன் தன் குமாரனாகிய பி யாமை பெல் அல்லது பாகால் என்ற விக்கிரகத்துக்குப் பி டைபண்ணி பேயாராதனைக்குரிய சகலவித மாதிரியிலும் ப யிருக்கிறான்.



அந்தக்காலத்தில் அவனுடைய வார்த்தை தேவவாக்குபோல் எண்ணப்பட்டுவந்தது. ஜனங்களின் அறியாமையானது அவனுடைய பேர் பிரஸ்தாபத்துக்குக் காரணமாயிருந்ததே அல்லாமல் வேறில்லையென்று சொல்லவேண்டியது. இவனுடைய பேர் அத்தேசமெல்லாம் பிரபல்யமாயிருந்தது.

இவனுடைய பேர் திடீரென்று நமக்கு முன்வருகிறதுபோலிருக்கிறது. எப்படியெனில் இஸ்ரவேலர் கானான்தேசத்துக்குச் சமீபமான மோவாப்தேசத்தில் வந்து பாளயம் இறங்கியிருந்தார்கள். இந்த இருஜாதியாரும் ஒருவருக்கொருவர் சம்பந்தக்காரராயிருக்கிறார்கள். ஏனெனில் மோவாபியர் லோத்தின் வம்சமாயும், இஸ்ரவேலர் ஆபிரகாமின் வம்சமாயுமிருந்தார்கள். வெகுகாலமாய் தூரமானதேசத்தில் பிரிந்துபோயிருந்த அவர்கள், ஒருவருக்கொருவர் சமீபித்து வாசம்பண்ணுவது இருதிறத்தாருக்கும் சந்தோஷமாய் இருக்கவேண்டியது. இவர்கள் விஷயத்தில் அப்படியிருக்கவில்லை. இதற்கு முகாந்தரம் மோவாபியர் அக்காலத்தில் ஒரு பலத்த ஜாதியாய் எழும்பியிருந்தபடியால் தங்களிலும் பலத்த ஒரு ஜாதி அத்திசையிலிருக்கிறதாக ஜனங்களுக்குள்ளே பேசிக்கொள்ளப்படக்கூடாதென்று வன்கண்பட்டிருக்கலாம். மேலும் தங்கள் சமீபத்திலிருக்கிற பல ஜாதிகளில் ஒன்று தாழ்ந்துபோகையில் தாங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளலாம் என்று நினைத்திருக்கலாம். மேலும் மோவாப்தேசத்திற்குச் சமீபமாய் எமோரியர் என்ற ஒரு ஜாதியார் இருந்தார்கள்; அவர்களை இஸ்ரவேலர் முறியடித்துக் கீழ்ப்படுத்தினார்கள். முதலாவது அவர்கள் தேசத்தின்வழியாகக் கடந்துபோவோம் என்றுமாத்திரம் கேட்டார்கள். அவர்கள் அதற்குச் சம்மதியாததால் அந்த ஜாதியைக் கீழ்ப்படுத்தி அவர்கள்தேசத்தையும் தாங்கள் கட்டிக்கொள்ள நேரிட்டது. அவர்கள் பாளயம் இறங்கியிருந்த ஸ்தானம் நீர்வளமும் நிலவளமும்பொருந்திய விஸ்தாரமான மைதானமாய் இருந்ததால் அவ்விடத்திலேயே குடியிருந்துகொண்டு வரவரத் தன்னைக் கீழ்ப்படுத்திவிடலாமென்று தப்பாய் எண்ணியுமிருக்கலாம். எமோரியரை இஸ்ரவேலர் முறியடித்ததும், அவர்களின் ஜனத்திரளும், ஆரவாரமும், பலவீண்சந்தேகமும் எல்லாம்கூடி மோவாபியரின் அரசனைக் கலங்கடித்ததால் அவன் மீதியானியரின் மூப்பரையும் தனக்குத் துணைபுரியும்படிக் கேட்டு இருவரும் ஏகமாய்க்கூடி இஸ்ரவேலரைத்தாக்கி மடங்கடிக்க ஆலோசனைபண்ணிக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் ஆலோசனையானது நாம் துவக்கத்

தில் பேசின பிலேயாமுடைய சாபசகாயத்தால் மாத்திரம் ஜெயமாய் நிறைவேறும் என்று உத்தேசித்து, சில தானாபதிகளையனுப்பி பிலேயாமைத் தங்கள் தேசத்துக்குக் கூட்டி வரச்சொன்னார்கள்.

அக்கட்டளையின்படியே தானாபதிகள் பயணப்பட்டு பிலேயாமைக்கண்டு குறிசொல்லும் கூலியை அவன் பாதத்திலே படைத்தார்கள். இம்மட்டும் அவனுக்குவந்த கூலியெல்லாம் இதற்கு இணையாயிருக்கமாட்டாதென்று சொல்லலாம்; அந்த தானாபதிகள் பிலேயாமைநோக்கி, நாங்கள் மோவாப்தேசத்தின் முடிமன்னரின் தானாபதிகளாக்கும், பராக்கிரம அரசனாகிய பாலாக் எங்களை அனுப்பினார்; நாங்கள் வந்த காரணம் என்னவென்றால், எகிப்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் எங்கள் தேசத்தண்டை வந்திருக்கிறது; அவர்கள் பூமியின் விசாலத்தை மூடி பாளயம் இறங்கியிருக்கிறார்கள்; அவர்கள் எங்களிலும் பலவான்கள்; ஆகிலும் நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்படுவான், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டிருப்பான் என்று நாங்கள் அறிவோம்; நீர் தயவுசெய்துவந்து அந்த ஜனத்தைச் சபிப்பீரானால் நாங்கள் அவர்கள்மேல் விழுந்து அவர்களை ஒருவேளைக் கீழ்ப்படுத்தக்கூடும் என்று சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தைகள் அவனுக்கு எப்படியிருந்தாலும் அவர்களுடைய பணம் அவன் கண்ணுக்கும் மனதுக்கும் ஏற்றதாய் இருந்தது. அவன் அவர்களைநோக்கி, இரவிலே நீங்கள் இங்கே தங்கியிருங்கள்; நான் கடவுளுடைய திருவாக்கைக்கேட்டு மறுமொழிகொடுப்பேன் என்று சொன்னான். இது சரியான மறுமொழிதான். நாம் எந்தக் கிரியையைத் தொடங்கினாலும் தேவசித்தத்தை அறிந்து தொடங்குவது நல்லதுதான். இவ்விஷயத்தில் பிலேயாம் சொன்னவார்த்தைகள் நமக்கு ஒரு நல்லபடிப்பினையைக் கொடுக்கிறது.

பாலாக்கின் ஆட்கள் பிலேயாமின் வாயிலிருந்து விழும் தேவவாக்கைக்கேட்க ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார்கள். தேவன் பிலேயாமிடத்தில் சொப்பனத்தின் மூலமாயோ தரிசனத்தின்மூலமாயோ வந்து, "உன்னிடத்தில் இருக்கிற இந்த மனிதர் யார்?" என்று கேட்டார். உடனே பிலேயாம் அவர்களுடைய வரலாறைக் கர்த்தரிடத்தில் சொன்னான். அப்பொழுது கர்த்தர் பிலேயாமைநோக்கி:

நீ அவர்களோடே போகவேண்டாம்
அந்தச் சனங்களைச் சபிக்கவும்வேண்டாம்,
அந்த ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்



என்று சொன்னார். இந்த உத்தரவு பிலேயாமுக்கு அவ்வளவு சந்தோஷமானதாய் இருக்கவில்லை. அவர்கள் வந்ததுமுதல் இந்தத் திருவுளம் வெளிப்பட்டதுவரையும் அவன் சிந்தையும் கருத்தும் வேறாய் இருந்தது. மோவாப்தேசத்து வெள்ளியையும் பொன்னையும் தன் வீட்டுக்குள் குவித்துவிடலாமென்றும், தன் மனையை மாளிகையாக்கி இதோடு சீமானாகிப் போகலாம் என்றும் பலவாறாக அவன் அபிப்பிராயப்பட்டிருக்கலாம். ஆனால் தேவவாக்கு இவனுடைய மனதின் வாக்குக்கு ஒத்ததாயிருக்கவில்லை; ஆதலால் இவன் மறுநாள் அதிகாலை விழித்தவுடனே அழுவாரைப்போல் தன் கண்ணைக் கசக்கிக்கொண்டு பாலாக்கின் பிரபுக்களைநோக்கி: "நீங்கள் உங்கள் தேசத்துக்குப் போய்விடுங்கள், நான் உங்களோடு வருகிறதற்கு கர்த்தர் எனக்கு உத்தரவுகொடுக்கமாட்டோம் என்கிறார்" என்று சொன்னான். இவன் இவ்விடத்தில் பேசுகிற ஜாடையைக் கவனிக்கும்போது தன்னைப் போகவிடும்படி முதலாந்தரமே பிலேயாம் சொப்பனத்தில் வெகு போராட்டம் பண்ணியிருக்கிறான் என்றும், போகவேண்டுமென்பதே இவன் முழு ஆவல் என்றும் விளங்குகிறது. மொத்தமாய்ச் சொன்னால், எனக்கு அவ்வளவுதூரம் வந்து விட்டு திரும்ப மனந்தான், ஆனால் கர்த்தர் உத்தரவுகொடுக்கமாட்டோம் என்கிறார் என்று சொல்லுகிறான். இதற்குள்ளே ஒரு நற்குணம் வெளிப்படுகிறது. வீசம் ரூபாய் பெறுமான பொன் வீசை நிறையுள்ள ஒரு கல்லுக்குள் இருக்கிறதுமுண்டே; அதுபோல் இவனுடைய சகல பொருளாசையோடுங்கூட தேவன் சம்மதிக்கவில்லை; ஆகையால் நான் வரமாட்டேன் என்று சொல்லும் நற்குணமும் கலந்திருக்கிறது.

பாலாக்கின் பிரபுக்கள் இந்த வார்த்தைகளைக் கேட்டு மனமடிவாகி தங்கள் தேசத்திற்குத் திரும்பி பிலேயாமின் வார்த்தைகளைச் சொன்னார்கள். பாலாக் இந்த வார்த்தைகளை வேறு விதமாய்த் தாற்பரியப்படுத்தி, நமது தானாபதிகளின் அந்தஸ்து அவரது அந்தஸ்துக்கு அவ்வளவு தகுதியில்லைபோலிருக்கிறது; ஆதலால் கோபப்பட்டு வரமாட்டேனென்கிறாராக்கும் என்று உத்தேசித்து, முன் போனவர்களிலும் கனவான்களும் அதிக தொகையானவர்களையும் அனுப்பி மறுபடியும் பிலேயாமுடைய மனதுக்கு இசையப் பேசி, அவனைக் கூட்டிக்கொண்டு வரும்படிப் பிரயாசப்பட்டான். அவர்கள் இரண்டாந்தரம் வந்தது அவனுக்கு உள்ளுக்குள் சந்தோஷமாய் இருந்தது; என்றாலும் கர்த்தருடைய வாக்கைக் கேட்டுத்தான் உங்

களுக்கு உத்தரவுசொல்லுவேன் என்று அவர்களை அன்றிரவு தன்னோடு தங்கும்படிக் கேட்டான்; அவர்கள் தங்கியிருந்தார்கள். அவன் தேவசெயலை அன்று கேட்டபோது தேவன் மறுபடியும் அவனுக்குத் தரிசனமாகி, நீ எழுந்து அவர்களோடு கூடப் போ; ஆனாலும் நான் உனக்குச் சொல்லும் வார்த்தையின்படிமாத்திரம் நீ செய்யவேண்டும் என்று உத்தரவுகொடுத்தார்.

இக்காலத்தில் பிலேயாமுடைய முகத்தில் வெளிப்பட்ட சந்தோஷம் என்னவென்று சொல்ல! தன் நோக்கமும், தன் ஆலோசனைகளும் இனி நிறைவேறுவது நிச்சயமென்று அவன் நிச்சயித்து இருட்டோடே எழுந்திருந்து, தன் கழுதைக்காரன் வருமுன்னே அதற்குத் தானே சேணங்கட்டி மோவாபின் பிரபுக்களைத் தட்டி எழுப்பி ஊரைவிட்டுப் புறப்பட்டுப்போனான். பிலேயாமே! போ, போ; நீ படுகிறபாடு இன்னும் வேறே இருக்கிறது.

பிலேயாம் போகிறதினாலே கர்த்தருக்குக் கோபமூண்டது. அதேன்? அவர்தானே போகச்சொன்னார், இப்போது கோபம் என்? கர்த்தருடைய சித்தம் முதலாந்தடவை பிலேயாமுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

நீ போகவேண்டாம்
சபிக்கவேண்டாம்,
அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்

என்று தேவன் சொல்லியிருந்தார். அப்படியிருக்க இவன் இரண்டாந்தரம் மோவாபியரின் பிரபுக்களைத் தன்னுடன் தங்கும்படிச் சொன்னதும், தேவ திருவாக்கைக் கேட்டதும் இவன் பேரிலேயே தப்பிதமாய் இருக்கிறது. பிலேயாம் தன் செய்கையால் தேவனை ஒரு விளையாட்டு பிள்ளையைப்போல் எண்ணினான்; ஆகையால் அவரும் அவனோடு திருவிளையாட்டுக் கொள்ளுகிறதுபோல் இருக்கிறது. ஒருதரம் இணங்காத கடவுளை பிலேயாம் மறுபடியும் தொந்தரவுபண்ணி கட்டாயமாய்த் தன் சித்தத்துக்கு கடவுளுடைய சித்தத்தை இழுத்து அடக்குகிறான். கர்த்தர் மனம் மாற ஒரு மனுபுத்திரனல்ல என்ற சிந்தையாவது, ஒருதரம் விளம்பினதை மாற்றமாட்டார் என்ற எண்ணமாவது பிலேயாமுக்குள் இருக்கவில்லை. இதில் தேவசெயலின் ஒருவிதப் போங்கு வெளிப்படுகிறதே அன்றி வேறல்ல. அவர் சந்மார்க்கனுக்குத் தம்மை சந்மார்க்கராகவும், மன உண்மையானவனுக்குத் தம்மை மன உண்மையானவராக



வும், சுத்தனுக்குத் தம்மை சுத்தராகவும், மாறுபாடானவனுக்குத் தம்மைக் கோணலாகவும் காண்பிக்கிறார் என்று ஒரு பக்தன் சொன்னார். பிலேயாமுக்கு தேவன் கொடுத்த சம்மதியானது ஒருகாலத்தில் தங்களுக்கு இராசாவேண்டுமென்று கேட்டதற்கு தேவன் கொடுத்த சம்மதிபோல் இருக்கிறது. (ஓசி. 13. 11.) இப்படி நாம் நமது மனதின் வழிகளின்படி விட்டுவிடப்படுவதைப்போல நமக்கு நஷ்டமான காரியம் வேறொன்றில்லை. மேலும் நாம் நமது ஜீவகாலத்தில் தேவசித்தத்தை நம்முடைய சித்தத்துக்கு இசையப்பண்ணுகிறவர்களாயிராமல், நமது சித்தத்தை தேவசித்தத்துக்கு இசையப்பண்ணுகிறவர்களாய் இருக்கவேண்டியது.

பிலேயாம் போகிறபோது கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தமது கையிலே பிடித்துக்கொண்டு அவனுக்கு எதிராளியாக நின்றார். மனுஷன் பாவத்துக்கு விரைந்தோடுகிறான்; இயேசு பாவியைத் தடுக்கும்படி விரைந்தோடுகிறார். ஒரு பாவி தன் பாவத்தைக் கண்டுபிடிக்கிறான்; தேவ கிருபை பாவியைக் கண்டுபிடிக்கும்படி பின்தொடருகிறது. கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தைப் பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு வழியைவிட்டு வயலிலே விலகிப்போயிற்று; கழுதையை வழியில் திருப்பும்படி பிலேயாம் அதை அடித்தான். அப்பால் கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் வைத்திருந்த திராட்சத் தோட்டத்தின் பாதையில் நின்றார். கழுதை தூதனைக் கண்டு சுவர் ஓரமாய் ஒதுங்கி அவன் காலைச் சுவரோடே நெருக்கிற்று, திரும்பவும் அதை அடித்தான். அதன்பின் தேவதூதன் அந்த இடத்தைவிட்டு விலகி அக்கம்பக்கம் விலக வழியில்லாத ஒரு இடுக்கமான சந்தில் வந்துநின்றார்; கழுதை தூதனைக் கண்டு படுத்துக்கொண்டது. பிலேயாமின் கோபம் தீப்பொறிபோல எழும்பி கழுதையை அடிதண்டமாகத் தடியால் அடித்தான். ஐயோ! கழுதையின் கண்ணிலிருந்த தெளிவு அநேகருடைய மனதை மந்திரதந்திரத்தால் தெளிவாக்குவேன் என்று சொல்லிக்கொண்டிருந்த பிலேயாமின் கண்களிலிருக்கவில்லை. பாலாக்கின் ஆட்கள் வந்த நேரமுதல் அவன் கண்ணில் ஒரு வியாதி உண்டாயிற்று; அந்த வியாதியால் கழுதையின் கண்காட்சிமுதலாய் அவனுக்கு இல்லாமல்போயிற்று. பொருளாசையானது, வேர் பற்றி ஜலத்தை மூடும் பாசிபோல் படர்ந்து அவனுடைய கண்களையும் மூடிக்கொண்டது. இதனாலே மனுஷன் சில வேளைகளில் மிருகங்களிலும் தாழ்ந்துபோகிறான். கழுதை

கள் இயல்பாகவே மந்தமும் மூடத்தனமுமான ஒரு ஜந்து; ஆதலால் ஒரு பக்தன் "வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய்கட்டப்பட்டாலொழிய உன் இட்டச் சேராத புத்தியில்லாத குதிரையைப்போலவும், உணர்வற்ற கோவேறுகழுதையைப் போலவும் இருக்கவேண்டாம்" என்று சொல்லியிருக்கிறார். இவ்விடத்திலோ பிலேயாமிடம் வெளிப்படவேண்டிய குணத்தை அவன் கழுதையினிடமும், அக்கழுதையிடம் வெளிப்படவேண்டிய குணத்தைப் பிலேயாமிடத்திலும் காண்கிறோம்.

கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார்; அது பிலேயாமைப் பார்த்து "நீர் இப்பொழுது என்னை மும்முறை அடிக்கும்படி நான் உமக்கு என்னசெய்தேன்?" என்றது. அப்பொழுது பிலேயாம் கழுதையைப் பார்த்து சொல்லுவான்: "நீ என்னைப் பரியாசம்பண்ணிக்கொண்டுவருகிறாய், என் கையில் ஒரு பட்டயம்மாத்திரம் இருந்தால் இப்பொழுதே உன்னைக் கொன்றுபோடுவேன்" என்றான்; கழுதை மறுபடியும் தன் எஜமானை நோக்கி, "நீர் என்னைக் கைக்கொண்டகாலமுதல் இந்நாள் வரைக்கும் நீர் ஏறின கழுதை நானல்லவா? இப்படி உமக்கு நான் எப்போதாகிலும் செய்ததுண்டா?" என்று கேட்டது; அவன் இல்லை என்றான். இந்தச் சம்பாஷணை இவ்வளவு சுருக்கமானாலும் இதை வாசிக்கும் எவருக்கும் திகிலையும் பிரமிப்பையும் கொடுக்கவேண்டியது. இது தேவாதீனமாய் பிலேயாமின் வழிகளை செம்மைமார்க்கத்துக்குத் திரும்பும்படி செய்யப்பட்ட ஒரு அற்புதமாய் இருக்கிறது; இந்த அற்புதத்தை பிலேயாம் கண்டும் தன் வழிகளிலிருந்து திரும்பவில்லை. மனுஷருடைய மனந்திரும்புதலுக்கு அற்புதம் அவசியமாயிராமல் ஆண்டவருடைய அருள்பிரசாதமே அவசியம் என்று இவ்விஷயத்தால் வெளியாகிறது. உலக இரட்சகர் காலத்திலும் அநேகர் அவருடைய மாட்சிமைபொருந்திய அற்புதங்களைக் கண்டாலும், அவரை விசுவாசியாமல் போனார்கள். ஆதலால் குணப்பட்டு மனந்திரும்ப ஆசைப்படுகிறவர்கள் அற்புதத்தை நாடாமல், அருளை நாடுவது தகுதியாயிருக்கிறது. கர்த்தர் கழுதையின் வாயைத்திறந்து அதை பிலேயாமுக்கு உபதேசியாக்குகிறார்; பிலேயாமின் தீர்க்கதரிசனப் பட்டத்தை இப்பொழுது அவனுடைய கழுதைக்குச் சூட்டுகிறதுபோலிருக்கிறது. பிலேயாம் கழுதையாகவும், கழுதை பிலேயாமாகவும் மாறுகிறார்கள். "கம்பர் வீட்டுக் கடைக்கொள்ளியும் கவிதைபாடும்" என்கிற பழமொழிபோல் தீர்க்கதரிசி ஏறிப்போகும் கழுதையும் தீர்க்கதரிசனம் உரைக்கிறது; தீர்க்கதரிசியின் கழுதை தீர்க்கதரிசிக்கு புத்திசொல்லுகிறது. கர்த்தர் இப்படியும் சிலதரம் தமது செயலை நடத்துகிறார். பரி. பேதுரு விசுவாசமார்க்கத்திலிருந்து விலகினபோது ஒரு சேவலை அவருக்கு தீர்க்கதரிசியாக்கின தேவன், இச்சமயத்தில் ஒரு கழுதையை பிலேயாமின் போதகனாக்குகிறார். அவர் கல்லுகளுக்கும் வாயைக்கொடுப்பார் (லூக். 19. 40.). "மாடு தன் எஜமானையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; ஆனால் இஸ்ரவேல் அறிவில்லாமலும் என் ஜனம் உணர்வில்லாமலும் போயிற்று" என்று ஒரு தீர்க்கதரிசி ஓர் காலத்தில் கூறின வாசகம் மெய்யென்று இந்த வரலாறுகள் வெளிப்படுத்துகிறது.



கழுதையைக்கொண்டு பிலேயாமின் மனதைத் தட்டினபிற்பாடு கர்த்தர் அவனுடைய கண்ணைத் திறந்தார். கழுதையின் கண்ணை முந்தியும், கழுதையின்மேல் ஏறினவனுடைய கண்ணைப் பிந்தியும் திறக்கிறார். வழியிலே நின்று உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கும் தூதனை அவன் கண்டு தலைகுனிந்து, முகங்குப்புறவிழுந்து பணிந்தான்; அவருடைய சாயல் தான் முந்தின இரவுதரிசனத்தில் கண்ட சாயலுக்கு ஒத்திருந்ததால் திடீரென்று அப்படிப் பணிந்துகொண்டிருக்கலாம். முதலாவது கழுதையைக்கொண்டு பேசினவர் இப்பொழுது தாமே அவனைக் கடிந்துகொள்ளத் துவக்கினார். அவர் பிலேயாமை நோக்கி, "நீ உன் கழுதையை இதனோடே மூன்றுதரம் அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாய் இருக்கிறதால் நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன்; கழுதை என்னைக் கண்டு மூன்றுதரம் விலகிற்று. அப்படி அது விலகவில்லையானால் நான் உன்னைக் கொன்றுபோட்டுக் கழுதையை உயிரோடுவைப்பேன்" என்றார்.

கர்த்தருடைய தூதனானவர் பேசும் வார்த்தைகள் எவ்வளவு கண்டிப்பான உணர்த்தலாய் இருக்கின்றன. இந்த வார்த்தைகளினாலே பிலேயாம் போன பிரயத்தனமானது

(1) கர்த்தருக்கு மாறுபாடாய் இருந்ததென்றும்,
(2) கர்த்தர் அவனுக்கு எதிரியானார் என்றும்,
(3) கழுதைக்கிருந்த பயம் அவனில் இல்லையென்றும்,
(4) அவன் உயிர் சற்றே தப்பிற்று என்றும்

ஆண்டவர் வெளிப்படுத்தினார். பிலேயாமே! உன்னைப்போல் அதிர்ஷ்டமுள்ள ஒரு பாவியை நீ காட்டுவாயா? உன்னதமானவருடைய விரோதத்துக்கும் அவரது கோபத்துக்கும் நீ பாத்திர

மாயிருந்தாலும் அவர் உன்னை வழிக்கு வழிதடுத்து தம்மண்டை இழுக்கும்படிப் பார்க்கிறாரே! இந்தப் பாக்கியம் எல்லாபாவிகளுக்கும் உனக்குக் கிடைத்த அளவாகக் கிடைக்கிறதில்லை. இப்பொழுது நரகத்திலிருக்கிற பிசாசுக்களும் பாவிகளும் உனக்குக் கிடைத்த கிருபைகள் தங்களுக்குக் கிடைத்திருந்தால் மனந்திரும்பியிருப்போமென்று சொல்லத்தக்கதாக அவ்வளவு மேலான கிருபைகளைப் பெற்றாய்; நீ உன் கழுதையை அடிக்கிறாய், அது உன் அடிகளைப் பட்டுக்கொண்டே உன்னை இரட்சிக்கிறது. அது தன் வழியைமாற்றி உன் மனதை மாற்றப் பார்க்கிறது; நீ மனமாறவில்லை. அது உன் காலைச் சுவரோடு தேய்த்து உன் நெஞ்சை உணர்த்தப்பார்த்தது; உன் நெஞ்சோ உணரவில்லை. அது தரையில் படுத்து உன் இருதயத்தை மாற்றப் பார்க்கிறது; உன் இருதயம் உணர்வடையக் காணோம். உன் கழுதை பேசியும் உனக்குப் புத்தியில்லை. நீ கழுதையாகிறாய், கழுதை பிலேயாமாகிறது. உன் வழிகளின் மாறுபாடு வரவர நன்றாய் வெளியாகிறது. ஆ, பிலேயாமே! கர்த்தருடைய தூதனை நீ கண்டவுடனே தலைகுனிகிறாய், முகங்குப்புறவிழுகிறாய், பணிகிறாய்; நீ செய்கிற சரீரவணக்கமும் மரியாதையுமெல்லாம் நன்றாய்த்தானிருக்கிறது; ஆனாலும் நானும் உன்னை நம்பமாட்டேன்; சுடரொளி வீசும் சம்மனசின் உருவின பட்டயம் பளீர் பளீரெனப் பிரகாசிக்கிறதால் நீ பயந்து தாழ்கிறாயேயன்றி, உணர்ந்து தாழ்கிறதாக என் புத்திக்குத் தோன்றுகிறதில்லை; நீ கள்ளரில் கைதேர்ந்த கள்ளன்; உன் வாயின் வார்த்தைகளையும் உன் சரீரத்தின் செய்கைகளையும்கொண்டு உன்னைத் தீர்ப்புச்செய்யவேமாட்டேன்; இன்னும் உன் நடபடிகளை நுட்பமாய் அறிந்துதான் உன் பட்சம் பேசுவேன், அதுமட்டும் உன்னோடு பேசுவதை நிறுத்தி உன் வரலாறுகளை விசாரிப்பேனாக; எப்படியும் கர்த்தர் உன் எதிரியாக வந்திருக்கிறார் என்று திட்டமாய் விளங்குகிறது.

கழுதையோடு சம்பாஷித்த பிலேயாம் இப்போது கர்த்தரோடு சம்பாஷிக்கும்படி தன் வாயைத் திறக்கிறான். ஊருக்கெல்லாம் சாஸ்திரஞ்சொல்லுகிற பிலேயாமுக்குப் பேச்சு பஞ்சமா? அவன் கர்த்தருடைய தூதனைநோக்கி:

"நான் பாவஞ்செய்தேன்,"

"வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன், இப்பொழுதும் உமது பார்வைக்கு இது தகாததாயிருக்குமானால் நான் திரும்பிப் போய்விடுகிறேன்" என்றான். இந்த



வார்த்தைகள் வெளிக்கு முதல்தரமான உணர்வுள்ள வாசகம்போல் தோன்றுகிறது; இதைப்போல் கள்ளத்தனமான வாசகம் வேறொன்றுமில்லை. இந்த வார்த்தைகளின் சத்தம் உணர்வுள்ள இருதயத்திலிருந்து வருகிறதுபோல் தொனித்தாலும், இதன் கருத்து கபட்டு இருதயத்திலிருந்து வருகிறதென்று தெளிவாகக் காண்பிக்கிறது. "அவன் வாயின் வார்த்தைகள் வெண்ணெயைப்போல மெதுவானவைகள், அவன் இருதயமோ உருவின பட்டயம்" என்று ஒரு பக்தன் பொதுவில் சொன்னவாசகம் இவனுக்கே தகும். இவனுடைய சத்தமோ தேவனுடைய சுவீகாரபுத்திரனுடைய சத்தமாயும், செய்கையோ சாத்தானின் சிரேஷ்டபுத்திரன் செய்கையாயும் இருக்கிறது. இவ்வுலகத்தில் அநேகம் பாவிகள் இவனைப்போலவே பாவ அறிக்கைசெய்தால் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்பைப் பெறலாமென்று எண்ணி மோசம்போகாதபடி, இவனுடைய அறிக்கையிலிருக்கிற கபடத்தையும் வஞ்சகத்தையும் வெளிப்படுத்திக்காட்டுவது அவசியம்.

"நான் பாவஞ்செய்தேன்" என்று பிலேயாம் சொல்வது தேவனுக்கு விரோதமான பாவத்தையாவது மனுஷருக்கு விரோதமான பாவத்தையாவது குறியாமல், கழுதையை அடிதண்டமாய் அடித்த தோஷத்தைக் குறிக்கிறதுபோலிருக்கிறது. இவன் பேசின கருத்தைப் பார்த்தால், சம்மனசே! உம்மைக் கண்டதினால் கழுதை படுத்துக்கொண்டது என்பதை அறியேன்; அறிந்தால் கழுதையை அடித்திருக்கமாட்டேன். அந்த இரகசியம் தெரியாமல் கழுதையை அடித்துப் பாவஞ்செய்தேன்; மேலும் வாயில்லாத ஜீவனுக்கு இப்படி வாய்கொடுத்து பேசவைப்பீரென்று எனக்குத் தெரியாது என்பதுபோல மாத்திரம் அறிக்கையிடுகிறதாய் இருக்கிறது.

இவன் பிரயத்தனம் தடைப்படும்போது போக்கற்றுப்போய் செய்கிற பாவ அறிக்கையாயிருக்கிறது. "வழியிலே நீர் நிற்கிறது தெரியாது" என்கிறான். வழியில் தடையில்லாவிட்டால் தான் போகிறதில் தோஷமில்லை என்கிற எண்ணம் இவன் மனதிலிருந்தது. இது எதுபோலிருக்கிறதென்றால், திருடன் தான் திருடின பொருட்களை மூட்டைகட்டும்போது வீட்டுக்காரன் அவன் பின்னாலே மெதுவாய்வந்து அவன் கழுத்தை நெரித்து என்ன வேலை செய்கிறாய் என்று கேட்கையில், "அண்ணா! நீர் விழித்தா இருந்தீர், நான் செய்தவேலை பிசகுதான், இதோ போகிறேன்" என்று சொல்லுகிறதுபோலிருக்கிறது.

இது மனந்திரும்ப மனமில்லாத பாவ உணர்வாயும் இருக்கிறது. "இப்பவும்" ஊரைவிட்டுப் புறப்பட்டு இவ்வளவு தூரம் வந்தாயிற்று, இத்தனை பிரபுக்களுக்கு நான் வாக்குக் கொடுத்தும் ஆயிற்று, "உமது பார்வைக்குத் தகாததாய் இருக்குமானால்" பயணத்தை நிறுத்துகிறேன் என்கிறான். இதில் துணிகரமும் கலந்திருக்கிறது. என் பார்வைக்கு எல்லாம் அநுகூலமாயிருக்கிறது; உமக்கு வேண்டியதென்ன? இஸ்ரவேலரைச் சபிக்கக்கூடாது; எனக்கு வேண்டியதென்ன? வெள்ளியும் பொன்னும்; இருவருக்கும் பழுதுவராதபடிக்கு காரியங்களை நடத்தினால் போதாதா என்றெண்ணிப் பேசுகிறதுபோலிருக்கிறது. இப்படி அநேகர் தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறதுண்டு. தங்கள் மனதில் ஒரு தீமை தேவனுக்கு விரோதமானது என்று உணர்ந்ததினாலேயல்ல, மற்ற அநேகர் சொல்லுகிறநிமித்தம் தான் இனி அதை செய்யமாட்டேன் என்று தீர்மானிக்கிறதுண்டு. இது மெய்யான பாவ அறிக்கையல்ல.

பிலேயாமின் மனம் இன்னும் பொருளாசையை நாடியிருக்கிறதென்றும், மெய்த்தேவபக்தியின் வழிக்குத் திரும்பாமலிருக்கிறதென்றும் அந்த தூதன் கண்டு அவனுடைய சொந்தவழிகளின்படி அவனைவிட்டு, நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகளைமாத்திரம் சொல்லவேண்டுமென்று கண்டிப்பாய் உணர்த்தியனுப்பினார். அப்படியே பிலேயாம் புறப்பட்டு பாலாக்கின் ஆட்களோடு தன் வழியே போனான். இதுமுதல் நடந்த அவன் பயணத்தில் அவன் நோக்கம் ஒரு விதமாயும், தேவசித்தம் வேறுவிதமாயும் இருந்தது என்பது பின்வருங் காரியங்களால் தெரியவரும். பிலேயாம் அப்புறம் நினைத்தான்: கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை நாம் வேண்டுமானால் சொல்லிப் போடுகிறதுதானே; அவர் சிலதரம் நம்மை வேண்டாமென்று தடுத்தார், அதோடு போ என்றும் கடைசியாகச் சம்மதித்தாரே; அதுபோலவே அவர் நமக்குச் சொல்லச்சொல்லும் வார்த்தையுமிருக்கும்; அநேக ஆசீர்வாதத்தோடே இரண்டொரு சாப வார்த்தையையும் கலந்திருக்கமாட்டாரா? அந்த ஜனம் அவ்வளவு பரிசுத்தரா! எப்படியும் நமக்குப் பணந்தான் குறி, யார் கெட்டாலென்ன, யார் வாழ்ந்தாலென்ன? நம்முடைய கைநிறைய பணம்வந்தால் போதும் என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். ஆனால் ஆண்டவரோ, சபிக்கும்படி கூப்பிட்டவனைக்கொண்டே ஆசீர்வாதங்களைப் பொழியப்பண்ணி பாலாக்கையும் பிலேயாமையும் வெட்கப்படுத்தும்படி பார்த்தார். பிலேயாம் இந்தச் செய்கையால் தன்னை பாலாக்கோடே ஒட்டும்படிப் பார்த்தான்;



கர்த்தரோ இதேசெய்கையால் இருவரையும் என்றென்றைக்கும் வெட்டும்படிப் பார்த்தார். பாலாக் பிலேயாமைக்கொண்டு தேவனுடைய ஜனங்களை முறியடிக்கப்பார்த்தான்; கர்த்தரோ பிலேயாமைக்கொண்டு பாலாக்கை முறியடிக்கப்பார்த்தார்.

அப்பால் பிலேயாமுடைய வழிகளில் யாதொரு தொல்லையும் நேரிடவில்லை; அவன் சுகமாய் மோவாபின் பிரபுக்களோடு பேசிப் பேசி வழிநடந்துபோனான். மோவாபின் ராஜாவாகிய பாலாக் பிலேயாமின் வருகையைக் கேள்விப்பட்டு அவனைக் கண்டுபேசும்படி தன் தேசத்தின் கடைசி எல்லையில் வந்து காத்திருந்து, கண்டவுடனே வந்தனம்பண்ணி மங்களஞ்சொல்லி, வாழ்த்தி வரமளித்து, ஆடுமாடுகளை அடித்து, தனக்கு மேலான ஒரு அரசனுக்கு மரியாதைசெய்கிறதுபோல எல்லாம் செய்தான். பிலேயாம் பாலாக்கின் உபசரணைகளைக் கண்டு, உள்ளுக்குள் தேவதூதன் மறுபடியும் எங்கே உருவின கத்தியோடு வந்துவிடுகிறாரோ என்று பயந்து, "இதோ உம்மிடத்தில் வந்தேன்; ஆனாலும் ஏதாகிலும் சொல்லுகிறதற்கு என்னாலே ஆகுமோ; தேவன் என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன்" என்றான். அச்சமயத்தில் பாலாக்கின் ஆட்கள் வழியில் நடந்த சமாச்சாரங்களையெல்லாம் தங்கள் அரசனுக்கு அறிவித்தார்கள். கடைசியாக, அவர்களெல்லாரும் கூடி இம்மட்டும் வரமாட்டோம் என்று சொன்ன தீர்க்கதரிசியை தட்டிக்கொடுத்து கொண்டுவந்துவிட்டோம், இனி கர்த்தரை லேசில் வசியப்படுத்திவிடலாம்; ஒரு ஆட்டுக்கு ஒன்பது ஆடும், மூன்று காளைக்கு மூன்றுகாளையும் பலியிட்டு நமது தேசத்திலுள்ள கந்தவர்க்கங்களையெல்லாம் போட்டுப் புகைத்தால் அவரும் நம் பட்சம் திரும்பிப்போவார் என்று தங்களுக்குள் உத்தேசித்து, அதற்கேற்ற பிரயத்தனங்களைச் செய்தார்கள் என்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

மறுநாளிலே பிலேயாம் ஒரு மலையின்மேலேறி மந்தைமந்தையாய் மைதானத்தில் தங்கியிருந்த இஸ்ரவேலரின் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டு அவர்களைச் சபிக்கும்படி ஏழு பலிபீடங்களைக் கட்டும்படி உத்தரவுபண்ணி, ஒவ்வொரு பலிபீடத்திலும் ஒவ்வொரு காளையையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டு கடவுளுடைய சந்நதம் கேட்டான். அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலரை ஆசீர்வதிக்கும் வாசகங்களைக் கட்டளையிட்டார். பாலாக்கும் அவன் பிரபுக்களும் அதைக் கேட்டு அசந்துபோனார்கள். அவன் பேசினவார்த்தைகள் முன்னிருந்த பயத்தோடு அதிக பயத்தை அவர்களுக்குள் உண்டாக்

கிறது. பின்பு இரண்டாந்தரமும் மூன்றாந்தரமும் வெவ்வேறான இடத்தைக் குறித்துக்கொண்டு அததில் முன்போலவே ஏழு பலிபீடங்களைக் கட்டி அததில் காளைகளையும் ஆடுகளையும் பலியிட்டு, இஸ்ரவேலின்மேல் சாபமான வார்த்தைகளை கடவுள் கடாட்சம்பண்ணியருளவேண்டுமென்று கெஞ்சினார்கள். தேவன் பலிபீடங்களையும் பலிகளின் இரத்த ஆறுகளையும் காணிக்கைகளின் திரளையுங்கண்டு, தமது சித்தத்தை மாற்றுகிறவர் என்று அவர்கள் எண்ணிக்கொண்டது மகா பிசகாயிருந்தது. இஸ்ரவேலரைச் சபிக்கப்போன பிலேயாம் அவர்களை எப்படி ஆசீர்வதிக்கிறான் பாருங்கள்! அவன் சொல்லுவான்: "யாக்கோபே, உன் கூடாரங்களும் இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்! அவைகள் பரவிப்போகிற ஆறுகள்போலவும், நதியோரத்துத் தோட்டங்களைப் போலவும், கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப்போலவும், கேதுருமரங்களைப்போலவும் இருக்கின்றன; அவர்களுடைய நீர்க்கால்களிலிருந்துதான் தண்ணீர் பாயும்; அவர்கள் வித்து திரள் தண்ணீர்களில் பரவும்; அவர்களுடைய இராசா ஆகாகைப்பார்க்கிலும் உயருவான்; அவர்கள் இராச்சியம் மேன்மையடையும்; காண்டாமிருகத்துக்கொத்த பலன் அவர்களுக்கு உண்டு; அவர்கள் தங்கள் சத்துருக்களாகிய ஜாதிகளைப் பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களைத் தங்கள் அம்புகளாலே எய்வார்கள்; சிங்கம்போலவும் துஷ்டசிங்கம் போலவும் மடங்கிப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்களை எழுப்புகிறவன் யார்? உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" என்று சொன்னான்.

இவ்வளவும் சொல்லவே பாலாக்கின் இரத்தம் கொதித்துவிட்டது. அவன் கோபமூண்டவனாகி, பிலேயாம்மேல் உண்டான தன் கோபத்தை தன்னுடைய இரண்டு கைகளையும் ஒன்றோடொன்று அடித்துத் திர்ப்திபடுத்திக்கொண்டு பிலேயாமை நோக்கி, "என் சத்துருக்களைச் சபிக்கும்படி உன்னை அழைத்து அனுப்பினேன், நீயோ மும்முறையும் அவர்களை ஆசீர்வதித்தாய்; ஆதலால் நீ வந்தவழியைப் பார்த்து ஓடிப்போ" என்று துரத்தினான். பாலாக்கின் பகையானது பிலேயாம்மேல் எவ்வளவாய்ப் பொங்கி சாடினதோ, அவ்வளவாய் அந்நேரத்தில் அருள்பொங்கி பிலேயாமின் உள்ளத்தில் ஓடினதால் அவன் தானாகவே இஸ்ரவேலரை அதிகமாய் ஆசீர்வதித்து அவர்களுடைய விரோதிகளான மோவாபியர், அமலேக்கியர், ஏதோமியர்



முதலிய ராஜாக்களின்மேல் வரும் சாபங்களையும் அழிவுகளையும் கூறினான். இவை எல்லாவற்றிலும் விசேஷமாய் அவன் இஸ்ரவேல் ஜாதிக்குள்ளிருந்து எழும்பி அரசாளும் ஒரு பெரியவரைக்குறித்தும் தீர்க்கதரிசனமுரைத்தான். அத்தீர்க்கதரிசனமானது அதின் ஒரு கருத்துப்படி தாவீதரசனைக் குறிக்கிறதாயிருந்தாலும், அதின் விசேஷக் கருத்தின்படி உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறதாயிருந்தது. அத்தீர்க்கதரிசன வார்த்தைகளாவன:

"அவரைக் காண்பேன் இப்பொழுதல்ல
அவரைத் தரிசிப்பேன் சமீபமாயல்ல
ஒரு நட்சத்திரம் யாக்கோபில் உதிக்கும்
ஒரு செங்கோல் யூதாவில் எழும்பும்
அது மோவாபின் எல்லைகளை நொறுக்கும்
அது சேத்புத்திரரை எல்லாம் நிர்மூலமாக்கும்"

என்பதே. இதில் குறிக்கப்பட்டிருக்கிற மேசியாவானவர் இந்த வாசகம் கூறப்பட்டு சுமார் 1450 வருஷத்துக்குப் பின்பு இயேசு என்ற நாமமுடையவராய் அவதாரமெடுத்தார். அவரே அந்தகாரத்திலும் மரணஇருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சந்தரும் அருணோதயமாய் உன்னதத்திலிருந்து தோன்றினார்; அவரே பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாயும் இருக்கிறார் (லூக். 1. 78. வெளி. 22. 16.); சர்வ அதிகாரமும் அவர்கரத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. (1கொரி. 15. 25.)

பாலாக் கடினமான வார்த்தைகளைப் பேசி பிலேயாமை தன் தேசத்தினின்று துரத்தினவுடனே பிலேயாம் கூறின நட்சத்திர மன்னனின் வரலாறும், அவன் அதோடு கூறின பல சாபங்களும் பாலாக்கைப் பயப்படுத்திவிட்டது என்று தோன்றுகிறது. ஏனெனில், இவ்வளவு கடினமாய்ப் பேசின பாலாக் மறுபடியும் எப்படியோ அவனைத் தன் கைவசப்படுத்திக் கொண்டான்.

அவ்விருவரும் மறுபடியும் பணத்தால் உறவாய்ப்போனார்கள்போல நினைக்கவேண்டியது. பாலாக் பிலேயாமின் மனம் போல திரண்ட பணங்களைக் கொடுத்து இஸ்ரவேல் ஜனம் தேவகோபத்துக்கு ஏதுவானவர்களாகும்படி என்ன முயற்சியைத்தான் செய்யலாமென்று ஆலோசனை கேட்டான்போல் இருக்கிறது. அவ்விஷயத்துக்கு பிலேயாம் சொன்ன போதனையைமாத்திரம் வேதத்திலே வாசிக்கிறோம். பிலேயாம் பாலாக்

கைப் பார்த்து, நீ இஸ்ரவேலரை இனி விரோதித்துக் கெடுக்க முடியாது, ஆகையால் சிநேகித்துக்கெடுக்கப் பிரயாசப்படு; அடித்துக் கெடுக்க உன்னால் ஆகாதேபோனால் அடுத்துக் கெடுத்துப்போட உன்னாலாகும்; என் சாபங்கள் அவர்களை நாசமாக்குகிறதைவிட அவர்களுடைய பாவங்களே அவர்களை நாசமாக்கிவிடும்; அவர்களாலேயே அவர்கள் கெட்டுப்போகட்டும்; உன் தேச விக்கிரகாராதனையில் அவர்களை மெதுவாய் இணங்கும்படிச் செய்து, உன் தேச வாலிபஸ்திரீகளைக்கொண்டு அவர்களை விபசாரத்துக்கு இழுத்துவிடு; இப்படி நீ விக்கிரகாராதனைக்கும் விபசாரத்துக்கும் அவர்களைப் பழக்கிவிட்டால் அவர்களுடைய தேவன் தாமே அவர்கள்மேல் கோபதாபமாகி, அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று போதித்தான்* (வெளி. 2. 14.). இந்தச்சங்கதி பிலேயாமின் குணத்தைப் பளிச்சென்று காட்டுகிறது. இவனுடைய சத்தம் தேவனுடைய தீர்க்கதரிசிகளின் சத்தம்போல் தொனித்தாலும், இவனுடைய கிரியைகளோ பாதாள வேதாளத்தின் சிரேஷ்ட புத்திரனுக்குரியதாக விளங்குகிறது. ஒரு மலைவௌவாலானது மிருகங்களுக்குத் தன் பற்களைக்காட்டித் தன்னை மிருகராசியென்றும், பட்சிகளுக்குத் தன் சிறகுகளைக்காட்டித் தன்னைப் பட்சிஜாதியென்றும் சொல்லி காலங்கழிக்கப் பிரயாசப்பட்ட கதைபோல் இந்தப் பிலேயாமின் சங்கதியுமிருக்கிறது. பிசாசின் பிள்ளைகள் பரிசுத்தவான்களின் வேஷம்போடுகையில் உத்தமபக்தரைப் பார்க்கிலும் அதிக அழகாய்த் தங்களைக் காட்டுகிறார்கள். எப்படியும் கடைசியில் அவர்களுடைய சரியான நிறம் வெளிப்படும் என்பது மெய்.

பிலேயாம் அதுமுதல் இஸ்ரவேலருக்கு விரோதியானான். அவன் தன் தேசத்துக்குப்போய்த் திரும்பிவந்து மோவாபியரை இஸ்ரவேலருக்கு விரோதமாய் எழுப்பிவிட்டு யுத்தஞ்செய்யப்பண்ணி, தானும் ஒரு விசேஷித்த தலைவனாய் அந்தச் சண்டையை நடத்தி யுத்தத்தில் மாண்டான். கர்த்தர் தமது ஜனத்தின் சத்துருக்களுக்கு பிலேயாமுக்குச் செய்ததுபோலும் அதற்கு அதிகமாகவும் செய்வாராக.

பிலேயாம் ஒருதரம் "நான் நீதிமான்களின் மரணமாய் மரித்து என் முடிவு அவர்கள் முடிவைப்போல் இருக்கவேண்டும்" என்று ஆசைப்பட்டான். ஆனால் கடைசியில் அவன்

* இந்த வரலாறுகளை யோசேப்புஸ் திட்டமாய் தமது ஆகமத்தில் காட்டியிருக்கிறார்.



துன்மார்க்கரோடு தன் மரணத்திலிருந்தான். நாம் நமது உள்ளத்தில் பலதரம் உண்டாகும் நல்லாசைகளைப் பார்த்து மகிழக்கூடாது; ஆசைக்கோர் அளவில்லை. முடவர் உச்சிமரத்தில் தொங்கும் தேன்கூட்டுக்கு ஆசைப்படுகிறதுமுண்டு; அதில் பிரயோசனமென்ன? அந்த ஆசை நிறைவேறத்தக்கதாக நமது நடக்கைகளை மாற்றும்படி பிரயாசப்படவேண்டியது.

பிலேயாம் யுத்தத்தில் மாண்டு தொலைந்துபோனாலும் அவனுடைய கள்ளப்போதனையைப் பிடித்திருந்த ஜனங்கள் சிலர் ஆதிச்சபையிலுமிருந்தார்கள். சிமிர்னாசபையைக்குறித்து பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கும்போது "விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும், வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனைசெய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு" என்கிறார். கிறிஸ்துமார்க்கத்தோடு அஞ்ஞானத்தையும் சன்மார்க்கத்தோடு துன்மார்க்கத்தையும் கலந்து கைக்கொண்டுவரலாமென்று நினைக்கிறவர்களும் அப்படிச் செய்து வருகிறவர்களுமான ஜனங்கள் பழைய பிலேயாமின் சிஷ்யராகவே இருக்கிறார்கள்.

பிலேயாமின் சரித்திரம் ஒரு விசேஷித்த படிப்பினையை நமக்குப் படிப்பிக்கிறது. அதாவது, பாவியை தேவன் திரும்பும்படி வெகுதூரம் பின்தொடர்ந்துபோகிறார். ஆ! நமது தேவன் சாகிறவனுடைய சாவை விரும்புகிறவரல்ல, அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறார்; அவர் தம்முடைய ஊழியக்காரருடைய ஆலோசனையினாலும் அற்புதமான சம்பவங்களை அவன் மனதின்முன் காட்டுகிறதினாலும், சிலதரம் கழுதையின் புத்தியளவான மூடரின் போதனைகளினாலும் எச்சரிக்கிறார்; அப்படியும் தம்மிடம் திரும்பாத பாவிகளுக்கு தமது உருவின பட்டயத்தின் பிரகாசத்தைக்காட்டி, பல வியாதிகளாலும் துக்கங்களாலும் சந்திக்கிறார். இப்படிச் செய்யும் அவருடைய நோக்கமெல்லாம் பாவியைத் தம்முடைய சித்தத்துக்கு இழுக்கவே. ஆ, கருணைநிறைந்த பிதாவே! பிலேயாமுக்கு நீர் பாராட்டின பாவத்தடையின் கிருபைகளை ஒவ்வொரு பாவிக்கும் கடாட்சம்பண்ணுவீராக. என் நெஞ்சமே! நீ பிலேயாமைப்போல் தேவதடைகளை தாண்டி துணிகரத்தில் வளர்ந்துபோகாமல் உன்னைச் சந்திக்கும் காலத்தைச் சிந்தித்து மனந்திரும்புவாயாக; அப்படிச் செய்தால் நீ நீதிமான்களைப்போல் மரிப்பாய்; உன் முடிவு அவர்கள் முடிவுபோல் இருக்கும்.

# JOSHUA THE COMMANDER.

## தளகர்த்த முனிவர்.

(யோசுவா.)

இக்காலத்தில் நாம் அநேக தளகர்த்தரையும், அவர்களால் பாராட்டிய பல பராக்கிரமசெய்கைகளையும்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்விடத்தில் நாம் அநேக ஆண்டுகளுக்கு முன்னே தளகர்த்தனாயிருந்து, பல யுத்தங்களை நடத்தி தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலரைக் கானான் என்னும் செல்வம்பொழிந்த தேசத்தில் சேர்த்த யோசுவாவின் வரலாறுகளைச் சொல்லப்போகிறோம். இவர் எழு பெரிய ஜாதிகளை அடக்கி, அவர்களுக்குள் அரசுபுரிந்த முப்பத்தொரு மன்னரையும் மடக்கிக் கீழ்ப்படுத்தி, அவர்கள் சுதந்தரங்களை இஸ்ரவேலருக்குப் பங்கிட்டுக்கொடுத்தபடியால் இவரை தளகர்த்தமுனி என்னும் பேரால் இவ்விடத்தில் அழைத்திருக்கிறோம்.

இவருடைய பிறப்பையும் வளர்ப்பையுங்குறித்து நமக்கொன்றும் தெரியாது. இவர் எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்த நூனின் குமாரன் என்று மாத்திரம் நாம் அறிவோம். இவருடைய வயதைக் கணித்துப்பார்க்கையில், மோசேமுனிவர் எகிப்தைவிட்டு மீதியான்தேசத்துக்கு ஒடிப்போன காலத்தில் இவர் பிறந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. மோசேமுனிவர் திரும்பவும் தமது எண்பதாம் வயதில் வந்து இஸ்ரவேலரை அற்புதங்களாலும், அடையாளங்களாலும் மீட்டுக்கொண்ட காலத்தில் தளகர்த்தமுனி என்று நாம் அழைக்கும் யோசுவாவுக்கு சுமார் நாற்பது பிராயமிருந்தது. யோசுவா என்ற பேருக்கு இரட்சகன் என்று அர்த்தம். இந்தப் பேரையுடையவர்களில் இவர்தான் முதல்வராய் இருந்தார். இவருடைய தாய் தகப்பன்மார் எகிப்திலிருந்து மீட்கப்படுவதைக்குறித்து எவ்வளவு ஆவலாய் எதிர்பார்த்திருந்தார்கள் என்பதை அவர்கள் தங்கள் மகனுக்கு இட்ட பேரால் விளங்கப்பண்ணினார்கள் என்று சொல்லலாம். அவர்கள் வெறும்பேரால்மாத்திரம் தங்கள் விடுதலையின் ஆவலைத் தீர்த்துக்கொண்டார்கள். இவரால் எண்பது வருஷத்துக்குப் பிற்பாடு நடக்கப்போகும் தேவநடத்துதல் அவர்கள் கண்களுக்கு மறைவாயிருந்தது.



தளகர்த்தமுனிவர் தமது சிறு பிராயமுதல் நாற்பதுவயதுமட்டும் தமது இனத்தாரோடேகூட காடுகரைகளில் திரிந்தலைந்து தாளடிகளைச் சேர்க்கிறதும், களிமண்ணை மிதித்துப் பிசைகிறதும் சுமக்கிறதும், செங்கல் அறுக்கிறதும், சுடுகிறதுமான வேலையைச் சாக்கிரதையாய்ச் செய்துவந்திருக்கவேண்டியது. ஆம், ஆண்டவர் தமது ஜனமாகிய இஸ்ரவேலர் இவரால் கானானின் சுதந்தரங்களைப் பெற்று அவரவர் வீடுகளைக்கட்டி வாழ்வதற்கேற்ற பிரயத்தனங்களில் சிறுபிராயமுதல் பழகினார் என்று சொல்லவேண்டியது. மோசேமுனிவர் எகிப்துக்குத் திரும்ப வந்து இஸ்ரவேலரை விடுவித்து சிவந்தசமுத்திரத்தைத் தாண்டினதுமுதல் தளகர்த்தமுனிவர்மேல் விசேஷ கவனம் வைத்து அவரைத் தமக்கு ஊழியக்காரனாக வைத்துக்கொண்டார். மோசேமுனிவர் தேவ எவுதலினாலே அவரைத் தமக்குச் சமீபமாய் நிற்கும் ஊழியக்காரனாகத் தெரிந்துகொண்டார் என்றே சொல்லவேண்டியது. தளகர்த்தமுனியின் விவேகத்தையும் பராக்கிரமத்தையும் மோசேமுனிவர் சீக்கிரத்துக்குள்ளாகக் கண்டு, வனாந்தரத்தில் அவர் செய்ய நேரிட்ட முதலாம் யுத்தத்துக்கு தளகர்த்தனாக்கினார். அவ்வத்தரவின்பிரகாரம் யோசுவா சேனைகளை அணிவகுத்து அமலேக்கியர் என்னும் ஒரு பராக்கிரம ஜாதியோடு போர்புரிந்தார். தளகர்த்தமுனி போர்புரிந்தகாலத்தில் மோசேமுனிவர் ஒரு மலைமேல் நின்று தமது இரண்டுகைகளையும் உயர்த்தி சகாயத்துக்காக மன்றாடிக்கொண்டிருந்தார். மோசேமுனிவர் விசுவாசத்தோடு செய்த ஜெபம் தளகர்த்தமுனிவருடைய சேனைதளங்களுக்கு வீரத்துவத்தையும், அவர்கள் பிரயோகித்த யுத்தஆயுதங்களுக்கு கருக்கேற்றும் சாணைக்கல்போலும் இருந்தது. தளகர்த்தமுனி சூரியன் அஸ்தமிக்கும்பரியந்தம் வீரத்தோடும் விவேகத்தோடும் போர்புரிந்து அமலேக்கியரை அடியோடு முறியடித்து ஜெயபேரிகைகள் முழக்கி, இராணுவவீரரோடு வெற்றிவிருது பிடித்து இஸ்ரவேலின் பாளயத்துக்கு வந்துசேர்ந்தார். பின்பு கர்த்தர் மோசேமுனிவரை நோக்கி: "அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடி நாசம்பண்ணுவேன்" என்ற வாசகத்தை எழுதி, அதை தளகர்த்தமுனியின் காதில் தொனிக்க வாசிக்கும்படி கட்டளையிட்டார் அவர் அப்படியே வாசித்தார். அதுமுதல் தளகர்த்தமுனி இஸ்ரவேலரின் சத்துருக்கள் எல்லாருக்கும் விசேஷமாய் அமலேக் ஜாதிக்கும் ஒரு வைரிபோல் இருந்தார். (யாத். 17. 9–16.)

தளகர்த்தமுனி போர்க்களத்தில் எவ்வளவு விசேஷமாய்

விளங்கினாரோ அதுபோலவே தெய்வீக விஷயங்களிலும் விளங்கினார். எப்படியெனில் இவர் தமது எஜமானாகிய மோசே முனிவர் கற்பனை வாங்கும்படி மலையின்மேல் ஏறினபோது இவரும் கூடவேபோய் நாற்பதுநாள் தங்கியிருந்தார். இதினாலே வீரதீரபராக்கிரமரும் தேவபக்தியும் விசுவாசமும் உடையவர்களாயிருக்கலாம் என்று விளங்குகிறது. தேவனுடைய ஜனங்களுக்காக யுத்தம்பண்ணவும், அவர்களுடைய வாழ்வை விருத்திசெய்யவுமே அவர் சித்தமுள்ளவராயிருந்தார். எந்தப் பெரும் சத்தத்தையும் கேட்டால் அதை யுத்த இரைச்சலாக்கும் என்று உடனே நினைப்பார் (யாத் 32. 17.). யுத்த இரத்தம் அவருடைய சரீரத்தின் நரம்புகளில் கொதித்துப் பரவினாலும் தேவபக்தியின் இரத்தம் அவருடைய ஆத்தும நரம்புமுழுவதிலும் அதிலும் அதிகமாய் கொதித்தது. "நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் வாலிபன் ஆசரிப்புக்கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்" என்று பரிசுத்தவேதம் அறிவிக்கிறது (யாத். 32. 11.). தளகர்த்தமுனியினிடத்தில் விளங்கிய வீரத்துக்கும் அவர் அடைந்த வெற்றிக்கும் அந்தரங்ககாரணம் இன்னதென்பது இப்போது நமக்கு விளங்கிப்போகிறதல்லவா? அவர் சர்வவல்லமைபொருந்திய தேவனிடத்தில் கொஞ்சம் வல்லபத்தைக் கேட்டுவாங்கி அவருடைய சத்துருக்கள்மேல் செலுத்தி வந்ததால் எவரும் ஒப்புக்கொள்ளும் தளகர்த்தரானார். உன்னத பலமிருந்தால் மண்ணுலகு எம்மாத்திரம்? அதை உருக்கி தண்ணீர்போல் ஊற்றிப்போடலாமல்லவா? "ஆசரிப்புக்கூடாரத்தைவிட்டுப் பிரியாதிருந்தான்" என்ற வாசகம் தேவாராதனை விஷயத்திலும், ஆலயத்துக்கடுத்த விஷயத்திலும் அவர் அதிக ஊக்கமும் கருத்துமுடையவனாயிருந்து, கூடாரத்தையே தன் வீடுபோல் எண்ணி அங்கேயே அதிக காலத்தைப் பின்னிட்டு வந்தார் என்பதையும் நமக்கு விளக்கிக் காட்டுகிறதென்று சொல்லலாம்.

இவரிடத்திலிருந்த மெய்ப்பக்தியோடே ஒருவித குருட்டு பக்தியும் ஒருகாலத்தில் வெளிப்பட்டது. எப்படியெனில் ஜனம் முழுவதையும் விசாரணைசெய்யும் வேலையை மோசே முனிவர் எழுபத்திரண்டு தலைவருக்கும் ஒப்புவிக்கும்படி தேவாலயக் கூடாரத்தண்டை வரவழைத்தார்; அவர்கள்மேல் தேவாவி இறங்கினதால் அவர்கள் தீர்க்கதரிசனமுரைத்தார்கள். தலைவராகப் பேர் எழுதப்பட்டவர்களில் இரண்டுபேர் வராமல் தங்கள் கூடாரத்திலே இருந்தார்கள்; அவர்கள்மேலும் அந்த ஆவி இறங்கிற்று. அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறதைக்



கேள்விப்பட்ட தளகர்த்தமுனி அதை ஒரு குறைபோல கூறி மோசேயிடம் சொன்னார். இந்த தகாதகுணத்தை மோசேமுனிவர் கண்டித்து, கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்கதாக கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே என்று சொன்னார். இதினாலே கர்த்தர் தமது ஆவியை தமது ஊழியக்காரருக்கு மாத்திரமல்ல, தமக்குச் சித்தமான யாவர்மேலும் ஊற்றுகிறார் என்று விளங்குகிறது. பொதுவான ஜனங்கள்மேல் ஊற்றப்படும் ஆவியின் வரப்பிரசாதங்களைத்தொட்டு தேவஊழியர்கள் அவர்கள்மேல் வன்கண்ணாயிருக்கலாகாது.

இதற்கப்பால் தளகர்த்தமுனி கானானை வேவுபார்க்கும்படி அனுப்பப்பட்ட பன்னிரண்டுபேரில் ஒருவராகக் குறிக்கப் பட்டார். இந்தப் பன்னிருவரில் பத்துப்பேர், ஜனங்கள் அதைரியப்படும்படியான வார்த்தைகளைப் பேசினதால் இஸ்ரவேலருக்குள் பெரிய குழப்பத்தை உண்டாக்கினார்கள். தளகர்த்தமுனியும் காலேப் என்ற வேறொரு பக்தனுமாத்திரம் தாங்கள் போய் வேவுபார்த்த கானானின் சீமையைக்குறித்து நலமானவைகளைப் பேசி அவர்களை தைரியப்படுத்தினார்கள். என்றாலும் ஆறுலட்சம் புருஷரின் அமளிக்கு இந்த இருவர் பேச்சும் எம்மாத்திரம்! அவர்கள் எப்போதும் முரட்டாட்டமும் கலகக்குணமுமுள்ள ஜனங்களாகவே இருந்தார்கள். அவர்கள் செய்த கலகங்கள் எப்போதும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட தலைவரைத் தாழ்த்தும் கலகமாகவே இருந்தது. அவர்கள் எவ்வளவாய்க் கலகவார்த்தைகளைப் பேசினபோதிலும் தளகர்த்தமுனி அதை அடக்கிப்போடப் பிரயாசப்பட்டு "கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள்; அந்தத் தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; கர்த்தர் நம்மோடிருக்கிறார்" என்று சொன்னார். இவ்வளவு வார்த்தையையும் அவர் தமது உயிரை வெறுத்தே பேசியிருக்கவேண்டியது. ஏனெனில் அந்த ஜனம் மோசேமுனியையே கல்லெறிந்து கொல்லப் பார்த்தார்களே; அவருடைய ஊழியக்காரனாகிய இவர் அவர்களுக்கு எம்மாத்திரம்! இந்தக் காலத்தில் அவர் காட்டிய பக்தி வைராக்கியத்தினிமித்தமும், வீரத்தினிமித்தமும் தேவன் இவரையும் காலேப்பையுமாத்திரம் கானானுக்குள் சேர்க்கச் சித்தங்கொண்டார். இவருடைய எசமானாகிய மோசேமுனிவருக்குக் கிடையாத மேன்மை இந்த விஷயத்தில் இவருக்குக் கிடைத்

தது. கர்த்தர் தம்மைக் கனம்பண்ணுகிறவர்களைக் கனம்பண்ணுகிறார்.

மோசேமுனிவருடைய மரணகாலம் சமீபிக்கும்போது தளகர்த்தமுனிவர் தேவனால் அந்த ஆறுலட்சம் ஜனத்துக்கும் அதிபதியாக அபிஷேகம்பெற்றார். தேவகட்டளையின்படியே மோசேமுனிவர் தளகர்த்தமுனியை தேவசந்நிதிக்கு முன்பாகக் கொண்டுவந்து, சகல ஜனங்களும் பார்க்கத்தக்கதாக அவருடைய சிரசின்மேல் தமது கைகளைவைத்துப் பட்டஞ்சூட்டினார்.

தளகர்த்தமுனிவருக்குப் பட்டஞ்சூட்டி சிலகாலத்துக்குள்ளாக மோசேமுனிவர் மரணமாகி பரகதி சேர்ந்தார். அது முதல் மேய்ப்பனில்லாத ஆடுகள்போன்ற இஸ்ரவேல் அனைத்துக்கும் தளகர்த்தமுனி தலைவரானார். அவருக்கு தேவனும் தமது அருளை வேண்டியமட்டும் கொடுத்து, அவரைத் தமது தரிசனையினாலும் திருவாக்காலும் தேற்றிப் பலப்படுத்தினார். அதினாலே மோசேயின் கை அவருடைய சிரசின்மேல் வைக்கப்பட்ட காலத்திலுண்டான மனத்திடனைவிட பதின்மடங்குத் திடனும் பலமும் அவருக்குண்டாயிற்று. தளகர்த்தமுனிவர் தேவதிடனைப்பெற்ற புருஷனாயிருந்தபடியால் தம் ஊழியத்தை மகா விவேகத்தோடும், திறமையோடும் நிறைவேற்ற ஆரம்பித்தார். மோசேமுனிவரைத் தேவன் தமது ஊழியத்துக்கென்று ஏற்படுத்தின துவக்கத்தில் பல போக்குகளையும் சொல்லி தம்மைக் கடத்திக்கொள்ளலாமென்று பார்த்தார்; இவரோ அப்படிச் சொல்லாமல் என்னைப் பலப்படுத்துகிற தேவனாலே நான் எல்லாவற்றையும் செய்ய திராணியுண்டு என்று எண்ணிக்கொண்டார்.

ஒருநாள் தேவன் தளகர்த்தமுனிவருக்குத் தரிசனமளித்து "நீயும் இந்த ஜனங்கள் அனைத்தும் எழுந்து இந்த யோர்தானைக் கடந்து, நான் இஸ்ரவேலருக்குக் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்" என்று உத்தரவுகொடுத்தார். இந்த உத்தரவு மகா வருத்தமானதாயிருந்தது; ஏனெனில் அவர்கள் ஆழமான ஒரு ஆற்றைக் கடந்துபோகவேண்டியதாய் இருந்தது. மேலும் அக்கட்டளை உண்டான காலத்தில் வெள்ளம் அந்த ஆற்றில் கரைபுரண்டுபோகிற காலமாய் இருந்தது. தண்ணீர் வடிந்த காலத்தில் புறப்படச்சொல்லியிருந்தால் இதை வருத்தமான கட்டளையென்று சொல்லமாட்டோம்; இந்த வருத்தமான கட்டளை நிறைவேற்றப்படும்படி தேவன் சில வாக்குத்தத்தங்களால் தளகர்த்தமுனியை தைரியப்படுத்தினார். ஆண்டவர்



முனிவரை நோக்கி: "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்குமுன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடிருந்ததுபோல உன்னோடுமிருப்பேன்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; பலன்கொண்டு திடமனதாயிரு ............ திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடிருக்கிறார்" என்று ஆசீர்வாதங்கூறினார். சர்வவல்லமைபொருந்திய தேவன் இவ்வளவு சொன்னபின்பு தளகர்த்தமுனிவர் தத்தளிப்பாரோ? அல்ல, அல்ல. இவ்வார்த்தைகள் அடிபட்டு ஓடும் பக்ஷத்தைத் திரும்பவும் அடித்தோட்டுவதுபோல் இருந்தது. தேவன் மனுஷபலத்துக்கு மிஞ்சின கிரியைகளைச் செய்யக் கட்டளையிடும்போது தமது வாக்குத்தத்தங்களால் மனுஷரைப் பலப்படுத்துகிறார்.

உடனே தளகர்த்தமுனி பல கோத்திரங்களின் தலைவரையும் கூட்டி இன்றைக்கு மூன்றாம்நாளில் நாம் ஆற்றைக்கடந்து அந்த நல்ல தேசத்துக்குள் பிரவேசிக்கவேண்டும்; ஆதலால் சகல ஜனங்களும் அதற்கென்று செய்யவேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டு புறப்பட ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். அக்கட்டளை சகல ஜனங்களுக்கும் பிரசித்தஞ்செய்யப்பட்டது. இக்கட்டளையைக் கேட்ட இஸ்ரவேலர் முறுமுறுக்கவுமில்லை, முணுமுணுக்கவுமில்லை. இஸ்ரவேலரில் சில கோத்திரத்தார் யோர்தானைக் கடக்க அவசியமில்லாமல், ஆற்றுக்கப்பால் வாசம்பண்ணும்படி மோசேமுனிவரால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவர்களில் யுத்த புருஷரானவர்களும் மீதியான ஜனங்களோடே ஆற்றைக்கடந்து அவர்களுக்கு யுத்தத்தில் உதவிசெய்து அதன்பின்பு திரும்பவும்வந்து இளைப்பாறவேண்டுமென்று தளகர்த்தமுனிவர் சொன்னார். அவர்களும் எதிர்பேசாமல் இணங்கி, அவரைத் [illegible]னாக அறிக்கையிட்டு "நீர் எங்களுக்குக் கட்[illegible]றபடி எல்லாம் செய்வோம்"........ "உம்முடைய சொல்லைக் கேளாமல் உம்முடைய வாக்குக்கு முரட்டாட்டம்பண்ணுகிறவன் எவனும் கொலைசெய்யப்படக்கடவன்" என்று அறிக்கையிட்டார்கள். இவை அனைத்தும் தளகர்த்தமுனிவருக்கு தைரியத்தின்மேல் தைரியத்தைக் கொடுத்தது.

தளகர்த்தமுனிவர் தமது சேனைதளங்களோடு புறப்படுமுன்னே தம்மிடத்திலிருந்த விவேகமான வீரர் இருவரை இரகசியமாய் வேவுபார்க்கும்படி அனுப்பி, நீங்கள்போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்று கட்டளையிட்டார்.

அவர்கள் அப்படியேபோய் ராகாப் என்ற ஒரு ஸ்திரீயின் வீட்டில் வழிப்போக்கர்போல் தாமதித்து நகர்சோதனைசெய்தார்கள். அந்நியர் சிலர்வந்து அரண்மனைக் கோணங்களையும், கோட்டைகொத்தளங்களையும், கடைவீதி தெருவீதிகளையும், கவனத்தோடு கண்ணோக்கித் திரிந்தார்கள் என்ற சமாசாரம் அந்திநேரத்தில் அரசன் காதில் விழுந்தது; அப்பொழுது அரசன் தன் பிரதானிகள் சிலரோடு விருந்துமண்டபத்தில் வீற்றிருந்து விருந்துண்டு, நாடு நகர் விருத்தாந்தங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்போலிருக்கிறது. அந்நியர் சிலர் வந்தார்கள் என்ற செய்தி அரசனை ஆட்டிவிட்டது; ஏனெனில் இஸ்ரவேல் சாதியார் ஆற்றுக்கப்பால் வந்திருக்கிறதும், அவர்கள் தேவனுடைய பலத்த கரத்தால் நடத்தப்பட்டுவருகிறார்கள் என்பதும், அவர்களால் பல பெரிய இராஜாக்கள் விழுந்துபோனார்கள் என்பதும், அவர்களை மடக்குவது அசாத்தியம் என்பதும் அரசனுக்குத் தெரிந்திருந்தது. வந்த அந்நியர் இஸ்ரவேலர்தானோ என்று திட்டமாய் விசாரிக்கிறதுமாத்திரம் அவன் வேலையாய் இருந்தது. அவர்களுடைய வரலாறுகளைத் திட்டமாய் அறியவேண்டுமானால், அன்று அவர்கள் தங்கின வீட்டாரால்தான் அறியவேண்டியது என்று உத்தேசித்து, ராகாப் என்பவளிடத்தில் ஆள் அனுப்பி அந்த அந்நியரைப பற்றி விபரமெல்லாம் கேட்டார்கள். அந்த மனுஷி தேவனால் நடத்தப்பட்டபடியால் இராஜாவின் மனுஷர் கேட்ட கேள்விகளையும், அவர்கள் பேசின வார்த்தைகளையும் கவனித்து, ஆகா! இந்த சற்புத்திரருக்கு ஆபத்தல்லோ வந்துவிட்டது என்று உத்தேசித்து, அவ்விருவரையும் உபாயமாய் மறைத்துவிட்டு இராஜாவின் மனுஷரை நோக்கி, வந்தமனுஷர் சில மணிநேரத்துக்குமுன்பாக போய்விட்டதாகச் சொன்னாள். இப்போதா போனார்கள்? அப்படியானால் அவர்களைத் தொடர்ந்துபிடிக்கலாமென்று அந்த மனுஷர் போய்விட்டார்கள். அவர்கள் போனபின்பு தான் ஒளித்துவைத்திருந்தவர்களிடத்தில் நடந்த சமாசாரம் எல்லாம் சொல்லி அவர்களை தைரியப்படுத்தி, இந்தப் பட்டணம் தங்கள் வசமாகுங்காலத்தில் தன்னையும் தன் குடும்பத்தையும் ரட்சிக்கும்படி வாக்குக் கேட்டாள். அப்படியே அவர்கள் வாக்குக்கொடுத்து தங்கள் வாக்கை நிறைவேற்றும்படி சிவப்பு கயிற்றை அடையாளமாக அவள் வீட்டுவாசலில் தொங்கவைக்கும்படி சொன்னார்கள். அப்படியே ஆகட்டுமென்று சொல்லி அவள் அவ்விருவரையும் ஒரு கயிற்றால் மதிலுக்கு அப்பால் இறக்கிவிட்டு, ஊருக்கப்பாலிருந்த மலை



யில் மூன்றுநாள் பதுங்கியிருந்து அப்பால் உங்கள்வழியே போங்கள் என்று கட்டளையிட்டாள். அந்நியர் வந்தசெய்தியை அரசன் கேள்விப்பட்டவுடனே கோட்டைவாசலைப் பூட்டிவிடும்படி உத்தரவுகொடுத்தான். இந்த ஸ்திரீயின் வீடு மதில்மேலிருந்தபடியால் இவர்களைப் பக்குவமாய் மதிலுக்கு அப்பாலே இறக்கிவிட அனுகூலமாயிருந்தது. இது ஆண்டவருடைய நடத்துதல் என்றே சொல்லவேண்டியது. இந்த ஸ்திரீ இப்படியெல்லாம் செய்ததற்கு முகாந்தரமென்ன? இந்த அந்நியர் பணமூட்டையை அவளுக்குக் கொடுத்தார்களா? அல்லது இவள் அவர்கள் ஜாதியா ஜனமா? அதொன்றுமில்லை. தேவன் அவளுடைய மனதிலே விசுவாசத்தைக் கொடுத்தார். "விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியாதவர்களோடே கூடி சேதமாகாதிருந்தாள்" என்று பரிசுத்த வேதம் அறிவிக்கிறது.

வேவு[illegible]ருக்கப்போன இரண்டுபேரும் பல சங்கடப்பட்டும் மனம் த[illegible]யடையவில்லை. அவர்கள் எப்போது வருவார்கள் என்று தளகர்த்தமுனி ஆயத்தமாய்க் காத்திருந்தார். ஒருநாள் பொழுது அஸ்தமித்தபின்பு அவர்கள் வந்தார்கள்; நடந்த சமாச்சாரங்களையெல்லாம் தங்கள் அதிபதியிடம் சொன்னார்கள். தாங்கள் வேவுபார்த்த பட்டணத்தின் கோட்டையின் பலத்தைப்பற்றியாவது கொத்தளங்களின் அரணையாவது, சேனையின் திரளையாவது, சக்கிரவர்த்தியின் ஆளுகையைப் பற்றியாவது ஒன்றும் பேசாமல், "கர்த்தர் தேசத்தை எல்லாம் நமக்கு ஒப்புக்கொடுத்தார்; தேசத்தின் குடிகள் எல்லாம் நமக்கு முன்பாகச் சோர்ந்துபோனார்கள்" என்று எல்லாருக்கும் சொன்னார்கள். அதோடு அவர்களுக்கு தேவனால் உண்டான பல சகாயங்களையும் பழைய அதிசயங்களையும்பற்றி ஜனங்களுக்குள்ளிருக்கும் பேச்சையும் சொல்லியிருப்பார்கள்; ஏனெனில் ராகாப் என்பவள் உங்களைக்குறித்து எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறது, உங்கள் பேரைக்கேட்டு குடிகள் எல்லாரும் சோர்ந்துபோயிருக்கிறார்கள் என்று சொன்னதுமன்றி, சிவந்தசமுத்திரம் வற்றிப்போனவிஷயமும், எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனும், ஓகும் கீழ்ப்படுத்தப்பட்டதும் அந்த நகரத்தில் தினம் பேசும்பேச்சாய் இருந்தது என்றும் சொல்லியிருந்தாள். இவையெல்லாம் கேட்டவுடனே அவ்வளவு ஜனத்தின் இருதயமும் ஓரேமனுஷனுடைய இருதயத்தைப்போல் திடப்பட்டது.

மறுநாள் அதிகாலையில் பகலை ஆளும் சூரியதளகர்த்தன் தன் வல்லமையுள்ள கதிர்களை அத்திசையில் பரப்புமுன்னே இஸ்ரவேலரின் தளகர்த்தனாகிய யோசுவா ஜனங்களை எழுப்பி பயணப்படுத்தி விடியுமுன் யோர்தான் ஆற்றோரத்தின்முன் பாளயம் இறங்கினார். ஐயோ! யோர்தான் அல்லோ இடையிலிருந்தது; மற்றப்படி அன்று அவர்களிடத்தில் விளங்கிய ஊக்கத்தால் வெகுதூரம் பயணம்பண்ணிவிடுவார்கள். ஆம், அவர்கள் அதைக் கடந்துபோய்த்தான் அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கவேண்டியது. நாம் பரமகானானைச் சேர்ந்து அதின் பலனை அநுபவிக்குமுன் மரணமாகிய யோர்தானைக் கடக்கவேண்டியது. யோர்தானைக் கடக்குமுன் தளகர்த்தமுனி "உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள், நாளையதினம் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்" என்று கட்டளை கொடுத்தார். மரணயோர்தானைக் கடக்கிற ஒவ்வொருவரும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு அதில் இறங்குமுன் பாவமன்னிப்பாகிய பரிசுத்தத்தையுடையவர்களாய் இருக்கவேண்டியது. தளகர்த்தமுனிவரின் கட்டளைப்படி பயண எக்காளம் தொனிக்கிற நேரத்துக்குக் கவலையோடு காத்திருந்தார்கள். அடுத்தநாள் புறப்படுங்கள் என்னும் கட்டளை பாளயம் எங்கும் தொனித்தது; அவரவர் தம் தம் மூட்டையோடும், தடியோடும் எழுந்து ஆற்றோரமாய் வந்தார்கள். இச்சமயத்தில் நானும் நீயும் அங்கிருந்தால் அக்காட்சி எவ்வளவு பிரமிப்பைக் கொடுக்கவேண்டியது! மூட்டை சுமக்கும் தலைகளும் பாரம் தாங்கும் தலைகளுமே எங்கும் காணப்படுகின்றன. ஐயோ! பெலவீன மாதர் தங்கள் வலது இடதுபுற இடுப்புகளில் பால் குடிக்கும் பாலரை இடுக்கி இருக்கிறார்கள். அவதிப்படாத ஆணைக் காணோம், பாதபிக்காத பெண்ணைக் காணோம், புலம்பாத பாலரைக் காணோம்; அவர்கள் எல்லாம் ஆற்றில் பாய்ந்து அழிந்துபோகும்படி கூடி நிற்கிறதுபோல் காணப்படுகிறது; ஆனால் அவர்கள் முகத்தில் வேளாவேளை ஒரு மலர்ச்சி ஜொலித்து அவர்கள் தாங்கும் சுமையனைத்தையும் லேசாக்கிவிடுகிறதுபோல் இருக்கிறது. ஓய்! ஆபிரகாமின் மக்களே! எங்கே போகிறீர்கள்? ஆ! சாராளின் குமாரத்திகளே! எங்கே பயணம், ஆற்றில் மாளப்போகிறீர்களோ? சேற்றில் புதையப்போகிறீர்களோ? அல்ல, அல்ல; எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்கள் நடுவே இன்று பிரசன்னமாகி, எங்கள் நடுவே அற்புதம் செய்யப்போகிறார், அவருடைய இரட்சிப்பு இதோ சமீபமாய் இருக்கிறது, இன்னும் கொஞ்சம் நேரந்தான், அப்பால் நாங்கள்



அதோ, நதிக்கப்பாலிருக்கும் அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவோம் என்று அவர்கள் முகமலர்ந்து மறுமொழி கொடுக்கிறதுபோலிருக்கிறது. ஆ! பாக்கியம் பெற்ற ஜனமே! நீ வாழ்க! உன் வாழ்வை எவனும் இச்சிக்கத்தக்கதுதான்.

தளகர்த்தமுனி தமது சேனை அனைத்தையும் ஆற்றோரத்தில் நிறுத்தி, தேவ பராமரிப்பை அவர்களுக்கு நினைப்பூட்டி தைரியப்படுத்தி சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியரின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில்.........மேலேயிருந்து ஓடி வருகிற யோர்தானின் ஜலம் ஓடாமல் ஒரு குவியலாக நிற்கும் என்று சொல்லி, முதலாவது தேவனுடைய பெட்டியை சனங்களுக்குமுன்னே சுமந்துபோகச் சொன்னார். ஆசாரியர் பெட்டியைச் சுமந்து ஆற்றில் தங்கள் காலை வைத்தவுடனே தேவன் சொன்னபிரகாரம் மேலேயிருந்து வந்த தண்ணீர் ஓடாமல் சுவர்போல வளர்ந்து மேகத்தை அளாவிநின்றது; போக்குத் தண்ணீர் வடிந்துவிட்டது. பின்பு ஆசாரியர் ஆற்றின் மத்தியிலே போய் தேவனுடைய பெட்டியோடு நின்றார்கள். அப்பால் ஜனங்கள் மந்தைமந்தையாய் திரண்டு ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தார்கள். அந்நேரத்தில் யோர்தானின் ஜலம் நின்ற சாயலைக் கவனித்தால், அது ஆபிரகாமின் புத்திரரைப் பார்த்து, மகிமையின் இராசாவின் மக்களே! நீங்கள் உங்கள் சுதந்தரபாகமாகிய கானானைச் சுதந்தரிக்கிறதற்கு பாத்திரர் என்பதற்குக் குறிப்பாக நாங்கள் எங்கள் தலைகளை உயர்த்துகிறோம், எங்களுடைய நிழலின் ஒதுக்கிலே நீங்கள் கடந்துபோங்கள்; நாங்கள் உங்கள் தேசத்தை எர்மோனின் கொழுப்பாலும், லீபனோனின் செழிப்பாலும் நிரப்புவோம் என்று மங்களம் கூறுகிறதுபோலுமிருக்கிறது.

ஜனமெல்லாம் யோர்தானைக் கடந்துதீருமட்டும் கர்த்தருடைய பெட்டி ஆற்றின் மத்தியில் நின்றது. தளகர்த்தமுனிவர் இந்தப் பெரிய ரட்சிப்பை இஸ்ரவேலர் என்றென்றைக்கும் நினைவுகூரும்படிக்கு பன்னிரண்டு கற்களைப் பெட்டி நின்ற ஆற்றின் மத்தியிலும் ஆற்றின் இக்கரையிலும் நாட்டும்படிக் கட்டளையிட்டார். அந்தக் கல்லுகள் அவ்வாற்றுக்குள்ளிருந்தே எடுக்கப்பட்டன. மரணயோர்தானுக்குள்ளேயே நாம் மரணயோர்தானைக் கடக்கும்படியான படிகட்டுகள் உண்டு. கிறிஸ்துவின் மரணத்தால் சம்பாதிக்கப்பட்ட பாவமன்னிப்பின் பலனே நமது மரணகாலத்தில் அந்த யோர்தானைக் கடக்கும் படிகள்போல் இருக்கவேண்டியது. அந்தக் கல்லுகள்

இஸ்ரவேலர் ஆற்றைக் கடந்ததற்கு நினைவுகூறுதலாக ஸ்தம்பங்களாயுமிருந்தன. பரிசுத்த இராப்போசனமானது இயேசு தமது யோர்தானை எப்படிக் கடந்தார் என்பதை நமக்கு உணர்த்தும் ஞாபகநிலைக்கல்போல் அவரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

எல்லாவேலையும் முடிந்தபின்பு ஆசாரியரும் ஆற்றின் நடுவிலிருந்து வந்தார்கள். அவர்கள் இக்கரை சேர்ந்தவுடனே அதிகநேரமாய் சுவர்போல் குவிந்துநின்ற ஜலம் மறுபடியும் தன் ஓட்டத்தில் ஓடிற்று. ஆ! கர்த்தாவே! உமக்குக் கடலிலே பாதையும் வலுதண்ணீர்களிலே பெரும்பாதையுமுண்டு. அடியார் ஒவ்வொருவரும் இந்த ஜீவியத்தின் கடைசியிலே மரணமென்னும் மகா யோர்தானைக் கடக்கவேண்டுமே; அக்காலத்தில் நீரே உமது வல்லமையின் பெட்டியோடு எழுந்தருளியாகிவந்து, எங்கள் மரண ஆற்றின் மத்தியில் நின்று கடத்திவிடும்; மற்றப்படி அந்த யோர்தான் எங்களை நித்திய சவக்கடலாகிய நரகமட்டும் அடித்துக்கொண்டுபோய்விடும்.

ஆற்றைக் கடந்தவுடனே இஸ்ரவேலரில் அதுமட்டும் விருத்தசேதனம் பெறாதவர்கள் எல்லாரும் தேவகட்டளையின்படி விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்; அவர்கள் பயணத்திலிருந்தகாலத்தில் இந்தச் சடங்கு நிறைவேற்றப்படவில்லை. விருத்தசேதனம் பண்ணாமலிருப்பது ஒரு நிந்தையாயும் இருந்தது. அந்த நிந்தை இந்த இடத்திலே நீக்கப்பட்டுப்போனதால் அதற்குக் கில்கால் என்று பேரிட்டார்கள்; அவ்விடத்திலே பஸ்காவையும் ஆசரித்தார்கள். மேலும் அவர்கள் ஆற்றைக் கடந்தது முதல் சுமார் நாற்பதுவருஷமாய் பெய்த மன்னா என்ற வானத்துப்போசனமும் நின்றுபோயிற்று; அவர்கள் தங்களுக்கு ஆபிரகாமின் காலத்தில் செய்யப்பட்ட வாக்குத்தத்ததேசத்தின் பலனைப் புசித்தார்கள். அவர்கள் பாளயம் இறங்கியிருந்தபூமி எரிகோவையடுத்த பெரும் மைதானமாயிருந்தது; அந்த மைதானத்தில் தளகர்த்தமுனி ஜெபத்தியானம்பண்ணி தன்னைப் பலப்படுத்தினவரும், தன் ஜனத்தை யோர்தானில் வெள்ளத்திற்கு தப்பக் கடத்தினவருமான தேவனைத் தொழுதுகொண்டார்போலிருக்கிறது. அப்பொழுது ஒரு புருஷன் உருவின கத்தியும் கையுமாய் தமக்கு முன் நிற்கக்கண்டார். அவனை இன்னாரென்று அறியாமல்,

"நீர் எங்களைச் சேர்ந்தவரோ,
எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ"

என்று கேட்டார். அதற்கு அவர் நான் கர்த்தருடைய சேனை



யின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார். அந்நிமிஷமே தளகர்த்தமுனி அவரை இனமறிந்துகொண்டு* தரையிலே முகங்குப்புறவிழுந்து பணிந்துகொண்டு, என் ஆண்டவர் தமதடியானுக்குச் சொல்லுகிறதென்னவென்று கேட்டார். அப்பொழுது அவர் தளகர்த்தமுனியை நோக்கிச் சொல்வார்:— இதோ நாம் எரிகோவின் அரசனையும், அதின் வீரரையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தோம் என்றும் அதைப் பிடிக்கும் முறை இன்னதென்றும் அறிவித்தார். இந்த தரிசனை தளகர்த்தமுனிக்கு அதிக அநுகூலத்தை உண்டாக்கிற்று. உடனே அவர் தமக்கு தேவன் கட்டளையிட்டபிரகாரம் தமது சேனையை ஒழுங்குபடுத்தினார். அவர் இந்த யுத்தத்துக்கு ஆயத்தப்பட வெகுநாள் செல்லவில்லை; ஏனெனில் இது கர்த்தர் இஸ்ரவேலருக்காகச் செய்யும் யுத்தமாய் இருந்தது. யுத்தம் ஆரம்பிக்குமுன் தேவன் கட்டளையிட்டிருந்தபிரகாரம் தளகர்த்தமுனிவர் சமாதான உடன்படிக்கைசெய்து தாங்கள் அந்தத் தேசத்தில் குடியிருக்கும்படி பிரயத்தனப்பட்டிருப்பார் (உபா. 20. 10.). ஆனால் எரிகோவின் மனுஷர் சமாதானத்தைநாடாமல் சண்டையை விரும்பினார்கள் போலிருக்கிறது. இஸ்ரவேலர் பாளயம் இறங்கியிருந்த இடத்திற்கும் எரிகோவுக்கும் இடையில் இரண்டுமயில் தூரமாத்திரம் இருந்தது; அதையிட்டு இஸ்ரவேலர் அக்கம்பக்கம் விலகிப்போகவும் ஏதுவில்லை. இந்துதேசத்துக்கு ஹீரத்நகரம் பூட்டுபோலிருக்கிறது என்று எப்படிச் சொல்லுகிறார்களோ, அதுபோல யோர்தான் ஆற்றுக்கப்பாலுள்ள தேசமனைத்துக்கும் எரிகோ பூட்டு நகரம்போலிருந்தது. நகரத்தின் அங்காடியில் விற்கும் பதார்த்தங்களையும், சரக்குகளையும் இஸ்ரவேலர் வாங்கக்கூடாதபடி அரசன் கோட்டைவாசலைப் பூட்டிப்போட்டான். நாம் முன்னே சொன்னபடி மன்னாவும் நின்றுபோயிற்று. ஐயோ! ஆறுலட்சம் புருஷரும் ஸ்திரீகளும் என்னசெய்வார்கள்? மறுபடியும் ஆற்றைக் கடந்து போவார்களா? ஆறு இவர்கள் நினைத்த நேரமெல்லாம் பிரிந்து

* யோசுவாவுக்குக் காணப்பட்டவர், தம்மை வணங்கும்படி இடம் கொடுத்தபடியால் இவர் சாதாரண சம்மனசல்ல. இவர் பிற்காலத்தில் நரு அவதாரமெடுத்த இயேசுகிறிஸ்துதான். அவர் முற்பிதாக்கள் காலத்தில் ரூபமாய்க் காணப்பட்ட விஷயமானது அவருடைய மனுஷவதாரத்தின் நிச்சயத்தை அவர்களுக்கு உணர்த்துகிறதுமாயிருந்தது. மோசேமுனிவருக்குத் தரிசனமாகி இஸ்ரவேலரை வனவழியாய் நடத்தின கர்த்தருடைய சேனையின் அதிபதி இவர்தான்.

வழிவிடுமோ? இல்லை. இதுதான் அவர்கள் நாடிவந்த தேசம், இந்த தேசந்தான் அவர்கள் பிதாக்களுக்கு தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் தங்களுக்குக் கிருபையாய் உதவிசெய்யும்படி உன்னதத்திலிருந்து இறங்கி தரிசனமளித்த கர்த்தருடைய சேனையின் அதிபதியின் பேரைச் சிந்தையில் நிறுத்தி, தங்களுடைய தளகர்த்தனாகிய யோசுவாவின் கொடியின்கீழ் நின்று தங்களுக்கு வழிவிடாத சத்துருக்களை எதிர்க்கவேண்டியதுதான் அவர்கள் கடமை.

இந்த யுத்தத்துக்கு "கர்த்தருடைய சேனையின் அதிபதி" தலைவராய் இருந்தார்; யோசுவா அவர் சொன்னபடி யுத்தத்தை நடத்தும் தளகர்த்தனாய் நின்றார். அவருக்கு யாதொரு ஜாதிக்குரிய விருதாவது, வெற்றி விருதாவது இருக்கவே இல்லை; தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டியே அந்த சேனையின் சிரசுக்குமேல் காணப்பட்ட விருதாக இருந்தது. இஸ்ரவேலர் யுத்தத்துக்கு வருகிற சமாச்சாரம் ஒன்றும் எரிகோ நகரத்தாருக்குத் தெரியாதிருக்கலாம்; அப்படிப்பட்ட ஆயத்தங்கள் ஒன்றையும் இஸ்ரவேலர் செய்யவுமில்லை. முதலாவது யுத்தபுருஷர் அணிவகுத்து நின்றார்கள்; அவர்களுக்குப் பிறகே ஆசாரியர் எக்காளம் பிடித்தவர்களாய் நின்றார்கள்; அவர்களுக்குப் பின்னே கர்த்தருடைய பெட்டியை சில ஆசாரியர் சுமந்துபோனார்கள்; அவர்களுக்குப் பின்னே யுத்தவீரரின்பின் தண்டு ஒன்று புறப்பட்டது. இந்த ஒழுங்கின்படி அவர்கள் பட்டணத்தின் மதிலை முதல்நாளில் ஒருதரம் சுற்றி வந்தார்கள். அவர்கள் கையிலே தடிகளும் ஈட்டிகளும், சில கத்திகளுமாத்திரம் இருந்தன என்று சொல்லவேண்டியது. இப்படி ஆறுநாள் அதிகாலையில் பட்டணத்தை ஒருதரம் சுற்றி மறுபடியும் தங்கள் ஸ்தானத்துக்கு வந்துவிட்டார்கள். கர்த்தருடைய பெட்டிக்கு முன்னே எக்காளங்களைப் பிடித்து ஊதின தொனியைத்தவிர வேறொரு சத்தமும் அங்கே கேட்கப்படவில்லை. ஒவ்வொரு நாளிலும் கோட்டை சுற்றும்போது நாமும் கூட இருந்தால் என்ன சொல்லமாட்டோம்! எரிகோவின் ஜனங்கள் தங்கள் கோட்டைமதிலின்மேலும் கொத்தளங்கள்மேலும் ஏறி நின்றுகொண்டு, ஆகா! நல்ல தமாசு; இப்படித்தான் கோட்டையைப் பிடிக்கிறது; எரிகோவின் கோட்டையைப் பிடிக்கும்படியாக இப்படித்தான் யுத்தம்செய்யவேண்டும் என்று பழித்துப் பேசியிருக்கலாம். வேறு சிலர் நடு இராத்திரியில் நாய்கள் சந்திரனைப்பார்த்துக் குலைத்து நகரத்தில் தூக்கத்தைக் கெடுக்கிறதுபோல இவர்கள் கோட்டை



யைச் சுற்றிலும் குலைத்துக்கொண்டு திரிகிறார்கள் என்று சொல்லியிருக்கலாம். ஓய்! எரிகோவின் மனுஷரே! நீங்கள் சொல்லுகிறதெல்லாம் சொல்லுங்கள், பேசுகிறபடியெல்லாம் பேசுங்கள்; உங்கள் காரியமும் இஸ்ரவேலர் காரியமும் விளங்க இன்னம் சில நாள் தான் இருக்கிறது.

தளகர்த்தமுனிவர் முன்னே சொல்லியவண்ணம் ஆறுநாள் எக்காளங்களைமாத்திரம் ஊதி நகரத்தை ஒவ்வொருதரம் சுற்றியானபின்பு ஏழாம்நாள் அதிகாலையிலே அவர்கள் அனைவரும் புறப்பட்டு அந்தப்பிரகாரமே பட்டணத்தை ஏழுதரம் சுற்றி வந்தார்கள்; அன்றையத்தினம்மாத்திரம் அப்படி ஏழுதரம் சுற்றி வந்தார்கள். ஏழாந்தரம் ஆசாரியர் எக்காளங்களை ஊதி மதிலைச் சுற்றிவருகையில் தளகர்த்தமுனி சேனை அனைத்துக்கும் அடையாளம் காட்டி,

"ஆர்ப்பரியுங்கள்,
பட்டணத்தைக் கர்த்தர்
உங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்"

என்று சொன்னார். உடனே எக்காளங்கள் எதிரொலி கேட்க தொனித்தன; அத்தொனியோடு ஜனங்களும் மகா ஆரவாரத்தோடு முழங்கினார்கள். அந்நேரத்தில் எரிகோவின் மதில் அடியற்ற மரம்போல் அவர்கள் பாதங்களின்கீழே இடிந்துவிழுந்தது. உன்னதமான தேவனே! எரிகோவின் மதிலைப்போல் என் சரீரம் இதோ உமது பிரசக்கத்துக்கு முன்பாக விழுகிறது; நீர் சர்வவல்லமைபொருந்திய தேவன்; நீர் உமது சத்துருக்களை மேற்கொள்ள பளிச்சென்று பிரகாசிக்கும் பட்டயங்களும், துரப்பாயும் துப்பாக்கியும், கொத்தளங்களைப் பீறச்செய்யும் பீரங்கிகுண்டுகளும் வேண்டியதில்லை. நீர் ஆட்டுக்கொம்புகளையும், மனுஷரின் சதையுள்ள தொண்டைகளையும் உமது முதற்றரமான ஆயுதமாகப் பிரயோகிக்கிறீர்; உம்முடைய பிள்ளைகளின் சத்துருக்களை இவ்வளவாய்த் தாழ்த்தின நீர் உம்முடைய சத்துருக்களை லேசில் விடுவீரோ! எனக்குள் ஒரு எரிகோ உண்டு. அதில் பெயெல்செபூல் என்னும் அரசன் குடிகொண்டு, உன்னதமானவராகிய உம்மை நான் மதிக்காதபடி பண்ணுகிறான்; அவனும் அவனுடைய அரக்கரும் இந்த எரிகோவின் மதிலைப்போல் என் பாதத்தின்முன் இடிந்துவிழ நீர் கிருபைசெய்யும்; ஆமென்.

எரிகோவின் மதில் விழுந்தவுடனே இஸ்ரவேலர் அனைவரும் தளகர்த்தமுனிவருடைய கட்டளைப்படி பட்டணத்துக்

குள் புகுந்து, அதைப் பிடித்து சத்துருக்கள் அனைவரையும் சங்காரம்பண்ணினார்கள்; ஆனால் நகரத்தை வேவுபார்க்கப்போன அந்த இரண்டுபேரும் தளகர்த்தமுனியின் கட்டளைப்படி ராகாப் என்பவளையும் அவளோடு இருந்தவர்களையும் ரட்சித்தார்கள். அந்தப் பட்டணத்தில் சேகரிக்கப்பட்ட கொள்ளை எல்லாம் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தது. ஏனெனில் முதற்பலன் கர்த்தருடையது என்ற பொதுப்பிரமாணத்தின்படி கானானிலுள்ள முதல்பட்டணமும் அதின் ஆஸ்தி அனைத்தும் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நம்முடைய தேசத்திலுள்ள இந்துமார்க்கத்தை எரிகோவின் மதிலுக்கு ஒப்பிடலாம். சாத்தான் மனுஷரை தேவனுக்கு விரோதிகளாகும்படிச் செய்த பிரயத்தனங்களில் விக்கிரகாராதனையைப்போல பலமான பிரயத்தனம் வேறொன்றில்லை. சாத்தான் நமது தேசத்து விக்கிரகாராதனையைக்குறித்து, வெகு சந்தோஷமாய் பாதாளலோகத்தில் பேசி சந்தோஷப்பட்டுக்கொள்ளலாம்; அது அவ்வளவு பராக்கிரமமான மதிலைப்போல காணப்படுகிறதையிட்டு நாம் பயப்படத் தேவையில்லை. எரிகோவின் மதிலே விழுந்ததே இது எம்மாத்திரம்? நாம் உடன்படிக்கையின் பெட்டிபோன்ற வேதாகமத்தை நமது மனதிலும் செய்கையிலும் சுமந்து, ஜெபமாகிய எக்காளங்களை ஊதி தெருக்களிலும், சந்திகளிலும், வீடுகளிலும், அந்தரங்க அறைகளிலும் போய் சுவிசேஷ சத்தியங்களை ஆர்ப்பரிப்போடு பிரசங்கித்து வருவது மெய்யானால், நமது தேசத்தின் விக்கிரகங்கள் நம்மை அறியாமலே நமது பாதத்தில் விழப்பார்க்கலாம். நம்முடைய இந்தப் பிரயத்தனத்தில் விசுவாசம் கலந்திருக்கவேண்டியது. விசுவாசத்தினால் எரிகோவின் மதில்கள் விழுந்தது (எபி. 11. 30.). நமது ஆத்துமாவைச் சுற்றிலுமுள்ள பாவமாகிய பேயின் கொத்தளங்கள் அடியோடு விழவேண்டுமானாலும், நாம் உலக இன்பங்களாகிய சிற்றின்பக்கோட்டையை உடைத்துவிடவேண்டுமானாலும், நமக்குள் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பற்றிய விசுவாசம் வேண்டியதாயிருக்கிறது. "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாயிருக்கிறது" என்று ஒரு பக்தன் சொல்லியிருக்கிறார். (1 யோவா. 5. 4.)

இஸ்ரவேலருக்கு எரிகோவில் கிடைத்த அற்புதவெற்றி அத்திசை எங்கும் பிரஸ்தாபமாய் இருந்தது; இந்தப் பேர்பிரஸ்தாபமே அவர்களைத் தைரியப்படுத்தும் ஒரு மருந்துபோல் இருந்தது. அப்பால் தளகர்த்தமுனிவர் தமது சேனையை ஆயிபட்டணத்துக்கு விரோதமாய் நடத்தமுயன்று, அதைப்போய் வே



வுபார்த்துவரும்படி சில வீரரை அனுப்பினார். அவர்கள் போய்த் திரும்பிவந்து, மூவாயிரம் சேவகர்போய் அதை முறியடித்துவிடலாம் என்று சொன்னார்கள். அந்தப்படியே தளகர்த்த முனிவர் தமது சேனையில் மூவாயிரம்பேரை அனுப்பினார். அதில் அவர்கள் ஜெயத்தோடே அல்ல, அபஜெயத்தையும் அலறுதலையும் கட்டிக்கொண்டு தலைவிரிகோலமாய் தளகர்த்தமுனியின் பாதத்தில் வந்து விழுந்தார்கள். இதன் காரணம் இன்னதென்பதை முனிவராவது மற்றவர்களாவது அறியவே இல்லை; இதின் இரகசியம் தேவனுடைய திருவுளத்திலிருந்தது. எவ்வளவு பக்தனும் கடவுளின் வழிகளைக் கண்டுபிடித்துக்கொள்வது அசாத்தியந்தான். எரிகோபட்டணத்தின் சகல சம்பத்தும் கர்த்தருக்குரியது என்றும், அதில் ஒருவனும் ஒரு உப்புச்சிரட்டை முதலாய் எடுக்கக்கூடாதென்றும் கட்டளையிட்டிருந்தாரென்று முன் சொன்னோமே. அப்படியிருக்க ஆகான் என்ற ஒரு சேவகன் எரிகோவைக் கொள்ளையடிக்கையில் கண்டுபிடித்த சில விலையுயர்ந்த சாமான்களையும், பொன்னையும் திருடி மறைத்துப்போட்டான். இந்தக் காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததாய்க் கண்டதால் அவர் ஆயிபட்டணத்தின் சண்டையில் இஸ்ரவேலரைத் தோற்றுப்போகவும் அவர்களில் முப்பத்தாறு வீரர் மடியவுஞ்செய்தார். இந்த தேவசூட்சம் அறியாத தளகர்த்தமுனிவர் மனமுடைந்து, கடவுளின் துணையும் கடாட்சமும் தன்னையும் தன் ஜனங்களையும், இவ்வளவு சீக்கிரமாய் விட்டு அற்றுப்போயிற்றென்று தப்பாய் எண்ணி வஸ்திரங்களைக் கிழித்து, அடியற்ற பனைபோல் ஆண்டவன் பாதம் பணிந்து, தன் தலைமேல் புழுதியையே புஷ்பம்போல் வாரிப்போட்டுக்கொண்டு தேவனே, தஞ்சம் என்று குப்புறக்கிடந்தார். இஸ்ரவேலின் மூப்பரும் தங்கள் தளகர்த்தர் என்ன வேஷமாய்த் துக்கங்கொண்டாடினாரோ, அப்படியே செய்து அவர்களும் ஆண்டவன் திருவடியைத் தெண்டனிட்டுக் கிடந்தார்கள். அப்பொழுது கர்த்தர் தரிசனமாகி, ஆயிபட்டணத்தில் நடந்த அபஜெயத்தின் அந்தரங்கத்தைச் சொல்லி, அந்தச் சாபத்தீட்டை நீக்காதபட்சம் தாம் அவர்கள் நடுவே இரேன் என்று விளம்பினார். உடனே தளகர்த்தமுனிவர் அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்து அந்தத் திருடனையும் தண்டித்தார். (அதின் விபரங்களை அடுத்த சரித்திரத்தில் விபரமாய்க் காட்டுவோம்.) திருடன் தண்டிக்கப்பட்ட பின்பு இஸ்ரவேலர் மறுபடியும் ஆயிபட்டணத்துக்கு விரோதமாய்ப் படையெடுத்து அந்த நகரத்தையும் நாட்டையும் ஜெயித்தார்கள். இதி

னாலே கர்த்தருடைய கட்டளைகளை நாம் எவ்வளவாய் மதித்து நடக்கவேண்டுமென்று அறிந்துகொள்ளுகிறோம்.

வெற்றியடைந்த வீரர் அதிக வெற்றியை நாடுவார்களேயன்றி வேறொன்றையும் நாடார்கள்; ஆனால் தளகர்த்தமுனிவரோ அப்படியல்ல; அவர் சாதாரண வீரரைப்போல் நடந்துகொள்ளாமல் தேவபக்தியுள்ள வீரனைப்போல் நடந்துகொண்டார். எரிகோ, ஆயி என்னும் பட்டணங்கள் அவர்கள் கைவசமானவுடன் அவர் தமது யுத்தமுயற்சியை சிலகாலம் நிறுத்தி, கர்த்தருக்கு பலிபீடம் கட்டி, நன்றியறிதலான ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தினார். நாம் எப்போதும் நமக்கு பாவங்களின்மேலும் சாத்தான்மேலும் ஜெயம் தருகிற கர்த்தராகிய இயேசுவுக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துகிறவர்களாகவே இருக்கவேண்டியது. அப்பால் தளகர்த்தமுனிவர் இஸ்ரவேலரை இரண்டு பவுஞ்சாக்கி, ஒரு கூட்டத்தை ஏபால்மலைமேலும், மறு கூட்டத்தை கெரிசீம்மலைமேலும் நிறுத்தி, தேவன் மோசேக்கு அருளின பிரமாணங்கள் எல்லாவற்றையும் ஜனங்கள் காது கேட்க வாசித்து, அக்கட்டளைகளின்படிச் செய்யவேண்டுமென்று அவர்களை ஏவினார். மேலும் பத்துக்கற்பனைகளையும் அவர் கற்களில் பேர்த்தெழுதினார். அதுமுதல் தேவனுடைய பிரமாணம் இரகசியமாய் ஆசாரியருக்குமாத்திரம் தெரிந்ததாய் இராமல், கடந்துபோகிற எவனும் கண்ணுற்றுப்பார்த்து வாசிக்கும்படியான சர்வலோகபிரமாணமாயிற்று என்று சொல்லலாம். இந்த வரலாறு கிறிஸ்துவ அதிகாரிகளும், மேன்மக்களுமானவர்களும் தேவகாரியங்கள்பேரில் எவ்வளவு விசேஷித்த கவனமுடையவர்களாய் இருக்கவேண்டுமென்பதை நமக்கு உணர்த்துகிறது. இந்தத்தேசம் கிறிஸ்தவ மேன்மக்களாகிய அங்கிலேயரால் ஆளப்பட்டிருந்தாலும், அவர்கள் துரைத்தன விஷயமாய் தேவனுடைய பிரமாணங்களைத் தங்கள் குடிகளுக்கு அறிவிக்கப் பயப்படுகிறவர்களாயிருக்கிறார்கள். இங்கிலீஷ்துரைத்தனத்தார் தளகர்த்தமுனிவராகிய யோசுவாவைப்போல தேவபலத்தால் அனல்மூண்டு, கிறிஸ்துவின் சத்தியங்களைத் தாங்களே பிரபலப்படுத்தும் காலத்தை, தேவன் கட்டளையிடும்படி ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் முழங்காலைப் பரலோக பலிபீடத்துக்கு முன்பாக முடக்கி விண்ணப்பஞ் செய்யவேண்டியது.

தளகர்த்தமுனிவர் எரிகோவிலும் ஆயிநகரத்திலும் அடைந்த ஜெயம் அத்திசைகளில் பிரபலப்பட்டபோது, அவ்விடத்து அரசர்கள் அவரை மடக்க வேறு பிரயத்தனஞ் செய்தார்கள்.



அவர்களில் பலர் ஒரே சேனையாக தங்களை ஐக்கியகட்டுப்பாட்டால் ஒருமைப்படுத்திக்கொண்டு தளகர்த்தரை எதிர்த்தார்கள். தனித்தனியாய்ப் போனால் இஸ்ரவேலின் தளகர்த்தன் நமது தலையைத் தட்டிப்போடுவான்; சேர்ந்துகூடிப்போனால் நாம் அவன் சேனையைச் சங்காரம்பண்ணிவிடலாமென்று ஆலோசித்தார்கள்போலிருக்கிறது. ஆனால் தளகர்த்தமுனியின் பட்சத்தில் சர்வலோக தளகர்த்தராகிய யேகோவா இருக்கிறார் என்பதை அவர்கள் நன்றாய் உணர்ந்துகொள்ளவில்லை. தளகர்த்தமுனிவர் அவர்களோடுசெய்த ஒவ்வொரு யுத்தத்தையும் விபரமாய்ச் சொல்லவேண்டுமானால் இந்தப் பிரபந்தம் போதாது. மொத்தமாய்ச் சொன்னால் அவர் தமக்கு எதிர்பட்ட சகல அரசரையும் ஜெயித்தார். அவர் ஒருகாலத்திலும் தோல்வியடையவில்லை. ஒருதரம் அவர் யுத்தஞ் செய்கையில் சூரியனையும் சந்திரனையும் தம்தம் நிலையில் ஓடாமல் நிறுத்தினார். அவர் அச்சமயத்தில் எமோரியருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்; யுத்தம் முடியுமுன் இருட்டிப்போகாதபடிக்கு அவர் தேவசகாயத்தை முன்னிட்டு:

சூரியனே, நீ கிபியோன்மேல் நில்,
சந்திரனே, நீ ஆயலோன்மேல் நில்

என்று சொன்னார். அப்பொழுது ஜனங்கள் ஜெயமடையுமட்டும் சூரியனும் சந்திரனும் நின்றது (யோசு. 10. 12.). இந்தச் சண்டையில் ஐந்து அரசர்கூடி தளகர்த்தமுனியை எதிர்த்தும் அவர்கள் எல்லாரும் அபஜெயமானார்கள்; அவர்கள் தங்கள் ஜீவன்தப்ப ஓடி ஒரு செபியில் ஒளித்துக்கொண்டிருந்தார்கள். தளகர்த்தமுனிவர் அவர்களைப் பிடித்துவந்து தம்மோடுகூடவந்த யுத்தஅதிபதிகளை நோக்கி, நீங்கள் கிட்டவந்து உங்கள் கால்களை இந்த ராஜாக்களின் கழுத்துகளின்மேல் வையுங்கள் என்றார். அவர்கள் அப்படியே செய்து தங்களைத் திடப்படுத்திக்கொண்டார்கள்; பின்பு அவர்களைக் கொலைசெய்து மரத்திலே தூக்கிப்போட்டார்கள். இவ்வண்ணம் தளகர்த்தமுனிவர் தமது முகத்தைத் திருப்பின திசையெல்லாம் ஜெயம், ஜெயம் என்ற மங்கள கீதங்களோடு காலங்கழித்தார். முப்பத்தொரு முடிமன்னர் தளகர்த்தருடைய பட்டயத்துக்கு இரையானார்கள், அவர்களுடைய விஸ்தாரமான தேசங்கள் இஸ்ரவேலரின் காணியாட்சியாயிற்று. முனிவர் தாம் ஜெயித்த நாடுகளை இஸ்ரவேல் கோத்திரங்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்து அவர்களைக் குடியேற்றினார்.

தளகர்த்தமுனிவர் முதல்தரமான போர்வீரனும், சேனாபதியு

மாக பல யுத்தங்களில் விளங்கினதுமாத்திரமல்ல, உண்மையுள்ள தேவபணிவிடைக்காரனாகவும் மெய்த்தேவமார்க்கத்தின் அபிமானியுமாக விளங்கினார். அவர் தாம் நடத்திவந்த ஜனங்களை அவரவர் ஸ்தானத்தில் நிலைநிறுத்தினபின்பு தேவபயத்தையும், மெய்த்தேவ அறிவையும் தலைமுறைதத்துவமாய் அவர்கள் மனதில் நிலைநிறுத்தவும் பிரயாசப்பட்டார். முன்னே நாம் அவருடைய விண்ணப்பக்குணத்தையும் பிரசங்கத்தன்மையையுங்குறித்துக் குறிப்பாய்ச் சொன்னோமே. அவர் தமது சகல யுத்ததொல்லையையும்விட்டு ஓய்ந்தபின்பு தாங்கள் இம்மட்டும் தோள்களில் சுமந்துதிரிந்த உடன்படிக்கைப்பெட்டியையும் கூடாரத்தையும் சீலோவிலே ஸ்தாபகப்படுத்தினார்கள். அதுமுதல் பண்டிகைகளும் ஆராதனைகளும் பலிகளும் அந்திசந்தி தப்பாமல் ஆசரிக்கப்பட்டுவந்தது.

அப்பால் முனிவர் தம்முடனே கூட்டிவந்த இரண்டரைக்கோத்திரத்தாரின் யுத்தபுருஷரை வரவழைத்து, "உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து அவருடைய வழிகளிலெல்லாம் அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவரைப் பற்றிக்கொண்டிருந்து அவரை உங்கள் முழுஇருதயத்தோடும், உங்கள் முழுஆத்துமாவோடும் சேவிக்கச் சாவதானமாய் இருங்கள்" என்று கட்டளையிட்டு, தங்கள் குடியிருப்பின் எல்லைக்கு அவர்களை அனுப்பிவிட்டார். மேலும் கைப்பிசகாய்க்கொலைசெய்தவன் தன் உயிரைத் தப்புவித்துக்கொள்ளும்படியாக ஆறு அடைக்கலப்பட்டணங்களையும் தளகர்த்தமுனி ஏற்படுத்தினார்.* அவர் தமது அந்தியகாலம் நெருங்குகிறதென்பதை தமது சரீர பெலவீனத்தினால் உணர்ந்துகொண்டு, இஸ்ரவேலின் அதிபதிகளை எல்லாம் ஏககூட்டமாக வரவழைத்து, ஆண்டவர் அவர்களுக்குச்செய்த பூர்வதயவுகளையெல்லாம் விபரமாய்ச் சொல்லிக்காட்டி, அவரை விசுவாசிக்கவும், அவருக்குக் கீழ்ப்படிந்தடங்கவும் புத்திசொல்லி, அவருடைய பரிசுத்த கற்பனைகளை மீறுதபடிக்கு அவர்களை எச்சரித்து, அவரைவிட்டுப் பின்வாங்கிப்போகாதபடி அவர்களுக்குப் போதித்தார். மேலும் கடவுள்மேலிருந்த பக்திவைராக்கியத்திற்கும் அவருடைய குடும்பபக்திக்கும் அத்தாட்சியாக, "நானும் என் வீட்டாருமோ

*அந்த ஆறு அடைக்கலப் பட்டணங்களாவன: கலிலேயாவிலுள்ள கேதேஸ், எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ள சீகேம், யூதாமலைத்தேசத்திலுள்ள எபிரோன், ரூபன் கோத்திரத்திலுள்ள பேசேர், காத்து கோத்திரத்திலுள்ள ராமோத்கீலேயாத், மனாசே கோத்திரத்திலுள்ள கோலான். (யோசு. 20. 7, 8.)



கர்த்தரைச் சேவிப்போம்" என்று பகிரங்கமாய் அறிக்கையிட்டார். இந்த அறிக்கையைக் கேட்ட அதிபதிகளும் மூப்பருங்கூடி, நாங்களும் எங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிப்போம் என்று அறிக்கையிட்டார்கள். அது தளகர்த்தரின் விருத்தாப்பிய இருதயத்தை திருப்திப்படுத்தும் விருந்துபோல் இருந்தது. யோசுவா உயிரோடிருந்த நாட்களிலும் அவருக்குப் பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும் இஸ்ரவேலர் கர்த்தரைச்சேவித்தார்கள். (யோசு. 24. 11.)

தளகர்த்தமுனிவர் நூற்றுப்பத்து வயதுடையவராய் இம்மையைவிட்டு மறுமைக்குள் சேர்ந்தார். அவரைக் கானானுக்குள் பிரவேசிக்கச்செய்த உடன்படிக்கையின் தூதனானவர் அவரைக்கொண்டு முடிக்கவேண்டிய சகல வேலையையும் முடித்தவுடனே, உண்மையும் உத்தமமுமுள்ள தளகர்த்தனே! பூலோக கானானில் வசிக்கும் நீ என்னோடு பரம கானானைவந்து பார் என்று அழைத்துக்கொண்டுபோனார். அங்கே தளகர்த்தமுனிவர் போய் தம் பத்தாவின் பாதமே தஞ்சம் என்று வாசம்பண்ணுகிறார். இந்தப் பரிசுத்த தளகர்த்தனைத் தரிசிக்க விரும்புகிறவர்கள் எல்லாரும் அவர் இப்பூலோகத்தில் நடந்துகொண்டதுபோல தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டால், மரணத்துக்குப் பின்பு இந்த மகாத்துமாவை பரிசுத்தவான்களின் கூட்டத்தில் கண்டு, கைகுலுக்கி களிப்படையலாம்.

தளகர்த்தமுனிவர் சர்வலோகத்துக்கும் இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுசுவாமிக்கு முன் குறிப்பாயிருந்தார். இருவருக்கும் ஒரேபேர் இருந்தது. ஒருவர் எபிரெயுபாஷையின்படி யோசுவா என்றும், மற்றவர் கிரேக்கபாஷையின்படி இயேசு என்றும் அழைக்கப்பட்டுவந்தார்கள். பேரின் ஒற்றுமை ஆளின் ஒற்றுமையாகமாட்டாதல்லவா? யோசுவா என்பவர் சரீரசம்பந்தமான மீட்பை இஸ்ரவேல்ஜாதிக்கு மாத்திரம் செய்கிறவராயும், அவர்களைக் கானானில் குடியேற்றுகிறவராயுமிருந்தார்; இயேசுவோ அவருக்கு மேலான சர்வலோகமீட்பராகி, மனுமக்கள் எல்லாரையும் ஆத்தும அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, பரமகானான் என்று அழைக்கப்படும் பேரின்பலோகமாகிய மோட்சத்தில் குடியேற்றும்படி வெளிப்பட்டார். யோசுவா என்பவர் தானாய் இஸ்ரவேலரைக் கானானில் குடியேற்றும் வேலையில் பிரவேசியாமல் தேவனால் அதற்கென்று நியமிக்கப்பட்டு அதற்குரிய அபிஷேகத்தையும் பெற்றார்; இயேசு சர்வலோக அதிபதியாக பரமபிதாவால் நியமிக்கப்பட்டு, அவருடைய பரிசுத்த பர்வதமாகிய

சீயோனில் அபிஷேகம்பெற்று அவதார புருஷனாய் அடியார் நடுவில் வந்தார். இன்றைக்கும் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு அவர் இரட்சிப்பின் அதிபதியாய் நின்று, அவர்களை இவ்வனாந்தரமான லோகத்தில் வழிநடத்துகிறார். தம்மை விசுவாசிக்கும் ஆடுகள் வழிதப்பிப் போகாதபடி, அவர் தமது சுவிசேஷத்தின் மூலமாய் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; என்னை விசுவாசியாதவன் ஜீவனைக் காண்பதில்லை" என்று விளம்பரமடிக்கிறார்.

யோசுவாவுக்குமுன் யோர்தான் பிரிந்து நிற்கவும், எரிகோவின் மதில் சாஷ்டாங்கம்பண்ணவும், முப்பத்தொரு முடிமன்னர் அடிபணிந்து நிற்கவும் செய்தவர் யார்? அவர் கர்த்தராகிய இயேசுதான். அவர் தமது மானிடவதார காலத்துக்கு முன்னிருந்து தம்மை உறுதியாய்ப் பிடித்து வணங்கும் பக்தருக்கு சகாயஞ்செய்தார். மனுமக்கள் ஒவ்வொருவரும் கடக்கும்படி அவர் ஒரு யோர்தானையும், பூமண்டலத்தின் நடுவே தினந்தோறும் பெருவெள்ளம்போல் கடந்தோடச் செய்கிறார். இவ்வுலகத்திலுண்டாகிய நோக்காடும், சாக்காடும், சத்துருமோசங்களும், சஞ்சலவிஷயங்களுமெல்லாம் அவனவன் தினந்தினம் கடந்துகரையேறும் யோர்தான் ஆறுபோலிருக்கிறது. அக்காலங்களில் எவனெவன் இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுசுவாமியைத் துணையாக வேண்டிக்கொள்வானோ அவனவன் அறியாமலே அவர் துணையாகநின்று, அவ்வாறுகளினின்று கடத்திவிடுவார். அவர் நம்மை மரணத்தைக் கடக்க அழைத்துக்கொண்டுபோவார் என்ற வாக்குத்தத்தமும் உண்டு. அவரே நம்முடைய இருதயத்தைச் சுற்றிலும் அளாவிநிற்கும் அவிசுவாசம், அவபக்தி என்னும் பாவமதில்களை விழுந்துபோகும்படிச் செய்து, நமது ஜீவகாலபரியந்தம் நம்மைக் கீழ்ப்படுத்திக்கொள்ளும்படி பிரயத்தனப்பட்டுப் போர்செய்த பாவங்களாகிய சத்துருக்களை நாம் ஜெயிக்கும்படி அருள்செய்கிறார்.

இவ்வுலக துன்பங்களாகிய யோர்தானையும் மரணமாகிய யோர்தானையும் நாம் அவரால் கடந்தபின்பு, நடுத்தெருவில் அலையும்படி விட்டுவிடப்படமாட்டோம். நம்முடைய இரட்சகர் தம்மால் பரமகானானுக்குள் சேர்க்கப்படும் பக்தர் எல்லாருக்கும் பல வாசஸ்தலங்களை உண்டுபண்ணிவருகிறார்; அதில் அவர்கள் போய்ச்சேர்ந்து சதாகாலமாய் வாழ்ந்து, அங்குள்ள பாக்கியங்களை அநுபவித்து, ஆண்டவரை அநுதினமும் துதித்துக்கொண்டிருப்பார்கள்.



# ACHAN.

## ஆ கா ன்.

நாம் தளகர்த்தமுனிவருடைய விருத்தாந்தத்தைச் சொன்னபோது ஆகான் என்ற ஒருவனைப்பற்றிச் சுருக்கமாய் சில காரியங்களைச் சொன்னோமே. இவ்விடத்தில் அவனுடைய வரலாறுகளைச் சற்று நுட்பமாய் ஆராய்வோமாக. மகாத்துமாக்களைப்பற்றி நாம் எழுதும் இந்தப் பிரபந்தத்தில் ஆகானுடைய சரித்திரத்தையும் நுழைக்கிறதால் இவனை மகாத்துமாவாக்கவேண்டுமென்பது நமது கருத்தல்ல. மகாத்துமாக்களின் சரித்திரத்தின்மூலமாய் நாம் அறிந்துகொள்ளும்பக்திவிநயமான விஷயங்களை ஆராய்ச்சிப்பதால் அவர்களுடைய சந்மார்க்க நெறியைப் பின்பற்ற ஏவப்படுகிறதுபோல, அவர்கள் காலத்தில் இடைக்கிடையே தோன்றின அவபக்தரின் வரலாறுகளைச் சுருக்கமாய் அறிகிறதால், அப்படிப்பட்டவர்கள் இக்காலத்திலும் இருக்கிறார்கள் என்றும் அவர்களைக்குறித்து விழிப்பாய் இருக்கவேண்டுமென்றும் புத்தியடைய ஏவப்படலாமல்லவா?

ஆகான் தளகர்த்தமுனிவர் காலத்திலிருந்த இஸ்ரவேல்வீரரில் முக்கியமானவர்களில் ஒருவனாய் இருந்தான் என்பதற்குச் சந்தேகமில்லை. எரிகோவின் மதில் அற்புதமாய் விழுகிற சமயத்திலும், ஜனங்கள் அவரவர் நின்றதிசையிலோடி கொள்ளைப்பொருட்களைச் சேர்க்கும் சமயத்திலும், இவனுடைய கருத்தும் கவலையும் இதோடே மகாராசனாகிப்போகவேண்டுமென்றே யோசித்துக்கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. எரிகோவின் சாபத்தீடு தேவனுக்குப் பரிசுத்தமாக நியமிக்கப்பட்டிருந்தது. தேவனுக்குப் பரிசுத்தமாக்கப்பட்டதில் இவன் தனக்கு ஒருபங்கு வேண்டுமென்று அபேட்சித்த விஷயமானது தன்னைத் தேவனுக்குச் சமமாக்கின பாவமாய் இருக்கிறதல்லவா?

மற்ற இஸ்ரவேலரெல்லாம் வீடுவீடாய்ப் புகுந்து சேர்த்த திரவியங்களைக் கர்த்தருக்கென்று குவிக்கையில், இவனோ தனக்கென்று சில வஸ்துக்களை ஆயத்தம்பண்ணியிருக்கிறான். இவன் தன் மனதின் ஆவலுக்குத் தகுந்த வீடு பார்த்தத்தான்

நுழைந்திருக்கிறான். எரிகோவின் அரசன் வீட்டிலோ, மந்திரி வீட்டிலோ, வேறெந்த மகராசன் வீட்டிலோ இவன் போய்க் கொள்ளையடித்தான். இவன் திருட்டுப்புத்தியைத் தலைமேல் கொண்டிருந்தபடியால் ஒண்டியாய்ப்போய் கொள்ளையடித்திருக்கிறான் என்று நினைக்கத்தக்கதாய் இருக்கிறது. இவன் தன்னிலே வீரதீர பராக்கிரமனாய் இருந்தபடியால் தனித்துப் போகும்படி துணிந்தாலும் துணிந்திருக்கலாம். எப்படியும் இவன் போய் நுழைந்த வீடு, இவன் ஆணவத்துக்கேற்ற அரண்மனையும் மனதுக்கேற்ற மாளிகையுமாய் இருந்தது. ஆகான் கொள்ளையிடப்போன வீட்டுக்காரன் பாபிலோன் சால்வையைப் போர்த்து தன் மஞ்சத்தில் நித்திரைகொள்ளும் மகாபிரபுவாய் இருந்தான். அவன் வீட்டில் வெள்ளியும் பொன்னும் திரளாயிருந்தது. அவன் தன் டம்பமான செலவுகள் எல்லாம் போக மீதியாகும் பணத்தை பொன்னாகமாற்றி அதை உருக்கி பாளமாக ஊற்றி பத்திரப்படுத்திக்கொள்ள ஸ்திதிவந்தனாயும் இருந்தான். இவன் தீரு சீதோன்முதலிய கடல்துறைப்பட்டணங்களில் பெருத்த வியாபாரஞ்செய்து, திரண்ட பணத்தைச் சம்பாதித்த ஒரு செட்டியாய் அல்லது வியாபாரியாய் இருக்கலாம். எரிகோவின் கோட்டைமதில் எம்பெருமானாகிய யேகோவாவின் அற்புதசெயலால் அடியோடு சாய்ந்து, அவரவர் நோக்கின திசைக்கு நேராக ஓட ஆரம்பிக்கிறபோது இந்த வீட்டுக்காரன் ஆகான் திருடின சால்வையையும், பொன்னையும், வெள்ளியையும்மாத்திரம் எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடிக்க ஆரம்பித்திருக்கலாம். அந்த வேளையில் ஆகான் அவனை வெட்டிக் கொன்று அவன் பொருட்களை எடுத்திருக்கலாம்; அல்லவென்று அவ்வீட்டார் தங்களைச் சங்காரம் செய்யவந்த சேவகனை இந்த உயர்ந்த பொருட்களால் ஏமாற்றி தங்கள் உயிரைத் தற்காத்துக்கொள்ளப் பிரயாசப்பட்டிருக்கலாம். மற்றப்படி பொற்பாளம் ஆகான் கையில் கிட்டுவது வருத்தந்தான். பாபிலோன் சால்வையின் பளபளப்பும், பொற்பாளத்தின் மினுமினுப்பும், வெள்ளியின் பளுவும் எல்லாங்கூடி ஆண்டவரின் கட்டளையை ஆகான் மனதிலிருந்து அகற்றிவிட்டது. அவன் சாபத்தீடானதிலே சிலதை எடுத்துக்கொண்டான்.

ஆகானுடைய அக்கிரமம் இஸ்ரவேல் புத்திரர்மேல் தேவகோபத்தை எழும்பப்பண்ணிற்று. இதினாலே ஆகான் சாமானிய சேவகனாயிராமல் எரிகோவைக் கொள்ளையிட்ட ஒரு பிரிவுக்குத்தலைவனாய் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. தேவன் நோவா, லோத்து என்பவர்களினிமித்தம் அவர்கள்



குடும்பங்களை இரட்சித்தார்; இப்போது ஆகான் நிமித்தம் இஸ்ரவேல் அனைத்தின்மேலும் கோபம்கொள்ளுகிறார். முந்தினதில் அவருடைய கிருபையின் ஐசுவரியத்தையும், பிந்தினதில் அவருடைய நீதியின் ஐசுவரியத்தையும் காண்கிறோம். ஆகான் அதை எப்படித் தன் வீடுமட்டும் கொண்டுவந்து சேர்த்தான் என்று தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் கொள்ளையடித்த நேரத்தில் அவைகளை அந்த வீட்டுக்குள்ளே புதைத்து வைத்துப்போட்டு இரவில் சேனையனைத்தும் அசந்து தூங்குகையில் போய் எடுத்துவந்திருக்கலாம்; அல்லது பொழுதடையுமட்டும் அவன் திரும்பிவராமல், அங்கேயே தாமதித்திருந்து இருட்டினபின்பு திருட்டு மூட்டையும் தோளுமாய் கூடாரத்துக்குள் வந்திருக்கலாம். நாம் பெரும்பாலும் நமது பாவங்களுக்கு இருளை மூடியாக்கிக்கொள்ளுகிறதுண்டு. "பகலில் பரிசுத்தன் இரவில் பிசாசு" என்று சொல்லத்தக்க அநேக மனுஷரை நாம் அடிக்கடி பார்க்கிறோமே. திருடரும், வேறு அநேக ஆகாமியங்களை நடப்பிக்கிறவர்களும் இரவையே தங்கள் பாவங்களுக்கு ஏற்ற சமயமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். தேவனுக்கு முன்பாக இரவென்றும் பகலென்றும் வித்தியாசமில்லை. "இருள் என்னை மூடிக்கொள்ளும் என்றாலும், இரவும் என்னைச்சுற்றி வெளிச்சமாய் இருக்கும்" என்றும், "உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல் வெளிச்சமாய் இருக்கும்" என்றும் ஒரு பக்தன் சொல்லியிருக்கிறார். (சங். 13. 11, 12.)

ஆகான் தான் திருடின பொருட்களைப் புதைத்தபிற்பாடு நம்மைப்போல சாமர்த்தியனுமில்லை, இனி நம்மைப்போல பணக்காரனுமில்லை என்று தனக்குள் ஆலோசனை பண்ணியிருக்கலாம். அவன் மனைவி, இனி நான் இஸ்ரவேலின் குமாரத்திகளின் நடுவே பொன்னாபரணங்களோடு புறப்படுவேன், வெள்ளி ஒட்டியாணம் என் இடுப்பில் விளங்கும், சொக்க வெள்ளியின் சலங்கைகள் என் கால்களுக்குக் கீதம்பாடும் என்று நினைத்திருக்கலாம். அவர்களுக்கு அன்றையதினம் தூக்கமே வந்திராது; கொள்ளையிட்ட பொருளைக்குறித்த மனோராச்சியமே அவர்களுக்கு புஷ்ப விமானத்தில் வெண்சாமரை வீச நித்திரைபோவதற்கு சமானமாயிருந்தது. மக்கள் இப்படி மகிழ்ச்சியோடு காலங்கழிக்கையில் மகாதேவன் உக்கிரகோபத்தால் மூண்டு, தம்மைக் கனவீனம்பண்ணி தமக்கென்று பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருட்களை அபகரித்துக்கொண்டதால் தமக்குச் சமமாக்கிக்கொண்ட ஆகான் என்ற ஆகாத மனுப்புத்

திரளை அதோகதியாக்கும்படிச் சித்தங்கொண்டார். கர்த்தாவே! உமது கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்?

ஆகானுடைய பாவத்தை வெளிப்படுத்தி அவனைத் தண்டிக்கும்படி தேவன் எழுந்தருளியானார். எப்படியெனில் இஸ்ரவேலர் யுத்தம்பண்ணாமல் கொள்ளையிட்ட எரிகோவுக்கு சுமார் ஆறு மயிலுக்கப்பால் ஆயி என்ற ஒரு சிறு பட்டணமிருந்தது. ஒரு சிறு மலையின்மேலிருந்த அந்தப் பட்டணத்தைப் பிடிக்கும்படி சுமார் மூவாயிரம்பேர் போதுமென்று உத்தேசித்து புறப்பட்டுப்போனதில் எதிரிகளுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; முப்பத்தாறுபேரும் மாண்டார்கள். அந்நேரத்தில் வெற்றிக்கீதங்களைப் பாடி, விருதுபிடித்து, கொள்ளைமூட்டைகளோடு பாளயத்துக்கு வருவார்கள் என்று தளகர்த்தமுனிவரும் இஸ்ரவேலரும் எதிர்பார்த்திருக்க, அவர்கள் ஒண்டி ஒண்டியாய் அழுதமுகத்தோடும், அங்கலாய்த்த செய்தியோடும் வந்துசேர்ந்தார்கள். அச்செய்தியைக் கேட்டவுடனே ஜனங்களின் இருதயம் கரைந்து தண்ணீராய்ப் போயிற்று. இதின் அந்தரங்கமென்னவென்று ஒருவருக்கும் தெரியாமல்போயிற்று. சில தினங்களுக்குமுன்னே எரிகோவின் மதில்களை எக்காளத்தின் பலத்தால் விழும்படிசெய்த யேகோவா இப்பொழுது இப்படிச் செய்த அந்தரங்கமென்ன என்பதே எல்லா இஸ்ரவேலரின் விசாரணையாயும் இருந்தது.

இந்த அபஜெயத்தின் காரணத்தை தளகர்த்தமுனி அறியாததால் மதிமயங்கி ஆண்டவருடைய சமுகத்தண்டை போய் சாஷ்டாங்கமாய் விழுந்துகிடந்தார்; இஸ்ரவேலின் மூப்பர் அவருக்குப் பின்னாலே தேவசமுகத்திற்கு முன் சாஷ்டாங்கமாய்க் கிடந்தார்கள். அவர்கள் துக்கம் அதிகரித்ததால் புழுதியையும் தங்கள்மேல் வாரிப்போட்டுக்கொண்டார்கள். அவர்கள் புழுதியணிந்து தேவசமுகத்தில் புரளும்போது மனுஷசாயலை ஒழித்து பெரும்புழுக்கள்போலவே தூரத்தில் காணப்பட்டிருக்கலாம். நம்மை தேவனோடு ஒப்பிட்டால் நாம் புழுவையன்றி வேறே யார்? "நானோ ஒரு புழுமனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும் ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்" என்று ஒரு பக்தன் பச்சாத்தாபகாலத்தில் அறிக்கையிட்டிருக்கிறார். (சங். 22. 6.)

ஆ! தேவசமுகத்திற்குமுன் கிடந்த இந்த புழுக்கள் மனுப்புழுக்களானதால் அவர்கள் சும்மாயிராமல் தங்கள் இருதயங்களால் நெளிந்து பெருமூச்செறிந்தார்கள். கூப்பிடுகிற காக்கைக்குஞ்சின் சத்தத்தைக்கேட்டு அதற்கு ஆகாரம் அருளும்



தேவன் மனுமக்களின் குரலைக் கேளாதிருப்பாரோ! "நெருக்கப்படுகிறகாலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு" என்று கட்டளையிட்டவர், நாம் கூப்பிடுகிற சமயத்தில் தமது காதுகளை அடைத்துக்கொள்வாரோ? அல்ல. ஆண்டவர் யோசுவாவை நோக்கி "எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புறவிழுந்து கிடக்கிறதென்ன? இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும், களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள் பண்டம்பாடிகளுக்குள் வைத்ததுண்டே. ஆதலால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாமல், தங்கள் சத்துருக்களுக்கு முதுகைக் காட்டினார்கள்; அவர்கள் சாபத்தீடானார்கள்; நீங்கள் சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து நிக்கிரகம்பண்ணாவிட்டால், இனி உங்களோடிரேன்" என்றார்.

இப்பொழுது இஸ்ரவேலர் ஆயிபட்டணத்தில் அபஜெயமான அந்தரங்கம் வெளிப்பட்டது. "சாபத்தீடானதை உங்கள் நடுவிலிருந்து நிக்கிரகம்பண்ணாவிட்டால் இனி உங்களோடு இரேன்" என்ற தேவன் சொன்னவாசகம் இஸ்ரவேல் சபையை முன்னிலும் அதிகமாய்ப் பயப்படுத்திவிட்டது. ஐயோ! தேவன் அவர்கள் நடுவில் இராவிட்டால் அவர்களால் என்ன காரியம் முடியும்? இந்த வார்த்தையானது களவுசெய்தவனைக் கவனமாய்க் கண்டுபிடிக்கவும் கண்டிப்பாய்த் தண்டிக்கவும் இஸ்ரவேல் அனைத்தையும் ஏவிவிட்டது. ஒன்று தேவன் அவர்கள் நடுவில் இருக்கும்படி அவர்கள் தீர்மானஞ்செய்யவேண்டியது, அல்லது கள்ளன் அவர்கள் நடுவிலிருக்கும்படித் தீர்மானஞ்செய்யவேண்டியது; இவ்விருவரில் யாரை அவர்கள் தங்கள் நடுவில் இருக்கும்படி விரும்புவார்கள்? திருடன் வீட்டுக்குள் வசிக்க ஒரு புத்திமானாவது சம்மதிக்கமாட்டானல்லவா?

கள்ளனைப் பிடிக்கும் முறையும் தேவனாலேயே குறிக்கப்பட்டது. எப்படியெனில், "காலையிலே நீங்கள் கோத்திரம் கோத்திரமாக வரவேண்டும், அப்பொழுது கர்த்தர் குறிக்கிற கோத்திரம் வம்சம் வம்சமாக வரவேண்டும், கர்த்தர் குறிக்கிற வம்சம் குடும்பம் குடும்பமாக வரவேண்டும், கர்த்தர் குறிக்கிற குடும்பம் பேர்பேராய் வரவேண்டும்" என்று திட்டம்பண்ணியிருந்தார். அந்தப்படியே மறுநாள் அதிகாலையில் இஸ்ரவேல் சபையனைத்தும் தேவனுடைய சிம்மாசனத்துக்கு முன்பாக கைதிகள்போல் நின்றார்கள். இந்தக் களவுக்கு தேவனே வாதி

யும், அவரே சாட்சியும், அவரே நியாயாதிபதியுமாய் இருந்தார். இந்தக் கள்ளனைச் சீட்டுப்போட்டுக் கண்டுபிடித்ததாக பலர் நினைக்கிறார்கள்; அதற்கு யாதொரு குறிப்பையும் காணோம். ஒவ்வொரு கோத்திரமாக தேவஸ்தானத்தைக் கடந்தபோது களவுநடந்த கோத்திரம் கடந்துபோகக்கூடாமல் திமிர் அடையும்படி தேவன் செய்தார் என்றும், அதன்பின் வம்சமும் குடும்பமுமாக அந்தக் கோத்திரம் கடந்தபோது களவுசெய்த வம்சமும் குடும்பமும் அதே தண்டனையினால் காட்டிக்கொடுக்கப்பட்டதென்றும், இவ்விதமாகவே கள்ளனும் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்டானென்றும் தல்மூத்து ஆகமத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். எப்படியாவது இந்த இரண்டிலொரு முறையாய்க் கள்ளன் கண்டுபிடிக்கப்பட்டான். கள்ளனைக் கண்டால் எவர்களுக்கும் வெறுப்பல்லவா? ஆனால் யோசுவாவுக்கு அப்படியல்ல. ஆகான் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அவர் அவனண்டைபோய், "மகனே! நீ இப்பொழுது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்து, அவருக்கு முன்பாக அறிக்கைபண்ணி நீ செய்ததை எனக்குச் சொல்லு, எனக்கு ஒளிக்காதே" என்று புத்திசொன்னார். பக்தர் பாவங்களைப் பகைப்பார்களேயன்றி பாவிகளைப் பகைக்கமாட்டார்கள்.

அப்பொழுது ஆகான் நடுக்கத்தோடும் பயத்தோடும் சொல்லுவான்: "மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; ....... கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும் ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன் பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது; வெள்ளி அதின் அடியிலிருக்கிறது" என்றான். ஆகான் பேசும் இந்த வார்த்தைகள் அவனை மகா யோக்கியன் என்றும், பாவ உணர்வுள்ள மனுஷரில் முதல்மாதிரி மனுஷன் ,என்றும் காட்டுகிறதுபோல் தொனித்தாலும், சற்று கூர்மையாய்க் கவனிக்குங்காலத்தில் கள்ளரில் கனத்த ஆசாமி என்றும், திருடரில் தேறின திருடன் என்றும் விளங்கும். கள்ளனைக் கண்டுபிடிக்கும்படி கோத்திரம் கண்டுபிடிக்கப்பட்டபோதாவது, வம்சம் கண்டுபிடிக்கப்பட்டபோதாவது, குடும்பம் கண்டுபிடிக்கப்பட்டபோதாவது இவன் மனம் அசையவில்லை; கடைசிமட்டும் பார்ப்போம், என்னத்திற்கு ஆத்திரம், வைக்கோல்போரில் ஊசி தேடப் போகிறதுபோல இந்த ஆறுலட்சம் புருஷரில் நம்மைத் தேடு



கிறார்களாக்கும், எல்லாம் ஆராய்ந்துபார்த்து காரியத்தின் முடிவுக்குத் தக்கதாக நடந்துகொள்ளலாம் என்றாற்போல் தன் மனதில் எண்ணிக்கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. ஒருவன் தன் பாவத்தைக்குறித்து மற்றவர்கள் தூண்டிக் கேட்குமுன், தானே ஆராய்ந்தறிந்து அறிக்கையிடவேண்டும்; அதுதான் பரிசுத்த ஆவியால் உணர்த்தப்பட்ட இருதயத்தின் தன்மையாய் இருக்கிறது. இவன்செய்த அறிக்கை பிரம்படிபட்டு துள்ளித் துள்ளி விழுகிற பிள்ளை, தான் செய்து மறைத்த குற்றத்தை அறிக்கையிடுகிறதுபோலிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்து என்று ஆணையிட்டுக் கேட்டபின்பு இவன் தன் வாயைத் திறக்கிறான். இந்த ஆணை அவனைப் பயப்படச் செய்த அளவு, அவன் செய்த களவு அவனைப் பயப்படுத்தவில்லை. ஒருவேளை, தளகர்த்தமுனிவர் "மகனே" என்று அவனை அழைத்துப் பட்சமாய்ப்பேசினதால் அவன் தனக்குத் தண்டனைவராமல் மன்னிப்புக் கிடைக்கலாமென்று எண்ணி, தான் செய்ததெல்லாவற்றையும் அறிக்கையிட்டிருக்கலாம். ஆகான் செய்த சாமர்த்தியம் அவன் செய்கையை அவனுக்கு விரோதமாய் உறுதிப்படுத்துகிறதாயிருக்கிறது. தான் திருடின பொருட்களைத் தந்திரமாய் ஆயிபட்டணத்திலிருந்து தன் கூடாரத்துக்குக் கொண்டுவந்ததுந்தவிர, அந்தப் பொன்னை இடைபார்த்து ஐம்பதுசேக்கல் நிறை என்றும், வெள்ளியை எண்ணி இருநூறு சேக்கல் என்றும் கண்டு தாராளமாய் அவைகளை அடக்கம்பண்ணியிருக்கிறான்; ஒருவேளை பரிசோதனைக்கு ஆள்வந்தால் கூடாரத்தின் மத்தியில் தோண்டமாட்டார்கள் என்று உத்தேசித்து ஆட்கள் தாராளமாய் நடந்து திரிகிற இடத்தில் புதைக்கிறான். ஆகான் புதைத்துவைத்ததை ஆண்டவர் தோண்டி எடுத்தார்; அவன் மறைத்ததை அவர் வெளியரங்கமாக்கினார். நாம் நமது பாவங்களை மறைக்கக்கூடாது; எவ்வளவுக்கு மறைக்கிறோமோ அவ்வளவுக்கு அது பகிரங்கமாக்கப்படும்.

ஆகான் சொன்னபிரகாரம் களவுப்பொருள் எல்லாம் அகப்பட்டது; அவை அனைத்தும் கர்த்தருடைய சமுகத்தில் வைக்கப்பட்டன. உடனே ஆகானையும், அவனுடைய திருட்டுப் பொருட்களையும் ஒரு பள்ளத்தாக்கிலே கொண்டுபோய் அவனைக் கல்லெறியவும், அவன் பொருட்கள் அனைத்தையும் அவன் மக்களையும் நாசம்பண்ணவும் தீர்மானஞ்செய்தார்கள்.

ஆகானே! நீ கொலைக்களத்துக்குப் போகிறாய், நீ திருடினவைகளில் ஒன்றும் உன்னைத் தற்காக்கவில்லை; அந்த நேர்த்

தியான சால்வை உன் பாவத்தை மூடும் என்று நினைத்தாய்; அது மூடவில்லை; நித்திய நரகத்தின் அக்கினி சுவாலையை அங்கியாக அணியும்படியாகவா அந்த பாபிலோன் சால்வையை எடுத்தாய்? பாபிலோனிலிருந்து உனக்கென்ன சகாயமுண்டு? எல்லாரும் தங்கள் சாலை அறையின் மத்தியில் புஷ்பக்கொத்துகளை வைத்துக் கண்குளிரப் பார்த்து நாசி குளிர அதின் மணத்தை உட்கொள்ளுவார்கள்; நீ உன் கூடாரத்தின் மத்தியில் வெள்ளியையும் பொன்னையும் புதைத்து அதின் விலையாகிய மணத்தை மனதில் மோந்து திரிந்தாய்; உனக்கு அது பொன்னாகவும் வெள்ளியாகவும் இருந்தது, ஆனால் அதனுள்ளிருந்த சாபத்தின் வாசனையை உன் மூக்கு முகரக்கூடாமல் போயிற்று; அதோடு ஆயிபட்டணத்திலே முப்பத்தாறு பிரேதங்களின் நாற்றமும் கூடவருகிறதென்பதை நீ அறியவில்லை. முப்பத்தாறு வீரரின் மரணத்துக்குக் காரணமாயிருந்த நீ உயிரோடிருப்பது நியாயமா? இனி உனக்கு யாதொருமீட்புமில்லை; ஆனால் உன்னைப்போலொத்த திருடர் பலர் எக்காலத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் உன் நடபடிக்கைகளால் எச்சரிப்படைவதற்கு நீ ஒரு ஞாபகஸ்தம்பமானாய். சகல திருடரும், பரிசுத்தமானவைகளைக் கொள்ளையிடுகிற சகல கள்ளரும் உன் சரித்திரத்தைக் கேட்டு பயந்து தங்கள் களவிலிருந்து ஓயும்படி கடவுள் கிருபைசெய்வாராக.

ஆகானைக் கொலைசெய்யும்படி குறிக்கப்பட்ட இடத்துக்கு வந்தவுடனே அவனை நடுவே நிறுத்தி, சபை அனைத்தும் சூழ நின்றார்கள். அப்பொழுது தளகர்த்தமுனி "நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார்" என்றார். அது அவனை மரணாக்கினை செய்யும்படிச் சொல்லும் கட்டளையாக இருந்தது. உடனே இஸ்ரவேலர் எல்லாரும் அவன்மேல் கல்லெறிந்தார்கள்; அவன் மாண்டான்.

## GIDEON.

## கிதேயோன்.

தேவன் தமது சபையைக் காக்கிறதும் நடத்துகிறதும் ஒருபோதும் முடிவடைகிறதில்லை; சூரியன் மாறிமாறி உதித்து அன்றன்று உண்டாகும் இரவை ஓயாமல் நீக்கிக்கொண்டு வருகிறதுபோலவே தேவ நடத்துதல்களும் அவருடைய சபையின் சம்பந்தமாயும், அவருடைய புத்திரரின் விஷயமாயும் விளங்கி வருகிறதென்று சொல்லவேண்டியது.



கர்த்தருடைய பணிவிடைக்காரனாகிய மோசேமுனிவரும் அவருக்குப் பின்வந்த தளகர்த்தமுனிவரும் மரணமடைந்த பின்பு இஸ்ரவேலர் சிலகாலம் தேவனை உறுதியாய்ப் பிடித்து அவருடைய பிரமாணங்களின்படி நடந்துவந்தார்கள். அந்தத் தலைமுறை மரணதூதனால் மறுலோகத்துக்கு துரத்தப்பட்டு அத்திசையெல்லாம் புதுச் சந்ததி தோன்றின காலத்தில் மெய்த் தேவவணக்கமும் பக்தியும் வரவரக் குறைந்துபோயிற்று. இதனால் அந்தந்த தலைமுறையில் எழும்புகிறவர்கள் தங்களால் சத்தியமார்க்கமும், சுத்தவணக்கமும் ஜனங்களுக்குள் குறைந்துபோகாமல் அதிகரிக்கும்படி கவனமாய் இருக்கவேண்டும் என்பது வெளியாகிறது.

இஸ்ரவேலரைப்போல தேவ சகாயத்தைப்பெற்று வாழ்ந்தவர்களுமில்லை; அவர்களைப்போல தேவனை அசட்டைசெய்து தாழ்ந்தவர்களுமில்லையென்று சொல்லவேண்டியது. ஒரு காலத்தில் இஸ்ரவேலர் சுமார் நாற்பதுவருஷகாலமாக கடவுளை உத்தமமாய் வழிப்பட்டு அவருடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்து வந்தார்கள். அக்காலத்தில் பெரிய பட்டணங்களைக் கட்டி பேரீந்து மரச்சோலைகளிலும், பட்டணத்து ஒலிமுகவாசல்களிலும் பஞ்சாயம்பண்ணி வழக்குத்தீர்த்துவந்தார்கள்; அவர்களிலுள்ள பிரபுக்கள் வெண் கழுதைவாகனமேறித் திரிவார்கள்; அக்காலத்தில் கல்வியும் அதிக விருத்தியானதால் ஸ்திரீகள் முதலாய் கவிச்சக்கரவர்த்திகளாய் விளங்கினார்கள்; தொளாயிரம் இருப்பு இரதங்களோடும் எண்ணிறந்த யுத்தவீரரோடும் வந்த பகைஞரை முயல்கூட்டங்களைத் துரத்துகிறதுபோல துரத்திவிட்டார்கள்; குடித்தனப்பெண் கொலுமண்டபத்திலிருக்கும் பராக்கிரமவீரனுடைய நெற்றியில் இரும்பாணியைக் கடாவி தரையோடு அடிக்க தைரியமுள்ளவளாயிருந்தாள்; நாடும், நகரமும், தேசமும், தெருவீதியும் செல்வம் பொழிந்தது; அக்காலத்தில் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டால் பாலும் வெண்ணெயும் கொடுக்கக்கூடியகாலமாய் இருந்தது. சாதாரண வீட்டில் ராஜாக்கள் வீட்டுக் கிண்ணிபோலொத்த சாமான்கள் வழங்கப்பட்டுவந்தது; மெய்யாகவே இஸ்ரவேலர் மெய்த்தேவனை உறுதியாய் வழிப்பட்டகாலத்தில் தேவன் அவர்களை இப்படி ஆசீர்வதித்துவந்தார்.

இவ்வளவு வாழ்வைக்கண்ட இஸ்ரவேலர் அதைக் காத்துக்

கொள்ள இயலாதவர்களாய் இருந்தார்கள்; தங்களுக்கு இவ்வளவு ஆசீர்வாதங்களை அருளின தேவனை மறந்து, அவருக்கு விரோதமாய் இரண்டகம்பண்ணும்படி மறுபடியும் தலைப்பட்டார்கள்.

கிதேயோன்காலத்து இஸ்ரவேலர் விக்கிரகதேவர்களை நாடி அவர்களுக்குப் பீடம்போட்டு, தோப்புவைத்து விக்கிராராதனை செய்துவந்தார்கள். ஐயோ! தேவனுடைய பீடத்துக்கு வரவேண்டிய பொன்னும், வெள்ளியும், தானியங்களும், எண்ணெயும் விக்கிரகங்களுக்கு முன் படைக்கப்பட்டால் தேவனுடைய விஷயங்களும், ஊழியங்களும் எவ்வளவாய் கஷ்டப்படுமென்று சொல்லவேண்டியது.

அக்காலத்து விக்கிராராதனைக்கு கிதேயோனுடைய தகப்பனே தலைவனாய் இருந்தான். அவன் தன் குடும்பத்துக்கென்றும் மற்றவர்களுக்கென்றும் ஒரு பீடம்போட்டு, அதைச் சுற்றிலும் ஒரு தோப்பையுண்டாக்கி பாகாலுக்கு விக்கிராராதனை செய்துவந்தான். தகப்பனுடைய விக்கிராராதனையை மகனைக்கொண்டு அழிக்கவும், தகப்பனுடைய ஆசாரியத்தால் அத்திசையிலுண்டான நஷ்டத்தை அவனுடைய மகனைக்கொண்டு அகற்றிவிடவும் தேவன் சித்தங்கொண்டார். அத்திசை ஜனங்கள் கிதேயோனுடைய விக்கிரகத் தோப்பைப் பின்பற்றிப்போனபடியால் தமது விசேஷித்த பராமரிப்பை மறுபடியும் ஒருதரம் அவர்களைவிட்டு விலக்கினார். இஸ்ரவேலருடைய சத்துருக்களும் இதை நன்றாய் அறிந்திருந்தார்கள். தேவனுடைய நடத்துதல் பிசாசுக்கும் கொஞ்சம் தெரியும்; ஆனால் மனுஷன் அதைக் கண்டுபிடியாதபடிக்கும் உணர்ந்துகொள்ளாதபடிக்கும் சாத்தான் அவர்கள் புத்தியின் கண்களைக் குருடாக்கிப்போடுகிறான்.

அக்காலத்திலிருந்த இஸ்ரவேலரின் விக்கிராராதனையைத் தொட்டு தேவன் அவர்களை மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார். அந்த மீதியானியர் கொடிய சத்துருக்களாயிருந்தார்கள்; அவர்களுடைய அழும்புகளும், துன்பங்களும் பொறுக்கமாட்டாமல் குடிகள் வீடுவிட்டு காடுபோய் சஞ்சரிக்கவும், மலைகளையும், கெபிகளையும், குகைகளையும், அரணான பட்டணங்களையும் அடைக்கலங்களாக்கிக்கொள்ளவும் நேரிட்டது. மேலும் இஸ்ரவேலருடைய சொத்தெல்லாம் மீதியானியருடைய சொத்துப்போல் கையாட்சிசெய்யப்பட்டது. இஸ்ரவேலர் அந்தந்த பருவகாலத்தில் வெட்டி, உழுது, பயிரேற்றி, நீர்ப்பாய்ச்சி, களைபிடுங்கி, பலன்கண்டு நாளை பின்னை



அறுக்கலாம் என்றிருக்கையில் இந்தக் கொள்ளைக்காரர் இராக்கொண்டே விளைந்த பயிரை அறுத்துக்கொண்டுபோய்விடுவார்கள்; அந்தத் திருடர் தந்திரமாயல்ல, தீவட்டிக்கொள்ளைக்காரர்போல் கும்பல்கும்பலாய்த் திரண்டுவந்து இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதேபோவார்கள். இவ்வளவு சங்கடங்கள் நேரிட்டகாலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். இஸ்ரவேலருக்கு அழுகிறசாஸ்திரம்மாத்திரம் நன்றாகத் தெரியும்போலிருக்கிறது. இவர்கள் தங்கள் துன்பங்களுக்கு தங்களுடைய விக்கிராராதனையே காரணம் என்று உணரவில்லை, அறிக்கையிடவுமில்லை; தங்கள் ஆபத்திநிமித்தம் கர்த்தரைநோக்கி முறையிடமாத்திரம் சறுக்கவில்லை. இது மனுஷனுடைய இயல்பான சுபாவம். உபத்திரவம் வந்துவிட்டால் அழத்தெரியும், ஆனால் மெய்த்தேவனை உத்தமமாய்த் தொழத் தெரியாது.

மனுஷன் எவ்வளவு பாவம் செய்தாலும், அவனுடைய அழும் சத்தம் கேட்டவுடனே கடவுள் இரங்கிவிடுகிறார். மனுஷனுடைய கண்ணீர் நியாயாசனத்திலிருந்து கிருபாநதி புறப்படச்செய்யும்படி ஆண்டவரைத் திருப்பிவிடுகிறது. அவர் இயல்பிலே கிருபாசமுத்திரம்; அதோடு அழும் பாவியின் கண்ணீர்ஜலமும் கூடிப்பெருகி அவரைக் குளிரப்பண்ணுகிறதாகும். ஆ! பாவியின் கண்ணீர் வியாகுல காந்தியால் பரிணமிக்கப்பட்டு தேவனுடைய திருமுகத்தின் முன் சுகந்தவாசனையாக கடந்துபோகும்போது அவர் நேசபாசத்தால் மயங்கி அழும்பாவிக்கு அருளவேண்டிய சகாயங்களை அருளுகிறாராகும். தேவன் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி அவர்களுடைய விக்கிராராதனையை அவர்களுக்கு உணர்த்தினார். அது அக்காலத்தாருக்கு நல்லுணர்ச்சியை உண்டாக்கியிருக்கவேண்டியது; ஆனால் அந்த உணர்ச்சி மெய் உணர்ச்சி என்பதை அவர்கள் தங்கள் செய்கைகளால் வெளிப்படுத்தவில்லை.

அதற்குப் பின்பு கர்த்தருடைய தூதனானவர் ஒருநாள் கிதேயோனுக்குத் தரிசனமானார். அதன் வரலாறு என்னவென்றால், ஒருநாள் கிதேயோன் தன் வயல்வெளியிலே போரடித்துக்கொண்டிருந்தான். மீதியானியர் எங்கே கொள்ளையிட்டுக்கொண்டுபோகிறார்களோ என்று பயந்து பயிரை அறுத்தவுடனே போரடித்து அகப்படுகிறதை பந்தோபஸ்துசெய்துகொள்ளுவது புத்தி என்று நினைத்தான்போலிருக்கிறது. அவன்

இயல்பிலே வீரனாய் இருந்ததுமன்றி பல வேலையாட்களையும் உடையவனாயிருந்தான். அவன் வீடும், பண்ணையும் அந்த ஊரில் முக்கியமானதாய்த்தான் இருந்தது. சத்துருக்கள் தன் தானியத்தைக் கொள்ளையிடவந்தால் ஒருகை பார்க்கலாம் என்ற எண்ணமும் மனதில் இருந்தது என்று சொல்லவேண்டியது. கர்த்தருடைய தூதன் அவனுக்குத் தரிசனமாகி

பராக்கிரமசாலியே!
கர்த்தர் உன்னோடிருக்கிறார்

என்று வாழ்த்தினார்.

இவன் பிறந்தநாள்மட்டும் இவ்வளவு மங்களமான வார்த்தைகளை அவன் கேட்டதே இல்லை. இந்த வார்த்தைகள் முன்னிருந்த பலத்தோடு அதிக பலத்தைக் கொடுத்தது என்று சொல்லவேண்டியது. தேவன் தமது பலத்தை வார்த்தையின் வழியாயும், வஸ்திரத்தின்மூலமாயும், கண்திஷ்டிவழியாயும் அனுப்புகிறவராய் இருக்கிறார். கிதெயோன் அந்த மங்களவார்த்தையைக் கேட்டு மகிழ்ந்துவிடவில்லை; தூதன் அவனைப் புகழ்ந்து வாழ்த்தும்போது அவன் தன்னை இகழ்ந்து தாழ்த்தினான். அவன் சொல்லுவான்: ஆ! என் ஆண்டவனே! கர்த்தர் எங்களோடிருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? எங்கள் பிதாக்களை அனந்தம் அற்புதக்கிரியைகளால் ஆதரித்த தேவன் அடியாரைக் கைவிட்டதுபோலிருக்கிறது; இப்போது எங்களை மீதியானியர் கையில் ஒப்புக்கொடுத்துப்போட்டாரே என்று சொன்னான். இவன் சொல்லுகிறதைப் பார்த்தால் அவன் அச்சமயத்தில் போர் அடிக்கிற வேலையிலிருந்தாலும் மனம் மீதியானியர் செய்த நிஷ்டூரங்களின்மேலே தியானமாகி, தேவநடத்துதல்களை தங்களுடைய கஷ்டநஷ்டங்களோடு ஒத்துப்பார்த்து தியானிக்கிற வேலையில் இருந்தான் என்று தோன்றுகிறது. ஆகவே இவன் தேசாபிமானியும் மதாபிமானியுமாய் இருந்தான் என்று சொல்லவேண்டியது. அப்பொழுது கர்த்தர் அவனைநோக்கி, உனக்கு இருக்கிற இந்தபலத்தோடே போ; நீ இஸ்ரவேலரை மீதியானியரின் கைகளிலிருந்து இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவன் நான் என்று சொன்னார். இந்த வார்த்தைகள் கிதெயோனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது; நாமேது இஸ்ரவேலரை இரட்சிப்பதேது என்று அவன் தனக்குள் சிந்தித்து, சுவாமி!

என் குடும்பம் மிகவும் எளியது,
நான் எல்லாரிலும் சிறியவன்;

என்றால் இவ்வளவு பெரியகாரியம் எப்படி நிறைவேறும் என்று



கேட்டான். அவிசுவாசத்தினால் அல்ல, ஆச்சரியத்தினால் கேட்டான். போகப் பிரியமில்லாமல் கேட்கவில்லை; தன்னை தைரியப்படுத்திக்கொள்ளும்படியாகக் கேட்டான். அப்போது கர்த்தர்:—

"நான் உன்னோடேகூட இருக்கிறேன்;
ஒரே மனுஷனை முறியடிப்பதுபோல
நீ மீதியானியரை முறியடிப்பாய்"

என்றார். இந்தத் தரிசனையை கிதெயோனுக்கு அருளிச்செய்ததால் கிதெயோனை மீதியானியர் அனைத்தையும் பீறிப்போடும் சிங்கமாக்கினார். தேவன் தம்முடைய பெரிய வேலைகளுக்கு உதவாதவர்களும் அற்பருமானவர்களை நியமிக்கிறார். உலகத்தில் தேவகாரியங்கள் நடக்கிறதென்பதை பூலோகம் அறிந்துகொள்ளட்டும் என்கிறதற்காகத்தான். தான் என்கிற எண்ணம் மனுஷனுக்கு மிச்சமாய் இருக்கிறது. அநேகர் நான் இல்லாவிட்டால் இது முடியுமா, அது கைகூடுமா என்று தங்களை உயர்த்திக்கொள்ளுகிறதுண்டு. ஆ! தற்பெருமைக்காரனே, கேள்; உன்னால் முடிந்தவேலையிலும் உயர்ந்த வேலையை தேவன் உன் வேலைக்காரனைக்கொண்டு முடித்துக்கொள்ள சக்தி உண்டு; இனி ஒருநாளும் நான் என்று பேசாதே.

இவ்வளவும் கேட்டவுடனே கிதெயோனுக்கு வைதீகபெருமை வந்துவிட்டது. அவன் தேவனோடு சகஜமாய் சம்பாஷிக்கத் தொடங்கினான். ஆம்! தேவதரிசனம் தேவனோடு உறவாடி வழக்கிட்டு, கெஞ்சி, நியாயம்பேசும் அந்நியோந்நியத்தால் பிறக்கும் வைதீகபெருமையை பக்தனுக்குக் கொடுக்கிறது; அது பாதகமில்லை. அந்த பக்திநிலையில் தன்னைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்தான்.

கிதெயோன் தன்னுடனே பேசுகிறவர் மெய்த்தேவனாகிய யேகோவாதானோ அல்லவோ என்பதை ஒரு அடையாளத்தின் மூலமாகத் திட்டமாய் அறிந்துகொள்ளுவது நலமென்று உத்தேசித்து, "நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையைக் கொண்டுவந்து உமக்கு முன்பாக வைக்குமளவும் இவ்விடம்விட்டுப் போகாதிருப்பீராக" என்று மன்றாடினான். அப்பொழுது கர்த்தர் அப்படியே ஆகட்டுமென்று உட்கார்ந்திருந்தார். ஆ, தேவனே! இப்போது நீர் மனுஷன் கீறும் கோட்டுக்குள் நிற்கிறதுபோல என் மனதில் படுகிறது; கிதெயோன் உம்மைக் கனவீனப்படுத்தவில்லை; இப்படி தன்னைப் பலப்படுத்திக்கொள்ளுகிறான்; நீரும் அவன் பெலவீனமும் சமுசயமும் தீருமட்டும் உட்கார்ந்திருக்கிறீர். மாம்சசிந்தைக்கு இது சற்று விகட

மாய்த் தோன்றினாலும் என் ஆவிக்கு எவ்வளவேனும் விகர்ப்பமாய்க் காணப்படுகிறதில்லை.

கிதேயோன் உடனே ஓடிப்போய் ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும், புளிப்பில்லா அப்பங்களையும், ஆக்கின இறைச்சியையும், ஆணத்தையும் கொண்டுவந்து அவர் முன் படைத்தான். ஒருவேளை அந்த வெள்ளாட்டுக்குட்டியை அவருக்குமுன்பாக பலியிட்டு, அப்பங்களையும் ஆக்கின இறைச்சியையும் ஆணத்தையும் அவர்முன் படைத்திருக்கலாம். கிதேயோன் படைத்த பலி பதார்த்தங்களை சமீபத்திலிருந்த ஒரு கற்பாறையில் வைக்கும்படிச் சொல்லி, அப்படி அவன் வைத்தபின்பு தமது கரத்திலிருந்த கோலால் அவைகளைத் தொட்டார். அப்பொழுது பாறையிலிருந்து அக்கினி எழும்பி இறைச்சியையும் புளிப்பில்லா அப்பத்தையும் பட்சித்தது. பலியைப் பட்சித்த அக்கினியின் புகையோடு கர்த்தரும் காணாதேபோனார். அவர் கற்பாறையிலிருந்து வானத்துக்கேறின கார்மேகமாகிய பலிப்புகையை தமது இரதமாக்கி பரலோகம் ஏறினார். கர்த்தர் மறைந்தவுடனே கிதேயோன் கலங்கி, நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய்க் கண்டேனே என்று சொன்னான். அப்பொழுது கர்த்தர்

"உனக்கு சமாதானம்
பயப்படாதே
நீ சாவதில்லை"

என்று திருவுளம்பற்றினார். இது ஆகாயத்திலிருந்து வந்த சத்தமாயிருக்கவேண்டியது. எப்போதும் தேவதரிசனை மனுஷனைப் பயப்படுத்துகிறது. ஆனால் தேவனோ தமது தரிசனைகளால் பாவிக்குச் சமாதானத்தையும், தைரியத்தையும், ஜீவனையும் தத்தம்பண்ணுகிறார். இந்தத் தேவதரிசனைப் பட்டப்பகலில் நடந்தது. கிதேயோன் அறுப்பின்மேலும், களத்தின்மேலும், தானியத்தின்மேலுமுள்ள சிந்தையை ஒழித்து தான் கண்ட தரிசனையின் மகிழ்ச்சியிலிருந்தான். தன் பலி பட்சிக்கப்பட்ட இடத்தில் கிதேயோன் உடனே ஒரு பலிபீடம் கட்டினான். தான்கண்ட தரிசனை அறைகுறைபோலவும், இன்னும் கண்டால் நல்லதாயிற்றே என்று விரும்புகிறதுமாயிருந்தது. கடவுள்காட்சி கடவுளை நெருங்கப்பண்ணும் பாசத்தை அதிகப்படுத்துமேயன்றி குறைக்காது. கிதேயோனுடைய ஆவலும் நிறைவேறிற்று. அவன் தான் பகலில் கண்ட காட்சி மயக்கத்தாலும், அதினாலுண்டான மகிழ்ச்சியின் மயக்கத்தாலும் அந்திநேரத்தின் துவக்கத்தில் படுத்துக்கொண்டான்போல்



இருக்கிறது. அவன் தன் களத்தோரமிருந்த மலையுச்சியின்மேல் நித்திரைபண்ணும்போது கடவுள் மறுபடியும் அவனுக்குத் தரிசனமாகி, அவனுக்கு மூன்று கட்டளைகளைக் கொடுத்தார். அவையாவன:—

1. உன் தகப்பனுடைய பலிபீடத்தைத் தகர்த்துப்போடு,
2. அதின் அருகே இருக்கிற தோப்பை வெட்டிப்போடு,
3. இந்தக் கற்பாறையுச்சியிலே ஒரு பலிபீடம்கட்டி பலியிடு

என்பதே. உடனே கிதேயோன் திடுக்கென்று விழித்து தன் வேலைக்காரரில் பத்துப்பேரைச் சேர்த்துக்கொண்டுபோய் தன் தகப்பனுடைய பலிபீடத்தை இடித்து, தோப்பையும் வெட்டி மலையுச்சியின்மேல் ஒரு புதுபீடம் கட்டினான். இவ்வளவும் இரவில் நடந்தது. பகலில் செய்தால் பல கலகங்களுக்கு இடமாகும் என்று இப்படி இரவில் செய்தான். அந்த மனுஷர் அதிகாலையில் விழித்துப்பார்க்கவே இதோ, பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டு, தோப்பும் வெட்டப்பட்டிருந்தது. இப்படிச் செய்தது யார், எவர் என்று விசாரிக்கையில் கிதேயோன் பேர் வெளிக்குவந்தது. அதினால் ஊர்முழுவதும் கலங்கிப்போயிற்று. கிதேயோனைக் கொலைசெய்யும்படி ஊர்திரண்டு அவன் வீட்டின் ஓரமாய் வந்துநின்றது. கிதேயோனே! உன்னதமானவர் உனக்குத் துணைநிற்கையில் ஊர் திரண்டாவதென்ன? உன்னைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகவேண்டுமென்று சொல்லுகிற ஜனங்களைக்கொண்டே தேவன் உன்னைக் கொலுமண்டபத்தில் ஏற்றப்போகிறார். உன் மகனை ஒப்புவிக்கிறாயா அல்லவா என்று ஊரார் எல்லாரும் தகப்பனை நெருக்கினார்கள். தகப்பனோ தன் மகனுக்காக எதிர்பட்டு, "நீங்களா பாகாலுக்காக வழக்காடுகிறீர்கள்? நீங்களா அதை இரட்சிப்பீர்கள்? அது தேவனானால் தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம் அது தானே தனக்காக வழக்காடட்டும்" என்று சொன்னான். அப்படிப் பேச அவனுக்கு பாத்தியமிருந்தது. ஏனெனில், அது துவக்கத்தில் அவனுடைய சொந்த பலிபீடமாயிருந்தது; மேலும் முந்தினநாள் இரவிலும் பகலிலும் நடந்த எல்லா வரலாறுகளையும் கிதேயோன் தன் தகப்பனுக்குச் சொல்லியிருப்பான். கிதேயோனுடைய தகப்பன் இவ்வளவும் பேசவே கூட்டம் கலைந்தது; வந்தவர்களெல்லாரும் ஆகா! வழக்குச் சரிதானே என்று தங்கள் மனதில் சொல்லிக்கொண்டார்கள். மேலும் பாகாலைப்பற்றிய மதிப்பும் பயமும் அதோடே அற்றுப்போயிற்று. மேலும் அதுமுதல் அந்த இடத்திலுள்ளவர்கள் கிதேயோன் கட்டின பலிபீடத்தில் பலிசெலுத்தி

தங்கள் பிதாக்களின் தேவனாகிய யேகோவாவைச் சேவித்து வந்தார்கள்.

கிதேயோனுடைய பக்திவைராக்கியத்தினால் அத்திசையிலுள்ளவர்கள் விக்கிரகவணக்கத்தை விட்டொழிந்து, மறுபடியும் தங்கள் பிதாக்களின் தேவனை உத்தமமாய்ச் சேவித்துவரும் காலத்தில் மீதியானியரும் அவர்களுடைய திருட்டுக் கூட்டாளிகளும் ஏகமாய்க்கூடி இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம் செய்யும்படியாக பிரயத்தனப்பட்டு ஒரு மைதானத்தில் வந்து கூடியிருந்தார்கள். இச்செய்தி கேட்டவுடனே கிதேயோன் தேவனுடைய ஆவியின் ஏவுதலாலும் பலத்தாலும் தலைவனாக ஏற்பட்டு, பல இடங்களுக்கும் செய்தியனுப்பி தான் மீதியானியருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப்போகிறதாயும் அந்தச் சேனையில்வந்து கூடிக்கொள்ள விரும்புகிறவர்கள் எல்லாரும் புறப்பட்டுவரலாமென்றும் நாடெங்கும் விளம்பரமடித்தான். இம்மட்டும் தகுந்த தலைவனில்லாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த சகல ஜனங்களும் தேசத்தின் பொது நன்மையை விரும்பி அவனுடைய சேனையோடு கூடிக்கொண்டார்கள்.

சேனை கூட்டப்பட்டவுடனே தனக்கும் தன் சேனைக்கும் சத்துவமுண்டாகவும், இந்தப் பிரயத்தனம் கிதேயோனுடைய சுயபுத்தியின்படியல்ல, தேவசித்தத்தின்படி நடத்தப்படுகிறதென்றும் இதின் முடிவு ஜெயமாயிருக்கும் என்றும் தேசமெங்கும் விளங்கும்படி கிதேயோன் ஆண்டவரிடத்தில் சில அடையாளங்களைக் கேட்டான். அவன் தேவனைநோக்கிக் கேட்பான்: ஆண்டவரே! என் கையால் இஸ்ரவேலருக்கு இரட்சிப்புவேண்டுமானால் இதோ நான் மயிருள்ள ஒருதோலைக் களத்திலேபோடுகிறேன்; பனி தோலின்மேல்மாத்திரம் பெய்து பூமியெல்லாம் காய்ந்திருந்தால் அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலரை என் கையினால் இரட்சிப்பீர் என்று அதினால் அறிவேன் என்றுசொன்னான்; அப்படியே ஆயிற்று. அவன் மறுநாள் காலையில் எழுந்திருந்து தோலைக் கசக்கி அதிலிருந்த பனிநீரை ஒரு கிண்ணத்தில் நிறையப் பிழிந்தான். மறுநாள் இரவில் அவன் இரண்டாந்தரம் தேவனை விண்ணப்பம்பண்ணி, தோல் மாத்திரம் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனிபெய்திருக்கவும் கட்டளையிடும் என்று கேட்டான். அப்படியும் நடந்தது. அதனால் தன் பிரயத்தனம் ஜெயமாய் முடியுமென்பதை கிதேயோனும் அவன் சேனையும் அறிந்துகொண்டன. இவ்விதமாய் கிதேயோன் நடந்துகொண்ட விஷயமானது கடவுளைப் பரீ



க்ஷைபார்க்கிறது என்று ஒருக்காலும் நினைக்கக்கூடாது. நாம் முன்சொன்னபடி இந்த அடையாளத்தால் தன்னையும் தன் சேனையையும் தைரியப்படுத்திக்கொள்ளவும், தன் பிரயத்தனத்தைத் தடுத்து ஜனங்களைக் கலைந்துபோகும்படிச்செய்த பலரை உணர்த்தி தேவசித்தத்தை நிறைவேற்றவும் இப்படி அடையாளங்கள் கேட்டானென்று சொல்லவேண்டியது.

மேலேசொல்லிய அடையாளங்களைக் கண்டவுடனே ஜனங்கள் ஏகமனமாய் கெம்பீரித்து யுத்தசந்நத்தராய்ச் சத்துருக்களுக்கு நேரே படையெடுத்துப்போய் தாமதித்திருந்த மைதானத்துக்குச் சமீபமாய் பாளயமிறங்கினார்கள். அன்றிரவு கர்த்தர் கிதேயோனுக்குத் தரிசனமளித்து, உன் சேனை அதிகமாயிருக்கிறது, நீ சத்துருவை ஜெயிக்க இவ்வளவு திரளானஜனம் தேவையில்லை, ஆதலால் சண்டைக்குப் பயப்படுகிறவனையெல்லாம் ஓடிப்போய்விடச்சொல்லு என்று சொன்னார். இஸ்ரவேலர் தங்களுடைய சுயவல்லமையினால் ஜெயங்கிடைத்ததென்று நினையாதபடிக்கும் சொல்லாதபடிக்கும் இப்படிக் கட்டளையிட்டார். தேவன் தமது மகிமையை எப்படியும் காத்துக்கொள்ளுகிறார் என்றும், அதை அவர் வேறொருவருக்கும் கொடுக்கிறதில்லை என்றும் இதினால் விளங்குகிறது. மறுநாள் அதிகாலையில் கிதேயோன் எக்காளமூதினான்; உடனே ஜனங்கள் யுத்தம் துவக்கிற்ருக்கும் என்று பயந்து ஒன்றுகூடினார்கள். அது யுத்தமல்ல. கிதேயோன் பயங்காளிகள் எல்லாரையும் போய்விடலாம் என்று கட்டளையிட்டான். உடனே இருபதினாயிரம் ஜனங்கள்போய்விட்டார்கள்; பதினாயிரம்பேர் மீதியாயிருந்தார்கள். இன்னும் தேவனுடைய பார்வைக்கு ஜனம் அதிகமாய் இருந்தது; ஆதலால் அவர் கிதேயோனை நோக்கி, நீ உன் சேனையை ஆற்றங்கரையோரத்திற்குக் கூட்டிப்போய், முழங்கால் ஊன்றி தண்ணீர்குடிக்கிறவர்களை நீக்கி, குனிந்து தண்ணீரை அள்ளிக்குடிக்கிறவர்களைமாத்திரம் உன்னோடு வைத்துக்கொள் என்று கட்டளையிட்டார். அவன் அப்படியே சோதனைசெய்ததில் முந்நூறுபேர்மாத்திரம் தேறினார்கள். அப்பொழுது கர்த்தர் இந்த முந்நூறுபேரே போதும், யுத்தத்தை ஆரம்பிக்கலாம் என்று உத்தரவுகொடுத்து, அந்த யுத்தத்தில் இன்னின்ன ஆயுதங்களை இன்னின்ன முறையாய் உபயோகிக்கவேண்டுமென்றும் கட்டளைகொடுத்தார். அந்தப்படி இந்த முந்நூறுபேர்தவிர மற்றவர்கள் எல்லாரும் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டார்கள்.

அன்று இராத்திரிவேளையே தேவன் மீதியானியருக்கு

விரோதமாய் யுத்தஞ்செய்யும்படிக் குறித்த நேரமாயிருந்தது. சேனையடங்கலும் ஆசோதையாய்த் தூங்கும்போது தேவன் கிதேயோனுக்குத் தரிசனமாகி, நீயும் ஒரு துணையாளுமாய் மீதியானியர் பாளயத்துக்கு மெதுவாய்ப்போய் அங்கே நடக்கிற பேச்சைக் கேள் என்று சொன்னார். அவன் அப்படியே போய் உபாயமாய்க் கவனித்துக்கொண்டிருக்கையில் மீதியானியரைச் சேர்ந்த ஒரு போர்ச்சேவகன் தன் தூக்கத்திலிருந்து திடுக்கென்று விழித்து தன் அருகிலிருந்த ஒருவனைக் கூப்பிட்டுச் சொல்லுவான்: "இதோ ஒருசொப்பனத்தைக் கண்டேன், சுட்டிருந்த ஒரு வாற்கோதுமை அப்பம் நம்முடைய பாளயத்துக்கு உருண்டுவந்து கூடாரத்தைக் கவிழ்த்துப் போட்டது; கூடாரம் விழுந்துவிட்டது" என்றான். அதைக் கேட்ட சேவகன், அப்படியா சொப்பனம்கண்டாய், நாம் கிதேயோனுடைய பட்டயத்துக்கு இரையாய்ப்போவோம் என்பதே அதின் கருத்து என்றான். பக்கத்திலிருந்த கிதேயோன் இவ்வளவையும் கேட்டவுடன் தைரியத்தின்மேல் தைரியமடைந்து தன்னுடைய பாளயத்துக்கு வந்து சேனையை எழுப்பி யுத்தத்துக்குப் புறப்படுங்கள், கர்த்தர் மீதியானியரை நமது கையில் ஒப்புக்கொடுத்தார் என்றான். உடனே ஜனங்கள் யுத்தசந்நத்தராய்ப் புறப்பட்டார்கள். கிதேயோன் யுத்தஞ்செய்யப்போன சமயத்தில் கொண்டுபோன ஆயுதங்கள் என்ன என்று கேட்பாயோ? அதின் பேரைக் கேட்டவுடனே நீ அதிசயப்படாமலிருக்கமாட்டாய். பெரும்பானையும், பிரகாசிக்கும் தீவட்டியும், கோணலான எக்காளமுமே அந்தச் சேனையின் ஆயுதமாயிருந்தது. இந்த ஆயுதத்தோடு சண்டைக்குப் போன ஒரு சேனை உலகத்திலிருந்ததென்று நீ கேள்விப்பட்டதுண்டா? இது கிதேயோனுடைய யுத்தமாயிராமல் தேவனுடைய யுத்தமாயிருந்தது. ஆதலால் தேவன் பானையையும், தீவட்டியையும், எக்காளத்தையுமே பிரயோகித்தார். அப்பானையை சட்டிப்பீரங்கியாகவும், தீவட்டியை துப்பாக்கியாகவும், எக்காளத்தை இராணுவ பேரிகைகளாகவும் வைத்துக்கொண்டு போகும் சேனையை யார்தான் ஆச்சரியமாய் நோக்கமாட்டார்கள்!

கிதேயோனும் அவன் ஜனமும் யுத்தத்துக்குப் புறப்பட்டுப் போகும்போது தன் முந்நூறுபேரையும் மூன்று பவுஞ்சாகப் பிரித்து ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும், ஒரு பானையையும், ஒரு தீவட்டியையும் கொடுத்து, நான் செய்வதைப்பார்த்து நீங்களும் அப்படியே செய்யுங்கள் என்று கட்டளையிட்டு தங்கள் சத்துருக்களை முப்பக்கத்திலும் சூழ்ந்துகொண்டார்கள். கிதேயோனும் அவன் ஜனமும் முதலாவது தங்கள் பானைகளை மடார் என்று உடைத்து தீவெட்டிகளை உயர்த்தி வெகு முழக்கமாய் ஊதினார்கள். அவன் செய்தது போல் எல்லாருஞ்செய்து தங்கள் சத்தத்தை உயர்த்தி கிதேயோன் கட்டளைகொடுத்திருந்தபடி

"கர்த்தருடைய பட்டயம்
கிதேயோனுடைய பட்டயம்"

என்று ஆர்ப்பரித்தார்கள். உடனே பாளயத்திலிருந்தவர்களெல்லாரும் மிரண்டு மனங்கலங்கி, புத்தி தடுமாறி தங்கள் சிநேகிதரையே சத்துருக்களாக எண்ணி ஒருவர்மேல் ஒருவர் விழுந்து வெட்டி, வேட்டைநாய்களுக்கு எட்டாமல் ஓடும் முயல்களைப்போல் ஓட்டம்பிடித்தார்கள். ஆ, இதெவ்வளவு விந்தையான யுத்தமாயிருக்கிறது! ஆம், கர்த்தருடைய யுத்தம் சத்துருக்களை முறியடிக்க வானத்து சேனையோடும் பூமியின் சேனையோடும் சர்வாயுதங்களோடும் புறப்படவேண்டியதில்லை. வெளிச்சத்தையும், மண்பானைகளையும், ஆட்டுக்கொம்பையும், மனுப்புத்திரரின் சத்தத்தையுங்கொண்டு பூலோகத்தை தமக்குமுன் ஓடும்படிச் செய்யக்கூடும்.

இந்த யுத்தம் ஆத்தும சத்துருக்களையும் அவர்களை ஜெயிப்பதையும் நமக்கு உணர்த்திக் காட்டுகிறதுபோலிருக்கிறது. நம்முடைய ஆத்துமாக்களைக் கெடுக்கும்படி பாளயம் இறங்கியிருக்கும் பாவங்களின் தொகையும், பசாசுக்களின் தொகையும், மீதியானியரின் சேனையின் தொகையிலும் அதிகமாய் இருக்கலாம். நாம் எப்போதும் நமது பாவங்களின் தொகையையும், நமது இருதயத்தின்மேல் ஆளுகைசெய்யும் சாத்தானின் வல்லமையின் பெருக்கத்தையும் பார்த்து கலங்கிப்போகிறதுண்டு. குணப்பட விரும்பும் அநேகர் என்னிடத்தில் கிரியைசெய்கிற பாவங்களின் தொகையிலும், என் சன்மார்க்கத்தின் தொகை அதிகப்படாவிட்டால் நான் அப்பாவங்களை மேற்கொள்ளமாட்டேன் என்று நினைத்துக்கொள்ளுகிறதுண்டு. "ஆயிரம் காகத்துக்கு ஒரு கல்" என்று ஒரு பழமொழியுண்டு. பதினாயிரம் பாவங்களைத் துரத்த ஒரு சன்மார்க்கம் போதுமானது. பாவத்துக்கு எதிர்த்துநிற்கிற குணமாத்திரம் உண்டானால் லேகியோன் கணக்கான பாவங்களையும் ஓடிப்போகச்செய்யலாம். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்று சத்தியசாஸ்திரம் அறிவிக்கிறது.

மீதியானியர் ஓடிப்போகிறதைக்கண்ட இஸ்ரவேலர் தைரியமடைந்து அவர்கள் போன போன திசையெல்லாம் அவர்களை வெட்டி நாசம்பண்ணினார்கள். வீடெங்கும் வெற்றிச்சொல் கேட்கப்பட்டது; நாடெங்கும் நடுக்கம் குறைந்தது; தேசமெங்கும் ஜெயகொடி எற்றப்பட்டது. இவ்வண்ணமாய் யேகோவா தமது ஜனங்களை கிதயோன் கையால் மீட்டார்.

கடைசியாக நாம் கிதயோனுடைய சரித்திரத்தைத் துக்கமான சில வரிகளோடே முடிக்கவேண்டியதாயிருக்கிறது. அவன் தன் சத்துருக்களிடத்தில் கொள்ளையிட்ட பொன் கடுக்கன்களையும், ஆரங்களையும், மணிகளையும் கொண்டுவந்து எபோத் என்று அழைக்கப்பட்ட ஒரு ஆசாரியச் சால்வையை உண்டாக்கினான். அது துவக்கத்தில் தேவனால் அவர்களுக்குக் கிடைத்த அற்புத ஜெயத்தை நினைவுகூரும் வெற்றிவிருதுபோல் எண்ணப்பட்டுவந்தது. கிதயோன் அதைத் தன் வீட்டிலோ அல்லது அதற்கென்று கட்டப்பட்ட வேறொரு இடத்திலோ தொங்கவைத்தான். அப்புறம் ஜனங்கள் தேவ சித்தத்தைக் கேட்கும்படி அவனிடத்தில் போனார்கள்போலிருக்கிறது. அவனை தேவதூதன் பலியிடும்படி சொன்னதை வைத்துக்கொண்டு அவன் தன் ஊரில் ஒரு சிறு ஆலயம்கட்டி இந்த உடுப்பையும் போட்டுக்கொண்டு பிற்காலத்தில் ஆசாரியனைப்போல பாராட்டினான் என்று சிலர் நினைக்கிறார்கள். எப்படியும் இந்த உடுப்பு கிதயோனுக்கும் அவனை நாடின ஜனத்துக்கும் தீமையாயிற்று. அந்த உடுப்பில் எதோ விசேஷித்த புண்ணியமும், மகத்துவமும் இருக்கிறதுபோல எண்ணினார்கள்; ஆதலால் அவர்கள் அனைவரும் இஸ்ரவேலின் தேவனைவிட்டு சோரம்போனார்கள். கிதயோன் வெற்றிவெறியால் செய்த பொன்னுடுப்பு அவனுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் கேட்டுக்கேதுவான கண்ணியாயிற்று. தேவனுடைய சபையை ஸ்திரப்படுத்துகிறவர்களாக ஒருகாலத்தில் இருக்கிறவர்களே இன்னொருகாலத்தில் அதைக் கெடுத்து நாசம்பண்ணிப்போடும் விசேஷித்த ஆட்களாயும் மாறிப்போகலாம். அவன் தன் பழையபாகால் விக்கிரகத்தை நாடாவிட்டாலும் ஒரு புது விக்கிரகத்தை இஸ்ரவேலில் ஸ்தாபித்தான். கிதயோன் நல்ல நரை வயதில் மரித்தான். அவன் மரித்தவுடனே இஸ்ரவேல்புத்திரர் மறுபடியும் பாகால்விக்கிரகத்தைப் பின்பற்றினார்கள். ஐயோ! மனுஷன் மெய்த்தேவனை விட்டு மருளவிழுகிறதற்கு ஒரு கணக்கில்லை.



# SAMSON.

## சடாமுனி.

(சிம்சோன்.)

இத்தேசத்தில் சடைவளர்ந்த பலரைப்பற்றிக் கேள்விப்பட்டும் அவர்களைக்கண்டும் இருப்போம். வேதாகமத்தில் கூறப்பட்ட ஒரு சடாமுனியைப்பற்றி நாம் இங்ஙனம் சில காரியங்களைப் பேசுவோம். இவருக்குச் சிம்சோன் என்று பேர். யூதமார்க்கத்தில் இப்படிச் சடைவளர்த்து, குறிக்கப்பட்ட சில கட்டுப்பாட்டுக்குள் இருக்கப்பட்டவர்கள் நசரேயர் என்று அழைக்கப்பட்டார்கள். நசரேயர் என்ற வார்த்தைக்கு பிரித்து வைக்கப்பட்டவர்கள் அல்லது துறவறத்தார் என்று அருத்தம் சொல்லலாம்.

இஸ்ரவேல்புத்திரர் தங்களுடைய பழைய வழக்கம்போல மெய்த்தேவனை மறந்து, அவருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள். மனுஷருடைய அக்கிரமத்தினிமித்தம் தேவன் சும்மாய் இருக்கிறதுமில்லை. அவர் இம்மையிலே அவர்களைப் பலவிதமான துன்பங்களினாலே தண்டித்து, அவர்கள் கடைசிமட்டும் குணப்படாத பட்சத்தில் மறு உலகத்திலும் தமது தண்டனையை நீடித்திருக்கச்செய்கிறார். அக்காலத்து இஸ்ரவேலரின் இவ்வுலகதண்டனையாவது நாற்பது வருஷமளவும் பெலிஸ்தியர்கைகளில் ஒப்புக்கொடுத்ததே. இந்த பெலிஸ்தியர் கானான்தேசத்தின் தென்மேற்பக்கத்தில் வாசம்பண்ணிவந்தார்கள். அக்காலத்தில் பெலிஸ்தியரைப்போல பேரெடுப்பான ஜாதியார் அத்திசைகளில் இருக்கவில்லை. சகலஜாதியின் கொடியும் பெலிஸ்தியரின் கொடியின்கீழ் பறக்கவேண்டுமென்பதே அவர்களுடைய எண்ணமாயிருந்தது. அவர்கள் வரவரக் கடலிலும் வல்லவர்களாகி வியாபாரத்துக்கும் வீரத்துவத்துக்கும் ஆதியில் பேர்பெற்றிருந்த தீருவையும் அதின் மகிமையிலிருந்து விழத்தள்ளிவிட்டார்கள். அந்தப் பெலிஸ்தியர்செய்த முக்கியமான வியாபாரம் அடிமைகளாக மற்ற ஜாதியாரை விற்பதுதான். இவ்விஷயத்தில் நாம் பெலிஸ்தியரைப் பேயெல்செபூலுக்கு ஒப்பிடலாம். பேயெல்செபூலுடைய விசேஷித்த

வியாபாரமென்ன? தேவனுடைய பிள்ளைகளைப் பொல்லாப்புச் செய்ய விற்றுப்போடுகிறதுதான் அல்லவா? இந்தப் பெரிய கிரியையை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். சுற்றிலுமிருந்த ஜாதியாரை இவர்கள் அடக்கின பின்பு சமாதானகாலங்களில் நடப்பதுபோல செல்வச்செருக்கினால் மகிழ்ந்து, கைத்தொழில் வேலைகளிலும் கட்டடமுயற்சியிலும் பேர்போனவர்களானார்கள். அவர்கள் சிறந்த பட்டணங்களைக் கட்ட விநோதமான யுத்த ஆயுதங்களைச் செய்து தங்களை மற்றவர்களுடைய பார்வைக்குப் பெரியவர்களாக்கினார்கள்.

சடாமுனி எழும்புகிறதற்கு முன்னே சுமார் 150 வருஷகாலமாக கானானின் தென்பாகத்திலிருந்த கோத்திரத்தார் அடிக்கடி பெலிஸ்தியருக்கு இரையானார்கள் என்று சொல்ல வேண்டியது. இடைக்கிடையே சிலர் எழும்பி சிலகாலம் விடுதலையையும் சகாயத்தையும் கட்டளையிட்டபோதிலும், சடாமுனியின் காலம்வரையும் பெலிஸ்தியர் சமூலமாய்க் கீழ்ப்படுத்தப்படவில்லை என்று சொல்லவேண்டியது. சடாமுனிவர் பெலிஸ்தியரை மடங்கடிக்கும் புலியாக இருந்தார். அவருடைய ஜநநவிஷயம் ஆச்சரியமானதென்பதை எவர்களும் ஒத்துக்கொள்ளுவார்கள். இவர் பிறக்கிறதற்குமுன் இஸ்ரவேலர் பெலிஸ்தியரால் அடைந்த இம்சைக்கு ஒரு கணக்கில்லை. அவர்கள் இஸ்ரவேலரை என்றென்றைக்கும் தங்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்திப்போடும்படி எண்ணங்கொண்டு சகல கைத்தொழிலையும் இஸ்ரவேலருக்குள்ளிருந்து ஓயப்பண்ணிவிட்டார்கள். அதினாலே இஸ்ரவேலர் தங்கள் வயல்களை உழும் கலப்பைக்கொழுவாவது, மாடு ஓட்டும் தாற்றுக்கோலாவது, தானியங்களை அறுக்கும் அறிவாள்களையாவது தங்கள் மட்டில் செய்துகொள்ளக்கூடாதவர்களாயிருந்தார்கள். ஆகவே சுமார் 350 வருஷங்களுக்கு முன் எவர்களாலும் பராக்கிரமர் என்று பேசிக்கொள்ளப்பட்ட இஸ்ரவேலர் எல்லாராலும் தாழ்த்தப்பட்டுப்போனார்கள். இது மனுஷரால் உண்டான தாழ்வாய் மாத்திரமிராமல் தேவனால் உண்டான தாழ்வாய் இருந்ததால், இவ்வளவு கொஞ்சக்காலத்துக்குள்ளாக இவ்வண்ணம் கெட்டு நொறுங்கிப்போனார்கள்.

இப்படிப்பட்ட கஷ்டகாலத்தில் சேரா என்னும் ஊரில் ஒரு சிறு குடும்பமிருந்தது; அது புருஷனும் மனைவியுமாத்திரம் அடங்கியதாயிருந்தது. அந்தப் புருஷனுக்கு மனோவா என்று பெயர். அவன் மனைவிக்கு ஆண்டவர் புத்திரபாக்கியத்தைக் கட்டளையிடவில்லை; அவள் மலடியாயிருந்தாள். தன் பெண்சாதி என்றென்றைக்கும் மலடி என்பது மனோவாவுக்குத் தெரியாதிருந்தது. அவர்கள் தங்கள் ஆசையால் தினந்தினம் கடவுளைப் பிரார்த்தித்துவந்தார்கள். ஒருநாள் வீட்டில் புருஷன் இல்லாதசமயத்தில் ஒரு சம்மனசு அந்த ஸ்திரீயினிடத்தில் வந்து "இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ ஒரு குமாரனைப் பெறுவாய்" என்று சொன்னார். ஒருவேளை அந்நேரத்தில் தனிமையாய்க் கடவுளைநோக்கி விண்ணப்பம் செய்துகொண்டிருக்கலாம். இந்தச்செய்தி பிள்ளைப்பாக்கியத்தின்மேல் பிரீதியாயிருந்த அவளுக்கு மட்டற்ற மனமகிழ்ச்சியைக்கொடுத்தது. தனக்கு தரிசனமான சம்மனசு அவ்வளவும் சொன்னதோடு போய்விடாமல், தன் கர்ப்பக்காலத்தில் அவள் நடந்துகொள்ளவேண்டியதற்கும், பிள்ளையைப் பெற்றபின்பு அதை வளர்க்கவேண்டியதற்குமுரிய சட்டங்களையும் சொன்னார். அதாவது, "நீ திராட்சரசமும் மதுபானமும் குடிக்கலாகாது, தீட்டானதொன்றும் புசிக்கவுங்கூடாது, உனக்குப் பிறக்கும் குமாரனுடைய தலையின்மேல் சவரகன் கத்தி படவுங்கூடாது; அவன் பிறந்ததுமுதல் நசரேயனாயிருப்பான்" என்று சொன்னார். அதோடுகூட அந்தப்பிள்ளை அவளுக்கென்று ஜநநமாகாமல் இஸ்ரவேல்ஜாதி முழுவதுக்குமுள்ள பொதுப்பிள்ளையாயிருக்கும் என்பதை உணர்த்தும்படி அவன் இஸ்ரவேலை பெலிஸ்தியர் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பான் என்றும் சொன்னார். தனக்குப் பிறக்கும் பாலனால் தன் சொந்த குடும்பத்துக்கு மாத்திரமல்ல, குலத்துக்கும் க்ஷேமம் உண்டாவது அப்பாலனைப் பெறும் தாய்க்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்குமல்லவா! சடாமுனி இஸ்ரவேல் குடும்பத்துக்கு மாத்திரம் தற்கால இரட்சகனாக வந்தான்; இயேசுகிறிஸ்துவோ சர்வலோகத்துக்கும் இரட்சகரான தேவபாலனாய்ப் பிறந்தார். மேலும் சடாமுனி இஸ்ரவேலரை இரட்சிக்கத் "தொடங்குவான்" என்று மாத்திரம் சொல்லப்பட்டது. வேறு அநேகர் அவனுக்குப்பின் எழும்பி அவன் தொடங்கியவேலையை முடிக்கவேண்டியதாயிருந்தது.

வெளியே போன புருஷன் வீட்டுக்கு வந்தவுடனே தான் கண்டகாட்சியின் வரலாறுகளை அவள் தன் புருஷனுக்குச் சொன்னாள். அதைக் கேட்டபுருஷன் அகமகிழ்ந்து, முன் காட்சியளித்த சம்மனசு மறுபடியும் ஒருதரம் அவ்விருவருமிருக்கையில் காட்சியளித்து திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். இது அவிசுவாசத்தினாலுண்

டான விண்ணப்பமாயிராமல் இருக்கிற விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளும்படியான விருப்பத்தால் உண்டான விண்ணப்பம் என்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. தேவன் மனோவாவின் சத்தத்துக்குச் செவிகொடுத்தார்; ஆனால் அவன் கேட்டபடியெல்லாம் அவர் இடங்கொடுக்கவில்லை. மனோவா என்பவன் தாங்கள் இருவரும் கூட இருக்கையில் தரிசனையளிக்க மன்றாடினான்; சம்மனசோ முன்போல அவன் மனைவிமாத்திரம் வயல்வெளியில் இருக்கும்போது தரிசனமானார். தேவன் நமது விண்ணப்பத்துக்குச் செவிகொடுத்தாலும் நமது விண்ணப்பத்தின்படியெல்லாம் செய்யமாட்டார். அவர் கர்த்தர்; அவர் தமக்குப் பிரியமானபடியெல்லாம் செய்வாராக! கர்த்தருடைய தூதன் வயல்வெளியில் தரிசனமானவுடனே அந்த ஸ்திரீ தன் புருஷனிடத்தில் ஓடி, முன்னே தனக்குத் தரிசனமானவரே மறுபடியும் வந்திருக்கிறார் என்று சொன்னாள். மனோவா சந்தோஷத்தோடே ஓடிவந்து அவரைத் தரிசித்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பிள்ளையைக்குறித்துக் கேட்கவேண்டியதையெல்லாம் கேட்டான். கடைசியாக அவருடைய நாமத்தையும் கேட்டான்; அப்போது கர்த்தருடைய தூதனானவர் "அது அதிசயம்" என்றார். இந்தப் பேரினால் மனோவாவுக்குக் காணப்பட்டவர் இன்னாரென்று திட்டமாய் விளங்குகிறது. உலகத்தில் அவதாரபுருஷனாய் அவதரிக்கிறவர் அதிசயம் என்ற பேரால் அழைக்கப்பட்டிருக்கிறார். அதிசயமானவர் செய்கிறகாரியங்களும், பேசுகிறகாரியங்களும் எல்லாம் அதிசயமானதாகவே இருக்குமல்லவா! மனோவா போசனபலியைக் கொண்டுவந்து அவருக்குச் செலுத்தினான்; அப்பொழுது அதிசயமானவருடைய அதிசயங்களில் ஒன்று விளங்கிற்று. அக்கினிச்சுவாலை வானத்துக்கு நேராக எழும்புகையில் கர்த்தருடைய தூதனானவர் அந்தப் புகைவாகனமேறி வானத்துக்குப் போக அவ்விருவரும்கண்டு, ஐயோ! ஆண்டவரைக் கண்டோம், நாம் செத்தாலும் சாவோம் என்று அஞ்சி முகங்குப்புறவிழுந்தார்கள். அப்பால் அந்தத் தூதன் அவர்களுக்குச் சொன்ன புத்திரபாக்கியவாக்கும், அவர்கள் செலுத்தின பலி அங்கிகரிக்கப்பட்டதும் அவர்களை அவர்களுடைய பயத்திலிருந்து விடுதலையாக்கிற்று என்று சொல்லவேண்டியது.

ஒரு பிராண உற்பத்திகாலத்திலே மனோவாவுக்கு ஒரு குமாரன் பிறந்தான். அவன் மனைவி பிள்ளைபெற்றது பட்டமரத்திலே பழம் உண்டானதுபோல் இருந்தது. பிறந்தபிள்ளைக்கு சிம்சோன் என்று பேரிட்டார்கள். சிம்சோனுடைய சிறு



பிராயத்தைப்பற்றி நமக்கொன்றும் தெரியாது. ஆனால் அவனுடைய தாய் கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபிரகாரம் அவனை வளர்த்துவந்தாள். அவன் தலையில் சவரகன்கத்தி படாததினாலே அது வளர்ந்து அவனுடைய முதுகுமட்டும் தொங்கிற்று. தூரத்தில் நின்றுபார்த்தால் ஒரு சிங்கம் புறப்படுகிறதுபோலவே இருக்கும். அவன் வாலிபமாயிருக்கையில் தாணின் பாளயத்தில் இருந்தான். இந்த இடம் பெலிஸ்தருடைய எல்லையோரமான ஒரு இடமாயிருந்தது. இதில் வரவர இஸ்ரவேலரின் பராக்கிரமர் வந்து தங்கி, தங்கள் தேசத்துக்குக் காவலாயிருந்தார்கள் என்று நினைக்கலாம். சடாமுனி அவர்களுடனே கூடிக்கொண்டான். தான் பிறந்த நோக்கம் பெலிஸ்தருடைய பெருமையை அடக்கவும், இஸ்ரவேலருடைய சிறுமையை நீக்கவும் என்று தேவனாலே உணர்த்தப்பட்டான். அவன் அந்தப் பாளயத்திலிருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத்துவக்கினார் என்று வாசிக்கிறோம். அந்த ஏவுதலினாலே சிம்சோன் அற்பசொற்ப விஷயங்களில் தன் பராக்கிரமத்தைக் காட்டியிருப்பான்போல் தோன்றுகிறது. நம்முடைய ஆத்துமசத்துருக்களை ஜெயிக்கும்படி தேவன் அடிக்கடி நம்மை ஏவுகிறவராக இருக்கிறார். அவருடைய ஏவுதலுக்கு நாம் இடங்கொடுக்கும்போது உன்னதபலம் மேன்மேலும் அருளப்படுகிறது; அப்பொழுது நாம் சிங்கத்தையும் காண்டாமிருகத்தையும் ஜெயித்து, வலுசர்ப்பத்தை மிதித்துப்போட வல்லமையுடையவர்களாய் இருப்போம்.

சிம்சோன் கலியாண மன்னனானபோது பெலிஸ்தியபெண்ணொன்றின்மேல் நாட்டம் கொண்டான். அது அவனுடைய பெற்றோருக்கு அவ்வளவு பிரியமாய் இருக்கவில்லை. ஆனாலும் அக்காலத்தில் பெலிஸ்தியர் ஆளும் ஜாதியாய் இருந்தபடியால் அதினால் உலகப்பிரகாரமாய் ஒரு நன்மை உண்டாகும் என்று அவர்கள் எண்ணி, சடாமுனி குறிப்பித்த பெண்ணையே பேசித் திட்டஞ்செய்தார்கள். நிச்சய தாம்பூலச் சடங்கு நிறைவேற்றும்படி அவன் தன் பெற்றோரோடே போகிறவழியில் தனக்கு எதிராகவருகிற ஒரு சிங்கத்தை சடாமுனிபிடித்து இரண்டாய்க் கிழித்து பக்கத்திலிருந்த பரும்புக்காட்டில் போட்டுவிட்டான். இதின் வரலாறு ஒன்றும் அவனுடைய பெற்றோருக்குத் தெரியாது; அவர்கள் ஒருவேளை முந்தி நடந்துபோயிருக்கலாம். சில மாதங்களுக்குப் பின்பு சடாமுனிக்குக் கலியாணம் நடந்தது. முகூர்த்தநாளில் பெண்வீட்டுக்குப் போகிறவழியில் தான் முன் ஒருகாலத்தில் கடுதாசி

யைப்போல் கிழித்தெறிந்த சிங்கத்தின் உடலைப் பார்ப்போம் என்று போனார்; போனபோது அதின் மாம்சமெல்லாம் ஆகாயத்துப் பறவைகளுக்கு இரையாகி எலும்புக்கூடுமாத்திரம் கிடக்கிறதையும், அந்த எலும்புக்கூட்டுக்குள் தேன்தட்டுகள் தொங்குவதையுங்கண்டு அகமகிழ்ந்து, தானும்தின்று தன் பெற்றோருக்கும் கொண்டுவந்து கொடுத்தான். ஆனால் இதின் வரலாறு ஒன்றையும் அவன் அவர்களுக்குச் சொல்லவில்லை.

முகூர்த்தநேரத்தில் சடாமுனியும் அவன் பெற்றோரும் பந்தலில் வீற்றிருந்தார்கள்; சகலருக்கும் சடாமுனி ஒரு அதிசயமாய்க் காணப்பட்டார்; அவருடைய வீரபராக்கிரமமானது அவர் முகரூபிலே விளங்கிற்று. அந்த ஊரார் இந்தச் சிங்கக்குட்டி மணவறையிலிருந்து எங்கே கெர்ச்சித்து நம்மெல்லாரையும் பீறிப்போடுமோ என்று பயந்து, வெளிக்கு கனம்பண்ணுகிற பாவனையாகவும் உள்ளுக்கு காவல்வைக்கிற பாவனையாகவும் முப்பது மாப்பிள்ளைத்தோழரை அவனுக்குக் கொடுத்தார்கள். அந்த முப்பதுதோழரும் சடாமுனியின் பணிவிடைக்காரர்போல நின்று அவரைச் சந்தோஷப்படுத்தி, அவரை அக்கம்பக்கம் போகவிடாமல் காபந்துபண்ணிக்கொண்டார்கள். மேலும் அக்காலவழக்கம்போல் பந்தலில் வீற்றிருக்கிறவர்கள் விடுகதைகளைப்போட்டுக் காலம்போக்குகிறதுமுண்டு. அவ்வழக்கம்போல் மாப்பிள்ளை தன் தோழன்மாரோடே ஒரு விடுகதைபோட்டுப் பந்தயம் கூறினார்.

பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும்
பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது

என்பதே அந்த விடுகதை. இந்த விடுகதையைச் சொன்னால் முப்பது துப்பட்டிகளையும், முப்பது மாற்றுவஸ்திரங்களையும் பந்தயமாகத் தருகிறேன், மற்றப்படி நீங்கள் அந்தப் பந்தயத்தைக் கட்டவேண்டுமென்று சொன்னார். விடுகதை சொல்லுமுன் அதின் அர்த்தத்தை இலேசாய்ச் சொல்லிப்போடலாம் என்றெண்ணின கள்ளமாப்பிள்ளைத்தோழர் அதைச் சொன்னவுடன் அசந்துபோய்விட்டார்கள்; ஆறு நாளாகியும் அதை விடுவிக்கக்கூடாதே போயிற்று. ஏழாம் நாளிலே அவர்கள் சடாமுனியின் மனைவியின்மூலமாய் விடுகதையின் அர்த்தத்தை அறிந்தாலன்றி வேறு வழியில்லையென்று கண்டு, அவளை பயப்படுத்தி, நீ எப்படியாவது உன் புருஷனை நயம்பண்ணி விடுகதையின் பொருளை வந்து எங்களுக்குச் சொன்னாலாச்சுது; மற்றப்படி உன்னையும் உன் தகப்பன்வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுவோம் என்றார்கள். அவள் பயந்து



போய் உபாயமாய் புருஷனை மன்றாடி, அதின் அர்த்தத்தை தன் புருஷனுடைய மாப்பிள்ளைத்தோழருடைய காதிலே ஓதினாள். இனி அவர்களுக்கு என்ன கவலை? அவர்கள் குறிக்கப்பட்ட நேரத்தில் வந்து

"தேனைப்பார்க்கிலும் மதுரமானதென்ன?
சிங்கத்தைப்பார்க்கிலும் பலமானதும் என்ன?"

என்றார்கள். உடனே சடாமுனி இது தன் மனைவியின்மூலமாய் பெலிஸ்தியருக்குத் தெரிந்துபோயிற்றென்று கண்டுகொண்டார். என்றாலும் அவர் முன்கூறின பந்தயத்தைக் கட்டும்படி பெலிஸ்தியரைச் சேர்ந்த அஸ்கலோன் பட்டணத்துக்குப் போய் கடவுளால் விசேஷ பலமடைந்து அவ்விடத்திலுள்ள முப்பதுபேரைக் கொன்று அவர்கள் வஸ்திரங்களை உரிந்து தன் தோழருக்குக் கொடுத்துவிட்டு, தன் மனைவியின் மேல் கோபமூண்டவராய்ப் புறப்பட்டு தன் வீட்டுக்குப் போய்விட்டார்; உடனே அவர் மாமன் தன் மகளைப் பந்தலிருந்த வேறொருவனுக்குப் பிடித்துக்கொடுத்து சடாமுனியை முற்றிலும் புறக்கணித்தான். இது சடாமுனிக்குத் தெரியாமலிருந்தது.

சிலநாள் பொறுத்து அவர் மறுபடியும் தன் மாமன் வீட்டுக்கு வரவே, தன் மனைவி பறிபோனாள் என்றுகண்டு உக்கிரகோபமூண்டு, இனி நான் பெலிஸ்தியருக்குப் பகிரங்கமாய் தனக்குள்ளே பொல்லாப்புச் செய்தாலும் அது நீதிதான் என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டுப்போய் முந்நூறு நரிகளைப்பிடித்து, பந்தங்களை எடுத்து வாலோடேவால்சேர்த்து ஜோடு ஜோடாகக்கட்டி தீக்கொளுத்தி, விளைந்து கிடந்த பெலிஸ்தருடைய வெள்ளாண்மைக்கூடே அந்த முந்நூறு நரிகளையும் மூலைக்குமூலைத் துரத்திவிட்டார். பந்தங்கள் சுட்டதால் நரிகள் கண்டகண்ட இடமெல்லாம் சீறி ஓடி பயிர்கள் அனைத்தையும் பாழாக்கிவிட்டன.

இது நடந்த சமயத்தில் நாம் கூட இருந்தால் எவ்வளவு சிரிப்புவரும்! முந்நூறு நரிகளின் ஊளைச்சத்தமானது ஊராரே வாருங்கள், உங்கள் பயிரை வந்து பாருங்கள் என்று பறைசாற்றுகிறதுபோலிருந்தது. பெலிஸ்தியர் கும்பல் கும்பலாய்ப் போய் இஸ்ரவேலருடைய பயிரை நாசம்பண்ணினதுபோக, சடாமுனி பெலிஸ்தருடைய நரிகளைக்கொண்டு அவர்கள் பயிரை நாசம்பண்ணிவிட்டார். சடாமுனிசெய்த விஷயமானது "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்ற பழமொழிக்கு இசைவாய் இருக்கிறது. இதின் காரணத்தைக் கண்ட

பெலிஸ்தியர் சடாமுனியின் மாமனையும், அந்தப் பெண்ணையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள். அதுமுதல் சடாமுனி பெலிஸ்தியஜாதிக்கு பகிரங்க விரோதியாகி அவர்களை சின்னாபின்னமாகச் சங்காரம்பண்ணிவந்தார். இதினாலே பெலிஸ்தியர் ஏகோபித்து எழும்பி யூதாவுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப்போனார்கள்; அவர்கள் உடனே பயந்து சமாதானத்துக்காக மன்றாடினார்கள். அப்போது பெலிஸ்தியர் எங்களுக்கு சடாமுனியை ஒப்புவித்துவிட்டால் அதே போதும் என்று சொன்னார்கள்; அப்படியே ஆகட்டுமென்று யூதாமனுஷர் அவரைத் தேடிப்பிடித்து கட்டிக்கொண்டுவந்தார்கள். இக்காலத்தில் பெலிஸ்தியருக்குண்டான மனமகிழ்ச்சிக்கு ஒரு கணக்கில்லை. சடாமுனி பெலிஸ்தியர் பாளயத்துக்குச் சமீபமாய் வரவே கர்த்தருடைய ஆவி அவர்மேல் இறங்கினதால் அவரைக் கட்டியிருந்த கயிறுகளை நெருப்பில் வெந்த நூல்போல் அவ்வளவு லேசாய் அறுத்துவிட்டு அட்டகாசம்பண்ணி, பக்கத்தில் கிடந்த ஒரு கழுதையின் தாடைஎலும்பை எடுத்து தன்னுடைய மனம்போல வீசி ஆயிரம் பெலிஸ்தியரை அதோகதியாக்கிவிட்டார். மற்றவர்கள் பிழைத்தோம், பிழைத்தோம் என்று ஓட்டம்பிடித்தார்கள். சடாமுனிசெய்த இந்த யுத்தத்தினால் அதிக தாகமடைந்து, நாவறண்டு கடவுளை நோக்கி மன்றாடினார்; உடனே ஆண்டவர் ஒரு ஊற்றை எழும்பப்பண்ணி முனிவரை தாகந்தீர்த்தார். இந்த ஜெயம் இலேசானதென்று நினைக்கக்கூடாது. இதோடு பெலிஸ்தியர் வெகுதூரம் அடங்கிவிட்டார்கள். இதுமுதல் சுமார் இருபதுவருஷகாலமாய் அவர்களால் யாதொரு தொல்லையும் நேரிடவில்லை. இஸ்ரவேலரும் தைரியமடைந்து சுயாதீனமடைகிறதற்கேற்ற பிரயத்தனங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். சடாமுனியை அவர்கள் தங்களுக்கு அதிபதிபோல் எண்ணிவந்தார்கள்.

சடாமுனியின் கடைசிக்காலத்தைக்குறித்து அவ்வளவு சந்தோஷமான செய்திகளைச் சொல்ல ஏதுவில்லை. பெலிஸ்தியரை மடங்கடித்துவிட்ட கர்வத்தினாலோ, தன் பராக்கிரமத்தின் ஆணுவத்தினாலோ அவர் சன்மார்க்கநெறி தவறினார். அவர் தேவனாலே கட்டளையிடப்பட்டிருந்த நசரேயப் பொருத்தனைகளைச் சரியாய்க் கைக்கொண்டுவரவில்லைபோல் தோன்றுகிறது. எப்படியும் அவர் காமக்குரோதநோயால் பிடிபட்டு பெலிஸ்தியநாட்டு ஒரு வேசியை அடுத்து தமது காலத்தைப் பின்னிட்டார். பெலிஸ்தியருடைய கண் எப்போதும் அவரை கருவறுக்க நோக்கமாகவே இருந்தது. அவர் காசா



நகரத்தில் வசித்த அந்த ஸ்திரீயிடம் தங்கியிருந்த ஒருநாள் இரவு பெலிஸ்தியர் கோட்டைவாசலைப் பூட்டி சத்துரு அகப்பட்டான், எப்படியும் விடியற்காலத்தில் பிடிக்கலாமென்றிருக்கையில், முனி இதை அறிந்து நடுஇராத்திரியில் எழுந்திருந்து கோட்டைவாசல்களை நிலையோடு பிடுங்கி பக்கத்திலிருந்த ஒரு மலைமேல் போட்டுவிட்டு தப்பியோடிப்போனார். கடைசியாக சடாமுனியைக் கைவசப்படுத்தி நிர்மூலமாக்க அவர் நேசிக்கும் வேசியைக்கொண்டே கிரியையை நடப்பிக்கவேண்டுமென்று கருதி, பெருந்தொகையான பணத்தை அவளுக்குப் பரிதானமாகப் பேசி சடாமுனியைத் தங்கள் கையில் ஒப்புவித்துவிடும்படிக் கேட்டார்கள். அவள் முனிவரை தன் நயவசனிப்பாலும், நளினத்தினாலும் பசப்பி, அவருடைய பராக்கிரமத்தின் அந்தரங்கம் என்னவென்று கேட்டாள். தங்கள் ஆத்துமாவையும் சரீரத்தையும் கர்த்தருக்குச் சமூலமாய் ஒப்புவிக்கிறவர்களுக்கு ஒரு ஞானபலன் உண்டு. அது எடுபட்டுப்போகுமட்டும் அவனை பக்திநிலையிலிருந்து அசைக்க எவராலும் கூடாது. சடாமுனி தமது வல்லமையின் இரகசியத்தை அவளுக்குச் சொல்ல மனமற்று பலவிதமாய் அவளை ஏமாற்றியும், கடைசியாக அதை வெளியிட்டுவிட்டார். வேசியின் நேசம்நிறைந்த உள்ளத்தில் தேவ இரகசியம் எப்படி நிலைநிற்கும்!

தமது தலைமயிரை வாங்கிப்போட்டால் பெலவீனனாகிப்போவேன் என்று முனிவர் சொன்னார்; தமக்கு அதினால் வரக்காத்திருக்கும் ஆபத்தை அவர் கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை. அந்த வேசி பல பிரயத்தனங்களில் ஏமாந்துபோனாலும் கடைசியாக இதில் ஜெயமடைந்தாள். அவள் முனிவரைத் தன் மடியிலே நித்திரைபண்ணச்செய்து அவர் சுகமாய்த் தூங்குகையில் ஒருவனை அழைத்து அவருடைய தலைமயிரிலுள்ள ஏழு சடைகளையும் சவரம்செய்தாள். அந்நிமிஷமே அவருடைய பெலன் குன்றிப்போயிற்று; அவருடைய பலம் அந்த ஏழு சடையிலும் இராமல், அவர் கடவுளுக்குச்செய்த பொருத்தனையிலிருந்தது. சடை விலக்கப்பட்டதால் பொருத்தனை கிறுக்கப்பட்டது; பொருத்தனை ரத்துபண்ணப்பட்டதோடு அதின் மூலமாய் அருளப்பட்டிருந்த தெய்வபலமும் நீங்கிப்போயிற்று. எல்லாம் முடிந்தபின்பு சடாமுனியே, சத்துருக்கள் வந்துவிட்டார்கள் என்றாள். முனிவர் முன்போல் திடும்பிரவேசமாய் எழுந்திருக்கப்பார்த்தும் முடியாமல் பெலிஸ்தியர் வசமானார். "வேசியின் வழிகள் மரணத்துக்கேதுவானவைகள்" என்று ஒரு

பக்தன் சொல்வது சரிதான். வேசியை நம்புவதையும் நாடுவதையும் கண்டிக்கும்படி நம்முடைய தேசத்துப்புலவன் ஒருவன் சொன்னதைக் கேள்.

"வெம்புவாள் விழுவாள் பொய்யே
மேல்விழுந்தழுவாள் பொய்யே
தம்பலம் தின்பாள் பொய்யே
சாகிறேன் என்பாள் பொய்யே
அம்பிலும் கொடிய கண்ணாள்
ஆயிரம் சிந்தையாளை
நம்பின பேர்களெல்லாம்
நாயினுங் கடையாவாரே."

பெலிஸ்தியர் சடாமுனியைப் பிடித்து அவருடைய கண்களைப்பிடுங்கி வெண்கல விலங்கிட்டு காசாநகரத்துச் சிறைச்சாலையில்போட்டு மாவரைக்க வைத்துக்கொண்டிருந்தார்கள். பராக்கிரமவீரனான சிம்சோன் என்பவருடைய முடிவு ஞானப்பிரகாரமாய் அநேக பாவிகளுடைய முடிவுக்கு ஒப்பாயிருக்கிறது. ஒருகாலத்தில் தேவதாபக்தியில் சிறந்து விளங்கி, பசாசின் கோட்டைகளை அதம்பண்ணி, தங்களுக்கு விரோதமாய் எழும்பும் ஆசை இச்சைகளை சிலுவை தியானத்தால் மடக்கி வெற்றியடைந்த பலர், மறுபடியும் மாயவலையில் சிக்குண்டு சாத்தானுக்குச் சாங்கோபாங்கமாய்த் தங்களை ஒப்புவித்துவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மறுபடியும் இரட்சண்ய ஒளியால் புத்தியடைந்து உன்னத பலம்பெற்று தன்னை விட்டோடிப் போகாதபடி, சாத்தான் அவர்களின் புத்தியின் கண்களைக் குருடாக்கி அந்தகாரச் சங்கிலிகளால் கட்டி, பாவ பாதாளத்தின் மத்தியில் உருட்டிவிடுகிறான். அங்கே அவர்கள் தங்கள் பாவத்தையே பலகாரமாகத் தின்று பற்கடிக்கிற வேலையிலேயே தங்கள் காலத்தைக் கழிக்கிறார்கள்.

முனிவர் சிலகாலம் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் அடையும் இம்சையை அடைந்தார். பெலிஸ்தியருடைய பிராணசத்துரு பிடிபட்டது அந்த ஜாதிமுழுவதுக்கும் ஆனந்தமாயிருந்ததால் அதைப் பிரஸ்தாபத்தோடு கொண்டாடி, தங்கள் தேவனை ஸ்தோத்திரிக்கும்படியான எண்ணம் அவர்களுக்குண்டாயிற்று. உடனே அதற்கேற்ற முயற்சிகளைசெய்து ஒரு திருநாளைக் குறித்து அன்றையதினம் சடாமுனியைச் சிறைபிடித்த திருவிழா நாளாக ஆசரித்து தாகோனுக்குப் பலிகளையும் செலுத்தினார்கள்.

அன்றையதினம் அவர்கள் மனமகிழ்ச்சியாய் இருக்கும்



போது நமக்கு முன்பாக வேடிக்கைகாட்டும்படி சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்றார்கள். அவ்வண்ணம் அவர் சிறையிலிருந்து கைலாகு கொடுத்து கொண்டுவரப்பட்டார்; இதற்குள்ளாக அவருடைய தலைமயிர் கொஞ்சம் வளர்ந்திருந்தது. அதற்குத் தக்கதாக அவருக்குப் பெலனும் உண்டானது என்று சொல்லவேண்டியது. சடாமுனி பெலிஸ்திய பிரபுக்களுக்கு முன்பாக வெகு விந்தையாய் நடந்து, வேடிக்கை காட்டி எல்லாரையும் கைதட்டி நகைக்கும்படிச் செய்தார். சடாமுனிவரே! நீர் இந்தக் கோலமான காரணமென்ன? கழுதையின் தாடையெலும்பால் ஆயிரம்பேரை சங்காரஞ்செய்த நீர் இந்த வேஷமான காரணமென்ன? காசாவின் வெண்கலக் கதவுகளும் பலமான வடங்களும் உம்மைக்கட்ட இயலாமல் போன காலம்போக நீர் சிறுபிள்ளைபோல் வேடிக்கைக்காட்டி நிற்கும் காரணமென்ன? ஐயோ! வேசியின் விஷம் உம்மை மாற்றிவிட்டதல்லவா? பரஸ்திரீயின் பாஷாணம் உம்மைக் கெடுத்துவிட்டதல்லவா? ஆ! உமது விழுதலை நினைத்து மயங்கி கிடக்க வேண்டாம்; உன்னதத்தை நோக்கி ஓலமிடுவோருக்கு அங்கிருந்து க்ஷேமம் உண்டாகும் என்பதை அறிவேன்.

சடாமுனி வெகுநேரம் வேடிக்கை காட்டிக் களைத்து சற்றுநேரம் சாய்ந்து இளைப்பாறும்படி அக்கட்டடத்துத் தூணண்டை தம்மைக் கொண்டுபோகச் சொன்னார். இதினாலே சடாமுனி சற்று புஷ்டியுடையவராய் இருந்தார் என்று தோன்றுகிறது. முனிவர் தூண் அண்டைபோய் உட்கார்ந்து மாம்சகண் அற்றுப்போனாலும் மனக்கண்ணை வானத்துக்கு நேராக ஏறெடுத்தார். கூடிவர்திருந்த ஜனங்கள் எல்லாரும் ஐயோ! குருடன் நன்றாய் இளைப்பாறிக்கொள்ள, இன்னும் அதிக வேடிக்கைகளைப் பார்க்கலாம் என்று காத்திருந்தார்கள். அவரோ அந்நேரத்தில் கடவுளோடு ஜெபத்தியானத்தினால் சம்பாஷித்தார். அதைச் சத்துருக்கள் அறியவே இல்லை. கட்டடத்தில் சுமார் 3000 பேர் கூடியிருந்தார்கள். கடைசியாக சடாமுனிவர் அந்தக் கட்டடத்தைத் தாங்கியிருந்த இரண்டு தூண்களைத் தமது இரண்டு கைகளாலும் தழுவிக்கொண்டு கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, "கர்த்தராகிய ஆண்டவரே! நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தியர் கையிலே பழிவாங்கும்படிக்கு இந்த ஒருவிசைமாத்திரம் என்னை நினைத்தருளும்;"

"தேவனே! பலப்படுத்தும்"

என்று சொல்லி தன் மனதுக்குள் ஜெபித்துக்கொண்டு அந்த

இரண்டு தூண்களையும் பிடித்துக்கொண்டு, "என் ஜீவன் பெலிஸ்தியரோடேகூட மடியக்கடவது" என்று சொல்லி பலமாய் அசைக்க, அந்த மாளிகை இடிந்துவிழுந்து அனைவரும் மாண்டார்கள்; அவரும் மாண்டார். அவர் தமது ஜீவகாலமெல்லாம் கொன்ற பெலிஸ்தியர் தொகையைவிட சாகும்நாளில் கொன்றவர்கள் அதிகமாய் இருந்தார்கள். முனிவரின் பந்துக்கள் போய் அவருடைய உடலை எடுத்து தங்கள் பிதாக்களின் கல்லறையிலே அடக்கம்பண்ணினார்கள்.

எபிரெய நிருபத்தை எழுதின ஆகமக்காரன் சிம்சோனை விசுவாசிகள் வரிசையில் சேர்த்தெழுதுகிறார். சிம்சோன் பெலிஸ்தியர் கையிலிருந்து இஸ்ரவேலரை மீட்டுச் சுயாதீனப்படுத்தினார்; நம்முடைய மெய்யான சிம்சோனாகிய இயேசு கிறிஸ்து ஜீவகாலமெல்லாம் நாம் பேய்க்கு அடிமையாகி அவருடைய நித்திய சுதந்தரங்களுக்குப் புறம்பாக்கப்பட்டுப் போகாதபடி நம்மைத் தமது சிலுவையின் மரணத்தால் மீட்டு இரட்சித்தார்.

எங்களை மீட்ட இயேசுவே! உம்மைத் துதிக்கிறோம்.

## ELI.

## ஏலி.

பூர்வ பக்தாட்களின் வரலாறை நாம் கவனிக்குங்கால், அவைகள் ஒவ்வொன்றும் தம் தம் தன்மையில் வித்தியாசப்பட்டிருக்கிறதென்பதைக் காண்கிறோம். அச்சரித்திரங்களை நாம் பரிசோதிக்கையில் அவர்களில் இன்னார் பக்தர், இன்னார் துஷ்டர் என்று தீர்ப்புச்சொல்லுகிறவர்களைப்போல் இருக்கக்கூடாது; நம்முடைய கருத்தும் கவலையுமெல்லாம் அவரவரில் விளங்கிய நன்மைகளைப் பின்தொடர்ந்து தீமைகளை விலக்கிவிடுகிறதாகவே இருக்கவேண்டியது.

இவ்விடத்தில் சொல்லப்போகும் எலி என்பவரின் சரித்திரம் அநேக விஷயத்தில் விசேஷமானது. இவர் மோசேயின் காலத்தில் தேவனால் நியமிக்கப்பட்ட பிரதான ஆசாரியனுடைய வரிசையைச் சேர்ந்தவரல்ல. ஏனெனில் அது மூத்தகுமாரனின் குடும்பவரிசையாய் வந்தது; எலியோ



ஆரோனுடைய இளையகுமாரனாகிய இத்தாமார்வரிசையிலுள்ளவர். ஆரோனின் மூத்தகுமாரனாகிய எலியேசாரின் குடும்பத்தைவிட்டு பிரதான ஆசாரியத்துவம் இன்னவிதமாய்த்தாண்டி இத்தாமார் வரிசைக்கு வந்ததென்று சொல்லத் தெளிவான காரணங்களைக் காணோம். யூதரபிமார் இந்த மாறுதல் ஈப்தா என்னும் நியாயாதிபதியின் காலத்தில் உண்டாயிற்று என்று சொல்லுகிறார்கள். எப்படியும் இந்த மாறுதலால் இஸ்ரவேலில் மார்க்க சீர்திருத்தத்துக்குரிய ஒரு முயற்சி அந்தரங்கமாய் உண்டாயிற்றென்று தோன்றுகிறது. அதற்கு நாம் முன்சொன்ன சிம்சோனின் சரித்திரம் ஒரு திருஷ்டாந்தம் என்கலாம். சிம்சோன்காலத்திலுண்டான மார்க்க அபிமானத்தைவிட அவர் காலத்திலுண்டான தேசாபிமானம் அதிக சீக்கிரத்தில் விருத்தியாகிப் பலன்செய்ததென்று சொல்லவேண்டியது. சிம்சோன் தன் காலத்தில் சீலோவிலிருந்த கூடாரஆராதனையைச் சற்று முக்கியப்படுத்திவந்தார்போல் தோன்றுகிறது. சிம்சோனும் எலியும் ஏறக்குறைய ஏககாலத்தில் வாழ்ந்து, ஒருவர் ஆளுகைவிஷயத்தையும் இன்னொருவர் ஆலய விஷயத்தையும் நடத்திவந்தார்கள் என்று சொல்லலாம். சிம்சோனுடைய மரணத்துக்குப் பின்பு எலி ஆலய ஊழியத்தோடு ஆளுகை ஊழியத்தை ஏற்றுக்கொண்டு இஸ்ரவேலரை ஆண்டுவந்தார் என்று சொல்லவேண்டியது.

எலியின் பாலியப் பிராயத்தைப்பற்றியாவது, வாலிபப் பிராயத்தைப்பற்றியாவது நமக்கொன்றும் சொல்லப்படவில்லை. சிம்சோனுக்கு அடுத்து இவரை நியாயாதிபதியென்று சொல்லியிருப்பதால் இவர் தமது வாலிபப்பிராயத்தில் பராக்கிரமவீரனாயிருந்து, பெலிஸ்தியரை முறியடித்த பிரயத்தனங்களை நடத்தியிருந்தாலும் இருக்கலாம்; அல்லது சேனையோடு யுத்தகளத்துக்குப் போகாவிடினும் தேவஆவியால் தகுந்த ஆலோசனை கொடுத்து, அவ்வாலோசனைகளால் பெரும்பாலும் ஜெயம்கிடைத்ததைக் கண்டு இஸ்ரவேலர் அவரைத் தங்களுக்கு அதிபதியாக ஒப்புக்கொண்டு இருக்கலாம். எப்படியும் ஆளும் ஊழியத்தையும், ஆச்சாரிய ஊழியத்தையும் ஒன்றாய்ச் சேர்த்துப்பார்த்ததில் இவர்தான் முதல்வராயிருக்கிறார். இவர்காலத்தில் இஸ்ரவேலருக்குள்ளிருந்த விக்கிரகாராதனையும், வேசித்தனமும், மதுபானம்பண்ணுதலும் முற்றிலுமாய் அற்றுப்போகவில்லை. என்றாலும் தேவனை உத்தமமாய் நேசித்து அவருடைய சமுகத்தைத் தேடுகிற பக்தர் சிலர் அங்கங்கே இருந்தார்கள்.

எலி என்ற ஆசாரியன் தன் விருத்தாப்பியகாலத்தில் நமக்கு முன் கொண்டுவரப்படுகிறார். இவருக்கு ஒப்னி, பினெகாஸ் என்கிற இரண்டுமக்கள் இருந்தார்கள். இவர் தமது வயது சென்றகாலத்தில் தேவாலயக் கூடாரத்தையே தமது வீடாகப் பாவித்து எப்போதும் தியானத்திலும், ஜெபத்திலும் தமது நாட்களைப் பின்னிட்டார் என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஒருநாள் இவர் தேவசமுகத்தண்டை போகையில் ஒரு ஸ்திரீ அதிகநேரமாய் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கிறதைக் கண்டார். வெகுநேரமாகியும் அவளுடைய பிரார்த்தனை முடியாததையும், அவள் வாதாடும் பாவனையாய்ப் பேசுவதையும், அவள் எள்ளு பொரிவதுபோல தன் வார்த்தைகளை ஓயாமல் கொட்டுகிறதையும் எலி கவனித்து, அவள் மதுபான வெறியால் பிதற்றுகிறாளென்று தப்பாய் நினைத்து அவளண்டைபோய், "நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய், உன் குடியை உன்னை விட்டு விலக்கு" என்று கடிந்துகொண்டார். இதினால் அக்காலத்தில் இஸ்ரவேலருக்குள் குடிக்கிறவழக்கம் மிச்சமாய் இருந்ததென்றும், அவர்கள் குடிவெறியோடு தேவனுக்கு ஆராதனைசெய்யும்படி வருவது வழக்கமாயிருந்ததென்றும் தோன்றுகிறது. அந்த ஸ்திரீ ஆசாரியனுடைய வார்த்தைகளைக்கேட்டு விசனப்படாமல் "என் ஆண்டவனே! நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றினேன்" என்று சொன்னாள். அப்போது எலி தன் குற்றத்தை உணர்ந்துகொண்டார். நாம் ஒருவரையும் வெளித்தோற்றங்களைக்கொண்டு தீர்ப்புச்செய்யலாகாது. கடைசியாக எலி அந்த ஸ்திரீயை வாழ்த்தி, "நீ சமாதானத்தோடே போ, நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக" என்றார்.

எலிக்கு இரண்டுமக்கள் இருந்தார்கள் என்று சொன்னோமே, அவ்விருவரும் சொல்லமுடியாத துன்மார்க்கராய் இருந்தார்கள். அவர்களுடைய ஆகாமியத்தின் அகோரத்தைக் காட்டும்படி அவர்கள் "பேலியாளின் மக்களாய் இருந்தார்கள்" என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "பேலியாள்" என்பது பாதாள பூதங்களின் தலைவனுக்குப் பேராக வழங்கப்பட்டுவந்தது. எலியின் மக்கள் பூமியில் பிறந்தவர்களைப் போலிராமல், பாதாளலோகத்துப் பிசாசுக்களுக்குப் பிறந்தவர்களைப்போல அவ்வளவு துன்மார்க்கராய் இருந்தார்கள்; அவர்கள் ஆசாரியருமாயிருந்தார்கள். ஆயினும் தேவனைப்பற்



றிய அறிவாவது, பயபக்தியாவது அவர்களிடத்தில் கிஞ்சித்தும் இருக்கவில்லை. அவர்களுடைய அக்கிரமத்தைக் கேட்க செவிடரும் தங்கள் காதை அடைத்துக்கொள்ளவேண்டியதிருக்கும். அவர்கள் ஜனங்களை நடப்பித்தவிதம் என்னவென்றால், எவனாகிலும் பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தை தன் கையிலே பிடித்துவந்து அதினாலே கொப்பரையிலாவது, சருவத்திலாவது, சட்டியிலாவது குத்துவான். அந்த ஆயுதத்தில் வருகிறதெல்லாம் அவன் எடுத்துக்கொள்ளுவான். ஆண்டவருக்குப் பலியிடுமுன்னே தங்கள் பங்கைத் தரவேண்டுமென்று கட்டாயம்பண்ணுவார்கள். இவ்வண்ணம் தேவனுடைய பரிசுத்த காணிக்கைகளை அவர்கள் கொள்ளையிட்டதோடு தேவனை ஸ்துதிக்கும்படிக் கூடிவரும் கன்னியாஸ்திரீகளைக் கற்பழித்து, தங்களுடைய அசுத்த நடக்கைகளால் பரிசுத்தஸ்தலங்களையும், ஊழியங்களையும் தீட்டுப்படுத்திவந்தார்கள். தேவாலயத்தில் பணிவிடைசெய்யவேண்டிய ஆட்களிடத்தில் இவ்வளவு கேடு இருந்தால், அக்காலத்திலிருந்த சாதாரண ஜனங்களுக்குள் எவ்வளவு கேடு இருக்கமாட்டாது! இந்தச் சமாசாரமெல்லாம் எலியின் காதில் விழுந்தது; ஆனாலும் அவர் கண்டிப்புள்ள ஒரு தகப்பனல்ல. தன் பக்தியையும், தன் கடமைகளையும் பார்த்தாரேதவிர தன் குடும்பத்தின் பக்தியையும், அதை துன்மார்க்கத்துக்கு விலக்குவதையும் அவ்வளவாய் நினைத்தாரில்லை. இது எலியினிடம் இருந்த பெரிய குறைவு. ஊருக்கெல்லாம் இடிந்தவீட்டைக் கட்டிக்கொடுக்கும் ஒரு தொழிலாளி தன் வீட்டின் இடிதலை செப்பனிடாவிட்டால் என்னபிரயோசனம்? "ஒருவன் தன் சொந்தஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" என்று ஒரு பக்தன் சொல்லியிருக்கிறார் (1 தீமோ. 5. 8.). எலியைப்போலொத்த தேவ ஊழியக்காரரையும், அவர் மக்களைப்போலொத்த துஷ்டரையும் நாம் அடிக்கடி பார்க்கிறதுண்டு. அவர்கள் தேவனுடைய ஆக்கினைக்குச் சமீபித்திருக்கிறார்களென்று நாம் தைரியமாய்ச் சொல்லலாம்.

ஒருநாள் எலி தன் மக்களை வரவழைத்து அவர்களைநோக்கி: "நீங்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறதென்ன? இந்த ஜனங்கள் எல்லாரும் உங்கள் பொல்லாத நடக்கைகளைச் சொல்லக் கேட்கிறேன்; என் குமாரரே! வேண்டாம்; நான்

கேள்விப்படுகிற இந்தச்செய்தி நல்லதல்ல; கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே; மனுஷனுக்கு விரோதமாய் மனுஷன் பாவஞ்செய்தால் நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள். ஒருவன் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்வானேயாகில் அவனுக்காக விண்ணப்பம் செய்யத்தக்கவன் யார்?" என்று சொன்னார். இதை வாசிக்கிறவன், ஐயோ! ஏலியை நாமேன் குற்றம் சொல்லவேண்டும்? அவர் தம்மாலானமட்டும் கனிவோடு புத்திசொல்லியிருக்கிறார் அல்லவா! இதற்கு மிஞ்சி அந்த பிரபல துஷ்டவாலிபரை அவர் என்னதான் செய்யக்கூடும்? என்று சற்றுதாங்கி பேசக்கூடும். இப்படி வெண்ணெய் தடவிய வார்த்தைகளால் என்ன பிரயோசனம்? வெண்ணெய் வெயிலுக்குமுன் நிற்காதே, தேவதண்டனையாகிய அக்கினிக்குமுன் நிற்குமா? ஏலி அவர்களை ஊழியத்திலிருந்து தள்ளி, அல்லது கல்லெறிந்து கொலைசெய்யும்படி ஒழுங்குபடுத்தி, அந்த விதமாய்த் தேவனுடைய பரிசுத்தத்தை விளங்கச்செய்தால் அல்லவா, உத்தம பணிவிடைக்காரனுக்குத் தகுந்த இலட்சணம் என்று சொல்லலாம். ஏலி நியாயாதிபதியாயுமிருந்தால் அவர்களைத் தகுந்தபடி சிட்சிக்கத்தக்க ஸ்திதியிலிருந்திருப்பார். அவருடைய மக்களின் துன்மார்க்கத்துக்குத்தக்க அளவான கண்டிதத்தை அவர் பிரயோகியாதது தப்பிதம்; தன் பேரும், தன் குடும்பத்தின் பேரும் கெட்டுப்போகுமென்று நினைத்தாராக்கும். தேவனுடைய பரிசுத்தத்தைக்காக்க முயலாத தேவ ஊழியக்காரனில் என்ன பிரயோசனம்? ஏலியின் உணர்த்தலில் ஏதாவது உயிர் இருந்தால் அதுவும் விளங்குமே; அப்படியும் விளங்கவில்லை. "அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமற்போனார்கள்" என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம். இந்த ஆகாமியத்தினிமித்தம் தேவன் ஏலியின் மக்களைச் சங்கரிக்கச் சித்தமாயிருந்தார்.

ஏலியின் மக்கள் சீர்கெட்டவர்களாய் நடந்தகாலத்தில் அன்னாள் என்னும் ஒரு ஸ்திரீ தான்பெற்ற தலைமகனை கர்த்தருக்கென்று ஆசாரியனிடத்தில் ஒப்புவித்தாள். முன்னே தேவாலயத்தில் வந்து ஜெபம்பண்ணினபோது ஏலி குடிவெறியால் பிதற்றுகிறதாக தப்பாய் எண்ணிக் கடிந்துகொண்டது இவளைத்தான். இவளுடைய மகனுக்கு சாமுவேல் என்று பேர். இந்தப் பிள்ளையாண்டான் தன் பெற்றோரை மறந்து ஏலியையே பிதாவாகவும், தேவாலயக்கூடாரத்தையே தனது வீடாகவும் எண்ணிக் காலம் கழித்தான். இந்தப் பிள்ளையாண்டான் வந்தது முதல் ஏலியின் மக்களுடைய சில வேலைகள் குறைந்ததால்



தங்கள் மனங்கொண்டபடி நடக்க நல்ல சாவகாசமிருந்ததென்று சொல்லலாம். ஏனெனில் தேவாலயக்கூடாரத்தின் கதவுகளைத் திறக்கிறதும், பூட்டுகிறதும், விளக்கேற்றுகிறதுமான சில்லறை வேலைகளையெல்லாம் இந்தப் பிள்ளையாண்டான் பார்த்துவந்தான்.

ஏலியின் மக்களுடைய அக்கிரமம் தேவதண்டனையைத் துரிதப்படுத்துகிறதுபோல் இருந்தது. ஆதலால் தேவனுடைய மனுஷன் ஒருவன் ஏலியினிடத்தில் வந்து:

1. தேவன் ஏலியின் குடும்பத்துக்குக் காட்டின தயவுகளையும்,
2. ஏலியின் மக்களின் பொல்லாப்பையும்,
3. ஏலியின் தப்பிதத்தையும்,
4. அதினிமித்தம் வரும் தேவதண்டனைகளையும்

விபரமாய்ச் சொல்லி அவரை உணர்த்தினான். ஏலியினிடத்தில் ஒரே தப்பிதம் இருந்தது. அதாவது, தேவனைப்பார்க்கிலும் அவருடைய குமாரரை மதித்ததுதான்.

ஏலியின் குமாரருடைய அக்கிரமத்தினிமித்தம் அவர் பின் வரும் தண்டனைகளைக் கூறினார்.

1. உன்வீட்டில் ஒரு கிழவனும் இருப்பதில்லை,
2. உன் வம்சத்தார் வாலவயதிலே சாவார்கள்,
3. உன் மக்கள் இருவரும் ஒரேநாளில் சாவார்கள்,
4. வேறொரு ஆசாரியக்குடும்பம் எழுப்பப்படும்,
5. உன் வம்சத்தில் மீதியானவர்கள் அவர்களிடத்தில் பிச்சைவாங்கிப் பிழைப்பார்கள்

என்று சொன்னார். இந்த வார்த்தைகள் கிழ ஏலிக்கு மரணநாளைச் சமீபப்படுத்துகிறதாயிருந்தது. இதின் பிற்பாடாவது ஏலி தன் பிள்ளைகளை தேவாலய ஊழியத்திலிருந்து விலக்கினதாகவாவது, அவர்களைக் கண்டித்ததாகவாவது யாதொரு குறிப்பையும் காணோம். ஒருவேளை அவர்களுடைய ஆகாமியங்கள் கண்டிப்புக்குத் தாண்டிவிட்டதாக்கும்; எப்படியும் அவர்கள் ஊழியம் ஏலியின் சிட்சைக்குத் தாண்டியிருக்கவில்லை. தேவ பணிவிடைக்காரர் தங்களுடைய தேவாலய விஷயத்துக்கடுத்த விஷயங்களில் தலையிடுகிறதைப்பற்றி ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது. அநேக தேவஊழியக்காரர் ஜனங்களுடைய மீறுதலுக்குக் காரணமாயிருக்கிறார்களென்று நாம் அடிக்கடி கவனிக்கிறோம்.

ஏலியின் குற்றத்தை தேவன் இரண்டாந்தரம் சாமுவேல் என்ற பிள்ளையாண்டான் மூலமாய் எடுத்துக்காட்டி உணர்த்தினார். அப்படியிருந்தும் அவர் யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானபடிச் செய்வாராக" என்றுமாத்திரம் சொல்லிவிட்டார். ஆகவே ஏலியின் குற்றம் வரவர அதிகப்பட்டது. சபையார் பலரால் அவர்முதலாவது உணர்த்தப்பட்டார்; அப்பால் தேவனுடைய மனுஷன் ஒருவனால் உணர்த்தப்பட்டார்; கடைசியாக சாமுவேல் மூலமாய் தேவன் உணர்த்தினார். இப்படியெல்லாம் இருந்தும் அவர் தன் மக்களை உத்தியோகத்திலிருந்து தள்ளாத காரணமென்ன? அல்லது வேறுவிதமாய் தண்டியாத முகாந்தரமென்ன? தன் பேர் கெட்டுப்போகுமென்றுதான். தன் பேரைக் காத்துக்கொள்ள தம்பிரான் பேரை அசட்டைசெய்கிறார்; தன் வீடு வாழ தேவனுடைய வீட்டைப்பற்றிக் கவலையற்றவனாகிறான். இப்படிப்பட்ட தேவஊழியன் தன்னிலே உத்தமனாயிருந்து லாபமென்ன? இச்சங்கதியை தேவதாபக்தி விநயமாய் ஆராய்ந்துபார்த்தால் ஏலி என்ற ஆசாரியனுக்குக் கூறப்பட்ட தண்டனைகள் நியாயமென்று சொல்லவேண்டியது.

ஏலி தன் மக்களின் அக்கிரமத்தைக் கண்டிக்காத இளநெஞ்சனாயிருந்தும் தேவனுடைய நடத்துதல்களைப் பொறுமையோடு அங்கிகரித்துக்கொள்ளுகிற குணமுடையவனாயும் இருந்தார். பயங்கரப்படத்தக்க தேவதண்டனைகள் அவர் காதில் தொனித்தபோது "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்று சொன்னார். ஆரோன் தன் மக்கள் இருவரும் ஒரே நிமிஷத்திலே தேவதண்டனையினால் பிணமாய் கிடக்கிற சமயத்தில் "பேசாமல் இருந்தான்" (லேவி. 10. 3.). எசேக்கியா தனக்குவரும் தேவதண்டனையின் வாசகங்களைக் கேட்டவுடனே தன் பக்தியுள்ள மனதில் தியானித்து "கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான்" என்றுமாத்திரம் சொன்னான் (2 இரா. 20. 19.). தேவ தண்டனைகளைப் பழிக்கிற சுபாவமாவது, தூஷித்து எரிச்சலடைகிற சுபாவமாவது நமக்குள் இருக்கக்கூடாது.

ஏலியின் சரித்திரம் தேவஊழியருக்கு மாத்திரமல்ல, எல்லா பெற்றோருக்கும் போதனையைக் கொடுக்கிற விஷயமாயிருக்கிறது. அவனவன் எந்த நிலைமையில் தேவனால் நிலைப்படுத்தப்பட்டிருக்கிறானோ அதற்கு உத்தரவாதியாய் இருக்கிறான்; அவனவன் தன் தன் நிலைமையில் தேவனுக்கு கணக்கு ஒப்பு



விக்கவேண்டியது. ஆதலால் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை அடக்கி வளர்ப்பதைத் தங்கள் விசேஷித்த வேலையென்று சொல்லவேண்டியது. அநேக பிதாக்கள் தங்கள் பிள்ளைகள் குழந்தைகளென்று சொல்லி அவர்களைத் துவக்கத்தில் சிட்சிக்கிறதில்லை; பின்பு அவர்கள் மூத்து திமிர்த்துப்போனார்கள் என்று தண்டிக்கிறதில்லை. ஆகவே, அவர்கள் தங்கள் மக்களைத் தங்களிலும் கெட்டவர்களாக வளரப்பண்ணுகிறார்கள். இப்படிச் செய்கிறவர்கள் தங்கள் செய்கையால் தங்களுடைய பிள்ளைகளை மற்றவர்களைப்பார்க்கிலும் நேசிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதுதான் அவர்களைப் பகைக்கச் செய்கிறதாயிருக்கிறது. "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்" என்று ஒரு ஞானி சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது நாம் ஏலியின் கடைசிக் காலத்தைப்பற்றிய விசேஷங்களைச் சொல்லி இவர் சரித்திரத்தை முடிக்கவேண்டியதுதான். தேவன் சாமுவேல் என்ற பிள்ளையாண்டான் மூலமாய்ச் சொன்ன எல்லாத் தண்டனைகளும் நிறைவேறுங்காலம் நெருங்கிற்று. இதினிடையில் பக்தியுள்ள ஏலி தன் குடும்பத்தின்மேல் கூறப்பட்ட ஆக்கினைகள் மாற்றப்படவேண்டுமென்று மன்றாடியிருப்பார் என்பது மெய். என்றாலும், அவ்வாக்கினைகள் கூறப்பட்ட காலத்தில்தானே தேவன் "ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது, காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை" என்று தீர்மானமாகச் சொல்லியிருந்தார். அவர் மனமாறுகிறவரல்லவே; அத்தீர்மானங்களை அவர் நிறைவேற்றினார். அது மன்னிப்பின்படிக்கு மிஞ்சிப்போனகாரியமாய் இருந்ததாக்கும். இப்படிச் சொல்வதால் அவர்கள் பாவம் தேவனுடைய மன்னிப்பின் வல்லமைக்கு மிஞ்சிப்போயிற்றென்று நாம் கருத்துகொள்ளாமல், அவர்கள் மன்னிப்பைப் பெறும்படிக்கு மிஞ்சிப்போனார்கள் என்று கருத்துகொள்ளவேண்டியது.

இச்சங்கதிகள் நடந்து சில காலத்துக்குள்ளாக இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் யுத்தமுண்டாயிற்று. பெலிஸ்தியர் யுத்தகாலத்தில் தங்கள் விக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டு போவது வழக்கமாயிருந்தது. இந்த யுத்தத்தில் அவர்கள் ஜெயமடைந்தார்கள். தேவன் இஸ்ரவேலரை அவர்களுக்கு முன்பாக முறிந்தோடச்செய்தார். அப்போது அவர்கள் அடைந்த ஜெயம் பெலிஸ்தியரின் விக்கிரகவல்லபத்தால்தான் என்று இஸ்ரவேலர் தப்பாய் நினைத்து, தாங்களும் தங்கள் தேவனு

டைய உடன்படிக்கைப்பெட்டியைக் கொண்டுபோய் அதின் கொடியின்கீழ் யுத்தஞ்செய்கிறதுண்டானால் ஜெயம் கிட்டுமென்று தப்பாய் எண்ணி அதை எடுத்துவரும்படித் திட்டஞ்செய்தார்கள்.* ஒருவேளை அநேக வருஷத்துக்குமுன்னே இந்தப் பெட்டியைமுன்னிட்டு யோர்தானின் ஜலம் குவியலாக நின்றதும், எரிகோவின் மதில் இடிந்துவிழுந்ததுமான வரலாறுகள் பிந்தியகாலத்தில் தப்பாய் அர்த்தம்பண்ணப்பட்டு, அந்தப் பெட்டியிலே ஏதோ ஒரு வல்லமை இருக்கிறதாக ஜனங்களுக்குள் பாரம்பரையான கள்ளபோதனை போதிக்கப்பட்டு வந்திருக்கலாம். எப்படியோ தாங்கள் பேசிக்கொண்டபடி தேவனுடைய பெட்டியைக் கொண்டுவந்தார்கள்; ஏலி இதற்கு இடங்கொடுத்திருக்கவேமாட்டார். ஆனால் அவருடைய உத்தரவை விரோதித்து தங்கள் இஷ்டப்படிச் செய்ய ஏலியின் மக்கள் ஆயத்தமாயிருந்தார்கள். உடனே அவ்விருவரும் பெட்டியைச் சுமந்து பாளயத்துக்குப் போனார்கள்; உடனே சேனையனைத்துக்கும் சந்தோஷமுண்டாயிற்று. இஸ்ரவேலரின் சந்தோஷமானது பெலிஸ்தியரின் சஞ்சலமாயிற்று. இஸ்ரவேலின் தேவனுடைய மகிமையை அவர்கள் அடிக்கடிக் கேள்விப்பட்டதால் இனியுண்டாகும் யுத்தத்தில் தாங்கள் தோற்றுப்போவோம் என்று பயந்தார்கள். ஆனால் தேவனோ இந்த விதமாய்த் தம்மைக் கனவீனம்பண்ணி தமது மகிமையைச் சிறைப்படுத்தும்படி முயன்ற இஸ்ரவேலரைத் தாழ்த்தும்படி சித்தங்கொண்டார். மறுநாள் யுத்தமுண்டானபோது பெலிஸ்தியர் இஸ்ரவேலரை முறியடித்ததோடு உடன்படிக்கைப் பெட்டியையும் பிடித்துக் கொண்டார்கள். பெட்டி பிடிபட்டதால் இஸ்ரவேலர் முனை விழுந்து அபஜெயமானார்கள்; ஓப்னியும் பினெகாசும் யுத்தத்தில் மாண்டார்கள்.

பெட்டி தேவாலயக்கூடாரத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகப்பட்ட நிமிஷமுதல் ஏலி, காரியம் எப்படி முடியுமோ என்று ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டிருந்தான். ஒருவேளை தன் மக்களைப்பற்றிக் கூறப்பட்ட சாபம் நிறைவேறும் நாள் இதுதானோ என்று அவன் தனக்குள் சிந்தித்துக்கொண்டிருக்கலாம். காரியம் அப்படியே இருந்தது. யுத்தகளத்திலிருந்து ஓடிவந்த ஒருவன் ஏலியண்டை சேர்ந்து நடந்த சம்பவங்களையெல்லாம் சொன்னான். அவைகளை அடக்கிச் சொல்லவேண்டுமானால்

யுத்தம் அபஜெயம்,
திரள்ஜனம் சங்காரம்,
உமது மக்கள் மாண்டார்கள்,
பெட்டி பிடிபட்டது

என்ற வார்த்தைகளுக்குள் அடக்கிவிடலாம். மாற்றான் ஜெயித்ததும், மனுஷர் மாண்டதும், மக்கள் மரித்ததும், அவனுக்கு அவ்வளவு விசனத்தைக் கொடுக்காவிட்டாலும்

“பெட்டியும் பிடிபட்டுப்போயிற்று”

என்ற வார்த்தை அவன் ஸ்தானத்திலிருந்து அவனை அசைத்துவிட்டது. அந்தச் செய்தியின் அதிரடியால் ஏலி ஆசனத்திலிருந்து வாசலின் பக்கமாய் மல்லாக்க விழுந்து பிடரி முறிந்து மாண்டார். சொல்லவேண்டுமானால் பூலோகம், இனி உன்னை நான் தாங்கமாட்டேனென்று தன் கழுத்தை உதறி தன் வாயை ஆவென்று திறந்து அவனைத் தனக்குள் அடக்கிக்கொள்ளும்படி செய்தது. ஏலி மரணமடைந்தபோது அவருக்கு தொண்ணூற்றெட்டுவயது. இவ்வளவு தண்டனை ஏலியின் சுயபாவத்தினால் அல்ல, அவர் தன் மக்களைச் சீராய் வளர்க்காததினாலேயே உண்டானதென்பதைப் பார்க்கும்போது பிள்ளைகளுள்ள ஒவ்வொரு பெற்றோருக்கும் இது நல்லபோதனையாய் இருக்கிறது.

ஏலியின் மரணமானது நீதிமானுடைய மரணம்போல காணப்படாததினாலே நாம் அவரை அவிசுவாசிகளோடே சேர்க்கலாகாது. அவரிடமிருந்த சில குறைவுகளுக்குக் கடைசி தண்டனையாகவும், உயிரோடிருக்கிற மற்றவர்களுக்கு எச்சரிப்பாகவும் இவருடைய மரணம் இப்படியிருந்ததென்று நாம் அநுமானிக்கவேண்டியதாயிருக்கிறது. மேலும் சாதாரண மரணந்தான் ஆசீர்வாதமானதென்றும், திடீரென்று தண்டனைபோல் வரும் மரணம் சாபமென்றும் நாம் எண்ணக்கூடாது. நாம் ஒருவருடைய மரணத்தின் தன்மையைக்கொண்டு அவர்களை மதிக்கிறவர்களாயிராமல் உயிரோடிருக்கையில் அவர்களுடைய நடபடிகள் இப்படியென்று ஆராய்ந்துகொண்டு அவர்களை மதிக்கிறவர்களாய் இருக்கவேண்டும்.

* இதுதான் உடன்படிக்கைப் பெட்டியைப் பாளயத்துக்கு வெளியே கொண்டுபோன முதலாம் திருஷ்டாந்தம். இதன்பின்பு அம்னோனால் கலகமுண்டானகாலத்தில் யோவாபால் கர்த்தருடைய பெட்டி பாளயத்திற்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறது. (2 சாமு. 11. 11.)

# PROPHET SAMUEL.

# சாமுவேல் தீர்க்கதரிசி.

இதற்கு முந்தி நாம் சொல்லியிருக்கிற சிம்சோன், எலி என்பவர்களுடைய வரலாறுகளால் இஸ்ரவேலருடைய மார்க்கஸ்திதி எப்படியிருந்ததென்றும், பெலிஸ்தியர் ஜாதியாரின் பகை அவர்கள்மேல் எவ்வளவு மும்முரமாய் இருந்ததென்றும் ஒருவாறு தெரியவரலாம். சிம்சோன் காலமுதல் அவர்களுக்குள் ஆரம்பித்த மார்க்க அபிமானமும் தேசாபிமானமும், நாம் இப்பொழுது சொல்லப்போகிற சாமுவேலின் காலத்தில் அதிக விருத்தியடைந்துவந்தது. இவருடைய சரித்திரம் மற்றநேகருடைய சரித்திரத்தைப்போல மங்கி மங்கிப் பிரகாசிக்கிற ஒரு விளக்கைப்போல் தோன்றாமல் ஜநநமுதல் மரணவரையும் ஒரேகண்டசீராய் தேவதாபக்தி ஜோதியாய் விளங்கிற்று என்று தெரியவருகிறது. இவருடைய பாலியமும், வாலிபமும், விருத்தாப்பியமும் உலகத்தில் பெரும்பாலருடையதுபோல வித்தியாசப்படாமல் ஒரேகண்டசீரான சிறந்தகுணமாக இருக்கிறது. இவரை எந்த நிலைமையில் நோக்கினாலும் இவர் பக்தனாகவே விளங்குகிறார். இவருடைய நற்குணமும், சாந்தமும், யதார்த்தமும், விழிப்பும் ஒருகாலத்திலும் மங்காமலும், மாறாமலும் இவரில் நிலைபெற்றிருந்ததென்பதை இவருடைய சரித்திரவரலாறே சொல்லும். இனி இவரையடுத்த விஷயங்களைச் சற்று விபரமாகச் சொல்லுவோமாக.

சாமுவேல் தீர்க்கதரிசியின் தகப்பனுக்கு இரண்டு பெண்சாதிகள் இருந்தார்கள். இது தேவகட்டளைக்கு முற்றும் விரோதமான ஒரு வழக்கமாயிருந்தது. ஒரு கெட்ட வழக்கத்தை உலகத்தில் முதலாவது பொல்லாதவர்கள்தான் ஆரம்பிப்பார்கள். அந்த வழக்கத்தால் வெளியரங்கமான நஷ்டங்கள் உண்டாகவில்லையானால் வரவர நல்லவர்களும் அதிலே தோஷமில்லையென்று பின்பற்றுகிறதுண்டு. இரண்டு பெண்சாதிகளைக்கட்டும் வழக்கம் வந்ததும் அப்படியே இருக்கவேண்டியது. இருநாய்க்கிட்ட எலும்பும் சரி, இரண்டு பெண்சாதிக்காரனும் சரி என்று சொல்லலாம்.



சாமுவேல் தீர்க்கதரிசியின் தகப்பனார் பூசாசாரிகள் குடும்பத்தைச் சேர்ந்த லேவியனாய் இருந்தார். அவருக்குள் மார்க்க அபிமானமும் தேவபக்தியும் நன்றாயிருந்தது; ஆனால் கொஞ்சம் குருட்டுப் பக்தியும் அதோடு கலந்திருந்தது என்று நினைக்கத்தக்கதாயிருக்கிறது. ஏனெனில் அந்தக் காலமானது மார்க்க விஷயங்களில் அப்படிப்பட்ட காலமாய் இருந்தது. சாமுவேலின் தாயார் அவருடைய முதலாம் மனைவியாய் இருக்கவேண்டியது. அவளுக்குச் சிலகாலம் பிள்ளை இல்லாததால் அவர் வேறொருத்தியைக் கலியாணஞ்செய்துகொண்டார்போல் இருக்கிறது. சாமுவேலைப் பெற்ற தாயாருக்கு அன்னாள் என்று பேர். இவள் தனக்குப் பிள்ளை இல்லாததைத்தொட்டு சொல்லிமுடியாத விசனப்பட்டாள். ஆனாலும் அவள் யாக்கோபின் மனைவியைப்போல் தன் புருஷனண்டைபோய் எனக்குப் பிள்ளையைக் கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்று சொல்லாமல் "இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" என்று உணர்ந்து, தேவாலயத்தில் போய் ஆண்டவரிடம் தன் குறைவை முறையிட்டு தனக்குப் பிள்ளைபாக்கியத்தை கடாட்சம்பண்ணவேண்டுமென்று கேட்டாள். இவள் கேட்கவேண்டிய ஆளைக் கேட்டு, தட்டவேண்டிய கதவைத் தட்டி, வாங்கவேண்டியதையும் வாங்கிக்கொண்டாள். ஆகையால் அவளை புத்திசாலியென்றும், சரியான ஆத்துமக்கண்ணுடையவள் என்றும், தேவனுடைய கிருபாபாக்கியங்களின் பண்டகசாலையைத் தட்டித் திறக்கும் ஞானசாஸ்திரத்தை நுட்பமாய் அறிந்தவள் என்றும் சொல்லிப் புகழவேண்டியதுதான். இவ்வளவு ஞானசாஸ்திரத்தின் வளர்ச்சிக்கு அவளுக்கு வெகுகாலமாய்ப் பிள்ளையில்லாத குறைவே காரணமாயிருந்தது. தேவனால் நமக்கு ஒரு குறைவு அல்லது தாழ்வு வைக்கப்பட்டிருக்கிறபொழுது அது நம்மை அவரோடு அந்நியோந்நியமாக்கும் ஞானசாஸ்திரப்போங்கென்று பக்தர் எண்ணிக்கொள்ளுவார்கள்.

சாமுவேல் தீர்க்கதரிசியின் தாயார் தனக்கென்று ஒரு பிள்ளை கேளாமல் தேவனுக்கென்று பிள்ளை கேட்டாள். எப்படியெனில் அவள் ஒருநாள் தேவஸ்தானத்துக்குப் போய் வெகுநேரம் விண்ணப்பம்பண்ணி, கடைசியாக "சேனைகளின் கர்த்தாவே, நீர் உமது அடியாளின் சிறுமையை நோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயி

ரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன்" என்று பொருத்தனைபண்ணினாள். உலகத்தில் பெரும்பாலும் முழங்கால்படியிடுகிறவர்களும், வானத்தை நோக்கி கைகளை விரிக்கிறவர்களுமெல்லாம்

எனக்குத் தாரும்,
எங்களுக்குத் தாரும்

என்றே கேட்கிறவர்களாய் இருக்கிறார்கள். பக்தியுள்ள அன்னாளோ, தன் காரியக்குட்டியாய் எனக்கு என்று மாத்திரம் கேளாமல் தேவனே, நீர்

எனக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால்
அவனை சகல நாளும் உமக்கு ஒப்புக்கொடுப்பேன்

என்று கேட்டாள். இதில் அன்னாளுடைய ஜெபம் மற்ற அநேகருடைய ஜெபத்துக்கு வித்தியாசப்பட்டிருக்கிறதல்லவா? தேவன் ஜெபத்தின்மேல் பிரியப்படுகிறவராய்மாத்திரம் அல்ல, உத்தம ஜெபத்தை தெரிந்தெடுக்கிறவராயும் இருக்கிறார். உலகம் தோன்றினதுமுதல்

எனக்குத் தாரும்,
உமக்கே தருகிறேன்

என்று மண்ணுலகத்திலிருந்து ஒரு ஜெபமும் விண்ணுலகிற்கு ஏறவில்லையென்று சொல்லலாம். "எனக்குத் தா, உனக்குத் தந்துவிடுகிறேன்" என்ற வாசகம் தேவனுடைய பாஷையைச் சேர்ந்தது; சாமுவேலின் தாய் அதை நன்றாய்ப் படித்திருந்தாள். அன்னாளுடைய விண்ணப்பத்தின்படி தேவன் ஒரு ஆண்பிள்ளையை 'அவளுக்குக் கட்டளையிட்டார். அவள் அந்தப் பாலகனைப் பெற்ற மகிழ்ச்சியால் சந்தோஷப்பட்டு, கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும்படி அதற்கு பாலூட்டினாள். மோசே முனிவரின் தாய் தன் மகனை இராஜகுமாரத்திகையில் ஒப்புவிக்கப் பாலூட்டினாள்; அன்னாளோ தன் மகனை இராஜாதி இராஜாவாகிய யேகோவாவுக்கு ஒப்புக்கொடுக்கும்படி பாலூட்டி வளர்த்தாள். சாமுவேல் என்ற தீர்க்கன் பால்குடி மறந்தவுடனே தாயார் அவனை தேவாலயத்திலிருந்த ஆசாரியன் வசம் ஒப்புவித்துவிட்டாள். இவள் தான் செய்த பொருத்தனையை உண்மையாய் நிறைவேற்றினாள்; அநேகர் பலதரம் பொருத்தனைசெய்து நிறைவேற்றாமலிருக்கிறார்கள். இது சரியல்ல. தேவனுக்கென்று பணமாகவாவது, பொருளாகவாவது, ஊழியமாகவாவது பொருத்தனைபண்ணிச் செலுத்தாமலிருக்கிறது அவனைக் கனவீனம்பண்ணுகிறதாய் இருக்கிறது. "பொ



ருத்தனைபண்ணி செலுத்தாமலிருக்கிறதைப்பார்க்கிலும் பொருத்தனைபண்ணாமலிருக்கிறதே நலம்" என்று சத்தியவேதம் சொல்லுகிறது.

சாமுவேல் என்ற பிள்ளையாண்டான் சுமார் மூன்றாம் வயதிலே தாயை மறந்து தேவனையடுத்து, தாய்வீட்டை மறந்து தேவாலயத்தையே வீடாக எண்ணி நடந்தவிஷயமானது, அத்திசையில் எங்கும் ஆச்சரியமாகப் பேசிக்கொள்ளப்பட்டிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. வேதாபிமானமும் மார்க்காபிமானமும் சீர்கெட்டுப்போயிருந்த அக்காலத்தில், சிம்சோன் என்னும் சடாமுனி நசரேய பொருத்தனையாய்க் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விஷயத்தால் உண்டான ஆச்சரியத்தைப்பார்க்கிலும் சாமுவேல் தீர்க்கனுடைய செய்தி அவர்களுக்கு வியப்பை உண்டாக்கியிருக்கலாம். சிம்சோன் வீடுமட்டாய்த் தங்கி தாயின் மடியை மறவாமல் வளர்ந்தான்; சாமுவேல் தீர்க்கனோ தேவனுடைய வீட்டையே தன் வீடுபோல் எண்ணி, தன் சிறு முழங்காலை அவருக்கு முன் முடக்கிக்கொள்வதையே தாயின் மடியின் இன்பத்திலும் மேலான இன்பமாய் எண்ணிக்கொண்டார்.

அவர் மூன்று பிராயமாகிய அவ்வளவு இளம்பிராயத்தில் தேவாலயத்தில் என்னென்ன வேலையை நடத்தக்கூடும்? ஒருவேளை ஏலி என்ற கிழக் குருவுக்குப் பேரப்பிள்ளைபோல நடந்துகொண்டு, அவர் இட்டவேலையைத் தட்டாமல் செய்து வந்திருக்கலாம். அவருடைய சாப்பாடும், சகவாசமும் ஏலியின் மக்களோடேயே இருக்கலாம்; அல்லது ஆசரிப்புக்கூடாரத்து ஆராதனைகளில் பாடும்படி வருகிற பக்தியுள்ள ஒரு ஸ்திரீயின் சவரட்சணையில் அவர் வளர்ந்திருக்கலாம். அந்த ஸ்திரீகளில் அநேகரைக் கெடுத்துப்போட்ட ஏலியின் மக்களுக்கு இந்த பாலிய சாமுவேல் எம்மாத்திரம்! ஆனால் சாமுவேலைக் கெடுக்க அவர்களால் கூடாமற்போயிற்று. குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி மங்காததுபோல துஷ்டரோடு சகவாசஞ்செய்தாலும் சாமுவேலின் குணம் மாறவில்லை. அவர் அவர்களைப் பின்பற்றுகிறவராயிராமல், தேவனுடைய பிரமாணங்களைப் பின்பற்றுகிறவராய் இருந்தார்.

சாமுவேல் தீர்க்கனுக்கு சுமார் ஐந்தாறு வயதானதுமுதல் அவருடைய தேவாலயவேலையும் அதிகப்பட்டதென்று சொல்லலாம். ஒருவேளை இவர் தலையெடுத்தவுடனே ஏலியின் மக்கள் தங்கள் துன்மார்க்கத்தில் விரைந்தோடி, தேவாலய ஊழியங்களை அசட்டைபண்ணியிருக்கலாம். ஆதலால் இவர்

தேவாலயத்தின் கதவுகளைத் திறக்குதல் பூட்டுதல், விளக்கேற்றுதல் அணைக்குதல், முதலான சில்லறைவேலைகளை நடத்திவந்திருப்பார் என்று தோன்றுகிறது. எப்படியும் அவர் தேவாலயத்துக்குள்ளேயே படுத்துக்கொண்டிருந்தார். நம்மில் அநேகர் தேவாலய வேலைகளில் சிலவற்றை இது கோவில் மேட்டியுடைய வேலையென்றும், இது உபாத்திமார் உபதேசி மாருடையதென்றும் சொல்லி குறைவுபடுத்துகிறதுண்டு. இப்பொழுது கோவில்மேட்டி வேலையை முற்காலத்தில் ஆசாரியர் செய்துவந்தார்கள் என்று அறிந்துகொள்ளுகிறோம்.

சாமுவேல் தீர்க்கன் தேவாலயத்திலிருந்த காலத்தில் ஒரு நாள் கடவுள் அவருக்குத் தரிசனமளித்தார். அக்காலத்தில் தேவதரிசனம் என்னப்பட்ட அருளானது அபூர்வமாய் இருந்தது; பிரத்தியட்சமான யாதொருதரிசனமும் இருந்ததில்லை. அச்சமயத்தில் அவருக்கு சுமார் பன்னிரண்டு பிராயமிருந்ததாக யூதரபிமாரும், யோசேப்புஸ் என்ற சரித்திரக்காரனும் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பன்னிரண்டாம் வயதில் ஒவ்வொரு யூத ஆண்பிள்ளையும் ஒரு விசேஷித்த சடங்கால் தேவனுக்கென்று பிரதிஷ்டையாக்கப்படுகிறது. அந்தச் சடங்கில் அவன் பகிரங்கமாய் நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து ஜனங்கள் நடுவே நின்று வாசிப்பான்; அதுமுதல் அவனுக்கு நியாயப்பிரமாணத்தின் புத்திரன் என்ற பேரும் சூட்டப்படும். இது இக்காலத்தில் கிறிஸ்துசபைகளில் நடக்கும் திடப்படுத்தலுக்கு ஒருவாறு இசைவாய் இருக்கிறதென்று சொல்லலாம். நமது இரட்சகர் பன்னிரண்டுவயதாயிருக்கும்போது தேவாலயத்துக்குப் போன விஷயமும் இந்த வழக்கத்தின்படிதான் என்று எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சாமுவேல் தீர்க்கன் பன்னிரண்டு வயதாயிருக்கும்போது ஒருநாள் இரவு தேவன் சாமுவேலைக் கூப்பிட்டார். , அது பளார் என்று விடிகிறவேளையாய் இருக்கவேண்டும்; ஏனெனில் இரவில் இயற்றப்பட்ட விளக்குகள் இன்னும் அணைக்கப்படவில்லை; பொழுது உதித்தபின்புதான் அவ்விளக்குகள் அணைக்கப்படுகிறதுண்டு. இவர் படுத்திருந்த அறைக்கு அருகேதான் ஏலியும் படுத்திருந்தார். அவர் விருத்தாப்பியத்தால் பார்க்கக்கூடாதபடி அவருடைய கண்கள் இருளடைந்திருந்தது. தேவன் சாமுவேலைக் கூப்பிட்டவுடனே அவர் திடுக்கென்று எழுந்திருந்து ஏலிதான் கூப்பிட்டார் என்று தனக்குள் உத்தேசித்து அவரண்டைபோய்; இதோ! வந்தேன், என் என்னைக் கூப்பிட்டீர் என்று கேட்டார். ஏலி இராக்காலங்களில் இப்படி ஒரு



வேளாவேளை சாமுவேலைக் கூப்பிட்டு ஏதாவது வேலை இடுவார்போல் இருக்கிறது. இதினாலே சாமுவேல் விழிப்புள்ள வாலிபன் என்று தோன்றுகிறது; அர்த்த இராத்திரியில் கூப்பிட்டாலும் ஐயா என்று சொல்லி எழுந்திருக்கத்தக்க விழிப்பு அவருக்கு இருந்தது. தேவபணிவிடைக்காரர் எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாகவே இருக்கவேண்டியது. மேலும் ஏலியும் அச்சமயத்தில் விழித்திருந்தான்போல் இருக்கிறது. அல்லது குருவியின் கூந்தலுக்கு எழுந்திருக்கத்தக்க வயதுடையவனாய் இருந்ததால் திடீரென்று எழுந்துகொண்டான்போலிருக்கிறது. எப்படியும் தான் யாதொரு வேலைவிஷயமாய் சாமுவேலைக் கூப்பிடவில்லை என்பது ஏலிக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது.

ஏலி சாமுவேலை நோக்கி, நான் கூப்பிடவில்லை, திரும்பிப் போய்ப் படுத்துக்கொள் என்று சொன்னான். ஒருவேளை பையன் ஏதோ சொப்பனங்கண்டு எழுந்துவருகிறானாக்கும் என்று ஏலி எண்ணியிருக்கலாம். அவர்போய்ப் படுத்துக்கொண்டபின்பு கர்த்தர் மறுபடியும் சாமுவேலே! என்று கூப்பிட்டார்; உடனே அவர் எழுந்து ஏலியண்டைபோய், இதோ இருக்கிறேன், என் என்னைக் கூப்பிட்டீர் என்று கேட்டார். ஏலியோ தான் கூப்பிடவில்லையென்று சொன்னான். மூன்றாந்தரமும் அதேமாதிரியாக தேவன் சாமுவேலைக் கூப்பிட்டார்; அவர் முன்போல ஏலிதான் கூப்பிடுகிறானென்று நினைத்து அவனண்டை போனார். ஏலியோ தேவன் சாமுவேலைக் கூப்பிடுகிறாரென்று அறிந்துகொண்டு, நீ போய்ப் படுத்துக்கொள் மகனே, இனிமேல் உன்னைக் கூப்பிடும் சத்தம்கேட்டால் அப்பொழுது நீ,

கர்த்தாவே! சொல்லும்,
அடியேன் கேட்கிறேன்

என்று சொல் என்றான். சாமுவேல்போய்ப் படுத்துக்கொண்டபின்பு கர்த்தர் வந்துநின்று, சாமுவேலே சாமுவேலே என்று கூப்பிட்டார். தேவனும் தேவதூதரும் இவ்வுலகத்தில் மனுஷருக்கு இடப்பட்டிருக்கிற பேர் இன்னதென்று முதலாய் அறிந்தவர்களாய் இருந்தார்கள் என்பதற்கு அநேக திருஷ்டாந்தரங்களுண்டு. தன் பேரை இரட்டித்து அழைக்கும் தேவசித்தத்தைக் கேட்டவுடனே சாமுவேல் "சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று மறுமொழிகொடுத்தார். அப்பால் ஆண்டவர் "இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச்

செய்வேன், அது கேட்கிற ஒவ்வொருவனுடைய காதுகளி
லும் தொனிக்கும்" என்று சொல்லி, ஏலியின் மக்களின் சீர்
கேட்டையும் அதினிமித்தம் அவர்களுக்கு செய்யப்போகும்
தண்டனைகளையும் சொன்னார். பன்னிரண்டுவயது பையனிடத்
தில் பராபரன் தமது நடத்துதல்களைச் சொல்லிக்கொண்டிருக்
கிறது எவ்வளவு விந்தையாகக் காணப்படுகிறது. ஆசாரியன்
குற்றத்தை அற்பவயதுள்ள பிள்ளையாண்டானைக்கொண்டு
உணர்த்துகிறார். பிதாக்கள் தங்கள் பிள்ளைகளின் உணர்த்து
தல்களை அசட்டைசெய்யக்கூடாது. கழுதையைக்கொண்டு
பிலேயாமுக்கு புத்திகற்பிக்கவும் ஒருகாலத்தில் சித்தமாயிருந்
தாரென்றும், சேவலைக்கொண்டு பேதுரு அப்போஸ்தலனுக்கு
உணர்வை உண்டாக்கவேண்டுமென்பது உலக இரட்சகரின்
கருத்தாய் இருந்ததென்றும் நாம் அறிந்திருக்கிறோமே. சில
தரம் பெற்றோரின் கேடுகளைச் சிறுவர் கவனித்து உணர்த்துகிற
துண்டு. அச்சமயத்தில் அவர்களுடைய வயதையிட்டு நாம்
அதை அவமதியால் தேவன் அவர்களைக்கொண்டு உணர்த்து
கிறாரென்று அறிந்துகொள்ளவேண்டியது. தேவன் இருதயத்
தின் உத்தமத்தைக் கவனிக்கிறாரேயன்றி வயதையும் அந்தஸ்
தையும் பார்க்கிறதில்லை; ஏனெனில் அவர் நீண்ட ஆயுசுடை
யவர். ஒருநாள்வயதுள்ள குழந்தை அவருக்கு ஆயிரவருஷ
விருத்தாப்பியனுக்கும், ஆயிரவருஷ விருத்தன் ஒருநாள் குழந்
தைக்கும் சமம் என்று சொல்லவேண்டியது.

சாமுவேலிடம் கர்த்தர் பேசுகிறார் என்பதை ஏலி கவனித்து,
பேச்சுமுடிந்தபின்பு அவரைக் கூப்பிட்டு ஆண்டவர் சொன்ன
வார்த்தைகளில் அணுவளவும் ஒளியாமல் அவ்வளவையும்
ஆதியோடந்தமாய்ச் சொல்லவேண்டுமென்று ஆணையோடு
கேட்டான். அப்பொழுது சாமுவேல் "ஒன்றையும் அவ
னுக்கு மறையாமல் அந்தக் காரியங்களையெல்லாம் அறிவித்
தார்." இதில் நாம் ஏலியைவிட சாமுவேலை மதிக்கவேண்டி
யது. ஏலி தன் மக்களைக்குறித்துச் சொல்லப்பட்ட எச்சரிப்பு
களை அவர்களுக்கு ஒன்றும் மறையாமல் அறிவித்திருந்தால் ஒரு
வேளை அவர்கள் குணப்பட்டிருக்கலாம்; ஏலியின் வார்த்தை
களோ மனதில் வெண்ணெய்தடவுகிறதுபோல் மாத்திரமிருந்
தது. அவன் தன் மக்களுக்குச் சொன்ன வெண்ணெய்ச்
சொற்கள் அக்கினியில் உருகிப்போய்விட்டது; அதினாலே
அது யாதொரு பலன் செய்யவில்லை. சாமுவேல் ஏலியோடு
பேசினவார்த்தைகள் கத்திவெட்டுப்போல் அவன் நெஞ்சில்
விழுந்தது. தேவ ஊழியக்காரர் தேவனுடைய வசனங்களில்



ஒன்றையும் மறைக்கக்கூடாது. அநேக தேவ ஊழியக்காரரோ அவைகளில் சிலதை மறைத்து, சிலவற்றை மாற்றி, சிலவற்றை சுயதார்ப்பரியம் என்னும் வெண்ணெய்களால் தடவி, மனுஷ இருதயங்களில் செலுத்தப்பார்க்கிறார்கள். அதினால் ஒரு பிரயோசனமும் வராது. நாம் தேவனுடைய வார்த்தையை அதின் சுத்தாங்கத்தோடும் அதின் பூரணத்தோடும் பகிர்ந்துகொடுக்கிற ஊழியக்காரராய் இருக்கவேண்டும். அப்படிச்செய்தால் திருச்சபைக்குள்ளிருக்கிற அநேக பிரிவினைகளும் கள்ள உபதேசங்களும் எடுபட்டுப்போம். கர்த்தருடைய வார்த்தைகள் ஒன்றையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்லுகிற தேவ ஊழியன் பாக்கியவான்.

கர்த்தர் சாமுவேலுக்குச் சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஏலி கேட்டபோது "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்று மாத்திரம் சொன்னான். இது தேவசித்தத்துக்கு அடங்குகிறதைக் குறிக்கிற வார்த்தையாயிருக்கிறது. ஆனால் தேவசித்தத்தை நிறைவேற்றுகிற விஷயத்தில்தான் ஏலியினிடத்தில் குறைவிருந்ததென்று சொல்லவேண்டியது. நாம் தேவசித்தத்துக்கு அடங்குகிறதோடு அதை நிறைவேற்றுகிறவர்களாயும் இருக்கவேண்டியது.

சாமுவேல் வளர்ந்தார், கர்த்தர் அவருடனேகூட இருந்தார். இஸ்ரவேலர் முழுவதும் அவரைத் தீர்க்கதரிசியாக ஒப்புக்கொண்டு, அவரிடத்தில்வந்து தேவசித்தத்தை விசாரித்து அறிந்துகொண்டார்கள். இதினாலே கிழ ஏலி சாகுமுன்னே அவன் ஊழியத்துக்கு தேவன் ஒரு ஆளை நியமித்திருந்தார் என்று விளங்குகிறது.

இக்காலத்தில் இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் யுத்தமுண்டாயிற்று; இந்த யுத்தத்துக்கு பெலிஸ்தியரே முந்திக்கொண்டார்கள்; இதின் காரணம் இன்னதென்று தெரியவில்லை. ஒருவேளை சிம்சோனைப் பற்றியிருந்த அதிர் வரவரக் குறைந்துபோனதால் முன்போல மறுபடியும் இஸ்ரவேலரைக் கொள்ளையிட ஆரம்பித்தார்களாக்கும்; அல்லது சிம்சோனால் தங்கள் ஜாதிக்கு உண்டான அவமானத்துக்கும் நஷ்டத்துக்கும் பதிலீடாக யுத்தத்துக்கு வந்தார்களாக்கும். எது முகாந்தரத்தாலோ பெலிஸ்தியர் படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடனே இஸ்ரவேலர் அவர்களை எதிர்க்கும்படி சேனைதளங்களோடே புறப்பட்டார்கள். தாங்கள்போகும் பிரயத்தனத்தைக்குறித்து தேவசித்தத்தை அறிந்துகொள்ளவில்லை. ஒருவேளை ஆலோசித்திருந்தாலும் ஏலியின்

மக்களிடத்தில்மாத்திரம் கேட்டிருக்கலாம். தேவனே இந்த பிரயத்தனத்தில் ஏலியின் மக்களுக்குப் படைகட்டும்படி சித்தம்கொண்டார். கர்த்தரோடு வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள்; வானத்திலிருந்து அவர்கள்மேல் குமுறுவார் என்ற வாசகப்படி தேவன் ஏலியின் மக்கள்மேல் தமது கோபாக்கினையின் கவசத்தை ஊற்றும்படிச் சித்தங்கொண்டார். இருபட்சமும் ஒரு கணவாயண்டை ஒருவருக்கொருவர் நெருங்கவே யுத்தம் ஆரம்பித்தது. பெலிஸ்தியர் யுத்தகாலத்தில் தாங்கள் வணங்கிவந்த தாகோன் என்ற விக்கிரகத்தைச் சுமந்து வருவது வழக்கமாய் இருந்தது. அந்த யுத்தம் பெலிஸ்தியருக்கு ஜெயமாயிற்று; இஸ்ரவேலரில் சுமார் நாலாயிரம்பேர் மாண்டு விழுந்தார்கள். அன்று யுத்தம் அதோடு முடிந்தது. இஸ்ரவேலர் இந்த அபஜெயத்தைகுறித்துப் பலவாறாக யோசித்துக் கடைசியாக பெலிஸ்தியருடைய விக்கிரகம் போர்க்களத்திற்குக் கொண்டுவரப்பட்டதுபோல் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை நாம் பாளயத்திற்குக் கொண்டுவரவேண்டும்; அப்போது ஜெயம் நமக்குக் கிடைக்கும் என்று தீர்மானித்து அதற்குரிய பிரயத்தனங்களைச் செய்தார்கள். இந்த ஆலோசனையினாலே அவர்கள் சிருஷ்டிகர்த்தாவை பெலிஸ்தியருடைய தாகோனுக்குச் சமமாக்கினதுபோலும், விக்கிரகத்திலும் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் வல்லமை உண்டென்று ஒப்புக்கொண்டதுபோலும் இருக்கிறது. மேலும் இந்த இஸ்ரவேலர் தேவனுடைய முந்தின பராக்கிரமங்களையும், செயல்களையும் எவ்வளவேனும் நினையாமல் இச்சமயத்தில் தங்கள் மெய்யான தேவனை பெலிஸ்தருடைய தாகோனோடு பந்தயம் கட்டுகிறதுபோலும் இருக்கிறது. இவர்களுடைய நடபடிக்கையால் நீர் ஜெயம்தந்தால் உம்மை வணங்குவோம், மற்றப்படி எங்கள் பாடு என்று சொல்லுகிறதுபோலும் இருக்கிறது. மனுப்புத்திரருடைய பரியாசத்துக்கெல்லாம் தேவன் இடங்கொடுப்பாரா? "தேவன் தம்மை பரியாசம்பண்ணவொட்டார்." அவர்கள் விரும்பியபடி தேவனுடைய பெட்டி பாளயத்துக்கு வந்தது; அல்லது தேவனே பாளயத்துக்கு எழுந்தருளி வந்தாரென்று சொல்லுவோமே. பாளயத்துக்குள் தேவன் இஸ்ரவேலருக்கே விரோதமானார். ஆகவே இஸ்ரவேலருக்கு இந்த இரண்டாம் சண்டையில் தேவவிரோதமும், பெலிஸ்திய விரோதமும் உண்டாயிற்று. ஆதலால் சுமார் நாற்பதாயிரம் பேர் போர்க்களத்தில் பிணமானதோடு பெட்டியும் பிடிக்கப்பட்டது; ஏலியின் மக்கள் இருவரும் மடிந்தார்கள். ஆகவே



இந்தச் சண்டையால் பெரிய மாறுதல் இஸ்ரவேலில் உண்டாயிற்று. ராஜ்யபாரமும், ஆசாரியத்துவமும் எல்லாம் இளவயதுள்ள சாமுவேலின் தோளில் இறங்கிற்று.

அக்காலத்தில் கொள்ளையின் முதற்றரமான வஸ்துக்களை நன்றியறிதலான காணிக்கையாகவும், தங்கள் தேவனாகிய தாகோனை மேன்மைப்படுத்துகிற நோக்கமாகவும் தாகோன் கோவிலில் கொண்டுபோய் வைக்கிறதுண்டு. அவ்வழக்கத்தின்படியே உடன்படிக்கைப் பெட்டியையும் கொண்டுபோய் வைத்தார்கள். தாகோனைக் கனப்படுத்த பெலிஸ்தியர் செய்ததே அதை நாசமாக்கும் வகையாயிருந்தது. எப்படியெனில் மறுநாள் காலையில் பெலிஸ்தியர் வந்து பார்த்தபோது தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக முகங்குப்புறவிழுந்து கிடந்தது; அதை ஒரு விசேஷமாய் எண்ணாமல் மறுபடியும் தூக்கிவைத்தார்கள். ஆனால் மறுநாளிலே தாகோனின்* தலையும் இரண்டு கைகளும் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக

* தாகோன் இடுப்புமட்டும் மனுஷரூபமாயும் அதன்கீழ் சிதளுள்ள மச்சரூபமாயுமிருந்தது. இந்தத் தாகோனும், இவன் மனைவியுமாகிய தெர்சீற்றோ (Derceto) என்பவளும் ஆதிகாலத்தில் செங்கடலிலிருந்து தோன்றி அத்திசையிலுள்ளவர்களுக்கு சகலவித சாஸ்திரங்களையும் கல்விகளையும் கற்பித்து மனுமக்களுக்கு மட்டில்லா பாக்கியங்களை அருளிச்செய்ததென்று பாரம்பரையாய்ச் சொல்லப்பட்டுவந்தது. மச்சங்களை தெய்வீகமாக்கி வணங்கும் வழக்கம் பல தேசங்களிலும் இருந்ததென்பதற்கு அநேக குறிப்புகள் உண்டு. திருநெல்வேலியிலுள்ள பாபநாசமென்னும் அருவி ஓரத்தில் இன்றைக்கும் மீன்களை தெய்வமாக்கி பேணிவளர்த்துவருகிறவழக்கம் இருக்கிறது; சீரியாவிலும் அநேக இடங்களில் இந்த வழக்கம் நடந்துவந்தது. ஜலப்பிரளயகாலத்தில் நோவாமுனிவர் அற்புதமாய் இரட்சிக்கப்பட்டதை நினைவுகூரும்படி வழங்கப்பட்ட மச்சசாயலானது வரவர தாகோன் வணக்கமாய் மாறியிருந்தாலும் இருக்கலாம். தாகோனின் விசேஷஸ்தலம் காசாவிலும், அஸ்தோத்திலுமிருந்தது (நியா. 16. 21–30. 1 சாமு. 5. 5, 6. 1 நாளா. 10. 10.). பிந்தின இடத்திலிருந்த தாகோனின் ஆலயம் கி. மு. 148-ம் வருஷத்தில் யூதாமக்கபேயுவின் சகோதரனாகிய யோனத்தானால் அழிக்கப்பட்டது (1 மக்க. 10. 34; 11. 4.). மேலும் "பெத்டாகோன்" (யோசு. 16. 41.) "பெத்தாகோன்" (யோசு. 19. 27.) என்னும் பேர்களால் தாகோன் வணக்கம் வேறு இடங்களிலும் வழங்கப்பட்டதென்று அனுமானிக்கவேண்டியதாயிருக்கிறது. இந்துக்களுக்குள் வழங்கும் விஷ்ணுவின் மச்சாவதார அபிப்பிராயம் தாகோனைப்பற்றிய பாரம்பரையிலிருந்துதான் உண்டாகியிருக்கலாம்.

விழுந்துகிடந்தது. தலையானது விவேகத்துக்கும் ஞானத்துக்
கும் இருப்பிடம்; கையானது கிருபைக்கு உறைவிடம். தா
கோனின் தலையும் கையும் விழுந்துபோனது அவ்விரண்டை
யும் சிதறடிக்கிறதுபோலவும், யேகோவாவின் ஆலோசனையும்
ஞானமும் அவருடைய கையின் கிரியைகளும் மகத்துவமான
வைகளென்று வெளிப்படுகிறதுபோலவும் இருந்தது.

கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி பெலிஸ்தியர் நாட்
டில் ஏழுமாதமிருந்தது. அவ்வளவுகாலமும் யேகோவாவின்
தண்டனைகள் பெலிஸ்தருடைய வீட்டையும் வயலையும் பின்
தொடர்ந்தது. அந்தப் பெட்டியால் துன்பமுண்டாகிறதென்று
அவர்கள் அதை எந்த இடத்துக்குக் கொண்டுபோனார்களோ
அந்த இடத்திலும் துன்பம் துவக்கிற்று. சிருஷ்டிகர்த்தாவை
சிருஷ்டிகள் கனவீனப்படுத்தும்போது அவர் அவர்களைத் தண்
டிக்கிறார். கடைசியாக அதை இனி ஒரு க்ஷணப்பொழுது
வைக்கலாகாதென்று அவர்கள் தீர்மானித்து இஸ்ரவேலரு
டைய எல்லைக்கு அனுப்பிவிட்டார்கள். அதுமுதல் பெலிஸ்
தியர் இஸ்ரவேலின் தேவனோடு நாம் போர்புரிய அவ்வளவு
வல்லவர்களல்ல, ஆனால் இஸ்ரவேலரோடு போர்புரிய வல்ல
வர்கள்தான் என்று நினைத்து மறுபடியும் சுமார் இருபதுவருஷ
காலமாய் அவர்களைத் துன்பப்படுத்திவந்தார்கள். கர்த்தரு
டைய பெட்டி பிடிபட்டதுமுதல் தேவ ஒத்தாசையும் அவர்
களைவிட்டுப் போயிற்று; அவர்களும் தங்கள் ஆகாமியங்களை
முன்னிலும் அதிக ஜாக்கிரதையோடு பின்பற்றினார்கள் என்று
சொல்லவேண்டியது.

அக்காலத்தில் சாமுவேல் தீர்க்கதரிசி தமது வழக்கம்போல்
இஸ்ரவேலருடைய ஆகாமியங்களை எடுத்துக்காட்டி தேவனி
டத்தில் மனந்திரும்பும்படி வெகுவாய்ப் பிரயாசப்பட்டார்.
இஸ்ரவேலர் தங்கள் ஆகாமியத்தையும் நன்றிகேட்டையும்
ஒத்துக்கொண்டபோதிலும் அவைகளை விலக்கிப்போட தீர்
மானிக்கவில்லை; அவர்கள் பாகாலையும்* அஸ்தரோத்தையும்
வணங்கிவந்தார்கள். இப்படிப்பட்ட பாவிகளை நாம் அடிக்
கடி பார்க்கலாம். அநேகர் பாவ உணர்வால் கடற்காளானி
லிருந்து தண்ணீர் பிழிவதுபோல் தங்கள் கண்களிலிருந்து
கண்ணீர்சொரிவார்கள்; ஆனால் தங்கள் பாவங்களையோ
வெறுத்துவிடமாட்டார்கள். தேவன் மனுப்புத்திரரின் கண்

* பாகால் என்பது பெனிக்கியர் கானானியருடைய ஆண்தெய்வமாக
வும், அஸ்தரோத்து அவர்களுடைய பெண்தெய்வமாகவும் இருந்
தது.



ணீரைமாத்திரம் பார்த்து மயங்கிவிடமாட்டார்; அவர் இருத
யத்தில் உத்தமத்தைக் கவனிக்கிறவர். எப்படியும் கண்ணின்
கண்ணீர் மனதின் வியாகுலத்தை வெளிப்படுத்துகிற அறிகுறி
யாய் இருக்கிறது. இந்த அறிகுறியை சாமுவேல் தீர்க்கதரிசி
கண்டு, கருமான் இரும்பின் அனல் பழுப்பைப்பார்த்து, இது
தான் அதை நமது மனப்படி மடங்க அல்லது முறிக்கத் தகுந்த
சமயம் என்று தன் சுத்தியலை பலமாய்ப் பிரயோகிப்பது
போல, அவரும் தமது கடிந்துகொள்ளுதல் என்னும் ஞானசுத்
தியலை இஸ்ரவேலரின் இருதயத்தின்மேல் பிரயோகிக்க முயன்
றார். அவர் இஸ்ரவேல் நாடெங்கும் ஆட்களையனுப்பி, "நீங்
கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிற
வர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்
கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு
நேராக நோக்கி அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்;
அப்பொழுது அவர் உங்களை பெலிஸ்தியருடைய கைக்கு நீங்
கலாக்கிவிடுவார்" என்று விளம்பரம்பண்ணினார்.

அந்த விளம்பரத்தைக் கேட்டவுடனே பட்டணம்முதல்
பட்டிக்காடுவரையுமுள்ள சகல இஸ்ரவேலரும் தங்களுடைய
அந்நியதேவனை விலக்கிவிட்டு கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை
செய்தார்கள். அதுமுதல் இஸ்ரவேல் தேசத்தில் ஒரு புது
மேகம் வியாபித்திருந்ததுபோல காணப்பட்டது. அக்காலத்
தில் சாமுவேல் சகல இஸ்ரவேலரையும் மிஸ்பா என்ற ஊரில்
கூடிவரச்செய்து தண்ணீர்மொண்டு கர்த்தருடைய சந்நிதியில்
ஊற்றி, இனிமேல் முன்போல உம்மைச் சேவியாமல் அந்நிய
தேவர்களை நாடமாட்டோம் என்று பிரமாணம்பண்ணச்செய்து,
அன்றையதினம் உபவாசங்கூறி, பொதுவான பாவ அறிக்கைக்
குரிய ஒரு விசேஷித்த ஆராதனையை நடத்தினார். அந்த ஆரா
தனை நேரத்தில் சகல ஜனமும் நொறுங்குண்ட மனதோடும்,
உபவாசித்த உடலோடும் தேவசந்நிதியில் சாஷ்டாங்கமாய்
விழுந்து,

"கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்"

என்று அறிக்கையிட்டுப் புலம்பினார்கள். இதற்குமுன் அந்த
ரங்கமாய் அதிகாரம்பண்ணி ஆலோசனைகொடுத்த சாமுவேல்
இதுமுதல் பகிரங்கமாய் அந்த வேலைகளை நடத்தி சீர்கேடான
காலத்தில் இஸ்ரவேலருக்குள் நடந்துவந்த பொல்லாப்புகளை
நீக்கும்படி முயன்று, அப்படிப்பட்ட குற்றவாளிகளைத் தண்
டித்துவந்தார்.

மெய்மார்க்கத்தை இஸ்ரவேலருக்குள் புதுப்பிக்கவும், மெய்த்
தேவ ஆராதனையை அவர்களுக்குள் உறுதிப்படுத்தவும், விக்கிர
காராதனையை அழித்துவிடவுமாக சாமுவேல் ஜனங்களை மிஸ்
பாவிலே கூடிவரும்படி விளம்பரம்பண்ணின விஷயமானது
பெலிஸ்தியரால் தப்பாக எண்ணப்பட்டது. இஸ்ரவேலர்
தங்களுக்கு விரோதமாய் பந்துகட்டுபண்ணி படையெடுக்கக்
கூடுகிறார்களென்று எண்ணி, தங்கள் சேனைகளைத் திரட்டிக்
கொண்டு மிஸ்பாவிலே யுத்தத்துக்கு வந்தார்கள். இஸ்ரவேலர்
அதைக் கண்டு பயந்து தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சகா
யம் தங்களுக்குக் கிடைக்கும்படி வேண்டிக்கொள்ளவேண்டு
மென்று சாமுவேலைக் கேட்டார்கள். அப்போது அவர், சர்
வாங்கதகனபலியாக ஒரு பால்குடிக்கிற ஆட்டுக்குட்டியை
பலிசெலுத்தி இஸ்ரவேலருக்காக கர்த்தரை நோக்கி வேண்டிக்
கொண்டார். அவர் விண்ணப்பம்பண்ணிக்கொண்டிருக்கை
யில் பெலிஸ்தியர் யுத்தத்துக்கு நெருங்கிவிட்டார்கள். ஆனால்
அந்நேரத்தில் கர்த்தர் இடிமுழக்கத்தை அனுப்பி பெலிஸ்திய
ரைக் கலங்கடித்தார்; அவர்கள் இஸ்ரவேலருக்கு முன்பாகப்
பட்டு விழுந்தார்கள். இஸ்ரவேலர் தங்கள் எதிரிகளை வெகு
தூரம்மட்டும் துரத்தி முறியடித்தார்கள். வானம் பெலிஸ்திய
ருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணிற்று. அங்கிருந்து அக்கினி
விழவுமில்லை, குண்டுகள் இறங்கவுமில்லை; மேக கர்ச்சனையே
பெலிஸ்தியரின் ஆரவாரத்தை அடக்கிப்போட போதுமான
தாய் இருந்தது. இடிமுழக்கத்துக்கு முன்னே இடைகட்டி
யோடும் சன்னத்தில்லாத பெலிஸ்தியர் இடிமுழக்கத்தின்
ஆண்டவரை எதிர்க்கத் துணிந்தது எவ்வளவு அதிசயமாயிருக்
கிறது! கிதியோன் பானைகளை உடைத்து பந்தங்களை உயர்த்தி
பயப்படுத்தினான்; கர்த்தரோ மேகங்களை உடைத்து பெலிஸ்தி
யரைக் கலங்கடித்தார். இதிலே தேவன் தமது பிள்ளைகளுக்கு
துணைநிற்க எவ்வளவு தீவிரமாய் எழுந்தருளியாகிறார் என்
றும், எவ்வளவு வல்லமையாய் அவர்கள் காரியங்களைத் தமது
காரியம்போல நடத்துகிறார் என்றும் தெரியவருகிறது. இவ்
வுலகத்தில் யுத்தஞ்செய்கிறபோது எதிருக்கெதிரே சேனை நின்று
யுத்தஞ்செய்யும். இந்த யுத்தமோ வானத்திலும் பூமியிலும்
சேனைகள் எதிர்த்துநின்று யுத்தஞ்செய்கிறதுபோல் இருந்தது.
இந்த யுத்தத்தினால் பெலிஸ்தியருடைய கர்வம் வெகுவாய்
அடங்கிப்போயிற்று; அவர்கள் இஸ்ரவேலரின் எல்லைகளி
லே வராதபடி தடுக்கப்பட்டார்கள். மேலும் இஸ்ரவேலரின்
கையிலிருந்து முன் பெலிஸ்தியர் பிடித்திருந்த நகரங்களையும்



திரும்பவும் பெற்றுக்கொண்டார்கள். சாமுவேலின் நாளெல்
லாம் கர்த்தருடைய கை பெலிஸ்தியருக்கு விரோதமாயிருந்
தது. இந்த அதிசயபோரையும், ஆச்சரிய யுத்த ஜெயத்தையும்
நினைவுகூரும்படியாக ஒரு பெரிய கற்றூணை நிறுத்தி அதற்கு
எபெநேசர் என்று அழைத்தார்கள். எபெநேசர் என்ற வார்த்
தைக்கு "இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு சகாயஞ்செய்தார்"
என்று அருத்தம். சாமுவேலின் விண்ணப்பத்தால் வானம்
கொடுத்த வெற்றியானது, ஜனங்கள் அவரை மதிக்கவும், அவ
ருக்கு அடங்கவுங்கூட ஒரு காரணமாயிருந்தது.

பெலிஸ்தியரைப்பற்றிய அச்சம் அற்றுப்போனதால் சாமு
வேல் தேச ஆளுகைக்கேற்ற பல முறைகளையும், தேவாரா
தனைக்குரிய கிரமங்களையும் வெகு ஊக்கத்தோடு செய்துவந்
தார். அவர் மூன்று நாலு முக்கிய நகரங்களை மத்தியஸ்தான
மாகக் குறித்துக்கொண்டு அவ்விடங்களுக்கு முறையே சுற்றி
வந்து அந்தந்தத் திசையிலுள்ள வியாச்சியங்களைத் தீர்த்து,
ஒழுக்கமும் கிரமமும் இஸ்ரவேலருடைய குடியிருப்புகளில்
விருத்தியாகும்படிச் செய்தார். மேலும் அவர் தமது சொந்த
ஊராகிய ராமாவிலே ஒரு பலிபீடத்தையும் கட்டி மெய்த்தேவ
வணக்கத்தை நிலைநிறுத்தினார். அதினாலே சீலோ வரவர
நெகிழப்பட்டது.

சாமுவேல் தீர்க்கதரிசி இன்ன காலத்தில் இன்ன பெண்ணை
விவாகம்பண்ணினார் என்பதைப்பற்றி யாதொரு குறிப்பில்லா
விட்டாலும் யூதரபிமாருடைய பொதுவான கட்டளைப்படிக்
கும் ஜாதிவழக்கப்படிக்கும், பதினெட்டுவயதுக்கும் இருபது
வயதுக்கும் மத்தியில் விவாகம்செய்திருக்கவேண்டியது. ஏனெ
னில் இருபதுவயதுக்குள் விவாகஞ்செய்யாத யூதஆண்பிள்ளை
யின் நடக்கையைக்குறித்து குறைவாகப் பேசிக்கொள்ளப்
படும். எப்படியும் நாம் பேசிக்கொண்டுவரும் சம்பவங்கள்
நடந்தகாலத்தில் அவர் வாலிபவயதுள்ள இரண்டு ஆண்மக்
களையுடையவராய் இருந்தாரென்று தெரியவருகிறது. அவரு
டைய இரண்டுமக்களுக்கும் யோவேல், அபியா என்று பேர்.
அவ்விருவரையும் பக்தியுள்ள தகப்பனார் அதிக கவலையோடு
வளர்த்தார் என்பதற்குச் சந்தேகமில்லை. ஏலியின் மக்களின்
சீர்கேடும் அதனால் தேவன் தம்முடன் எச்சரித்த வார்த்தை
களும் அவருடைய மனதைவிட்டு மறந்துபோகத்தக்க விஷ
யங்களல்லவே. அவ்விருவரும் பெரியவர்களானபோது தமக்
குதவியாக தேசஆளுகைவிஷயத்தை நடத்தும்படி அவர் நன்
றாய்ப் பழக்கியிருப்பார் என்பதற்குச் சந்தேகமில்லை. அவர்

அதிக விருத்தாப்பியமாகி அங்குமிங்கும் முன்போலச் சுற்றித் திரிந்து நியாயவிசாரணைசெய்ய பெலனில்லாதிருந்தபோது தமது மக்கள் இருவரையும் உதவி நியாயாதிபதிகளாக நிய மித்து அவர்களுடைய விசாரணையின்கீழ் சில பாகத்தை ஒப்பு வித்தார். இதை நாம் தன்னயத்தை நாடிச்செய்த பிரயத் தனம்போல் எண்ணக்கூடாது. இப்படிப்பட்ட நம்பிக் கையை மக்களின் முந்தினகுணம் வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவருடைய மக்களோ தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆதிக்கத்தை அக்கிரமமாய் நிறைவேற்றத் தலைப்பட்டார்கள். அவர்கள் தங்கள் பிதாவின் சன்மார்க்க விதிகளில் நடவாமல் பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள். இப்படிப்பட்ட குணத்தின் சாடைமுதலாய் சாமுவேல் தீர்க்கதரிசிக்குத் தெரியாதிருந்தது. இவர்கள் வெகு காலம் தங்கள் உத்தமத்தில் நிலைத்திருந்து வரவர கெட்டுப்போ யிருக்கலாம். ஏலியின் மக்களுடைய அநியாயங்களைக்குறித்து உண்டான கூப்பாட்டைப்பார்க்கிலும், இவர்களுடைய செய் கைகளைப்பற்றி அதிக கூப்பாடாயிருந்தது. இதினாலே அக் காலத்தில் இஸ்ரவேலில் ஆகாமியம் அவ்வளவு குறைந்திருந் தது என்று விளங்குகிறது. அக்கிரமம் மிஞ்சிப்போயிருக்கிற காலத்தில் தேவ ஊழியக்காரரின் அக்கிரமமும் சாதாரண ஜனங்களால் கண்சாடையாய் விடப்படுகிறது; அது குறைந்தி ருக்கிறகாலத்தில் பொல்லாப்பு அதிக சீக்கிரம் வெளிப்பட்டு அதிக வெறுப்பாகப் பேசிக்கொள்ளப்படும். தன் மக்களைப் பற்றி இஸ்ரவேலின் மூப்பர் முறையிட்ட பிரியாதைப்பற்றி சாமுவேல் கண்சாடையாய் இருக்கவில்லை; ஏலியாயிருந்தால் அப்படியிருந்திருப்பான். தீர்க்கதரிசியின் மக்களுடைய சீர் கேடான ஆளுகையானது அவர்களை வெறுத்ததோடு தேவாளு கைையயும் வெறுக்கும் காரணமாயிற்று. ஏனெனில் ஜனங் கள் சாமுவேலுடைய மக்களின் அநீதியான தீர்ப்புகளையே முகாந்தரமாகச்சொல்லி, ,மற்ற ஜாதியாரைப்போல தங்களை ஆளும்படிக்கு ராஜா வேண்டியதென்று வாதாடினார்கள்.

தன் மக்களை உத்தியோகத்தினின்று விலக்கிப்போட அவர் ஆயத்தமாயிருந்தாலும் ஒரு ராஜாவை ஏற்படுத்த பிரியப்பட வில்லை. தன்னயத்தை நாடி அவர் பிரியப்படவில்லையென்று சொல்லக்கூடாது; அது தேவசித்தத்துக்கும், இஸ்ரவேலரு டைய ஆளுகைமுறைமை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததற்கும் முற்றும் விரோதமாயிருந்தது. அது தேவாளுகையை அவம திக்கிறதாயும், மனுஷ பராக்கிரமத்தில் நம்பிக்கைவைக்கச்



செய்கிறதாயும் இருக்குமென்றே அதில் பிரியப்படவில்லை. எப்படியும் கடைசியாக கடவுளுடைய சித்தத்தைக் கேட்பது நலமென்று உத்தேசித்துக் கேட்டார். அப்பொழுது கர்த்தர்: ஜனங்கள் சொல்லுகிறபடியெல்லாம் செய், அவர்கள் உன்னைத் தள்ளவில்லை; என்னைத் தள்ளிவிட்டார்கள் என்று சொன்னார். அதினாலே தேவன் தமது கோபத்திலே இவர்களுக்கு ராஜா வைக் கொடுக்கிறார் என்று அறிந்து சவுல் என்னும் ஒருவனை இராசாவாக அபிஷேகம்பண்ணினார். இராஜாவின் பட்டா பிஷேகம் குடிகளுக்கு ஆனந்தமாயிருந்தாலும் சாமுவேலுக்கு சஞ்சலமாயிருந்தது. தேவன் கோபத்தால் ஒன்றைக் கொடுக்கி றதிலும் கொடாமலிருப்பது நலம். அநேகர் ஐசுவரியத்துக்காக வும் அந்தஸ்துக்காகவும் ஆண்குழந்தைகளுக்காகவும் அடிக்கடி மன்றாடலாம். இவைகளைக் கொடுப்பது அவர்களுக்கு நஷ்ட மென்று தேவன் அறிந்து வெகுகாலம் கடத்திக்கொண்டுவர லாம். ஆனால் தேவசித்தத்துக்கு விரோதமான மனுஷ மன் றாட்டு ஓயாமல் அவருடைய வாசலைத் தட்டிக்கொண்டே இருக்கும்போது அவர் தமது கிருபையுள்ள சித்தத்தின்படி யல்ல, கோபத்திலே அந்தக் காரியங்களை அவர்களுக்கு அருள லாம். அப்படிப்பட்ட தயவுகளால் அவர்கள் முன்னிருந்த பக்திவிநயத்திலிருந்து வெகுதூரம் விலகி, கடைசியாகத் துன் பத்தையும் சங்கடங்களையும் அநுபவிக்கலாம். அநேகம் பெண்களைப்பெற்ற தகப்பன் ஒரு ஆண்பிள்ளைக்காக மன்றாடி னான்; தேவன் அநேக வருஷங்களுக்குப் பின்பு இரண்டு ஆண்மக்களைக் கொடுத்தார். அவ்விருவரும் வளர்ந்து வீடுகளைத் தீக்கொளுத்தவும் திருடவும் ஏற்பட்டு சிறைச்சாலையில் கைதிக ளானதை அவன் கண்டு, ஐயோ! இந்தப் பிள்ளைகளைத் தேவன் கொடாமலிருந்தால் எவ்வளவு நலமென்று அறிக்கையிட்டான். தேவன் சவுலை இராசாவாக்கினதும் இது போல் இருக்கிறது ஒரு இராசா ஏற்படுத்தப்படுவதால் அவர்களுக்கு நேரிடும் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் சாமுவேல் தேவகட்டளையின் படி ஜனங்களுக்கு உணர்த்தியும், அவர்கள் தங்கள் பிடிவாதத் திலிருந்து ஓயாமல் எங்களுக்கு எக்கேடுவந்தாலும் வரட்டும், ஒரு ராஜா வேண்டுமென்று ஏகோபித்துக் கேட்டார்கள். அப் போது தேவன் தமது கோபத்திலே அவர்களுக்கு ஒரு ராஜா வைக் கட்டளையிட்டார். அவனுக்கு சவுல் என்று பேர். இந் தச் சவுலின் சரித்திரத்தைப் பின்னால் சொல்லுவோம்.

சாமுவேல் சவுலை இஸ்ரவேலின்மேல் அபிஷேகம்பண்ணி னதுமுதல் இராச்சியபாரத்துக்குரிய பளுவை சவுலின்மேல்

ஒப்புவித்துப்போட்டு, தேவாலயத்துக்கடுத்த ஊழியங்களையும்,
தீர்க்கதரிசிக்குரிய வேலைகளையும்மாத்திரம் நடத்திவந்தார். தே
வாலய ஊழியமாக அவர் பலிகளைச் செலுத்தி, ஜனங்களுக்
காக தேவனைநோக்கி விண்ணப்பம்பண்ணிவந்தார். தீர்க்க
தரிசியின் ஊழியமாக அவர் பல விசேஷித்த இடங்களில்
கல்விச்சாலைகளை ஏற்படுத்தினார். அக்கல்விச்சாலைகளுக்குப்
பொதுவாக தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடங்கள் என்றும்,
அதில் கல்விகற்கும் மாணுக்கர் தீர்க்கதரிசிகளின் புத்திரர்
என்றும் அழைக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் ராஜ்யத்தில்
சன்மார்க்க நிலையை விருத்திசெய்யவேண்டுமென்ற நோக்க
மாகவே இந்தப் பள்ளிக்கூடங்கள் சாமுவேல் என்பவரால்
ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலத்து இஸ்ரவேலர் மார்க்கவிஷ
யத்தில் ஒருவாறு சீராய் இருந்தார்கள் என்று தோன்றுகிறது.
மற்றப்படி இவ்வளவு பெரும் பிரயத்தனத்தைச் சாமுவேல்
துடங்கி நடத்துவது கூடாமையாயிருக்கும். தீர்க்கதரிசிகளின்
புத்திரரின் பள்ளிக்கூடங்களைப்பற்றி வேதத்தில் அதிக விபர
மான நடபடிகள் சொல்லப்படவில்லை. இக்காலத்தில் அப்
பள்ளிக்கூடங்களில் படித்தவர்களுக்கு வழங்கப்பட்ட "பிள்
ளைகள்" என்றபேர் கிறிஸ்துவின் காலத்தில் யூதரபிமாருடைய
சீஷருக்கும் பேராக வழங்கப்பட்டது (மத். 12. 27. மாற். 10.
24.). அந்தப் பள்ளிக்கூடங்களின் தலைவர் "தகப்பன்மார்"
என்று அழைக்கப்பட்டார்கள் (1 சாமு. 10. 12. 1 இரா.
20. 35.). அதில் சேருகிறவர்கள் பெரும்பாலும் வாலிபராய்
இருந்தார்கள்போலிருக்கிறது; அல்லது வாலிபராகப் பேசப்
பட்டுவந்தார்கள் (2 இரா. 5. 22; 9. 1–4.); அவர்கள் ஒன்றாய்க்
குடியிருந்து ஏகமாய்ச் சாப்பிட்டுவந்தார்கள் (2 இரா. 4. 40.);
அவர்கள் போக்குவரவெல்லாம் கூட்டம் கூட்டமாயிருந்தது
(1 சாமு. 10. 5–10; 19. 20.). அவர்கள் தொகையில் ஏராள
மாயிருந்ததால் ஒருதரம் ஆகாப்பு அரசன் சீக்கிரத்தில் 400 பே
ரைக் கூட்டவும், ஒபதியா 100 பேரை ஒளித்துவைக்கவுமாக
நேரிட்டது (1 இரா. 22. 6; 18. 4.). இதே பள்ளிக்கூடங்கள்
சாமுவேலின் ஜநநஸ்தலமாகிய ராமாவிலும், பெத்தேல், கில்
கால், எப்பிராயீம், கிபேயா, எரிகோ என்னும் முக்கிய ஸ்தலங்
களிலுமிருந்தன. பிற்காலத்தில் தீர்க்கதரிசிகளெல்லாம் இந்த
முக்கியஸ்தலங்களில் வசிக்கவில்லை; அவரவர் தம்தம் ஊரிலி
ருந்துகொண்டு தங்கள்தங்கள் ஊழியங்களை நிறைவேற்றிவந்
தார்கள். இந்தத் தீர்க்கதரிசிகளின் புத்திரர் தங்கள் பிதாபோ
லிருந்து வயதில் முதிர்ந்த தலைவருக்குக் கீழ்ப்பட்டிருந்து அவர்



ஏவும் வேலைகளைச் செய்துவந்தார்கள். இவர்கள் படித்து
வந்த பாடங்கள் கீதவாத்தியமும் பாட்டும் என்று திட்டமாய்
விளங்குகிறது. தங்கள் போதனையைக் கேட்க ஜனங்களைச்
சேர்க்கவும், அவர்கள் மனதைப் பரவசப்படுத்தவும் பாட்டும்
கீதமும் மிகவும் அநுகூலமுள்ளதென்று அவர் அறிந்து, அதில்
பழக்கினார் என்று சொல்லவேண்டியது (1 சாமு. 10. 5.).
விசேஷமாய் நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய கருத்துகளை
ஆராய்ந்து படிக்கிறதும், மற்றவர்களுக்குப் போதிக்கிறதும்
அவர்களுடைய காலக்ஷேபமாய் இருந்தது.

சாமுவேல் என்பவர் செய்த இந்த விசேஷமுயற்சியால்
தேசமெங்கும் நியாயப்பிரமாணம் விளம்பரமாகவும், அதன்
ஆவிக்குரிய உண்மையான கருத்து பிரசித்தமாகவும் சன்மார்க்
கம் வளர்ந்தோங்கவும் இடமாயிற்று.

இப்பொழுது நாம் தீர்க்கதரிசியின் அந்தியகாலத்து நடபடிக்
கைகளைச் சொல்லி அவருடைய வரலாறுகளை முடிக்கவேண்
டியதுதான். அவர் இஸ்ரவேலரின் தேசவாழ்வுக்கும், ராஜ்ய
வாழ்வுக்கும் ஏதுவான சகல ஒழுங்குகளையும் தேவசித்தப்படி
நிறைவேற்றி முடித்து கிழவனும் நரைவயதுள்ளவருமானார்.
அவர் இஸ்ரவேலர் அனைவரையும் கடைசியாய்ப்போதித்து
உணர்த்தும்படி கூடிவரச்செய்து அவர்களை நோக்கி: "இதோ,
நான் கிழவனும் நரைவயதுள்ளவனுமானேன்; நான் என் சிறு
வயதுமுதல் இந்நாள்வரையும் உங்களோடு சஞ்சரித்துவந்தேன்;
இதோ, இருக்கிறேன்; நான் யாருடைய எருதை எடுத்துக்
கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்?
யாருக்கு அநியாயஞ்செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்
தேன்? யார் கையில் பரிதானம்வாங்கி கண்சாடையாய் இருந்
தேன்? சொல்லுங்கள். அப்படியானால் அதை உங்களுக்குத்
திரும்பக்கொடுப்பேன்" என்றார். அதற்கவர்கள்:—

"நீர் எங்களுக்கு அநியாயம் செய்யவுமில்லை,
எங்களுக்கு இடுக்கண் செய்யவுமில்லை,
ஒருவர் கையிலும் ஒன்றும் வாங்கவுமில்லை"

என்றார்கள். உடனே அவர் அரசனையும், ஆண்டவரையும்
அவர்களுடைய அறிக்கைக்குச் சாட்சியாகவைத்துவிட்டு அப்
பால் அவர்களுக்குத் தமது கடைசி போதனையைச் செய்தார்.
தேவன் அவர்களுக்குப் பாராட்டின முந்தின தயவுகளையும்,
அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ச் செய்த அக்கிரமங்களையும்
அவர் எடுத்துக் காட்டினதோடு, கடைசியாக ஒரு அரசன்

வேண்டுமென்று ஜனங்கள் விரும்பிய விஷயமானது தேவசித்தத்துக்கு விரோதமானதென்றும் உணர்த்தி, அதற்கு அத்தாட்சியாக வழக்கமாய் மழைபெய்யாதகாலத்தில் மழைபெய்யவும் இடிமுழங்கவும் செய்தார். உடனே ஜனங்கள் பயந்து தங்கள் குற்றத்தை உணர்ந்து சாமுவேலைப்பார்த்து, “நாங்கள் சாகாதபடிக்கு தேவனாகிய கர்த்தரிடத்தில் உமதடியாருக்காக வேண்டிக்கொள்ளும்; நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும் எங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக்கொண்டோம்” என்று புலம்பினார்கள். சாமுவேல் தீர்க்கதரிசி மறுபடியும் அவர்களை தைரியப்படுத்தி கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போகாதபடிக்கு எச்சரித்தார்.

சாமுவேல் தமது ஜீவகாலத்தில் சவுலைமாத்திரமல்ல, அவனுக்குப் பின்னாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட தாவீதையும் அபிஷேகஞ்செய்து ராஜ்யபாரத்தில் நடந்த பல மாறுதல்களைத் தன் கண்ணாலே கண்டு, நல்ல நரைவயதிலே மரணமடைந்தார். அவருடைய மரணசெய்தி இஸ்ரவேல் நாடெங்கும் விளம்பரஞ்செய்யப்பட்டது. அவர்கள் எல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து அவருக்காக துக்கங்கொண்டாடி ராமாவிலிருந்த அவருடைய சொந்தப்பூமியிலே அவரை அடக்கம்பண்ணினார்கள். அவர் மரிக்குமுன் தமது ஆஸ்தியில் ஒரு பாகத்தை தேவாலயவிஷயத்துக்காக மனாசே வசமாகக் கையளித்தார் (1 நாளா. 26. 28.). அவர் மரணத்துக்குப் பின்பு யூதர் அவரை அதிக கண்ணியமாய் மதித்துவந்தார்கள்; இஸ்ரவேலர்மாத்திரமல்ல, மற்றவர்களும் அவரை நன்குமதித்துவந்தார்கள். சாமுவேலின் எலும்புகள் அர்க்கேடன்,(Arcadius)என்னும் சக்கிரவர்த்தியால் யூதேயாவிலிருந்து கொனஸ்தந்திநோபுரிக்கு மகா ஆடம்பரத்தோடு கொண்டுபோகப்பட்டதென்று ஜெரோம் என்பவர் சொல்லியிருக்கிறார்.

சாமுவேல் என்பவர் இஸ்ரவேலருக்குள் ஸ்தாபிக்கப்பட்ட தேவஆளுகையின் கோடிக்கல்போலும், ராஜஆளுகையின் அஸ்திபாரக் கல்போலும் இருந்தார். அவருடைய பேர் புதிய ஏற்பாட்டில் மூன்றுதரம் சொல்லப்பட்டிருக்கிறது (அப். 3. 24; 13. 20. எபி. 11. 32.) அப்போகிரிப்பா ஆகமக்காரரும் சாமுவேல் தீர்க்கதரிசியை விசேஷித்துப் பேசியிருக்கிறார்கள். “சாமுவேல் என்னப்பட்ட தீர்க்கதரிசி ஒரு ராஜ்யத்தை எடுப்பித்து ஜனங்களின்பேரிலே பிரபுக்களை அபிஷேகம்பண்ணினார். அவர் கர்த்தருடைய வேதத்தின்படியே சபையை நடுக்கேட்டுவந்தார் என்பதுந்தவிர, கர்த்தர் யாக்கோபின்பேரிலே மறுபடியும் கண்ணோக்கமாய் இருந்தார். தீர்க்கதரிசியாகிய சாமுவேல் உண்மையும் ஜாக்கிரதையுமுள்ளவராக அறியப்பட்டார் என்பதுந்தவிர, அவருடைய தீர்க்கதரிசனமும் சத்தியமுள்ளதென்று எல்லாராலேயும் அறியப்பட்டுமிருந்தது. அவருடைய சத்துருக்கள் அவரைச்சூழ்ந்து நெருங்கினபோது வல்லமையுடைத்தான கர்த்தரைநோக்கிக் கூப்பிட்டு பால்குடிக்கிற செம்மறியாட்டின் குட்டியைப் பலியிட்டார். அப்போது கர்த்தர் வானத்திலிருந்து இடியிடித்து சூறாவளிக்காற்றிலே தம்முடைய சத்தத்தைக் கேட்கப்பண்ணினார்; தீரோ என்கிற பட்டணத்தின் பிரபுக்களையும், பெலிஸ்தியருடைய சகல எஜமான்களையும் அழித்துப்போட்டார். அவர் காலம்பண்ணுமுன் தாம் யாதாமொருவரிடத்திலே கையிடை, பரிதானம், ஒருஜோடு பாதரட்சைமுதலாய் வாங்கினதில்லை என்பதற்குக் கர்த்தருக்கு முன்பாகவும், அவராலே அபிஷேகம்பண்ணப்பட்டவர்களுக்கு முன்பாகவும் சாட்சிகொடுத்தார். ஒருவராகிலும் அவரைக் குற்றப்படுத்தக்கூடாமல்போச்சுது. அவர் காலம்பண்ணின பின்னும் தீர்க்கதரிசனம் சொல்லி இராஜாவுக்குவரும் முடிவையும் முன்னறிவித்து பூமியிலிருந்து சத்தத்தை எழும்பப்பண்ணி, பொல்லாதவர்கள் எல்லாரும் அழித்துப்போடப்படுவார்களென்று முன்னற அறிவித்தாராம்” என்று எழுதப்பட்டிருக்கிறது. (ஏசு-சீரா-ஞானம். 46. 16–23.)



# SAUL.

## சவுல் அரசன்.

வேதாகமத்தில் அடங்கிய சரித்திரங்களைப் போதநாவிஷயமாய் நாம் தியானித்துக்கொண்டுவரும்போது ஒவ்வொரு மனுஷருடைய குணசீலமும் நமக்குத் தெளிவாக வெளியாகிறதோடு, அவர்களைத் தேவன் தமது திவ்விய ஞானத்தின்படியே நடத்திவந்த தேவச்செயலின் வரலாறும் பரிஷ்காரமாய் வெளியாகிறது. மெய்யாகவே தேவநடத்துதல்கள் ஒரு போங்காய் இராமல் பல போங்காய், பல காலத்திலும் பலவாறாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதாகையால் அதின் ஆழத்தையும் அந்த

இரகசியங்களின் பூட்டையும் எவரும் கண்டுபிடிக்கக் கூடாததாயிருக்கின்றது. என்றாலும் ஆளுகையில் இடைக்கிடையே விளங்கும் அவரது பரிசுத்தம், பாவ விரோதம், தேவநேசம் என்பவைகள் மாத்திரம் அந்தரங்கத்தில் மறைந்துகிடவாமல் பகிரங்கமாய் மிதந்துகிடக்கிறதென்று சொல்லவேண்டியது. மண்ணான மனுஷனுக்குத் தேவ இரகசியங்களைப்பற்றிய கவலைதான் என்னத்துக்கு? அவன் அவருடைய பரிசுத்தத்தைக் கண்டு தன் பாவத்தை வெறுத்து, அவருடைய நேசத்தைக் கண்டு தன்னை அவருக்கு அடிமையாக ஒப்புக்கொடுக்கிறதைப்பார்க்கிலும் வேறென்ன வேண்டியது? தேவநடத்துதல் முழுவதையும் நாம் நுட்பமாய் ஆராயும்போது இருதயத்தில் நேர்மையுள்ளவர்கள்போல் அவர் பிரியப்படுகிறார் என்றும், அவர்களுக்குத் தமது விசேஷ பராமரிப்பை அருளுகிறார் என்றும், துன்மார்க்கர் என்னவேஷமாய்த் தங்களை நல்லவர்கள்போல் காட்டும்படி பிரியப்பட்டாலும் அவருடைய பார்வைக்கு அருவருப்பானவர்களாய் இருக்கிறார்கள் என்றும், சீக்கிரத்திலாவது பிந்தியாவது அவருடைய கோபாக்கினையின் கலசம் அவர்கள் சிரசின்மேல் வார்க்கப்பட்டு அவர்கள் அதமாவார்கள் என்றும் தெளிவாய்க் காண்கிறோம்.

சிலருடைய சரித்திரங்களில் ஒருகாலத்தில் அவர்கள் தேவ தயவைப் பெற்று அவருடைய ஆசீர்வாதம் என்னும் குடைக்குள் இருந்தார்களென்றும், அவருடைய தயவும் தாட்சண்யமும் அவர்கள்மேல் நிழலிட்டிருந்ததென்றும், பிற்பாடு அவர்களே தேவகிருபைக்கு முற்றிலும் அந்நியராகி அவரால் புறக்கணிக்கப்பட்டு தேவ கோபத்துக்கும் ஆக்கினைக்கும் உள்ளானார்களென்றும் தெரியவருகிறது. அப்படிப்பட்ட சரித்திரங்களைக்கொண்டு தேவனை அநீதியுடையவரென்று ஒருக்காலும் சொல்லலாகாது. அவர் நீதியும் பரிசுத்தமுமுள்ள தேவன்; அவருடைய வழிகளில் பிசகுகள் இல்லை. நமது மனதில் பலவித மாறுதல்கள் காணப்பட்டபோதிலும் அவருடைய செய்கையில் யாதொரு மாறுதல்களும் இல்லை. நம்முடைய மனதின் கோணலுக்கு தேவனுடைய நடத்துதல்கள் விபரீதமாய்க் காணப்படுகிறதென்றே சொல்லவேண்டியது. நேர்மையும் செம்மையுமான இருதயத்தாரோ அம்மாறுதல் தேவச்செயலில் அல்ல, மனுஷருடைய இருதயமாறுதலில் இருக்கிறதென்று கண்டுகொள்ளுவார்கள். சவுல் அரசனுடைய சரித்திரத்தை நாம் ஆராயும்போது மேலே சொல்லிய குறிப்புகள் பெரும்பாலும் உண்மைபெறுகிறதாகக் காணலாம். தேவனுடைய



கரத்தினாலே ஒருகாலத்திலே சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்ட சவுல் சிலகாலத்திற்குப்பின் அதே கரத்தால் ஆசனத்திலிருந்து தள்ளப்பட்டு, தேவகோப வெளிப்படுத்தலுக்கு ஒரு அத்தாட்சியுமானான். அவனுடைய சரித்திரத்தின் துவக்கத்தில் நாம் அவனைப் புகழவும் அவன்பட்சம் பேசவுமான பல நல்ல குறிப்புகள் அடங்கியிருக்கின்றன. அக்காலத்தில் அவனிடத்தில் விளங்கிய குணமும் செய்கையும் எவரும் வியந்துகொள்ளக்கூடியதாகவே இருக்கிறது. இவனுடைய குணத்தின் நற்சீர் எவ்விதமாய்ச் சீர்கெட்டுப்போய்விட்டதென்பது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. சவுல் தன் ஆயுளைச் சன்மார்க்கத்தில் துவக்கி துன்மார்க்கத்தில் முடிவடையச் செய்கிறான். இப்படிப்பட்ட குணம் ஆகவே ஆகாது. நாம் நமது உத்தமத்தில் மரணபரியந்தம் உண்மையாயிருந்தால்மாத்திரம் ஜீவ கிரீடத்தைப் பெறுவோம்.

சவுலின் சரித்திரத்தின் பொதுவான தன்மையைப்பற்றி இம்மட்டும் சொல்லியது போதும் என்று எண்ணுகிறோம். இனி சவுல் அரசனைப்பற்றிய வரலாறுகளைச் சொல்லுவோம். சாமுவேல் தீர்க்கதரிசியின் அந்தியகாலத்திலிருந்த இஸ்ரவேலர் தேவாளுகையை அவமதித்து மற்ற ஜாதியாருக்குள்ளிருந்த விதமாய் ஒரு அரசனால் ஆளப்படவேண்டுமென்று விரும்பினார்கள். அவ்விருப்பத்தின்படியே சவுல் என்பவனை முதலாம் அரசனாக சாமுவேல் தீர்க்கதரிசி அபிஷேகஞ்செய்தார். இராஜபட்டம் மிகவும் கனம்பொருந்திய ஒரு ஸ்திதியாய் இருந்தபோதிலும் அந்த கனம் சவுலுக்குள் அடங்கியிருக்கவில்லை. அந்த அரசன் இஸ்ரவேலருடைய சத்துருக்களைத் துரத்தும் சவுக்காகவும், இஸ்ரவேலரைக் குத்தும் முள்ளாகவும் இருக்க வேண்டுமென்று தேவ ஏற்பாடாக இருந்தது. ஏனெனில் இவ்வரசமுறை ஏற்படுத்தப்பட்டதைக்குறித்துத் தேவன் ஓசியா என்னும் தீர்க்கதரிசியைக்கொண்டு “நான் கோபத்திலே உனக்கு ராஜாவைக் கொடுத்தேன்” என்று அறிவித்திருக்கிறார். (ஓசி. 13, 11.)

சவுல் என்பவன் பென்யமீன் கோத்திரத்திலுள்ள “கீஸ்” என்னும் பேருள்ள மகாபராக்கிரமசாலியான ஒருவனுடைய குமாரனாயிருந்தான். அவனுடைய குடும்பத்தில் சவுல்தான் அழகும் ஆணவமுமாய் இருந்தான் என்று சொல்லவேண்டியது. அவனைக் கண்டவுடனே ஆட்கள் அச்சப்படும்படியான எல்லாரைப்பார்க்கிலும் வளர்ந்தவனாய் இருந்தான். இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை.

எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழாய் இருக்கத்தக்க உயரமுள்ளவனாய் இருந்தான். அவனுடைய வளர்த்தியும் அழகும் அவனை அரசனாக்கிவிட்டதென்று நாம் எண்ணவே கூடாது. தேவன் இஸ்ரவேலருடைய மனோபோக்குக்கேற்ற ஆளைக்கொண்டு தமது சித்தத்தை நிறைவேற்றும்படி நினைத்தார் என்றே சொல்லவேண்டியது.

சவுல் ஒருநாள் காணாமற்போன தன் தகப்பனுடைய கழுதைகளைத் தேடும்படி வீட்டைவிட்டுப் புறப்பட்டான். அவன் அவைகளைப் பல இடங்களிலும் தேடியும் கண்டுபிடியாமல் தேவச்செயலால் நடத்தப்பட்டு சாமுவேல் தீர்க்கதரிசியினிடம் வந்தான். தேவன் சவுல் வருவதை முந்தினநாளிலேயே தீர்க்கதரிசிக்கு அறிவித்து அவனை அபிஷேகம்பண்ணும்படிக் கட்டளையிட்டபடியினாலே சாமுவேல் அவனை வாழ்த்தி, அவனுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச்செய்து கடைசியாக "தைலக்குப்பியை எடுத்து அவன் தலையின்மேல் வார்த்து அவனை முத்தஞ்செய்து, கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம்பண்ணினார்" என்று சொல்லி, இந்த அபிஷேகம் தேவதீர்மானத்தின்படி நடத்தப்பட்டதேயன்றி விளையாட்டல்ல என்பதை சவுல் உணர்ந்துகொள்ளும்படி அன்று அவன் காணும் பல அடையாளங்களையும் நிறைவேறும் சம்பவங்களையும் சொல்லி வாழ்த்திவழிவிட்டனுப்பினார். இக்காலங்களில் இராசாவாகிறது லேசல்ல; அவன் திரண்ட சேனைகளைச் சம்பாதித்து, பெரிய யுத்தங்களை நடத்தி, ஆயிரமாயிரம்பேர் இரத்தத்தை ஆறுபோல் தன் பாதத்தின்கீழ் ஓடக்கண்டு தன்னை அரசனாக்கிக்கொள்ளவேண்டியதாக்கும். தேவன் ராஜனாக்கும் ஆளுக்கு சேனையும் வேண்டாம், கோட்டையும் வேண்டாம், ரதகஜதுரகபதாதியும் வேண்டாம், விருதும் வேண்டாம், பீரங்கியும் வேண்டாம்; அவருடைய அருளே எல்லா ராஜ முஸ்திப்பாயுமிருக்கும் என்பதைக் குறிக்கும்படிக்கே தாம் அபிஷேகஞ்செய்த முதலாம் அரசனின் பட்டாபிஷேகச்சடங்கு இவ்வளவு சுலபத்தில் முடிந்திருக்கிறதென்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

சவுல் "சாமுவேலைவிட்டுப் போகும்படி திரும்பினபோது தேவன் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார்" என்று சொல்லியிருக்கிறது. அவனுடைய நோக்கம், தீர்மானம், அபிப்பிராயம், நினைவு எல்லாம் திடீரென்று மாறிவிட்டதென்பதே அதின் கருத்து. அப்படி மாற்றும் மருந்து அந்த அபிஷேக



எண்ணெயில் இருந்தது என்று நினைக்கக்கூடாது; அது மந்திர எண்ணெயும் தந்திரதைலமுமாயிருக்கவில்லை. அந்த அபிஷேகத்தோடு தேவ அருள் இறங்கினதால் அவ்வித மாறுதல் உண்டானதேயன்றி வேறல்ல. இது ஆவிக்குரிய மாறுதலைக் குறியாமல் அந்தஸ்துக்குரிய மாறுதலைக் குறிக்கிறதென்று சொல்லவேண்டியது. சவுல் அபிஷேகம் பெற்றவுடனே குடியானவனுக்குரியதும், சமுசாரிக்குரியதுமான போக்கும் கருத்தும் அவனைவிட்டு முற்றிலும் மாறி தொன்றுதொட்டு ராஜவமிசத்திலிருந்து தோன்றின ராஜத்துவமும், ராஜயூகமும் அவனுக்கு உண்டாயிற்று. முந்தின சரித்திரங்களில் நாம் கவனிக்கிறபடி யோசேப்பு என்பவர் எகிப்தின் அதிகாரியாக ஒரு அதிகாரியின் வீட்டிலிருந்து பழகவும், மோசே என்பவர் தளகர்த்தனாகும்படி சுமார் 40 வருஷம் பார்வோனின் அரண்மனையிலிருந்து பழகவும் தேவன் சித்தங்கொண்டார். சவுலின் விஷயத்திலோ அப்படி முன் பரீட்சையில்லாமல் திடீரென்று கழுதை தேடப்போன குடித்தனப்போக்கிலிருந்து இராஜத்துவ போக்கில் நிலைநிறுத்தினார். தேவன் எவர்களை எந்த நிலைமைக்கு உயர்த்துகிறாரோ அந்த நிலைமைக்குரிய கிருபையையும் அருளுகிறார். சிலர் அதை உணர்ந்துகொள்ளாமல் தேவனால் உயர்த்தப்படும்போது தங்களை அதற்கு அபாத்திரர் என்று சொல்லி பின்வாங்கிக்கொள்ளுகிறதுண்டு. அவர்கள் தங்களைத் தாழ்த்துகிறவர்கள் என்று உலகத்தாரால் மெச்சிப் பேசிக்கொள்ளப்பட்டாலும் தேவசித்தத்தை அல்லத்தட்டினவர்களாகவே இருக்கிறார்கள். தேவனால் விசேஷித்த நிலைமைக்கு உயர்த்தப்படுகிறவர்களை தேவபக்தி விஷயத்திலும் உயர்ந்தவர்களென்று நாம் நினைக்கக்கூடாது. தேவன் தமது சித்தத்தை நிறைவேற்றுவதற்கு தகுதியான கருவிகளாகக் காணப்படுகிறவர்கள் யாரோ அவர்களைக்கொண்டு தமது சித்தத்தை நிறைவேற்றிவருகிறார். ஆதலால் சன்மார்க்கத்தில் தேறி பக்திநிலையில் வழுவாதிருப்போரைக்கொண்டுதான் தேவன் தமது விசேஷித்த செயல்களை நடத்திவருவார் என்று நாம் நினைக்கவேகூடாது. சவுலைப்போல் அநேகர் கர்த்தருக்காகவும் அவருடைய இஸ்ரவேலுக்காகவும் அநேக பெரிய விஷயங்களை நிறைவேற்றினாலும் தங்கள்மட்டும் இன்னம் குணப்படாமலிருக்கலாம்.

சவுல் போகிறவழியில் தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய கூட்டம் அவனுக்கு எதிராக வந்தது. அப்பொழுது தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதால் அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொன்னான். இதை ஜனங்கள் கண்டு

அதிசயப்பட்டார்கள். இது சவுலுக்கு மெய்த்தேவபக்திக்குரிய மாறுதல்கள் உண்டாகியிருக்கிறது என்பதையல்ல, அவனுக்கு தேவனுடைய கண்களில் விசேஷித்த கிருபை கிடைத்திருக்கிறதென்று பலரும் அறிந்து பேசிக்கொள்ளவும், அந்த வழியாக ஜனங்களுடைய இருதயத்தில் அவனுடைய அரசாட்சிக்குப் பாதையை உண்டுபண்ணவும் ஆண்டவர்செய்த தயவாயிருக்கலாம். கடைசிநாளில் அநேகர் ஆண்டவரைநோக்கி, “கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நீதிதவறா நியாயாதிபதியானவர், அக்கிரமக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்; உங்களை அறியமாட்டேன்” என்பார். (மத். 7. 22, 23.)

சவுல் என்பவன் சாமுவேல் தீர்க்கதரிசியால் அபிஷேகம் பெற்றவுடனே தன் டம்பத்தையும் ராஜரீக மகத்துவத்தையும் வெளிப்படுத்தத் துணியவே இல்லை. அவன் அச்செய்தியைத் தன் நெருங்கிய பந்துக்களுக்குமுதலாய் வெளிப்படுத்தவுமில்லை; சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளவேண்டுமென்று ஆத்திரப்படவுமில்லை. அவனைப் பகிரங்கமாய்த் தெரிந்து ஏற்படுத்தும்படி “மிஸ்பாவில்” சகல இஸ்ரவேலரும் கூடிவந்திருந்தபோதுமுதலாய் சவுல் தன் தாழ்வை உணர்ந்து, நான் இவ்வளவு கனத்துக்கு எம்மாத்திரம்? என்பதுபோல பதுங்கியிருந்துகொண்டான். அவனைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். ஜனங்கள் அவனைக் கண்டவுடனே “இராஜா வாழ்க” என்று ஆர்ப்பரித்தார்கள். இவ்வண்ணமாய் அவன் முடிசூட்டப்பட்டபின்பும் அவன் ஒரு பெருமையும் பாராட்டாமல் தன் வீட்டுக்குப் போனான். சிலர்மாத்திரம் அவனை அரசனென்று மதித்து அவனுக்குப் பின்சென்றார்கள். கிரீடாதிபதி குடியானவனைப்போல தன் குடிசையை நோக்கிப் போவதை வேறு அநேகர் கவனித்து, அவனைப் பழித்து “இவனா நம்மை இரட்சிக்கப்போகிறவன்” என்று சொல்லி, அவனுக்குக் காணிக்கை கொண்டுவராமல் அவனை அசட்டைபண்ணினார்கள்; அவனோ காதுகேளாதவன்போல இருந்தான். இவ்விஷயங்களில் சவுல் பாராட்டின குணங்களை நாம் மெச்சிக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. இம்மாதிரியை ஒவ்வொருவனும் பின்பற்றிவந்தால் நலமாயிருக்கும். இவன் இயல்பாய்க் கீழ்ப்படிதலுள்ள மகனாயும், தகப்பனை மதிக்கிறவனாயுமிருந்தான்; தனக்கு வாழ்வும் உயர்வும் வந்தகாலத்தில் அவன்



மனமேட்டிமையடையாமல் மௌனமாய் இருக்கிறான். இக்காலத்தில் முதியோரைப்பார்க்கிலும் அதிக அறிவும் உயர்ந்த அந்தஸ்தும் அடைகிற வாலிபர் சவுலுடைய முன்மாதிரியைப் பின்பற்றுவது அவசியம். அப்படிக்கில்லாமல் முதியோருக்கு விரோதமாக அவர்கள் தங்கள் பிரயத்தனங்களை ஆரம்பிக்கிறதையும், அவர்கள் ஒன்றுமறியாத மூடரைப்போல நிதானியாமல் பேசுகிறதையும் நாம் கல்விகற்று தேறின வாலிபரிடம் காண்கிறோம். இப்படிப்பட்ட குணசாலிகள் சபை அலங்காரிகளாய் இருக்கிறார்கள் என்பது மெய்யானாலும், அதினாலே மெய்த்தேவபக்தியுடையவர்களென்று தீர்மானித்துவிடலாகாது.

சவுல் தன்னை வெளியரங்கமாக்கும்படி தேவன் குறித்த காலம் வருமட்டும் தன் வீடுமட்டாய் இருந்து தன் பூர்வ பயிர்த்தொழிலைப் பார்த்துவந்தான்; அவன் தன் இராஜாங்க ஊழியத்தை தேவனுடைய காலங்களுக்கு ஒப்புவித்திருக்கிறான். இவ்வளவு கனமும் மேன்மையும் அவனுடைய சிரசின்மேல் வெளிப்பட்டிருந்தபோதிலும் முன்போல் ஏர்பிடித்து உழவும், மாடுகளை ஓட்டவும் பின்தாங்கவில்லை. “அற்பனுக்கு வாழ்வுவந்தால் அர்த்த இராத்திரியில் குடைபிடிப்பான்” என்று ஒரு பழமொழி உண்டு. தேவனால் இராஜபட்டத்துக்கு ஏற்படுத்தப்பட்டவனிடத்தில் அற்பனுடைய புத்தியிருக்குமா? ஒருநாள் அவன் தன் வழக்கம்போல் மாடுகளைத் தன் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுவரும்போது ஊரில் அமளியும் பெருங்கூச்சலும் உண்டாகக் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான். அப்போது யாபேசின் மனுஷரை அம்மோனியர் முற்றுகைபோட்டிருக்கிறார்கள் என்றும், விடுவிப்பாரில்லாமல் அலறிக்கொண்டு தானாதிபதிகளை அனுப்பியிருக்கிறார்கள் என்றும் கேள்விப்பட்டு, தேவனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால் அவன் கோபமூண்டவனாகி, ஏரிணைமாட்டைத் துண்டித்து வந்த தானாதிபதிகள் கையிலே கொடுத்து, இஸ்ரவேல் நாடெங்கும் அதைக் காட்டி சவுலின் பின்னாலும் சாமுவேலின் பின்னாலும் யுத்தத்துக்குப் புறப்படாதவனுடைய மாடுகளுக்கு இப்படியே செய்யப்படும் என்று விளம்பரம்பண்ணிச் சொல்லச்சொன்னான். அதைக் கண்டவுடனே மூன்றுலட்சத்து முப்பதினாயிரம்பேர் யுத்தசன்னத்தராய்ப் புறப்பட்டு எதிரிகள் மேல்விழுந்து அவர்களை முறியடித்து யாபேசு ஊராரை விடுதலைசெய்தார்கள். இந்த வெற்றி சவுலுக்கு அதிக கனத்தை உண்டாக்கிற்று.

உடனே சவுலின் பட்சத்தார் தங்கள் புது அரசனின் ஆதிக்

கத்தைக்குறித்து அலட்சியமாய்ப் பேசின ஆட்களை அதம்பண்
ணவேண்டுமென்று அட்டகாசம்பண்ணினார்கள். அதற்கு அர
சன் இடங்கொடாமல் அன்றையதினம் தனக்குண்டான
ஜெயம் தன்னுடைய புஜபலத்தாலுண்டானதாயிராமல் கட
வுளின் வலியகரத்தினா லுண்டானதென்று ஜனங்களுக்கு
உணர்த்தி அமளியை அடக்கினான்.

சவுல் என்பவன் எந்த உள்நோக்கத்தைக் கருதி இந்தப்படி
நடந்துகொண்டானோ நமக்குத் தெரியாது. என்றாலும் தேவச்
செயலை உணரும் உணர்ச்சியும் அவருடைய நடத்துதலுக்கே
காரியங்களைப் பொறுமையோடு ஒப்புவிக்கிறதுமான சுபா
வத்தை ஒவ்வொருவரும் எக்காலத்திலும் கையாடவேண்டி
யது என்பதை இதினாலே கற்றுக்கொள்ளுகிறோம். பரி. பவுல்,
பிரியமான சகோதரரே, பழிவாங்காதிருப்பீர்களாக என்று
புத்திசொல்லுகிறார் (ரோம. 12. 19.). ஆனால் அதிகாரம் தங்
கள் கையிலிருந்தும், தங்களுக்குத் தாழ்ந்தவர்களுடைய குற்
றங்களைச்சகித்து பொறுமையாய்க் காலங்கழித்தவர்களுண்டா?
மேலான அதிகாரிகளால் சங்கடங்களை அநுபவித்து உபத்
திரவப்படுகிறவர்கள், நாம் பொறுத்துக்கொள்வதுதான் கடமை,
நாம் சகித்துக்கொள்வதுதான் நலம் என்பார்கள். இவ்வித
குணத்துக்கு இயலாப்பொறுமை, அல்லது சக்தியில்லா சகிப்பு
என்று சொல்லவேண்டியது. சிட்சித்து ஆக்கினைசெலுத்தும்
படியான நிலைமையிலிருந்து அதை நிறைவேற்றாமல் கிறிஸ்து
நமக்கு மன்னித்ததுபோல நாம் ஒருவருக்கொருவர் மன்னிப்
பதே சரியான பொறுமை அல்லது சகிப்பு என்று சொல்ல
வேண்டியது.

இம்மட்டும் நாம் சொல்லியசவுலின் சரித்திரம் எவரும்
பின்பற்றி நடக்கத்தக்க நல்ல மாதிரிபோல காணப்பட்டதே;
ஆனால் அதின் பிரகாசம் இதுமுதல் மங்குகிறதாக இருக்கிறது.
அவனுடைய குணங்களின் கேடும், பிரகாசத்தின் மறைவும்
நமது தியானத்துக்கு வருகிறது. மனுஷ ஜீவியத்தில் இப்படிப்
பட்ட மாறுதல்கள் காணப்படுவது அபூர்வம் அல்ல. கிறிஸ்து
மார்க்கப் போராட்டச்சாலையில் பந்தயம் பெறத்தக்கவர்கள்
என்று பலரும் மதிக்கத்தக்கதாக நடந்துகொண்ட எத்தனையோ
பேர் தங்கள் குணம்மாறி, பிரகாசம்மங்கி, தங்கள் தங்கள் போ
ராட்டத்தில் ஓய்ந்து அழிவின் பாதாளத்தில் வீழ்ந்துவிட்டார்
கள் என்று புலம்பத்தக்கதான முடிவை உடையவர்களாய்
இருக்கிறார்கள். தேவனுடைய எத்தனையோ யுத்தங்களை நடத்தி,
அவருடைய சத்துருக்களில் எத்தனையோபேரை மடங்கடித்து,



தங்களைச் சுற்றிநின்ற எத்தனையோ பாவங்களை வென்று கீழ்ப்
படுத்தி, சாத்தானைத் தங்களுடைய ஆத்தும அரண்மனைக்கு
அநேக மைல் தூரத்துக்கப்பால் துரத்திவிட்டு, வெற்றிவிருதைக்
கையிலேற்றி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே
எங்களுக்கு ஜெயம் கிடைக்கப்பண்ணின தேவனுக்கு ஸ்தோத்
திரம் உண்டாவதாக என்று உலகமறிய ஜெயகீதம்பாடின
எத்தனையோபேர் மறுபடியும் பாவச்சங்கிலிகளைத் தங்கள்
இருதயத்தின் கழுத்திலும், புயத்திலும், காலிலும் மாட்டிக்
கொண்டு பாதாளவாய்க்கு நேராய்ச்சென்று தலைகீழே விழுந்து
விட்டார்கள் என்றும், விழப்போகிறார்கள் என்றும் நாம் அடிக்
கடி கவனிக்கிறோமல்லவா? கிரீடமும், பட்டத்து அங்கியும்,
செங்கோலும், சிங்காசனமும், ரதகஜதுரகபதாதிகளும், பொன்
வெள்ளி இரத்தினங்களும் சவுலுக்கு மோசமான ஏதுக்களாக
இருந்ததென்று பார்க்கிறோம். சவுலுக்குமாத்திரமல்ல, வேறு
அநேகருக்கும் இப்படியே இருந்திருக்கிறது. வாழ்வைக்
கையாள வகைதெரியாமல் தாழ்வை அடைந்தவர்களின்
தொகைக்கு ஒரு கணக்கில்லை. சவுல் அபிஷேகம்பெற்று
சுமார் இரண்டு வருஷத்துக்குள்ளாக அவனிடத்தில் ஆதியில்
வெளிப்பட்ட அன்பு, பொறுமை, தைரியம் முதலான சிறந்த
குணங்கள் மாறி அதற்குப் பதிலாக மாய்மாலமும், கோழைத்
தனமும், அற்பபுத்தியும் குடிகொண்டிருக்கக் காண்கிறோம்.
ஒருகாலத்தில் தேவசகாயம் என்னும் கோட்டைக்குள்ளிருந்து
அதன் கொத்தளங்களின்மேல் உலாவித் திரிந்ததுபோலக்
காணப்படுகிற சவுல், பின்பு சகல ஜாதியாராலும் நிந்திக்கப்
பட்டு சத்துருக்களால் அவமதிக்கப்பட்டிருக்கிறான். அவன்
பேரைக் கேட்கிறவர்கள் எல்லாரும் அவனைப் பழிக்கத்தக்க
தாக அவ்வளவு தாழ்வை அடைந்தான். "நீ கர்த்தரோடிருந்
தால் அவர் உன்னோடிருப்பார், நீ அவரைத் தேடினால் அவர்
உனக்கு வெளிப்படுவார், அவரை நீ விட்டாயேயாகில் அவர்
உன்னை விட்டுவிடுவார்." (2 நாளா. 15. 2.)

ஜனங்கள் ஒரு அரசன் வேண்டுமென்று அபயமிட்டதற்
குப் பிரதான முகாந்தரம், பெலிஸ்தியர் தங்கள் பக்கத்தி
லிருந்து அடிக்கடி துன்பப்படுத்தினதினாலேதான். சவுலை
அபிஷேகஞ்செய்ததோடு பெலிஸ்தியர் துன்பம் ஒருவாறு
ஓய்ந்துபோம் என்று அவர்கள் பெரிய நினைவாய் இருந்தார்
கள்; அது அபத்தமாய்ப்போயிற்று. சவுல் சிங்காசனமேறின
மகத்துவத்தினாலோ, செங்கோல்பிடித்த செருக்கினாலோ, கிரீ
டகர்வத்தினாலோ, வேறெந்த முகாந்தரத்தாலோ பெலிஸ்திய

ருடைய அழிம்புகளைப்பற்றிக் கிஞ்சித்தும் சிந்தித்தானில்லை. புதிய அரசனின் மௌனம் பழைய சத்துருக்களின் துன்பமாகிய ஆயுதங்களைக் கூர்மையாக்கிப் பிரயோகிக்கிறதற்குத் தகுந்த சாணைக்கல்போல் இருந்தது. சவுல் பெலிஸ்தியரைக் குறித்து ஏனோதானோ என்றிருக்கிற செய்கையை இஸ்ரவேலர் கவனித்து முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் திடீரென்று யுத்தசத்தம் கேட்கப்பட்டது. பெலிஸ்தியர் சவுலின் எல்லைக்குள்வந்து தாணையம்போட்டார்கள்; அதினாலே அதிக நெருக்கமும் சங்கடமும் இஸ்ரவேலருக்கு நேரிட்டது. அவர்கள் தங்கள் சத்துருக்களால் உண்டான பயங்கரத்தால் அருண்டு அநேகர் ஓட்டம் பிடித்தார்கள். அதே காலத்தில் சவுலின் கீழ்ப்படிதலையும் தேவன் பரீட்சித்தார். அந்தப் பரீட்சையிலும் அவன் விழுந்துபோய்விட்டான். எப்படியெனில், சாமுவேல் தீர்க்கதரிசியின் ஆலோசனைப்படி செய்யவும் அவரால் ஒரு விசேஷித்த பலியிடுதல் நடக்கவும் வேண்டுமென்று தேவன் தீர்மானித்து, அவருக்காக ஏழுநாள் காத்திருக்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் சவுல் ஆத்திர புத்தியாலும், துணிகரத்தாலும் மேற்கொள்ளப்பட்டு கட்டளைக்கு விரோதமாய் தீர்க்கதரிசி வந்து சேருமுன் பலிசெலுத்திவிட்டான். சவுல் காத்திருக்கவேண்டுமென்று கடவுள்குறித்த நேரத்திற்குள்ளாக தீர்க்கதரிசியானவர் வந்துசேர்ந்து அவனுடைய துணிகரத்தைப்பற்றிக் கேட்டார்; உடனே சவுல் வீண்போக்குகளைச் சொன்னான். ஜனங்கள் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், நீர் இன்னும் வராததையும், பெலிஸ்தியர் யுத்தத்துக்கு நெருங்குவதையும் நானே கவனித்து, யுத்தம் துவங்குமுன் ஆண்டவருடைய சகாயத்தைக் கோரிக்கொள்ளுவோமென்று நானே துணிந்து, பலியைச் செலுத்தினேன் என்று சொன்னான். அந்தப் போக்கைத் தீர்க்கதரிசி ஒப்புக்கொள்ளாமல் அதை மாய்மாலமான போக்கு என்று தள்ளி, சவுலைப் பார்த்து:—

புத்தியீனமாகச் செய்தீர்,
தேவகட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்,
உம்முடைய ராஜ்யம் நிலைநிற்காது,
கர்த்தர் வேறொரு அரசனை நியமித்துவிட்டார்.

என்று சொன்னார். இதினாலே சபையிலுள்ள சாதாரண ஜனங்கள் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களாய் இருந்தபோதிலும் குருக்களாகிய தேவபணிவிடைக்காரரால் மாத்திரம் நடப்பிக்கப்படவேண்டிய ஊழியங்களைத் தங்கள் அவ



சரத்துக்கு அநுகூலமாக நிறைவேற்றிக்கொள்ளக் கூடாதென்றும், ஆராதனை பலிகள் முதலிய நியமங்களில் இயல்பாகவே ஒரு விசேஷித்த புண்ணியங்கள் இருக்கிறதாக நினைத்து அவைகளை நிறைவேற்றக் கூடாதென்றும், புறம்பாக ஒரு மனுஷனிடத்தில் விளங்கும் மதாபிமானத்தைக்கொண்டு தேவனுக்கும் அந்த மனுஷனுக்குமுள்ள அபிமானத்தை அளந்துவிடக் கூடாதென்றும் நன்றாய் விளங்குகிறது. சவுல் தேவகட்டளையைத் தன் அநுகூலத்துக்கு ஏற்றதாக அர்த்தப்படுத்தி நடந்துகொண்டானேயன்றி, அதின் சுயகருத்துக்கு தன் கிரியைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ளவில்லை. இதுவும் அவனுடைய பிசகுகளில் ஒன்று. இவன் தன் நடக்கையால் தேவஊழியத்தைத் தன் ஊழியத்துக்குத் தாழ்வாக்கி, தன்னைத் தீர்க்கதரிசிக்கு மேற்பட்டவனாக ஜனங்கள் மதிக்கும்படி பிரயாசப்பட்டிருக்கிறான். இதே குற்றத்தினிமித்தம் உசியா என்ற அரசன் குஷ்டரோக தண்டனை பெற்றான் (2 நாளா. 26. 19.). சவுலின் இந்த நடக்கையைக் கேள்விப்படுகிற சிலர் அவன்பட்சத்தில் ஏற்பட்டு, இது ஒரு குற்றமா? ஆபத்துக்குப் பாவமில்லை அல்லவா? இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் சவுல் நடந்துகொண்ட விதத்தைப் புகழ்ந்துகொள்ளவேண்டியதேயன்றி குற்றஞ்சாட்டிப் பேசுவது தருமமா என்பார்கள். அப்படிப்பட்டவர்கள் பாவங்களைப் பல கணக்காய் மதித்து, பாவிகளைப் படித்தரமாக்குகிறவர்களைப்போல் இருக்கிறார்கள் என்று சொல்லவேண்டியது. தேவனுடைய பூரண பரிசுத்தத்தையும், அவருடைய கட்டளைகளின் பாரதூரத்தையும், அவருடைய ஊழியங்களின் உயர்வையும் கணிக்கிறவர்கள் இவ்விஷயத்தில் சவுலின்பட்சம் பேசவேமாட்டார்கள். பாவியே! நீ ஒருநாளும் உன் பாவங்களில் இன்னது சிறிது, இன்னது பெரிது என்று பிரித்து நினையாதே; உன்னை ஒருநாளும் உலகத்துப் பாவிகளோடு ஒத்துப்பார்த்து மதிக்காதே; உன் கிரியைகளை தேவனுடைய பிரமாணங்களோடும், உன்னைத் தேவகுமாரனோடும் ஒப்பிட்டுப்பார்த்து கணிப்பதே ஞான மார்க்கத்தின் தராசும், உரைகல்லுமாயிருக்கிறதென்று அறிந்துகொள்ளவேண்டியது. அநேக பாவிகள் தம் தம் மனதுக்கேற்ற தராசையும் உரைகல்லையும் ஏற்படுத்திக்கொண்டு தங்களைத் தேவபுத்திரராக வீணாய் எண்ணிவருகிறார்கள்; அவர்கள் கடைசியில் ஏமாந்துபோவார்கள் என்பதை உனக்கு முந்தியே சொல்லிவைக்கிறேன்.

சவுலின் ராஜ்யபாரம் முடிவடையுமென்று எச்சரிக்கை

பட்டபோதிலும் அவனுடைய மனந்திரும்புதலுக்கு ஏதுவாக அது இன்னும் சிலகாலம் நிலைத்திருந்தது. ஆனால் நன்மைக்கேதுவான யாதொரு மாறுதல் அவனில் உண்டாகவில்லை. தீர்க்கதரிசி கூறின தீக்ஷண்யமான தீர்ப்புகளால் அவனுடைய ஆத்துமா சீரடையவில்லை; அவன் தன் இருதயத்தைத் தாழ்த்தினதற்கு யாதொரு திருஷ்டாந்தரத்தையும் நாம் காண்கிறதில்லை; தன் பாவத்தை மன்னிக்கும்படி ஒரு விண்ணப்பமும் அவன் செய்யவில்லை. இப்படிப்பட்ட குணமுடைய பல பாவிகளை நாம் சந்திக்கிறதுமுண்டு. தேவனுடைய பயங்கரங்களாலும், தீர்ப்புகளாலும் குத்துண்டு மாறுதலுடைய ஆத்துமாக்கள் முற்றிலும் கிருபையிலிருந்து விழுந்துவிட்டார்கள் என்று சொல்லவேண்டியது. சாமுவேல் மேலே சொல்லிய வண்ணம் சவுலைக் கண்டித்ததினிமித்தம் சவுல் மூர்க்கம் கொண்டு அவரோடு இனி கலந்துகொள்ளக்கூடாதென்று நினைத்து சீலோவிலிருந்து வேறொரு ஆசாரியனை அழைப்பித்து வைத்துக்கொண்டான். அநேகர் தேவனுடைய சத்தியங்களை பகிரங்கமாய்க்கூறி தங்கள் இருதயத்தைக் கீறிவிடுகிற குருக்களையும், தங்கள் நடக்கைகளையும் ஆலோசனைகளையும் தடுத்துப்போடுகிற குருக்களையும் வேண்டாமென்று அகற்றி, தங்கள் மனதுக்கேற்ற குருக்களையும், ஆட்களையும் சவதரித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை பழைய சவுல் அரசனின் சகோதரர் என்று சொல்லலாம்.

சவுல் சாமுவேலின் அந்நியோந்நியத்தைப் பிரித்ததுமுதல் ஆறுதலற்றவனாகவே இருந்தான்; அவன் யோசனையும் புத்தியும் சீராய் இருக்கவில்லை; எப்போதும் மனக்கவலை மூண்டவனைப்போலவே காணப்பட்டான்; சத்துருக்கள் நெருங்கும்போது மதிமயங்கி இன்னபடிச் செய்யவேண்டுமென்று அறியாதிருந்தான். என்றாலும் தேவன் சவுலைப் புறக்கணித்தாலும் தமது ஜனமாகிய இஸ்ரவேலைக் கைவிடவில்லை. ஒருதரம் சவுல் அறுநூறுபேரோடு மனங்கலங்கியிருக்கையில் ஆண்டவர் யோனத்தானாகிய சவுலின் குமாரனைக்கொண்டு இஸ்ரவேலுக்கு பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டார். உடனே சவுல் பக்திவேஷம் பூண்டு கர்த்தருக்குப் பலிபீடத்தைக் கட்டினான். அதுதான் அவன் கட்டின முதலாம் பலிபீடம். வெளியரங்கமான ஆராதனையும், பலிகளும் செலுத்தி அவ்விதமாக தேவதயவைச் சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற மாய்மாலகுணம் சவுலுக்குப் பூரணமாயிருந்ததென்று தெளிவாய் விளங்குகிறது இந்தக் குணம் கர்த்தருக்கு அருவருப்பானதாயிருந்தது.



சவுலின்மேல் கூறப்பட்ட ஆக்கினைத் தீர்ப்புகளோடுகூட தேவன் அவனைத் தமது ஜனங்களின் சத்துருக்களைத் தாழ்த்தும் கருவியாகவும் பிரயோகித்தார். ஆதலால் சவுல் இஸ்ரவேலர் பட்சமாய் நின்று அநேக சண்டைகளை நடத்தி, சத்துருக்களை முறியடித்து வெற்றியடைந்துவந்தான். அவன் அடைந்த வெற்றிகளும் கீர்த்திகளும் அதிகப்படவே, [illegible] பொல்லாப்பை உணரும் சுபாவமும், அதிலிருந்து மனந்திரும்பி தன்னைத் தாழ்த்திக்கொள்ளும் சுபாவமும் அவனிடத்தில் காணப்படவே இல்லை. தேவன் பாவிகள்மேல் நீடிய பொறுமையுடையவராய் இருக்கிறார்; அவர்களைச் சிலதரம் மற்றவர்களைத் திருத்தும் கருவியாகவும் பிரயோகிக்கிறார். இது அவர்கள் தங்கள் குணப்படுதலை அடையும்படியான தவணைபோலவே இருக்கிறது. ஆனால் பெரும்பாலும் தவணைபெற்ற பாவிகளும், கிருபைகளை அநுபவிக்கும் பாவிகளும் தங்கள் குறைவை நினைவுகூருகிறதை முற்றிலும் மறந்து, அவர்கள் தேவனால் அநுபவிக்கும் சலாக்கியங்கள் எல்லாம் தாங்கள் தேவசமுகத்தில் உத்தமராயிருக்கிறதினாலேதான் கிடைக்கிறதென்று தப்பாய் எண்ணி, கடைசியில் நித்தியநிந்தையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.

இதன்பின்பு சவுலின் குணத்தையும் அவன் தேவகட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதையும் தேவன் வேறொருவிதமாய்ப் பரீட்சித்தார். இந்தப் பரீட்சையிலும் சவுல் தவறிப்போனான். எப்படியெனில், அத்தேசத்தில் அமலேக்கியர் என்ற ஒரு ஜாதியார் இருந்தார்கள்; அவர்கள் இஸ்ரவேலருக்கு கொடிய சத்துருக்களாயிருந்து கானான் தேசத்திற்குள்ளாக இஸ்ரவேலருக்கு வழிவிடவேமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். ஆகாயபட்சிகளுக்குப் பாதையைத் தடுப்பாருண்டோ? வனத்து மிருகங்களுக்கு வழியடைப்பாருண்டோ? இல்லையே. அவையனைத்தும் தம்தம் இஷ்டம்போல் இடமாறி இன்பம் அனுபவிக்கிறதல்லவா? மனுஷனுக்கு மனுஷன் வழியடைப்பானேன்! மேலும் பூமியும் அதன் நிறைவுகளும் கர்த்தருடையது; அப்படியிருக்க கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வழியைமறித்த அமலேக்கியரை அவர் லேசில் விடுவாரோ? இல்லை; அவர்களை அதம்பண்ணுவோம் என்று தீர்மானித்திருந்தார். அந்தத் தீர்ப்பை அவர்களில் நிறைவேற்றும்படி சவுலைக் கருவியாக்கி சாமுவேல்தீர்க்கதரிசியைக்கொண்டு கட்டளையிட்டார். முன்னே சவுலின் பெருமையாலும், கீழ்ப்படியாமையாலும், அவன்

தன் இஷ்டப்படி ஒரு புதுகுருவைத் தேடிக்கொண்டதாலும், பிரிந்திருந்த சாமுவேல் தீர்க்கதரிசி தேவகட்டளையின்படி மறுபடியும் ஒருதரம் சவுலைச் சந்தித்து அமலேக்கியரை அடியோடு அதமாக்கும் கட்டளையைக் கூறினார். அந்தக் கட்டளை என்னவென்றால், "சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறதென்னவென்றால்..........இப்போதும் நீ போய் அமலேக்கை மடங்கடித்து அவனுக்குண்டானதெல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம்வைக்காமல் புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக்கடவாய் என்றார்" என்று சொன்னார்.

தேவசித்தம் சாமுவேலின் மூலமாய் மறுபடியும் தனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் இந்தப் பெரிய வேலையைத் தேவன் தன் வசத்தில் ஒப்புவித்திருக்கிறதால் நாம் அவருக்குப் பிரியமாய்ப் போய்விட்டோமென்றும், சவுல் எண்ணிக்கொண்டு உடனே புறப்பட்டான். இதனோடு அவனுக்குள் மறைவான இன்னொரு ஆவலுமிருந்தது. அதாவது, இந்தச் சமயத்தில் கொழுத்த கொள்ளையை நமக்குச் சம்பாதித்துக்கொள்ளவேண்டியது என்பதுதான். சவுல் தன் சகல சந்தோஷத்தோடும் அகமகிழ்ந்து சண்டைக்குப் போனான். யுத்தகளத்துக்குப் போகிறவர்கள் பெரும்பாலும் குருவின முகத்தோடு காலெடுத்துவைப்பார்களே! இவன் அப்படியல்ல. ஏனெனில் முடிவும் ஜெயம் என்றும் தன் வீட்டைக் கொள்ளைப்பொருளால் நிரப்புவதும் நிச்சயம் என்றல்லவா இவன் உள்ளத்திற்குத் தெரிந்திருக்கிறது. அவன் இரண்டுலட்சத்துப் பதினையாயிரம் சேவகரோடு படையெடுத்துப்போய் அமலேக்கியரை முறியடித்துக் கொன்று, வெற்றிப்பாட்டோடே கர்மேல்மலைக்கு வந்து அதின்மேல் ஜெயஸ்தம்பம் ஒன்று கட்டினான். ஆனால் அமலேக்கியருடைய இராசாவையும், ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமானவைகள் எல்லாவற்றையும் அழித்துப்போட மனதில்லாமல் தப்பவைத்து, உதவாதவைகளைமாத்திரம் முற்றிலும் அழித்துப்போட்டார்கள். ஒருவேளை அமலேக்கியரின் ராஜா திரண்டபணத்தையும் இரத்தினங்களையும் சவுலின் பாதத்தில் கொட்டி தன் உயிரைக் காப்பாற்றக் கேட்டிருக்கலாம்; சவுலும் அவனுடைய வெகுமானத்துக்கு ஆசைப்பட்டு அவனைப் பாதுகாத்திருக்கலாம். எப்படியும் இதினாலே சவுல் கர்த்தருடைய ஊழியங்களில் தந்திரமாய் நடந்துகொண்டான்



என்று பரிஷ்காரமாய் விளங்குகிறது. இப்படிப்பட்ட குணத்தை நாம் அடிக்கடி பார்க்கிறதுண்டு. அநேகர் உலகப்பிரகாரமான வாழ்வுகளிலும் வரும்படிகளிலும் தங்களுக்கு அனுகூலமிருக்குமட்டும் தேவ ஊழியத்தை வெகு முயற்சியோடும், களிப்போடும் செய்வார்கள். அவைகள் குறைகிறதாகக் கண்டவுடனே, அல்லது தங்களுடைய சுயநயத்துக்கு சற்று நஷ்டம்வருகிறதென்று கண்டவுடனே தங்களை அந்த இடத்திலிருந்து அல்லது ஊழியத்திலிருந்து விலக்கிக்கொள்ளுவார்கள். இப்படிப்பட்டவர்களை சவுலின் தம்பிமார் என்று தடையின்றி தீர்க்கலாம். இவ்விஷயத்தில் சவுல் சிங்காசன மன்னனாக விளங்காமல் ஜெயில்புள்ளிபோல் காணப்படுகிறான். இவன் கர்த்தருடைய பொருளை அவருடைய கட்டளையின் கூண்டுக்குள்ளிருந்து திருடுகிறான்; தேவஊழியத்தைச் செய்து தேவனைத் திருடுகிற தொழிலை வெளிப்படுத்துகிறான். யோசுவாவின் காலத்து ஆகான் என்ற திருடனும் இவனும் ஒரு தராசில் ஏறுவார்கள்போல் இருக்கிறது. சவுலின் செய்கை ஆண்டவருக்குப் பொறுக்கவில்லை. அவர் மறுபடியும் சாமுவேல் தீர்க்கதரிசிக்குத் தரிசனமாகி சவுலின் பொல்லாப்பைச் சொல்லி அநுதாபப்பட்டார். சாமுவேல் மறுபடியும் சவுலண்டை போய் அவனை உணர்த்தவேண்டுமென்று விரும்பினார். அவர் தூரத்தில் போகவே ஆடுமாடுகளின் பெருங்கூச்சல் கேட்டது. சாமுவேல் தன்னிடம் வருகிறதைச் சவுல் கண்டு எதிர்கொண்டுபோய் அவரை வாழ்த்தினான். அவர் அந்த வாழ்த்துதலைக் கேட்டு மயங்கிப்போகாமல், சவுலின் தப்பிதத்தை எடுத்துக்காட்டி கண்டித்தார். அவனோ தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளாமல் ஜனங்கள்மேல் சாட்டி, ஜனங்கள் ஆண்டவருக்குப் பலிசெலுத்தும்படி இவைகளைக் காப்பாற்றிவைத்திருக்கிறார்கள் என்று சொன்னான். அதற்குச் சாமுவேல், கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் சர்வாங்க தகனபலிகள் அவருக்குப் பிரியமாயிருக்குமோ? "பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்று சொன்னதோடு, நீ கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே கர்த்தர் உம்மையும் புறக்கணித்துத் தள்ளினார் என்றும் சொன்னார். இந்த வார்த்தைகள் சவுலின் கர்வத்தை அடக்கிவிட்டது. அவன் வெட்கப்பட்டு தன் மரியாதையைக் காத்துக்கொள்ளும்பொருட்டு சாமுவேலின் சால்வையைப் பிடித்திழுத்து சமாதானங்கேட்டான். அவரோ கர்த்தருடைய விரோ

தியோடு நமக்கேன் உறவு என்று தம் வழியே போக நடந்
தார். உடனே அவன் பிடித்திருந்த சால்வைத்துண்டு கிழிந்
துபோயிற்று. அப்பொழுது சாமுவேல் கர்த்தர் இன்று உம்
மிடத்திலிருந்த இஸ்ரவேலின் அரசாட்சியையும் கிழித்துவிட்டு
வேறொருவனுக்குக் கொடுத்தார் என்று சொன்னார். இதினாலே
ஒருவன் தன் குற்றத்தை எவ்வளவு சாமர்த்தியமாய் மறைக்கி
றான் என்றும், மற்றவர்கள்மேல் எவ்வளவு சாட்டிவிட்டாலும்
குற்றமில்லையென்று எண்ணுகிறான் என்றும் பார்க்கிறோம்.
மேலும் தன் மனதுக்குள் தப்பிதம் என்று அறிந்திருக்கிற குற்
றங்களைமுதலாய் வெளிக்குக் குற்றமல்லவென்று சொல்லுகி
றதும் பெரும்பாலும் வழக்கமாயிருக்கிறது. ஒரு பாவியைத்
தன் குற்றத்தை உணரவும் அதை அறிக்கையிடவும்பண்ணு
கிறது மகா வருத்தமான வேலை. இமயமலையையும் இலையிலை
யாய்ப் பறித்திடலாம்; இருதயமலையை இளகச்செய்ய இய
லாதேபோகிறது. சவுல் என்ன சம்பிரதாயமாய்ப் பேசினாலும்
சாமுவேல் அவனை விடவில்லை. அவர் தேவனுடைய வார்த்
தைகளையும் தண்டனைகளையும் அவன்மேல் பின்னும் பொழி
ந்து, "இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய்சொல்லுகிறது
மில்லை, தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதுமில்லை,
மனம் மாற அவர் மனுஷனல்ல" என்றார். அப்பால் சவுல்
இனி நாம் நியாயம் சொல்லி தீர்க்கதரிசியோடே சண்டை
செய்வது பிரயோசனமில்லை என்று பக்திவேஷம் பூண்டு,
தீர்க்கதரிசியின் வார்த்தைகளால் உணர்வடைந்தவனைப்போல்
மாய்மாலம்பண்ணி, "நான் பாவஞ்செய்தேன்" என்று அறிக்
கையிட்டு தன்னோடேகூட தேவனைப் பணிந்துகொள்ளவேண்டு
மென்று அவரைக் கேட்டான். சாமுவேல் அதற்கு இணங்கி
சவுலுடன் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணினார். ஒருவேளை
சவுலின் பாவங்களைத் தேவன் மன்னித்து அவனுக்கு நல்மன
தைக் கொடுக்கவேண்டுமென்று மன்றாடியிருக்கலாம். கடைசி
யாக அமலேக்கியரின் அரசன் உயிரோடிருக்கிறதைக் கேள்
விப்பட்டு, அவனைக் கொண்டுவரும்படிக் கட்டளையிட்டு,
கர்த்தருக்கு முன்பாக அவனைக் கொன்றுபோட்டார். கர்த்
தாவே, உம்முடைய சத்துருக்களை நீர் இப்படியே அழிப்பீராக.

"நான் பாவஞ்செய்தேன்" என்று சவுல் சொன்னவாசகம்
உத்தம மனஸ்தாபத்தினாலுண்டான வார்த்தையாக சிலர் எண்
ணலாம். அது முற்றிலும் மாய்மாலமான வார்த்தையேயன்றி
வேறல்லவென்று பின்வரும் குறிப்புகளால் அறியலாம். சவுல்
ஒருதரமல்ல, மூன்றுதரம் "நான் பாவஞ்செய்தேன்" என்று



அறிக்கையிட்டிருக்கிறான் (1 சாமு. 15. 24, 30: 26. 21.). ஆத
லால் மாய்மாலமான பாவ அறிக்கைசெய்வதில் இவனைச் சமர்த்
தன் என்று சொல்லலாம். இவனுடைய அறிக்கை சாமு
வேலின் உறவை நாடிப்பண்ணின அறிக்கையேயன்றி வே
றல்ல. தன்னுடைய துணிகரமான நடக்கைகளால் தீர்க்கதரிசி
மனவருத்தப்பட்டுப்போனாரே அப்படிப்பட்ட மனவருத்தம்
ஏன்? வேண்டும்; நாம் அவரால் பட்டம்பெற்ற மரியாதைக்
காவது தாழ்ந்துபோகிறது நல்லதென்று நினைத்து, "நான்
பாவஞ்செய்தேன்" என்று அறிக்கையிடுகிறதாய் இருக்கிறது.
மேலும் சாமுவேல் சவுலைக் கோபித்துப் பேசினபோது "நான்
கர்த்தருடைய கட்டளையையும், உம்முடைய வார்த்தையையும்
மீறினதினாலே பாவஞ்செய்தேன் என்கிறான். ஆகவே அவன்
செய்யும் அறிக்கை சாமுவேலைத்தொட்டு உண்டாகிறதுபோ
லிருக்கிறதேயன்றி தன் இருதயத்தின் உத்தம மனஸ்தாபத்தால்
உண்டாகிறதாகத் தோன்றக்காணோம். இப்படியே நாம் ஒரு
வருக்கொருவர் இருக்கும் உலக சிநேகம் முறிந்துபோமே என்று
மாத்திரம் நினைத்து நமது குற்றத்தை அறிக்கையிடுவோம். இது
சவுலின் குணந்தான். மேலும் இது சுய பாவஅறிக்கையாயி
ராமல் பதிலாளின் பாவஅறிக்கைபோலிருக்கிறது. நான் குற்
றவாளியல்ல, என்பேரில் பழிபோடக்கூடாது, அது ஜனங்க
ளால் நடந்தது, அவர்களுடைய முரட்டாட்டம் இவ்வளவுக்
குக் காரணமேயன்றி வேறல்ல என்று சாமுவேல் நினைத்துக்
கொள்ளும்படியாகவே பேசி, கடைசியாக அவர்களுக்காக
தான் பாவஅறிக்கைசெய்கிறதுபோலிருக்கிறது. மேலும் ராஜ
பட்டம் எங்கே போய்விடுமோ என்று பயந்து அறிக்கையிடு
கிறான். இஸ்ரவேலின்மேல் ராஜாவாய் இராதபடிக்குக் கர்த்
தர் உம்மைப் புறக்கணித்துத் தள்ளினார் என்ற வார்த்தைகளைக்
கேட்டவுடனே குலைநடுங்கி, ஐயோ! கிரீடம் தலையிலிருந்து
உருண்டுவிழப்போகிறதே, செங்கோலைப்பிடிக்கும் நேரம் கிட்
டுதே என்று கலங்கி, "நான் பாவஞ்செய்தேன்" என்று கீழே
விழுந்துபேசுகிறான். "எட்டினால் குடுமியைப் பிடிப்பான்,
எட்டாவிட்டால் காலைப் பிடிப்பான்" என்ற பழமொழிக்கு
இசைவாக இவன் பேசுகிறதுபோலிருக்கிறது; மேலும் தன்
வார்த்தைகளால் தன் மரியாதையைமாத்திரம் காப்பாற்றப்
பார்க்கிறான். என்னோடேகூட பணிந்துகொள்ளும்படி வாரும்
என்று சாமுவேலைக் கூப்பிட்டதும், அவருடைய சால்வை
யைப்பிடித்து இழுத்ததும் எல்லாம் அவன் தன் மரியாதையைக்
காப்பாற்றவே என்று விளங்குகிறது. கடைசியாக அவன்

பின்னும் என்ன சொல்லுகிறான்:—நான் பாவஞ்செய்தேன் என்று சொன்ன வார்த்தையோடு வார்த்தையாய் இப்போதும் என் ஜனத்தின் மூப்பர்முன்பாகவும் இஸ்ரவேல் முன்பாகவும் நீர் என்னைக் கனம்பண்ணவேண்டுமென்று கேட்கிறான். இந்த வாசகம் சவுலின் பாவ அறிக்கையை நிறைகல்போலும், அதன் உள்ள தன்மையை வெளிப்படுத்தும் உரைகல்போலவும் இருக்கிறதல்லவா? இந்த வரலாறுகளால் நாம் படித்துக்கொள்ளுகிற ஒரு விசேஷித்த போதனை என்னவென்றால்; தேவனை ஒருவகையில் கனப்படுத்தி வேறுவகையில் கனவீனப்படுத்தக்கூடாது. அவருடைய கட்டளையை மீறி கனவீனப்படுத்தி பலியைச்செலுத்தி கனப்படுத்தக்கூடாது. மாய்மாலமான கிறிஸ்தவர்கள் எல்லாம் சவுலின் சரித்திரத்திலுள்ள இந்தப் பாகத்தை உணர்ந்து தங்கள் மாய்மாலத்திலிருந்து விலகும்படி பிரயாசப்படவேண்டியது. அவர்கள் தங்களுக்கு உலகத்திலிருக்கிற வெளியரங்கமான பேரும் பிரஸ்தாபமும் சேதப்படாதபடி மாயவேஷ உடையால் தங்களை மூடிக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மாய்மால உடையைக் கிழித்துவிடும் காலத்தில் எல்லாம் வெளியாகி, அவரவருடைய சரியான நிறம் தெரியவரும்.

சவுலுடைய சரித்திரத்தின் துவக்கத்தில் நாம் அவனைக் குறித்து எவ்வளவு உயர்ந்த எண்ணமுடையவர்களாய் இருந்தபோதிலும் இப்பொழுது அதை மாற்றவேண்டியதுதான். ஏனெனில் மேலே சொல்லிய வரலாறுகளுக்குப் பின்பு தேவ ஆவி அவனிலிருந்து விலகி ஒரு பொல்லாத ஆவி அவனை ஆண்டுகொண்டு அலைக்கழித்தது என்று காண்கிறோம். சவுல் தன் கிரீடத்தையும், சிங்காசனத்தையும், செங்கோலையும் இழந்ததோடு தேவஆவியையும் இழந்தான். அவன் இழந்த எல்லா மேன்மையிலும் பிந்தினதே அதிக விசேஷமுள்ளது. பரிசுத்த ஆவி ஒரு நெஞ்சுக்கு அவசியமென்பதை, அந்த ஆவியைப் பெற்று அதினால் ஆளப்படுகிறவர்களும், அவரை ஒருகாலத்தில் பெற்றுபின்பு இழந்துபோனவர்களும் நன்றாய் அறிவார்கள். மற்றவர்களுக்கோ இந்த வாசகம் பைத்தியம்போலக் காணப்படலாம். அந்த ஆவியை இம்மட்டும் பெறாதவர்கள்

ஆவியே நாலு காற்று
திசையிலுமிருந்து
வந்துலர்ந்த எலும்பு
உயிரடைய செய்யும்.



புல்லறுத்த வனத்தில்
இறங்கும் பனிபோல
பாவம் அறுத்துள்ளத்தில்
அமையும் தேவாவியே

என்று தினந்தோறும் மன்றாடவேண்டியது. அந்த ஆவியை ஒருதரம் பெற்றிருக்கிறவர்கள் சவுலைப்போல இழந்துபோகாதபடிக்கு "உம்முடைய பரிசுத்தாவியை எங்களிலிருந்து எடுத்துப்போடாதேயும்" என்று மன்றாடவேண்டியது.

சவுலை அலைக்கழித்த ஆவியானது தனக்கு நன்மை செய்தவனுக்குத் தீமைசெய்யவும், உதவிசெய்கிறவனை உதைக்கவும், உபகாரம் செய்கிறவனுக்கு அபகாரம் செய்யவும் ஏவும் பொல்லாத ஆவியாய் இருந்தது. சவுல் அந்த ஆவியால் அலைக்கழிக்கப்படுகிறதைக்கண்டபலர் அதற்கு வைத்தியஞ்செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடைய வைத்திய சாஸ்திரத்தின்படி தேவனால் விடப்பட்ட பொல்லாதஆவி மனுஷனால் வாசிக்கப்படுகிற கின்னர ஓசையால் ஓட்டம்பிடிக்கும் என்று தீர்மானித்து அந்த முறையைக் கையாடினார்கள். தேவகோபத்தினாலே சவுலைப் பிடித்திருந்த நோய்க்கு கின்னரக்கீதமா மருந்தாகும்? அவர்கள் தேவனுடைய வழிகளை அறிந்தவர்களாய் அந்த நோய்க்கு வைத்தியஞ்செய்ய முயன்றால் இதுவா சரியான மருந்து? சவுல் தன் பாவங்களை உணரவும், மனஸ்தாபப்படவும், அதை தேவனிடத்திலும் சாமுவேலிடத்திலும் அறிக்கையிடவும், உபவாசிக்கவும், தேவகட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் செய்திருப்பார்களானால் அதல்லவா அந்த வியாதிக்குச் சரியான வைத்தியமாகும். அவர்கள் செய்கிற வைத்தியமோ எலும்பு துண்டாய் முறிந்துபோன கைக்கு மேலே வெண்ணையைத் தடவி வைத்தியஞ்செய்கிறதுபோலிருக்கிறது. போசன விஷயங்களின் பேதங்களாலுண்டாகிற நோய்களும் உண்டு; ஆத்தும விஷயங்களின் பேதங்களாலுண்டாகிற நோய்களுமுண்டு. அந்தந்த நோய்களின் மூலத்தைக் கண்டறிந்து அததற்குரிய மருந்துகளைப் பிரயோகிக்கிறவனே புத்திமான்.

சவுல் தேவனால் பட்டாபிஷேகத்திலிருந்து தள்ளப்பட்டவுடனே அவரே தாவீது என்னும் ஒரு பாலியனை அவன் ஸ்தானத்தில் சாமுவேல் தீர்க்கதரிசியைக்கொண்டு பட்டம் சூட்டினார். இந்த தாவீதுதான் சவுலின் நோயை மாற்றும்படி கின்னரம் வாசித்துவந்தார். இவருடைய சரித்திரம் இது

முதல் சவுலின் சரித்திரத்தோடு கலந்து வருகிறதாயிருந்தாலும்,
நாம் அவைகளை ஒழித்து பின்னாலே இவையைப்பற்றி விபர
மாய்ச் சொல்லுவோம். இப்போது சவுலின் சரித்திரத்தை
மாத்திரம் கவனித்துக்கொண்டுபோவோம்.

சவுலின் முந்தினகாலத்திலும் அவன் பிந்தியகாலம் அதிக
கேடுள்ளதாயிருந்தது. அவனுக்கு அருளப்பட்டிருந்த ஆவி
யானது, பாவியைப் பரிசுத்தஞ்செய்யும் உடன்படிக்கையின்
ஆவியாய் இராமல் ஆளுகைக்குரிய வரத்தை அருளும் ஆவி
யாய்மாத்திரம் இருந்தது. பூர்வ நியாயாதிபதிகளுக்கும் தற்
கால அரசர் பலருக்கும் இதே ஆவியே கொடுக்கப்பட்டும்
கொடுக்கப்படுகிறதுமாயிருக்கிறதென்று சொல்லலாம். சவுல்
அந்த ஆவியை இழந்ததுமுதல் ஆளும் திறமையும், வீரமும்,
துணிவும், அதற்குரிய யூகமும் அவனிடத்தில் இருக்கவில்லை.
தேவன் ஒவ்வொரு மனுஷனுடைய ஊழியத்துக்குரிய விசேஷ
வரத்தை அவனுக்குக் கொடுக்கலாம். அதனாலே அவன் பாவ
மன்னிப்புக்குரிய ஆவியைப் பெற்றிருக்கிறான் என்று சொல்
லக்கூடாது. சவுலுக்கு இந்தப் பெரிய மாறுதலுண்டானது
முதல் அவனுடைய சாவுவரையும் மனச்சஞ்சலமும், திகிலும்,
பெருமையும், வஞ்சகமும், பகையும், விரோதமும், குரூரமும்,
கொலையுமுடையவனாய் இருந்தானென்று விளங்குகிறது.
சவுல் தேவனால் புறக்கணிக்கப்பட்டவுடனே அவனுக்கு அட
ங்கி அஞ்சியிருந்த பக்கத்து அரசர் பலர் அவனுக்கு விரோத
மாய் எழும்ப ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்டவர்களில்
பெலிஸ்தியர் முதல் மனுஷராய் இருந்தார்கள். சவுல் அவர்
களை எதிர்க்கும்படி திரண்டசேனையோடு போனபோதிலும்,
பயங்கொண்டு யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் இருக்
தான். அவன் பயம் அவனுடைய சேனையனைத்தையும் அதை
ரியப்படுத்திவிட்டது. ஆகவே பெலிஸ்தியர் அவர்கள் பக்கத்
திலின்று தூஷிக்கவும், நிந்திக்கவும், பந்தயம்போட்டு சண்
டைக்குக் கூப்பிடவும் ஏதுவாயிற்று. கடைசியாக தாவீது
என்ற வாலிபன்போய் அந்த யுத்தத்தில் ஜெயங்கிடைக்கப்
பண்ணினார். இதன் வரலாறுகளைப் பிந்திய சரித்திரத்தில்
விபரமாய்க் காட்டுவோம். எப்படியும் இதுமுதல் சவுலின்
குணமானது கேட்டிலிருந்து அதிகக் கேட்டுக்குள்ளாயிற்று.
தனக்கும் தன் ஜனத்துக்கும் கீர்த்தியைச் சம்பாதித்த தாவீதை
அவன் அதுமுதல் பகைத்து கொலைசெய்துவிடவேண்டு
மென்று பலதரம் முயன்றான். தேவனுடைய ஆசீர்வாதம்
தாவீதின் சிரசில்இருக்கிற தென்பதை சவுல் அறிந்து உள்ளுக்



குள் அவனைவிட்டுப் பயந்து அவனைப் பகைத்தான். ஆனாலும்
எதிர்த்துக் கெடுத்தால் உலகம் நம்மைப் பழிக்குமென்று அடுத்
துக் கெடுக்கப்பார்த்தான். தேவனுடைய பிள்ளைகள் தங்கள்
சத்துருக்களை எதிர்த்து ஜெயிப்பார்கள்; பிசாசின் பிள்ளைகள்
தங்கள் சத்துருக்களை அடுத்து ஜெயிக்கப்பார்ப்பார்கள். சவுல்
தாவீதைத் தன்னண்டை சின்னரம் வாசிக்கவேண்டுமென்று
பட்சத்தோடு கூப்பிட்டு இரண்டுதரம் ஈட்டியால் அவனைக்
குத்தப்பார்த்தான்; தேவச்செயலால் எறிந்த ஈட்டிக்கு இரண்டு
தரமும் அவன் தப்பிக்கொண்டான். பின்பு அவன் தாவீதைக்
கொலைசெய்யும்படி தன் மகனிடத்திலும் தன்னையடுத்த பிர
புக்களிடத்திலும் சொல்லித் திட்டப்படுத்தினான். அவனு
டைய மகனும் தாவீதும் நகமும் சதையும்போல ஐக்கியமாய்
இருந்ததால் அந்தப் பிரயத்தனம் வாய்க்கவில்லை. அப்பால்
சில வருஷங்களாய் தேசவாழ்வை எவ்வளவும் கவனியாமல்
தாவீதைக் கொல்லுவதே வேலையாய்த்திரிந்து வேட்டைநாய்
முசலைத் துரத்துவதுபோல் வனங்களிலும், மலைகளிலும், பட்
டணங்களிலும் அவனைப் பின்தொடர்ந்து கொல்லப் பிரயா
சப்பட்டான். சவுல் தாவீதோடு உறவாகி தன் மகளையும்
அவனுக்குக் கட்டிக்கொடுத்து அவனை சேனைகளுக்குத் தலைவ
னாக்கினபோதிலும் உள்ளுக்கு அவனைக் கொலைசெய்ய நோக்க
மாகவே இவ்வளவு காரியங்களையும் அவனுக்குச் செய்தான்.
தன் மகளைக்கொண்டே அவனைக் கொலைசெய்யவும் பிரயாசப்
பட்டான். ஒருவனைக் கொல்லும்படிப் பெண்கொடுக்கிற
பாதகருமுண்டா? ஐயோ! பகை என்ன பிரயத்தனமெல்லாம்
செய்கிறதென்று பார்க்கிறோம். அந்நியரை அடுத்துக்கெடுக்
கும் பாதகரே! அவர்களுக்குப் பெண்ணைக்கொடுத்துக் கெடுக்
கும் தோஷிகளே! நீங்கள் உங்கள் பொல்லாப்பிலிருந்து ஓய
மாட்டீர்களா? பராபரனுடைய பிள்ளைகளை எதிர்த்துக்கெடுக்க
இயலாமல் உங்கள் அக்கிரமத்தினால் அடுத்துக் கெடுக்கிறீர்க
ளாக்கும்? அடுத்துக் கெடுப்போர் தொடுத்துக்கெடுவார் என்று
அறிவீர்களாக.

சவுலின் பிரயத்தனம் வாய்க்காமல் அவனே அபாயத்தி
லிருந்த சமயத்தில் சிலதரம் உணர்வுள்ள வார்த்தைகளைப்
பேசி, இனி தான் பொல்லாப்பிலிருந்து திரும்பும்படி மன
முள்ளவனைப்போல வெளிப்பட்டான். அநேக துன்மார்க்கர்
தாங்கள் பொல்லாப்பில் அகப்படும்போது பக்திமான்களைவிட
பதின்மடங்கு உணர்வாய்ப் பேசிவிடலாம்; அதினால் மெய்ப்
பக்தி உண்டாகிவிட்டதென்று எண்ணவேகூடாது. சவுலு

டைய உணர்ச்சி சீக்கிரம் மாறிவிட்டதுபோல அவர்களுடையதும் மாறிப்போகிறதுண்டு.

சவுலுடைய அந்தியகாலம் நெருங்கும்போது பெலிஸ்தியர் ஒருதரம் அவன்மேல் படையெடுத்து வந்தார்கள். அவன் பயந்து நடுநடுங்கி கர்த்தருடைய சித்தமின்னதென்று அறியும்படிப் பிரயாசப்பட்டான். கர்த்தரோ அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது, வேறெந்த விதமாயாவது மறுஉத்தரவு அருளவில்லை. தேவசித்தத்தை அவனுக்குக் கேட்டுச்சொல்ல ஆசாரியரும் இருக்கவில்லை. ஏனெனில் ஒரு ஆசாரியன் தாவீதுக்கு சகாயஞ்செய்தானென்று எல்லா ஆசாரியரையும் இந்தப் பாதகன் கொன்றுபோட்டான். ஒருவன்மாத்திரம் தப்பி தாவீதுடன் போய்ச் சேர்ந்துகொண்டான். ஆ! இது எவ்வளவு துக்கமான காரியம்? சவுலே! நீ அழுதும் உன்னைத் தேவன் கவனிக்கவில்லை, நீ கேட்டும் உனக்கு மறுமொழிகாணோமே; உன் அக்கிரமத்தின் பாத்திரம் நிரம்பிவிட்டது; உன் பாவங்களின் கட்டு கட்டப்பட்டாயிற்று; தேவன் உனக்கு இரக்கம்செய்ய மறந்தார்; அவருடைய செவிகள் உன் விண்ணப்பத்துக்கு மந்தமாய்ப்போயிற்று. இனி என்னசெய்வாய்? உன்னை அலைக்கழிக்கும் ஆரும் பொல்லாத ஆவி உனக்குச் சகாயஞ்செய்யுமோ? இல்லையே. ஆ! கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் தேடுங்கள்; அவர் சமீபமாய் இருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் என்ற சத்தியத்தை இந்தச் சமயத்தில் நான் உணர்ந்துகொள்ளுவேணுக.

சவுல் தன் இருதயத்தின் நிலையின் சகல பொல்லாப்புகளோடுங்கூட வேளாவேளையில் தேவதாபக்தனைப்போல வேஷம்போட்டான் என்று முன்சொன்னோமே. அவன் போட்ட பக்தியின் வேஷங்களாகிய பலியிடுதல், பிரார்த்தனை செய்தல், பீடம்கட்டுதல், கர்த்தரைக் கேட்குதலாகிய கிரியைகளோடு அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிகாரரையும் இஸ்ரவேலரின் எல்லைகளிலிருந்து விலக்கிப்போட்டதும் ஒன்றாயிருந்தது. மேலே சொல்லிய ஆபத்தும் கிட்டி தேவரக்கும் முட்டிப்போன சமயத்தில் சவுல் போக்கற்றுப்போய் தான் ராஜ விளம்பரத்தால் விலக்கிவிட்ட அஞ்ஞான வழக்கமாகிய அஞ்சனம் பார்க்குதலை மறுபடியும் நாடிப்போனான். பாவிகள் ஒருகாலத்தில் பகிரங்கமாய் ஒழித்துவிட்ட பாவங்களை அல்லது கெட்ட வழக்கங்களை மறுபடியும் தொடர்ந்துபோகலாம் என்பதை சவுலின் குணம் வெளிப்படுத்துகிறது. இராசாங்கம்



தன்னைவிட்டு எடுபடும் என்ற திருவாக்கு இப்போதுதான் அவன் நெஞ்சில் உறைக்கிறது. ஏனெனில் அவனுடைய சகாயவிஷயத்தில் வானமும் பூமியும் ஒன்றாய்ப்பேசி தங்கள் கதவுகளை அடைத்துக் கொண்டதுபோல் இருந்தது. தேவசித்த மறியாமல் இம்மட்டும் இவன் யுத்தத்துக்குப் போனதேயில்லை. அஞ்ஞானிகள்முதல் சாஸ்திரம்கேட்டு சகுனம்பார்த்து சண்டைக்குப் புறப்படுகிறது வழக்கமாயிருந்தது. ஆதலால் தேவசித்தம் வெளிப்படுத்தப்படாதது சவுலை அமைமனுஷனாக்கி விட்டது. அவனுடைய மனக்கவலையைச் சகிக்க இயலாமல் எந்தோர் என்னும் ஊரில் ஒரு குறிசொல்லுகிற ஸ்திரீ இருக்கிறாள் என்று கேள்விப்பட்டு அவளண்டை ஓடினான். அது இராக்காலமாய் இருந்தது. அவளோ முற்காலத்தில் பகிரங்கமாய்க் குறிசொல்லி சம்பாதித்த சொத்துகளையெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாய்ச் செலவழித்துமுடித்து, உண்ண உணவும், உடுக்க வஸ்திரமுமற்று கேவல ஸ்திதியிலிருந்தாள். சவுல் தன்னை இன்னானென்று சொல்லாமல், நீ அஞ்சனம்பார்த்து நான் சொல்லுகிற ஆளை மரித்தோர் ஸ்தலத்திலிருந்து வெளிப்படச் செய்யவேண்டுமென்று கேட்டான். அவள் ராஜ கட்டளைக்குப் பயந்து அப்படிச் செய்யமாட்டேன் என்று சொன்னாள். அவள் பயப்படாதபடிக்கு பல முகாந்தரங்களையும், தைரியங்களையும்சொல்லி சாமுவேல்தீர்க்கதரிசியின் ஆவியை வரவழைக்கக்கேட்டான். அவளும் சம்மதித்துத் தன் வசியத் தொழிலில் உட்கார்ந்தான். சவுல் சாமுவேலை வரவழைக்கக் கேட்டதிலும், அவள் அதற்குச் சம்மதித்ததிலும் அவரவர் மனதில் தனித்தனி நோக்கமிருந்ததென்று சொல்லலாம். சவுலின் மனதில் சாமுவேல் வருவது நிச்சயமானால் நாம் கெஞ்சி, நயந்து சகாயம் கேட்கலாம்; அதற்கும் மிஞ்சுவாரானால் அனுக்கிரகம்... சனக்காரியயக்கொண்டே அவர் வாயிலிருந்து நல் வரமான வார்த்தையைக் கட்டாயமாய் வரப்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணியிருக்கலாம். அந்த ஸ்திரீ இம்மட்டும் ஒருநாளும் சாமுவேல் தீர்க்கதரிசியைப் பாராதவளானதால் ஏதாவதொரு ஆவேசத்தை இதுதான் சாமுவேலென்று காட்டிவிடலாம் என்று நினைத்திருந்தாளாக்கும். எப்படியும் சாமுவேல் தீர்க்கதரிசியின் ஆவியே வெளிப்பட்டுவந்தது. தான் முன் வசியம் பண்ணியிருந்த ஒரு ஆவேசத்தைக்கொண்டு சவுலை ஏமாற்றிவிடலாம் என்று நினைத்த ஸ்திரீ இந்தப் புது ஆவியைக் கண்டவுடனே மகா சத்தமிட்டு, "ஏன் என்னை மோசம்போக்கினீர்" என்று சவுலைப்பார்த்துக் கதறினாள். சவுல் அவளைத் தைரியப்

படுத்தி பூமிக்குள்ளிருந்து எழிவருகிற ஆளின் ரூபத்தை
கேட்டான். அதற்கவள், சால்வை போர்த்துக்கொண்டிருக்கிற
ஒரு முதிர்வயதானவர் எழுந்து வருகிறார் என்று சொன்னாள்.
இப்படிச் சொல்லுகிறதற்குள்ளாக தீர்க்கதரிசியின் ஆவேசம்
தற்சொரூபமாய் அவ்விருவர் முன்னும் நின்றது. * சவுல்

* இச்சமயத்தில் சவுலுக்குக் காணப்பட்ட ஆவேசரூபம் சாத்தா
னாய் அல்லது ஒரு அசுத்தஆவியாய் இருக்கலாமென்று பல
அபிப்பிராயப்படலாம். ஆனால் சங்கதியை அட்பமாய்க் கவனிக்
கையில் காணப்பட்ட ரூபம் சாமுவேல் தீர்க்கதரிசியேயன்றி
வேறல்லவென்று விளங்குகிறது. குறிசொன்ன ஸ்திரீ பயப்பட்ட
தும், அவள் கண்ட ரூப இலட்சணமும், அந்த ஆவி சவுலோடு
பேசின சம்பவங்களும் எல்லாம் கூடி அச்சமயத்தில் காணப்
பட்டவர் சாமுவேல் என்பதை நிச்சயப்படுத்துகிறது. ஏக சிரா
என்னும் ஆகமக்காரன் இந்த வரலாறுகளை ஒத்துக்கொண்டவராய்
"சாமுவேல் காலம்பண்ணினபின்பும் தீர்க்கதரிசனம் சொல்லி,
இராசாவுக்கு வரும் முடிவையும் முன்னறி அறிவித்து, பூமியிலி
ருந்து சத்தத்தை எழும்பப்பண்ணி பொல்லாதவர்களெல்லாரும்
அழித்துப்போடப்படுவார்கள் என்று முன்னறி அறிவித்தாராம்"
என்று சொல்லுகிறார் (ஏகசிரா ஞானம். 46. 23.). இதை ஒத்து
க்கொண்டபோதிலும், பேயை ஆட்டும் குறிகாரி பக்தரின் ஆவியை
வசியப்படுத்தும்படி இடம்பெற்றாள் என்று சொல்லுவது பரிசுத்
தவிஷயங்களைக் கனவீனப்படுத்துகிற மதியீனமான எண்ணமல்
லவா என்பார்கள். அப்படியல்ல, அவளுடைய வசியத்தின் பல
த்தால் தீர்க்கதரிசி எழுந்தருளியாகாமல் தேவகட்டளைப்படி எழு
ந்தருளியானார். தேவன் தமது சித்தத்தை இந்தச் சமயத்தின்
மூலமாய் அறிவிக்கச் சித்தங்கொண்டார் என்றே சொல்லவேண்
டியது. இவ்விதமாகவே மோவாப் அரசனாகிய பாலாக்கின் குறி
பார்க்குதல் இஸ்ரவேலருக்கு வாழ்வாக தேவனால் நடத்தி ஆளப்
பட்டிருக்கிறது (எண். 23 அதி.). அகசியா வியாதிப்பட்டு
தனக்கு நல்வாக்கு கிடைக்கும்படி பாகால் சேபூலிடத்தில் வரம்
கேட்க ஆளனுப்பினதை ஆண்டவர் அறிந்து, எலியாவை அவர்
களிடத்திற்கு எதிரே சந்திக்கும்படிக்கு அனுப்பி, அவன் செய்த
பிரயத்தனம் தமது சித்தத்துக்கு விரோதமானது என்றும் அந்த
அரசன் நிச்சயமாக சாவானென்றும் சொல்லச்செய்தார் (1 இரா
சா. 1-ம் அதி.). இவ்விஷயங்களிலுள்ள தேவனுடைய வழிகள்
விளங்காததால் கண்டபடி கருத்துக்கொள்ளுவது புத்தியல்ல.
மேலும் இந்த வரலாறை வாசிக்கிறவர்கள் பேய்களை வசியம் செய்
வதுதான் எப்படியென்று அறிய ஆசைப்படலாம். இவ்வித
ஆசையைப் பாவம் என்று சொல்லலாம். அந்தகாரலோகத்தின்
ஞானங்கள் ஒளியின் பிள்ளைகளின் வெளிச்சத்தைக் குறைத்துப்
போடுமேயன்றி வேறல்ல.



உடனே தரைமட்டும் முகங்குனிந்து வணங்கினான். மரித்
துப்போன ஆவிகளைப்பற்றி மனுஷருக்கிருக்கிற பயம் அவ்
வளவு ஜீவனுள்ள தேவனைப்பற்றி இல்லையென்று நாம் அடிக்
கடி காண்கிறோம். அப்பால் வெளிப்பட்ட ஆவிக்கும் சவுலுக்
க்கும் ஒரு சம்பாஷணை நடந்தது. சாமுவேல் சவுலை நோக்கி,
"நீ என்னை எழும்பிவரப்பண்ணி என்னைக் கலைத்தது என்ன?"
என்று கேட்டார். அதற்குச் சவுல், "நான் மிகவும் நெருக்கப்
பட்டிருக்கிறேன், பெலிஸ்தியர் எனக்கு விரோதமாய் யுத்தம்
பண்ணுகிறார்கள், தேவனும் என்னைக் கைவிட்டார், அவர்
தீர்க்கதரிசனங்களினாலாவது, சொப்பனங்களினாலாவது, என
க்கு மறுஉத்தரவு அருளுகிறதில்லை ஆகையால் நான் செய்ய
வேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு உம்மை அழைப்
பித்தேன்" என்றான். அதற்கு சாமுவேல், "கர்த்தர் உன்னை
விட்டுவிலகி உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது நீ என்
னிடத்தில் கேட்பானேன்? கர்த்தர் என்னைக்கொண்டு சொன்
னபடியே செய்துமுடித்து ராஜ்யத்தை உன் கையிலிருந்து
பறித்து அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்துவிட்
டார். நீ அமலேக்கியரை அதம்பண்ணவேண்டிய விஷயத்தில்
கர்த்தருடைய சொல்லைக் கேளாமல்போனபடியால் உனக்கு
இப்படியாயிற்று. கர்த்தர் இஸ்ரவேலரை பெலிஸ்தியர் கையில்
ஒப்புக்கொடுப்பார், நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடி
ருப்பீர்கள்" என்று சொல்லி மறைந்துபோனார். அந்தக்ஷணமே
சவுல் நெடுஞ்சாண்கிடையாய் தரையிலேவிழுந்து சாமுவேலின்
வார்த்தைகளால் பயந்துகிடந்தான். சவுலே, நீ இனி படுத்
துக்கிடந்து கும்பிட்டு ஆவதென்ன! பயப்பட்டு பக்திவிநயம்
போல் அழுது ஆவதென்ன! வானம் தன் பனியை அல்ல,
அக்கினியை உன்மேல் பெய்யப்போகிறதை நீயே அறிந்திருக்
கிறாயே; பூமி உன் ராஜ கொழுப்பால் தன்னைத் திருப்தியாக்க
இருக்கிறதையும் நீ அறிவாயே; எழுந்திருந்து உன் வீட்டுக்
காரியங்களை ஒழுங்குபடுத்து. மரணத்துக்கும் உனக்கும் ஒரு
அடிதூரம் முதலாய் இல்லை; என் ஆலோசனையைக் கேள்!
நீ மரிக்குமுன் உன் பழைய பாவங்களையெல்லாம் ஒவ்வொன்
றாய் நினைவுகூர்ந்து பச்சாத்தாபத்தால் மனங்கசந்து புலம்பு.
இனி உனக்குப் பட்டயம் என்னத்துக்கு! பட்டணம் என்னத்
துக்கு! பாரபரனுடைய பாதத்தைப்பிடித்து பாவமன்னிப்படை
யும் வேலையைவிடப் பெரிய வேலை இல்லை.

சவுல் தன் பெரிய கவலையாலும், ஒருவேளை ஆவேச காட்
சிக்கு ஆயத்தப்படும் நோக்கத்தால் உபவாசித்ததாலும் இராப்

பகல் முழுவதும் ஒன்றும் சாப்பிடாதிருந்தான். அவனுக்குப்
பலவீனம் மேலிட்டிருந்தது. அந்தக் குறிகாரி ஒரு கன்றுக்
குட்டியை அடித்து அப்பம் சுட்டு சவுலையும் அவனுடைய
ஆட்களையும் பசியாற்றினாள். சவுல் துவக்கத்தில் போசனம்
சாப்பிடமாட்டேனென்று சாதித்தபோதிலும் கடைசியில் அந்த
ஸ்திரீயின் பலவந்தத்தினாலே சாப்பிட்டு, தன் சேனை தங்கி
யிருந்த பாளயத்துக்குப் போய்ச்சேர்ந்தான்.

மறுநாளில் பெலிஸ்தியரின் இரணபேரிகை சவுலின் பாள
யத்தினோரத்தில் கேட்டது. சேவகர் யுத்தசந்நதராய் அவர்களை
எதிர்க்கும்படி போனபோது இருபட்சமும் இரணகளமாகி
இஸ்ரவேலர் முறிந்தோடினார்கள். அவர்களை பெலிஸ்தியர்
வெள்ளரிக்காய்களைப்போல் வெட்டி எறிந்தார்கள். பெலிஸ்
தியர் சவுலையும் அவன் குமாரரையும் தொடர்ந்து சவுலின்
குமாரராகிய யோனத்தானையும், அபினதாபையும், மல்கிசுவா
வையும் வெட்டிப்போட்டு சவுலைப் பின்தொடர்ந்தார்கள்.
வில்வீரர் அவனைக்கண்டு நெருங்கினார்கள். சவுல் வில்வீர
ரால் மிகவும் காயப்பட்டு சாவைநாடி தன் ஆயுததாரியைக்
கூப்பிட்டுத் தன்னைக் கொல்லும்படிக் கேட்டான். அவன்
அதற்கு இணங்காததால் சவுல் தன் பட்டயத்தை தரையில்
நட்டு அதின்மேல் விழுந்து மாண்டான். இவ்வண்ணமாய்
சவுல் தன் பழைய பாவங்களோடு தற்கொலையாகிய கொடுமை
யையும் தன் தலைமேல் கட்டிக்கொண்டவனாய் பாதாளலோகம்
சேர்ந்தான். மறுநாளில் வெட்டுண்டவர்களைக் கொள்ளையிட
வந்த பெலிஸ்தியர் சவுலின் உடலைக்கண்டு அவன் தலையை
வெட்டி அவன் ஆயுதங்களை அஸ்தரோத்து விக்கிரகத்தின்
கோவிலிலே வைத்தார்கள்; அவன் உடலை ஒரு அலங்கத்
திலே தூக்கிப்போட்டார்கள்.

சவுல் தேவபக்திவிஷயத்தில் குறைவுடையவனும் மாய்மால
முள்ளவனுமாய் இருந்தபோதிலும் ராஜ்யபாரவிஷயத்தில்
திறமையுடையவனாயிருந்தான். அவன் வில்வித்தையை யூதா
புத்திரருக்குக் கற்றுக்கொடுத்து இஸ்ரவேலின் அலங்காரமாய்
இருந்தான். சவுலின் பட்டயமும் வில்லும் கொலையுண்டவர்
களின் இரத்தத்தைக் குடியாமலும், பராக்கிரமசாலிகளின் நிண
த்தை உண்ணாமலும் வெறுமையாய்த் திரும்பினதில்லை. அவன்
காலத்தில் இஸ்ரவேலரின் குமாரத்திகள் இரத்தாம்பரங்களைச்
சிறப்பாய் உடுத்தி பொன்னாபரணங்களை அணிந்துகொண்டு
திரிந்தார்கள். இஸ்ரவேலருக்குப் புறம்பான இவ்வளவு சிலா



க்கியங்களைச் செய்த சவுலின் உடல் பகிரங்கமாய் அவமதிக்
கப்பட்டதை யாபேசு ஊரார் கண்டு ராஜமானத்தால் மூண்டு
ஆற்றை இராக்கொண்டே கடந்து உடலை இறக்கி தகனம்
பண்ணி எலும்புகளை எடுத்து அடக்கஞ்செய்து ஏழுநாள் உப
வாசித்தார்கள்.

## THE ROYAL POET. (DAVID.)

## இராஜ புலவர்.

(தாவீது.)

கிறிஸ்துமார்க்கவிரோதிகள் வேதாகம வரலாறுகளை ஆட்
சேபித்து அதின் உண்மையையும், தெய்வீகதத்துவத்தையும்
குற்றப்படுத்திவருகிறது வழக்கமாயிருக்கிறது. அவர்கள் எவ்
வளவாய் அதைக் குற்றப்படுத்தினாலும், அவைகளைக் கட்டுப்
பாடு என்று பழித்துப்பேசினபோதிலும் நம்முடைய விசுவாசம்
மழுங்கவேண்டியதில்லை. கர்த்தருடைய சொற்கள் சுத்த சொற்
களாய் இருக்கின்றன. பதிதர் பலவாறுய் அதைப் பழுதுகூறி
அவமதிக்கத் துணிந்தபோதிலும் அவைகள் என்றென்றைக்கும்
நிலைத்திருக்கும் ஜீவவார்த்தைகளாகவே இருக்கும்.

எல்லா வரலாறுகளைவிட நாம் இப்பொழுது வாசிக்கப்போ
கும் இராஜ புலவராகிய தாவீது அரசனின் சரித்திரம் கிறிஸ்து
மார்க்க விரோதிகளால் விசேஷமாய்க் கண்டித்து ஆட்சேபிக்
கப்பட்டிருக்கிறது. இவர்பேரைக் கேட்டவுடனே எவரும்
சீ, சீ கிறுத்திப்போடு என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு
கேவலமான குறிப்புகளை அவர்பேரில் எழுதியிருக்கிறார்கள்.
இப்படி இவரைப்பற்றி இவ்வளவு பழிப்பாய் எழுதும் காரண
மெல்லாம் வேதாகமத்தை அடியோடு குற்றப்படுத்தி அகற்றி
விடவேண்டுமென்கிற நோக்கத்தினாலேயன்றி வேறல்ல. இப்
படிப்பட்டவர்களைப்பற்றி நாம் என்னமுடிவான வார்த்தை
யைப் பேசலாம்! பரமண்டலத்திலிருக்கிற ஆண்டவர் இவர்
களை நோக்கி நகைக்கிறார், ஆண்டவர் அவர்களைப் பரிகாசம்
பண்ணுகிறார் என்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது.

தாவீதின் சரித்திரத்தில் நாம் காணும் பெலவீனங்களும்,
துணிகரங்களும், பாவங்களும், உணர்வுகளும் அவருடைய

ஜீவகால சரித்திரத்தின் நிச்சயத்தை நமக்கு வெளிப்படுத்துகிறதாகமாத்திரம் நாம் எண்ணிக்கொள்ளவேண்டியது. பூரணபுண்ணியாத்துமா பூலோகத்தில் ஒருவரே உண்டு; அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே. மற்ற மகாத்துமாக்களின் சரித்திரமெல்லாம் தேய்பிறையும் வளர்பிறையும்போல் மாத்திரமிருக்கிறது; இயேசுவின் ஜீவியம் ஒன்றுமாத்திரம் உச்சிநேரத்தில் வல்லமையாய் விளங்கும் சூரியபிரகாசம்போல இருக்கிறது. ஆதலால் யாதொரு அச்சமுமின்றி இராஜபுலவராகிய தாவீதின் சரித்திரத்தை இவ்வண்ணம் அதின் சகல கறுப்போடும் வெளுப்போடும் கூறுவோம். இவர் துவக்கத்தில் ஆடுமேய்த்தபோதிலும் பின்பு இராஜபட்டம் பெற்று அநேக தேறின புலவராய் விளங்கினதால் அவருக்கு "இராஜபுலவர்" என்னும் பேர் தகுதி என்று ஒத்துக்கொள்ளவேண்டியது.

இராஜபுலவருக்கு முன்னதாக இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருந்த சவுல் அமலேக்கியரை அழிக்கவேண்டிய விஷயத்தில் தேவகட்டளையை நிறைவேற்றாமலும், தேவனுடைய மனுஷனாகிய சாமுவேல் தீர்க்கதரிசியை அவமதித்து நடந்தும் எல்லாங்கூடி சவுல் இராச்சியபாரத்தின் தன்மையை நன்றாய் வெளிப்படுத்திவிட்டது. அவன் தேவபக்தியை இரண்டாவதும், உலக ஆளுகையை முதலாவதுமாக வைத்துக்கொண்டான். ஆனால் தேவனோ, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்என்பதைத் தமது பிள்ளைகளின் பிரமாணமாக்கினார். சவுல் தேவகட்டளையை மீறி அவருடைய ஆவியை இழந்து, ராஜ்யபாரத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டதுமுதல் சாமுவேலின் கவலையெல்லாம் இனி வரும் அரசனைப்பற்றிய கவனமாகவே இருந்ததென்று சொல்லலாம். அதேகவலையினால் அவர்சிலகாலம் துக்கமுகமுடையவராகவே இருந்தார். அரசனின் சீர்கேட்டைக் கவனிக்கும் குடிகள் தேவதாபக்தியில் எவப்பட்டு பரிசுத்தமான துக்கங்கொண்டாடாதிருப்பார்களோ!

தீர்க்கதரிசி இப்படித் துக்கப்பட்டுக்கொண்டிருந்தகாலத்தில் ஒருநாள் இஸ்ரவேலின்மேல் இரவுபகல் கண்ணோக்கமாயிருக்கும் கடவுள் சாமுவேலுக்குத் தரிசனமாகி, "நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக்கொண்டிருப்பாய்? நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக்கொண்டுவா, பெத்லேகேமியனாகிய ஈசாயினிடத்திற்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் இராசாவாக்கும்படித் தெரிந்துகொண்டேன்" என்று திருவுளம்பற்றினார். ஈசாயே! நீ பாக்கியவான்; உன் குடும்பம் பரலோகத்தின் தேவனால் நினைவுகூரப்பட்டது; இராஜபட்டம் பெறுகிறது உனக்குப் பெருமை, அதிலும் அதிகமாய் அந்த ராஜவம்சத்திலே உலகத்தோற்றத்துக்கு முன்னேகுறிக்கப்பட்ட சர்வலோக இரட்சகர் அவதாரமெடுக்கவும் நேரிட்டதே. உனக்குப் பெருமையின்மேல் பெருமையும், மகிமையின்மேல் மகிமையும் கொடுக்கிறது. "ஈசாயின் அடிமரத்திலிருந்து ஒரு துளிர்தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பி செழிக்கும்" என்ற திருவாக்கு உன்கிரீடமாய் இருப்பதாக. இம்மட்டும் நாம் பொதுவாகச் சொன்ன விஷயங்களை நிறுத்தி இராஜபுலவரின் சரித்திரத்தை ஆரம்பிப்போமாக.



---

## பாலியபருவம்.

இராஜபுலவரின் பிதாவானவருக்கு ஈசாய் என்று பேர். ஈசாய் என்பதற்கு இருக்கிறவன் என்று அர்த்தம். அவருடைய குடும்பமானது நெடுங்காலமாய்ப் பேரெடுத்த ஒரு குடும்பமாயிருந்தது. அவருக்கு எட்டு ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்களும் இருந்தார்கள். இவர்களில் எட்டாம் ஆள் பட்டத்து ஆளாகப் பிறந்தான். இராஜபுலவர் கிறிஸ்துவுக்கு 1085 வருஷங்களுக்குமுன் பிறந்ததாக தேறின வேதஞானிகள் கணித்திருக்கிறார்கள். அப்படியானால் இராஜபுலவர் ஜீவித்திருந்தகாலம் சுமார் இரண்டாயிரத்து தொளாயிரத்து எழுபது வருஷங்களுக்கு முன்னே என்று தீர்மானிக்கவேண்டியது. இவருடைய குடும்பத்திற்கு யூதாவே கோத்திரப் பிதாவாயிருந்தான். இந்தக் கோத்திரமுழுவதுக்கும் இராஜபுலவரின் குடும்பத்தலைவராகிய நகசோன்தான் தலைவனாய் இருந்தான் (எண். 1. 7; 2. 3. ரூத். 4. 20.). இவர் பிறந்த ஊருக்குப் பெத்லேகேம் என்றுபேர். இந்த ஊரில் இவருடைய தகப்பனாகிய ஈசாயே பேரெடுப்புள்ளவராயும் காணிபூமியுடைய சிமானாயும் இருந்தார். இந்தக்காணி பூமியெல்லாம் இராஜபுலவருடைய சொந்த ஆஸ்தியாயிருந்தது. இதை அவர் தமது மனம்போல மற்றவர்களுக்குத் தத்தம்பண்ணிவந்தார். (2சாமு. 19. 37, 38 ஐ எரே. 41. 17 ஓடு ஒத்துப்பார்.)

தாவீதின் பாலியபிராயத்தில் அவருடைய தகப்பனார் அதிக விருத்தாப்பியனாகவே இருந்தார். இவருடைய தாயின் ஊரும் பேரும் நமக்குத் தெரியாது. ஆனால் அவ்விருவரும் வெகுகால

மாய் உயிரோடிருந்தார்கள் என்றும், இராஜபுலவருக்கும் சவுலுக்கும் பகைவளர்ந்து அவர் காடுமேடாய் ஒளித்திருந்தகாலத்திலும் அவ்விருவரும் உயிரோடிருந்தார்கள் என்றும் விளங்குகிறது. அவருடைய தாயார் மகா தேவபக்தியுள்ளவளாயிருந்தாள் என்பதை இராஜபுலவர் இருமுறை வெளிப்படுத்தியிருக்கிறார் (சங். 86. 16; 116. 16.). தம்முடைய விண்ணப்பத்தைக்கேட்டு தேவன் சகாயஞ்செய்யும்படி "நான் உம்முடைய அடியாளின் குமாரன்" என்பதை ஒரு முகாந்தரம்போல் சொல்லுகிறார். அவருடைய குடும்பத்திலுள்ள மற்றவர்களைக் குறித்து நமக்குக் கொஞ்சமாத்திரம் தெரியும். இவர் எல்லாரிலும் இளையவனாக இருந்தார் என்றே சொல்லவேண்டியது. ஏனெனில் அவருடைய குடும்பத்துக்குள் இவர் யாதொரு மதிப்பைப் பெற்றதாக நாம் காண்கிறதில்லை; இவர் எல்லாருக்கும் ஒரு அடிமைபோல வேலைசெய்து வந்திருக்கிறார். "இளையவன் எல்லாருக்கும் வேலையாள்" என்கிற பழமொழிக்கு அது இசைவாய் இருக்கிறது. இராஜபுலவர் யூதாக்கோத்திரத்தில் பிறந்த விஷயமானது பிற்காலத்தில் சவுலால் நேரிட்ட உபத்திரவங்களுக்கு ஒளித்து விலகிக்கொள்ள ஒரு நல்ல ஏதுவாய் இருந்தது.

இவர் தமது பாலியகாலத்தில் தங்கள் நாட்டுவழக்கம்போல் ஆடுகளை மேய்க்கும்படி காடுமேடாய்த் திரிந்தலைந்தார். அத்திசையிலுள்ள மேடும் எப்போதும் நல்ல புல்லுள்ளதாயிருந்ததால் எக்காலத்திலும் மேய்ப்பர் தங்கள் மந்தைகளை மடக்கி காலங்கழிப்பது வழக்கம். இரட்சகருடைய ஜநககாலத்திலும் அந்தச் செழிப்பு அந்தமலைகளில் மாறவில்லை. அதின்மேல் மந்தை மடக்கி இராத்தங்கின இடையருக்கே இரட்சண்ய நற்செய்தி முதலாவது கூறப்பட்டது அந்த மலைமேட்டிலேயே.

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை,
பூமியிலே சமாதானம்,
மனுஷர்மேல் பிரியம்

என்ற பரலோககீதம் பரிசுத்ததூதரால் பாடப்பட்டது. இவர் தமது தமையனாகிய எலியாபைப்போல வளர்ந்த ஆளாய் இராவிட்டாலும் பலமும் கவுரவமுமுள்ள தேகியாய் இருந்தார். வெண்கல வில்முதலாய் அவர் கைக்கு வளைந்தது; அவருடைய நடைகள் மான்களின் நடைபோல தீவிரகதியுள்ளதாயிருந்தது (சங். 18. 33, 34.); அவர் சிவந்த மேனியும் செந்தாமரை போன்ற கண்களும் நல்ல ரூபமுள்ளவருமாய் இருந்தார். அவர்



புறப்படும்போதெல்லாம் ஒரு கையில் தடியும், மறுகையில் கவணும், அரையிலே அடைப்பபையுமாய் நடந்துபோவார்.

இராஜபுலவருடைய வேலை ஆடுமேய்க்கிறதும் தூங்குகிறதுமாயிராமல், காடுபார்க்கிறதும் கவனிக்கிறதும் பாட்டுபாடுவதும் கவிசெய்கிறதுமாய் இருந்தது. அவருக்கு மேய்ப்பன்காலும், இராஜபுயமும், புலவன் தலையும் இருந்ததென்று சொல்லலாம். அவருடைய ஆத்தும அந்தகரணங்களோ மெய்ப்பக்தியின் சுனைகளாய் இருந்தன; வனசஞ்சாரம் அதற்கு மிகவும் அநுகூலமாயிருந்தது. பகலில் அவர் காணும் புல்காட்சியும் புஷ்பக்காட்சியும், மண்காட்சியும் மலைக்காட்சியும், வனக்காட்சியும், கடல்காட்சியும், பலவர்ணபட்சிக்காட்சியும், பலகுண மிருகக்காட்சியும் எல்லாம் வெறும் காட்சியாயிராமல் ஞானபோதனைகளை உணர்த்தும் அருங்காட்சிகளாக அவர் மாற்றிக் கொண்டார். இரவில் அவர் காணும் சந்திரகாட்சியும், கிரகக்காட்சியும், நட்சத்திர ஒளியும், அமாவாசை இருட்டும், பௌர்ணமி வெளிச்சமும் அவர் மனதுக்கு வெறுங்காரியங்களாய்ப் போகாமல் அரும்போதனைகளைத் தரும் ஏதுக்களாக்கிக்கொண்டார். இதெல்லாம் பாலியத்தில் பிதா மாதாக்களால் அவரடைந்த ஞானோபதேசத்தின் பலன் என்று சொல்லவேண்டியது. அக்காலத்தில் ஸ்தாபகமாயிருந்த தீர்க்கதரிசிகளின் புத்திரரோடு அவர் நெருங்கி சகவாசம்பண்ணினதால் இந்த நல் பழக்கத்தை அதிகமாய் விருத்திபண்ணியிருக்கலாம். அவர் கவிகட்டுகிறதில் மகா வல்லவனாயிருந்தார். அதற்குரிய இலக்கணமுறையையும், கீதவாத்தியங்களை வாசிக்கும் முறையையும் அந்தத் தீர்க்கதரிசிகளின் புத்திரரிடத்திலிருந்தே கற்றுக்கொண்டார் என்று சொல்லவேண்டியது.

காட்டுக்குள்ளிருந்தே இவர் கவிச் சக்கரவர்த்தியானார். ஆடுகளை மலைச்சார்புகளில் மேயவிட்டு அதனோரத்திலிருக்கும் சோலைகளில் தங்கி, தாம் யேகோவாவைத் துதிக்கும் சத்தமானது வண்டினங்களின் கூச்சலுக்கும், புருவினங்களின் பாட்டுக்கும், குயிலினங்களின் கூவுதலுக்கும், சிட்டினங்களின் இரைச்சலுக்கும், ஆடுகளின் கூப்பாட்டுக்கும், மாடுகளின் முக்காரத்துக்கும், விலங்கினங்களின் தொனிகளுக்கும் மிஞ்சிவிடும்படி பாட்டினாலும், ஆட்டத்தாலும் பிரயாசப்பட்டார் என்று சொல்லலாம். சிலருக்குப் புலவர்தலையும் கழுதைத் தொண்டையுமிருக்குமே; இந்த இராஜபுலவருக்கு அப்படியிருக்கவில்லை. இவருடைய தொனி, இனிமையையும் ஆனந்த பரவசத்தையும் கொடுத்தது; அதினாலே இவருக்கு இன்ப

கவிஞர் என்ற சிறப்புப் பெரும் சொல்லப்பட்டுவந்தது. இவர் ஒரு சோலைக்குள் சம்மணங்கூட்டி உட்கார்ந்து கால்மேல் கால் போட்டு சின்னரம் அறுத்துப் பாடத் துவக்கிவிட்டால் அந்தக் கானகத்துப் பட்சிகளெல்லாம் தங்கள் இரைச்சலை நிறுத்தி இவருடைய இன்பக் கவிதைகளை காதுகுளிரக் கேட்டுக் கொண்டிருக்குமென்று சொல்லவேண்டியது. அவர் கீதவாத்தியங்களை உண்டுபண்ணும் சிற்பாசாரியுமாயிருந்தார் (ஆமோ. 6. 5.). அவர் தாம் பாடின பாட்டுகளைத் தமாசக்காரனைப்போல் அல்ல, தன்னுணர்வுள்ளவனைப்போல் பாடி, சிருஷ்டி கர்த்தாவை மகிமைப்படுத்தினார். தன்னை ஒரு ஆடாகவும் கடவுளை ஒரு மேய்ப்பனாகவும் பாவித்து, அவர் பாடியிருக்கிற இருபத்து மூன்றும் சங்கீதம் பாவலோகவனத்தில் அலைந்து திரியும் எத்தனையோ பாவிகளுக்கு ஆறுதலை அளித்திருக்கிறது.

இராஜபுலவரின் புஜபலபராக்கிரமத்தைப்பற்றியோ அதிசயப்படவேண்டியதாயிருக்கிறது. அவர் தமது பாலியபிராயத்தில் ஆடுகளை மடக்கி தமதுவழக்கம்போல் தேவதியான மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கையில் ஒருதரம் ஒரு சிங்கமும், ஒருதரம் ஒரு கரடியும் வந்தது; அவர் உடனே ஓடி அதை அடித்து ஆட்டைத் தப்புவித்தார். இதோடு அவருடைய வீரத்துவம் முடிந்து போயிற்றென்று எண்ணவேண்டாம்; இன்னும் அநேகமுண்டு.

இப்படி இவர் காடும்வீடுமாய் காலம் கழித்தகாலத்தில் ஒரு நாள் சாமுவேல் தீர்க்கதரிசி இராஜபுலவர் வசித்த ஊருக்கு வந்தார். அவர் வந்த காரியம் என்னவென்று கேட்டபோது தாம் பலிசெலுத்த வந்ததாகமாத்திரம் வெளிக்குச் சொல்லி, இராஜபுலவரை, சவுலுக்குப்பதிலாக அபிஷேகஞ்செய்யும்படி வந்த காரியத்தைச் சொல்லாமலிருந்தார். இதினால் அவர் பொய் சொன்னதாக நாம் நினைக்கக்கூடாது. அபிஷேகவிஷயம் அனைவருக்கும் தெரியுங்காலத்தில் பெரிய குழப்பமும் குடும்ப கஷ்டமும் உண்டாகலாமென்றும், சகல சங்கதிகளையும் காலமே சொல்லட்டுமென்றும் அவர் ஞானமாய் அதைத் தமது மனதில் அடக்கிக்கொண்டாரேயன்றி வேறல்ல. சாமுவேல் தீர்க்கதரிசி இராஜபுலவருடைய ஊரில் சேர்ந்து பலியிட்டுக் கர்த்தரைப் பணிந்துகொண்டார்; அப்பால் தீர்க்கதரிசி இராஜபுலவருடைய குடும்பத்தைப் பார்க்க விரும்புகிறவரைப்போல வரவழைத்து ஈசாயின் பிள்ளைகளை ஒருவர் ஒருவராய்க் கவனித்தார். அவர் மூத்தவனைக் கண்டு அவனுடைய முகலட்சணத்தாலும் சரீரவளர்ச்சியாலும் மேற்கொள்ளப்பட்டு; இவனைத்தான் நாம் அபிஷேகம் பண்ணவேண்டியதோ என்று நினைத்தார். அப்போது கர்த்தர்: "நீ இவனுடைய முகத்தையும் சரீரவளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன், மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன், மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்று சொன்னார். நம்முடைய கண்ணுக்குள்ளிருக்கிற நயனம் வேறே, ஆண்டவருடைய கண்ணுக்குள்ளிருக்கிற நயனம் வேறே. மாயக்காரரே! இருதயத்தில் பக்தியற்று முகத்தை பக்திவேஷத்தில் பழக்கிக்கொள்ளுகிறவர்களே! இவ்விடத்தில் உங்களுக்குக் கூறப்படுகிற எச்சரிப்பைக் கண்டறிந்துகொள்ளுங்கள். இரண்டாவது மகனும் அப்படியே. அன்று வந்திருந்த ஈசாயின் எழுமக்களும் பரிசுத்த தைலத்தை தங்கள் சிரசில் வாங்கிக்கொள்ள அபாத்திரராய்ப்போனார்கள்; அவர்களில் ஒருவனையும் தேவன் தெரிந்துகொள்ளவில்லை. கடைசியாக சாமுவேல், "உன் பிள்ளைகள் இவ்வளவுதானா?" என்று ஈசாயைக் கேட்டார்; அதற்கவன், "இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான் அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு காட்டிலிருக்கிறான்" என்று சொன்னான். தீர்க்கதரிசி கொடுக்கப்போகிற ஆசீர்வாதம் இவர்களில் யாருக்குமில்லையானால் அவனுக்கு ஏது என்று ஈசாய் தனக்குள் சடைவுபட்டிருக்கலாம். அவனை அழைப்பிக்கும்படி தீர்க்கதரிசி கட்டளையிட்டு "அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியில் உட்காரமாட்டேன்" என்று சொன்னார். அவனை அழைக்க ஆள் அனுப்பி அவன் வந்து சேர்ந்தவுடனே கர்த்தர், "இவன்றான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு" என்று திருவுளம்பற்றினார். அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து ராஜபுலவரை அபிஷேகஞ்செய்தார். தாவீதின் அபிஷேக காலத்தில் சாமுவேல் அவன் காதில் ஓதி, சங்கதியை அறிவித்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறான். தேவனால் தள்ளுண்ட சவுல் சாத்தானின் ஏவுதலால் தாவீதை அகால அபாயங்களுக்குட்படுத்திவிடாதபடி எச்சரிக்கையாயிருக்க நோக்கமாய் இப்படிச் செய்திருக்கலாம். இந்த அபிஷேகநேரத்தில் வேறொருவரும் கூட இருக்கவில்லை.*

அபிஷேக எண்ணெய் தாவீதின் சிரசில் வார்க்கப்பட்டதுமுதல் அவர் புதுமனுஷனாய் விளங்கியிருக்கிறார். அல்லது வேறு



* 1 சாமு. 16. 13ல் "சகோதரர் நடுவில்" என்னும் வாசகம், சகோதரருக்குள் தாவீதைத் தெரிந்துகொண்டார் என்ற கருத்தைக் கொடுக்கும்.

விதமாய்ச் சொன்னால் "அந்நாள்முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் இறங்கியிருந்தார்." தாவீது பட்டம்பெற்றபோதிலும் முன்போல சவுலுக்கு அடங்கின குடியானவனைப்போல் தன் வேலையையும் தொழிலையும் பார்த்து வந்தார். தனக்குக் கிடைத்த அபிஷேகமானது காலம்வரும்போது, நீ சிம்மாசனமேற உன்னை முந்தியே ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டியதென்று ஆண்டவரால் அறிவிக்கப்பட்ட ஒரு சமாசாரம்போல மாத்திரம் அவர் எண்ணியிருந்தார். தேவன் அருளும்படி வாக்குப்பண்ணியிருக்கும் கிருபைக்கு நாமே முந்தக்கூடாது; அவருக்குச் சித்தமான வேளைவரும்போது வாக்குத்தத்தம்பண்ணின கிருபைகள் நம்மைச் சூழ்ந்துகொள்ளும். தன் காரியங்களையெல்லாம் கர்த்தாவின் கருணையுள்ள கரத்துக்கு ஒப்புவித்துவிட்டு பழையகின்னர காலக்ஷேபத்திலும், கவிகட்டும் சிந்தையிலும் தமது நாட்களைச் செலவிட்டுவந்தார். அதுமுதல் அவர் தன்னை மறந்து தேவசித்தத்தில் சார்ந்தே காலங்கழித்தார். இப்படி தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து வாழும் ஜீவனம் லேசில்கிட்டாது. பக்திநிலைக்குரிய எணியிலேறுவதற்கு தேவசித்தத்தில் சார்ந்து ஜீவிக்கும் பழக்கமே முதலாம் படி என்று சொல்லலாம்.

## வாலிபப் பருவம்.

இராஜபுலவர் அந்தரங்கத்தில் அபிஷேகம்பெற்ற ஆரம்பத்தில் இரண்டு விசேஷித்த விஷயங்கள் சம்பவித்தது. அதில் ஒன்று சவுலின் பித்தத்தைச் சாந்தப்படுத்தும்படி தாவீது கின்னரம் வாசித்ததும், அவர் கோலியாத் என்னும் அரக்கனைமடங்கடித்ததுந்தான். இவ்விருவிஷயங்களில் காலத்தின்படி எது முந்தினது என்பதைப் பற்றி தீர்மானிப்பது வருத்தமாயிருக்கிறது. என்றாலும் நாம் வேதாகம ஒழுங்கின்படியே சங்கதிகளை தீர்மானிக்கப் பிரயாசப்படுகிறோம் என்று அறிந்துகொள்ள வேண்டியது. சவுல் தேவனால் புறக்கணிக்கப்பட்டதுமுதல் அவனை ஒரு பொல்லாத ஆவி வருத்தப்படுத்தினது. அதிலிருந்து அவன் விடுதலையாகும்படி கீதவாத்தியப் பிரயோகத்தை மருந்துமுறையாகச் சொன்னார்கள். சவுல் நன்றாய் வாசிக்கத்தக்க ஒருவனைத்தேடி என்னிடத்தில் கொண்டுவா[illegible]கள் என்று உத்தரவுகொடுத்தான். அப்போது வேலைக்கா[illegible]ர். ஒருவன் பிரதியுத்தரமாக, "இதோ, பெத்லகேமியனாகி[illegible]யின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன், அவன் [illegible] நாம் [illegible]. அப்



தில் தேறினவன்; அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன், சௌந்தரியமுள்ளவன், கர்த்தர் அவனோடிருக்கிறார்" என்று சொன்னான். (இப்படிச் சொன்னவன் சவுலுடைய மந்தைகளின் தலைவனாகிய தோவேக் என்னும் இடையனென்று பாரம்பரையில் சொல்லப்பட்டுவருகிறது.) ஆகவே சரீரப்பிரகாரமாய் தாவீது பஞ்சலட்சண புருஷனாயிருந்தார். அவர்,

இயல்பிலே பராக்கிரமன்,
யுத்தத்திலே வீரன்,
காரியத்தில் சமர்த்தன்,
கின்னரத்தில் நிபுணன்,
ஆளில் சவுந்தரியன்.

ஆத்துமவிஷயமாய் அவரிடத்தில் ஒரே பூரணலட்சணம் விளங்கிற்று. அதாவது கர்த்தர் அவரோடிருந்தார்: அவரோடு கர்த்தர் இருந்தது அவ்வளவு பெரிதல்ல, அதை மற்றவர்கள் பரிஷ்காரமாய் கண்டுகொண்டதுதான் பெரியது. அரசன் அவரை அழைத்துவரும்படி ஆளனுப்பினபோது அவர் தமது ஆட்டுமந்தைகளை மேய்க்கும்படி காட்டுக்குப் போயிருந்தார். சாமுவேல் தேடினபோதும் அவர் காட்டில்தான் இருந்தார்; சவுல் தேடினபோதும் அவர் காட்டில்தான் இருந்தார். இதினால் தமது மந்தையின்பேரில் எவ்வளவு கவலையுள்ளவராய் இருந்தாரென்று விளங்குகிறது. தேவஊழியர் தங்கள் மந்தையை எப்போதும் காத்துக்கொள்ளுகிறவர்களாயிருக்க வேண்டியது. இராஜபுலவர் காடுவிட்டு வீடுவந்து தாம் விட்டுவந்த மந்தைகளுக்குச் செய்யவேண்டிய ஒழுங்குகளைப் பிதாவிடம் சொல்லி, அவர் கொடுத்த சில வெகுமதிகளோடு ராஜசமுகமேறினார். அவர் ராஜசமுகமேறினது தேவநோக்கத்தில் வேறாகவும், சவுல்நோக்கத்தில் வேறாகவுமாய் இருந்தது. தேவன் முன்னொரு காலத்தில் மோசேமுனிவரை ஆளுந்திறமையில் பழக்கிவைக்க பார்வோன் வீட்டில் வளரச்செய்ததுபோல அரசாட்சிக்குரிய அந்தரங்கங்களை ஒருவாறு அறியுமட்டும் அரசன்போக்கையும், அவனை அடுத்த மந்திரி பிரதானிகளின் போக்கையும் நமது தாசன் முந்தியே கண்டுகொள்ளட்டும். அது பின்னுக்கு உதவியாயிருக்கும் என்று அனுப்புகிறது போலிருக்கிறது. சவுலின் நோக்கத்திலே கின்னர கீதத்தால் [illegible]ாய் தீரலாம் என்று மாத்திரமிருந்தது. இராஜபுலவர் சவு[illegible] கண்களுக்கு ஏற்றவராய் இருந்தார். அவருடைய இன்[illegible]ும், சங்கீதமெட்டும், வாத்தியமுடுக்கும் சவுலுக்கு மட்டுக்[illegible].

டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவர் தமக்குப் புதிதாய்க் கிடைத்த அரமனைவேலையை உண்மையோடு செய்துவருவதைக் கண்ட சவுல், அவரை நேசித்து அவரை தனக்கு ஆயுததாரியாக்கினான். அப்பால் ராஜபுலவர் அரசனோடு எப்போதும் இருக்கவேண்டுமென்று ஒழுங்குசெய்யப்பட்டது.

ராஜபுலவரின் வாத்தியநரம்புகளிலிருந்துண்டான இங்கித தொனியும் அதனோடு அவர் இன்னிசையாய் பாடின குரலோசையும் சவுலின் பித்தத்தை மாற்றி சொஸ்தத்தைக் கட்டளையிட்டதினால், அவன் ஒருவாறு சுகப்பட்டபின்பு தாவீதை வீட்டுக்கு அனுப்பிவிட்டான் என்று நினைக்கத்தக்கதாய் இருக்கிறது; அல்லது எப்பொழுது அசுத்தஆவியினால் அவன் சங்கடப்படுவானோ அச்சமயத்தில் அவர் போய்க் கீதம்பாடி, குணமாக்கித் திரும்புவது வழக்கமாய் இருந்ததென்று தோன்றுகிறது.

சவுலின் பித்தமயக்கமும், அவனுடைய இராச்சியத்தின் ஒழுங்கீனமும் பெலிஸ்தரை இஸ்ரவேலர்மேல் யுத்தத்துக்கு ஏவிவிடும் கருவிகள்போல் இருந்தது. சவுலின் காலத்துக்கு முன் பெலிஸ்தர் இஸ்ரவேலின் வேளாண்மைகளைக் கொள்ளையடித்து, ஸ்திரீ புருஷரைச் சிறைபிடித்து, இல்லாத அமளிகளையெல்லாம் உண்டுபண்ணி அவர்கள்மேல் அதிகாரஞ்செலுத்திவந்தார்கள். சவுலின் இராச்சியபாரத்தின் ஆரம்பத்தில் அவர்களுடைய அழிம்புகளெல்லாம் ஒருவாறு அடக்கப்பட்டது; அவர்கள் மறுபடியும் தங்கள் தலைகளைத் தூக்கி தாங்கள் இழந்துவிட்ட பாத்திபத்தை மறுபடியும் வருவித்துக்கொள்ளும்படி பிரயத்தனப்பட்டார்கள். பெலிஸ்தர் தங்கள் சேனைகளைச் சேர்த்து ஏபேஸ்தம்மீம் என்னும் ஒரு இடத்திலே பாளயம் இறங்கினார்கள். அச்சமாசாரம் சவுலுக்கெட்டவே அவனும் இஸ்ரவேலரும் ஒருமித்துக்கூடி ஏலா பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கி யுத்தத்துக்கு அணிவகுத்து நின்றார்கள். பெலிஸ்தர் அந்தப்பக்கத்தில் ஒரு மலைமேலும், இஸ்ரவேலர் இந்தப்பக்கத்தில் ஒரு மலைமேலும் நின்றார்கள். இருவர் சேனைக்கும் மத்தியில் ஒரு மைதானமிருந்தது.

பெலிஸ்தர் பாளயத்தில் காத்தூரானாகிய கோலியாத்து என்னும் ஒரு இராட்சதன் இருந்தான். அவன் ஏனாக்கியர் என்ற இராட்சத ஜாதியைச் சேர்ந்த ஒரு வீரனாயிருந்தான்; அவன் உயரம் ஆறுமுழமும் ஒரு ஜாணுமாயிருந்தது.* அவன் தன்



தலையின்மேல் வெண்கலச் சீராவை அணிந்து பொற்கவசம் தரித்துவந்தான். அந்தக் கவசத்தின் நிறை சுமார் 52 வீசை வெண்கலமாய் இருந்தது. அவன் தன் கால்களிலே வெண்கல கவசத்தையும், தோள்களின்மேல் வெண்கல கேடகத்தையும் தரித்திருந்தான். அவனுடைய ஈட்டித்தாங்கு நெசவுகாரரின் படைமரத்தின் கனதியும், ஈட்டியின் அலகு ஆறுவீசை நிறையுள்ள இரும்புமாயிருந்தது. பரிசை பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடப்பான். அவன் தன் யுத்த உடைகளோடு புறப்படுகிறதைப்பார்த்தால் பாதாளத்திலிருந்து வேதாளம் புறப்படுகிறதைப்போலிருக்கும்; அவனைக் கண்டால் சிங்கமும் அஞ்சும், யானையும் பூனைபோல் பதுங்கிப்போகும். அக்காலங்களிலும் போர்புரியும் இருபட்சத்திலுமிருந்து ஒவ்வொருவன் பந்தயங்கூறி அவ்விருவரும் போராடி கெலித்தவன் பக்கத்தில் ஜெயத்தைக்கூறி தண்டனைக்காக அபராதங்கட்டுகிறது வழக்கமாயிருந்தது. எல்லாரும் ஏகமாய்க்கூடி கைகலந்து திரள் ஜனம் சாவதைப்பார்க்கிலும் நல்லமுறை என்று பலதரம் அரசரால் இவ்வழக்கம் கையாடப்பட்டுவந்தது. இந்தக் கோலியாத்துக்கு லாகேமி என்று ஒருதம்பி இருந்தான்; அவனும் தன் தமையனைப்போல பராக்கிரமன்தான். (1 நாளா. 20. 5.)

கோலியாத் என்னும் பூதராட்சதன் வந்து நின்று இஸ்ரவேல் சேனைகளைப்பார்த்து மலைக்கணவாய்போன்ற தன் இராட்சத வாயைத் திறந்து சத்தமிட்டு, "இஸ்ரவேலரே! நீங்கள் யுத்தத்துக்கு அணிவகுத்து நிற்கிறதென்ன? நான் பெலிஸ்தர் பட்சத்தானாச்சுதே, நீங்கள் சவுலின் சேவகர் அல்லவா? உங்களில் ஒருவனைத் தெரிந்துகொள்ளுங்கள், அவன் என்னிடத்தில் வரட்டும்; அவன் என்னுடன் மல்லுக்கட்டி யுத்தஞ்செய்து என்னைக் கொல்லவும் சமர்த்தனானால் நாங்கள் அனைவரும் உங்களுக்கு அடிமைகளாவோம்; நான் அவனை வென்று கெலித்துக் கொன்றுவிட்டால் நீங்கள் எல்லாரும் எங்களுக்கு அடிமைகளாகவேண்டும்; இதுவே பந்தயம்" என்று கத்தினான்.

சவுல் அரசனும் அவன் சேனையனைத்தும் கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு கலங்கி மிகவும் பயப்பட்டார்கள்.

* சிலர் இதில் சொல்லப்படும் ஒருமுழம் பதினாறு அங்குலம்கொண்டது என்கிறார்கள். அக்கணக்கின்படி கோலியாத் 8 அடி 9 அங்குலம் உயரமுள்ளவனாய் இருக்கவேண்டியது. யோசேப்புஸ் ஆகமத்திலும் செப்ற்றிய ஜென்ற் திருப்புதலிலும் கோலியாத் 4 முழமும் ஒரு ஜாணுமுள்ளவன் என்று காட்டியிருக்கிறது. இந்த ஒரு முழம் 2 அங்குலம் கொண்டதால் கோலியாத் 7 அடி 9 அங்குல உயரமாய் இருக்கவேண்டியது.

இவர்களுடைய பயம் கோலியாத்துக்கு பின்னும் அதிக பல
த்தைக் கொடுத்தது. இப்படியே கோலியாத்து காலையிலும்
மாலையிலும் வந்து நாற்பதுநாளாய் பந்தயங்கூறி சண்டைக்
குக் கூப்பிட்டான். சவுலும் அவன் மனுஷரும் அதைக்
கேட்டு வெட்கத்தோடு தலைகவிழ்ந்துகொள்ளுவார்கள். சவு
லே! கர்த்தருடைய பலம் உன்னைவிட்டுப் போனபின்பு உனக்
கேது பலம், உன் சேனைக்கேது ஊக்கம்?

சவுலின் சேனையில் இராஜபுலவரின் மூத்தசகோதரர் மூவர்
சேவகராயிருந்தார்கள். அவர்கள் யுத்தத்துக்குப்போய் இவ்வ
ளவு நாளாகியும், ஜெயம் அபஜெயம் என்ற செய்தியொன்றை
யும் காணோமே, நமது மக்கள் படையில் மாண்டார்களோ, அல்
லது மீண்டார்களோ? என்று அறியும்படி மிகவும் வயதுசென்
றவனாயிருந்த அவர்கள் தகப்பன் தனது இளையமகனை நோ
க்கி, மகனே! நீ அண்ணன்மார் இருக்கும் பாளயமட்டும்போய்
இந்தத் தின்பண்டங்களை அவர்களுக்குக்கொடுத்து, உன் சகோ
தரர் சுகமாயிருக்கிறார்களா என்று விசாரித்து அவர்களிடம்
அடையாளம் வாங்கிக்கொண்டுவா என்றான். தாவீது நாம்
முன் சொன்னபடி தமது தகப்பனுடைய ஆடுகளை மறுபடியும்
மேய்த்துக்கொண்டிருந்தார். அவர் ஆடுகளைக் காவலாளிவசம்
ஒப்புவித்துவிட்டு ஒருநாள் அதிகாலையில் எழுந்து, தன் அண்
ணன்மாருக்குக் கொடுத்த சாமான்களோடு பாளயத்தில்சேர்ந்து
சேனையண்டைவந்தார். அந்தச் சாமான்களை ரஸ்துக்கள் காக்
கிறவன்வசமாய் ஒப்புவித்துவிட்டு, அண்ணன்மாரை வின
வும்படி சேனையண்டை வந்தார். அவர் தன் வினவுதலிலிருக்
கையில், பூத இராட்சதனாகிய கோலியாத் தன் வழக்கம்போல
வாயாடி வலியச் சண்டைக்கு இழுத்தான். அச்சமயத்தில் யுத்
தத்துக்கு அணிவகுத்து பட்டயமும் கையுமாய் நின்ற அத்
தனை சேவகரில் ஒருவனாவது அவன் வார்த்தைகளை மடக்கவும்
எதிர்க்கவும் இயலாதபெண்கள்போல் சும்மாய்நிற்கிறதை ராஜ
புலவர் கவனித்து, தெய்வீகரோஷத்தால் மேற்கொள்ளப்பட்
டார். அதேசமயத்தில் இவனைக் கொல்லுகிறவனை இராஜா
மிகவும் ஐசுவரியவானாக்கி, அவனுக்குத் தமது குமாரத்தி
யைத் தந்து அவன் தகப்பன்வீட்டாருக்கு இஸ்ரவேலிலே
சருவமானியம் கொடுப்பார் என்று சேவகருக்குள் மெதுவான
ஒரு பேச்சும் நடந்தது. வரப்போகிற வெகுமானத்தைப்பற்றிப்
பேச வாய் எழும்பினதேயன்றி, அவனை ஜெயிக்கப்போக ஒரு
வனுக்கும் கால் எழும்பவில்லை. தாவீது கோலியாத்தைக்குறித்
துப் பேசும்வார்த்தைகளையும் அதைப்பற்றி மற்றவர்களிடத்தில்



விசாரிக்கும் சமாச்சாரங்களையும் படையில் நின்ற அவருடைய
மூத்தசகோதரன்கேட்டு, தாவீதின்மேல் கோபங்கொண்டு, நீ
இங்கே வந்ததென்ன? வனாந்தரத்திலிருக்கிற அந்தக் கொஞ்ச
ஆடுகளை நீ யார்வசத்தில் விட்டாய்? யுத்தத்தைப்பார்க்க அல்
லவா வந்தாய்! உன் துணிகரத்தையும், உன் இருதயத்தின் அகங்
காரத்தையும் நான் அறிவேனென்று கடிந்துபேசினான். இது
வெளிக்கு நேசபாசத்தால் பொங்கி நன்மைக்கென்று கடிந்து
கொள்ளுகிறதுபோல காணப்பட்டாலும், உள்ளுக்குள் பொறா
மையாய் இருந்தாலும் இருக்கலாம். ஏனெனில் தாவீதின் அண்
ணன்மார் அவருடைய வீரச்செய்கையைப்பற்றி நன்றாய்
அறிந்திருந்ததுமாத்திரமல்ல, அந்தரங்கத்தில் நடந்த இராஜாபி
ஷேகசெய்தியையும் அறிந்திருக்கவேண்டியது. நெருங்கின
பந்துக்களுக்குள்ளே பொறாமை அதிகம் என்பதை இது திரு
ஷ்டாந்தப்படுத்துகிறது. இராஜபுலவர் தமது அண்ணனைப்
போல கண்டபடிபேசாமல் பொறுமையுடன் "நான் இப்பொ
ழுது என்னசெய்தேன், நான் வந்ததற்குச் சரியான முகாந்தர
மில்லையா?" என்றுமாத்திரம் சொல்லிவிட்டார். அவர் தமக்
குள், உண்டாகும் கோபத்தையும் அபிமானத்தையும் கோலி
யாத்தின் தலைமேல் கொட்டவேண்டும் என்றிருந்ததால், அண்
ணனால்வந்த கடுஞ்சொற்களை அபிஷேக எண்ணெய்போல
எண்ணிக்கொண்டார்.

அவர் அங்கும் இங்கும் ஆத்திரத்தோடேபோய் சேவகரு
டன் பேசிக்கொண்டிருந்த ஜாடையால் இவருடைய நோக்கம்
சீக்கிரம் வெளியாயிற்று. இந்த சமாச்சாரம் அரசன்காதில் எட்
டினவுடனே அரசன் அழைத்துவரச்சொன்னான். அப்போது
தாவீது தாம் வீட்டிலிருந்து வந்தகோலமாய் சவுலைத் தரிசித்தார்.
கோலியாத்தை மடங்கடிக்க ஒருவன் துணிந்துவிட்டான் என்ற
செய்தி அவனுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தாலும், ஜெயிக்கப்
போகிற ஆளைக் கண்டவுடனே இவனேது, ஜெயிப்பதேது?
என்று எண்ணினான்; வரும் வீரன் தன்னிலும் நெட்டையனாக்
கும் என்றெண்ணினான்; வந்தபின்போ தன்னிலும் குள்ளன்
என்றுகண்டு சந்தேகப்பட்டான். அதை அவன் முகக்குறியால்
தாவீது கண்டு சவுலை நோக்கி: "மகா இராஜாவே! இவனி
மித்தம் உம்முடைய இருதயம் கலங்கவேண்டியதில்லை;
உமது அடியானாகிய நான்போய் இந்தப் பெலிஸ்தியனோடே
யுத்தம்பண்ணுவேன்" என்றார். சவுல் இந்த வார்த்தைகளைக்
கேட்டு வெட்கப்படவேண்டியதல்லவா?இப்போது கோலியாத்
தை ஜெயிக்கும் வேலை யாருடையது? சவுலுடையது. அவன்

மயங்குகிறான், தாவீது நாணாச்ச என்று நெருங்குகிறார். ஐயோ, சவுலே! உன் பழைய வீரம் எங்கே? ஆணவமெங்கே? உன் தோளின் உயர்வெங்கே? அம்மோனிய இராஜாவை முறியடிக்கும்படி ஜனங்களை உற்சாகப்படுத்தின உன் நாவு இப்போது எங்கே? நாற்பதாயிரம் பெலிஸ்தியரை ஒரேநாளில் முறியடித்த உன் பழைய முடுக்கு எங்கே? இப்போது ஒரு பெலிஸ்தியனை முறியடிக்க இயலாமல் அவனுடைய 40 நாள் தூஷணத்தையும் கேட்டுக் காதுக்குள் அடக்கிவைத்து சுரணைகெட்டவன் போல் இந்த 41-ம் நாளிலும் இருக்கிறாயே; இதின் அந்தரங்கம் என்ன? கர்த்தருடைய ஆவி உன்னைவிட்டு விலகிவிட்டார், இனி உன்னால் ஒன்றும் ஆகாது. இதுவே அதின் அந்தரங்கம். ஒருகாலத்தில் பாவங்களை பலமாய் எதிர்த்து முறியடித்த பக்தர் இன்னொருகாலத்தில் ஒரு அற்ப பாவத்தை எதிர்க்க முதலாய் இயலாமல் போகலாம்.

தாவீது எவ்வளவு நம்பிக்கையோடு பேசினாலும் சவுலின் மனதிற்கு அது கூடாதகாரியம்போலிருந்தது. சவுல் தாவீதை நோக்கி: "அப்பா! அந்த வீரனை வெல்ல உன்னாலாகாது, நீ இளைஞன், அவனோ வெகுநாள் வீரனாக்கும்" என்று சொன்னான். அப்போது தாவீது சவுலைப்பார்த்து: "மகா இராஜாவே! அடியேனைப் பையனென்றும் பெலவீனனென்றும் நீர் அற்பமாய் எண்ணவேண்டாம்; நான் இதிலும் இளையவனாயிருக்கும்போது ஒருவிசை என் ஆடுகளைத் தின்னவந்த சிங்கத்தையும், ஒரு கரடியையும் தொடர்ந்து அதன் தாடையைப்பிடித்து அதை அடித்துக் கொன்றுபோட்டேன். சிங்கத்தையும் கரடியையும் கொன்ற எனக்கு இந்தப் பெலிஸ்தியன் எம்மாத்திரம்? மேலும் அவன் ஜீவனுள்ள தேவனை நிந்தித்தானே" என்றார். இவர் ஜெயத்தைத் தமது கைகளில் வைத்துக்கொண்டிருப்பவரைப்போல் பேசினார். இராஜபுலவர் பேசின வீரச்செய்கைகளும், அவர் தேவமகிமையின் வல்லமையால் வீரங்கொண்டு நின்றதும் அரசனுடைய ஐயத்தை அகற்றிவிட்டது. உடனே சவுல் நம்மிலும் நமது சேனையினத்திலும் இவனைவிட வீரனைக் காணோம், காரியம் ஆனபடியாகிறது, ஒருநாளல்ல, 40 நாளாக எதிரிவந்து வாய்தூறி பந்தயங்கூறி பேசுவது இன்றோடு முடியட்டும் என்று தனக்குள் உத்தேசித்துக்கொண்டு தன் வஸ்திரங்களை உடுத்துவித்து, வெண்கலச்சீராவை அவர் தலையின்மேல் போட்டு, ஒரு கவசத்தையும் அவருக்குத் தரிப்பித்தான். தன் பட்டயத்தையும் சவுல் தாவீதின் இடுப்பில்கட்டி ஜெயவரம்கூறி அனுப்பினான். சவுல் இவ்வண்ணம் தாவீதை அவன்



சேனையினத்துக்கு முன்பாக சவுலாக்கிவிட்டானென்று சொல்லலாம். தேவனால் இராஜ்யபாரத்திலிருந்து புறக்கணிக்கப்பட்ட சவுல், இப்பொழுதுதானே தன் அந்தஸ்தைப் புறக்கணியாமல் புறக்கணிக்கிறதுபோலிருக்கிறதல்லவா?

இராஜபுலவர் இவ்வித உடையை ஒருநாளும் உடுத்திப் பழகினவருமல்ல, அவர் ஒருநாளும் அரையில் கத்திகட்டினவருமல்ல. அவர் இந்த உடையோடு சற்றுத் தூரம் நடந்துபோகவே, தம்மைத்தாமே கொலைசெய்துகொள்ள யுத்தஞ்செய்துகொள்ளுகிறதுபோலிருந்திருக்கும். ஆதலால் இந்த உடை தமக்கு வேண்டாமென்று கழற்றிவிட்டு, தமது வழக்கம்போல ஒரு தடியோடும் கவணோடும் போனார். எல்லாச் சத்துருக்களுக்கும் ஒரேவித ஆயுதமும், ஒரேவித யுத்தமுறையும் உதவாது; ஆவிக்குரிய யுத்தத்தில் சத்துருவைக்கண்டு யுத்த ஆயுதங்களைப் பிரயோகிக்கவேண்டியது. ஏனெனில் அந்த யுத்தத்தில் ஒரு கிறிஸ்தவனுக்கு மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் போராட்டமுண்டு. தேவனுடைய ஆயுதசாலையில் ஜெபம், உபவாசம், எதிர்த்து நிற்குதல், சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், இரட்சணியம், மன உறுதிமுதலிய பல ஆயுதங்களுண்டு. எந்தெந்தச் சமயத்தில் எதைப் பிரயோகிக்கவேண்டுமோ அதைப் பிரயோகிப்பதே ஆவிக்குரிய யுத்தமுறையாய் இருக்கிறது. சவுலின் ஆயுதமும் உடையும் தாவீதுக்குச் சரிப்படவில்லை. மற்றவர்களுடைய ஆத்தும யுத்தஆயுதம் உனக்குச் சரிப்படாது. ஏனெனில் சாத்தானை எதிர்க்கவிரும்பும் இரண்டு பாவிகளும் ஒரேவித பாவிகளாயிருந்தபோதிலும் அவர்களிடத்தில் விளங்கியிருக்கும் பேயின் ஆதிக்கம் ஒரேமாதிரியாகத்தான் இருக்குமென்று சொல்லக்கூடாது. குணப்படவிரும்பும் பாவி தன் ஆயுதத்துக்கேற்ற சத்துரு வருவானென்று எதிர்பார்த்திராமல் சத்துருவுக்கேற்ற ஆயுதத்தைச் சம்பாதித்து வழங்கவேண்டியது.

இராஜ புலவர் தடியும் கவணுமாய்ப் புறப்பட்டுப்போகிறதையும், கோலியாத்து பூதம்போல நிற்கிறதையும் நாம் இப்போது கூடநின்று பார்த்தால் நமக்கு என்னமாயிராது! அந்தப் பூத இராட்சதனுடைய பல்லுக்கல்ல, நகத்துக்கு இந்தப் பாலியன் இரையாகிப்போவார் என்று தீர்மானமாய்ச் சொல்லுவோமல்லவா! கோலியாத்துத் தன் கத்தியையும் வீசவேண்டுமோ,

கையைத் தூக்கவேண்டுமோ? இந்தச் சிவந்த வாலிபன் கிட்ட வருமட்டும் சும்மாயிருந்து, கிட்டவந்தபின்பு அவர்மேல் சரிந்து விட்டாலும் போதுமே என்று சொல்லுவோமல்லவா? நல்லது இதின் முடிவையும் இந்த வேடிக்கையையும் சற்றுப் பாரப்பா! இராஜபுலவர் அவனுக்கு விரோதமாய் அடியெடுத்துவருகிறதைக் கண்டவுடனே கோலியாத்து வீரவைராக்கியத்தால் தள்ளுண்டுவருகிறான். வா—வா—கோலியாத்தே, வா! உன் நடைகள் மனுஷநடைகளாயிராமல் பூதநடையாய்க் காணுது; ஆனாலும் வா—நீ ரோசங்கெட்டவன், நீ உள்ளபடி வீரனேயானால் வெறுங் கையோடு உன்னை வெல்லவரும் எங்கள் வீரனைக் கண்டவுடனே நீயும் உன் வெற்று உடலோடும் கையோடும் வருவாயே! ஆ, பெலிஸ்தியரே! நோக்குங்கள்—எங்கள் வீரன் வெறுங் கையோடு வருகிறார், உங்கள் வீரன் கத்திக்கையோடு வருகிறான். ஆனாலும் யார் செயிப்பாரென்று பார்ப்போம்!

இராஜபுலவர் எதிரிக்கு எதிர்கொண்டுபோகும் வழியில் ஒரு சிற்றாறு ஓடினது. அந்த ஆற்றுக்குள் தமது கவணுக்கேற்ற ஆறு கூழாங்கற்களை அவர் எடுத்து, தமது அடைப்பையில் போட்டுக்கொண்டார். அவர் தடியோடு வருவதை மாத்திரம் கோலியாத்து கண்டான்; அவருடைய கழுத்தில் தொங்கின கவணை அவன் காணவில்லை. இராஜபுலவர் மீசைமேல் கைபோட்டு வீரமாய் நடந்துவருவது கோலியாத்தைப் பரிகாசம்பண்ணுகிறதுபோலிருந்ததாக்கும். அவன் இராஜபுலவரின் இளம்பிராயத்தையும் சிவந்த மேனியையுங்கண்டு அவரை அசட்டையாய் நினைத்து, நீ தடியோடு என்னிடத்தில் வர நான் நாயா என்று கதறி, தன் தேவர்களையெல்லாம் பேர்சொல்லி அவர்கள் நாமத்தால் தாவீதைச் சபித்தான். இதுதான் கோலியாத்செய்த முதலாம் யுத்தம். சாபங்களே அவன் முதலாவது பிரயோகித்த ஆயுதங்களாயிருந்தன. தன் தேவர்கள் நாமத்தால் சபித்தவுடன் தன் எதிரி உருமாறிக் கலங்கிவிடுவானென்று நினைத்தான்போலிருக்கிறது. தன் தேவரின் சாபம் அவனைத் தொடரவில்லையென்று கண்டபின்பு, தன் கர்வத்தை ஆயுதமாகப் பிரயோகித்து இராஜபுலவரை மடக்கவேண்டுமென்று கருதினவன்போல் தாவீதைப்பார்த்து, "என்னிடத்தில் வா, நான் உன் மாம்சத்தை ஆகாயத்துப்பறவைகளுக்கும் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன்" என்று சொன்னான். இப்படிச் சொல்லவே ஒருவர் சத்தம் ஒருவருக்குக் கேட்கும் அளவு சமீபமாய் இந்தப் போர்வீரர் இருவரும் நெருங்கினார்கள். இராஜபுலவர் இம்மட்டும் ஜெபத்தியானத்தோடிருந்த தமது வாயைத்



திறந்து, கோலியாத்தைநோக்கி: "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலருடைய தேவனாகிய சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்; இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தியருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப்பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டென்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள்; கர்த்தர் பட்டயத்தினாலும், ஈட்டியினாலும் இரட்சிக்கிறவரல்ல என்று இந்த இருபட்சத்துசேனையும் அறிந்துகொள்ளும், யுத்தம் கர்த்தருடையது, அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்றார். இவ்விருவருடைய சண்டைமூண்ட வசனங்களைப் பார்க்கும்போது இராஜபுலவர் தம் பலத்தால் அல்ல, உன்னதபலத்தாலும் தன் கித்தாப்புக்காக அல்ல, தேவமகத்துவத்திற்காகவுமே புறப்பட்டுவருகிறதாகவும் பேசுகிறார் என்று தெளிவாய் விளங்குகிறது. மேலும் முடிவை அறிந்தவர்போல்

> கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்,
> நான் இன்று உன் தலையை வாங்கிவிடுவேன்,
> பெலிஸ்தியர் பாளயம் இன்று பிணமாகும்

என்று தைரியமாய்க் கூறுகிறார். இது கோலியாத்தையும் அவன் பட்சத்தையுங்குறித்து இராஜபுலவர் தீர்க்கதரிசனங் கூறுவதுபோல் இருக்கிறது. அவர் இந்த யுத்தத்தைக் குடும்பயுத்தமாகவும் கோத்திரயுத்தமாகவும் நாட்யுத்தமாகவும் கருத்துக்கொள்ளாமல், பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் உண்டாகும் தேவயுத்தம்போல் எண்ணிக்கொண்டார்.

"யுத்தம் கர்த்தருடையது"

என்ற வாசகம் அவர் சிந்தையின் சிரசுக்குமேல் நின்று பறந்தாடும் விருதுபோல் விளங்கிற்று.

இராஜபுலவருக்கும் கோலியாத்துக்கும் நடந்த சம்பாஷணையைக் காட்டும் பாவனையாக செஞ்சிதோமால் என்னும் ஒரு கிறிஸ்தவப்புலவன்' பாடியிருக்கும் கவிகளை இவ்விடத்தில் பேர்த்தெழுதுவது நன்றாயிருக்கும்.

## கோலியாத்தின் தூஷணங்கள்.

(காலடி தரு. சௌராஷ்டகம்.)

பல்லவி.

ஆரடா செவத்த சிறு பையா—எனைமடங்க
அடிக்க வந்தாயோ சொல்லுமெய்யா.

அநுபல்லவி.

சேரடா ஒரு கைவந்து-பாரடாவெட்டுவேனுனை.—ஆரடா.

சரணங்கள்.

அறியாதவன் நீ சொன்னபேச்சே—நம்பிசவுலும்
அனுப்பினனவன் புத்திபோச்சே—என்னுடசேதி,
தெரியாதோ ஈட்டி கூர்மையாச்சே—அதையுமுதற்
ஷேக்கவிரும்பினல் செய்ததாச்சே—அதை சுமக்குஞ்
சேவகனெனக்கு நல்லஜோடு—இப்போ தெறித்து
ஜெயிக்க நீ யல்லவெனக்கிடு—கையிலாகாதென்று
தப்பிப்பிழைத்தோடியுங்கள்
சவுலண்டைச்சொல்லிப்போடு,— ஆரடா.

சேனைபரிவார முன்னிற்பட்டு—விழாமற்போனல்
தேவனெங்கள்தாகோன் மீதிலொட்டு—உங்கள்பெரிய
கோனென்முந் நான்வந்து நாணைத்தொட்டு—இதுவரையில்
கொக்கரித்துங்களைச் செய்தேன்திட்டு—ரோசமில்லையா,
நானொருத்தன் வந்தேன் தனிப்பட்டு—உங்களிலொரு
நல்லசேவகனை என்மேல்விட்டு—அவன் ஜெயித்துப்
போட்டுவிட்டாலெங்கள்முழுக்
கூட்டமுழுங்களடிமை,— ஆரடா.

கம்புகொண்டெந்தன் முன்னே நீ வந்தா—யுனையெனது
கத்தியினற் சின்ன சின்னத்துண்டாய்—வெட்டிபக்ஷிகள்,
கும்புக்கிரையாக்கிடுவேன்கண்டாய்—பின்பூதரை நான்
கொத்துடன்பெலிஸ்தருக்குத்தொண்டாய்-செய்யாதுபோனல்,
என்னுடையபேருங் கோலியாத்தா?—நானிவ்வளவு
எடுப்பாய்வளர்ந்த ஊருங்காத்தா?—எல்லோர்முனந்தன்,
சுந்தரமேனியைக்கொத்தி
அந்தரத்திலெற்றிடுவேன்,— ஆரடா.



பையையவிழ்த் தெடுத்தாய்க்கல்லு—அதைக்கண்டுநான்
பயந்தோடிப்போவே னென்றேசொல்லு—ஓடிபோகாதே,
கையிலெடுத்தே நான்வாளைநில்லு—பெலிஸ்தருடக்
கண்களுக்கு யூதரொருபுல்லு—உனைநானிப்போ,
காட்டின்மிருகங்கட் கிரையாக்கி—யூதருடைய
சனத்தப்படையை வெட்டிப்போக்கி—பின்புங்களுட
நாட்டின்சனமுங்கனமும்
நானடிமையாகச்செய்வேன்,— ஆரடா.

## இராஜபுலவரின் மறுமொழி.

(காலடி தரு. மோகனம்.)

பல்லவி.

அரக்கா உனக்கித்தனை முறுக்கா—கர்த்த
ரடக்குவாருனை என்றால் சுருக்கா.

அநுபல்லவி.

குறுக்கவந்த நதியின் கூழாங்கல்லிருக்குது
கொடியனின் வசைகளென் மனதையறுக்குது
செருக்களத்தி லுயிருனைவிட்டு பறக்கவே
திறப்பேன் திறப்பேன்-திறப்பேன் தலையை யிரண்டாய்,—அர.

சரணங்கள்.

ஆடுமேய்த்த பையன் நானடா—சிங்கத்
தழித்தவனென்போர்த வீரடா—நீ,
தேடும் பலமுன்னோர்கள்வீணடா—கர்த்தர்
ஜெயிப்பா ரவர்க்கு நீயோரீடடா—உன்னால்
வாடும் இஸ்ரவேலர் மனதுகளித்திட
வந்த பெலிஸ்தர் படையோடியொளித்திட
போடும் உன் ஈட்டியின் கூரைமுறித்திட
பிடித்தேன் பிடித்தேன்—பிடித்தேன் கவணென்கையில்,—அர.

காத்துரா னென்பவன்நீதானு—எந்தன்
கவணின் கல்லுக்குன் நெற்றிசரிதானு—இதோ
பார்த்திரு சுழற்றினேன் நான்தானு—நீ
பதைத்துமடங்கிச் சாகக்குறிதானு—எங்களை

வாத்தூறுபேசினதுன்னுடபல்லெடா—
மாட்டுதற்கென்கையின் வல்லவர்கல்லடா
காத்திரமான உன் தலையையுடைக்கிறேன்
[illegible]ங் காகங்—காகங் கழுக்கள் தின்ன,— அரக்.

ஜீராவாளு ஜமுதாடு—அதை
சுமக்கசேவகர் நல்ல ஜோடு—இதெல்லா
மேரு தந்தூதினநெற் கூடு—இந்த
மெறட்டுக்கஞ்சவோ வந்தேன் ஈடு—இப்போ
பாரமிலாமலுனை நானும் கொல்லவே
பக்கத்துணை தேவனல்லால் வேறல்லவே
சாரமிலாதுமை தாகோனைக்கும்பிடும்
சண்டி சண்டி—சண்டி சுன்னத்தில்லாத,— அரக்.

நெட்டையனெனக் கெதிரில்லையே—என்று
நினைத்துன்வாய்மதம் பேசுஞ்சொல்லையே—கேட்டு
குட்டையன்வந்தே னெதிர்நில்லையே—உந்தன்
கூட்டமழியுமந்த தொல்லையே—கண்ட
சவுலும் பெண்ணைக்கொடுப்பதல்லாமல்—பெண்கள்
சந்திக்கவருவார்கள் நில்லாமல்—தேவ
பலத்தினாலேவிட்டேன் வருதுகல்—ஓடாதே
பட்டாய்ப் பட்டாய்—பட்டாய் வெட்டினேனிதோ,— அரக்.

இராஜபுலவரின் வாசகம் கோலியாத்தின் கோபாக்கினியைக் கிளப்பிவிட போதுமான விறகுச்சுள்ளிகளாயிருந்தன. ஐயோ, இராஜபுலவரே! கோலியாத்து கோபத்தால் பொங்கிவிடுகிறானே, அதின் சுவாலை எவரையும் நடுங்கப்பண்ணுகிறதே! இனி நீர் என்ன செய்வீர்? நேசனே! கலங்கவேண்டாம்; அவனிலிருந்துண்டாகும் அக்கினிக்கு அவனுதிரத்தையே ஜலமாக ஊற்றி அவிக்கிறேன் பார். கோலியாத்து தன் கோபத்தால் மதிமயங்கி இராஜபுலவரை மடக்கி அதம்பண்ண அட்டகாசம்பண்ணி கிட்ட நெருங்கினான்; உடனே இராஜபுலவர் ஓட்டம்பிடியாமல் வீரப்புலிபோல தீவிரமாய்ச் சலாகைப்போட்டு அந்தச் சேனைக்கும் பெலிஸ்தியருக்கும் எதிராக ஓடி தன் கையை அடைப்பத்திலேபோட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து கவணிலேவைத்துச் சுழற்றி கோலியாத்தின் நெற்றியில் பட எறிந்தார். அந்தக் கல் பூதஇராட்சதன் நெற்றியில்பட்டுப் பதிந்துபோனதால் அடியற்றமரம்போல் அவனும் முகங்குப்புறவிழுந்தான். உடனே அவர் சவ்வாஸ் என்று தன்னைத்



தட்டிக் குதித்துக்கொண்டு விழுந்துகிடந்த இராட்சதனை மிதித்து, அவன் கத்தியை எடுத்து அவன் சிரசைவெட்டி இடது கையில் கோலியாத்தின் தலையையும், வலது கையில் அவன் பட்டயமுமாய்த் திரும்பிவந்தார்.

இராஜபுலவரே! நீரே சமர்த்தன், உம்மைப் பெற்றதாய் பாக்கியவதி; நீர் தடியோடு போனீர், தலையோடு வருகிறீர். உமது தடி கோலியாத்தை வெல்லாமல் கோலியாத்தின் பட்டயமே அவனைக் கொன்றது. கோலியாத் மடிந்ததைக்கண்ட பெலிஸ்தியர் சேனையனைத்தும் பயந்தோடுவதற்குப் பந்தயம் பெறுகிறவர்களைப்போல் ஓடினார்கள். எலியின் அந்தியகாலத்தில் நடந்த சண்டையில் இந்தக் கோலியாத்தென்பவன் எலியின் மக்கள் இருவரையும் கொன்று கர்த்தருடைய பெட்டியையும் பிடித்ததாக கல்தேயதார்கூம் ஆகமத்தில்கண்டிருக்கிறது. இதினாலே கோலியாத்தின் விழுதல் எவ்வளவு பெரிதாயிருக்குமென்று தெரிகிறது. "ஓடுகிற நாயைக் கண்டால் துரத்துகிற நாய்க்குக் கொண்டாட்டம்" என்ற பழமொழிப்படி இஸ்ரவேலர் பெலிஸ்தியரை அநேக மைல் தூரம் துரத்தி அவர்களில் அநேகரைக் கொன்றார்கள். இராஜபுலவர் தாம் வெட்டிப்போட்ட வீரனுடைய தலையை சவுலுக்குக் காட்டி அவனால் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றார். கோலியாத்தின் ஆயுதங்களைத் தன் வெற்றிவிருதுபோல் தன்னுடைய கூடாரத்தில் வைத்துக்கொண்டு பட்டயத்தைமாத்திரம் சந்நிதியிலிருக்கும்படியாக ஆசாரியர் கூடாரத்தில் ஒப்புவித்தார். இந்தச் செய்கையானது, உம்மாலே எங்கள் சத்துருக்களை மடங்கடித்தோம்; உம்மாலே எங்களுக்கு விரோதமாய் எழும்பினவர்களைக் கீழேவிழத்தாக்கிறோம் என்று அறிக்கையிடும் பாவனையாயிருந்தது.

## கலியாண பருவம்.

இராஜபுலவர் கோலியாத்தை ஜெயித்தவிஷயமானது இஸ்ரவேல் ஜாதிக்குப் பெரிய பாக்கியத்தை உண்டுபண்ணினதோடு, தாவீதுக்கும் அதிக பேர்பிரஸ்தாபத்தை உண்டாக்கிற்று. அவருடைய பிற்கால ஜீவியத்துக்கு இது ஒரு ஆரம்பம்போல் இருந்தது. இந்தச் செய்கையானது அரசன் மனதிலும், அவர் குடும்பத்தின் மனதிலும், சேனைகளின் மனதிலும் உயர்ந்த எண்ணத்தையுண்டாக்கிற்று. இவ்வளவு சிறந்த வெற்றியைக்கண்ட அரசன் இராஜபுலவரை வீட்டுக்கு அனுப்பா

மல் தன்னிடம் வைத்துக்கொண்டான். இராஜகுமாரன் அவர் மேல் தன் ஆசையை வைத்து, தன் உயிரைப்போல் அவரை நேசித்து தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையுங்கூட தாவீதுக்குக் கொடுத்தான். யுத்தத்தில் வீரராய் விளங்குகிறவர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்படுகிறதும், கனப்படுத்துகிறதும் எக்காலத்திலும் வழக்கமாயிருந்தபோதிலும், இம்மாதிரியான கனம் இவருக்குத் தேவச்செயலினாலேதான் கிடைத்ததென்று சொல்லவேண்டியது. சவுலின் குமாரனாகிய யோனத்தான் செய்த இந்த மேன்மையானது என் பிதாவின் பட்டம் எனக்கல்ல, ஈசாயின்மகனே! உமக்குத்தான் தகுந்தது; என் வில்லையும், வஸ்திரத்தையும், பட்டயத்தையும், கச்சையையுங்கூட உமக்கே பாதகாணிக்கையாக்கிவிடுகிறேன் என்று அறிக்கைசெய்கிறதுபோலிருக்கிறது.

தாவீது என்பவர் மூலமாய்க் கிடைத்த ஜெயமானது சவுலை அதிகமாய்ச் சந்தோஷப்படுத்திவிட்டதால் அவன் தன் ராஜ்யத்தின் பிரதான நகரங்களுக்கெல்லாம் பவனிபோய் அவர்களை ஏவி தன் ராஜ்யத்தை ஸ்திரப்படுத்த முயன்றான்போல் இருக்கிறது. அரசர் வருகை குடிகளுக்குப் பெரும்பேச்சை உண்டாக்குமல்லவா! அந்தந்த நகரத்தார் தங்கள் அரசனை தக்கமரியாதையோடு வாழ்த்தும்படி பல ஆயத்தங்களைச் செய்தார்கள். அவ்வாயத்தங்களில் கவிகளைக்கட்டி கன்னியாஸ்திரீகள் கின்னரகீதவாத்தியங்களுடன் எதிர்கொண்டுபோகிறதும் ஒன்றாயிருந்தது. இந்த நகர் சோதனைக்கு இராஜபுலவரும் கூடப்போனார் என்று தோன்றுகிறது. ஒவ்வொரு நகரத்திலிருந்துவரும் கவிக்கன்னிகளும் இனிய குரலால் கவிகள்பாடி அரசனை வாழ்த்தினார்கள். சவுலுக்குப் பாட்டென்றால் கொண்டாட்டம் அல்லவா? கன்னியர்கள்பாடல் அவன் உள்ளத்தை ஆனந்தத்தால் பரவசப்படுத்திற்றென்றல்லோ நாம் நினைப்போம். அல்ல; அப்பாடலில் எல்லாம் கோலியாத்தை வென்ற தாவீதின் பேரும் கலந்துவந்திருந்தது; அது சவுலுக்குப் பிடிக்கவில்லை. அதுமாத்திரமா? அந்த வீரனுக்குச் சவுலைவிட அதிக கனம்கொடுத்திருந்தது.

சவல் ஆயிரம்பேரைக் கொன்றான்,
தாவீது பதினாயிரம்பேரைக் கொன்றார்

என்பதே அந்தப் பாடல்களின் பல்லவியாய் இருந்தது. இது அவனுக்கு அதிக வைராக்கியத்தை எழுப்பிற்று. தாவீதின் பாட்டைக் கேட்டவுடனே ஓடிப்போய்விடுகிற அசுத்தஆவி ஸ்திரீகளின் பாட்டைக் கேட்டவுடனே திரும்பவந்ததென்று சொல்லலாம். சவுல் எங்கேபோனாலும் தாவீதுக்குத் தன்னைவிட பத்துபங்கு அதிக மதிப்பு இருக்கிறது என்று அவன் அறிந்துகொண்டு, அதற்கு இடங்கொடுக்கக்கூடாதென்று தன் அசுத்த ஆவியின் ஏவுதலினாலே தீர்மானம்பண்ணினான். இச்சமயத்தில் சவுலிடத்தில் காணப்பட்ட பொறாமையும், சயகனமும் அநேக மனுஷரிடத்தில் காணப்படுகிறதுண்டு. அவர்கள் தங்கள் ஆயுள்காலத்தில் தங்களை அறிந்த பெரியோருக்குள் தங்களைவிட சமர்த்தன், யூகி, கல்விமான், நல்ல வேலைசெய்கிறவன் என்கிறபேர் வேறொருவனைப்பற்றியும் உண்டாகக்கூடாதென்று இரவும் பகலும் கவலைப்பட்டு சமயம்பார்த்து ஒருவனைப் பற்றியுண்டாகிற பேரையும், கீர்த்தியையும், மதிப்பையும் குறைக்கப் பிரயாசப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பிறர் கெட்டு தான் வாழ விரும்பும் பரமசண்டாளராய் இருக்கிறார்கள். மற்றவர்களுக்குக் கனமுண்டாகிறதைப்பற்றி அவர்கள் காதுகேட்டால் அதைப்போல நீசத்தனம் வேறில்லையென்று நினைக்கிறார்கள். அவர்கள் அநேகருடைய கனத்தை ஒண்டியாய் அநுபவிக்கிறார்கள். எல்லாரும்கூடி தன்னைக் கனப்படுத்தவேண்டும்; அப்படிக்கில்லாதபட்சத்தில் குற்றமில்லாதவர்களையும் குற்றப்படுத்தி கொலைக்குட்படுத்த கூட்டங்கூடுகிறார்கள். வாசிக்கிறவனே! இந்தக் குணம் உனக்குவேண்டாம். இது சவுலுக்கும் அவன் குட்டிகளுக்குமே சொந்தமாய்ப் போகட்டும். இவ்விதமாய்க் கனத்தைச் சம்பாதிப்பது கிடைக்காது, மேலும் நான் அதை கனம் என்று சொல்லவுமாட்டேன்.



தன்னைவிட தாவீதுக்கு அதிக கனம் கிடைத்ததே என்ற வியசனத்தால் சவுல் வியாதிப்பட்டான். சிலகாலமாய்த் துலைந்துபோன அசுத்தஆவி அவனைத் தொடர்ந்துகொண்டது; இனிமேல் அது முன்போல் தாவீதின் கின்னரத்தால்தான் போகவேண்டியது. அசுத்த ஆவி பாட்டைக்கேட்டு வருகிறதுமுண்டு, பாட்டைக்கேட்டு ஓடுகிறதுமுண்டு. அரசன் பேயின்குரோதத்தால் படுக்கையிலானார் என்று தாவீது கேள்விப்பட்டவுடனே தமது ஔஷதபையாகிய கீதவாத்திய பையோடுபோய் பேரின்பகீதங்களைப் பாடினார். ஒருவேளை தமது சங்கீதங்களில் அநேகத்தை அச்சமயத்தில் அவர் பாடியிருக்கலாம். இராஜபுலவர் கின்னரம்பாடி சவுலின் பித்தம் மாறுகிற சமயத்தில் அவரை இரண்டுதரம் குத்தும்படி அவன் தன் ஈட்டியை எறிந்தான். ஐயோ, பாதகா! உன் பைத்தியத்தை நீக்கும் "வைத்தி

யனுக்கு இதுதானு வெகுமதி? நீ அவர்பாதத்தில் பொன்னைப்
படைத்து நன்றிசெலுத்தவேண்டியிருக்க,ஈட்டி எறிந்து கொல்
லவாபோகிறுய்? நன்மைக்குத் தீமைசெய்வது பசாசின் குணம்
என்ற கருத்துக்கு உன் கிரியை சரியாய் இருக்கிறது. சவுல்
இரண்டுதரம் ஈட்டியை எறிந்தும் தாவீது தேவச்செயலால் தப்
பிக்கொண்டார். தாவீது தப்பிக்கொண்டதே சவுலுக்கு அதிக
அச்சத்தைக் கொடுத்தது; ஏனெனில் அவர் தப்பினது கர்த்தர்
அவரோடிருக்கிறுர் என்பதை அவன் உள்ளத்துக்கு நன்ருய்
விளக்கிக்காட்டிற்று. அப்பால் சவுல், இனி நாம் தாவீதை
எதிர்த்து வெல்லக்கூடாது, உயர்த்திவெல்லப் பிரயாசப்படவே
ண்டுமென்று நினைத்து, ஒரு பெரிய பட்டாளத்துக்கு அவரைத்
தலைவராக்கினுன். வரவர தேசமனைத்தும் அவரை மதித்து மே
ன்மைபடுத்தினதையும், அவர் விவேகமாய் சகலத்தையும் நடத்
திவருவதையும் சவுல்கண்டு அதிகமாய்ப் பயப்பட்டுவந்தான்.
அவன் இராஜபுலவர்மேல் வஞ்சனையான மனம்வைத்து என்
கையல்ல, பெலிஸ்தருடைய கையே அவன்மேல் வரும்படி
நான் வகைசெய்யவேண்டும் என்று கருதி ஒருநாள் கூப்பிட்
டு, இதோ, நான் என் மூத்தமகளை உமக்குக் கட்டித்தருகிறேன்,
நீர்மாத்திரம் நல்ல சேவகனுய் பெலிஸ்தியரை அதம்பண்ணி
வரவேண்டுமென்று சொன்னுன். இப்படிச் சொன்ன சவுல்
தாவீதுபோய் பெலிஸ்தரை ஜெயித்து திரும்பிவருமுன் அவளை
ஆதரியேலுக்குக் கட்டிக்கொடுத்துவிட்டான். இது இராஜ புல
வருக்கு எவ்வளவு விசனத்தைக் கொடுக்கவேண்டியது. இதை
விட வேறுவிதமாய்ச் சவுல் பரியாசஞ்செய்யவும் வேண்டுமா!

அப்பால் அந்தப் பித்தன் மறுபடியும் இராஜபுலவரிடம் ஆட்
களை எடுத்துவிட்டு அந்தப் பெண்போனுலும் இரண்டாம்பெ
ண்ணைக் கொடுப்பேன் என்கிறுர், ஆனுல் நீர் உடனே படை
யெடுத்துப்போய் பெலிஸ்தியரை முறியடித்து அவர்களுடைய
நுனித்தோலில் நூறு பரிசமாகக் கொண்டுவந்தால் உடனே
உமக்குக் கலியாணமாகிவிடும் என்று சொல்லுகிறுர் என்று
சொன்னுர்கள். இராஜாவுக்கு மருமகனுகிறது தாவீதுக்குப்
பிரியமாயிருந்தது. ஒருவேளை சவுலின் குமாரனுகிய யோனத்
தான் அவரை ஏவியிருக்கலாம். தாவீது குறிக்கப்பட்ட காலத்
துக்குள்ளாக ஒருதரம் தன் படையோடு பெலிஸ்தியருடைய
எல்லைக்குட்போய் அவர்களை முறியடித்து நூறு நுனித்தோல்*

* சவுல் நுனித்தோலையல்ல, தலைகளைக் கொண்டுவரச்சொன்னதாக யோ
சேப்புஸ் சொல்லுகிறுர். 1 சாமு. 29. 4. அதை உறுதிப்படுத்து
கிறதுபோலிருக்கிறது.



கேட்ட சவுலுக்கு 200 கொண்டுவந்து கட்டினுர். அவர்
அடைந்த வெற்றியையும், அவருடைய பராக்கிரமத்தையும்
கண்ட சவுல், இனி நாம் கலியாணத்தைத் தீவிரப்படுத்தவே
ண்டுமென்று கருதி, அதற்கேற்ற ஆயத்தங்களைச்செய்து, குறித்த
லக்கினத்தில் தன் இரண்டாம் மகளாகிய மீகாளை அவருக்குக்
கலியாணஞ்செய்துகொடுத்தான். என்ருலும் அவரைக் கொல்
லும்படி, தான் நினைத்த எண்ணத்தை அவன் மாற்றவில்லை.
தன் குமாரத்தியைக் கட்டிக்கொடுத்தபின்பும் இந்தப் பாதகன்
இராஜபுலவரைக் கொன்றுபோடும்படி தன் மகனேடும், தன்
ஊழியக்காரர் எல்லாரோடும் சொன்னுன். அவனுடைய மக
னே அக்காலத்தில் அவரை மறைவாக வைத்துவிட்டு அவருக்
காக இராஜாவிடம்பேசி அவன் மனதை மாற்றினதால் சவுல்
நான் அவனைக் கொல்லமாட்டேன், அவன் முன்போல தாரான
மாய்வந்துபோயிருக்கட்டும் என்று சொன்னுன். இது வெளிப்
பேச்சுமாத்திரம், உள்ளுக்கு அவனுக்கிருந்த காய்மகாரம் போக
வில்லை. எப்போது யுத்தமுண்டாகுமோ அப்போதெல்லாம்
இராஜபுலவர் எப்படியும் போகும்படி கட்டளை பிறந்தது. இவ்
விதமாய் சவுல் அவர் உயிரைப்போக்கப் பிரயாசப்பட்டான்;
ஆனுல் அவரை வல்லமைபொருந்திய சக்கிரவர்த்தியாக்க தே
வன் சித்தங்கொண்டார். மறுபடியும் பெலிஸ்தியருக்கு விரோ
தமான ஒரு யுத்தமுண்டாயிற்று. அந்த யுத்தத்தில் தாவீது
மாண்டுபோவார் என்பதே சவுலின் எண்ணமாயிருந்தாக்கும்.
அவரோ வெற்றிவிருதோடும், ஜெயபேரிகையோடும், திரண்ட
கொள்ளையோடும் திரும்பிவந்தார். அதைக் கண்டவுடனே சவு
லுடைய அசத்தஆவி அவனை வேதனைப்படுத்திற்று. இராஜ
புலவர் இம்மட்டும் இந்தப் பாதகன்செய்த துரோகங்களைப் பக்
கத்தில்வைத்துவிட்டு சுரமண்டலமும் கையுமாய் அரமனைசேர்
ந்து இங்கிதகீதங்களைப் பாடி சவுலின் கோபிவிருந்து அவனை
விடுதலையாக்கினுர். பித்தம் தெளிந்துவரும்போது தன் சத்துரு
வைக் கொல்ல இதுவே தகுந்தசமயம் என்று சவுல் எண்ணி
தன் ஈட்டியை மறுபடியும் இராஜபுலவர்மேல் எறிந்து கொல்
லப்பார்த்தான். அவரோ தேவாதீனமாய்த் தப்பித் தமது வீட்
டிற்கு வந்துவிட்டார். இனி இவரைப் பரிச்சேதமாய் விடக்
கூடாதென்று அந்தப் பாதகன் எண்ணி சேவகரை அனுப்பி
வீட்டைக் காவல்வைத்து, விடியற்காலத்தில் அவரைக் கொலைக்
களத்திற்குக் கொண்டுவரக் கட்டளையிட்டான். இராஜபுலவர்
கீதம் சவுலுக்கு இன்பமாயும், அவர் முகம் அவனுக்குத் துன்ப
மாயும் இருந்தது. தகப்பன் குணத்தைத் திட்டமாய் அறிந்த

மீகாள் நாம் நமது கணவனைக் காப்பாற்ருவிட்டால் நாளைமுதல் கைம்பெண்ணுவது நிஜமென்று அறிந்து, இராஜபுலவனை உபாயமாய் ஒரு பலகணிவழியாக இறக்கிவிட்டுத் தப்பியோடப் பண்ணி, ஒரு சொரூபத்தை எடுத்துக் கட்டிலின்மேல்வைத்து அதன் தலைமாட்டிலே ஒரு வெள்ளாட்டுத்தோலைப் போட்டு துப்பட்டியினுல் மூடிவைத்தாள். இராஜபுலவனைக் கொண்டு போகும்படி சேவகர் வந்தபோது, தன் புருஷன் வியாதியாயிருப்பதாகச் சொல்லியனுப்பினுள். அப்படியிருந்தும் சவுல் எப்படியும் நான் அவனைக் கொல்லவேண்டும், அவனை கட்டிலோடு தூக்கிவாருங்களென்று கட்டளையிட்டான். கடைசியாக மீகாள்செய்த தந்திரம் வெளியாகிவிட்டது. மீகாள் தன் புருஷனுடைய பிராணனைக் காப்பாற்றின விஷயத்தைவிட்டு நாம் அவளைப் புகழ்ந்தபோதிலும் அவள் பொய்சொன்னது சரியல்ல. அவளுடைய செய்கை நலமானதாளுலும் அதை உறுதிப்படுத்த போதுமான மனத்திடன் அவளிடத்திலிருக்கவில்லை. உபாயத்தால் புருஷனைத் தப்புவித்தவள் பொய்யால் தன்னைத் தப்புவித்துக்கொள்ளுகிருள். சவுல் அவளைப்பார்த்து, நீ இப்படி என்னை எய்த்து என் பகைஞனைத் தப்பவிட்டாயே என்று கேட்டபோது "என்னைப் போகவிடு, இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுபோடுவேன்" என்று சொன்னுர்; ஆதலால் நான் விட்டுவிட்டேன் என்று பொய்சொன்னுள். இவள் தன் முந்தின செய்கையால் இராஜபுலவனை சவுலின் பட்டயத்துக்குத் தப்புவித்து பிந்தின பொய்யால் சவுலின் கோபாக்கினிக்கு எண்ணெய் வார்க்கிருள்.

## இராஜபுலவரின் சங்கட பருவம்.

இராஜபுலவர் இராக்கொண்டே நடந்து அடைக்கலம், அடைக்கலம் என்ரேடி தீர்க்கதரிசியாகிய சாமுவேலிடம் வந்து சேர்ந்தார். இச்சமயத்தில் இவர் தமது பட்டாளத்தேரு கூடிக்கொண்டு சவுலின் அநியாயங்களைச் சொல்லி தம்மைக் காப்பாற்றவேண்டுமென்று அவர்களைக் கேட்டிருந்தால் காரியம் முற்றிலும் வேருக இருக்கும். அவர் அக்கம் பக்கம் ஓடவேண்டியதும் இல்லை, ஒளிக்கவேண்டியதும் இல்லை; பசியையும் பழிப்பையும் அநுபவிக்கவேண்டியதும் இல்லை. அவரே ஒரு பெரிய சேனையைத் தமக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு தமது எதிரியோடு முகாமுகமாய் நின்று போர்புரிய



லாம். அப்படிப்பட்ட செய்கை ஒன்றும் அவர் செய்யாமல்
தேவனே தஞ்சம் என்று அபயமிடுகிறவனைப்போல அக்காலத்
தில் இருந்த தேவனுடைய தீர்க்கதரிசியின் பாதத்தில்போய்
அடைக்கலம்புகுந்தார். இராஜபுலவர் தமக்குச் சம்பவித்ததை
யெல்லாம் தீர்க்கதரிசியினிடத்தில் சொல்லுகிறபோது நாம்
கூட இருந்தால் எவ்வளவு துக்கமாயிருக்கும்! இராஜபுலவர்
மந்தைமேய்த்து, கீதம்பாடி, கத்திவீசி, கவண் எய்து, காலங்
கழித்ததுபோக சிலகாலம் தீர்க்கதரிசிகளின் புத்திரரோடு கா
லங்கழிக்கவும் தேவன் சித்தமானுர். தேவன் அவனைக் கொ
லைக்களத்து வீரனும், கொலுமண்டபத்து மன்னனும் ஆக்கு
கிறதோடு தீர்க்கதரிசியுமாக்க திருவுளங்கொண்டிருந்தார். அத்
திருவுளச்சித்தம் நிறைவேறும்படியாக இந்தச் சமயம் அநுகூ
லமாய் இருந்தது. சாமுவேல் இப்படிப்பட்ட சமயத்தில் அவ
ருக்கு இடங்கொடுத்தது பிசகென்று ஒருக்காலும் சொல்லக்
கூடாது. தன் கை தொட்டு அபிஷேகம் பெற்ற தலையைத்
தற்காக்கிறது தன் கடமை என்பதை அவர் நன்ருய் அறிந்தி
ருந்தார். மேலும் இராஜபுலவர் இராஜதுரோகியும் கொலைபாதக
னுமாயிராமல், குற்றமற்றவராயிருந்ததால் அவருக்கு அடைக்
கலங்கொடுத்ததில் தீர்க்கதரிசியைப் பிசகு சொல்லக்கூடாது.

இராஜபுலவர் நாயோதிலே அடைக்கலம் புகுந்திருக்கிற
செய்தி சவுலுடைய காதில் விழுந்தவுடனே அவன் சில சேவ
கரை அனுப்பி தாவீதைப் பிடித்துவரச் சொன்னுன். தாவீ
தைப் பிடிக்கவந்தவர்களைத் தேவன் பிடித்துக்கொண்டார்.
எப்படியெனில் இராஜபுலவனைப் பிடிக்கவந்த சேவகர் தீர்க்க
தரிசிகளின் கூட்டத்தைக் கண்டவுடனே தேவனுடைய ஆவி
அவர்கள்மேல் இறங்கினதால் அவர்களும் மற்றவர்களோடு
கூடிக்கொண்டு தீர்க்கதரிசனம் சொன்னுர்கள். இந்தச் சமா
சாரம் அரசனுக்கு எட்டினவுடனே வேறு சேவகரை அனுப்பி
னுன்; அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னுர்கள். மூன்ருந்
தரமும் சேவகரை அனுப்பினுன்; அவர்களும் முன் போனவர்க
ளைப்போலவே தேவஆவியால் நிறைந்து தீர்க்கதரிசனம் சொ
ன்னுர்கள். இப்படி மூன்றுதடவை நடந்த இந்த அதிசயம்
சவுலை உணர்த்தப் போதாதா? போதாது. மூடனுக்கு முதுகில்
முப்பது அடி அடித்தாலும் அவன் மூடத்தனம் மாருது. கடை
சியாக, போகிற சேவகர் எல்லாரும் மோசம்போகிருர்கள்;
இனி நானே போய் அவனைக் கொல்லுவேன் என்று சவுல்
சொல்லிக்கொண்டு புறப்பட்டு வந்தான். சவுல் வருகிருன்
என்றசெய்தி அவர்களுக்கு எவ்வளவேனும் அச்சத்தைக் கொ

டுக்கவில்லை. சவுல் தன் ஈட்டியைக் கூர்மையாக்கி, கத்தியைக் கருக்காக்கிப் புறப்பட்டு நாயோதுக்கு வந்தான். வரும் வழியிலே அவன்மேலும் தேவஆவி இறங்கினதால் வழியெல்லாம் தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டே நடந்துவந்து சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட அனைவரும் அதிசயப்பட்டு

"சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ?"

என்று சொல்லிக்கொண்டார்கள். தேவசமுகம் விளங்கும் தேவாலயத்துக்கு அடிக்கடி போகிறது மெத்த நல்லது. கவலையற்று உலகசிந்தையோடும், கடமைக்கென்றும் தேவாலயத்துக்கு வருகிற அநேகம்பேர் தேவாவி அவர்கள்மேல் இறங்குகிறதால் குணப்பட்டவர்களாய்த் தங்கள் வீட்டுக்குப் போகிறதுண்டு. சில வாலிபருடைய சேஷ்டையையும், கருவத்தையும் ஒரு போதகர் கண்டித்ததினால் அவரைப் பிரசங்கப்பீடத்தில் கல்லால் அடிக்கவேண்டும் என்று கல்லும் கையுமாய்ப் போனவர்கள் அதே ஆராதனையில் குணப்பட்டு, நல்லவர்களாகித் தாங்கள் வந்தநோக்கத்தை நிறைவேற்றாமற்போனார்கள்.

சவுல் நாயோதில் தீர்க்கதரிசனம் சொல்லிக்கொண்டு சாமுவேலின் பாதத்தில் கிடக்கிற சமயத்தில், தாவீது நாம் தப்பிப் பிழைக்க இதுதான் நல்ல சமயம் என்று எண்ணி, அவ்விடத்திலிருந்து புறப்பட்டு யோனத்தானிடம் வந்து நடந்த விபரங்களையெல்லாம் சொன்னார். அச்செய்திகள் யோனத்தானுக்கு அதிசயத்தைக் கொடுத்தது. தன் தகப்பன் தாவீதைத் தொடர்ந்துபிடிக்கும்படி போன விபரம் யோனத்தானுக்குத் தெரியாதிருந்தது என்று தோன்றுகிறது. யோனத்தானோ தாவீதை முழுமனதோடு நேசித்ததினாலே தன்னால் ஆனமட்டும் அவர் ஜீவனைக் காப்பாற்றுவேன் என்று உடன்படிக்கைபண்ணினான். சவுலுக்கு இப்படிப்பட்ட குணம் பிறக்குமென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். சவுல் கபடநெஞ்சுள்ளவனாய் இருந்தான், அவன் மகனோ நேசநெஞ்சுள்ளவனாய் இருந்தான். சவுல் தீர்க்கதரிசனம் சொல்லி முடித்தவுடனே தாவீதைக் கொல்லத் தேடினான். வெடிமருந்துபோல திடீரென்று எழும்பும் பக்திவிநயத்தை நம்பக்கூடாதென்று தாவீது உத்தேசித்துக்கொண்டது சரிதான். அப்பால் தாவீது தேவனுடைய ஆசாரியனிடத்தில் போய் ஒதுக்கிடம் தேடவேண்டும் என்று நோபிலிருக்கிற ஆசாரியனாகிய அகிமெலேக்கிடம் போனார். இம்மட்டும் இராஜபுலவர் தமது பரிவாரங்களோடு



அத்திசைகளைக் கடந்துபோனதை அவன் அறிந்திருந்ததால், இச்சமயத்தில் அவர் ஒண்டியாய் வந்த கோலம் விந்தையாகத்தான் காணப்பட்டிருக்கும். பெலிஸ்திய ஜாதியின் சேனை அனைத்தையும் சிறியதோர் கூழாங்கல்லால் சிதறடித்த வீரர் மாமனுக்குப் பயந்து இந்தப் பாடுபடுகிறார்; ராஜ்ய விரோதங்களை அடக்கி ஆளும் வல்லவீரர் குடும்பவிரோதம் தாங்காமல் ஓட்டம் பிடிக்கிறார். ஆ, குடும்பவிரோதிகளே! பந்துக்களுக்குள் பகையை விளைவிக்கும் பாதகரே! நெருங்கிய பந்துக்களின் அழிவைநாடி, அநுதினமும் பகையாகிய நெருப்பை மூட்டுகிறவர்களே! நீங்கள் எல்லாரும் சவுலின் குட்டிகளாய் இருக்கிறீர்கள்.

அகிமெலேக்கு இராஜபுலவரைக் கண்டவுடனே நடுக்கத்துடனே ஓடிவந்த காரியம் என்னவென்று விசாரித்தான். அவர் சங்கதியை உள்ளபடிச் சொல்லாமல் மறைத்து தான் இராஜாவின் அந்தரங்க வேலையாகவே வந்ததாகச் சொல்லி, வயிற்றுக்கு ஆகாரமும் கைக்கு ஒரு பட்டயமும் கேட்டார். உடனே அவன் காரியம் அனைத்தும் நிசமாய் இருக்கலாம் என்று நினைத்து தன்னிடம் வேறு அப்பம் இல்லாததால், தூபதீப ஆராதனையோடு கடவுளுடைய திருச்சமுகத்தில் படைத்துவைக்கப்பட்டிருந்த அப்பத்தையே எடுத்துக்கொடுத்து பசியாற்றி, தாவீது சில வருஷங்களுக்குமுன் தேவசமுகத்தில் வைக்கும்படிக் கொடுத்த கோலியாத்தின் பட்டயத்தையும் எடுத்துக்கொடுத்தான். இக்காலத்தில் தாவீது பொய்சொல்லி அகிமெலேக்கை எமாற்றாமல் தன் சங்கடங்களை உள்ளபடிச் சொல்லி சகாயம் கேட்டால் அதற்கேற்ற ஒழுங்கை அந்த ஆசாரியன் செய்திருப்பான்; அப்படிக்கு இல்லாததால் அவன் தன் தலையை இழந்துபோக நேரிட்டது. தங்கள் அநுகூலத்துக்காக சொல்லுகிற பொய்யால் மற்றவர்களுக்கு எவ்வளவு பிராணநஷ்டமும், பேர்பிரஸ்தாபநஷ்டமும் உண்டாகிறது என்று அவர்கள் உணருகிறதில்லை.

அப்பால் தாவீது அங்கிருந்தபடி தான் அடிக்கடி போர்புரிந்து கீழ்ப்படுத்தின பெலிஸ்தியரின் இராஜதானிக்குப் போனார். தன் உயிரைத் தப்புவிக்கவேண்டுமென்று கருதினாரேயன்றி சவுலின் ராஜ்யத்தில் ஒரு கலகத்தை உண்டாக்க அவர் நினைக்கவேயில்லை. இராஜபுலவருக்கு சேனைக்குள்ளிருந்தசொற்ப சக்திக்கு அதிக அழிம்புகளைச் செய்திருக்கலாம்; அவரோ தேவச்செயலுக்கும், நடத்துதலுக்கும் தம்மை ஒப்புவித்து தம் உயிரைமாத்திரம் காத்துக்கொள்ளத்தக்க பிரயத்தினங்களைச்

செய்தார். தாம் பெலிஸ்தியர் தேசத்திலிருப்பதை அறிந்தால்
சவுல் வரமாட்டான் என்று எண்ணியிருக்கலாம். அவ்விடத்
தில் இவர் வேஷம்போட்டு தமது காலத்தைக் கழிக்கவேண்
டியதாகவே இருந்தது. எப்படியெனில் இவரைக் கண்ட
வுடனே ஜனங்கள் இவரை இன்னாரென்று இனம் அறிந்து
கொண்டு அரசனிடம் பிடித்துக்கொண்டுபோனார்கள். அற்ப
அழிம்புகளைச் செய்த சிம்சோனுடைய கண்ணைப்பிடுங்கி
காலாகோலமாய்க் கனவீனம்பண்ணின பெலிஸ்தியர் இவரைச்
சும்மாய் விடுவார்களா? இவரைக் கண்டவுடனே கோலி
யாத்தின் இரத்தப்பழியை இவர்கையிலே வாங்கி, இவருடைய
சிரசைக் காத்துபட்டணத்துக் கோட்டைமதிளின்மேல் கீர்த்
திக்கு அடையாளமாகத் தொங்கவைக்கும்படி அவர்கள் ஏசோ
பித்திருக்கமாட்டார்களோ? ஆனால் தேவன் அக்காலத்திலிருந்த
அரசனின் மனதை ஆண்டுகொண்டார். தாவீது பெலிஸ்தியர்
முன்பாகத் தன் முகரூபை வேறுபடுத்தி பித்தங்கொண்டவர்
போல் காண்பித்து, வாசல்கதவுகளிலே கோட்டிக்காரனைப்
போலக் கீறிக்கொண்டு தம் வாயிலிருந்து நுரையைத் தாடியில்
விழப்பண்ணிக்கொண்டிருந்தார். இப்படி மாய்மாலம் செய்
தது சரியென்று நாம் சொல்லுகிறதில்லை. இவர் சவுலின் விரோ
தங்களைச் சொல்லி அடைக்கலம் கேட்டிருந்தால் அடைக்க
லம் கிடைக்கும்படி தேவன் அவன் மனதை நடத்தியிருக்கலாம்.
அரசன் தன்னிடம் கொண்டுவரப்பட்ட இராஜபுலவரை நீச
கோலத்தோடு பார்க்கவே, அவரைப்பற்றி உள்ள சங்கதிகளை
நம்பாமல் அவர்கள்மேல் விசனப்பட்டு, "எனக்குமுன்பாக
பைத்திய சேஷ்டை செய்ய நீங்கள் இவனைக் கொண்டுவருகி
றதற்கு பைத்தியக்காரர் எனக்குக் குறைவாய் இருக்கிறார்க
ளோ? இவன் என் வீட்டில் வரலாமா?" என்று கடிந்துகொண்
டான். அதோடு தாவீது மலைபோல்வந்த ஆபத்து பனிபோல்
கடந்துபோய்விட்டது, "தப்பிப்பிழைத்தது தம்பிரான்புண்ணி
யம்" என்று உணர்ந்து கடவுளைத் துதித்து அவ்விடம்விட்டு
இனி நாட்டில் நமக்கு இடமில்லை, காட்டில் இடம் தேடவே
ண்டுமென்று கருதி, மலைநாடு அடுத்து அங்குள்ள ஒரு கெபிக்
குள் அடைக்கலம் புகுந்திருந்தார். அவர் ஆசாரியனிடத்தில்
வாங்கின பட்டயத்தை பெலிஸ்தியர் நாட்டுக்குக் கொண்டு
போகாமல் வேறெங்கேயோ ஒளித்துவைத்திருந்தார் என்று
தோன்றுகிறது. அந்தப் பட்டயத்தோடு போனது மெய்யானால்
அவர் பெலிஸ்தியர் நாட்டிலிருந்து திரும்பிவந்திருக்கமாட்டார்.

இராஜபுலவர் அப்புறம் ஒளித்திருந்த இடமானது அதுல்லாம்



கெபி என்று அழைக்கப்பட்டது. தாம் அங்கே இருக்கிறதை
இரகசியமாய்த் தமது தாய் தந்தையருக்கும் தம்மைப்பற்றின
உத்தம சிநேகிதருக்கும் சொல்லியனுப்பவே, அவர்கள் ஒவ்வொ
ருவராய் அவரிடத்தில்வந்து கூடிக்கொண்டார்கள். இராஜபுல
வருடைய பெற்றோரும் தங்கள் பிராணனைப்பற்றிச் சந்தேகப்
பட்டபடியால் அவர்களும் தங்கள் மகன் தங்கின கெபியில்
வந்துசேர்ந்தார்கள். ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள்
சவுலின் ஆளுகையைச் சகியாமல் முறுமுறுக்கிறவர்கள்
யாவரும் அந்தக் கெபியை அடுத்து இராஜபுலவரைத் தங்களு
டைய தலைவனாக ஒப்புக்கொண்டார்கள். ஆகவே சுமார் 400
பேர் அவரோடே அந்தக் கெபியில் வாசம்பண்ணினார்கள்.
அந்தக் கெபி தமது பெற்றோருடைய சுகத்துக்கு ஏற்றதல்லவெ
ன்றோ, அல்லது திடீரென்று சவுல் சேனைதளங்களோடு அக்கெ
பியை முற்றுகைபோட்டால் அவர்களைச் சிறைபிடிப்பான்
என்றோ, வேறெந்த முகாந்தரத்தாலோ அவர் தமது பிதா மாதா
க்கமாய்த் தங்கவேண்டுமென்று கருதி, தமது பாட்டன்வழி பந்
துவாகிய மோவாபின் அரசனண்டை அவர்களைக் கொண்டு
போய்த் தமது கஷ்டங்களையெல்லாம் சொல்லி எனக்கு நற்கா
லம் வருமட்டும் இவர்கள் உம்மிடம் அடைக்கலமாயிருக்கட்
டும் என்று ஒப்புவித்தார். ஆ, இது எவ்வளவு புகழப்படத்தக்க
காரியம்! இக்காலத்து மக்களிடத்தில் இந்தப் புத்தியைக் கண்டு
பிடிப்பது அபூர்வமாயிருக்கிறது. தான் பூமியின்மேல் தலை
யெடுத்ததுமுதல் பிதாமாதாக்களின் தலை பூமிக்குக் கீழ்ப்போய்
விடவேண்டுமென்று எண்ணி நடத்துகிறார்கள். இது சரி
யல்ல. நீ நன்றாயிருப்பதற்கும், பூமியிலே உன் நாட்கள் நீடித்
திருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவா
யாக என்று கடவுள் கற்பித்திருக்கிறார்.

இராஜபுலவர் இன்ன இடத்திலிருக்கிறார் என்ற செய்தி
ஊரெங்கும் அந்தரங்கமாய்ப் பேசிக்கொள்ளப்பட்டது; அது
சவுலின் காதிலும் விழுந்திருக்கலாம். சவுல் தகுந்த பிரயத்த
னத்தோடு தாவீதை முறியடிக்கப் புறப்பட்டுவருமுன்னே இரா
ஜபுலவர் அவ்விடத்தைவிட்டு வேறிடத்திற்குப் போய்விடவே
ண்டுமென்று தேவன் ஒரு தீர்க்கதரிசியின்மூலமாய் உணர்த்
தினார். தேவசித்தத்தை அணுவளவும் அல்லத்தட்டாத இராஜ
புலவர் உடனே அவ்விடத்தைவிட்டு காட்டுக்குள்வந்து ஒதுங்
கினார்.

இச்செய்திகளெல்லாம் சவுலின் காதில் எட்டவே அவன்
பயத்தால் கலங்கினாலும், பராக்கிரமனைப்போல் மனதின்

அணையைக் கட்டிக்கொண்டு அத்திசையிலுள்ள மனுஷர் எல்
லாரையும் ஒரு இடத்தில் கூடிவர விளம்பரம் அனுப்பி, ஒரு
தோப்பிலே மகாநாடுகூடினான். அவன் மந்திரி பிரதானிகளும்
சேனை சேவகரும் தன்னைப் புடைசூழ்ந்து நிற்க வீற்றிருந்து
ஈட்டி தாங்கினகையோடு சொல்லுவான்:—

ஓ, என் கோத்திர நாட்டாரே! பென்யமீன் புத்திரரே! உங்
கள் அதிபதியும் அரசனுமாகிய நம்மால் உங்களுக்குக் கிடைத்
திருக்கிற வாழ்வுகளும், சலாக்கியங்களும், பாக்கியங்களும்
கொஞ்சமோ? நான் உங்களுக்கு நாடுகரைகளைத் தத்தம்பண்
ணினதையும், தோட்டம் துரவுகளைக் கையளித்ததையும் நினைத்
துக்கொள்வீர்களே; உங்களில் சிலரை சேனாபதிகளும், ராஜ்ய
அதிபதிகளுமாக்கினதுண்டே; நான் உங்களுக்குத் தந்தவாழ்வு
களைவிட பெரும் வாழ்வை ஈசாயின் மகனாகிய தாவீது தரு
வானோ? உங்கள் மனம் அவன்பட்சமாய்ச் சார்ந்திருக்கிற அந்த
ரங்கமென்ன? ஐயோ, நான் பெற்றமகன் யோனத்தானும்
அவன்பட்சமே பேசுகிறானே! என் மகனுக்கும் அவனுக்கும்
ஏதோ ஒரு பந்துக்கட்டான உடன்படிக்கை இருக்கிறதுபோல்
தோன்றுகிறது. இதையெல்லாம் நீங்கள் அறிந்திருந்தும் என்
னைப்பற்றி ஏனோதானோவென்று இருக்கிறீர்கள். இதுதானோ உங்
கள் இராஜாபிமானம்? எனக்காகப் பரிதாபப்பட்டு ஈசாயின்
மகனால் நடத்தப்படும் அழிம்புகளின் அந்தரங்கத்தை என்னி
டத்தில் வந்துசொல்ல ஒருவருமில்லையா? ஓ, பிரபுக்களே!
பிரஜைகளே! என்றான்.

அரசன் அங்கலாய்ப்போடே பேசினவார்த்தைகள் ஒரே ஒரு
வனுடைய மனதைமாத்திரம் தீமைக்குத் தூண்டிவிட்டது.
அவன் சவுலுடைய கழுதைகளைமேய்த்த இடையன். அந்த
இடையன் பேச்சு இந்த இடையன் புத்திக்கு இசைவாயிருந்த
தால் இவன் இராஜபுலவரை ஒருதரம் நோபிலே கண்டதை
யும், அவ்விடத்து ஆசாரியன் அவருக்கு அப்பமும் பட்டய
மும் கொடுத்ததையும், அவருக்காக தேவனிடத்தில் வரங்கேட்டு
வாக்களித்ததையும் விபரமாய் எடுத்துச்சொன்னான். சவுல்
அதைக் கேட்கவே உக்கிரகோபத்தால் மூண்டு, அங்கிருந்து
சுமார் இரண்டுநாள் பயணத்துக்கப்பாலிருந்த ஆசாரியனை வர
வழைத்து விசாரித்தான். ஆசாரியன் நடந்தவிபரங்கள் ஒன்றை
யும் மறைக்காமல் சொல்லி தாவீதுக்கும் அரசனுக்கும் இருந்த
விரோதம் அக்காலத்தில் தெரியாதென்றும், நெருங்கியபந்து
வானதால் அவர் இராஜசேவையாகவே வந்திருப்பது மெய்யெ
ன்றும் எண்ணி, அப்பத்தைக் கொடுத்து பசியாற்றி, பட்டயத்



தைக்கொடுத்துப் பாதுகாத்து, கடவுளைக்கேட்டு அவருடைய
மனக்கவலையை ஆற்றினதுண்டு என்று சொன்னார். ஆசாரிய
னுடைய வாய்ப்பிறப்பைக் கேட்ட யாவரும் இது அரசனுக்
கென்று செய்யப்பட்ட உதவிகளேயன்றி தாவீதுக்கென்று
செய்யப்பட்ட துரோககுணம் அல்லவென்று நன்றாய் அறிந்து
கொண்டார்கள். ஆனால் சவுலுக்கோ அவைகள் விரோதமாய்
ருந்தன. உடனே அவன் மதிமயங்கி ஆசாரியனையும் அவனோடு
கூடவந்த உதவி ஆசாரியரையும் கொலைசெய்ய உத்தரவுகொ
டுத்தான். அதை நிறைவேற்ற ஒருவரும் மனந்துணியவில்லை.
கர்த்தருடைய ஆசாரியருக்கு விரோதமாய் கைதூக்க அவர்கள்
துணியாததைக் கண்ட சவுல் மூர்க்கவெறியால் மூண்டு தன்
இடையனை அந்த பஞ்சமாபாதகத்தை முடிக்கக் கட்டளையிட்
டான். உணர்வற்ற கோவேறுகழுதைகளைக் கண்டபடி அடித்
துக் காடுகளில் திரியும் அந்த இடையனுக்கு மனுஷ ஜீவ
னின் அருமைதெரியுமா? மேலும் மெய்த்தேவனையறியாத சீரிய
தேசத்தானுக்கு தேவனுடைய ஆசாரியரைப்பற்றிய மதிப்புத்
தெரியுமா? அவன் உடனே அவர்களைக் கொலைசெய்தான்;
பின்னும் இந்த தோவேக்கைக்கொண்டே நோபிலிருந்த ஆசா
ரியர் குடும்பத்தைச்சேர்ந்த ஆண், பெண், பிள்ளைகள் எல்லா
ரையும் சங்காரஞ்செய்வித்தான்; மாடாடுகளைமுதலாய் அவன்
தப்பவிடவில்லை. ஐயோ, பாதகா! குற்றமில்லாத இரத்தத்
தைக்குடிக்க உன் குடலும், உன் அரசன் குடலும் குமட்டாம
லிருந்தது என்ன அதிசயம்!

எப்படியும் அந்த ஆசாரியனுடைய மகனாகிய அப்பியத்தார்
ஒருவன்மாத்திரம் எப்படியோ தப்பி தாவீதிடம் வந்து நடந்த
விபரங்களையெல்லாம் சொன்னான். இம்மட்டும் இராஜபுலவர்
பட்சத்தில் ஒரு தீர்க்கதரிசிமாத்திரம் இருந்தார்; இப்போது ஒரு
ஆசாரியனும் வந்துகூடினார். இது அவருக்குச் சொல்லிமுடி
யாத ஆறுதலும் பலியிடுதல் முதலிய தேவ பணிவிடைகளுக்கு
அநுகூலமுமாயிற்று. தாவீது அப்பியத்தாரைப் பார்த்து, உன்
பிதாவழிசனத்தின் பிராணமோசத்துக்கு நான்தான் காரணனாய்
இருக்கிறேன்; நீ என்னிடத்திலிரு, பயப்படவேண்டாம்; நீ
என் ஆதரவிலே இரு என்று சொல்லி ஏற்றுக்கொண்டார்.

அப்பால் பெலிஸ்தியர் கேகிலா ஊரில் வந்து கொள்ளையடி
த்து குடிகளைத் துன்பப்படுத்துகிறார்கள் என்றசெய்தி தாவீதின்
காதில் வந்து விழுந்தது. உடனே தான் பெலிஸ்தியருக்கு
விரோதமாய் தேவ உத்தரவின்படிப்போய் அவர்களை முறியடி
த்து அந்த ஊராரை மீட்டுவிட்டார். அது கோட்டை கொத்

தளமுள்ள அரணிப்பான பட்டணமாய் இருந்தது; ஆதலால் அதில் வாசம்பண்ணுவது பல விஷயத்துக்கு அநுகூலமென்று எண்ணி இராஜபுலவர் தமது படை பண்டாரங்களுடன் அங்கே போனார். ஒருவேளை அதைத் தமது இராஜதானியாக்கிக் கொள்ளலாமென்று மனதில் எண்ணினாராக்கும்; தேவதீர்மானமோ அதற்கு விரோதமாயிருந்தது. இச்செய்தி சவுலுக்கு எட்டவே, அவன் தன் சேனை தளங்களோடு புறப்பட்டு எப்படியும் இந்தவிசை தாவீதைப் பிடித்துக்கொள்ளலாமென்று உத்தேசித்தான். உடனே தாவீது தேவனிடம் சந்நதங்கேட்டு, கேகிலா ஊரார் தன்னைப் பிடித்துக்கொடுத்துவிடுவார்கள் என்று நிச்சயமாய் அறிந்து சீப் என்ற வனத்துக்குப் போய் பதிவான ஒரு மலையில் தரித்திருந்தார். இக்காலத்தில் அவரிடம் 600 வீரர் இருந்தார்கள். சவுல் அவரைப் பின்தொடர்ந்தபோது மலையை விட்டு காடுகளில் தங்கி மறைந்துகொண்டார். சவுல் அநுதினமும் ஆள் வைத்துத்தேடியும் தேவன் அவரை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. தாவீதின் இருப்பிடம் யோனத்தானுக்குமாத்திரம் தெரிந்திருந்தது. ஆதலால் அவன் இரகசியமாய் வந்து தாவீதை வாழ்த்தி, தைரியப்படுத்தி, "நீரே இராசாவாவீர், அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்" என்று சொல்லிவிட்டுப்போனான்.

அப்பால் சீப் ஊராரால் தாவீதுக்கு ஒரு பெரிய ஆபத்து நேரிட்டது. அவர் தங்கள் ஊர் அருகே தங்கியிருந்தகாலத்தில் இவர்கள் சவுலிடம்போய் தூதுசொல்லி தாங்கள் அவரைப் பிடித்துக்கொடுப்பதாக வாக்குக்கொடுத்தார்கள். சவுல் சேனையோடு இராஜபுலவரும் அவருடைய ஆட்களும் தங்கியிருந்த இடத்தைச் சூழும்படி வருகிற சமயத்தில் தேவன் பெலிஸ்தியரை சவுலுக்கு விரோதமாய் எழுப்பிவிட்டார். பெலிஸ்தியர் தன் தேசத்தை அபகரிக்க வந்துவிட்டார்களென்று சவுல் கேட்டவுடனே இதைவிட அதுதான் பெரியவேலை என்று திரும்பிப்போய்விட்டான். மற்றப்படி இராஜபுலவர் அவன் பட்டயத்துக்கு இரையாகிப்போவதற்கு இடமாகும்.

இப்பொழுது நாம் வாசிக்கப்போகும் சில வரிகள் கொஞ்சம் சிரிப்பையும் சந்தோஷத்தையும் கொடுக்கும் என்பது மெய். சவுல் பெலிஸ்தியர் வந்துவிட்டார்கள் என்று தாவீதைப் பின்தொடருவதை நிறுத்திவிட்டானே; அவர்களை முறியடித்துத் துரத்தினபின்பு மறுபடியும் இராஜபுலவரைப் பிடிக்கத் தொடர்ந்தான். ஐயோ! பித்தங்கொண்ட சவுலே! உனக்கும் புத்தியில்லை, உன் புத்திக்கும் வேலையில்லை, நீயே அடிபடுகிறாய் பார்.



சவுல் முன்னிலும் பலத்தசேனையோடு போகவேண்டுமென்று 3000 பேரோடு புறப்பட்டுவந்து ஒரு மலையோரத்தில் தாணையம் போட்டிருந்தான்; அதே மலையோரத்துக் கெபி ஒன்றிலே தாவீதும் அவருடைய ஆட்களும் பதிவிருந்தார்கள். இது சவுலுக்குத் தெரியாது. சவுல் ஒருநாள் அதிகாலையில் அந்தக் கெபியொதுக்கில் ஒண்டியாய்வந்து மலசலாதியைச்செய்தான். அந்தச்செய்தியை கெபிக்குள்ளிருந்த ஒரு சேவகன் கண்டு தாவீதுக்குக் காட்டி இதுதான் நல்ல சமயம், கடவுள் உமது சத்துருவை உமது கையில் பிடித்துக்கொடுத்து, உன் கட்கத்தை வீசு, கனம்பெறு, கட்டி ஆளு என்று சொல்லுகிறதுபோல் இருக்கிறது; இதோடு உமது அலைச்சலும் ஓயும், எங்கள் மலைவும் தொலையும் என்று சொன்னான். அந்த யோசனைக்கு இராஜபுலவர் இணங்காமல் கடவுளால் அபிஷேகம்பெற்றவருடைய தலையை வாங்க என் கட்கத்தை வீசமாட்டேன் என்று சொல்லி மெதுவாய்ப் போய்ப் பதுங்கியிருந்து சவுலின் சால்வையின் ஒருநுனியை அறுத்துக் கையில் வைத்துக்கெண்டு அவன் மலசலாதியைச் செய்து எழுந்து தன் வழியே போகையில், இவரும் பின்னாலே போய் "ராஜாவாகிய என் ஆண்டவனே" என்று கூப்பிட்டார். சவுல் திடுக்கென்று திரும்பிப்பார்த்தபோது அவர் தரைமட்டும் குனிந்து நமஸ்காரம்பண்ணி எழுந்திருந்து, தன் குற்றமில்லாமையை அறிக்கையிட்டு, அவன் கேட்பார் பேச்சைக் கேட்டு தன்னை அநியாயமாய்ப் பகைக்கிறதாகச் சொல்லி, இன்று கெபியில் உம்மைக் கொல்ல எனக்கு நல்ல சமயம் இருந்தது என்பது உமக்குத் தெரியுமே; ஆனால் உமதுமேல் நான் கைபோடவில்லை என்று சொன்னார். பின்னும் அவர் தமது கையிலிருந்த சால்வைத்தொங்கலைக் காட்டி, "என் தகப்பனே! பாரும்; உம்மைக் கொல்லாமல் உமது சால்வையை அறுத்துக்கொண்டேன்; இஸ்ரவேலின் இராஜா யாரை தேடப் புறப்பட்டார்? ஒரு செத்தநாயையா, ஒரு தெள்ளுப்பூச்சியையா? நீர் யாரைப் பின்தொடருகிறீர்? ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும்" என்று சொன்னார். ஐயோ சவுலே! இப்போது நீ வெட்கப்படவேண்டியதில்லையா? இவர்களிருவரில் யாரை நாம் புகழவேண்டியது? இராஜபுலவரையல்லவா! அவர் தீமைக்குத் தீமையையும், உதாசினத்துக்கு உதாசினத்தையும் பதிலளியாமல் தீமையை நன்மையினாலே வெல்லுகிறார். அவர் தமது பிராணபகைஞனுக்கு முன்பாகக் குனிகிறார், பணிகிறார், குளிர்ந்த வார்த்தை பேசுகிறார். இதெல்லாம் மாமன் என்ற பாசத்தினால் அல்ல, தேவனால் அபிஷேகம்பெற்றார் என்ற

பக்திவிசுவாசத்தினாலேதான். தன் சத்துருவை இப்படி நேசிக்கிறவன் பூரண அன்புள்ளவன்.

சவுல் தன் சால்வை தாவீதின் கையிலிருக்கிறதைக் கண்டு அசந்துபோனான். இச்சமயத்தில் அவனுடைய பழைய பித்தம் வந்து அவன் மயங்கிவிழுந்தது மெய்யானால் தாவீது தமது கின்னரத்தை வாசித்து எழுப்பிவிட்டுமிருப்பார். அவன் இராஜபுலவரின் வார்த்தைகளுக்கு மறுமொழியாக

என் குமாரனாகிய தாவீதே!
இது உன் சத்தமல்லவா?

என்று சொல்லி சத்தமிட்டு அழுது, நீ என்னைப்பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மைசெய்தாய், நானோ உனக்குத் தீமைசெய்தேன். கர்த்தர் என்னை உன் கையில் இன்று ஒப்புக்கொடுத்திருந்தும் நீ என்னைக் கொன்றுபோடவில்லை; இவ்வண்ணம் மாற்றானைக்கண்டு மனமாறவிட்டவன் ஒருவனுமில்லையப்பா! இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காக கர்த்தர் உனக்கு நன்மைசெய்வாராக;

நீ நிச்சயமாய் இராசாவாயிருப்பாய்,
ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும்.

இப்போதும் நீ எனக்குப் பின்னிருக்கும் என் சந்ததியை வேரறுப்பதில்லையென்றும், என் பேரை அழித்துப்போடுவதில்லையென்றும் கர்த்தர்மேல் எனக்கு ஆணையிட்டுக்கொடு என்று கேட்டான். அப்படியே இராஜபுலவர் ஆணையிட்டுக்கொடுத்தார். அப்பால் சவுல் தன் ஊருக்கும் தாவீது தமது காட்டுக்கும் போனார்கள். மேலேசொல்லிய சவுலின் வார்த்தைகள் அவனைத் திடீரென்று நல்லவனாக்கிவிடுகின்றன. சவுலுக்கும் தாவீதுக்கும் உள்ள வாதும் வழக்கும் இதோடு தொலைந்ததுபோலக் காணப்படுகிறது. ஆனால் ஐயோ! இன்னம் முடியவில்லை.

இக்காலத்தில் தீர்க்கதரிசியாகிய சாமுவேல் மரணமடைந்தார். இது இராஜபுலவருக்கு மிகுந்த மனமுறிவாய் இருந்தது. அந்நாடு முழுவதும் அந்த மகா பக்தனுக்காகத் துக்கங்கொண்டாடினது. இராஜபுலவர் அவரால் பட்டம்பெற்றும் அவருக்குத் தம் கையால் ஒரு பிடிமண் கொடுக்கக்கூடாமற்போனதையிட்டுச் சொல்லிமுடியாத விசனப்பட்டார். ஒவ்வொரு வீட்டாரும் நாட்டாரும் அவரை நினைத்துப் புலம்பினார்கள். அவருடைய பிரேதம் ராமாவிலுள்ள அவருடைய சொந்த வளவிலே க்ஷேமிக்கப்பட்டது. இப்படி ஊருக்குள் தன் மனையில் க்ஷேமிக்கும் வழக்கம் மகாமேன்மையாய் எண்ணப்பட்டுவந்தது.



பூதசரித்திரம் முழுவதிலும் பார்த்தால் அரசரும், ஜியோய்தா (Jehoiada) என்ற பிரதான ஆசாரியனுமாத்திரம் இப்படி அடக்கஞ்செய்யப்படும் கனத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்று விளங்கும்.

இராஜபுலவருக்குச் சவுலுடன் உறவாகிப்போய்விட்டோம் என்ற மேலெழுச்சியும், அஜாக்கிரதையும் இருந்ததில்லை. பித்தன் நிலையாத சமயத்தில் பின்தொடர்ந்து பிடிக்கவந்தாலும் வரலாம் என்கிற எண்ணம் இருந்தே வந்தது. ஆதலால் அவர் பின்னும் தம்முடன் கூடிய 600 பேரோடு, காடுவனங்களில் காலங்கழித்து பெலிஸ்தர்முதலிய சத்துருக்களால் கஷ்டமடையும் ஊராரை ரட்சித்து அவர்கள் கொடுக்கும் சகாயத்தால் தம்மையும் தமது சேனையையும் பிழைப்பூட்டிவந்தார். மேலும் அவர் காடோடியாய்க் காலங்கழித்தகாலத்தில் அகினோகாம் என்ற ஒரு பெண்ணையும் விவாகஞ்செய்து அவள்மூலமாய்த் திரண்ட ஆஸ்தியையும் சம்பாதித்திருந்தார். சவுலின் குமாரத்தியாகிய மீகாளை அத்தப்பாதகன் பிடித்து "பல்தி" என்ற ஒருவனுக்குக் கட்டிக்கொடுத்துவிட்டதால் இராஜபுலவர் அகினோகாமைக்கட்ட நேரிட்டது என்று சொல்லவேண்டியது.

இவ்வண்ணம் இராஜபுலவர் பலருக்கும் சகாயம் செய்து, பலராலும் பாதுகாக்கப்பட்டு வந்தகாலத்தில் அத்திசையிலிருந்த நாபால் என்னும் ஒரு பிரபுவின் வீட்டில் ஆடுகளை மயிர் கத்தரிக்கும் ஒரு விசேஷித்த சடங்கு நடந்தது. அச்சடங்குகாலத்தில் பலருக்கும் வெகுமானங்களைச்செய்கிறதும், உணவு விஷயமாய் பல உதவிகளை அனுப்புகிறதும் வழக்கமாயிருந்தது. அச்சமயத்தில் இராஜபுலவரும் அவருடைய ஆட்களும் சாப்பாட்டுவிஷயத்தில் சற்று தாழ்வுபட்டிருந்தபடியால் அந்த மகாராசன் தன் மங்களகாலத்தில் எப்படியும் உதவிசெய்வான் என்று எண்ணி, பத்து பராக்கிரமரைத் தெரிந்தெடுத்து தன்பேரால் நாபாலை வாழ்த்தி சில வெகுமானங்கள் கேட்க அனுப்பினார். அந்த ஆட்கள் போய் வெகு மரியாதையோடு அவனுக்கும் அவன் வீட்டாருக்கும் மங்களங்கூறி தாழ்மையோடு தாங்கள் சொல்லும்படிக் கட்டளையிட்டபிரகாரம் சொன்னார்கள். நாபால் என்றால் "பித்தன்" என்று அர்த்தமாகும். இந்தப் பித்தன் உடனே கோபமூண்டு தாவீது என்பவன் யாரோ? ஈசாயின் மகன் எவனோ? தங்கள் எசமானைவிட்டு ஓடிப்போகிற வேலைக்காரர் அநேகரை நான் அறிவேன். காட்டில் திரியும் தண்ட பயலுக்கெல்லாம் நான் என் வீட்டின் பாக்கியங்களை கொடுப்பேனா? என்று சொல்லிவிட்டான். பசி பெல்லாம்

யோடு வருந்தும் பட்டாளமனைத்தும் பசிதீர இறைச்சியும்,
திராட்சப்பழமும், தின்பண்டமும் வருமென்று எதிர்பார்த்தும்
ஒன்றும் வரவில்லை; அந்த பத்துப்பேரும் மனமுறிவோடும்,
கால்நோவோடும் திரும்பிவந்து நாபாலின் வார்த்தைகளையெல்
லாம் சொன்னார்கள். தாவீது உடனே தன் சேவகரைப் பட்ட
யம் எடுக்கச்சொல்லி, நாபாலையும் அவன் வீட்டையும் நாசம்
பண்ணித் திரும்பவேண்டுமென்று சபதம் கூறிப் புறப்பட்டார்.
வந்த சேவகரின் வாயிலெல்லாம் நாபாலின் வீடு இதோடு நாசம்
என்ற கோபவார்த்தைகளோடே புறப்பட்டது.

காரியம் இப்படியிருக்கையில் நாபாலின் இடையரில் ஒரு
வன் அவன் மனைவியிடம் ஓடிவந்து நடந்த வர்த்தமானங்களைச்
சொல்லி, இராஜபுலவரையும் அவருடைய சேவகரையும் புகழ்
ந்து காடுகளில் அவர்களால் உண்டான பல உதவிகளையெல்
லாம் விபரமாய் எடுத்துக்காட்டி, அம்மணி! நீ இந்த மனமுறி
வைச் சரிப்படுத்தவேண்டியது; மற்றப்படி உன் வாழ்வில்
மண்விழுந்தது என்று சொன்னான். அது கேட்டவுடனே
அபிகாயேல் விழித்துக்கொண்டாள். அவள் உயர்குலத்துப்
பெண்ணாயிருக்கவேண்டியது; இந்தப் பித்தன் எப்படியோ
அவளைத் தன் நேசவலையில் பிடித்துக்கொண்டான். அவர்க
ளுக்கு 3000 ஆடும் 1000 வெள்ளாடுமிருந்தன. இவையனைத்தும்
பெண்வழிச் சொத்தாயிருக்கலாம். அவள் புருஷனோ முரட
னும் துராகிருதனுமாயிருந்தான். அபிகாயேல் மகாமரியாதை
யும், முன்பின் காரியங்களையோசிக்கும் விவேகமும், தாழ்மை
யும், இராஜசவுந்தரியமுமுள்ளவளாயிருந்தாள். நடந்த வர்த்த
மானங்கள் ஒன்றையும் புருஷன் அவளுக்குச் சொல்லவே
இல்லை. இராஜபுலவரின் பேர் அவள் புருஷன் பார்வைக்கு
அற்பம்போலிருந்தாலும் அவளுக்கு அதிக மதிப்பாயிருந்தது.
அவரைக்குறித்து ஊரெங்கும் பாடப்பட்ட வெற்றிப்பாட்டை
இவளுங்கூடப் பாடியிருக்கலாம். பராக்கிரம கோலியாத்தை
ஒரே கூழாங்கல்லால் குப்புறக்கிடத்தி, பெலிஸ்தியரைப் புல்
வாய்களைப்போலத் துரத்திவிட்ட வீரனுக்குத் தன் வீட்டை
தரைமட்டுந்தாழ்த்த ஒரு வருத்தமா என்று நினைத்தாள். அவள்
காலதாமதஞ்செய்யாமல் 200 அப்பம், 2 துருத்தி திராட்ச
ரசம், சமயல்செய்த 5 ஆடுகள், 5 படி வறுத்தபயறு, 100
திராட்சப்பழக் குலைகளாகிய இந்த வெகுமதிகளோடு கழு
தைவாகனமேறி, இராஜபுலவரும் அவரது பட்டாளமும் வழி
யிலிருக்கும்போதே அவரோடு சந்திக்கும்படி
வந்தாள். மனைவி, போனசெய்தி அந்தப் பித்தனுக்குத் தெரி



யாது. அவன் தனக்குவரும் தீங்கையல்ல, தன் சீருவத்தையே
கவனித்துக்கொண்டிருந்தான்போலிருக்கிறது. அவள் ஒருமலை
மறைவிலே போகும்போது தனக்குமுன் உருவின பட்டயத்
தோடு நாபாலின் வீடு நாசம் என்று சொல்லும் குரலோடு தா
வீதும் அவருடைய வீரரும் இறங்கிவரக் கண்டு, தன் வாகனத்
தை விட்டிறங்கி, இராஜபுலவருக்கு முன்பாக தெண்டனிட்டு,
பின்பு முழங்காலூன்றிச் சொல்லுவாள்:— "என் ஆண்டவ
னே! இந்தப் பாதகம் என்மேல் சுமரட்டும், என் ஆண்டவ
ராகிய நீர் என் புருஷன்செய்கையை ஒருபொருட்டாய்
எண்ணவேண்டாம்; அடியாள் உமது ஆட்களைக் காணவில்
லை; கண்டிருந்தால் என் ஆண்டவனுடைய மனம்போலச் செ
ய்து நிறைவேற்றியிருப்பேன்" என்று மன்னிப்புக்கேட்டாள்.
தான் கொண்டுவந்த காணிக்கையை ஏற்றுக்கொண்டு அதை
உமது வாலிபருக்குக் கொடும் என்று சொன்னதோடு, தாவீதின்
சத்துருக்களைச் சபித்து, கர்த்தர் என் ஆண்டவனுக்கு நிலையான
வீட்டை நிச்சயமாய்க் கட்டுவார் என்று வாழ்த்தினாள். அபிகா
யேலின் வார்த்தைப்பாடுகள் இராஜபுலவரை அசைத்துவிட்
டது. அவர் அப்புறம் அவளுக்கு விரோதமாக ஒரு அடியா
வது எடுத்துவைக்கத் துணியவில்லை. கோலியாத்தை வென்ற
வீரனை இந்த ஸ்திரீ வென்றுவிட்டாள் என்று சொல்லலாம்.
ஆகவே புருஷன் தன் மதியீனத்தால் உண்டுபண்ணின சங்கட
ங்களை இவள் தன் மதியினால் நிவர்த்தியாக்கினாள். இராஜபுல
வர் அவளுடைய தாழ்மையையும் மரியாதையையும் கண்டு,
வந்த வெகுமதிகளைப் பெரிதென்று எண்ணி தம் வழியே திரும்
பிவிட்டார். அபிகாயேல் அன்று அஸ்தமித்தபின்பு வீடு
வந்துசேர்ந்தாள். அன்றிரவு நாபால் மிதமிஞ்சிக் குடித்து புத்தி
தடுமாறிப்போனான். மறுநாள் அதிகாலையில் அவனுக்குச் சற்று
புத்தி தெளிந்திருந்தபோது முந்தினநாள் நடந்த சமாச்சாரங்
களையெல்லாம் அவள் சொன்னாள். அப்போது அவன் இரு
தயம் பயத்தால் மதிமயங்கிப்போயிற்று; அதோடு தேவசாபமும்
அவனைப்பிடித்தது. ஆகவே இந்தக்காரியங்கள் நடந்த பத்தாம்
நாளில் அவன் மரித்துப்போனான்.

அபிகாயேல் கைம்பெண்ணானசெய்தி தாவீதுக்குத் தெரிந்த
வுடனே அவளுக்குப் பிரியமானால் தான் அவளை விவாகஞ்செ
ய்துகொள்ளப் பிரியப்படுகிறதாகச் சொல்லியனுப்பினார். அவ
ளும் நல்லதென்று சம்மதித்து விவாகம்பண்ணிக்கொண்டாள்.
இப்படி இவர் இரண்டு பெண்களைக் கலியாணஞ்செய்தது
பிற்காலத்தில் வெகு துன்பமாய் முடிந்தது. இராஜபுலவரிடத்

திலிருந்த பல நல் உணர்வுகளோடு இப்படிப் பல மனைவிகளைப்படைக்கும் கெடுபுத்தியும் இருந்தது. எப்படியும் இந்தக் கலியாணச் சம்பந்தங்களால் அவர் திரண்ட சொத்துக்காரராகிறதற்கு வழியிருந்தது.

சிலகாலம் சும்மாயிருந்த சவுல் மறுபடியும் பித்தவெறிகொண்டு இராஜபுலவரைப் பின்தொடரும்படி மறுபடியும் ஒரு திரண்டபடையோடு வந்தான்; சிப்பூரார் அதற்கு வெகு உதவியாய் நின்றார்கள். சவுலின் சேவகர் பாளயமிறங்கியிருந்த இடத்துக்குச் சமீபமாய் ஒரு சிறுமலைமேடு இருந்தது. தாவீது அன்றிரவு சத்துருக்களின் நிலைகளை நன்றாய்க் கவனித்துக்கொண்டு தானும் அபிசாய் என்ற வீரனுமாய் சவுலின் பாளயத்துக்குள் தந்திரமாய்ப்புகுந்து அரசனைச்சுற்றிலும் படுத்திருந்த சேனையனைத்தும் தூங்கின சமயம்பார்த்து, சவுலின் ஈட்டியையும் அவனுடைய தண்ணீர்ப்பாத்திரத்தையும் தூக்கிக்கொண்டுவந்துவிட்டார்கள். அச்சமயத்திலும் சவுலைக் கொல்ல நல்லசமயமிருந்தும் தாவீது அதற்கு இடங்கொடுக்கவில்லை. மறுநாள் அதிகாலையில் அவர் அந்த மலைமேல் நின்றுகொண்டு சவுலின் ஈட்டியையும், தண்ணீர்கலசத்தையும் காண்பித்து அவனுடைய சேவகரைப்பழித்து, சவுலின் செய்கைகளையும் கண்டித்தார். சவுல் தான் மறுபடியும் ஒருதரம் தாவீதின் கையில் அகப்பட்டும் அவன் தப்பவிடப்பட்டதை உணர்ந்து மகா உத்தமனைப்போல பாசாங்குபண்ணி, "என் குமாரனாகிய தாவீதே! நான் பாவஞ்செய்தேன், நீ திரும்பிவா, இனி உனக்கு ஒரு பொல்லாப்பும் செய்யேன், இதோ நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதம் செய்தேன்" என்றான். இப்பொழுது இவன் பேசினவார்த்தைகள் அனைத்தும் மாய்மாலம் என்று பின்னால் விளங்கும். இப்படிப் பேசினாலும் தாவீதின்மேலிருந்த பகையை அவன் மறக்கவே இல்லை. சவுலின் உபாயதந்திரங்களையும், அவனுடைய வார்த்தைகளின் மாறுபாட்டையும் திட்டமாய் அறிந்த தாவீது, இனி நாம் இங்கிருந்தால் சவுல் நம்மை மறுபடியும் துரத்தவே துரத்துவான் என்று உத்தேசித்து, தன் 600 பேரோடும் மனைவிமக்களோடும் காத்தின் இராசாவாகிய ஆகீசிடம்போய் உள்ளபடி தன் காரியங்களைச் சொல்லி அடைக்கலங்கேட்டார். ஆகீசும் அவர் விண்ணப்பத்துக்கு இணங்கி சிக்லாகு என்னும் ஊரை அவருடைய அடைக்கலஸ்தலமாகக் கொடுத்தான். அவ்விடங்களில் தாவீது ஒரு வருஷமும் நாலு மாதமும் வாசம்பண்ணி சமீபத்திலிருந்த இஸ்ரவேலரின் சத்துருக்களாகிய கெசூரியர்,



கெஸ்ரியர் முதலியவர்களைக் கீழ்ப்படுத்திவந்தார்." பெலிஸ்தியர் நாட்டுப்புறங்களிலுள்ளவர்களையும் அவர் சும்மாய்விடவில்லை. தாவீது பெலிஸ்தியர்தேசத்துக்கு வந்துவிட்டதுமுதல் சவுல் அவரைத் தேடவில்லை. மேலும் பல இடங்களிலுமிருந்து பராக்கிரமர் வந்து அவருடைய பட்டாளத்தில் கூடிக்கொண்டார்கள். "நாளுக்குநாள் தாவீதுக்கு உதவிசெய்யும் மனுஷர் அவரிடத்தில் வந்து சேர்ந்தபடியால் அவர்கள் தேவசேனையைப்போல் மகாசேனையானார்கள்." அவர்களில் முப்பத்தேழுபேர் அவருடைய மெய்க்காவலராய் இருந்தார்கள்.

இக்காலத்தில் இராஜபுலவரின் காரியாதிகள் மாறுதலடையத் துவக்கிற்று. சொல்லவேண்டுமானால் சவுல், தன் மருமகனுக்கு விரோதமாய் மோசம் நினைத்தகாலமுதல் அவன் ராஜ்யபாரம் தாழ்வுபடவே துவக்கிற்று. சவுலின் முதற்றரமான வீரரெல்லாரும் ஒவ்வொருவராய் தாவீதிடம்வந்து ஒதுங்கினார்கள். பெலிஸ்தியர் வடகாடுகளில் தாராளமாய்த் திரிந்து வியாபாரஞ்செய்யும்படி தங்களை அவ்விடத்தில் நிலைப்படுத்திக்கொள்ளக்கருதி இஸ்ரவேலரோடு யுத்தத்துக்கு ஆரம்பித்தார்கள். அங்காடுகள் பெரும்பாலும் சமபூமியும், மைதானமுமுள்ள இடங்களானதால் பெலிஸ்தியர் தங்கள் ரத, கஜ, துரக, பதாதிகளோடு அட்டகாசம்பண்ணவும், இஸ்ரவேலரை அதம்பண்ணவும் நல்லவழி இருந்தது. பெலிஸ்தியர்படையோடு இராஜபுலவரின் படையும் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று ஒழுங்குபண்ணப்பட்டிருந்தது. ஆனாலும் பெலிஸ்திய பிரபுக்கள் தாவீதின்மேல் சந்தேகம் நினைத்து, அவரும் அவருடைய சேனையும் வரக்கூடாதென்று ஆட்சேபித்ததால் அவர் போகவில்லை.

நம்மை வேண்டாமென்று தடுத்தது நன்மைக்காக இருக்கும் என்று இராஜபுலவர் எண்ணி தமது இருப்பிடமாகிய சிக்லாகுக்கு வரவே, அமலேக்கியருடைய படைவந்து பெண்களையும் பிள்ளைகளையும் அங்கிருந்த பொருட்களையும் கொள்ளையிட்டுக்கொண்டுபோனார்கள் என்று கண்டார். அவருடைய மனைவிகள் இருவரும் கொள்ளைப்பொருளோடு சேர்ந்துபோனார்கள். இவ்வளவு அவமானமும் துக்கமும் அவருக்கு இதற்குமுன் நேரிட்டிருப்பதே இல்லை; ஆதலால் தாவீதும் அவரோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களுக்கு பெலனில்லாமல்போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். அச்சமயத்தில் சேனையனைத்தும் மிகோபித்து தங்கள் ஆயாசத்தையெல்லாம் இராஜபுலவர்மேல் தீர்த்துக்கொள்ளத் துணிந்து அவரைக்கல்

வெறிந்து கொல்லவேண்டுமென்று சொல்லிக்கொண்டார்கள். இராஜபுலவர் தம்மைக் கல்லெறியவந்த பராக்கிரமர் கையில் கட்கத்தை எடுத்துக்கொடுத்து தமக்குப் பின்செல்லச்சொல்லி, தேவசந்நதிகேட்டு அவர்களைத் திடப்படுத்தி சத்துருக்களைத் தொடர்ந்தார். அவர் சேனையில் சுமார் 200 பேர் நடக்க இயலாமல் பின் நின்றுபோனார்கள்; மற்றவர்கள் மூசலின் வாசனையை மோந்த வேட்டைநாய்களைப்போல் விரைவாய் சத்துருக்களைப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் தாங்கள் போகும் வழியில் குற்றுயிரோடு கிடக்கும் ஒருவனைக்கண்டு நீ யார், எவ்விடத்தானென்று விசாரித்து அவன் சிக்லாகைக் கொள்ளையிட்டசேனையைச் சேர்ந்தவனென்றும், வழியில் வியாதிப்பட்டபடியால் சாகும்படி விட்டுவிடப்பட்டானென்றும் அறிந்து அவனுக்கு அன்னமும், ஔஷதமும் கொடுத்துத்தேற்றி, தங்களுக்கு அவனை வழிகாட்டியாகவும், அமலேக்கியருடைய தங்குதாவளங்களைக் காட்டும் துணையாளனாகவும் வைத்துக்கொண்டார்கள். இது தாவீதுக்குக் கடவுளால் கிடைத்த ஒரு பெரிய சகாயமென்று சொல்லவேண்டியது. இராஜபுலவரின் சேனை போகப்போக அதிக வீரத்துவமாகி அந்தச் சத்துருக்கள் தங்கள் கொள்ளைப்பொருள்களால் மகிழ்ந்து, வெளியெங்கும் பரவி புசித்துக்குடித்து, தாங்கள் அடைந்த வெற்றிக்காகவும், சம்பாதித்த கொள்ளைப்பொருளுக்காகவும், களிகள் கட்டி ஆடிப்பாடி ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கக் கண்டு, அவர்கள்மேல் திடீரென்று சாடி ஒரு சாயங்காலமுதல் மறுசாயங்காலமட்டும் அவர்களை முறியடித்தார்கள். ஆகவே வேகமான ஒட்டைகளிலேறி ஓட்டம்பிடித்த 400 பேரைத்தவிர மற்ற எல்லாரும் தாவீதின் பட்டயத்துக்கு இரையானார்கள். அவர்களிடத்திலிருந்த எல்லாக் கொள்ளையும் தாவீதின் கைவசமாயிற்று. முன்னே தாவீதைக் கல்லெறியவந்த ஜனங்கள் இப்போது கைதட்டிக் களிப்புடன் கடவுளைவாழ்த்தி, களிவுடன் தங்கள் தலைவனைப் புகழ்ந்து, கட்டைமண்ணும் குட்டிச்சுவருமான தங்கள் தாபரஸ்தானமாயிருந்த சிக்லாகுக்கு வந்தார்கள். யுத்தத்தில் அகப்பட்ட பொருட்களில் யுத்தத்துக்கு வாராதவர்களுக்கு பங்கு கொடுக்கக்கூடாதென்று சேனைக்குள் ஒரு அமளியுண்டாயிற்று. அதையும் இராஜபுலவர் அடக்கி, வாராதவர்கள் ரஸ்துக்களைக் காவல்பண்ணினதால் சகலருக்கும் சரிபங்கு கொடுக்கவேண்டுமென்று தீர்த்தார். இதுதான் கொள்ளையைப் பங்கிடுவதைப்பற்றிய முதலாம் கட்டளை. இதே வழக்கம் இஸ்ரவேல் ராஜ்யத்தில் நடந்துவந்தது. அந்தக் கொள்ளையில் சிலவற்றைத்



தாவீது தன்னுடன் உறவாயிருந்த பல பிரபுக்களுக்கு இனமாக அனுப்பினார்.

இராஜபுலவர் தாம் கடைசியாய் அமலேக்கியர்மேல் அடைந்த வெற்றியால் கடவுளை ஸ்துதித்து, அந்த யுத்தத்தில் சம்பாதித்த கொள்ளைப்பொருட்களைப் பலருக்கும் பங்கிட்டு, சத்துருக்களால் சுட்டெரிக்கப்பட்ட சிக்லாகைச் சீரக்கட்ட என்னசெய்யலாமென்று எண்ணிக்கொண்டிருக்கிற சமயத்தில், அவர் சிக்லாகுக்குத்திரும்பி வந்துசேர்ந்த இரண்டாம்நாளில் ஒரு அஞ்சல்காரன் ஓடிவந்து கில்போவாபருவதத்தில் பெலிஸ்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் நடந்த யுத்தவிபரங்களையெல்லாம்சொல்லி

இஸ்ரவேலர் முறிந்தோடினார்கள்,
சவுலும் அவர் குமாரரும் மாண்டார்கள்,
குடிகள் குடியோடிப்போனார்கள்,
பெலிஸ்தியர் குடியேறிக்கொண்டார்கள்

என்ற வார்த்தைகளோடு தன் அஞ்சல்சமாசாரத்தை முடித்தான்: இந்த சமாசாரம் இராஜபுலவரின் ஜீவியத்துக்கு ஒரு பெரிய மாறுதலை உண்டாக்குகிறதற்கு அஸ்திபாரக் கல்போலிருந்தது.

## மகுடாபிஷேக பருவம்.

சவுல்அரசன் மாண்டதுமுதல் தாவீதின் ஆதிக்கத்துக்கு பாதைகள் எங்கும் திறக்கப்பட்டதுபோலிருந்தது. என்றாலும் இராஜபுலவர் அப்பெரும்பாதைகளில் திடும்பிரவேசமாய்ப் பிரவேசிக்கத் துணியவில்லை. இஸ்ரவேலின்ராஜ்ய ஆளுகை தேவனால் அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அதற்கென்று அவர் சில வருஷங்களுக்குமுன்னே அபிஷேக தைலத்தைப் பெற்றபோதிலும், தமது கிருபைகளைக் கொண்டு வருகிற தேவன் அவைகளைத் தன் கரத்தில் வைக்குமட்டும் ஆத்திரப்படக்கூடாதென்று அமைதலாயிருந்தார். சவுல் மாண்டதுமுதல் அநேகர் தாவீதை அடுத்தார்கள். ஆனாலும் அவர் தம்முடைய ஜாதியார் ராஜ்யபாரவிஷயத்தில் எவ்வித அபிப்பிராயமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பதை பொறுமையோடு கவனித்துக்கொண்டு சிலகாலம் பின்னும் சிக்லாகில்தான் தாமதித்திருந்தார். அதோடு கடைசி யுத்தத்தில் ஜெயமடைந்த பெலிஸ்தியருடைய நோக்கங்களையும் அவர் அறிந்துகொண்டார். அவர்கள் வடநாட்டில் அடைந்த வெற்றியால் யூதஜாதி முழுமையும் நமக்கு அடிமைதான் என்றிருந்தார்கள். சாமுவே

லின் தைலாபிஷேகத்தையும் தன் சேனைபலத்தையும் அவர் எண்ணி ஆத்திரமாய் ஒன்றுஞ்செய்யாமல் தேவசித்தம் இன்னதென்பதை அறிந்து அதின்படிச் செய்ய நிர்மானித்தார்.

இதனிடையில் தமது மாமனும் மாற்றானுமாகிய சவுலுக்காகவும், அவருடைய மைத்துனனும் உத்தமநேசனுமாகிய யோனத்தானுக்காகவும் அவர் துக்கங்கொண்டாடி, அவர்களுடைய மரணம் எக்காலமும் தன் ஜனத்தாரால் துயரமாய் நினைவுகூரப்பட்டுவரும்படி ஒரு புலம்பலும் பாடினார். அது யூதஜாதியின் வில்லடிபாட்டென்று பெரும்பாலும் அழைக்கப்பட்டது. இதின் கருத்தை அடக்கி ஒருவர் பின்வருகிறபடி பாடியிருக்கிறார்.

## தாவீது, யோனத்தான் சவுல்மீது புலம்பியது.

இராகம், ஆகிரி. ஆதிதாளம்.

### கண்ணிகள்.

1. இஸ்ரவேல் அலங்காரம்
உயர்ந்த ஸ்தானங்களில் அதமாச்சே—மிக்க
புஜபலப் பராக்கிரம
சாலிகளின் பேரும் வீணாய்ப் போச்சே!

2 பெலிஸ்திய குமாரிகள்
சந்தோஷப்படாமலும் விருத்தசேதனம்— இல்லாப்
புலயர் மகிழாமலும்
இதை வெளிப்படுத்தாமல் பாருங்கள்.

3. காத்துப் பட்டணத்திலும்
அஸ்கலோன் வீதியிலும் சொல்லவேண்டாம்—புவி
போற்றும் சவுலும் யோனத்
தானும் மடிந்தது சொல்லவேண்டாம்.

4. பனியும் மழையுமின்றி
வயல்களும் இல்லாமல் போவதாக—அதி
சனம்பெறும் காணிக்கையும்
ஒழிவதாக கில்போவா மலைகளே!

5 தயிலத்தால் அபிஷேகம்
பெற்ற சவுல் பட்டயம் வெறுமையாச்சே—இந்த
உயர் பராக்கிரமசாலி
கேடகம் அவமதிப்பாச்சே.



6. யோனத்தான் வில்லு பின்
வாங்கினதுண்டோமோ சொல்லுவீரே—சவுல்
தானும் பட்டயம்
வெறுமையாய்த் திரும்பிற்றோ புவியோரே!

7. கொலையுண்டோர் இரத்தத்தைக்
குடியாமல் போயிற்றோ புகல்வீரே—மிக்க
வலிமையோர் கிணத்தையுண்
ணாமலே மாறிற்றோ பகர்வீரே!

8. உயிரோ டிருக்கையில்
இன்பமாயிருந்தாரே இருபேரும்—இப்போ
சயவர்முன் மடிகையில்
ஒருமிக்கவிழுந்தாரே இதோ பாரும்!

9. கழுகிலும் வேகமும்
சிங்கத்திலும் வலிமைசொண்டாரே—இப்போ
வழுச்சொல் உண்டாவதற்கோ
இஸ்ரவேல் புத்திரிகளே! சென்றாரே.

10. இரத்தாம்பரம் உடுத்தி
பொன்னாபரணங்களைச் சிறப்பாக—தந்த
உத்தம சவுலுக்கென்
றொப்பாரி சொல்வீரோ! மங்கையரே!

11. என்பிரிய யோனத்தான்
என்னுள் கட்டிக்கரும்பே! இன்பமே!—உனது
அன்பு பெண்களின் ஸ்நேகந்
தனிலும் மிகுதி யிப்போ துன்பமே.

12. சன்மணி யோனத்தான்
உன்சிநேகம் ஆச்சர்யம் ஆனதே—உனது
இன்பெறும் போராயுதம்
அழிந்து போயிற்றோ இப்போ.

13. இஸ்ரவேல் குமாரிகாள்!
இஸ்ராவேல் மங்கைகாள்! வாரீரோ!—இப்போ
நிசமாய் சவுல் யோனத்தான்
மடிந்ததின்மேல் ஒப்பாரி கூறீரோ.

இதினாலே சத்துருவை நேசிக்கும் குணம் இராஜபுலவருக்கு இருந்ததென்று விளங்குகிறது. இராஜபுலவர் தமக்கு விரோதமாய்ப் படையெடுத்துவந்த சவுலைக் கொல்லும்படி இரண்டு

தாம் சமயம் கிடைத்தும் கொல்லவில்லை. அவன் மாண்ட போதும் புலம்பினார். இப்படிப்பட்ட குணம் வேறில் உண்டாகமாட்டாது. சத்துருக்கள் கையில் சமாதானமாய் மாண்ட சச்சிதானந்த கிறிஸ்துஇயேசுவின் பாடுகளை பக்தியாய்த் தோத்தி தியானித்து ஆராய்கிறவர்களும், "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்!" என்று அவர் சொன்ன திவ்விய வாசகத்தை பொன் வாசகம்போல இருதயகமலத்தில் வைத்துக்கொள்ளுகிறவர்களும் இச்சிறந்த குணத்தில் வளருவார்களென்பதுமெய். அதோடு தன் மாற்றானுடைய கடைசி வரலாறுகளை நுட்பமாய் அறிய வேண்டுமென்று விரும்பி, தம்மிடம் செய்திகொண்டுவந்த அமலேக்கியனை வினவினபோது அவன் அந்நியஜாதியும், யூதரின் சத்துருவுமாயிருந்து சவுலின் மரணத்தால் மகிழ்கொள்ளுகிற வனைப்போலக் காணப்பட்டதாலும், தானே சவுலைக் கொன்றவன் என்று சொன்னபடியாலும் அந்தப் பாதகனை மரணாக்கினைசெய்யும்படிக் கட்டளையிட்டார்.[5]

இராஜபுலவர் ஆசாரியனைக்கொண்டு தேவசித்தத்தை அறிந்துகொண்ட பின்பு சிக்லாகைவிட்டுப் பேர்ந்து எப்ரோன் என்னும் நகரில்போய் வசித்தார். அவர் சிலகாலத்துக்குமுன் பெலிஸ்தியர் நாட்டிலே தங்கினதும், ஆகீசனோடு உறவாடினதும் சிலருக்குத் துவக்கத்தில் அவரை அலட்சியமாய் எண்ணுவதற்குக் காரணங்களாயிருந்தாலும் வரவர அவர்களுடைய சந்தேகங்கள் நீங்கிவிட்டன. அவருடைய கல்வித்திறமையும், கவித்திறமையும், கவண்திறமையும், கட்கத்திறமையும், பின்னைத்திறமையும், கீதத்திறமையும், அவரிடமிருந்த கோலியாத்தின் பட்டயப் பிரகாசமும், பல வீரசூரரின் பவுஞ்சும் எல்லாங்கூடி பட்டய மேந்தி பட்டயம்வீசி, பட்டணங்களைக் கட்டி, பாக்கியங்களைத் தரும் வேந்தன் இவனேயன்றி வேறொருவனும் இல்லையென்று அத்திசையிலுள்ளவர்கள் மனதிற்பட்டது. மேலும் இராஜபுலவர் அமலேக்கியரைக் கொள்ளையடித்துத் திரும்பினவுடன் அவ்விடத்து பிரபுக்களுக்கு வெகுமதிகளை அனுப்பினதாக முன் கண்டோமே; அந்த நற்குணமும் அவர் நிலைபெறுகிறதற்கு புறக்காரணமாயிருந்திருக்கலாம். ஆகவே சிலகாலத்துக்கு

5 தானே தன் பட்டயத்தில் பாய்ந்து மாண்டிருக்கலாம். இந்த அமலேக்கியன் தாவீதினிடம் விருதுபெறும்படி, தானே அவனைக் கொன்றதாகச் சொல்லியிருக்கலாம். இதை அறியாத இராஜபுலவர் அவன் வார்த்தையை நம்பி அவனை மரணாக்கினைசெய்ய உத்தரவுகொடுத்தது சரிதான்.



முன் வேடன்போல் வனாந்தரத்தில் அலைந்துவந்த இராஜபுலவர் யூதா, பெனியமீன் என்று அழைக்கப்பட்ட தென்னாட்டு ஜனங்களால் வேந்தன் என்று விளம்பரஞ்செய்யப்பட்டு தென்னாட்டரசனும் தெருவீதி வந்து, தேவனை நமஸ்காரஞ்செய்து கொலுமண்டபமேறினார். இராஜபுலவருடைய கலக்கத்தைத் தீர்த்து களிப்படைய கட்டளையிட்டவரும், துட்டத்தனமாற்றி நிலையை அருளினவரும், காட்டையாற்றி வீட்டில் சேர்த்தவருமான கர்த்தாதி கர்த்தருக்கு கனமும் புகழும் உண்டாவதாக. அவர் வெகுகாலம் துன்பக்கடலில் நீந்தி இப்போது இன்பத்தை அடைந்தார். அவர் பொறுமைக்குத் தகுந்த பெருமையை ஆண்டவர் கட்டளையிட்டார். "பொறுத்தார் பூமி ஆள்வார்" என்ற பழமொழி இவரில் நிச்சயப்பட்டிருக்கிறது. "விசுவாசிக்கிறவன் பதறான்" என்ற வேதவசனத்துக்கிசைவாய் இராஜபுலவர் கோலேறும் கவலேறும் வெகுகாலம் காத்திருந்து, பதறாமல் பட்டமேற்றவரானார். நாம் பெரும்பாலும் வெண்டு வேற்றாகிறவர்களையும், கொன்று கொலுவேறுகிறவர்களையும் பற்றிக் கேள்விப்படுவோம்; இராஜபுலவரோ காத்தோபாக்கமாய்த் தமது சிங்காசனத்தில் ஏறினார். இவ்விஷயத்தில் அவர் தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறார். பிதாவாகிய தேவன் உலகத்தோற்றத்துக்குமுன்னே தமது பரிசுத்த பர்வதமாகிய சீயோனில் அவரை இராஜாவாக அபிஷேகம்பண்ணி, சகல ஜாதிகளையும் அவருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தபோதிலும் இயேசு அந்தச் சுதந்தரத்தை அடைய வெகுகாலம் காத்திருந்து, மானிடவதாரமெடுத்து தம்மைத் தாழ்த்தி சிலுவையின் படிகள்வழியாய்ப் போய் மகிமையின் ஆசனத்தில் வீற்றிருக்கிறார்.

முன்பு ஏழையாக வந்து
முட்கிரீடம் தாங்கினார்;
பின்பு ராஜனாக வீற்று
துரைத்தனம் செய்கிறார்.

ஆதலால் சீயோனின் பிள்ளைகளே! கெம்பீரித்துப்பாடுங்கள்.

இராஜபுலவர் சிங்காசனமேறினவுடனே அப்னேர் என்ற சவுலின் பிரதானி ஒருவன் ஜனங்களைத் தன் வசப்படுத்தி தன் கொற்சத்தி மங்கிப்போகாமல் சவுலின் மகனை இஸ்போசேத்துக்கு பட்டங்கட்டி, பெலிஸ்தியருக்குத் தொலைதூரத்தில் இருந்தால் தொல்லை இல்லையென்று உத்தேசித்து, ஆற்றுக்குக் கிழக்கே இருந்த மக்னாயீமைத் தன் பாகத்துக்குத் தலைநகரியாக்

கிக்கொண்டான். இஸ்போசேத்து தன் தோளின்மேல் பட்டம் ஏற்ற அவ்வளவு தகுதியுடையவனாக இருக்கவில்லை. ஆதலால் அவனைப் பேருக்கு அரசனாகவைத்து அப்னேர் அரசாட்சியை நடத்திவந்தான். இராஜபுலவர் தமது அரசாட்சியின் துவக்கத்தில் தன்னையமுள்ளவரைப்போல குடிகளுக்குக் காணப்படவில்லை. இஸ்ரவேலரின் பூலோகவாழ்வுக்கென்று தேவனால் ஏற்படுத்தப்பட்ட மன்னன்போலவே அடக்கமும் அன்பும் உடையவராய் இருந்தார். வடநாட்டிலுள்ள யாபேசுவூரார் சவுலின் உடலை மரியாதையோடு அடக்கஞ்செய்ததை அவர் கேள்விப்பட்டு அவர்களை வாழ்த்தும் வார்த்தைகளைச் சொல்லி அனுப்பினார். அவரில் விளங்கிய தயாளமும் இராஜசமும் சகலரும் அவரை மதிக்கப்பண்ணிற்று. அப்னேர் இஸ்போசேத்தின் பேரை வைத்துக்கொண்டு வடநாட்டாரையெல்லாம் தனக்குக் கீழ்ப்படுத்தவும், இராஜபுலவரை அசட்டைபண்ணவும் பிரயத்தனங்கள் பண்ணிவந்தான். அதினால் சவுலின் குடும்பத்துக்கும், தாவீதின் குடும்பத்துக்கும் அடிக்கடி சச்சரவு நடந்துவந்தது. இராஜபுலவர் வரவர பலத்தார், சவுலின் குடும்பத்தாரோ வரவர பெலவீனப்பட்டார்கள். கடைசியாக அப்னேரும்இஸ்போசேத்தும் ஒருவருக்கொருவர் மனஸ்தாபப்பட்டதால் அப்னேர் தன்னை தாவீதுடன் சேர்த்துக்கொள்ளும்படி ஆள் எடுத்துவிட்டான். தாவீது ஆ! இது கர்த்தர் நமது பகைஞனை நமது பாதத்தின் கீழ்ப்படுத்தும் முறையென்று தன் மனதில் சிந்தித்துக்கொண்டு, அப்னேருடைய வார்த்தைகளின் உண்மையைப் பரீட்சிக்கவும், அவனைத் தன்னோடு ஒப்புரவாக்கும் நிபந்தனையாகவும், தாம் ஒருகாலத்தில் பரிசங்கட்டி பாரியாகக்கொண்டிருந்த சவுலின் குமாரத்தியாகிய மீகாளைத் தம்மிடம் கொண்டுவந்து ஒப்புவிக்கவேண்டுமென்று சொன்னார். இவளை சவுல் அநியாயமாய் பல்தியேலுக்கு மறுகலியாணம் செய்துகொடுத்திருந்தான். தாவீதின் வார்த்தைகள் அப்னேருக்கு இணக்கமாயிருந்தது; மேலும் அவர் தமது ஆதிக்கமுறைப்படி சில தானாபதிகளைத் தமது மைத்துனனாகிய இஸ்போசேத்திடம் அனுப்பி, என் மனைவியை இக்ஷணமே அனுப்பிவிடவேண்டியது என்று சொல்லியனுப்பினார். அதின்படியே இஸ்போசேத்து அப்னேர்மூலமாய் மீகாளை இராஜபுலவரிடம் அனுப்பிவிட்டான்.

அப்னேர் மீகாளோடே வந்துசேர்ந்தது அவனுடைய உண்மையை நன்றாய் வெளிப்படுத்திற்று. மேலும் அவன் இஸ்ரவேலின் மூப்பரை தாவீதின் பட்சமாய்த் திரும்பும்படி ஏவிவந்



தான்; இதினால் அவர்களும் இணங்கினார்கள். அப்னேர் ஒருதரம் இருபது மூப்பரைக் கூட்டிவந்து தாவீதுடன் உடன்படிக்கைபண்ணி அவருடைய ராஜ்யத்தை கானான்தேசமெங்கும் விஸ்தாரப்படுத்த முயன்றான். தாவீது அவர்களுக்கு விருந்துவைத்து சந்தோஷப்படுத்தினார். கடைசியாக அப்னேர் இஸ்ரவேல் முழுவதையும் உம்மோடு உடன்படிக்கை செய்யும்படி ஒழுங்குசெய்துவருகிறேன் என்று வாக்குச் சொல்லி, ராஜாவின் நல்வார்த்தையோடு புறப்பட்டுப்போனான்.

அப்னேர் ராஜாவோடு சமாதான உடன்படிக்கைக்கு ஏற்ற பிரயத்தனங்களைச் செய்யும்போது யோவாப் என்னும் படைத்தலைவன் ஊரில் இல்லை; அவன் பெலிஸ்தியரோடேயோ அல்லது வேறெந்த கொள்ளைக்காரரோடேயோ சண்டைசெய்யும்படி போயிருந்தான். அவன் தன் வெற்றிமுரசோடும், கொள்ளைப்பொருளோடும் எபிரோனின் வீதிகளில் வந்தபோது அப்னேர் வந்ததும், அரசனோடு பேசினதும், விருந்துண்டதுமான விஷயங்களையெல்லாம் கேள்விப்பட்டு தனக்குள் அதிசயமடைந்து, அப்னேர் அரசனோடு உறவாகிறதால் தன் சொற்சத்தியும், பெரியதனமும் குன்றுமென்று உத்தேசித்து அரசன் அறியாமல் அப்னேருக்கு ஆளனுப்பி வரச்சொன்னான்; முகதாவில் பேசும்படி மறந்துபோன ஏதோ செய்தியையிட்டு அரசன் கூப்பிடுகிறாராக்கும் என்று அப்னேர் களங்கமற்று நினைத்துவந்தான்; யோவாப் உத்தமநேசன்போல் அவனை வாழ்த்தி அவனோடு இரகசியம் பேசப்போகிறவனைப்போல் அவனைக் கோட்டைவாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப்போய் அவனை வயிற்றிலே குத்திக் கொன்றுபோட்டான். இதைப்போலொத்த நீசகுணம் ஒன்றுண்டா? இப்படிப்பட்ட குணமுடைய பலரை நாம் அடிக்கடி காண்கிறோம். இது பெரும்பாலும் தங்களை உயர்ந்தவர்கள் என்று வெளிக்குக் காட்டுகிற நீசரிடத்தில் வெளிப்படுகிறதுண்டு. அவர்கள் பாலோடு பச்சநாவியைக் கலந்தும் கொடுப்பார்கள்; பல்லைக்காட்டிக் கூப்பிட்டுப் பழிசெய்யும் பாதகராய் இருக்கிறார்கள். இது சாத்தானின் குணம்; அவன் நேசம்காட்டி நம்மை பாவத்திற்கு இழுத்து நாம் நாசமாகிறதைக் கண்டு களிகூறுகிறவனாயிருக்கிறான்.

இந்த அநியாயத்தை அரசன் கேட்டவுடனே மெய்மறந்து, பாதகன் யோவாபைச் சபித்து அவன் வீட்டாரிலே பிரமியக்காரனும், குஷ்டரோகியும், கோல் ஊன்றி நடக்கிறவனும், பட்டயத்தால் விழுகிறவனும், அப்பத்தால் வருந்துகிறவனும் ஒருக்காலும் குறைந்துபோவதில்லை என்று சொன்னார். அரசன்

அவனை உடனே என் கொல்லவில்லையென்று கேட்போம். அக்காலத்தில் அவருடைய கை அவ்வளவு பலப்படவில்லை; அவர் யோவாபை மரணாக்கினைசெய்தால் இராச்சியபாரத்திலுண்டாகிற குழப்பம் கொஞ்சமல்லவென்றும், இவனைப் பழி வாங்க ஒரு காலம் உண்டென்றும் கடத்திவிட்டிருக்கலாம். என்றாலும் அவர் யோவாபையும் அப்னேரின் பிணத்துக்கு முன்னே நடந்துவரவேண்டுமென்று கட்டளையிட்டுத் தாமும் பாடையின் பின் சென்றார். யோவாப் உணர்வுள்ளவனானால் இந்த ஒரு வெட்கம் அவனுக்குப் போதுமல்லவா? அப்னேர் மாண்ட சிலகாலத்துக்குள் வடநாட்டுக்கரசனாயிருந்த இஸ்போசேத்து மாண்டான். அவன் மரணம் மகா பயங்கரமானது. அவனுடைய இரண்டு வேலைக்காரர்கூடி ஒருநாள் பட்டப்பகலில் பயமற்று தன் வீட்டில்படுத்துத்தூங்கின அவனைக் கொன்று போட்டார்கள். ஒருவேளை தாவீது ராஜனால் வெகுமானம் பெறலாமென்று அப்படிச்செய்தாலும் செய்திருக்கலாம். அவர்கள் இஸ்போசேத்தின் தலையோடு தாவீதினிடம் வந்தார்கள். ஒருவேளை அப்னேரைக் கொன்ற விஷயத்தைக் கண்சாடையாய்விட்டதுபோல் இதையும் விட்டுவிடுவார் என்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம். ஆனால் தாவீது அவர்களைக் கொலை செய்துவிடும்படி கட்டளையிட்டார். ஏனெனில் தாவீது அவ்வண்ணமாய்த் தன் ராஜ்யத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முயலாமல் தேவசித்தத்துக்கும், காலத்துக்கும் பொறுமையோடு காத்திருந்தார் என்று திட்டமாய் விளங்குகிறது. இப்படிப்பட்ட மனுஷனை நாம் கண்டுபிடிப்பது வருத்தம். இக்காலத்தாரோ கடவுள்காலத்துக்குக் காத்திருந்தால் காரியமில்லையென்றும், தன் காரியத்தைத் தானே நடத்துகிறவனுக்கு தற்பரனும் துணைபுரிவார் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது உலகத்தின் மக்களுக்கேற்ற பழமொழியேயன்றி தேவனுடைய பிள்ளைகள் சொல்லவேண்டிய பழமொழியல்ல.

இதற்குள்ளாக தாவீது எபிரோனில் வந்து ராஜ்யபாரம் ஆரம்பித்து சுமார் ஏழுவருஷமாகியிருந்தது. சவுலின் வீட்டின் எதிரித்தனம் இதோடு முடிந்துபோயிற்று. ஆகவே இஸ்ரவேல் கோத்திரத்தாராகிய வடநாட்டார் அனைவரும், ஆளுகைவிஷயத்தில் இம்மட்டும் சவுலின் வீட்டைச் சார்ந்திருந்ததை மாற்றி ஏக மனநிர்ணயமாய் தாவீது அரசனையே தங்களெல்லாருக்கும் மேலான சக்கரவர்த்தியாக்கும்படி மனுப்பண்ணினார்கள். தாவீது அவர்கள் விண்ணப்பத்துக்கு இசைந்து தேவபலத்தால் இடைகட்டிக்கொண்டு இஸ்ரவேல் கோத்திரங்கள் அனைத்துக்கும்



ஏகசக்கரவர்த்தியானார். பட்டாபிஷேகத்துக்கு பல நாட்டு அதிபதிகளும், கோத்திரத்தலைவரும், சேனாவீரரும், பெரிய தனக்காரரும் வந்து கூடினார்கள். சவுலின் கோத்திரத்தாரான பென்யமீனரில் 300 பேர் வந்து அவருக்கு மங்களங்கூறினார்கள். நாடுநகரங்களிலும், வீடுமனைகளிலும் கெம்பீரசத்தம் கேட்கப்பட்டது. "சவுல் ஆயிரம்பேரைக் கொன்றார், தாவீது பதினாயிரம்பேரைக் கொன்றார்" என்ற கீதம் மறுபடியும் அத்தேசமெங்கும் தொனித்தது. கோலியாத்தைக் கொன்றவீரன் கொலுமண்டபத்தில் ஏறினாரென்று ஊரெங்கும் பேசிக்கொள்ளப்பட்டது. உள்நாட்டு அதிபதிகளும், சேனாவீரரும் ஆணையோடு அவருக்கு அடங்கினார்கள். இசக்கார், செபுலோன், நப்தலியின் எல்லைமட்டுமுள்ள வடநாட்டு பெரியதனக்காரர் எல்லாரும் கழுதைகள்மேலும், ஒட்டகங்கள்மேலும், கோவேறுகழுதைகள்மேலும், மாடுகள்மேலும் ஏற்றின தின்பண்டங்களாகிய அத்திப்பழங்களையும், திராட்சப்பழங்கள், திராட்சரசம், எண்ணெய் முதலியவைகளையும், ஆடுமாடுகளையும் கர்ணிக்கையாகக் கொடுத்தார்கள். இராஜபுலவர் பட்டாபிஷேகத்துக்கு கூடிவந்த பிரபுக்களுக்கு மூன்றுநாள் அறுசுவையோடு அமுதளித்து, அவர்கள் ஒவ்வொருவருடைய மனமும் மகிழும்படி ஆளுகைக்குரிய அநேக நல்வார்த்தைகளைப் பேசினார். ஆகவே பன்னிரு கோத்திரமும் ஏக கோத்திரம்போல ஐக்கியமாகிவிட்டது.

இராஜபுலவர் அபிஷேகம்பெற்ற ஆரம்பத்தில் தமது ராஜதானியான எபிரோன் ஒரு மூலையில் இருப்பதால் ஆளுகைக்கு அநுகூலமான இடமல்லவென்று கண்டு, எபூசியர் தங்கியிருந்த மலையை அடுத்த எருசலேமில் ராஜதானியை மாற்றி ஸ்தாபிக்க முயன்றார். இது லேசான முயற்சியல்ல; ஏனெனில் விரும்பிய இடத்தில் வீரரான ஜாதியார் கோட்டை கொத்தளங்களுடன் வாசம்பண்ணிவந்தார்கள். எபூசியர் என்ற பேருக்கே "வென்றவர்கள்" என்ற பொருளாகும். வென்ற வீரரை வெல்லத் துணிவது லேசல்லவே. தாவீது அரசர் தமது சேனையுடன் அந்த நகரத்தைத் தாக்கி தேவ ஒத்தாசையால் அக்கோட்டையைப் பிடித்தார். இந்த அதிசயவெற்றி அவருடைய பேரைப் பிரஸ்தாபிக்கும் எக்காளம்போலிருந்தது. அந்தக் கோட்டையிலே அவர் வாசம்பண்ணி, அதற்கு "தாவீதின் நகரம்" என்று பேரிட்டார். அதுமுதல் அது ராஜநகரமாயிற்று. அவர் நாளுக்குநாள் விருத்தியடைந்தார். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவரோடிருந்தார்.

இராஜபுலவர் தாம் பிடித்தகோட்டையைப் பலப்படுத்திக்கொண்டு தமக்கு ஒரு ராஜ அரமனையைக் கட்ட முயன்றார். அதற்கு அவருடைய நாட்டு சிற்பாசாரிகள் தகுந்தவர்களாகக் காணப்படாததால் தீருபட்டணத்து அரசனாகிய ஈராமோடு உறவுபண்ணினார். அவன் அரசருக்கு வேண்டிய மரங்களையும் மற்றத் தொழிலாளிகளையும் அனுப்பினான். அவர் தமது புது அரமனையில் சுகத்தோடு வாழுங்காலத்தில் அக்காலத்து அரசர் செய்கிற வழக்கம்போல பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த பல பெண்களை மறுபடியும் விவாகஞ்செய்தார். இது அச்சமயத்தில் அவருக்கு மகிழ்ச்சியாயிருந்தாலும் பின்னுக்கு அவருடைய கழுத்துக்கே கண்ணியை ஆயத்தப்படுத்துகிறதாயிருந்தது என்பதை வரவர அறியலாம்.

தாவீது அரசனின் ராஜ்யபாரம் ஸ்திரப்பட்ட விஷயமானது பெலிஸ்தியருக்கு வன்கண்ணாயிருந்தது. அவர்கள் முற்காலத்தில் செய்துவந்ததுபோல இஸ்ரவேல் தேசத்தின் விளைச்சல்களைக் கொள்ளையடித்துக் கொழுத்துப்போகலாம் என்றிருந்தார்கள். தாவீதின் ஆளுகை அவர்கள் ஆலோசனைகளையும், அழிம்புகளையும் மாற்றிவிட்டது. பெலிஸ்தியர் அவருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யவந்தபோது அவர் தேவ உத்தரவின்படி அவர்களை எதிர்த்து மடக்கி வென்றார். அவர்கள் மறுபடியும் அரசனைப் பின்தொடர்ந்துவந்தார்கள், அரசன் மறுபடியும் அவர்களை ஜெயித்து வெற்றிவிருதோடும் வீணைக்குரலோடும் திரும்பிவந்தார். முன் ஒருகாலத்தில் அடைக்கலம் கொடுத்து ஆதரித்த பெலிஸ்தர் இக்காலத்தில் அவர் அநுபவிக்கிற வாழ்வு பொறுக்காமல் அவருக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளும் அவருடைய சபையும் எவ்வளவிற்கு விசுவாசத்திலும் ஆவிக்குரிய பலத்திலும் பெருகுமோ அவ்வளவிற்கு சாத்தானால் வரும் ஆபத்துகள் அதிகப்படும்.

அப்புறம் அரசர் தேவபக்தியைத் தமது தேசத்தில் விருத்திபண்ணவும், தேவாராதனை விஷயங்கள் தமது நகரத்தில் கிரமமாய் நடந்துவரவும் விரும்பி வெகுகாலமாய்த் தேடுவார் அற்று ஒரு சிற்றூரிலிருந்த தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்கு எடுத்துவர முயன்றார். நாம் எவ்வளவிற்கு தேவாசீர்வாதங்களை அநுபவிக்கிறோமோ அவ்வளவிற்கு அவரைச் சேவிக்கவும் வணங்கவும் தாழவேண்டியது. உடன்படிக்கைப்பெட்டியானது தேவ பிரசந்நத்தின் அத்தாட்சியாக இருந்தது. அரசர் நாடெங்கும் செய்தியனுப்பி தலைவரான 30,000 பேரைத் திரட்டி அதிக மரியாதையோடும், பக்திவிநயத்



தோடும் அபினதாபின் வீட்டிலிருந்த கர்த்தருடைய பிரசந்நசின்னத்தை ஒரு புதுவண்டியிலேற்றி "சகலவித வாத்தியங்களோடும், சுரமண்டலம், தம்புரு, மேளம், வீணை, கைத்தாளமாகிய இவைகளோடும் கொண்டுவந்தார்." வருகிறவழியில் மாடுகள் மிரண்டது; அதனால் ஊசா என்னும் ஒரு மனுஷன் தொடக்கூடாத பெட்டியை விழுந்துபோம் என்று எண்ணி புத்தியீனமாய்த் தொட்டான். அவனுடைய துணிவினிமித்தம் கர்த்தர் அந்த இடத்திலே அவனைச் சாகப்பண்ணினார். தெய்வீக விஷயங்களை நாம் அற்பமாய் எண்ணலாகாது. ஆடம்பரத்தோடு கொண்டுவரப்பட்ட கர்த்தருடைய பெட்டி ஊசாவின் சாவால் எருசலேமில் கொண்டுவரப்படவில்லை. அரசன் தன்னிலே பயந்து சிலகாலம் ஓபேத் ஏதோம் என்னும் ஒரு பக்தன்விசாரணைக்குள் அவன் வீட்டிலேயே அதை வைத்துவிட்டார்.

சுமார் மூன்றுமாதம் சென்றபின்பு தேவனுடைய பெட்டியினிமித்தம் ஓபேத் ஏதோமின் வீடு கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறதென்பதை தாவீது அரசன் கேள்விப்பட்டு, அதைத் தன் நகரத்தில் வைத்துக்கொள்ளும்படி ஆசித்து திரண்ட ஜனத்தோடும், கீதவாத்தியங்களோடும் அவ்விடத்துக்குப்போய கர்த்தருடைய பெட்டியைக் கொண்டுவந்தார். வழியெல்லாம் தேவகோபம் தன்னையாவது தன் ஜனத்தையாவது அணுகாதபடி சமாதானபலியாக ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டுக்கொண்டேபோனார். மேலும் அரசன் தனது ராஜ உடைகளைத் தள்ளி சாதாரண உடை தரித்து சுரமண்டலத்தையும், கின்னரத்தையும் கையில் ஏந்தி கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக நடனம்பண்ணியாடி தாம் அதற்கென்று ஆயத்தப்படுத்தியிருந்த கூடாரத்திலே அதைக் கொண்டுபோய்வைத்தார். இந்த இரண்டாந்தடவையில் அரசர் நியாயப்பிரமாணத்து எழுத்துப்படி எல்லாச் சடங்கையும் நிறைவேற்றவேண்டுமென்று தீர்மானித்து, தேவனுடைய பெட்டியை லேவியரையே சுமக்கப்பண்ணி ஒருவரும் அதின் சமீபத்தில் வராதபடி ஒழுங்குசெய்தார். பெட்டி சுமந்துவரப்படுகையில் "தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டுபோவார்கள், அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்குமுன் ஓடிப்போவார்கள்" என்ற கீதமும், (சங். 68.)

கர்த்தாவே, உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன்
நீர் உமது தாபரஸ்தலத்தில் எழுந்தருளும் (சங். 132.)

என்ற கீதமும் இன்னும் அநேக கீதங்களும் பாடப்பட்டன.

பெட்டியைக் கொண்டுவரும்படிபோன ஆசாரியரும் அரசனும் பிரபுக்களும் தாவீதின் நகரத்தில் வந்தவுடனே மேளதாளங்களின் ஓசையும், பாட்டுகளின் தொனியும் அதிகப்பட்டன. பெட்டி நிலைப்படுத்தப்படும் பரிசுத்த பர்வதத்தில் ஏறிப்போகும்படி அவரவர் தங்களைச் சுத்திகரித்துக்கொண்டார்கள். பாடகரின் ஒருபவுஞ்சு பெட்டியருகேயும், மறுபவுஞ்சு கூடாரத்தண்டையும் நின்றார்கள். பெட்டியோடு வந்த பாடகர் பரிசுத்த பர்வதத்தின் படிகளின்மேலேறுகையில்

"வாசல்களே உங்கள் தலைகளை உயர்த்துங்கள்,
அநாதிகதவுகளே உயருங்கள்,
மகிமையின் இராசா உட்பிரவேசிப்பார்"

என்று இடிமுழக்கமாய் முழங்கிப் பாடினார்கள். அப்போது கூடாரத்தண்டை நின்றபாடகர் ஏகமாய்க்கூடி தங்கள் தொனிகளை உயர்த்தி

"யார் இந்த மகிமையின் இராசா"

என்று கேட்டார்கள். அந்நிமிஷமே பெருவெள்ள இரைச்சல்போல் சர்வஜனமும் ஏகமாய் நின்று தங்கள் சத்தத்தை உயர்த்தி

"அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தராம்,
அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராம்"

என்று மறுமொழிகீதம் பாடினார்கள். உடனே பாதைகள் திறக்கப்பட்டன, திரைகள் நீக்கப்பட்டன, தேவனுடைய பெட்டி மகா மகிமையோடு பர்வதத்தின்மேல் சுமந்துகொண்டுபோகப்பட்டது. அதுமுதல் இருபவுஞ்சு பாடகரும் ஏகபவுஞ்சாக சேர்ந்துகொண்டு ஒன்றுபோல மேளஞ்சேவித்து, கின்னரம் வாசித்து

வாசல்களே தலைகளை உயர்த்துங்கள்,
அநாதிகதவுகளே உயருங்கள்,
மகிமையின் இராசா உட்பிரவேசிப்பார்,
யார் இந்த மகிமையின் இராசா?
அவர் சேனைகளின் கர்த்தரானவர்,
அவரே மகிமையின் இராசா

என்று பாடிக்கொண்டே போனார்கள். அரசர் அன்று ஆசாரியனைப்போல் நின்று சில விசேஷித்த பலிகளைச் செலுத்தினார்.

தேவனுடைய பெட்டியை அதன் ஸ்தானத்தில் நிலைப்படுத்தினவுடனே பாடும்படி அரசர் ஒரு விசேஷசங்கீதம் பாடியிருந்தார். அந்தப் பாட்டை ஆசாபும் அவரைச்சேர்ந்த பாடகரும்



இன்பக்குரலோடு இணக்கமாய்ப் பாடித்துதித்தார்கள் (1 நாளா. 16. 8, 36.). அக்கீதம் முடிந்தவுடனே சர்வஜனமும் பேரிடிமுழக்கம்போல் "ஆமென்" என்று சொல்லி கர்த்தரைத் துதித்தார்கள். ஸ்துதித்தார்கள் என்ற வார்த்தையினால் இச்சமயத்தில் சொல்லப்பட்ட "ஆமென்" என்ற வாசகம் வெறும் வார்த்தையாய்மாத்திரமிராமல் பாட்டோடே சேர்ந்ததாய் இருந்ததென்று தோன்றுகிறது. சில பாட்டுகளில் அசை குறையும்போது இது இரட்டித்தும் பாடப்பட்டது (சங். 41. 13; 72. 19; 89. 52.). கடைசியாக அரசன் ஜனங்களை ஆசீர்வதித்து, அவர்களுக்கு விசேஷ விருந்துபண்ணி வாழ்த்தியனுப்பினார்.

இவ்விஷயத்தில் தாவீதுஅரசன் நடப்பித்த விஷயங்கள் எவ்வளவு புகழப்படத்தக்கதாய் இருக்கிறது. தேவன்பேரிலும் தேவ ஆராதனையின்பேரிலும் அவருக்கு எவ்வளவு அபிமானம் இருந்ததென்று பார்க்கிறோம். அவர் பாராட்டின அபிமானம் அவருடையசொந்தமனைவியாகிய மீகாளால் பரியாசம்பண்ணப்பட்டது. அவளுடைய பரிகாசம் தாவீதரசரின் பக்தியைக் குலைத்துப்போடவில்லை. இக்காலத்தில் கிறிஸ்துசபையில் சற்று பணக்காரராயிருக்கிறவர்களும், உயர்ந்த உத்தியோகத்திலிருக்கிறவர்களும் தேவாலய ஊழியங்களிலிருந்து தங்களைத் தூரப்படுத்திக்கொள்ளுகிறதே தங்கள் அந்தஸ்துக்கு அடுத்ததென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தாவீதின் மாதிரியைச் சற்றே தியானிக்கவேண்டியது.

தாவீது அரசனின் அரசாட்சி ஆரம்பத்தில் தேவதாபக்திவிஷயமாய் அவர் செய்தமுயற்சிகள் இம்மட்டோடே முடியவில்லை. கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்தில் கொண்டுவரப்பட்டதுமுதல் அந்தமலை "பரிசுத்தபருவதம்" என்ற பேரால் அழைக்கப்பட்டது. அந்தப் பரிசுத்த பருவதத்தில் தாவீது அரசன் மெத்தைவீட்டில் வசித்து, அதன் மேல்மெத்தையில் உலாவும்போது கர்த்தருடைய பெட்டியிருந்த கூடாரம் தன் பாதத்தின்கீழ் இருக்கிறதுபோல பக்திவிநயமான கருத்து உண்டாயிற்று. தான் கேதுருமரவீட்டில் வசிக்கையில் தன் தேவனுடைய வாசஸ்தலம் கூடாரமாய் இருப்பது தகுதியல்லவென்று தீர்மானித்து, தமது கருத்தை தீர்க்கதரிசியாகிய நாத்தானிடத்தில் வெளியிட்டார். அவரும் அந்த யோசனைக்கு இணங்கி தேவசித்தத்தை அறியும்படி பிரயாசப்பட்டதில் அரசனின் ஆசை மாறுதலடையவேண்டியதிருந்தது. ஏனெனில் தேவன் அவரைக்கொண்டு வேறு அநேக வேலைகளை நிறைவேற்றும்படிச் சித்தங்கொண்டிருந்தார். நாம் செய்யும்படி விரும்புகிற அநேக

நல் வேலைகளுங்கூட ஆண்டவரால் தடுக்கப்படலாம்; ஏனெனில் நாம் விரும்பும்வேலைக்கு அவர் வேறொரு ஆளையும், நமக்கு வேறொரு வேலையையும் திட்டஞ்செய்திருக்கலாம். நாம் செய்யவிரும்பும் நல்வேலைகளுக்கு நம்மைவிட நன்றாய்ச் செய்கிறவர்களை அவர் தெரிந்துகொள்ளலாம். ஆதலால் நம்முடைய ஒட்டத்தின்படி தேவன் விடுகிறதில்லை என்று நாம் நன்மை செய்கிறதைவிட்டு ஓய்ந்துபோகக்கூடாது. அவர் எத்திசைக்கு எந்தவேலைக்கு நமது முகத்தைத் திருப்புகிறாரோ அதற்கு நாம் தோள்கொடுக்க ஆயத்தமாயிருக்கவேண்டியது. தமது பிரயத்தனம் தடையானதையிட்டு அரசன் இளக்கரித்துப்போகாமல், கடவுள் தம்முடைய விஷயமாய்ப் பாராட்டின பல தயவுகளைச் சொல்லி அவரை ஸ்தோத்திரித்து தேவசித்தப்படி ஆலயங்கட்டும் அரிய வேலையைத் தமக்குப் பின் கிரீடஞ்சூடும் தமது மகனுக்கு விட்டுவிட்டார்.

---

## செங்கோல் பருவம்.

தாவீது அரசர் தேவதாபக்தி விஷயமான வேலைகளோடே அரசாட்சி விஷயத்தையும் நடத்திவந்தார். விசேஷமாய் அவர் அக்காலத்தில் தமது ராஜ்யபாரத்தை ஸ்தாபித்தார் என்றே சொல்லவேண்டியது. இராஜ கஜானாவுக்குச் சேரவேண்டிய பணங்களுக்கும், ராஜ களஞ்சியங்களுக்குச் சேரவேண்டிய பொருட்களுக்கும் தகுமான அதிகாரிகளைத் திட்டம்பண்ணினார். அவர் தம்மை அரசாட்சியின் தலைவராக நியமித்துக்கொண்டு சாமுவேல் தீர்க்கதரிசி எழுதிவைத்திருந்த பிரகாரம் ஒழுங்குபடுத்த முயன்றார். அதினாலே கோத்திரத்தலைவரும், ஜனத்தலைவரும், மாகாணங்களின் தலைவரும் தம் தம் ஆசனத்தில் நிலைபடுத்தப்பட்டார்கள். நாத்தான் அரமனைத் தீர்க்கதரிசியாய் நியமனம்பெற்று ஞானமான யோசனைகளை ஓதிவந்தார். பட்டணங்கள்தோறும் கோட்டைகளும் கொத்தளங்களும் எழும்பின. அதனுள் ராஜ கஜானாவும் களஞ்சியமும் இருந்தன. அரசன் பட்டத்து வாகனத்தின்மேலேறி நகர்சோதனைக்குப் போவதும் வருவதுமாயிருந்தது. சேனாவீரர் அவனைப் புடைசூழ்ந்து காவல்காத்தார்கள்; கட்டியக்காரன் ராஜாவின் வருகையைப்பற்றி கட்டியங்கூறிவந்தான்; சேனையனைத்தும் காலாட்களாகவே இருந்தார்கள். அவர்கள் யேகோவாவையே தலையரசராகக் கொண்டிருந்தபடியால் குதிரைகளும் இரதங்களும் அவர்களால் பிரயோகிக்கப்படவில்லை. பட்டயமும் ஈட்டியுமே அவர்கள் வழங்கிவந்த விசேஷித்த ஆயுதமாயிருந்தது. அக்காலத்து யுத்தமுஸ்திப்புக்களில் இஸ்ரவேலருடையதே தாழ்ந்ததாயிருந்தது. தேவனுடைய பலம் அவர்களோடிருந்தபடியால் மாத்திரம் எதிரிகளின் படை மேற்கொள்ளவில்லை. அரசர் தமது கொலுமண்டபத்தில் வீற்றிருந்தபோதிலும் தம்மை இஸ்ரவேலை மேய்க்கும்படி தேவனால் நியமிக்கப்பட்ட இடையனென்றே எண்ணிவந்தார்.



அப்பால் அவரைச் சுற்றிலுமிருந்த ஜாதியாரை முற்றிலும் கீழ்ப்படுத்தும்படி தேவகட்டளையின்படியே ஏவப்பட்டு பெலிஸ்தியர், மோவாபியர், ஏதோமியர், சீரியர், அம்மோனியர், அமலேக்கியர் என்னும் ஜாதிகளுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து வெற்றிவிருதோடும், ஜெயகீதத்தோடும், கொள்ளைப்பொருளோடும் அடிக்கடி தமது ராஜதானிவந்து சேர்ந்தார். அச்சாதியாரில் சிலரை அடியோடு சங்காரம்செய்துவிட்டு, சிலரைக் கப்பம்கட்டும் நாட்டாராக வைத்துக்கொண்டார். இந்த வெற்றிகள் அவருடைய பொக்கிஷத்தை உயர்ந்தவிலையுள்ள சகலவித வஸ்துக்களாலும் நிரப்பினதுந்தவிர அவருடைய பேரை அதிகமாய்ப் பிரபல்லியப்படுத்திவிட்டது. அவர் எங்கே போனாலும் கர்த்தர் அவரோடுகூட இருந்தார். அவர் சிலவேளைகளில் பல ஜாதியாருக்குச் செய்துவந்த காரியங்கள் குரூரமும் அநியாயமுமாகக் காணப்பட்டாலும் அவர் அவைகள் எல்லாவற்றையும் தேவசித்தத்தின்படி செய்யும் ஒரு கூலிக்காரன்போல் மாத்திரம் இருந்தபடியால் அவைகளையிட்டு அவரைக் குறைகூற இடமில்லை. அதுவிஷயங்களிலும் நாம் தேவனையும் நொந்துகொள்ளக்கூடுமோ? கூடாது. அவருடைய வழிகளையும் பாதைகளையும்கண்ட மனுப்புத்திரன் ஒருவனுமில்லையே.

தாவீது அரசனின் காலத்தில்தான் தேவன் ஆபிரகாமிடத்தில் பண்ணியிருந்த கானானைப்பற்றிய வாக்குப் பூரணமாய் நிறைவேறிற்று. இம்மட்டும் வெகுகாலமாய் இஸ்ரவேலர் அதில் சஞ்சரித்துவந்தபோதிலும், யோசுவாவின் காலமுதல் தாவீதின் காலம்வரை அந்தச் சொத்தில் ஒரு பாகமாத்திரம் கையாட்சிசெய்யப்பட்டுவந்தது. தாவீதரசனே சுமார் 850 வருஷத்துக்குமுன்னே வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த எல்லைப்பிரகாரம் எகிப்து நதிமுதல் பெரிய நதியாகிய ஐப்பிராத்து நதிவரையுமுள்ள அயல் ஜாதியாரையெல்லாம் அடக்கி அவர்களுக்கு மேலான ஏக சக்கரவர்த்தியானார். ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கும் இப்படியே செய்கிறார். அவர்களைத் தமது கண்ணின் கறுப்புவிழியைப்போல் தற்காத்து, சகல சத்துருக்களின்

கைகளினின்றும் அவர்களை ரட்சித்து, பரம கானானின் கையாட்சியையும் அவர்களுக்கு அளிக்கிறார். அவர்கள் தேவனுடைய சிங்காசனத்தின் மத்தியிலிருந்து உற்பத்தியாகி ஓடும் ஜீவநதியின் ஓரங்களையெல்லாம் சுதந்தரித்து சுகிக்கிறார்கள். என்றாலும் இஸ்ரவேலர் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியை சமூலமாய்க் கையாட்சிசெய்ய அதிககாலம் காத்திருந்ததுபோல நாமும் காத்திருக்கவேண்டியது.

தாவீது அரசன் தன்னயனாயிருக்கவில்லை. அவர் தாம் கொள்ளையிட்ட பொன்னையும் தங்கத்தையும் இரத்தினங்களையும் கண்டு மயங்கிவிடவில்லை. அவையனைத்தையும் அவர் கர்த்தருக்கென்றே பிரதிஷ்டைசெய்தார். அவர்காலத்தில் தேவாலயத்தைக் கட்டும்படி தேவன் இடங்கொடாவிட்டாலும் அரசன் தமது மகன்காலத்தில் கட்டப்படவேண்டிய கட்டடத்துக்கென்று அவைகளை பந்தோபஸ்து செய்துவைத்தார். தன் வீட்டைவிட தேவனுடைய வீடும், தன் வீட்டுச்சாமான்களைவிட தேவனுடைய வீட்டுத் தட்டுமுட்டுகளும், தன் உடுப்புகளைவிட தேவபணிவிடைக்காரரின் உடுப்புகளும் மேலானதாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய சிந்தையிலிருந்தது. தன் பாதத்தில் விழுந்த காணிக்கைகளை தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்துவிட்ட அரசனை இக்காலத்தில் காண்பது அரிது; ஆனால் தேவனுடைய வீட்டைக் கொள்ளையடிக்கிற அரசனையும் அதிகாரிகளையுமே அடிக்கடிக் காண்கிறோம். "உன் பொருளாலும் உன் எல்லா விளைச்சலின் முதற்பலனாலும் கர்த்தனைக் கனம்பண்ணு" என்பதே தேவகட்டளையாயிருக்கிறது. தாவீது அரசர் தமது அரசாட்சி கர்வத்தாலும், செல்வச்செருக்கினாலும், பேர்பிரஸ்தாபத்தினாலும் பெருமைகொள்ளவும், தமது பழைய சத்துருக்களைப் பழிவாங்கத் துணியவுமில்லை. சவுலின் குடும்பத்துக்கு விசேஷித்த தயவு பாராட்டிவருவது அவருடைய தருமகுணத்தின் தலைக்குணமாயிருந்தது. இப்படிப்பட்ட உத்தமர் ஊருக்கு ஒருவர் இருந்தாலும் இவ்வுலகம் மோட்சமாகிவிடும் அல்லவா! நாமோ நன்மைசெய்வாரையல்ல தீமைசெய்வாரையும், தன் காரியக்காரரையும், தற்பெருமையுள்ளோரையும் பார்க்கிறதோடு மற்றவர்களை அதம்பண்ணவேண்டுமென்ற நோக்கமாய் அதற்குரிய உயர்ந்த உத்தியோகங்களைக் கைப்பற்ற முயலுகிறவர்களையும், தனக்கு இணக்கமான மனமில்லாதவனைத் தன் முகத்துக்கும் முதுகுக்கும் வெகு தூரத்துக்கப்பால் நகர்த்திவிடவேண்டும் என்கிறவர்களையும் நாடோறும் பார்க்கிறோம். தன் வாழ்வைமாத்திரம் நாடி பிறர்



தாழ்வை விரும்புகிற நீசத்தனத்துக்கு மேலானது வேறொன்றில்லை. அப்படிப்பட்டவர்களை தேவனுடைய பிள்ளைகளின் வரிசையில் சேர்க்கக்கூடாது.

தாவீது அரசன் சிலவருஷங்களாய் ஜெயமடைந்துகொண்டு வரும்போது அம்மோனிய இராஜா மரணமடைந்தான். அச்செய்தியை தாவீது கேள்விப்பட்டவுடனே அநுதாபப்பட்டு தன் பழைய சிநேகிதன் மரித்த துக்கத்தைக் கேட்கிறாற்போலும், புதிதாய்ப் பட்டத்துக்கு வந்த அவன் மகனுக்கு மங்களங்கூறுகிறாற்போலும் சில தானாபதிகளை அனுப்பினார். அந்த ராஜகுமாரனோ தாவீதின் அநுதாபகுணத்தை அழிம்புக்குணமாக தப்பாய் எண்ணிக்கொண்டு அவருடைய தானாபதிகளைப் பிடித்து நீங்கள் வாழ்த்துதல் சொல்ல அல்ல, உளவு பார்க்கவந்தீர்கள் என்று சொல்லி அவர்களுடைய ஒரு பக்கத்து தாடியைச் சிரைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருபிட்டம்மட்டும் வைத்துவிட்டு மற்றப் பாதியைக் கத்தரித்துப் போட்டு கனவீனமாய் அனுப்பிவிட்டான். இது ஒரு இராச்சியம் மறு இராச்சியத்துக்கு விரோதமாய் யுத்தத்துக்கு புறப்படப் போதுமான காரணந்தான் என்பதை யாவரும் ஒத்துக்கொள்ளுவார்களே. அம்மோனியர் தங்களுக்கு உதவியாக சீரியரையும், வேறு சில ஜாதியாரையும் கூலிபொருந்திக்கொண்டார்கள். அவர்களை மடங்கடிக்கும்படி அரசன் ஒரு தண்டோடும், சேனாபதியாகிய யோவாப் ஒரு தண்டோடும் போய் எதிரிகளை முறியடித்துவிட்டார்கள்.

இம்மட்டும் நாம் தாவீது அரசனைப் புகழ்ந்து பேசவேண்டிய விஷயங்களாகவே இருந்தது; ஆனால் இப்பொழுது அதை முற்றிலும் மாற்றவேண்டியதாயிருக்கிறது. அவருடைய தேவபக்தியின் அனல் குறையவும், ஒளி மங்கவும் ஒருகாலம் வந்ததா? என்று ஆச்சரியத்தோடு கேட்போம். ஆம், வந்தது. பரிசுத்த ஆவியானவர் அதைப் பின்னடியாரான பக்தரின் எச்சரிப்புஸ்தம்பமாயிருக்கும்படி வேதாகமத்தில் அமைத்திருக்கிறார். தாவீது அரசன் தன் சேனைகளை யோவாப்வசம் அனுப்பிப்போட்டு தன் அரமனையில் வாசம்பண்ணும்போது தற்செயலாய் மெத்தைமேல் உலாவுங்காலத்தில் தன் கண்ணுக்கெட்டின தூரத்திலிருந்த ஒரு வீட்டில் ஒரு ஸ்திரீ ஸ்நானஞ்செய்கிறதைக் கண்டு அவள்மேல் விரகதாபங்கொண்டு அவளை அழைத்துவரச் சொல்லி அவளோடு பாவஞ்செய்தார். ஐயோ, அரசரே! நீர் என்ன காரியஞ்செய்தீர்? இவ்வளவு காலம் சாத்தானை உமது பாதத்துக்குக் கீழாகமிதித்து பக்தியலையிலேறினீ

ரே! இப்போது ஒரு க்ஷணப்பொழுதிலே அவன் உமது தலையை மிதிக்கவும் நீர் பாவபாதாளத்தில் விழவும் எதுவாச்சுதே! ஆத்துமாவுக்குத் தரையிலிருந்தாலும், மெத்தையிலிருந்தாலும், ஜலத்திலிருந்தாலும் மோசமுண்டு. சாத்தான் அவரை ஆட்டுமந்தையிலும், மாட்டுக்கிடையிலும், காட்டுவனங்களிலும், வேட்டையாடிக் கெலியாமலிருந்தாலும் மேல்மெத்தையில் வேட்டையாடிப் பிடித்துக்கொண்டான். பக்தியுள்ள பாட்டுக்களாலும், ஜெபங்களாலும், போதனைகளாலும் பொங்கின ரத்தம் சிற்றின்பத்தால் இப்போது நோயாகிவிட்டது. பரிசுத்த தீர்க்கதரிசியே! தன்னை நிற்பேனென்று எவன் சொல்லக்கூடும்? நீரே விழுந்துவிட்டீரே! வேறெவன் நிற்கிறேன் என்று சொல்லலாம்? துன்மார்க்கர் தாங்கள் விழுகிறதற்கு ஒரு சாக்குப்போக்காக உமது விழுதலைத் தங்கள் தோள்மேல் சுமந்து பலருக்கும் காட்டலாம். ஆனால் நானோ மனுஷ பலவீனத்தின் படமாக உமது விழுதலை வைத்துக்கொண்டு

உன்னதபலமே! என்னைத் தாங்கு

என்று கனிவோடும், கண்ணீரோடும் கெஞ்சிக்கொண்டே நடப்பேன். தாவீதரசர் தமது படையோடு யுத்தத்துக்குப் போயிருந்தால் இந்தச் சோதனைக்குள் விழுந்திருக்கமாட்டார். நாம் எப்போதும் பாவத்துக்கு விலகிக்கொள்ளவேண்டுமானால் நமது வேலைகளை அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். "வேலையில்லாதவர்களுக்கு பிசாசு வேலைகொடுக்கிறான்" என்று ஒருபழமொழி உண்டு. சாத்தான் பெரியபாவங்களைத் திடீரென்று செய்துமுடிக்கும்படி ஏவுகிறான்.

தாவீதரசன் இதன்பின்பு தான் செய்த அக்கிரமத்தை மூடும்படிபிரயாசப்பட்டார். தான் மோசம்பண்ணின பத்சேபாள் என்னும் ஸ்திரீ தன்னால் கர்ப்பவதியானாளென்று அறிந்து தன்னை அதின் சமுசயத்தினின்று நீக்கிக்கொள்ளும்படி பல பிரயத்தனம் செய்தார்; அது கூடாமற்போயிற்று. அவள் புருஷன் அரசன் பட்டாளத்தில் ஒரு பிரதான மனுஷனாயிருந்தபடியால் காரியம் வெளிப்படுவது நிச்சயமானால் அதிக பொல்லாப்பு உண்டாகுமென்று பயந்து தன் பாவசிநேகிதியின் புருஷனாகிய உரியாவைக்கொலைசெய்துபோடும்படி தந்திரமாய் ஒழுங்குபண்ணினார். அந்த ஏழை உத்தமன் படையில் மடிந்தசெய்தி வந்தவுடனே அரசன் அவளைத் தமக்கு மனைவியாக எடுத்துக்கொண்டார். கேட்டிலிருந்து அதிக கேட்டுக்குட்படுகிறதற்கு இதைவிட வேறு திருஷ்டாந்தரம் வேண்டியதில்லை.



அரசன் செய்த இந்த அக்கிரமத்தை அவருக்கு உணர்த்தும்படிக்கு தீர்க்கதரிசியாகிய நாத்தானைக் காத்தர் அனுப்பினார். இதை அவர் அரசனுக்கு விவேகமாய் உணர்த்தும்படி ஒரு உவமான கதைகட்டி அரசனிடம்போய்த் தாம் ஒரு பிரியாது சொல்ல வந்ததுபோல அந்த உவமானத்தைச் சொன்னார். அதாவது: மகா இராஜாவே! ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள்; அவர்களில் ஒருவன் மகராஜன், மற்றவன் தரித்திரன். மகராஜனுக்கு மாடாடுகள் மிச்சமாயிருந்தது, தரித்திரனுக்கோ அவன் வாங்கிவளர்த்த ஒரு ஆடுமாத்திரம் இருந்தது. அது அவனோடும், அவன் மக்களோடும் கூடஇருந்து வளர்ந்து, அவன் வாயின் அப்பத்தைத் தின்று, அவன் பாத்திரத்திலே குடித்து, அவன் மடியிலே படுத்துக்கொண்டு அவனுக்கு ஒரு மகளைப்போலிருந்தது. மகராஜன் வீட்டுக்கு ஒரு விருந்தாடி வந்தான். அவன் தன்னிடத்தில் வந்த வழிப்போக்கனுக்கு விருந்துவைக்கும்படி தன் மந்தையிலொன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்த தரித்திரனுடைய ஒரே ஆட்டுக்குட்டியைப் பிடித்து அடித்து விருந்துகொடுத்து அனுப்பினான் என்று சொன்னார். அரசன் இக்கதையை மெய்யான நடபடிதானாக்கும் என்று எண்ணி உக்கிரம் மூண்டு, "இந்தக் காரியத்தைச் செய்தவன் மரணதண்டனைக்குப் பாத்திரனாயிருக்கிறான்; அவன் இரக்கமில்லாமல் இப்படிச் செய்தபடியால் அந்த ஒரு ஆட்டுக்குட்டிக்காக நாலு ஆட்டுக்குட்டியை கொடுக்கும்படி தீர்ப்புச் செய்கிறேன்" என்றார். அதுகேட்ட தீர்க்கதரிசி உள்ளுக்குள் இந்தச் சிங்கத்தைக் குத்தி இதின் ஆணவத்தை அடக்க இதைவிட தகுந்த சமயம் வாய்க்காது என்று தீர்மானித்து அரசனை நோக்கி:

"நீயே அந்த மனுஷன்"

என்று சொல்லி, கடவுள் அரசனுக்குக் கட்டளையிட்ட பல கிருபைகளையும், அரசன் அவைகளை மதியாமல் அக்கிரமமாய் நடந்ததையும் கண்டித்து உணர்த்தி, அதினால் அரசனுக்கும் அவர் குடும்பத்துக்கும் உண்டாகும் தேவதண்டனைகளையும், சாபங்களையும் விபரமாய்ச் சொன்னார். உடனே அரசன் மனம் மாறி தன் பாவத்தை அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டார். அவருடைய உத்தமமனஸ்தாபத்தையும் அறிக்கையையும் கண்ட தீர்க்கதரிசி அரசனைநோக்கி: "நீ சாகாதபடிக்குக் கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்" என்று சொன்னார். அது அவருக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுத்தது. எப்படியும் பத்சேபாளுக்கு பிறந்த முதலாம் பிள்ளையை ஆண்டவர் சாவால் தண்டித்தார்.

அது பிழைக்கும்படி அரசன் வெகு பிரயத்தனஞ்செய்து உபவாசித்து அழுது ஆண்டவரை மன்றாடினார். கடைசியாக அது மரித்துப்போனவுடனே தமது துக்கத்திலிருந்து மறந்து புசித்துக் குடித்து, "இனி நான் அதைத் திரும்பிவரப்பண்ணக்கூடுமோ? நான் அதினிடத்திற்குப் போவேனேயல்லாமல் அது என்னிடத்திற்குத் திரும்பிவரப்போகிறதில்லை" என்று சொன்னார். இந்த வரலாறுகளால் நாம் படித்துக்கொள்ளவேண்டிய அநேக ஞான போதனைகளுண்டு. ஒருவன் தன் மனோதத்துவங்களை அடக்கி ஆளாதபட்சத்தில் பயங்கரமான பாவங்களில் விழுந்துவிடுவான். தன் கண்ணோடு உடன்படிக்கை பண்ணாதவன் கடவுளோடு தனக்கிருக்கும் உடன்படிக்கையை ரத்துபண்ணிப்போடுவான். சிலர் ஆத்தும அந்தகரணங்களை மாத்திரம் காவல் பண்ணிக்கொண்டால் சரீர அவயவங்களைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை என்பார்கள். அப்படிச் சொல்லுவது பிசகு. கண்காட்சியால் இழுக்கப்படாமல் நின்றநிலையில் நிற்கிறவனை நான் ஆவிக்குரிய பலவான் என்று சொல்லுவேன்.

தாவீதரசன் உரியாவைக் கொன்று பத்சேபாளைத் தனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டதுமுதல் அவர் குடும்பத்துக்குள் உண்டான அமளிகளுக்கும் வெட்கக்கேடுகளுக்கும் ஒரு கணக்கில்லை. அவைகளையெல்லாம் இவ்விடத்தில் விபரமாய்ச்சொல்ல இடமில்லை. தங்கள் தகப்பனின் சீர்கேட்டைக் கண்ட பிள்ளைகள் சன்மார்க்க நெறியிலிருந்து தவறி அவரவர் மனம்போனபடி மாம்ச இச்சைக்குட்பட்டார்கள். அவருடைய குடும்பம் பல பிரிவுபட்டது. அக்குழப்பம் குடும்பத்தோடு மாத்திரம் அடங்கிப்போகாமல் ராஜ்யபாரத்திலும் பரம்பிற்று. சகோதரர் சகோதரரைக் கொன்றார்கள்; குமாரர் தகப்பனுக்கு விரோதமாய் எழும்பினார்கள். ஒருகாலத்தில் அப்சலோம் என்ற மகனால் உண்டான அமளியினிமித்தம் அரசன் காலால்நடந்து உயிர்தப்ப ஓடினார். ராஜ்யபாரமே கீழதுமேலதாகிவிடுகிறது போல் அவ்வளவு கலகம் உண்டாயிற்று. தாவீது தன்முகத்தை மூடி வெறும் காலால் நடந்து அழுதுகொண்டு ஒலிவமலையின் மேல் ஏறிப்போனார். சகல ஜனங்களும் அழுதார்கள்.

தாவீது இச்சமயத்தில் அநுபவித்த சஞ்சலமும் வருத்தமும் மெய்யான தாவீதாகிய இயேசுகிறிஸ்துவின் கடைசி சங்கடங்களை நமக்குச் சற்றே நினைப்பூட்டுகிறதுபோல் இருக்கின்றன. அவர் தமது சுயஜனத்தாரால் அசட்டைபண்ணப்பட்டு வெற்றுக்காலோடும் பாரச்சிலுவையோடும் எருசலேமின் வீதிகளைக் கடந்து கொல்கதாவில் ஏறினார். இந்த தாவீதைப்போல



அவர் தமது முகத்தை மூடவில்லை, அழவுமில்லை. அவர்பிலாத்துவின் அரமனையில் சூட்டப்பட்ட முள்முடியையே தமது இரட்சண்யமார்க்கத்துக் கிரீடமாய் மதித்து திறந்தமுகத்தோடு தெருவீதி போனார். அவர் தமது சிலுவைக்குப் பின்னாலே அழுதுகொண்டுவந்தவர்களைத் தடுத்து, "நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று ஆறுதல்சொன்னார். ஆ, இயேசுவே! நீர் அழவேண்டாம் என்றாலும் என் அழுகை மாறுமா! ஆ! நான் எனக்காகவும் உமக்காகவும் அழும்படி என் கண்ணைத் தொடும். தாவீதரசருக்குக் குடும்பத்திலுண்டான இந்தத் துன்பம் போதாதென்று குடிகளாலும் துன்பமுண்டாயிற்று. சீமேயி என்ற ஒருவன் அரசன் அரமனையைவிட்டு அகதிபோல அலைந்து திரிந்துபோகையில் தூஷித்துப் பலவித தீமையான மொழிகளை அவருக்கு விரோதமாய்ப்பேசி நிந்தித்தான். அவன் சவுலின் குடும்பத்தைச் சேர்ந்தவனானபடியால் அரசனுக்கு இக்காலத்தில் உண்டான துன்பமும் உபத்திரவமும் சவுலின் வீட்டாருடைய பழிவாங்குதலுக்காக கர்த்தரால் வந்திருக்கிறதென்று சொல்லி நிந்தித்தான். துன்பமும் உபத்திரவமும் ஒன்றித்துவருகிறதில்லை. உபத்திரவங்கள் பெருவெள்ளம்போல மனுஷர்மேல் ஒன்றின்பின் ஒன்றாய் மோதி அவர்களைக் கலங்கடிக்கிறதுண்டு. அவனை அந்த இடத்திலே சிரசாக்கினைபண்ணும்படி போதுமான ஜனங்கள் இருந்தபோதிலும், அவன்மேல் கைபோட மனதில்லாமல் சீமேயியின் தூஷணங்களைப் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, என் கர்ப்பக்கனியே, என் பிராணனை வாங்கத்தேடும்போது இந்த அந்நியன் இவ்வளவு பேசுகிறது பெரிய காரியமா? அவன் தூஷிக்கட்டும், இவ்வளவுகேட்க தேவசித்தமாக்கும் என்று சொல்லித் தமது சேனையின் ஆரவாரத்தை அடக்கினார். அரசனே! உமது பொறுமையே உமக்கு ஜெயத்தைத் தரும் என்று நம்பும். "பொறுத்தார் பூமியாள்வார்" என்று ஒரு பழமொழியுண்டே. அரசன் அழுகையோடும் அங்கலாய்ப்போடும் எருசலேமைவிட்டுப் பரதேசம்போக ஆரம்பித்தகாலத்தில் திரண்ட ஒரு சேனையை அப்சலோமுக்கு விரோதமாய் அனுப்பி கலகத்தை அடக்கவும், ராஜ்யத்தை மறுபடியும் தமக்குள் நிலைப்படுத்தவும் ஒழுங்குபண்ணியிருந்தார். அந்தச் சேனைகள் மகனைத் துரத்தி பின்தொடர்ந்த சமயத்தில் அப்சலோம் ஒரு காட்டுக்குள் கோவேறுகழுதை, வாகனமேறி விரைவாய் சவாரி செய்தபோது அவன் தலைமயிர் தற்செயலாய் ஒரு கருவாலிமரக் கொம்பிலே மாட்டிக்கொண்டது. கோவேறுகழுதை அப்பாலே

போய்விட்டது. அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான். இவ்விதமாய்த் தேவன் தாவீதின் எதிரியை அவருக்குக் கீழ் தாழ்த்திவிட்டார். இதினாலே உடன்பிறந்தாரும் நெருங்கிய பந்துக்களும் நமக்கு விரோதிகளாவதில் முந்திக்கொள்ளுவார்கள் என்று அறிந்துகொள்ளவேண்டியது. அயலாரை அடுத்து உறவாருக்கு ஒதுங்கி வாசம்பண்ணுவது அநேக விஷயங்களில் அநுகூலம் என்று இந்தச் சங்கதியினாலே விளங்குகிறது. இரட்சகர் சொந்தமானவர்களால் பகைக்கப்பட்டு தூரமானவர்களால் நேசிக்கப்பட்டார்.

அப்சலோமின் மரணத்தோடு கலகமும் குழப்பமும் நின்றுவிட்டது. அவனைக் கொல்லாமல் கைதியாக்கும்படி அரசன் வெகுவாய் முயன்றும் சேவகரின் மூர்க்கவெறி அவனைத் தப்பவிடவில்லை. பழிக்கு அஞ்சா யோவாப் தன் கையால் கருவாலிமரத்தில் தொங்கின அவனைக் கொன்றான். அப்சலோமின் மரணசெய்தி தாவீதின் மனதை உடைத்துவிட்டது. அதின் காரணமும் விபரமும் எல்லாம் இராஜபுலவரின் கீதத்தலைக்கு இசைவான சம்பவங்களானதால் அவர்

என்மகனாகிய அப்சலோமே! என்மகனே!
என்மகனாகிய அப்சலோமே!
நானுனக்குப் பதிலாக மாண்டிருந்தால் நலமாமே!
அப்சலோமே! என்மகனே! என்மகனே!

என்று புலம்பி அழுதார். இதினாலே தாவீதரசனுக்கு இளகின அன்பான நெஞ்சமிருந்ததென்று தோன்றுகிறது. அப்சலோமால் தமக்குண்டான நஷ்டங்களை அவர் ஒருபெரிதாய் எண்ணாமல், தம்மால் அவனுக்குண்டான நஷ்டங்களைப் பெரிதென்று எண்ணுகிறார்.

அப்சலோமின் மரணத்துக்குப்பின்பு கோத்திரங்கள் மறுபடியும் இராஜபுலவரையே தங்களுக்கு அரசனாகும்படி தானாதிபதிகளை அனுப்பினார்கள். உடனே அவர் தாம் கலகக்காலத்தில் தங்கியிருந்த மக்னாயீம் கோட்டையை விட்டுத் தமது இராஜநகரத்துக்கு வந்துசேர்ந்தார். வருகிறவழியில் முன் அவரைத் தூஷித்த சீமேயி தாழ்வோடு விழுந்து மன்னிப்புக்கேட்டான். அவனுக்கும் மன்னித்தார். மேவிபோசேத்தும் ராஜாபிமானம் இல்லாதவனைப்போல் எண்ணப்படாதபடி அரசனுக்கு எதிர்கொண்டுபோய்த் தன் சங்கடங்களைச் சொல்லிச் சமாதானம் பண்ணிக்கொண்டான்.

அரசர் மறுபடியும் எருசலேமில் கொலுமண்டபம் ஏறினவுடனே தென்னாட்டாருக்கும் வடநாட்டாருக்கும் ஒரு பிணக்கு நேரிட்டது. தென்னாட்டார் அரசனை மறுபடியும் இராஜதானிக்கு அழைத்தபோது வடநாட்டாருக்குத் தெரியவில்லை. இந்த அற்ப மனஸ்தாபம் ஒருபெரிய பிரிவினையை உண்டாக்கிற்று. சேபா என்ற ஒருவன் வடநாட்டாரைத் தன் வசப்படுத்திக்கொண்டு அரசனையும் தென்னாட்டாரையும் எதிர்த்தான். சேபாவின் கலகத்தை யோவாப் தன் வீரபராக்கிரமத்தால் அடக்கி அவன் சிரசோடு ஜெயகீதம் பாடிவந்தான். அதோடு அமளி அடங்கிவிட்டது. அப்பால் அரசர் குழப்பப்பட்டிருந்த ராஜ்யபாரத்தை மறுபடியும் ஒழுங்குபடுத்தி சீராய் ஆண்டுவந்தார். பெலிஸ்தியரின் கோஷ்டம் இன்னும் முன்னிலும் அடங்கிப்போகவில்லை. அப்சலோமாலும் சேபாவாலும் நாட்டுக்குள் உண்டான கலகம் பெலிஸ்தரை உற்சாகப்படுத்திவிட்டதென்று சொல்லலாம். என்றாலும் அரசன் நாலுதரம் அவர்களோடு போராடி பெலிஸ்தியரின் வீரரைவெட்டி ஜெயம்பெற்றார். மேலும் அவர் சவுலின்மேலிருந்த உள்ளன்பையும் யோனத்தான்மேலிருந்த நெருங்கிய பாசத்தையும் மறவாமல் அவர்கள் எலும்புகளைத் தமது தகப்பனுடைய கல்லறையில் அடக்கம்பண்ணினார். அப்பால் இராஜபுலவர் மறுபடியும் கின்னரம் கையிலேந்தி கவிகள்கட்டி கீதம்பாடி சிலகாலம் கழித்தார். அரசாட்சிவேலையோடு இந்த வேலையை அவர் மறக்கவில்லை. அவருடைய விழுதல்கள், அவருக்குண்டான கவலைகள், பயங்கரங்கள், வீட்டுக்குழப்பங்கள், நாட்டுக்கலகங்கள் எல்லாம் அவருடைய பாட்டுக்கேற்ற சங்கதிகளாய் இருக்கின்றன.

இராஜபுலவர் தமது பக்திநிலையிலிருந்து மறுபடியும் விலக ஒரு காலமும் இருந்தது. யோவாபின் ஆலோசனைக்கு அரசன் இணங்கி ஜனங்களை இலக்கம்பார்த்தார். சிலர் இந்த விஷயத்தில் யோவாபையல்ல, அரசனையே பழுதுகூறுவார்கள். எப்படியிருந்தபோதிலும் அந்தச் செய்கை தேவனுடைய பார்வைக்கு ஆகாததாய்க் காணப்பட்டது. கர்த்தர் பெருவாரிக் காய்ச்சலால் எழுபதினாயிரம் பேரைச் சங்கரித்தார். அரசன் உடனே அழுது மனஸ்தாபப்பட்டு, பலிசெலுத்தி வானத்துக்கு நேராக ஓலமிட்டு:

இதோ நான்தான் பாவஞ்செய்தேன்;
நான்தான் அக்கிரமஞ்செய்தேன்,
இந்த ஆடுகள் என்னசெய்தது?
உமது கரம் என்வீட்டுக்கும்
என் தகப்பன்வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக

என்று மன்றாடினார். இந்த விண்ணப்பம் உன்னதமானவரின் உக்கிரத்தை அவித்துவிட்டது. கர்த்தர் சங்கரித்த தூதனை நோக்கி:

"போதும் இப்போது உன் கையை நிறுத்து"

என்றார். அதோடு சங்காரம் நின்றுபோயிற்று. இக்காலத்தில் தாவீது மகா ஞானமாய் நடந்துகொண்டார். தன் பாவத்தினிமித்தம் குறிக்கப்பட்ட மூன்று தண்டனைகளில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும்படி உத்தரவாயிற்று. அவர் தம்மால் ஒன்றையாவது தெரிந்துகொள்ளாமல், வெகு இடுக்கண் அடைந்திருக்கிறேன், நான் கர்த்தர் கையில்விழுவேனாக, மனுஷர்கையில் விழாதிருப்பேனாக என்று சொன்னார். மனுஷர் இரக்கமில்லாமல் தண்டிப்பார்கள், கர்த்தரோ நம்மை தண்டிக்கவே தண்டித்தாலும் சாவுக்கு ஒப்புக்கொடார். அவர் கொல்லுகிறவரும் குணமாக்குகிறவருமாய் இருக்கிறார். நல்ல பிள்ளைகள் தங்களைத் தண்டிக்கும் பிதாவின் காலைப்பிடித்து அழும். நாம் நமது பரமபிதாவின் சிட்சைகளை முறுமுறுப்பில்லாமல் ஏற்றுக்கொண்டு என்னை நீரே தண்டியும், மனுஷர் கைகளில் என்னை ஒப்புக்கொடாதேயும் என்று கெஞ்சுவோமாக.

இராஜபுலவரின் வரலாறுகளை நாம் இம்மட்டும் சற்று விபரமாய்ச் சொல்லிவிட்டதால் இனி அவருடைய அந்தியகால நடவடிகளை அடக்கி சொல்லிமுடிப்பது நலமாயிருக்கும். அவருடைய ஜீவியமுழுவதும் நம்முடைய ஜீவியத்துக்குரிய பல நல்ல போதனைகளைத் தருகிறதோடு, அவருடைய சாவும் நமது சாவுக்குரிய போதனைகளைத் தருகிறவைகளாய் இருக்கின்றன. அவர் வயோதிபனாகி சரீர பலவீனத்தைக் கண்டபின்பு தமது ஜீவகாலத்திலேயே தம்முடைய குமாரரில் ஒருவனுக்கு பட்டம் கட்டிப்போட நோக்கங்கொண்டார். அவருக்குப் பல மனைவிகளால் பிறந்திருந்த ஒவ்வொரு மகனும் தானே சிங்காசனம் ஏறவேண்டுமென்று அந்தரங்க பிரயத்தனங்கள்செய்து தங்கள் நோக்கம் சித்திபெறும்படி ஆள்பிடித்துவந்தார்கள். இதனால் அவருடைய குடும்பத்துக்குள் பல தொல்லைகள் நடந்துவந்தது. இந்த தொல்லைகளை இப்படியே விட்டுவிட்டால் நமது மரணத்துக்குப்பின் மட்டில்லாத குழப்பமுண்டாகிவிடும் என்று இராஜபுலவர் நினைத்து, சாலொமோனைத் தமக்குப்பின் சிங்காசனபதியாக அபிஷேகம்பண்ணி அவன் கரத்தில் ராஜ்யத்தை ஒப்புவித்தார். இது தேவசித்தமாயும் இருந்தது. இவ்வண்ணம் ராஜ்யபாரத்தை அவர் தமது குமாரனுக்கு



ஒப்புக்கொடுத்தபின்பு தமது மீதியான நாட்களை தேவாலய விஷயத்திலும், தேவாராதனை விஷயத்திலும், குடிகளின் மெய்த்தேவபக்தி விஷயத்திலும் நிலைநிறுத்தும்படி பல பிரயத்தனங்களைச் செய்தார். அவர் தேவாராதனை முறைமைகளை ஒழுங்குபடுத்தி, அந்தந்த ஆராதனைக்குரிய ஆட்களையும் நியமித்தார். அவர் ஏற்படுத்திய முறைமையின்படி வெகுகாலம் தேவாராதனை நிறைவேற்றப்பட்டு வந்தது. அரசர் மார்க்கவிஷயத்தில் எடுத்துக்கொள்ளுகிற முயற்சி குடிகளின் ஆத்துமவாழ்வை அதிகமாய் விருத்தியாக்கும் என்பது மெய். ஆதலால் இக்காலத்திலுள்ள ஒவ்வொரு கிறிஸ்துமார்க்க அரசரும், சத்தியவேதத்தையும், சன்மார்க்கத்தையும், நிலைநிறுத்தவும் தேவ மகிமையை அவர்கள் எல்லாவற்றிலும் முக்கியமாய் விரும்பவும் நாம் அவர்களுக்காக மன்றாடவேண்டியது.

இராஜபுலவரின் அந்தியகாலம் நெருங்கியபோது அரசர் நாட்டனைத்துக்கும் கட்டளையனுப்பிக் கோத்திரத்தலைவரும், வகுப்புத்தலைவரும், அதிபதிகளும், ஆளுந்துரைகளும், பிரபுக்களும், பிரதானிகளும், பலசாலிகளும், பராக்கிரமரும், யூகத்தலைவரும், இராகத்தலைவருமான அனைவோரும் வரும்படிசெய்து தேவன் தனக்குச்செய்த முந்தின நன்மைகளையும், சாலொமோனைக்குறித்து செய்த வாக்குத்தத்தங்களையும் சொல்லி அந்தப் பெரியோருக்கு முன்னாக தமது மகனை நிறுத்தி, மெய்த்தேவனை உற்சாக மனதோடு சேவிக்கும்படி புத்திசொல்லி, அதோடு என் மகனாகிய சாலொமோனே,

நீ ஆண்டவரைத்தேடினால் அவர் தென்படுவார்,
நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னைக் கைவிடுவார்

என்று சொல்லி எச்சரித்தார். மேலும் அவர் ஆலயத்தைக் கட்டும்படி தமது காலத்தில் சம்பாதித்த பொன்னையும் வெள்ளியையும் மற்ற வஸ்துக்களையும் ஒப்புவித்து, அதற்குரிய மாதிரியையும் கொடுத்து, சாலொமோன் அதை எப்படியும் கட்டி முடிக்கவேண்டுமென்றும் சகல பிரதானிகளும் அதற்குவேண்டிய உதவிகளையும் செய்யவேண்டுமென்றும் திட்டம்பண்ணினார். கடைசியாக அவர் இம்மட்டும் தேவாலயவேலைக்காக சம்பாதித்துவைத்த பொக்கிஷங்களோடு தமது சொந்த ஆஸ்தியிலிருந்து மூன்றுகோடியே பதினைந்துலட்சம் ரூபாய் பெறுமான வெள்ளியையும், இருபத்தொருகோடியே அறுபதுலட்சம் ரூபாய் பெறுமான ஒப்பீரின் தங்கத்தையும் நன்கொடையாகக் கொடுத்தார். இதினாலே இராஜபுலவர் எவ்வளவு ஸ்திதிவந்தராயிருந்தார் என்று விளங்குகிறது.

அரசனுடைய தேவதாபக்தியையும் பரோபகாரகுணத்தையும் கண்ட பிரபுக்கள், பெரியோர் அனைவோரும் அவரவர் மனப்பூர்வமாய்க் கொடுத்தார்கள். இவ்வண்ணமாய் அரசன் முன் ஆண்டவருடைய வேலைக்காக வெள்ளியும், பொன்னும், தங்கக்காசும், வெண்கலமும், இரும்பும், நவரத்தினங்களும் குவிக்கப்பட்டன. அவைகளைக் கண்டவுடனே அரசனுடைய விருத்தாப்பியம் வாலிபமாய் மாறி அகமகிழ்ந்து இவ்வளவு மனப்பூர்வமான மனம் ஜனங்களுக்கு உண்டானதையிட்டு கடவுளைக் கனிவோடு ஸ்துதித்தார். அதோடு அநேக பலிகளும் செலுத்தப்பட்டன. சாலொமோனும் இஸ்ராவேல் அதிகாரிகள் நடுவில் பகிரங்கமாய் மறுபடியும் பட்டாபிஷேகஞ்செய்யப்பட்டான். எல்லா வேலைகளைவிட தேவனுடைய வேலைக்குத்தான் அதிக பொன்னும் அதிக வெள்ளியும் வேண்டியது.

"தேவசபையின் நல்வேலையெல்லாம்
ஆதரிப்பாரின்றி போகலாமா?"

கர்த்தருடைய வேலைகளுக்கு நாம் முகங்கோணாமல் நமது காணிக்கைகளைச் செலுத்தவேண்டியது.

இராஜபுலவரின் அந்தியகாலத்தில் அவர் தேவஅருள் பெற்றவராய் விளங்கினார்; தேவஜோதி அவர் உள்ளத்தில் விளங்கிற்று. லோக இரட்சகராய் அவதாரமெடுக்கும் தேவசுதனைப்பற்றி அவர் தீர்க்கதரிசனமும் உரைத்தார் (2 சாமு. 23. 1–7.). அவருடைய அந்தியகாலத்தில் அவர் ஒரு அரசனைப்போல் விளங்காமல் தம்மிடம் வருகிறவர்களை ஆசீர்வதிக்கும் ஆசாரியனாகவும், அவர்களைப் போதித்துணர்த்தும் தீர்க்கதரிசியாகவும் விளங்கினார். பின்பு இராஜபுலவர் தமது கின்னரக்கையையும் புலவத்தலையையும் தேவதாபக்தியால் விளங்கின உடலையும் பூமிக்கு தானஞ்செய்யும் வண்ணமாய் மல்லாக்கப்படுத்து மறுமைக்குள் சென்றார். அவர் 70 வயதுடையவராய் மரித்தாரென்று யோசேப்புஸ் சொல்லுகிறான். இராஜபுலவரின் பத்துநரம்பு வீணைகளும், எண்ணரம்பு சுரமண்டலங்களும் இப்பொழுது மக்கிப்போய் விட்டபோதிலும் அதில் இழைத்து அவர் பாடிய பாடல்கள் மக்கிப்போகவில்லை. இந்நாளிலும் கிறிஸ்துசபை ஆராதனைகளை இராஜபுலவரின் சங்கீதங்களே சிறப்பித்துவருகின்றன. அவர் கானானிலுள்ள யூதசபைக்குமாத்திரமல்ல, உலகமெங்குமுள்ள கிறிஸ்துசபைக்கும் ஸ்துதி அனலை மூட்டிவருகிறார். ஆதியில் நடந்துவந்தது



போல அவருடைய சங்கீதங்கள் கவிராகமாகப் பாடப்பட்டுவந்தால் நன்மையாயிருக்கும். சாமுவேல், தீர்க்கதரிசியால் ஆராதனைகளில் நுழைக்கப்பட்ட பாடல்வழக்கத்தை தாவீதரசர் பிரபல்லியப்படுத்தி உறுதிப்படுத்தினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக இராஜபுலவர் உலக இரட்சகராகிய மேசியாவுக்கு முன்னடையாளமாய் இருந்தார்; உலக இரட்சகர் "தாவீது" என்றபேரால் அழைக்கப்பட்டுமிருக்கிறார். இராஜபுலவரின் முந்தின தாழ்ந்த ஸ்திதியும் பிந்தின உயர்ந்த ஸ்திதியும், இயேசுவின் அவதாரகாலத்தையும் மகிமையின்காலத்தையும் நமக்குத் தெளிவாய் உணர்த்துவிக்கிறது. அவர் ஆடு மேய்த்ததும், கோலியாத்தை வென்றதும், சொந்தபந்துக்களால் பகைக்கப்பட்டதும். வனங்களில் அலைந்து திரிந்ததும் எல்லாம் கிறிஸ்து மனுஷீகத்தில் அநுபவித்த பாடுகளை உணர்த்துகின்றன. இப்பொழுதோ அவர் தாவீதாய் அல்லது தாவீதின் குமாரனாயல்ல, தாவீதின் ஆண்டவராய் மகத்துவ ஆசனத்தில் வீற்றிருக்கிறார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

M87
97117

முதலாம் பங்கு முடிந்தது.

S. P. C. K. Press, Vepery, Madras, 1887.